டாக்டர் க. அன்பரசு, பி.எஸ்.எம்.எஸ்.
எழுதிய உரையுடன்

யூகிமுனி வைத்திய சிந்தாமணி 800

மூலமும் உரையும்

பதிப்பாசிரியர்
எஸ். பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம், சென்னை - 600 026.

யூகிமுனி
வைத்திய சிந்தாமணி

(மூலமும் உரையும்)

உரையாசிரியர்:

மரு. க.அன்பரசு. பி.எஸ்.எம்.எஸ்.,

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 230

முதல் பதிப்பு : டிசம்பர் 1998

இரண்டாம் பதிப்பு : ஜூலை 2013

மூன்றாம் பதிப்பு ஏப்ரல் 2018

நூலைப்பற்றி

நூலின் பெயர் : யூகிமுனி வைத்திய சிந்தாமணி (மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : ஏப்ரல் 2018

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16 கி.வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 320

பிரதிகள் : 1000

நூல் விலை : ரு. 150/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -34

பதிப்புரை

மருத்துவத் துறையில் நோய்நாடல் என்ற பகுதி மிகவும் முக்கியமானது.

மேல் நாட்டு மருத்துவம் எக்ஸ்-ரே, ஸ்கேனிங் போன்ற நவ நவமான, கருவிகளைக் கொண்டு இன்ன நோய் என்று கண்டு பிடித்து அதற்குத் தக்கபடி மருத்துவம் செய்ய வழி வகைகளைக் கண்டுள்ளது.

இவை எல்லாம் வருவதற்கு முன்பு, எந்த விதமான கருவியின் உதவியும் இல்லாமலே, மிகவும் நுட்பமாக நோய் இன்னதென்று தீர்மானித்து அதற்கு இன்ன முறைப்படி மருத்துவம் செய்ய வேண்டுமென்று, செய்து, அதிசயமான முறையில் நோயாளிகளைக் காப்பாற்றியும் வந்துள்ளனர் நமது முன்னோர்களான சித்தர்கள்.

நோயாளியைப் பார்த்தவுடனே அவனுக்கு இன்ன நோய் இருக்கலாம் என்று தீர்மானித்தவர்கள் உண்டு. அடுத்தது நாடி பரிசோதனை. அநேகமாக நாடிப் பரிசோர்தனையில் தெரியாத நோயே கிடையாது என்று சொல்லிவிடலாம். பிறகு, கண், நாக்கு, மலம், மூத்திரம், பேச்சு இவற்றைப் பற்றியெல்லாம் பெரும்பாலும் கேட்டுத் தெரிந்து கொள்வார்களே தவிர வேறு பரிசோதனை கிடையாது.

இவை எல்லாவற்றையும்விட நோயின் அறிகுறிகளைக் கொண்டு நோய் இன்னது என்று தீர்மானிக்கும் முறையை யூகிமுனி கூறியிருக்கிறார். ஒவ்வொரு நோயையும் பல பிரிவிகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனியான சிறப்புக் குணத்தை யூகிமுனி இந்த நூலில் கூறியிருக்கிறார். மருத்துவர்கள் இந்த நூலை நன்கு பயின்று மனதில் நிறுத்திக் கொள்வதன்முலம் எந்த நோயையும் உடனே கண்டு பிடித்து மருந்து கொடுக்க முடியும்.

எல்லோரும் பயனடையும் படியாக எளிய தமிழ் வசன நடையில் இந்த நூலுக்கு உரை எழுதிக் கொடுத்த டாக்டர் க. அன்பரசு. பி.எஸ்.எம்.எஸ். அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

மிகவும் பயனுள்ளதான இந்த நூலை அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டும்.

எஸ்.பி. ராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

"யூகி மாமுனிவர் வைத்திய சிந்தாமணி 800"

காப்பு

ஆனைமு கன்றன்பாதம் முருகன் பாதம்
அத்தியு ரித்திடைதரித் தவையர் பாதம்
வானையு மையாள்பாதம் மாலின் பாதம்
வயிரவன்றன் பாதமஹா லக்ஷ்மி பாதம்
கானனைய நாதாக்கள்ரி ஷிகள் பாதம்
கமலத்தில் வீற்றிருந்த வாணிபாதம்
கோனனைய குருமுனிதன் பாதம் போற்றிக்
கூறுவேனா யுருவே தத்தைத் தானே.

கணபதி, முருகன், அத்திமரப்பட்டை இடையில் தரித்தவனாகிய சிவன், பார்வதி, திருமால், வயிரவன், லட்சுமி, மற்ற சான்றோர்கள், ரிஷிகள், தாமரையில் அமர்ந்திருக்கும் சரஸ்வதி, குருமுனி ஆகியோரின் பாதத்தைப் போற்றி இந்த நூலைக் கூறுகிறேன்.

நூல்

தானன்ன நால்வேதத் தொப்பாய் நின்ற
தாக்கான வாயுருவேதத்தோ டைந்தாம்
தேறான சிருட்டிகுலத் துற்ப வித்த
தேவனாந் தன்வந்திரி சொன்ன நீதி
வானான வாகமத்தை மேதி னிக்குள்
மருவியே யுரைத்திடவே வண்மை யாக
வேனான வயித்தியசிந்தா மணி யிலுள்ள
விபரமெல்லாம் வெளியாய்ச் சொல்லு வேனே 1

நான்கு வேதங்களுக்கும் ஒப்பாக விளங்குகின்ற ஆயுள்வேதம் ஐந்தாவது வேதமாகும். உலகில் சிருஷ்டிக்கும் வல்லமை படைத்த குலத்தில் பிறந்த தன்வந்திரி கூறிய வேதமிது. இந்த வேதத்தை உலகுக்கு வெளிப்படையாக கூறவிரும்பி பின்வரும் பாடல்களில் வைத்திய நுணுக்கங்களைக் கூறுகிறேன்.

சொல்லிடவே தேவிக்குச் சதாசி வன்றான்
சொல்லவே தேவியும்நந் திக்குச் சொல்ல
நல்லிடவே நந்திதன் வந்திரிக்குச் சொல்ல
நயமுடன் தன்வந்திரி அசுவினிக்குச் சொல்ல
அல்லிடவே அசுவனியாந் தேவர் தாமும்
அகத்தியருக் குரைத்திடவே யம்மு னீந்திரன்
புல்லிடவே புலத்தியருக் குபதே சிக்கப்
புலத்தியருந் தேரையற்குப் புகன்றிட் டாரே 2

சிவன் பார்வதிக்கு கூற பார்வதி நந்திக்கும், நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அசுவினித்தேவருக்கும், அசுவினி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும் புலத்தியர் தேரையருக்கும் வழிவழியாகக் கூறிவந்தனர்.

புகன்றிட்டார் தேரையனா முனிவர் தானும்
பூதலத்தில் யூகியாமெ னக்குச் சொல்ல
உகன்றிட்ட யூகியென்ற முனியாம் நானே
உலகத்தோர் பிழைத்திடவே உரைக்க லானேன்.
பகன்றிட்ட வடமொழியைப் பிரித்துப் பார்த்து
மகத்தான பெரியோரை வணங்கிக் கேட்டுத்
துகன்றிட்ட சூத்திரத்தின் சூட்சம் பார்த்துத்
துறையெல்லாஞ் சோதித்துச் சொல்லு வேனே. 3

தேரையர் யூகிமுனியாகிய எனக்குக்கூற, யுகிமுனியான நான் உலகத்திலுள்ளவர்கள் நன்மை பெறுவதற்காக வடமொழி நூலைப் பிரித்து உணர்ந்து, சான்றோர்களைக் கேட்டுணர்ந்து, சூட்சுமங்களை உற்று நோக்கி தெளிவாகக் கூறுகிறேன்.

தத்துவ விதி

சொல்லிய தோர் விபரமெல்லாந் தூய்மை கேளாய்
சூட்சுமமதாம் பஞ்சபூ தத்தின் கூறும்
தெல்லியதோர் தசநாடி சத்த தாது
திரிநாடித் தசவாயு சுரபே தங்கள்
தல்லியதோர் சன்னியொடு குன்மஞ் சூலை
தாக்கான வாதமொடு பித்தஞ் சிலேட்டமம்
மெல்லியதோர் மேகம்நீ ரிழிவு குட்டம்
மிக்கான பாண்டோடு காமாலை கேளே. 4

இதுவரை கூறிய விவரங்களைக் கேட்பாயாக. பஞ்ச பூதத்தின் தத்துவம், பத்துநாடிகள், ஏழு தாதுக்கள், வாத, பித்த, கப பேதங்கள், பத்துவாயுக்கள், சுரபேதங்கள், சன்னி, குன்மம்,

சூலை, வாதம், பித்த, கபம், மேகநோய்கள், நீரிழிவு, குட்டம், பாண்டு, காமாலை நோய்கள் குறித்தும்,

கேளுமகோதரங் கிராணி பவுத்ர மூலம்
கெடியான அசீரணங்கள் விசூழி விக்கல்
வேளுமே பலபல வாதி நாமம்
விளங்குகின்ற சாத்தியமு மசாத்தி யந்தான்
பாளுமே பண்டிதரின் குணமும் ரோகி
பக்குவமு தாகவர்க்க மூலி வர்க்கம்
காளுமே கடைச்சரக்கின் குணமுந் தானும்
கஷாயமொடு சூரணங்கள் கற்கந் தானே. 5

கிராணி, பவுத்திரம், மூலம், அசீரணம், விக்கல் போன்ற வியாதிகளின் குணங்களைப்பற்றியும், அவற்றின் பெயர், சாத்தியம், அசாத்தியம் குறித்தும், வைத்தியர்களின், குணம், நோயாளி நடந்துகொள்ளவேண்டிய பக்குவமும், மூலிகைகள், கடை சரக்குகள் பற்றிய விவரம், கஷாயம், சூரணம் கற்கம் ஆகியவற்றோடு

கற்கமோடு வடகங்கள் ரசாய னங்கள்
கடினமாம் லேகியங்கள் கிருதந் தானும்
வர்க்கமொடு தைலங்கள் எண்ணெய் நெய்தான்
மாத்திரையும் பற்பங்கள் செந்தூ ரந்தான்
பற்பமாம் புடத்தைலந் திராவ கங்கள்
புகையோடு பொட்டணமும் பூச்சு நசியம்
அற்பமா மஞ்சனங்கள் கெண்டூ ஷங்கள்
ஆகமாம் விரேசனத்தி னடவு மாமே 6

வடகம், இரசாயனம், லேகியம், கிருதம், தைலம், எண்ணெய், நெய், மாத்திரை, பற்பம், செந்தூரம், புடத்தைலம், திராவகம், புகை, பொட்டணம், பூச்சு, நசியம், அஞ்சனம், கஷாயம், விரேசனம் ஆகியன குறித்தும்.

அடவான வாயுரு வேதந்தன் னைத்தான்
ஐயருமே அம்மைதனக்கு அருளிச் செய்ய
நடவான வம்மையும் நந்திக்குச் சொல்ல
நந்தியுமே சீடர்களுக் கருளிச் செய்யத்
தடவான தன்வந்திரி யசுவனிக்குச் சொல்ல.
சமரசமா மகத்திய முனி தேரையற்குச் சொல்ல
நிடவான ரிஷிதேவர் சொன்ன நூலின்
நேர்ப்பெல்லாம் விபரமதாய் நிகழ்த்தி னேனே 7

ஆயுள் வேதத்தின் வாயிலாக சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி தன் சீடர்களுக்கும், தன்வந்திரி யசுவினிக்கும், அகத்தியர் தேரையருக்கும் அவர்பின் மற்ற ரிஷிகளுக்குக் கூற வழி வழியாய் நூல் வந்தது.

பஞ்சபூதம்

நிகழ்ந்தசீர்ப் பிரிதிவி மப்பு தானும்
நேரான தேயுவொடு வாய்வு மாகும்
அகழ்ந்தவா காயத்தோ டைந்தாம், பூதம்
அரிதான பிரிதிவி மண்ணு மாகும்
தாழ்ந்தவப்பு சலமாகும் நெருப்பாம் தேயு
தாக்கான வாயுவது காற்று மாகும்
இகழ்ந்த வாகாயமது சத்த மாகும்
ஏற்றப்பி ரிதிவிபொன் னிறம தாமே 8

பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பதுவே பஞ்ச பூதங்களாகும். இவற்றில் பிரிதிவி மண்ணும், அப்பு நீரையும், தேயு நெருப்பையும், வாயு காற்றையும், ஆகாயம் ஒலியையும் உள்ளடக்கி யிருக்கும். இவற்றின் நிறத்தைக் குறிக்கையில் பிரிதிவி பொன்னிறமாகும்.

பஞ்சபூதத்தின் நிறம்

ஆமேதான் அப்புநிறம் படிக மாகும்
அக்கினியின் நிறந்தானே சிவப்பு மாகும்
காமேதான் வாய்வுநிறங் கருப் பதாகும்
கார்மேகப் புகைநிறமா காயந் தானும்
தேமேதான் வண்ணமும் இப்படியே யாகும்
சேர்ந்து நின்ற தெய்வத்தின் நலமே கேளாய்
போமேதான் பிரிதிவிக்குத் தேவன் பிர்மா
பெரிய சுவாதிட்டான மிருப்ப தாமே 9

நீரின் நிறம் ஸ்படிகமாகும், அக்கினியின் நிறம் சிவப்பும், வாய்வு நிறம் கருப்பும், ஆகாயத்தின் நிறம் புகை நிறமுமாகும், பஞ்சபூதத்திற்கு தெய்வமும் இருப்பிடமும் யாதென்று நோக்கினால் பிருதிவிக்கு தெய்வம் பிரம்மாவு மாகும். அவரின் இருப்பிடம் சுவாதிட்டமானம்.

பஞ்சபூதத்திற்கு தெய்வத்தைலம்

இருப்பான வீடதுமூ லாதார மாகும்
இதழாறு பிரிதிவியின் பீசம் நவ்வாம்
மருப்பான மயிர்நரம்பு தசைதோ லென்பு
மாசற்ற அப்புவற்கு விஷ்ணு தெய்வம்

செருப்பான மணிபூர வீடு மாகும்
சிறுபிறை ரூபம்போர்பத் திதழ்தான் சுற்றி
அருப்பான வப்பினுக்குப் பீசம் மவ்வாம்
அதின்கூறைத் தான்கேளு முதிரஞ் சீயே 10

பிரிதிவியின் இருப்பிடம் மூலாதாரமாகும். அதன் பீசம் நவ்வாகும். நம் முடலில் உள்ள மயிர், நரம்பு, தசை, தோல், என்பு ஆகியன பிருதிவியின் அம்சமாகும். அப்புவிற்கு தெய்வம் விஷ்ணுவும், இருப்பிடம் மணிப்பூரமு மாகும். சிறுபிறை போன்ற பத்திதழ் கொண்ட அப்புவின் பீசம் மவ்வாகும். நம் உடலில் அப்புவின் கூறாக விளங்குபவை இரத்தம் சீழ் ஆகியவற்றோடு,

சீயான நீரோடு மூளை மச்சைத்
தேய்வுக்கு [illegible]திரன்தான் தெய்வ மாகும்
மூயான முக்கோண மநாதகம் வீடு
முயற்சியாய் ஈராறாகு இதழ்தாம் சுற்றில்
தேயான சிவ்வதுவுந் தேயு பீசம்
சிதையாமல் இதழுக்குள் சேர்ந்து நிற்கும்
ஆயான ஆகாரம் துஞ்சில் போகம்
அவருடைய கூறதுதான் பயமுஞ் சோம்பே 11

நீர், மூளை, மச்சை ஆகியனவாகும், தேயுவுக்கு தெய்வம் உருத்திரன். அதன் இருப்பிடம் முக்கோண வடிவுடைய அநாதகம் ஆகும். இது 12 இதழ்களை உடையது. தேயுவின் பீசம் சிவ்வாகும். உணவு உட்கொள்ளல், செரிப்பித்தல் தூங்குதல், போகம் செய்வதும்; பயமும், சோம்பலும் தேயுவின் அம்சமாகும்.

சோம்பான வாயுவுக்கு மகேசன் தெய்வம்
சோடசமாம் இதழோடே விசுத்தி வீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வு பீசம்
அவருடைய தன்கூறு நடத்த னிற்றல்
வாம்பான வாடலோ டிருத்த லோடல்
வகையான அறுகோணங் குடியி ருப்புத்
தேம்பான ஆகாய மாக்கினைக் குள்ளே
சிதையாம லிரண்டிதழோ டிருக்கும் பாரே 12

வாயுவுக்கு தெய்வம் மகேசன். பதினாறு இதழ்களுடன் கூடிய விசுத்தியே இதற்கு வீடாகும். வாயுவுக்கு பீசம் வவ்வாகும். நடத்தல், நிற்றல், ஆடல், ஓடல் ஆகியன தேயுவின் கூறுகளாகும்.

ஆகாய பூதமானது. இதன் வீடு அறுகோண முடையது. ஆக்கினைக்குள்ளே இரண்டு இதழ்களோடு கூடியதாக இருக்கும்.

இருக்கின்ற வாக்கினையின் கூறு கேளாய்
ஏற்றகா மக்குரோத லோப மோகம்
மருக்கின்ற மதமுமாற் சரியத் தோடும்
வானுக்குச் சதாசிவமே தெய்வ மாகும்
பிருக்கின்ற வாகாய பீசம் யவ்வாம்
பேரான வைம்பூதம் பிரிவு மாகும்
தெருக்கின்ற தசநாடிச் செயலை யெல்லாம்
செப்புகிறேன் றெளிவாகச் சிறந்து கேளே 13

ஆகாயத்தின் தெய்வம் சதாசிவமாகும், காமம், குரோதம், மதம், மாற்சரியம் ஆகியன ஆகாயத்தின் கூறுகளாகும். இதன் பீசாட்சரம் யவ்வாகும். இதுவரை ஐம்பூதங்களின் பிரிவுகளைக் கூறினேன். இனி தசநாடிகளின் செயலை தெளிவாகக் கூறக் கேளே.

தசநாடிகளின் இயல்பு

சிறந்த இடை பிங்கலையுஞ் சுழிமுனை யினோடு
சிறப்பான காந்தாரியத்திச் சிங்கு வையாம்
பிறந்தலம் புருடனோடு குகுதன் றானும்
பேரான சங்குனியும் வயிர வன்றான்
திறந்தவை பத்துந்தான் றசநாடி யாகும்
திரிமூன்று நாடியினி லொடுங்கும் பாரு
மறந்தஇடை பிங்கலையுஞ் சுழிமுனை மூன்றும்
வாதத்தி லொடுக்கமென வகுக்க லாமே 14

இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி சிங்குவை, அலம்புடை, குகு, சங்கினி, வைரவன் ஆகிய பத்துமே தசநாடி எனப்படும். இவை மூன்று நாடிகளில் ஒடுங்கும். இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்றும் வாதநாடியில் ஒடுங்கும்.

வகுக்கவிதன் குணங்கள்மந் தமொடு குளுத்தி
மலக்கட்டு வாதத்தின் கூறு மாகும்.
அகுக்கவே காந்தாரி யத்திசிங் குவையாம்
அலம்புருட னிதுநாலும் பித்தத்தின் கூறு
இகுக்கவே யிதன்குணங்க ளுட்டின தாகம்
உயர்மோன முழலைவாய் வும்மே னோக்கும்
நகுக்கவே நாடியது படபடத்து டிக்கும்
நாசமாம் பயமொடு கோப மாமே 15

இதன் குணங்கள் யாதெனில் மந்தம், குளிர்மை, மலக்கட்டு ஆகியன வாகும். காந்தாரி, யத்தி சிங்குவை, அலம்புருடன் ஆகியன நான்கும் பித்தத்தின் கூறாகும். வெம்மை, தாகம், எரிச்சல், மேல்நோக்குதல், வாய்வு, நாடிபடபடத்தல்,பயம், கோபம் ஆகியன இந்நாடிகளின் குணங்களாகும்.

ஆமேதான் குகுதன்சங் குனிவை ரவனும்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும் பாரு
மாமேதானிதின் கூறுவாய் வாற்றான் பரியும்
மலர்விழியுங் குழிந்திருக்கு முகமும் வேர்க்கும்
தேமேதானென் சடைக்குந் திசைகலங்கி யிருக்கும்
சிறுகாலுந் தண்ணீர்தா னுழற்றி விக்கும்
பாமேதான் பத்தினி டப்பண்பு மாகும்
பரிகாரஞ் செயுமவர்க்குப் பரிசி தாமே 16

குகு, சங்குனி, வைரவன் ஆகியன கபநாடியில் அடங்கும். வாயுகீழ்நோக்கிப் பிரிதல், விழி குழிதல், முகம் வியர்த்தல், வியர்வைகாணல், நெஞ்சடைத்தல், திகைத்தல், நீர்வேட்கை எடுத்தல், விக்கல் ஆகியவற்றை இவை தோற்றுவிக்கும். இவைகளே பத்துநாடிகளின் பண்புமாகும். இதற்குத் தக்கவாறு பரிகாரஞ் செய்யவேண்டும்.

பரிசான விடையினொடு பிங்கலையு மொக்கப்
பயின்றதோர் குதத்தினடி மூலம் பற்றிச்
சுரிசான பாகங்கண் மாறி மாறிச்
சுழிமுனையின் றன்னோடு நெட்டிட்டேறும்
திரிசான திருவணைக்கால் போலே மாறிச்
சிரசளவு தான்முட்டித் திரும்ப மீண்டு
விரிசான மூக்குநடுப் புருவ நெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம் புக்கும் 17

இடகலயும், பிங்கலையும் குதத்திலுள்ள மூலாதாரத்தில் இருந்து எழும்பி கத்தரிக்கோல் போல் உச்சிவரை மாறி மாறி ஏறி மீண்டும் அங்கிருந்து நெற்றி, புருவம், மூக்கு நடுப்பகுதி யாகியவற்றில் புகுந்து மூலத்தைச் சேரும்.

புக்குகின்ற காந்தாரி நாபி பற்றிப்
பெருநரம்போ ரேழினுக்கும் ரூப மாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலே யோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம் புக்கி

நக்குகின்ற நாவடியிற் சிறந்தி ருக்கும்
நலமான வத்திசிங்கு வைபி ரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலே பற்றி
மேலேறி யிரண்டுசெவி தனைத் தொட்டாமே 18

காந்தாரி என்னும் நாடியானது நாபியைப் பற்றி மேலேறி ஏழு நரம்புகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து பத்து வாயுக்கள் மேலேயோடித் தலைவரை சென்று கழுத்து வழியாக இறங்கி நாக்கின் அடியில் வீற்றிருக்கும். அத்தி, சிங்குவை ஆகிய இரண்டு நாடிகளும் மூலாதாரத்தைப் பற்றிக் கொண்டு மேல் நோக்கிச் சென்று இரு காதுகளையும் கலந்து நிற்கும்.

தொட்டேறி நரம்பெல்லாங் கலந்து வீசித்
துறையான நயனமிரண் டினிலே நிற்கும்
மட்டேறி யலம்புருடன் வயிரவன் றான்
மாசற்ற வடிமூலந் தன்னைப் பற்றிக்
கட்டேறி யிரண்டுகன்னந் தனிலே நிற்கும்
கனிவான சங்குனியுங் குகுதன் றானும்
நட்டேறி நாபித்தா னத்திற் றோன்றி
நலமான குதமளவு நடிப்பர் பாரே 19

இரு காதுகளையும் கலந்தபின்பு காந்தாரியானது விழிகளில் தங்கிவிடும். அலம்புருடன், வயிரவன் என்ற நாடிகள் மூலாதாரத் தில் தொடங்கி கன்னங்களில் வந்து நிற்கும். சங்குனியும், குகுவும் நாபியில் இருந்து தோன்றி குதம்வரை பரவி நிற்கும்.

பார்க்கவே சடந்தான் சென்மிக்கும் வாறு
பகர் சுக்ல சுரோணிதத்தி னோடே கூடி
மூர்க்கபவ ளப்பையின் முத் துதிர்ந்தாற் போல
முனையறுகு நுனிபனிபோற் சுரோணிதத்திற் சேர்ந்து
தார்க்கச்சு 'ரோணிதந் திரண்டுதன் ரூபமாகித்
தமர்வாசற் றனைமூடும் வாயு தானும்
வேர்க்கவே வேலியைப்போல் வளைத்து காக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்கு மாமே 20

சுக்கிலமும் சுரோணிதமும் கூடி இவ்வுடல் பிறக்கும் சிப்பிக்குள் உள்ள முத்துபோலிருக்கும் நாதத்துடன் புல்லின் மேல் உள்ள பனியின் வடிவத்தையுடைய சுக்கிலம் கூடி திரண்டு வடிவம் பெறும். அண்டத்தின் துவாரவாசல் மூடும். வாயுவானது வேலிபோல் வளைத்து நின்று காக்கும் விந்துவில் நிற்கும் பிராணவாயு அதனைக் காக்கும்.

விளக்குகின்ற வபானவாயு வெளியி னிற்கும்
　　விந்துவுடன் பிராணவாயு வுடன் கலக்கும்
களக்குகின்ற உதானனது கருவ ளர்க்கும்
　　கருவுக்குள் வியாதி மூன்றும் கலக்கும்
இளக்குகின்ற ஐந்தாநாள் கருப் போலாகும்
　　ஈரைந்தா நாள்தனிலே திரளும் பாரு
முளக்குமூ வைந்தா நாள் முட்டை போலாம்
　　முதற்றிங்கள் கம்பமாய் முளைபோ லாமே 21

அபானவாயு வெளியில் இருந்து காக்கும், பிராண வாயுவுடன் விந்துவில் கலக்கும். உதானன் கருவை வளர்க்கும். கருவில் வாதபித்த கப குற்றங்கள் வியாதியாய் கலந்துவிடும். ஐந்தாம்நாள் கரு உண்டாகி பத்தாம்நாள் திரண்டிருக்கும். பதினைந்தாம்நாள் முட்டைபோலிருக்கும் - முதல் மாதம் கம்புமுனைபோல நீண்டிருக்கும்.

ஆமே ரெண்டாந்திங்கள் தலைமுதுகு தோன்றும்
　　அடுத்த மூன்றாந்திங்கள் அரைவிரல் கைகாலாம்
நாமே நாலாந்திங்கள் பதமூக்குண் டாகும்
　　நலத்த வைந்தாந்திங்கள் செவிநாவு கண்ணாம்
வாமே யாறாந்திங்கள் கண்க ளாகும்
　　மருவியே வேழாந்திங்கள் மயிரெலும்பு நரம்பாம்
தாமேதான் சடமோடு சலம லங்கள்
　　தாங்கிய வோர்தாதுவொடு மூச்சுண் டாமே 22

இரண்டாம்திங்கள் முதுகும், மூன்றாம்திங்கள் அரை விரல்கள், கை, கால்களும், நான்காம்மாதத்தில் பாதங்களும் மூக்கும் தோன்றும். ஐந்தாம் திங்களில் செவி, நாக்கு கண்கள் தோன்றும். ஆறாம் திங்கள் கண்கள் முழுவளர்ச்சியடையும். ஏழாம் மாதம் மயிர், எலும்பு, நரம்பு, தோன்றும். உடலில் மலசலங்கள், மூச்சு ஆகியன தோன்றும்.

மூச்சுண்டா மெட்டினிற்றா யுண்ட சார
　　முனையான கதிர்போல உருவி பாய்ந்து
தோச்சுண்ட கபாலத்தின் வழியே சென்று
　　சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சி யாகும்
பேச்சுண்டா மொன்பதிலே அறிவு தோன்றிப்
　　பிறப்பித்தோன் தனைநினைத்து தவமே செய்து
கூச்சுண்டாங் கும்பிட்டே யருள்வா யென்றுங்
　　கொடிய பத்தாந்திங்க ளாகும் பார்வையாலே. 23

எட்டாம் திங்களில் மூச்சுண்டாவதுடன் தாயுண்ட உணவின் சத்து சூரிய ஒளிபோல குழந்தைக்கு இரத்தத்தின் மூலம் கலந்து முதலில் கபால உறுப்புகளுக்கு சென்றுபின்பு மற்ற பாகங்களுக்கு பரவும். ஒன்பதாம் மாதம் அறிவு தோன்றும். தன்னை படைத்த வளை நினைத்து கைகூப்பி அருள்வாய் என்று தவநிலையில் இருக்கும். பத்தாம்மாதம்நன்கு வளர்ந்து முடிவுற்ற நிலையில்இருக்கும்.

பார்வையா மபானன்கீழ் நோக்கி வைக்கும்
பாலகனும் பார்தனிலே பயின்ற பின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதி யாகி
அழுதுகொண்டு வாத்துமத்திற் கருவி பாசம்
பார்வையாய் மாயாசத்தி கிரியாசத்தி
மயக்கத்தில் அறிவழிந்து நல்தீ வினையாம்
கோர்வையாய் விதியும் வந்துற் பவித்துக்
கொடிபடர்ந்த சுரைபோலச் சென்ம மாச்சே 24

முற்றும் வளர்ந்த கருவை அபானவாயுவானது கீழ்நோக்கி திருப்பிவிடும். குழந்தை பூமியில் பிறந்தவுடன் கருவில் இருந்த அறிவு குன்றும். ஆத்மாவின் மாயாசக்தி, கிரியாசக்தி முதலியவைகளின் பார்வையாலும் நல்வினை தீவினை இவற்றின் செயல்களாலும் வந்து பிறந்த குழந்தையானது சுரைக்கொடி படர்ந்து வளர்வது போல வளரும்.

சென்ம மாஞ் சரீரந்தொண் ணூற்றாறங்கு லமாம்
செய்கின்றவ வரவர்கள் கையா லேதான்
தன்னமா மிரத்த மாங்கிசமு மேதை
தசைமச்சை யோடுசுக்லந் தாதே ழாகி
உன்னமா உருவென்னும் சரீர மாகி
உயர்சட்டை ரசஞ்சேர்ந்து ரோக மாகி
வன்னமாம் வாதபித்த சேத்ம மாகி
வருகின்ற சடத்தினிட வண்மை கேளே 25

மனித உடலின் உயரமாவது அவரவர்கள் கையால் தொண்ணூற்றாறு அங்குலமாகும். இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, என்பு, மூளை, விந்து ஆகிய ஏழும் சப்த தாதுக்களாகி மனித உடலுக்கு உருவம் தருகின்றன.

வண்மையாம் வாதமது முப்ப தாண்டு
மட்டுமே வளருகின்ற கால மாகும்
செண்மையாம் பித்தமது முப்பத்தி மூன்று
பேணியே வளருகின்ற கால மாகும்

திண்மையாஞ் சேட்பமது முப்பத் தேழு
செயலோடு வளருகின்ற கால மாகும்
உண்மையாய்ச் சடமதனுக் கொருநூ றாண்டு
உகாந்தமாங் கருவிகளின் உறுதி கேளே 26

நம் வாழ்நாளில் வாதம் முப்பதாண்டும், பித்தம் முப்பத்தி மூன்று ஆண்டும், சிலேத்துமம் முப்பத்தேழு ஆண்டுகளும் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சி செய்யும். ஆக உடலுக்கு ஆயுட் காலம் நூறு ஆண்டாகும். இனி கருவிகளைப் பற்றி அறிவாயாக.

உறுதியாம் பூதாதி ஒரைந் தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந் தாகும்
கருதியாம் கன்மவிந் திரியம் ஐந்தும்
கடிதான ஞானேந் திரிய மைந்தும்
திறுதியாம் தீதான கரணம் நான்கும்
திறமான வறிவொன்று தசநாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்து மாகும்
மகத்தான விடயமஞ்சு கோச மஞ்சே 27

பூதங்கள் ஐந்து, பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து. கரணங்கள் நான்கு, அறிவு ஒன்று, நாடிகள் பத்து, வாயுக்கள் பத்து. விடயங்கள் ஐந்து, கோசம் ஐந்து.

அஞ்சவே யாதார மாறு மாகும்
அரியமண்ட லமூன்று மல மூன்றாகும்
தொஞ்சவே தோஷ மூன்று ஏடணைதான் மூன்று
தோதகமாங் குணமூன்று வினை யிரண்டாம்
தஞ்சவே ராகமெட்டாம வத்தை யைந்து
தயங்கியதோர் கருவிகளாம் தொண்ணூற் றாறு
ஒஞ்சவே ஒவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
உறுதியாம் பூதாதி உரைக்கக் கேளே 28

ஆதாரம் ஆறு. மண்டலம் மூன்று, மலம் மூன்று, தோடம் மூன்று, ஏடனை மூன்று, குணம் மூன்று, வினை இரண்டு, ராகம் எட்டு, அவத்தை யைந்து ஆக கருவிகள் தொண்ணூற்றாறாகும். இனி அவற்றை ஒவ்வொன்றாக விளக்கிக் கூறுகிறேன்.

உரைக்கவே பிரிதிவி யப்பு தேயுவும்
உரிமையாம் வாயுவோ டாகா சமாகும்
புரைக்கவே பூதந்தா னஞ்ச தாச்சு
பொரியைந்தின் விபரமதைப் புகலக் கேளாய்

திரைக்கவே சுரோத்திரமுந் தொக்கு சட்சு
சிங்குவையாக் ராணமிவை யாக வைந்தும்
துரைக்கவே சுரோத்திரந்தான் செவியு மாகும்
தொக்காவது டம்பென்றே சொல்ல லாமே 29

மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன ஐம்பூதங்களாகும். செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐந்தும் ஐம்பொறிகளாகும். சுரோத்திரம் என்பது செவியும் தொக்கென்பது உடலும் ஆகும்.

சொல்லவே சட்சதுதான் கண்ணு மாகும்
தூய்யநா சிங்குவையாக்க ராண மூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக் கேளு
புகழான சத்தமொடு பரிசம் ரூபம்
நல்லவே ரசகெந்த மாக வைந்தாம்
நலமான சத்தமது கேள்வி யாகும்
சொல்லவே செவியினிடக் கூற தாகும்
செய்பரிசஞ் சுகதுக்க மறிதல் காணே 30

சட்சு என்பது கண், சிங்குவை என்பது நாக்கு, ஆக்ராணம் என்பது மூக்குமாகும். ஐம்புலன்களின் கூறுகள் யாதென்றால் சப்தம், ஸ்பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்று ஐந்தாகும். சப்தமென்பது கேள்வி, அது செவியின் கூறு. பரிசமென்பது இன்பதுன்பங்களை நுகர்தலாகும்.

காணவே தேகத்தின் கூற தாகும்
கண்ரூப மாவதுதான் காண்ப தாகும்
தாணவே கண்ணினிடக் கூற தாகும்
ரசமாவ தறுசுவையை அறித லாகும்
பூணவே நாக்கினிடக் கூற தாகும்
புகல்கெந்தம் துர்க்கந்தநற் கந்த மறிதல்
தோணவே மூக்கினிடக் கூற தாகும்
சுகமான பொரியைந்தின் சூட்சந் தானே 31

ஸ்பரிசம் தேகத்தின் கூறு. உருவத்தைக் காண்பது கண்ணின் கூறாகும். இரசம் என்பது அறுசுவைகளை அறிதல். அது நாக்கின் கூறு ஆகும். கெந்தம் என்பது நல்ல தீய வாசனைகளை அறிதல், அது மூக்கினுடைய கூறு ஆகும். இதுவே பொறிகள் ஐந்தின் தொழிலாகும்.

தானான கன்ம விந்திரிய மைந்தின்
சார்பதனைச் சாற்றிடவே வாக்கு பாதம்
பானான பாணியுடன் பாயுரு முபத்தம்
பகரைந்தின் பிரிவதுதான் வாக்கு வாயாம்

கானான பாதமது காலே யாகும்.
　　கனமான பாணியது கையு மாகும்
ஊனான பாயுரு தானபான மாகும்
　　உபத்தமது லிங்கமென வுரைர்க்க லாமே 32

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஆகிய ஐந்தும் கன்ம விந்திரியங்களாகும். வாக்கு என்பது வாயு வாகும், பாதம் என்பது காலாகும், பாணி என்பது கையாகும். பாயுரு என்பது அபானமாகும். உபத்தம் என்பது இலிங்கமாகும்.

ஆமென்று கன்மவிந் திரிய மைந்தின்
　　அடைவெல்லாஞ் சொன்னதன் பின்பப்பா கேளாய்
நாமென்ற கன்மேந்திரிய விடய மைந்தை
　　நவின்றிடவே வசனமொடு கமன மாகுந்
தாமென்ற தானவிசர் சனமா னந்தம்
　　தாக்காக வீதைந்து சாற்றி னேனான்
பாமென்ற விதனுடைய விபர மெல்லாம்
　　பரிவாக வொவ்வொன்றா யுரைக்கின் றேனே 33

கன்மேந்திரியங்களின் செய்கைகளாவன, வசனம், கமனம், தானம், விசர்சனம், ஆனந்தம் ஆகிய ஐந்தாகும். இதன் விவரங்களை ஒவ்வொன்றாகக் கூறுகின்றேன் கேட்பாயாக.

உரைக்கவே வாக்கதுதான் வசனிப் பாகும்
　　உறுதியாம் பாதமது நடத்தி வைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்கு விக்கும்
　　பாயுருதான் மலந்தனையே பிரித்து வைக்கும்
துரைக்கவே யுபத்தமது சுக்கில மூத்திரம்
　　துரிசாக விடுவிக்குஞ் சுப்ர மாகும்
நரைக்கவே கன்மேந்திரிய விஷய மைந்தின்
　　நலமதனை நவின்றிடவே நண்பா மென்னே 34

பேசுவதே வாக்கின் கூறாகும். பாதம் நடத்திவைக்கும். கைகள் கொடுத்தல் முதலிய செயல்களை செய்யும். பாயுரு என்பது மலத்தை உடலிலிருந்து பிரித்து வெளிப்படுத்தும். உபத்தம் என்பதுவும் அதுபோலவே சுக்கிலம், மூத்திரம் ஆகியவற்றை பிரிக்கும். இவைகளே கன்மேந்திரியங்களின் செயல்பாடுகளாகும்.

என்னவே கரணமது நால தாகும்
　　ஏற்றமனம் புத்தி யாங்காரஞ் சித்தம்
நன்னவே நாலினிடை விரிவைக் கேளாய்
　　நலத்தமன மாவ தொன்றைத் தானி னைக்கும்

பொன்னவே புத்திதான தனை விசாரிக்கும்
பேரான, வாங்காரம் கொண்டெ முப்பிவைக்கும்
தென்னவே சித்தமதைச் செய்து முடிப் பிக்கும்
சிறந்துவந்தக் கரணந்தா னான்கு மாச்சே 35

அந்தக்கரணம் நான்காகும். மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற அவை நான்கின் விரிவைக் கேட்பாயாக. மனம் நினைத் தலையும், புத்தி அம்மனத்தின் செயல்களை விசாரித்தலையும் ஆங்காரம் செயலை எழுப்பிவைத்தலையும் சித்தம் செயலையும் முடிவுசெய்தலையும் கொண்டிருக்கும்.

ஆச்சுதே அறிவொன்றின் விசாரணையைக் கேளாய்
அனைத்தையுமே பார்த்திருந்தங் கண்டந் தானாய்க்
கோச்சுதே குருவாய்த்தத் துவங்க ளாகிக்
கொடிய தீவினையாய் நல்வினையு மாகிப்
போச்சுதே பெண்ணாய்ப் பிரபஞ்ச மாகிப்
புகலரிய நிர்க்குணநின் மலமு மாகித்
தீச்சுதே சிவமாகிச் சீவ மாகிச்
செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்த வாறே 36

அறிவின் விசாரணையைக் கேட்பாயாக. இவ்வுலகில் அனைத் தையும் பார்த்துக் கொண்டிருக்கும். அண்டத்தில் அதுவே குருவாக வும், தத்துவங்களாகவும், நல்வினை தீவினையாகவும், பெண்ணாக வும் பிரபஞ்சமாகவும், குணமாகவும், நீர் மலமாகவும், சிவமாகவும், சிவனாகவும், செழுமையான சுடரின் ஒளியாகவும் இருக்கும்,

வாறாண தத்துவமோர் முப்ப துந்தான்
மன்னியதோ ராத்ம தத்துவ மேயாகும்
நாறான நாடிபத்தின் விபரங் கேளாய்
நயந்தவிடை பிங்கலையுஞ் சுழிமுனை காந்தாரி
ஆறான வத்திசிங்கு வையுமலம் புருடன்
அருங்குதன் சங்கினியு வைரவனீ ரைந்து
மூறான விதன் பிரிவை முன்னே சொன்னேன்
மூர்க்கமாம் வாயுபத்தின் முறைமை பாரே 37

இதுவரை கூறிய முப்பது தத்துவங்களும் ஆத்ம தத்துவமாகும். இனி நாடி பத்தின் விவரங்களைக் கேட்பாயாக. இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புருடன், குகன், சங்கினி, வைரவன் ஆகிய பத்துமாகும். இனி வாயுக்கள் பத்தின் விரிவைக் கேட்பாயாக.

முறைமையாம் பிராணனோட பானன் வியானன்
 மூர்க்கமா முதா னனொடு சமான னாகன்
திறமையாங் கூர்மனொடு கிரிக ரன்றான்
 தேவதத்த னொடுதனஞ் செயனு மாகும்
பிறமையாம் இதன்பிரிவு பிராண வாய்வு
 பெருமூலா தாரத்தின் கட்டோன் றித்தான்
உறமையாம சவையெனு மந்தி ரத்தால்
 ஓங்கார முதலெழுத்தை உன்னித் தானே 38

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன், ஆகிய பத்தும் தசவாயுக்களாகும். பிராணவாய்வானது மூலாதாரத்தில் தோன்றி ஓங்காரம் என்னும் முதலெழுத்தைப் பற்றி மேலேறும்.

உன்னியே மேலெழுந்து பனிரெண் டங் குலந்தான்
 உயர்ந்த வெட்டங்குலந் தான்மீள வாங்கி
நன்னி நாலங்குலந்தான் பாழிற் பாயும்
 நலமான குணமெல்லாம் பிராண வாய்வு
பன்னவே நீலவர்ணந் தேவதைதான் சந்திரன்
 பலபலவாம் பொசிப்பெல்லாஞ் சீரணம தாக்கும்
முன்ன நாழிகைக்கு முந்நூற்றறுபது சுவாசம்
 முயர்ந்த நாளொன்றுக்கு மூச்சை கேளே 39

பிராணவாயுவானது பன்னிரெண்டங்குலம் மேலெழுந்து பின்பு எட்டங்குலம் மீண்டு வாங்கி நாலங்குலம் வீணாகப் போகும். இது உணவை சீரணிக்கச் செய்யும். நீல வர்ணமுடை யது. இதன் தேவதை சந்திரன். ஒரு நாழிகைக்கு முன்னூற்றறுபது சுவாசம் நிகழும்.

நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத் தறுநூறு
 நலமான சுவாசந்தா னெழுந் திருக்கும்
கோளொன்றிப் பதினாலா யிரத்து நானூறு
 குவித்தமூலா தாரத்துள் ளொடுங் கும்
பாளொன்றி யேழாயிரத் திருநூறு சுவாசம்
 பாழிலே பாய்ந்திடு மென்றறிகப் பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சா தித்தால்
 எப்போதும் பாலரா யிருக்க லாமே 40

ஒரு நாளைக்கு நாம் சுவாசிக்கும் சுவாசம் இருபத்தி யோராயிரத்து அறுநூறு ஆகும். இதில் பதினாலாயிரத்து நானூறு சுவாசம் மூலாதாரத்துள் ஒடுங்கிப் போகும். மீதியுள்ள ஏழாயிரத் திருநூறு சுவாசம் வீணாகப் போகும். அவ்வாறு வீணாகப்போகும் சுவாசத்தை நிறுத்தி உள்ளடக்கினால் எப்பொழுதும் பாலகராக இருக்கலாம்.

இருக்கவே அபானத்தி னியக்கங் கேளாய்
ஏற்ற சுவா திட்டானத் துற்பத் தியாகும்
மருக்கவே கீழ்நோக்கி மலம்நீர் தள்ளும்
வாகாக நிறந்தானும் பச்சை யாகும்
அருக்கவே ஆசனத்தைச் சுருக்கி வைக்கும்
அன்னசாரத் தையெல்லாம் சேர வைக்கும்
திருக்கவே தேவதையும் வரத ராசன்
திரமான வியானனிடச் சிறப்பைக் கேளே 41

அபானவாயுவின் இயக்கத்தினைக் கேட்பாயாக. சுவாதிட்டானத்தில் இருந்து உற்பத்தியாகி கீழ்நோக்கி மலம், சிறு நீர் ஆகியவற்றை தள்ளும். இதன் நிறம் பச்சையாகும். ஆசனத்தை சுருக்கிவைத்திருக்கும். உணவின் சாரத்தை யெல்லாம் உடலில் சேரவைக்கும். இதன் தேவதை வரதராசன் வியானனுடைய சிறப்பைக் கேட்பாயாக.

சிறப்பான வியானனது தோளில் நின்று
திகழெழுபத் தீராயிர நாடியிலுஞ் சென்று
தறுப்பான சரவசரந் தனிலே நின்று
தானீட்டல் முடக்கல்பண்ணிப் பரிசங் களறியும்
அறப்பான அன்னசாரந் தன்னைத் தானாங்
காங்கே நிறைப்பித்தாக் கையை ரட்சிக்கும்
பறப்பான தது பாலின் வண்ண மாகும்
பாரினிற் தெய்வந் தானேம னாமே 42

வியானன் என்னும் வாயுவானது தோளில் இருந்து எழுபத்தி ரெண்டாயிரம் நாடியிலும் சென்று அவயவங்களில் தங்கி நீட்டல், முடக்கல் போன்ற செய்கைகளைச் செய்து ஸ்பரிசத்தை அறியச்செய்யும். செரித்த உணவின் சாரத்தை அவயவங்களில் சேர்ப்பிக்கும். உடலை காக்கும். இதன் நிறம் பாலின் நிறமாகும். இதன் இறைவன் இயமன் ஆகும்.

ஏமனா முதானனிட வேற்றங் கேளாய்
எழிலான உதரவக் கினியை யெழுப்பிப்
பூமனா மன்னசா ரந்தன் னைத்தான்
பொருந்தவே சமீபித்து நிறுத்தி வைக்கும்
காமனா யெடுப்பித்துங் கலக்கி வைத்தும்
கலக்கியே வகுத்துவைக்கும் வளப்ப மாகும்
வீமனா மின்னனிட வண்ண மாகும்
விளங்கியதோர் அக்கினிதான் தெய்வ மாமே. 43

உதானனின் செயலைக் கேட்பாயாக. வயிற்றிலுள்ள அக்கினியை எழுப்பி உண்ட உணவை செரிப்பித்து சாரத்தை

உடலில் அங்கங்கே நிறுத்தி வைக்கும். உடலை வகுத்து வளம்பெறச் செய்யும். இது மின்னலின் நிறத்தை ஒத்து இருக்கும். இதன் தெய்வம் அக்கினியாகும்.

ஆமென்ற சமானனிட வாண்மை கேளாய்
அடிநாபி பாதாங்கஞ் சமன் கொண்டேகி
வாமென்ற வாய்வுகளை மிஞ்சவொட் டாமல்
மடக்கியே சமன்செய்து மருவப் பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீ ரன்னம்
சமன்செய்து சரீரமெல்லாம் சாரப் பண்ணும்
வாமென்ற வண்ணமது புட்ப ராகம்
மகத்தான தெய்வமா தித்த னாமே 44

சமானனுடைய செயலாக்கத்தை கேட்பாயாக. நாபி, பாதம், ஆகியவற்றில் சமமாக நின்று மற்ற வாயுக்களை மிஞ்சி விடாமல் பாதுகாத்து சமனப்படுத்தும். உணவின் அறுசுவையையும், தண்ணீர், உணவு ஆகியவற்றை உடலின் எல்லாபாகத்திலும் பரவச்செய்யும். இதன் வண்ணம் புஷ்பராக கல்லைப் போலிருக்கும். இதன் தெய்வம் சூரியன்.

தெய்வமா நாகனிட சிறப்பைக் கேளாய்
செயலான சகலகலை யாக்கி வைத்து
பைவமாய்ப் பாடிவைக்கும் கண்விழிப் பிக்கும்
பாங்காகச் சிமிளிக்கும் ரோமமசை விக்கும்
பெய்வமாம் பொன்னிட வர்ண மாகும்
பெரிதான தெய்வந்தா னனந்த னாகும்
கொய்வமாங் கூர்மனிடக் குணத்தைக் கேளாய்
கொடிய மனந்தனில் நின்று நிமைக் கொட்டாமே 45

நாகனின் சிறப்பைக் கேட்பாயாக, சகலகலைகளையும் உடலில் செய்யப்பண்ணும் பாடச்செய்யும், கண்களை விழிக்கச் செய்யும். கண்களை சிமிட்டச் செய்யும், உடல் ரோமங்களை சிலிர்க்கவைக்கும். இது பொன்னின் வர்ணமுடையதாக இருக்கும். இதற்கு தெய்வம் அனந்த னாகும். இனி கூர்மனின் குணத்தைக் கேட்பாயாக.

நிமைகொட்டுங் கொட்டாவி தானுங் கொள்ளும்
நேராக வாய்மூடும் பெலனுண்டாகும்
கமைக்கொட்டுங் கண்விழிக்கு மூடப் பண்ணும்
காட்சியெல்லாங் காண்பிக்கும் விழிநீ ரோடும்
விமைக்கொட்டும் வண்ணமது வெளுப்ப தாகும்
மேலான தெய்வந்தான் விஷ்ணு வாகும்
கமைக்கொட்டுங் கிருதராதி யின்கு ணந்தான்
கடுநாவு நாசிதனிற் கசிவுண் டாமே 46

இமையை கொட்டல், கொட்டாவிவிடல், வாய்மூடல், வன்மையை தரல், கண்ணை விழித்தல், மூடச்செய்தல், காட்சிகளை பார்க்கச்செய்தல், விழியில் நீரோடுதல் ஆகியன இதன் தொழிலாகும். இதன் நிறம் வெளுப்பு. தெய்வம் விஷ்ணுவாகும். இனி கிருகரன் என்ற வாயுவின் குணத்தைக் கேட்பாயாக. இது நாக்கு மூக்கு ஆகியவற்றில் நீரைச் சுரப்பிக்கும்.

கசிவுண்டாங் கடும்பசியின் கன்மஞ் செல்லும்
கண்ணியே விருத்தலொடு போத லாகும்
துசிவுண்டாய் தும்மலோ டிரும லுண்டாகும்
சுயமான வண்ணமது கறுப்ப தாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றா னாகும்
திரோதையின் கூறான திறமு மாகும்
குசிவுண் டாம் தேவதத்தன் குணத்தைக் கேளாய்
குடிதலமாய்ச் சோம்பு முறித்திடுத லாமே 47

மிகவும் பசியை உண்டாக்கும். உட்கார்தல், செல்லுதல் ஆகிய நிகழ்ச்சிகளைச் செய்யும். தும்மல் இருமல் ஆகியவற்றை உண்டாக்கும். இதன் நிறம் கறுப்பு. தெய்வம் சிவன். இனி தேவதத்தன் என்னும் வாயுவின் குணத்தைக் கேட்பாயாக இது. சோம்பலை முறிக்கச்செய்யும்.

முறித்திடுதன் மொழிக்கும் போமுயற்சி யாகி
முகுளிதமாய்க் கண்ணினையே யோடி யுலாவித்துத்
தரித்திடுதல் சண்டை கொளற் றாக்கல்பேசல்
சண்டாளக் கோபத்தை உண்டு பண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானத் தன்றிக்
கூர்ந்த தெய்வந்தே வேந்திரன் பவள வண்ணம்
தரித்திடுநற் றனஞ் செயனைச் சாற்றக் கேளாய்
சாங்கமாய் மூக்கினின்று தடிக்குந் தானே 48

உடலை முறிக்கச் செய்தல், வாக்குவாதம் செய்தல், கண்ணினை மறைத்தல், சண்டை கொள்ளல், தாக்கல், பேசுதல், மிகக் கடுமையான சினத்தை உண்டாக்குதல், எருவாய், நீர்தாரை ஆகியவற்றை ஆட்சிசெய்தல் ஆகியன இதன் செயல்கள். இதன் தெய்வம் இந்திரன், நிறம் பவள வண்ணமாகும். இனிதனஞ் செயன் எனும் வாயுவின் செயலைக் கேட்பாயாக. மூக்கில் தங்கி தடிக்கச் செய்யும்.

தடித்துமே உடம்பெல்லாம் வீங்கப் பண்ணும்
தந்திரமாய் கன்னத்திற் சமுத்திரம் போலத்
திடித்துமே சுந்தரமாய் கோட்ட மாகித்
திரண்டுமே துஞ்சிய காலந் தனிற்றான்

வடித்துமே வாயுவெல்லாம் போன பின்பு
வளமான தலைவெடிக்கும் மூன்றா நாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற் போகும்
அதன் வண்ணம் நீலவண்ண மறிந்து கொள்ளே 49

உடலை தடித்து வீங்கச் செய்யும் கன்னத்தில் சமுத் திரம்போல் நீரை தங்கச்செய்யும். இறந்தபின் எல்லா வாயுக்களும் உடலைவிட்டு போனபின்பு மூன்றாம் நாளில் உடலில் வெடிப்புண்டாகி அதன்வழியே செல்லும். இதன் நிறம் நீல நிறமாகும்.

அறிந்ததோர் தெய்வந்தன் வந்திரி யாகும்
ஆகவிந்த வீரைந்து மாதியாம் வாய்வு
வெறிந்ததோர் வசையமைந்தின் விபரங் கேளாய்
மீறியதோரா மவசையம் பகுவசையத் தோடு
தறிந்ததோர் சலவசைய மலவசையத் தோடு
தாக்கான சுக்கிலமாம் வசைய மைந்து
எறிந்ததோரா மவசை யமன்னம் தண்ணீர்
இருக்குமிட மென்றுதா னியம்பி டீரே 50

தனஞ்செயனின் தெய்வம் தன்வந்திரியாகும். ஆக பத்து வாயுக்களையும் கூறியாயிற்று. இனி ஆசயங்கள் ஐந்தினைக் கேட்பாயாக, ஆமவசையம், பகுவசையம், சலவசையம், மலவசையம், சுக்கிலமவசையம் என்று ஐந்தாகும். ஆமவசையம் உணவும் நீரும் உடலில் எங்கு தங்கி யிருக்கிறதோ அதன் அந்த இடமாகும்.

இயம்பிடவே பகுவசைய மாவதுதான் விளம்பில்
இயன்ற வன்னந்தண்ணீர் தானேக மாராய்ந்து
புயம்பிடவே பிறியுமிடமா மலவசையம் புகலில்
புசித்த தெல்லாம் மலமாகிப் போக்குமிடமாம்
தயம்பிடவே சலவசையஞ் சாப்பிட்ட நீர்தான்
தாங்கியே யிருக்குமிடஞ் சலப் பையாகும்
சுயம்பிடவே சுக்கிலமா மசயஞ் சொல்லில்
சுகமாகச் சுக்கிலப்பை யென்று சொல்லே 51

பகுவசையம் என்பதின் செயலாவது உணவையும், நீரையும் பிரிக்குமிடமாகும். மலவசையம் என்பது உண்ட உணவை யெல்லாம் செரிப்பித்து மலமாக மாற்றுமிடம். சலவசையம் என்பது சாப்பிட்ட நீர் தங்கியிருக்குமிடமாகிய சலப்பையாகும். சுக்கிலவசையம் என்பது சுக்கிலப் பையாகும்.

சொல்லான வசையமை ந்தின் தொகுப்புச் சொன்னேன்
சூட்சமாங் கோசமைந்தின் சுருக்கு கேளாய்
அல்லான வன்னமய கோசத் தோடும்
அரிதான பிராணமய கோச மாகும்
மல்லான மனோமயமாம் விக்யான மயமாம்
மகத்தான வானந்த மயமு மைந்து
மெல்லான விதின்விரிவு விளம்பக் கேளாய்
மெய்வாய் கண்மூக்கோடு செவியு மாமே 52

இதுவரை வசையங்களின் தொகுப்பைக் கூறினேன். இனி கோசத்தின் சுருக்கைக் கேட்பாயாக. அன்னமயக் கோசம், பிராணமயக் கோசம், மனோமயக் கோசம், விக்யானமய கோசம், ஆனந்தமய கோசம். இதன் விரிவைக் கேட்பாயாக, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் ஐம்பொறி களாகும்.

ஆமென்ற தைம்பொறியின் பிரிதிவியின் கூறால்
அன்னமயக் கோசத்தில் அப்புவந் தணைந்தால்
ஊமென்ற வூனுண்டாகும் பிராணமய கோசம்
உந்தியிலே தேயுவந்தால் புத்தி யுண்டாம்
பாமென்ற மனோமயமாங் கோச மாகும்
வாயுவிதில் வந்தடைந்தால் விகார முண்டாம்
நாமென்ற விஞ்ஞானமய கோசமெனப் பேராம்
நலத்தவாதம் வந்தால் சுகமுண் டாமே 53

ஐம்பொறிகளும் மண்ணின் கூறுகளாகும். அன்னமயக் கோசத்தில் நீர்வந்து அமைந்தால் உடலில் ஊண் பெருகி பிராணமயக்கோச மாகும். உந்தியிலே தேயுவந்து கூடினால் புத்தியுண்டாகி மனோமயக் கோசமாகும். இதில் வாயு வந்து சேர்ந்தால் விகார முண்டாகும். அதற்கு விஞ்ஞானமயக் கோசம் எனப்பெயராம். இதில் நல்ல குணமுள்ள வாதம் வந்து அணைந்தால் சுகமுண்டாகும்.

வந்தாலா னந்தமய கோசமெனப் பேராம்
மகத்தான கோசமைந்தில் எடுத்தவுட லதுதான்
குந்தான கோசமைந்தின் குணத்தைச் சொன்னேன்
குறிப்பான ஆதாரம் ஆறுங் கேளாய்
முந்தான மூலாதாரஞ் சுவாதிட் டானம்
முதிர்ந்தம ணிபூரகம னாதகம் விசுத்தி
அந்தாலாக் கினையுமா தார மாகும்
அடுக்கான ஆதாரத் தாண்மை கேளே 54

அவ்வாறு வாதம் சேர்ந்தால் அதற்கு ஆனந்தமய கோச மெனப் பெயராகும். இவ்வாறு ஐந்து வகை கோசத்தால் ஆனது

இவ்வுடலாகும். கோசமைந்தின் குணத்தைக் கூறினேன். இனி ஆறு ஆதாரங்களைக் கேட்பாயாக. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்கினை என்று ஆறாகும்.

கேளே மூலாதாரங் குதங்குய்யத் துக்கும்
கெடியாக நடுவிருக்கு மபானத் தின்மேலே
வேளே வீணாத்தண் டின் கீழி ருக்கும்
மிக்க நடு வேயோரங் குலப்பிர மாணம்
மூளே முக் கோண நாலிதழ்க் கமலமாகி
முனித்த நாலிதழ்தனினா லட்சரத்தை யுடைத்தாய்
வாளேமுக் கோணநடு மந்திரம் ரீங்காரம்
வல்லபையாஞ் சத்திவலப் பக்க மாமே 55

மூலாதாரம் குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவில் அதாவது எருவாய்க்கும் நீர்த்தாரைக்கும் நடுவில் அபானத்துக்கு மேலே வீணாத்தண்டின் கீழே அமர்ந்திருக்கும். இது ஓரங்குலப் பிரமாணம் முக்கோண நாலிதழ்க் கமலமாகி இதழுக்கு ஒரு அட்சரம் வீதம் நான்கு அட்சரத்தை உடையது. இது முக்கோணத்தின் நடுவில் ரீங்காரம் என்னும் மந்திரம் அமைந்திருக்கும். இக்கோசத்தின் வலப்பக்கம் வல்லமையாக சக்தி வீற்றிருப்பாள்.

பக்கமா மந்திரமும் ரீங்கார மாகும்
பகரான தெய்வம்விக் கினேசு ரன்றாள்
வக்கமா மூலத்தில் வங்கென்று நிறுத்தி
வாசியைநீ மறவாமல் மாட்டி யூதி
ஒக்கமா மூலத்தின்கீ ழடியிற் றானும்
ஓங்காரக் கம்பமதின டியிற் கட்டி
இக்கமா மிருவரையுந் தெரிசித் தக்கால்
இகபரமும் வெளியாகி யேறலாமே 56

இதன் மந்திரம் ரீங்காரம் தெய்வம் விக்கினேசுவரன் இதனை மூலத்தில் வங்கென்று நிறுத்தி சுவாசத்தை மடக்கி மூலாதாரத்தில் இருக்கவைத்து இருவரையும் தரிசித்தால் மூலாதாரத்தில் இருந்து அடுத்த ஆதாரத்திற்கு ஏறலாம்.

ஏறவே பளிச்சென்று மூலத் தீதான்
இதற்குமே லிரண்டாமங் குலத்தின் மேலே
கூறவே நால்வட்ட மாறி தழ்த்தான்
குறித்தசுவா திட்டான மின்னொ ளித்தான்
ஆறவே யாறாமட் சரமு டைத்தாய்
அதற்குள்ளே பிருதிவி தான்குடி யிருப்பாம்
வேறவே வேதந்தா னிருக்கோ டல்லாம்
விளங்கியதோ ரட்சரமு நகார மாமே 57

மூலத்தியானது மேலெழுந்து மூலாதாரத்துக்கு மேல் இரண்டங்குலத்தில் உள்ள சுவாதிட்டானம் என்னும் ஆதாரத்தில் தங்கிவிடும். இது மின்னலின் ஒளியைப் போன்றது. இதில் பிருதிவி குடியிருக்கும். இதில் ஆறிதழ்கொண்டதாக இருக்கும். இது வேதம் இருக்குமிடம், இதற்கு அட்சரம் நகாரம் ஆகும்.

நகாரமா மெழுத்ததுவும் பிரம னாகும்
லவ்வான பீசமது பிரிதிவிக் காகும்
உகாரமா மந்திரத்தை யுன்னிக் கொண்டு
உயர்வாய்வைக் கும்பிக்கி லறிவு தோன்றும்
சிகாரமா முப்புரிநூல் சிரசு நாலு
சிறந்தசர சுவதியுமங் கேதெளிவாய்க் காணும்
பகாரமாய்த் தெரிசித்துப் பழக்கம் பண்ணப்
பாருலக மயக்கமெல்லாம் பண்ப தாமே. 48

இதன் கடவுள் பிரம்மனும் சரசுவதியுமாகும். லகாரம் என்பது பிருதிவியின் பீசாட்சரம். இந்த மந்திரத்தின் நடுவாகிய உகாரத்தை மனதில் எண்ணிக் கொண்டு மூச்சை கும்பகம் செய்ய அறிவு தோன்றும். முப்புரிநூலை அணிந்த நான்கு தலைகளையுடைய பிரம்மன், மற்றும் சரசுவதியை தொழுது தரிசித்து வந்தால் இவ்வுலக மாயையிலிருந்து விடுபட்டு பண்புள்ளவனாக ஆகலாம்.

பன்மையா மாறாமங் குலத்தின் மேலே
பதிந்தபிறைப் போலமணி பூர கந்தான்
தொண்மையாஞ் சுற்றிலும்பத் திதழ தாகிச்
சுயம்பான வட்சரமும் பத்துந் தானாய்
அன்மையா மப்புதனக் கிடம தாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விண்டு வாகித்
தன்மையாம் பக்கத்திற் சக்திலட் சுமியாம்
தயங்காத வட்சரந்தான் மகார மாமே. 59

சுவாதிட்டானத்துக்கு ஆறங்குலத்துக்கு மேலே பிறைபோல் வடிவத்திலுள்ளது மணிப்பூரகமாகும். பத்திதழைக் கொண்டது. எனவே அட்சரமாகிய எழுத்துக்கும் பத்தாகும். இது நீரின் இருப்பிடமாகும். இதன் கடவுள் திருமாலும், இலட்சுமியுமாகும். இதன் அட்சரம் மகாரம்.

மகாரமா மட்சரந்தான் விஷ்ணு வாகும்
மகத்தான மவ்வதுவு மப்பு பீசம்
விகாரமாம் வேதமதோ யசுரு வாகும்
மெய்நிறைந்த கவுத்வமணி பஞ் சா யுதம்

நிகாரமாமி லக்குமிதான் பாக மாகி
நேர்மையாய் வாசியைத்தான் மங்கென நிறுத்தி
உகாரமா யூதினால் உலக வாழ்க்கை
ஒருநொடியில் வெளியாகும் மூணிப் பாரே 60

மகாரம் என்ற எழுத்து திருமாலாகும். ''மவ்'' என்பது நீரின் அம்சமாகும். இதன்பேதம் யசுர்வேதமாகும். உடலெங்கும் கவுத்வமணிமாலைகளை அணிந்து கையில் ஐந்துவகை ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு இலட்சுமியை பக்கத்தில் அமர்ந்திருக்கச் செய்யும் திருமால் இவ்விடத்தில் வீற்றிருப்பார். வாசியோகம் பயிலும் காலத்தில் உகாரத்தில் ஊதி மங் கெனும் எழுத்தில் கும்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உலகவாழ்க்கையின் சூட்சுமம் ஒரு நொடியில் தெரியும்.

ஊணியிதன் மேலிரு நாலங் குலந்தான்
உத்தமமா மனாகதத்திவ் வீடு மாகும்
தோணியேதிரி கோணம்பனி ரெண்டாமிதழ் தான்
சுற்றிலுமே பனிரெண்டட் சரமு டைத்தாய்
சேணியே தேயுவுக்கங் கிருப்பு மாகிச்
சிகாரமா மெழுத்தாகிச் சிறப்பு மாகிப்
பூணியே பூதபீசம் ரவ்வு மாகிப்
புகழான உருத்திரனும் புரிந்தார் பாரே 61

இவ்விடத்துக்கு எட்டங்குலம் மேலே அனாதகத்தின் வீடு ஆகும். இதன் வடிவம் முக்கோணம். இது பன்னிரெண்டு இதழ்களையும் இதழுக்கு ஒரு அட்சரமாய் பன்னிரெண்டு எழுத்துக்களையும் உடையது. இது தேயு பூதத்துக்கு இருப்பிடமாகும். இதன் பீசாட்சரம் 'ரவ்' ஆகும். இதன் தெய்வம் உருத்திரன் ஆகும்.

புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்ரன் ருத்ரியும்
புகழாக வாசிவைத்துச் சிங்கென் றூது
கரித்திருந்த காயமுமோ வாலை யாகும்
கனிசாம வேதத்தின் கருத்துத் தோன்றும்
பரித்திருந்த விதற்குமேல் பனிரெண்டங்கு லந்தான்
பார்வையாய் மேலேறில் விசுத்தி வீடு
அறிந்திருந்த வறுகோண சோடசமா மிதழ்தான்
அதிலேதா னீரெட்டட் சரமு மாமே 62

உருத்ரனும், உருத்திரியுமாகிய சிவனும் பார்வதியும் குடியிருக்கும் அநாதகத்தில் வாசியோகம் பயில்வோர் சிங்கென்று ஊதினால் அவர்களுடைய உடல் வலுக்கும். இளமைபெறும். கனிவைத் தரும். சாம வேதத்தின் உட்பொருள் விளங்கும். இதற்கு

பன்னிரெண்டங்குலம் மேலே இருப்பது விசுத்தியின் வீடாகும். இது ஆறுகோணவடிவமும், பதினாறு இதழ்களையும் இதழுக்கு ஒரு அட்சரமாக பதினாறு அட்சரமும் இருக்கும்.

ஆமெனவே வகாரந்தான் அறுகோண நடுவே
அமர்ந்திருந்தார் மகேசுரன் மகேசு வரியும்
வேமெனவே யதர்வண வேதத் தோடொக்க
மிக்கான வாயுவது மிதழுக் குள்ளே
போமெனவே பீசந்தான் யவ்வு மாகும்
புகழாகக் கும்பகஞ் செய்தூ திவூதி
வாமெனவே வங்கெனவு மிருத்திப் பார்க்க
வயசெல்லா மொருநாளாய் மனதில் காணே 63

அறுகோணத்தின் நடுவில் உகாரம் இருக்கும். இதன் தெய்வங்கள் மகேசுவரனும், மகேஸ்வரியும் ஆகும். அதர்வண வேதத்தின் இருப்பிடமாகும். வாயு பூதத்தின் இருப்பிடம். இதன் பீசாட்சரம் 'யவ்'வாகும். இதில் சுவாசத்தைக் கும்பகம் செய்து 'வங்' என்று ஊதி இருத்திவைக்க ஒரு வருடத்தை ஒரு நாளாகக் காணலாம்.

காணவிதன் மேலிரெட் டங்கு லந்தான்
கண்டமா ருதம் புருவ மளவா யாகி
ஊணவே யிரண்டிதழா யோங்கி நிற்கும்
உற்றுநின்ற வட்சரமு மிரண்டு மாகும்
ஆணவே நடுவுக்குள் யகாரம் நிற்கும்
ஆக்கினையின் வீடாகு மாகாச மிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வு மாகும்
புகழான மாணிக்கப் பிரபை யாமே. 64

விசுத்திக்கு எட்டங்குல உயரத்தில் புருவமையத்தில் இரண்டு இதழாக ஓங்கி நிற்கும் இதழுக்கு ஒன்றாக அட்சரமும் இரண்டாகும். இதன் நடுவில் யகாரம் இருக்கும். இங்கு ஆகாய பூதம் தங்கி இருக்கும். இதன் பீசாட்சரம் 'யவ்' வாகும். இதன் ஒளி மாணிக்கம் போன்றது.

யவ்வுக்குட் சதாசிவமுஞ் சத்தி நிற்கும்
யங்கென்று கும்பித்தா லனேக சித்தி
மவ்வு பரமானந்தம் மருவி நின்று
மகிழ்ச்சியாங் கருவிகளி னிடம தாகி
அவ்வுடமை யைம்புலன்றனையு மறியப் பண்ணி
அறிவோடு நினைவுதனின் மயக்கங் காட்டி
உவ்வுள்ளபடி நடத்திக்காண் பனகேட் பனவாய்
உகந்துகுரு வெழுந்தருளி விவாதிப் பாரே. 65

அந்த இடத்தில் சதாசிவனும் சத்தியும் வீற்றிருப்பர். அங்கு சுவாசத்தைக் கும்பித்து 'யங்' என்று கும்பித்தால் அனேக சித்தி உண்டாகும். பரமானந்தத்தை அடைவார்கள். ஐம்புலன் களையும் ஆட்சிசெய்து அறிவு நினைவு என மயக்கம் காட்டி வைக்கும். இது குரு எழுந்தருளி விவாதம் செய்யுமிடமாகும்.

பார்க்கவே யாதார மாறு மாச்சே
பரிந்திட்ட தத்துவங்கள் முப்பத் தாறும்
சேர்க்கவே சிவதத்துவ மாகுங் கண்டீர்
சிறந்திருந்த மண்டலங்கண் மூன்றுங் கேளாய்
ஆர்க்கவே யக்கினி மண்டலத்தி னோடு
ஆதித்தமண் டலஞ்சந்தி ரமண்ட லந்தான்
தோர்க்கவே யிதன் சூட்சி சொல்லக் கேளாய்
கருதியா மூலமென்ற துடர்ச்சி தானே 66

இதுவரை ஆதாரம் ஆறையும் விளக்கிக் கூறிவிட்டேன். இதுவரை கூறிய தத்துவங்கள் முப்பத்தியாறும் சிவதத்துவங்கள் ஆகும். இனி மூன்று மண்டலங்களைக் கூறுகிறேன் கேட்பாயாக. தீமண்டலம், ஞாயிறு மண்டலம், சந்திரமண்டலம், என்ற மூன்றும் ஆகும். இனி அவற்றை விரிவாகக் கூறுகிறேன் கேட்பாயாக.

துடர்ச்சியாஞ் சுவாதிட்டானத்தின் கீழே
சுகமாக நடுமைய மணிமண் டலந்தன்
முடர்ச்சியாம் முச்சுடராய் மூலமட்டும் பரவி
முனைந்தசு வாதிட்டான மட்டு நிற்கும்
மடர்ச்சியா மணிபூர மனாதகத்தின் நடுவே
வளையம் போன்ற சூரியமண் டலந்தா நிற்கும்
படர்ச்சியா மணிபூர மனாதக கத்திற்
படர்ந்தேறுஞ் சூரியமண் டலந்தான் பாரே 67

தொடர்ச்சியாக சுவாதிட்டானத்துக்குக் கீழே நடுமையமாக மூலாதாரம்வரை முச்சுடராக மணிமண்டலம் பரவி நிற்கும். சுவாதிட்டானத்துக்கும் மணிப்பூரத்திற்கும், மணிப்பூரகத் திற்கும் அநாதகத்துக்கும் இடையில் சூரியமண்டலம் இருக்கும்.

பாரென்றாற் சும்மாதான் பார்க்கப் போமோ
பரந்தோடும் வாசியைநீ மாட்டிப் பாரு
வேரென்றால் விசுத்தி மேலாக்கினையின் கீழே
விளங்கியெழுஞ் சந்திரமண் டலந்தான் பாரு
தூரென்றால் துவாதசாந் தத்தின் மட்டும்
சுடரொளியாய் பிரகாச மாகி நிற்கும்
மூரென்றால் மண்டலங்கள் மூன்று மாச்சு
மூர்க்கமா மலமூன்றின் முடிவு கேளே 68

இதை பிராணாயாமம் முறைப்படி செய்பவர்கள் மட்டுமே கண்டுகொள்ளமுடியும். மற்றவர்களால் முடியாது. விசுத்திக்கு மேலும் ஆக்கினைக்கு கீழும் உள்ளபகுதி சந்திரமண்டலத்துக்கு உரியதாகும். அதிலிருந்து துவாதசம்வரையுள்ள பகுதி தீ மண்டலத்துக்கு உரியது. ஆக மூன்றுமண்டலங்களினையும் குறித்துக் கூறியுள்ளேன். இனி மூன்று மலங்களையும் பற்றிக் கூறுகிறேன்.

முடியான வாணவமு மாயை காமியம்
முயற்சியாய் யிதின்பிரிவான் முடியு மாறு
திடியான செம்பினிற்றான் களிம்பு போலும்
சிறுநெல்லி னுமிபோலு மாத்து மாவை
முடிவான மேலெழவொட் டாமற் காத்து
முடிவித்துத் தன்னதென்றே காத்தி ருக்கும்
மடிவான மாய்கையதா ணவத்தைக் கொண்டே
வருகிறது தெரியாமன் மடிக்குந் தானே 69

ஆணவம், கன்மம், மாயை என்பவையே மும்மலங்கள் ஆகும். இவை செம்பிலுள்ள களிம்பு போலவும், நெல்லின் உமியைப் போலவும் ஆன்மாவை மேலெழவொட்டாமல் தடுத்துக் காத்து பின் முடிவடைய் வைக்கும். தான், தனது என்ற உணர்வை மேலோங்கி நிற்கச் செய்யும் மாய்கையானது. ஆணவத்தைத் துணைக்கொண்டு பின்பு வருவதை தெரிய விடாமல் மடித்து விடும்.

மடிக்கின்ற காமியம் கண்டதுக் கெல்லாம்
மகிழ்ந்திடுதன் மாயைமுற்று வித்து நிற்றல்
துடிக்கின்ற மலமூன்றின் செயலு மாச்சு
தோடமூன் றாவனவாஞ் சுளுவு கேளாய்
நடிக்கின்ற வாதபித்த சேட்ப மூன்று
நலமான விதன்விரிவு நாட்டக் கேளாய்
வடிக்கின்ற வாதமது வாயுநிலை கலங்கி
மத்தியமா மக்கினியு மார்க்க மாமே 70

அழிவை உண்டாக்கும் காமியம் எல்லாவற்றுக்கும் மகிழ வைக்கும். மாயை என்பது எல்லாவற்றையும் முடித்து வைக்கும். இவை மூன்றுமே மும்மலங்களின் செயல்களாகும். இனி முத்தோடங்களைக் கேட்பாயாக. வாத, பித்த, கபம், என்னும் மூன்றுமே அவையாகும். இனி அவற்றின் விரிவைக் கேட்பாயாக. வாதமானது வாயு கலங்கி இடையிலுள்ள அக்கினியின் வழி செல்லும்.

மார்க்கமாம் பித்தந்தா னக்கினியி னிலையை
மசக்கிவைத்து மாய்கையுடன் வருத்தி வைக்கும்
தூக்கந்தான் சேட்பமது சலமிகுதி யாக்கித்
துவாரங்க டோறுமிடைவிடாம னிற்கும்
மூர்க்கந்தான் தோடமிது மூன்று மாச்சு
மூண்டதோ ரேடணைகள் மூன்றைக் கேளு
நோர்க்கந்தா னர்த்த வீடணை யினோடு
லோக வீடனைகாம வீட்டணை மூன்றாச்சே 71

பித்தமானது அக்கினியின் நிலையை மயங்கச் செய்து மாயையுடன் இணைத்து வருத்த வைக்கும். கபமானது நீர்த்தன்மையை அதிகமாக்கி உடலில் உள்ள துவாரங்கள் அனைத்திலும் இடைவிடாமல் நிற்கும். ஆக தோடங்கள் மூன்று ஆச்சு. இனி ஏடணைகள் மூன்றைக் கேட்பாயாக. அர்த ஏடணை, உலக ஏடணை, காம ஏடணை என்ற மூன்றாகும்.

ஆச்சென்ற மூன்றையுந்தா னறியக் கேளாய்
அதிகமா அர்தவீ டணைகு ணந்தான்
வேச்சென்ற வர்த்தமதின் மேலாசைப் படுதல்
விளங்கியதோர் லோகவீடணை யதனைக் கோளாய்
காச்சென்ற காணியுட னுறவுந் தேடிக்
காரியங்க ளதின்மே லாசை யாகும்
ஆச்சென்ற காம ஏடணை காமியத்தைத் தேடி
யாசையது படுதலீடணை மூன்றாமே 72

ஏடணைகள் மூன்றின் விரிவைக் கேட்பாயாக அர்தவேடணை என்பது பொன் பொருட்களின் மேல் ஆசை வைத்தல். லோக ஏடணை என்பது மண்ணின் மீது ஆசை வைத்தல். காம ஏடணை என்பது பெண்மீது ஆசை வைத்தல் ஆகும். ஆக ஏடணைகள் மூன்றாச்சு.

மூன்றான பின்புதான் குணந்தான் மூன்று
மொழியவே ராசதந்தா மதஞ் சாத் வீகம்
வேன்றான விதின்விரிவு விளம்பக் கேளாய்
வெகுளிபல பேசாதிருத்தல் வேண்டுவது கொடுத்தல்
தான்றான தன்னைச்சார்ந் தாரைக் காத்தல்
தகமையுட லுயிர்களைத்தம் முயிர்போ லெண்ணல்
பான்றான பகைவரை வென்றிடுத னீங்கல்
பலகலைகள றிதல்பயில் பண்புண் டாமே 73

குணம் எனப்படுவது மூன்றாகும். அவை இராசதம் தாமதம், சாத்வீகம் என்பனவாகும். அதன் விரிவைக் கேட்பாயாக. வெகுளி பேசாதிருத்தல், பிறருக்கு தானம்செய்தல், தன்னைச் சார்ந்து

உள்ளவர்களைக் காத்தல். மற்ற உயிர்களையும் தன் உயிர்போல காத்தல். பகைவர்களை வெல்லுதல் பலக்கலைகளை கற்றல், ஆகியவையும்,

உண்டுலகினுக் கங்கோரு றுதி யென்ன வாழ்தல்
உண்மையாய் நலந்தெரிதல் புகழே பூண்டல்
தண்டுதா டாண்மையொடு மேம்பா டான
சாற்றியதோர் குணமெல்லா ராசதத்துக் காகும்
மிண்டு தா மதகுணமு மேதோ வென்னில்
மிகுதியாய் வஞ்சனையே செய்த லாகும்
வண்டுவழி பாடொழிதல் வாதுபோ ராடல்
வணக்க மில்லாவெகுளியே விளம்ப லாமே 74

உலகில் ஓர் உறுதிஉண்டு என வாழ்தல், உண்மையாக ஆய்ந்தறிதல், புகழை அணிகலனா விரும்பல், ஆகிய குணங்களும் இராசத குணத்துக்காகும். தாமத குணத்தின் பண்புகள் என்னவென்றால் வஞ்சனை செய்தல், பழமையான வழிபாடுகளை ஒழித்தல், வாக்குவாதம் செய்தல், மரியாதை செய்யாதிருத்தல் வெகுளல் ஆகியவை ஆகும்.

விளம்பவே செய்தநன்றி மறத்தல் விந்தை
மிகப்பேசல் சிதைந்துமுரை மிடுக்குப் பேசல்
முளம்பலே முன்னுரைத்தல் பழியைக் கூறல்
முகத்துடனே பேசல் பகையுடனே வாழ்தல்
புளம்பலே பொய்கொலைகள் களவு காமம்
பொல்லாங்கு யாவையுமே புகன்று பேசல்
களம்பலே காமத்தின் குரோத மிக்க
கடிந்திடுந் தாமத குணத்தின் காட்சி யாமே 75

மேலும் செய்நன்றி மறத்தல், பொய்யாக பேசல், பலமாகப் பேசுதல், பழிகூறல், பகை கொண்டும் பகைக்கப்பட்டும் வாழ்தல், பொய், கொலை, களவு, புறஞ்சொல்லல், தகாத இச்சைவழிச் செல்லல், ஆசையினால் கோபம் கொள்ளுதல், ஆகியனவும் தாமத குணத்தின் பண்புகளாகும்.

காட்சியாஞ் சாத்வீகந்தா னேதோ வென்னில்
கமறு கடிவு சாந்தம்வாய் மைதயை யொடுக்கம்
தாட்சியந் தண்ணளிவுக் குகந் திடுநற் சீலந்
தயவான குணமன்பு பெருமைபுகழ் பூண்டல்
மாட்சியா மறையனிறை மண் மயக்கம் பூண்டல்
வறிஞோரை வாழ்வித்தல் நல்லோர்க் கீதல்
நாட்சியா யிறைவனடி யினைப் பணிதல்
நல்லோர்க்குப் பொருளீதலறந் தேடல் தானே 76

சாத்வீக குணத்தின் பண்புகள் என்னவெனில் சாந்தம், வாய்மை, அடக்கம், தன்னால் இயன்றவற்றை செய்தல், நல்ல பண்புகள், அன்பு, பெருமை, புகழ், அளிக்கக் கூடியவற்றை மட்டும் செய்தல், நல்ல நூல்கள் கூறியபடி வாழ்தல், ஏழைகளை வாழவைத்தல், நல்லவர்களுக்கு தானம் செய்தல், இறைவனைத் தொழுதல், அறம் செய்தல் ஆகியனவும்.

அறந்தேடல் உறவின்முறை சுற்றத் தாரை
அகதிபர தேசியருக் கன்ன மீதல்
திறந் தேடல் தெய்வமறை யோரை காணல்
தேவதைகட் குபசாரச் சிந்தை செய்தல்
புறந்தேடல் புண்ணியங்கள் தேட லின்பப்
பூசுரருக் காகுதிகள் பலிகொ டுத்தல்
தறந்தேடல் சாத்வீகத்தின் குணமீ தென்று
சாற்றினோங் குணமூன்றின் தன்மை தானே 77

அறத்தை மட்டுமே செய்தல், உறவினர், சுற்றத்தார், அநாதைகள், வேறு ஊரிலிருந்து வந்தவர்கள் ஆகியோருக்கு உணவளித்தல் வேதவிற்பன்னர்களுக்கு உபசாரம் செய்தல், தேவதைகளுக்கு பூசைசெய்தல், உபசார சிந்தனை, புண்ணியங்கள் தேடுதல் பலிகொடுத்தல் ஆகியவை சாத்வீக குணம் என்று கூறினோம்.

தன்மையாய் வினையதனைச் சாற்றக் கேளாய்
சார்ந்ததோர் நல்வினை தீவினை யிரண்டாம்
பன்மையாம் வினையிரண் டின் பயனே தென்னில்
பரவிய நல்வினையதுதான் புண்ய மாகும்
தின்மையாந் தீவினைதான் பாவ மாகும்
சேர்ந்தவினை யிரண்டாலே நரக சொர்க்கம்
புண்ணியஞ் செய்தவர்க்குநல்ல சுவர்க்க மாகும்
பொல்லாத பாவிகட்கு நரக மாமே 78

வினையின் இரண்டுவகையைக் கேட்பாயாக. நல்வினை, தீவினை என்று இரண்டாகும். அவற்றின் பயன் என்ன வென்றால் நல்வினை செய்ய புண்ணிய மாகும். தீவினை செய்ய பாவமாகும். இதனால் நன்மை செய்தோர்க்கு சுவர்க்கமும், தீமை செய்தோர்க்கு நரகமும் உண்டாகும்.

ஆமேதானிராக மெட்டை யறையக் கேளாய்
அதிகாமக் குரோதமொடு லோப மோகம்
வாமேதான் மதமாற்சரிய மிடும்பை வேகம்
வகையாக விதன்குணத்தை வழுத்தக் கேளாய்

காமேதான் காமமெனல் ஆசை யாகும்
கடிதான குரோதமெனல் பிணக்க தாகும்
போமேதன் லோபமெனல் பிடிப்ப தாகும்
பேர்பெரிய மோகமெனல் பிரிய மாமே 79

எண்வகை இராகங்களைப்பற்றி இனி கூறுகிறேன் கேட்பாயாக. அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் மாச்சரியம் இடும்பை, வேகம், என்பனவாகும். இனி அவற்றின் குணத்தைக் கேட்பாயாக. காமம் என்பது ஆசையாகும். குரோதம் என்பது பிணக்கு ஆகும். உலோபம் என்பது ஏதேனும் ஒரு பொருளில் பிடிப்பேற்படுவது. மோகம் என்பது பிரியமாகும்.

பிரியா மதமதுதான் கெர்வ மாகும்
பெரிதான மாற்சரிய மிடும்பாங் காரம்
உரியமா மிடும்பையுதா சனை களாகும்
உறவேக மாவதுக டூர மாகும்
நரியமா மிராகத்தின் தன்மை சொன்னேன்
நாசமா மவத்தை யைந்தினாட் டங்கேளாய்
அரியமாஞ் சிற்றவத்தை யாமிதனின் போக்கு
ஆக்கிர சாக்கிரமுஞ் சொற்பனமு மாமே. 80

மதம் என்பது கர்வமாகும். மாச்சரியம் எனப்படுவது பொருமையாகும். இடும்பை என்பது உதாசீனம் செய்தலாகும் வேகம் என்பது கொடூரமான செயல்களாகும். இவ்வாறாக இராகம் எட்டின் தன்மைகளைக் கூறினேன். இனி அவத்தைகள் ஐந்தின் போக்கினைக் கேட்பாயாக. சாக்கிரம், சொற்பம் என்பவற்றோடு,

சொற்பனஞ் சுழுத்திதுரியந் துரியா தீதம்
சொல்லுமிவை தானவத்தையைந் தாகச் சொல்வர்
நிற்பனமாஞ் சாக்கிரந்தா நெற்றி நேரே
நிறைந்திருக்குங் கருவியிட நியம மாகக்
கற்பனமாஞ் சொற்பனமுங் கண்டத் தானங்
கடந்திருக்குங் கருவியுடன் காயத் தோடே
இற்பனமாஞ் சுழுத்தி தானிதயத் துள்ளே
இயங்கி நிற்குங்கருவியுட னியம்பி டாயே 81

மேற் கூறியவற்றோடு சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பவை ஐந்து சிற்றவத்தைகளாகும். நெற்றிக்கு நேரே உள்ள ஆதாரத்தில் சாக்கிரமும், கழுத்துக்கு நேரேயுள்ள ஆதாரத்தில் சொப்பனம் என்னும் அவத்தையும், இதயத்துக்குச் சரியாக சுழுத்தி என்னும் அவத்தையும்,

இயம்பிடவே துரியநாபிக் கமலந் தன்னில்
ஏற்றமாங் கருவியுட னிணங்கி நிற்கும்
முயங்கு துரியாதீத மூலா தார
மூர்க்கமாங் கருவியுட னமர்ந் திருக்கும்
கயம்பிடவே கருவிகடான் தொண்ணூற் றாறும்
காரியமாய் தேகத்தைக் காத்து நிற்கும்
வியங்கியிந்த முப்பதுதத்து வமாந் தானே
வேதமாம் வித்தியாதத் துவமா மென்னே 82

நாபிக் கமலத்துக்கு இணையாகி துரியம் இருக்கும். மூலாதாரத்தில் துரியாதீதம் அமர்ந்திருக்கும். ஆக தொண்ணூற்றாறு கருவிகளும் இணைந்து நின்று உடலைக் காக்கும். இந்த முப்பது தத்துவங்களும் வித்தியா தத்துவங்கள் எனப்படும்.

தத்துவமாங் கருவிகடான் றொண்ணூற் றாறும்
சடத்தி லெங்குமூடா டித்தகமை யாகும்
உத்துவமாயு டலதனி லுண்மை கேளாய்
உதிரவங் கனெனும்புவி யிலுற்ப வித்து
அத்துவமாமப் போதுதுள்ளித ழாய்ம லர்ந்து
அத்திமுகத் துக்கருவிட்டாக வுருத் தரித்து
சத்துவமாவவ் வுருவாய்அ வயத் தின்கண்
தாக்கான அவ்வென்னுமட் சரந்தா னாமே 83

இவ்வாறு கருவிகள் யாவும் உடலில் முழுதுமாக சென்று தத்தம் பணிகளைச் செய்யும். வயிறு என்னும் புவி வாழுமிடத்தில் உள்ளிதழாய் தோன்றி அத்திமுகத்துக்கு இருப்பிடமாகவுள்ள இடத்தில் இருந்து உருவமாக மாறி சத்துவ குணத்தைப் பெற்று அவ்வென்னும் அட்சரத்தை தன் எழுத்தாகக் கொண்டு அமைந்திருக்கும்.

அவ்வென்னு மட்சரத்தி னாடி தோன்றும்
அந்நாடி தனினின்று தத்துவந்தான் தோன்றும்
எவ்வென்னு மெலும் புதசையின் புடையும் நரம்பும்
ஈரெட்டுப் பழுவோடிரண் டுகொங் கையுமா
முவ்வென்னு மூட்டுக்காலெட் டெட்டு வளையா
மூட்டியமனத் தவ்வனே யோருரு வமாக்கி
சுவ்வென்று மிடையோடு பிங்கலையுஞ் சேர்த்துச்
சுழிமுனை யென்றொருதொளையும் வழிய தாமே. 84

அவ்வென்னும் அட்சரத்தில் இருந்து நாடி தோன்றும். அந்நாடியிலிருந்து தொண்ணூற்றாறு தத்துவங்களும் தோன்றும். அது எலும்பு, தசை, புடை நரம்பு, பழு எலும்புகள், மார்புகள்,

மூட்டுகள் ஆகியவற்றைக் கொண்டு ஒரே உருவமாக்கி, இடகலை, பிங்கலை, சுழிமுனை என்று சுழன்று ஓடும்.

வழியதுவாய் வாசல்வள மெனக் கொண்டங்கே
வளமாக வுடனுண்ட வன்மை யெல்லாம்
சுழியதுவாய்க் காளவாய்க்கி டுகாந் தலாகிக்
ககனம்போ லெரித்துமே மடியப் பாய்ந்து
சுழியதுவாய்த் தூராத குழிய தாகத்
துர்ப்பாவை நிணமுமாய்ப் பற்றி யீரலுமாய்ப்
பொழியதுவாய்க் காளித நாறிய பித்துமாகிப்
பொருமலுமாய்ச் செறுமலுமாய்க் கிருமியாமே 85

நாம் உண்ட உணவின் சாரமானது சுழிமுனைவழியாக சுண்ணாம்புக்காளவாய்க்கு தீயிட்டதுபோல் மேல் நோக்கிப் பாய்ந்து குழந்தையின் உடலுக்குள் பாய்ந்து நிணமாகவும், ஈரலாகவும், உண்டாகி பித்தம் ஏற்பட்டு பொருமலும், செருமலும் போன்ற செயல்களை உண்டாக்கி கிருமியாக அமையும்.

கிருமியாய் வகைதோறும் வாயுவைத்தா னிறுத்தி
கிரணமுந் நூற்றறுபது மோங்குட னிரங்கலாகி
அருமையாயர்த்த விருத்திய மாந்தகுட லதுதான்
அமர்ந்த முப்பத்திரெண்டு முழங்குடலு மாகும்
ஒருமியா யொப்பமுட னொன்பது வாய்மடித்து
உற்றசுக்ல மலசலந்தான் மூன்று மாகி
வருமியாய் வச்சிரத்தோல் மேலே போர்த்து
வழி பலவாய் மொழி மொழியாய் சந்து மாச்சே 86

கிருமியாய் அமையுமிடத்தில் எல்லாம் வாயுவை நிறுத்தும் முந்நூற்றறுபது கிரணங்களுடன் கூடிய குடலானது முப்பத்திரெண்டு முழம் இருக்கும். அதில் ஒன்பது மடிப்புகள் இருக்கும். குடலினுள் சுக்கிலம், மலம், சலம் ஆகிய மூன்றும் தங்கி வச்சிரத்தோலால் முடப்பட்டிருக்கும். குடலில் வழி பல இருந்து, குமிழ் குமிழாய் பல சந்துகளை உடையதாக இருக்கும்.

சந்துமூன்ற ரைகோடியு ரோமத் துவாரம்
தாக்கான நாலெட்டு உறுப்பு மாகி
இந்து விருபது விரலுமை நான்கு முகிரு
எட்டுச்சாண் நீளமுமா யேக மாகி
நந்துநற்சாண் பெருமைமெய் வாய்கண் மூக்கு
நலத்த செவியுடல் பிரிதிவியின் கூறாகிப்
பந்துரெண்டு காலுமாயி ரெண்டு கையாய்ப்
பதினாறு கவருடைய வீணாத் தண்டே. 87

உடலின் சருமத்தில் மூன்றரை கோடி உரோமத் துவாரம் உள்ளது. முப்பத்திரெண்டு உறுப்புகளாகி இருபது விரல்களும் இருபது நகங்களும் தோன்றும். எட்டு சாண் நீளமுள்ள உடல் முழுவடிவம் பெறும். இதில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் பிருதிவியின் கூறாக அமைந்துள்ளது. உடலானது இருகாகல்களும் இருகைகளும் பதினாறு பிளவுகளைக் கொண்ட வீணாத்தண்டுடன்,

தண்டோடே யாறுதெரு வேழுக டலாகும்
தாக்கான வெட்டுத்தூண் முப்பது வாஞ் சத்து
எண்டோடே யெழுபது பேரெலும்பு தானாம்.
ஏற்றமா மொழி முச்சா ணெலும்பு மாகும்
முண்டோடே யெலும் புமுச்சாண் சதை யாகும்
முக்கியமா மெண்பலமீர லுமா மென்ப
நண்டோடே நானாழியு திர மாகும்
நாற்பத்து வாசலையு முடைத்த தாமே 88

ஆறு ஆதாரங்களையும், பருத்த எலும்புகள் எட்டையும் தூணாகவும் எழுபது எலும்புகளையும், கை விரல்களில் முச்சாண் எலும்புகளும், எட்டுபலம் ஈரலும். நான்கு நாழி உதிரமும் (இரத்தம்), நாற்பது வாசல்களையும் கொண்டது ஆகும்.

உடைத்திரட்சி யுதிரமாகி சமேதை யத்தி
உயர்ந்த சுக்கிலமச்சை சப்த தாது
படைத்த பல முப்பத் திரண்டு மாகும்
பண்பான பழுவெலும்பு பதினா றென்க
முடைத்த முதுகுத்தண்டு பன்னிரெண்டு கோவை
முதற் சூழ்ந்த தாளசைவ தைந்து மாகும்.
நடைத்த நரம்பெலும்பொன்றி யேழரையுங் கூறு
நலம் படவே சதைமேவி நாடிற் றன்றே 89

இரசம், இரத்தம், சதை, எலும்பு, மச்சை, மூளை, சுக்கிலம் என்பது ஏழுதாதுக்களாகும். இவை முப்பத்திரெண்டு பலமுள்ளதாக இருக்கும் பழு என்புகள் பதினாறு. முதுகுத்தண்டு பன்னிரெண்டு எலும்புகள் கோர்த்த ஒரு கொடி போலிருக்கும். ஐந்துவித அசைவுகளைக் கொண்ட மூட்டுக்களை கொண்டது. இவ்வுடல் மேலும் நரம்புகள் எலும்புகளுடாக ஓடி மேலே சதையை போர்த்திியிருக்கும்.

நாட்டியே பிடரியிற் கோத்த நாடி
நரம்புபின்ன லோரேழா யிரமா மென்க
ஆட்டியே யசைவுடலந் தான்று வக்கில்
ஆறாயிரத் துநாற்பத் தாற தாகும்

தூட்டியே தொழுததை யிரண்டாயி ரத்துத்
துடர்ந்து விண் வளருமையாயி ரமா மென்க
பாட்டியே கோணங்கள் பதினா றாகும்
பகர்சேட் டுமத்தின்குண் டலத்தி னனலே 90

பிடரியில் கோர்க்கப்பட்ட நாடிகள் ஏழாயிரம் ஆகும். உடலை அசைக்கச் செய்கின்ற நரம்புகள் ஆறாயிரத்து நாற்பத்தியாறு உடலை மேல்நோக்கி வளர்த்து இருக்கச் செய்கின்ற நரம்புகள் முதலில் இரண்டாயிரத்திலிருந்து பிறகு ஐய்யாயிரமாக கூடும். உடலில் கோணங்கள் பதினாறு உண்டு.

அனலெழும்பி வாயுபத்துநா டியிற் சுருங்கி
அல்லலுறும் வாசலொன்பதிற் கதவொன் றிட்டு
இனலெழும்பி யீசர்வாச லைத்தி றந்து
இடையினொடு பிங்கலைநாத னையே நோக்கி
நிணலெழுப்பி யன்பென்னு நெய் சொரிந்து
நேராக அமிர்தமென்னுந் திரியை விட்டு
வனலெழுப்பி மணிவிளக்கை நிறைய வேற்றி
வாசியைநீ வரவழைத்து வைத்துக் கொள்ளே 91

மூலாதாரத்தில் இருந்து அனல் எழும்பி பத்து வாயுக்களில் தங்கி ஒன்பது துவாரங்களில் கதவு ஒன்றை இட்டு அடைந்து நிற்கும். இடகலை, பிங்கலை என்று வழியே வாசலைத்திறந்து சென்று ஈசனை நோக்கி அன்பு என்னும் நெய்யைச் சொறிந்து, அமுதமென்னும் திரியைவிட்டு அனலை எழுப்பி வாசியை வரவழைக்கும்.

கொள்ளவே யைம்புலனை நாச மாக்கிக்
கோசமா மட்சரத்தை யள வறிந்து
அள்ளவே அன்பத்தோ ரட்ச ரத்தின்
ஆதார நிராதரஞ் சோதித் தேறி
உள்ளவே மண்டலத்தின் வலமாய் வந்து
உதிர மண்டலமொக் கப்பால் சொறிந்து
கள்ளவே காமம் வெகுளி மயக்க றுத்து
கடும்புரவி குசைதாங்கிக் கருதிப் பாரே 92

ஐம்புலன்களையும் அடக்கி, ஆறாதாரங்களிலும் கூறப் பட்டுள்ள ஐம்பத்தி ஒரு அட்சரங்களையும் ஒவ்வொன்றாக மேலேற்றி மேலுள்ள மண்டலங்களை வலம் வரவும். காமம், கோபம், மயக்கம் ஆகியவற்றை ஒழித்து குதிரைபோல் வேகமாக செல்லும் வாசியை அடக்கி உள்ளே காணவேண்டும்.

தாங்கியே யிருமூன்றுதெ ருவுஞ் சுற்றித்
தயங்காத வசுவங்க டெருவும் ரெண்டு
ஏங்கியே யேழாயிரத்திரு நூறு வாய்வு
இரவு பகலளவாக இமைப் பில்லாமல்
ஓங்கி ஓங்காரமெனு மூல நாடி
உறுதி கொண்டெழு பத்தீராயிர மர்நாடி
நாங்கியே நரம்பொடு நாடியிவைக் கெல்லாம்
நலத்த வுரப்படுநாடியொன் றுண்டா குமே. 93

சுவாசமானது ஆறாதாரங்களையும் தாண்டி ஏழாயிரத்து இருநூறு சுவாசத்தை இரவு பகலாக நடக்கும். பிறகு ஓங்கார மூலநாடி மூலமாக எழுபத்தி இரண்டாயிரம் நாடி நரம்புகளில் தங்கி அவற்றை செயல்படுத்தும். இவை எல்லாம் சேர்ந்து ஒரு பெரு நாடியாகும்.

ஒன்றென்று மிதில் ஆதித் தன்போ னாடி
ஒருபத்தும் பிரித்துதான் பரந்த வாறும்
நன்றென்றுங் காலோடுகைநடுத் தாம ரையில்
நாடிநுழைந் துயிராகி மெய்யி லோடிப்
பிண்டுநரம் பாலெழும்பைப்பிணைப் பிசை வித்து
பெருநாடி புகுமத்தையறிந் தடங்கி நிற்கும்
அண்டெனவே நாடிபத்துஞ் செறிந் தடங்கி நிற்கும்
ஆதிமூல முந்திமுதலாகி யுறு மாமே 94

அந்த நாடியில் இருந்து சூரியன்போல் பத்து நாடிகள் பிரிந்து கைகால்களில் நடுவில் தாமரையாக உள்ள அநாதகத்தில் நுழைந்து உயிர் ஊட்டி உடலெல்லாம் சென்று எலும்பிலெல்லாம் புகுந்து அடங்கி நிற்கும். பிறகு பத்துவாயுக்களும் கூடி முன்போலவே அந்த பெருநாடிக்குள் சென்று தங்கும்.

உறுமுடிக்குக் கீழ்மேலும்ப திந்து நிற்கும்
உகமையாந் தலையினிலே யீசு ரன்றான்
செறிவினை செய்வினைப்பயன் மூன்று மறிந்து
திகழிந்திர மான்றலைபோலி மைப்பா னுள்ளே
தறுவவுனைச் சத்தபரிசரூ பரச கந்தம்
தானம் வகைதொறுமுத்தி கொடுத்து நல்கி
துறுவினை செய்தகமை யறுத்துள்ளே தேக்கித்
தொண்ணூற் றாருங்கருவி தத்வ மாமே 95

தலையிலிருந்து பாதம்வரை எல்லா தத்துவங்களையும் பொருந்திய ஈசன், பழம்வினை, புதுவினை, ஆகியவற்றை முறைப்படி ஆய்ந்து அதற்குகந்தவாறு ஒலி, ஸ்பரிசம், உருவம்,

சுவை, மணம் ஆகியவற்றை உணரவைத்து முத்தி தருவார். அவ்வாறு தரும்பொழுது தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அது உள்ளடக்கியதாகவே இருக்கும்.

ஆமெனு நாடிநரம் பெழுபத் தீராயி ரமாம்
அதிவீறாம் நாடிவிஷ்ணு நாடி யாகும்
ஏமருத்ர நாடியிடை யொடுபிங் கலையும்
எழின்முது கெலும்புபதினாறு பழுவு மாகும்
மூமெனு முப்பத்தொருவாரக் கருவு மாகி
முதிர்ந்து நின்றவையுழக்கா முதிர மாகும்
நாமெனு நாழிவாத முந்நாழி பித்தம்
நானாழி சேட்டுமமு நலத்த தாமே 96

உடலில் எழுபத்திரண்டாயிரம் நாடிகள் உள்ளன. இதில் அதிக வீறுடயவை விஷ்ணுநாடி என்றழைக்கப்படும் உருத்ர நாடியானது இடகலையும், பிங்கலையுமாகும். முதுகெலும்பும் பதினாறு பழு என்புகளும் நம் உடலில் உண்டு. முப்பத்தி ஒரு வாரக் கருவாய் இருக்கும் பொழுது அங்கு இரத்தம் ஒரு உழக்களவு இருக்கும். அதில் ஒரு நாழியளவு வாதம், மூன்று நாழிஅளவு பித்தமும், நான்கு நாழி அளவு கபமும் இருக்கும்.

நலத்த மூன்ற ரைக்கோடி ரோமத்து வாரம்
நல்லி ருபத்தெண் கோடி மலத்து வாரம்
முலத்த முப்பதெண் கோடி சலத்து வாரம்
முயன்றிரத்த மைப்பலமாங்கிச நூறுபலமாம்
கொலத்த கெந்தமெண் பலமாம் ரோமநூற் றெட்டு
கோடியாம் மேதையிருநூ றுபல மாகும்
பெலத்த தோல் முன்னூ றுபல மாகும்
பேரான நிணந்தானும் ஆறுப லமாமே 97

உடலில் முன்றரைகோடி உரோமதுவாரங்களும், எட்டுகோடி கழிவுகளை அகற்றும் துவாரமும், முப்பத்தெட்டு கோடி நீர்த்துவாரங்களும் உண்டு. நம்முடலில் உள்ள இரத்தம் எட்டு பலமும், உரோமம் நூற்றெட்டு கோடியும், கொழுப்பு இருநூறு பலமும், தோல் முன்னூறு பலமும், நிணம் ஆறுபலமும் உடையதாக இருக்கும்.

ஆமென்ற குடன்முன்னூற்றே ழுபல மாகும்
அதிகமாம் வழுக்கையதுநாற் பலம தாகும்
தேமென்ற சீயுரித்தான் கண்கள் ரெண்டும்
சிறக்கவே நாலுகழஞ் சாகுங் கண்டாய்

நாமென்ற நாக்குநாற்க ழஞ்ச தாகும்
நற்கந்த மூக்கு தானது முக்க ழஞ்சு
காமென்ற கன்னஞ் சேர்நாற் கழஞ்ச தாகும்
கடிந்தெலும் பெலாநூறுநாற்பத் தெண்பல மென்னே 98

குடல் முந்நூற்றேழு பலமும், அதில் உள்ள அழுக்கு நான்கு பலமும், சீழ் ஒரு உரியளவும், இரண்டு கண்களும் நான்கு கழஞ்சளவும், நாக்கு நாற்கழஞ்சளவும், மூக்கானது மூன்று கழஞ்சளவும், கன்னச்சதை நான்கு கழஞ்சும், எலும்புகள் நூற்று நாற்பத்து எட்டுபலம் உள்ளது.

என்னவே யிறைச்சிபலம் நூற் றறுபத் தைந்தாம்
ஏற்ற முப்பலந்தானு மூளை யாகும்
பன்னுதா மரைமொட்டுமைங் கழஞ்ச தாகும்
பார்க்கவே சலப்பையு மோர் முழந்தா நீளம்
கன்னவே கருவிகடானது தொண்ணூற் றாறும்
கணக்காக வுடற்குறிப்பு காயந்தா னாகும்
தன்னவே தத்துவங்கடா னெல்லாஞ் சொன்னேன்
சார்ந்த நாடியின் தன்மை சாற்றி னேனே 99

உடலில் உள்ள மாமிசம் நூற்றறுபத்தைந்து பலமும், மூளை மூன்றுபலமும், இதயம் ஐந்து கழஞ்சும், சலப்பை யானது ஒரு முழந்தாள் அளவும் உடையது ஆகும். ஆக உடற் கருவிகள் தொண்ணூற்றாறையும் கூறினேன். உடலின் தத்துவங்களையும், நாடியின் தன்மைகளையும் கூறினேன்.

தத்துவ விதி முற்றிற்று

நாடி நிதானம்

சாற்றுகிறே னாடியிடப் பூர்வ மெல்லாம்
தாக்கான நாக்குமல மூத்ர மாகும்
காற்றுகிறேன் கண்ணோடு பேச்சு தானும்
காரியமா யெட்டுவகை பரிட்சை தன்னில்
ஆற்றுகிறே னவற்றிலுள்ள குணங்க ளெல்லாம்
அசாத்திய சாத்திய மறிந்த வையும் பார்த்து
நாற்றுகிறே னாடியிட பண்பை யெல்லாம்
நற்குணமுந் துர்க்குணமு நயந்து பாரே 100

நோயாளியின் உடலைப் பார்க்கும் பொழுது நாடி, நாக்கு, கண், மலம், மூத்திரம், ஸ்பரிசம், நிறம், பேச்சு, முதலான எட்டு வகை பரிட்சைகளையும் செய்து அவற்றின் குணங்களை அறிந்து சாத்திய, அசாத்தியங்களையும் கருத்தில் கொண்டு, நாடியின் குணத்தையும் மனதில்வைத்து பார்க்கவேண்டும்.

நயந்து நீநாடிதான் பார்க்கும் வாறு
நலமான புருவமுச்சி கண்ட நெஞ்சு
கயந்து கையிற்கா்லடியின் முழங்கை தன்னிற்
கணுக்காலின் முழங்கால்கை குழியி லாகும்
தயந்து தானங்கடா பரிக்கு நாடி
சகலநரம் பெழுபத்தீரா யிரமுஞ் சார்ந்து
தியந்து நிற்குமிவ்விடங் கணாடி பார்க்கில்
திரேகத்தின் பரிட்சையெல்லா மியம்பி டாயே 101

உடலில்நாடிகணமுற்பட்டால், புருவம், உச்சி, கழுத்து, நெஞ்சு, கை மற்றும் காலின் அடி, முழங்கை, கணுக்கால், முழங்கால், கைக்குழி ஆகியவற்றில் காணமுடியும். உடலிலுள்ள சகல நரம்புகள் எழுபத்தி இரண்டாயிரமும் ஒன்றாக கலந்து நிற்கும். இவ்விடங்களில் நாடியை கணித்து உடலின் நிலையை கூறவேண்டும்.

நாடி பார்க்கும் விதம்

இயங்கிடவே அங்குட்ட விரலுக் கப்பால்
ஏற்றமாய் நெற்கிம்பிடை விட்டிப்பால் பார்க்கில்
முயம்பிடவே மூவிரலா னாடி தொட்டு
மும்மூர்த்தி நாடியின்மு ழக்கம் பாரு
பியம்பிடவே பிரமமது வாத நாடி
பேரான பித்தந்தான் விஷ்ணு நாடி
தியம்பிடவே சேட்பமது ருத்ர நாடி
செயலெல்லாஞ் செப்பிநீ தெளிந்தி டாயே 102

அங்குஷ்ட விரலின் முடிவுக்கு நெல்லளவுக்கு கீழே நாடியை மூவிரலால் சோதித்துப் பார்க்கையில் நாடியின் ஓசையைக் கேட்பாயாக. வாதநாடியானது பிரம்பநாடி பித்தநாடியானது விஷ்ணுநாடி, சேத்தும நாடியானது உருத்திரநாடியாகும். இவற்றின் செயல்பாடுகளைக் கூறி நோயைக் கணிப்பாயாக.

நாடிபார்க்கும் காலம்

தெளிந்திட்ட காலைநாழி கைதான் பத்தும்
திறமையாய் வாதத்தின் சுரப்ப தாகும்
பிழிந்திட்ட வுருமத்திற் பத்து நாழி
பித்தத்தி னாடியின்பிர தாபந் தானாம்
தெளிந்திட்ட வந்திதனிற் பத்து நாழி
சிலேட்டுமத்தின் செயலாகுங் கங்குற் போது
வழுந்திட்ட வாதத்தி னாடி யாகும்
வலிந்த நசிபத்தின்மேற் பித்த மாமே 103

காலையில் பத்து நாழிகை வாதத்தின் காலம். அதன்பிறகு உள்ள பத்து நாழிகை பித்தத்தின் காலமாகும். மாலையில் பத்து நாழிகை கபத்தின் காலமாகும். மீண்டும் இரவு தொடங்குகை யில் பத்து நாழிகை வாதநாடியும், நடுஇரவு பித்தநாடியும் ஓடும்.

ஆமென்ற வைகரையிற் சேட்ப மாகும்
அம்மூன்று நாடிகளுமடங்கி யெழுங் காலம்
நாமென்ற வாதத்துக்கிருப் பிடமே கேளாய்
நாபிக்குக் கீழென்று நவில லாகும்
பேமென்ற பித்தத்துக்கிருப் பிடமே கேளாய்
பேரான கண்டத்தின் கீழ தாகும்
தேமென்ற சேட்பமது சிறந்திருக் குந்தான்
செயலான வுச்சிக்குக் கீழ தாமே 104

வைகைரையில் சிலேத்தும நாடியாகும். வாதநாடிக்கு இருப்பிடம் நாபிக்குக் கீழ் என்று கூறலாம். பித்தத்துக்கு கழுத்துக்குக் கீழேயும், கபத்துக்கு கழுத்துக்குக் கீழும் இருப்பிடம் என்று கூறலாம்.

கீழான பெருவிரற் கீழ் தர்சினியாம் விரலிற்
கிளந்தெழுப்பும் வாதத்தி னாடி தானும்
மாழான மத்தியமத்தின் விரல்தான் பித்தம்
மகத்தான வனாமிவிரல் சேட்ப மாகும்
வாழான மன்னனுக்கு வலதுகை யினாடி
மங்கையருக் கிடதுபக்கம் வகுக்க லாகும்
காழான கைகாலி னாடி பார்க்கக்
கருவிகடான் கணக்கறிந்து கருதிப் பாரே 105

பெருவிரலுக்கின் கீழ் சுட்டுவிரலால் பார்ப்பது வாதநாடி. மத்திய விரலால் பார்ப்பது பித்தநாடி, அனாமிகை விரலால் பாப் பது கபநாடியாகும். நாடி பார்க்கும் பொழுது ஆண்களுக்கு வலது கையையும் பெண்களுக்கு இடது கையையும் பார்க்க வேண்டும்.

கருதியே நாடிகடான் காணு நேரம்
கதிருதயஞ் சித்திரை வைகாசிக் குத்தான்
அருதியே யானியோ டியைப் பசியும்
அமிர்தமாங் கார்த்திகைக்கு மத்தி யானம்
மருதியே மார்கழியுந் தையு மாசி
மாலை நேரந்தனிலே பார்க்க லாகும்
யிருதியே புரட்டாசியாவணி பங்கு னியும்
பேரான கங்குலர்த்த ராத்திரி தானாமே 106

நாடிகள் பார்க்க வேண்டிய காலங்கள் யாதெனின் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் மதியத்திலும், மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் மாலையிலும், புரட்டாசி, ஆவணி, பங்குனி ஆகிய காலத்தில் இரவிலும் பார்க்க வேண்டும்.

நாடி தோன்றாத காலம்

அத்தமா நாடிதெரி யாத பேர்கள்
அப்பியங் கஞ்செய் தோர்க ளன்னந் தண்ணீர்
குற்றமா மிகுதியுமே யுண்ட பேர்கள்
குதிரை கரிவெய்யில்விடா சிற்றின் பத்தோர்
மத்திய மாமதுகஞ்சா வபினி மாம்சம்
மச்சங்கள் மிகவுமுண்டோர் வாயு கும்பித்
தித்தமாய் நிறுத்தினோ ரிவர்கட் கெல்லாம்
திசைக லங்கிநாடியது தெளிந்திடாதே 107

நாடி நடை தெளிவாக தெரியாதவர்கள் யாரென்று காண்போமாகில், உடற்பயிற்சி செய்தவர்கள், அதிக உணவு, தண்ணீர் உட்கொண்டவர்கள், குதிரை சவாரி செய்தவர்கள், கடும் வெயிலில் நடந்து வந்தவர்கள், சிற்றின்பத்தில் ஈடுபட்டவர்கள், கஞ்சா, அபின் மயக்கத்தில் இருப்பவர்கள், மீன் அதிகம் உண்டவர்கள் ஆகியோர்க்கு நாடி நடை திசை கலங்கி இருக்கும்.

வாதநாடி

தெளிந்திட்ட வாதநாடி குணந் தானே
சிறுபிள்ளை தூங்குதொட்டி லாட்டம் போலும்
வளிந்திட்ட வளைந்துவ ளைந்தேந டக்கும்
மண்டூகந் தத்துதல்போ லோணான் போலும்
தளிந்திட்ட சர்ப்பம்போ லட்டை போலும்
தவழ்ந்து மேவேலியினிற் குருவி போலும்
அளிந்திட்ட வாமையின்றன் நடையைப் போலும்
ஆதியாம் வாதமது நடக்குந் தானே 108

வாதநாடியின் குணத்தைக் கேட்பாயாக. சிறுகுழந்தை தூங்கும் தொட்டிலாட்டம் போல் வளைந்து வளைந்து நடக்கும். தவளை தத்துவது போலும், ஓணான் நடைபோலும், பாம்பு அட்டை அசைந்து செல்லுதல் போலும், வலியுடன் குருவி நடப்பது போலும், ஆமையின் நடையைப் போலும் வாதநாடி நடக்கும்

பித்தநாடி

நடக்கின்ற பித்தத்தி னாடி கேட்கின்
நாகரிக மாகுமன்ன நடையைப் போலும்
மடக்கின்ற மயில்போலுந் தாரா போலும்
மாடப்பு றாவுமூர்க் குருவி போலும்
விடக்கின்ற மெத்தனவாம் மீண்டு மீண்டு
மேன்மையாய் முடுக்காக விளக்க மாகிக்
கிடக்கின்ற கெருடன்போற் பெலத்தே யோங்கிக்
கேசரம்போ லசையுமது பித்தந் தானே 109

பித்தத்தின் நாடி நடையை இனி காண்போம். அது அன்னத்தின் நடையைப் போலும், மயில், தரா, மாடப்புறா, ஊர்க்குருவி போல மீண்டும் மீண்டும் முடுக்கமாக கருடனின் இறகசைவைப் போல சற்றே பலமாக அசையும்.

சிலேத்தும நாடி

தானென்ற சிலேட்மத்தின் றாது கேளாய்
தயங்கியே தோற்றுமது தோற்றா தாகிக்
கோனென்ற கோழியின்றன டையே போலும்
கொக்கினு றக்கம்போலூர்க் குருவி போலும்
மானென்ற மங்கைநல்லார் மயக்கிற் சிக்கி
மருவின வன்றாதுபோல் மசக மாகித்
தேனென்ற சிலந்தியின் பூச்சு போலும்
சிலேத்து மநாடியது தெளிவாய்ப் பாரே 110

சிலேத்துமமாகிய கபத்தின் நாடி நடையைக் கேட்பாயாக. அது தெளிவாகத் தோன்றியும் தோன்றாததுபோல், கோழியின் நடையைப் போலும், கொக்கின் நடையைப் போலவும், ஊர்க்குருவி நடையைப் போலவும், பெண்ணாசை கொண்டு மயங்கியவன் நாடிபோலவும் சிலந்திப்பூச்சியின் நடையைப் போலவும் இருக்கும்.

வாதபித்தநாடி

தெளிவான வாதபித்த நாடி செய்தி
செப்பவே சிறுகுருவி போன டந்து
வளிவான மயில்போல நடப்பு காணும்
மருவியபின் னோந்தியின் மார்க்க மாகும்
களிவான வாதசேட் பத்தி னாடி
கானகத்தின் கோழியதுபோன டந்து
அளிவான அட்டையின்றன் மார்க்கங் கண்டால்
அதிகமாய் முன்சொன்ன நாடி யாமே 111

வாதபித்த நாடியின் நடையைக் கேட்பாயாக. சிறுகுருவி நடப்பது போலவும், மயில் நடப்பது போலவும், பச்சோந்தி நடையைப் போலவும், காட்டுக்கோழியின் நடையைப் போலவும், மற்றும் அட்டையின் அசைவு போலவும் வாதபித்த நாடி நடை காணப்படும்.

பித்த சிலேட்ப நாடி

நாடியே பித்தசிலேத் துமத்தின் தாது
நண்ணியே நடக்கும்வகை நட்பை கேளீர்
பாடியே பாம்புபோல சைந்து பின்னை
பதித்த தவளைக்குதித்தல் பதரும் போலாம்
ஆடியே சீரண நாடி தானே
அசைந்து மதயானைபோன டைந டக்கும்
தேடியே தீபனத்தி னாடி தானே
சிறுகாக்கை தூங்குதல்போற் றுடிக் குமன்றே 112

பித்தகபநாடியின் நடையைக் கேட்பாயாக. பாம்பின் அசைவு, தவளை குதித்தல், மதயானையின் நடை, சிறுகாக்கையின் தூக்கம் ஆகியவற்றைப் போல் பித்தகப நாடி நடக்கும்.

சன்னிநாடி

துடித்திட் டங்கசைந் தசைந்து நாடி நின்று
சொல்லும் விறகுத்தலையோன டையே யானால்
கெடித்திட் டுக்கிறுகிறென்றே சுற்றி நாடிக்
கீழோடி வளைந்துமேப தறிச் சுற்றி
அடித்திட்டு அன்னம்போ லட்டை போல
அசமந்த மாகவேமெ லிந்த தானால்
தடித்திட் டுக்குடிலமாய்ச் சிக்கென் றானால்
சன்னியென்ற நாடியென்றே சாற்ற லாமே 113

சன்னி நோயின் நாடியானது, தலையில் விறகுச்சுமை கொணரும் நடையைப் போல கிறுகிறுவென்று சுற்றி கீழோடி வளைந்து பதறி சுற்றியும், அன்னம், அட்டை ஆகியவற்றின் நடைபோல மெதுவாகவும் அசைந்து கொடுக்கும். இவ்வகை நாடி நடைகளே சன்னி நோய்க்கு நாடிநடையாகும்.

சுகசன்னி

சாற்றியே மந்தமாய் நாடி தானும்
தனித்ததொரு குக்குடம்போற் பாம்பு போல
மோற்றியே மூஞ்சுறு போல வாகி
முனையாகிச் சுடராகிக்கொ முந்தே யோடி
ஆற்றியே யடங்கிநின்றங் கெழும்பிற் றானால்
அப்பியங் கஞ்செய்தரிவைய ணுகி னோர்க்கும்
தோற்றியே சுகசன்னி யென்னும் நாடி
சூட்சாதி சூட்சமாய்த் துஞ்சும் பாரே 114

கோழி, பாம்பு, மூஞ்சுறு ஆகியவற்றின் நடையைப் போல விளக்கின் தீச்சுடர் போல படபடப்பாக நடந்து பின்பு அடங்கி நின்றாலும், உடற்பயிற்சி செய்தவர்களும், உடலுறவு செய்தபின்னும் சுகசன்னி நாடி தெரியும்.

வாதசுரம்

துஞ்சியே வாளைமீன் போலப் பாய்ந்து
துடித்துமே தடித்துத்தான் சிக்க லாகி
அஞ்சியே சர்ப்பம்போல டங்கி நின்று
ஆனை மும் மதம்போல வார்ப்ப ரித்து

நெஞ்சியே நெறநெறன்று நிமிஷந் தானும்
நிலைவிட்டு நீங்கியே மீண்டும் புக்கில்
வஞ்சியர் மேல்விகாரமாய் மனதைப் பூண்ட
வாதசுர நாடியென்றே வகுக்க லாமே 115

வாளைமீன்போல பாய்ந்து துடித்து பிறகு பாம்புபோல அடங்கி நின்று பிறகு யானைக்கு மதம் கொண்டதுபோல ஆர்ப்பரித்து நெறுநெறுவென்று ஒரு நிமிடம் அந்த இடத்தை விட்டு அகன்று மீண்டும் வந்து சேர்வது போல உள்ள நாடிநடை வாதசுரத்துக்கான நாடியாகும்.

மரணநாடி

வகுக்கவே வாதத்தி னாடி தானும்
வளைந்துமே முன்னோடிப் பிரண்ட தாகில்
வகுக்கவே மந்தமது மெத்த வாகில்
மயிற்றா ராவன்னநடை போன்று நின்றால்
நிகுக்கவே நின்றுநின்று நேரோ டாமல்
நிலைதப்பி முன்பாய்ச்சல்பின் பாச்ச லாகிச்
செகுக்கவே சடந்தானு மெட்டு நாளிற்
சிவபுரத்துக் கெய்திவிடுந் தின்ணந் தானே 116

வாதநாடி வளைந்து முன்னே ஓடி பிரண்டதனாலும், மந்தமாக மயில் அன்னம் ஆகியவற்றின் நடைபோல இருந்தாலும், நின்று நின்று நேராகச் செல்லாமல் தன்நிலை மாறி முன்னும் பின்னுமாகப் பாய்ந்து ஓடினால் அவ்வுடல் எட்டு நாளில் மரணம் எய்திவிடும்.

திண்ணமாய்ப் பித்தத்தி னாடி தானும்
தேள்கொடுக்கு தெறிப்பதுபோற் றெறிக்கு மாகில்
வண்ணமா மாதத்தின் மரண மென்க
வல்லூறு சர்ப்பமதுவ ளைந்து காண்கில்
பன்னியே பட்சத்தின் மரண மென்க
பருவர ணைத்துடிசெய்யி லெட்டு நாளாம்
மின்னியே யிந்தவித மீண்டு மீண்டு
மிரட்சியே மீண்டுவந்தால் மீளா தாமே 117

பித்தநாடியானது தேள்கொடுக்கு தெறிப்பதுபோல் தெறித்தால் அது ஒரு மாதத்தில் மரணமேற்படுவதைக் குறிக்கும். வல்லூறின் காலிலுள்ள சர்ப்பம்போல வளைந்து காணப்பட்டால் அது பதினைந்து நாளில் மரணமேற்படுவதைக் குறிக்கும். அரணைவால் துடிப்பது போல் துடித்தால் எட்டு நாளில் மரணம். பித்த நாடியானது அமுந்தி மீண்டு மீண்டு வந்தால் அது அவ்வுடல் மரணத்தில் இருந்து மீள முடியாது. உடனே மரணம் சம்பவிக்கும்.

மீளவே உந்தியினிற்சு ழியைப் பற்றி
விளங்கியதோர் வாதபித்த சேட்டு மந்தான்
ஆளவே யையமென்ற நாடி தன்னில்
ஆதித்தன் சுடரொளிபோற் றோன்று மாகில்
காளவே காந்தத்தின்க னலாய்க் காணில்
கலங்கியே தானம்விட்டுக்க டைசி யாகில்
பாளவே பம்பரம்போற்சு ழலு மாகில்
பரமப தமடையுமென்றே பகர லாமே 118

உந்தியில் பற்றி எழுந்து மூவகைநாடிகளில் கப நாடியானது சூரியனின் ஒளியைப் போன்று கனலாகக் கண்டாலும், தன் இடத்தை விட்டு நகர்ந்து கடைசியில் பம்பரம் போல் சுழலுமானால் அவ்வுடல் விரைவில் மரணமடையும்.

பகரவே வாதத்தி னாடி தானும்
பருகியதோர் பித்தத்தின் வீட்டைச் சேர்ந்து
பிகரவே பித்தத்தி னாடி தானும்
பேரான சேட்டுமத்தின் வீட்டைச் சார்ந்து

அகரவே யையமென்ற நாடி தானும்
அதன்வீட் டைவிட்டுமே யப்பா லேகித்
திகரவே கண்டத்தை சேரு மாகில்
செடம லைந்துசிவலோகஞ் சேர்வர் தாமே 119

வாதநாடியாது தன்னிடத்தை விட்டு பித்தத்தின் இருப்பிடத்தை அடைந்தாலும், பித்த நாடியானது கபநாடியின் இடத்தை அடைந்தாலும் கபநாடியானது தன்னிடத்தை விட்டு அகன்று அப்பால் செல்லுமானாலும் அவ்வுடல் மரணமெய்துவிடும்.

சேரவே வீணைபோற்றெ றிக்கு மாகில்
சித்தமா யத்தினமூன்று நாளிற் றீர்வர்
ஆரவே யையமா நாடி தன்னில்
அதிர்ந்துமே தவளைப்போற் குதிக்கு மாகில்
போரவே பாம்புபோற்பி ரள்வுற் றூர்ந்து
பொறிய ரவந்தன்னுடைய நடைகண் டாலும்
மாரவே மரந்தன்னிற்கொடி பின்னி னாற்போல்
வந்திடி னுமரணமென வகுக்க லாமே 120

கபநாடியானது வீணை தந்திபோல் தெறித்தால் மூன்றுநாளில் மரணம். மேலும் அந்நாடி தவளைபோல் குதித்தாலும், பாம்புபோல பிரண்டு ஊர்ந்து நடந்தாலும், மரத்தை கொடி பின்னுவதுபோல உடனே மரணம் அந்நோயாளியைப் பற்றிவிடும்.

நாடி பார்க்குமியல்பு

வகுக்கவே மானிடர்தம் வலக்கை பற்று
வளைவன்றி முடக்கன்றி நெட்டி வாங்கி
முகுக்கவே மூவிரலாற் றொட்டுப் பார்க்கில்
முன்னாடி வாதம்பின் னாடி பித்தம்
சிகுக்கவே யனாமிவிரல் சேட்ப மாகும்
செயலெல்லா மறிந்துணர்ந்து சேதி கேட்டு
நகுக்கவே நோயதனி னன்மை கண்டு
நாடியிடச் செயலறிந்து நாடி டாயே 121

மனிதர்க்கு நாடி பார்க்க முற்படுகையில் முதலில் வலக்கையை நெட்டி வாங்கி, மூன்று விரலால் தொட்டுப் பார்க்கில் முதல் விரல் வாதநாடியையும், அடுத்தவிரல் பித்தநாடியையும், அனாமிகைவிரல் கபநாடியையும் குறிக்கும். நாடிகளின் குறிப்பினால் நோயை அறிந்து அதன்படி நடக்கவேண்டும்.

பூத்தமங்கை நாடி

நாடியே யெறும்புதா னூர்தல் போலும்
நல்லாமை யசைவதுபோல் வாத நாடி
கூடியே குளிர்ச்சியாய் மெதுவு போன்று
குடிலங்க ளில்லாமற் றோன்று மாகில்
வாடியே மங்கையர்க்குக் கெர்ப்ப மாகும்
மகத்தான பஞ்சுபோன்மெ துவா யுற்றுப்
பூடியே கின்னரத்தின் பொலிவே யானால்
பூத்தமங்கை நாடியென்றே புகல லாமே 122

வாதநாடியானது எறும்புபோல் ஊர்ந்து சென்றாலும் ஆமை அசைவதுபோல் அசைந்து சென்றாலும், குளிர்ச்சியாய் மெதுவாக கலங்கி நில்லாமல் தோன்றினால் அது கர்ப்பநாடியாகும். பஞ்சுபோல் மெதுவாக கின்னரத்தின் ஒலிபோல இருந்தால் அது பூத்த மங்கையின் நாடி என்று கூறலாம்.

விகற்ப நாடி

புகலவே புழுப்போல நிமிரு மாகில்
பொருகால வண்டினிட வொலியும் போல
நிகலவே கோஷ்டத்தின் னெய்தான் வீழ்ந்து
நேர்ந்தெழும் புமக்கினியி னருமை போலும்
திகலவே கிளியெழும்புஞ் செய்கை போலத்
திரையெழும்பி யொடுங்கும்போற் பித்த நாடி
விகலவே படபடத்துத் தோன்று மாகில்
விகாரத்தி னாடியென்றே விளம்ப லாமே 123

பித்தநாடியானது புழுவைப்போல நிமிர்ந்து நிமிர்ந்து எழும்பினாலும், பொருகால வண்டின் ஒலியைப் போலவும், நெய்யைவிட கிளர்ந்தெழும் சுவாலையைப் போலவும், கிளி யெழும்பி பறப்பதுபோல படபடத்துக் காணப்பட்டால் அது விகாரத்தின் நாடியாகும்.

பூதநாடி

விளம்பவே மீதினியிற்கல் லெறிதல் போலும்
மிகப்புரவி யாட்டுக்கிடாய் பாச்சல் போலும்
திளம்பவே செக்கினிடத் திருகல் போலும்
சீறுகின்ற மூஞ்சூறு சசியே போலும்
இளம்பவே பந்தடித்து யெழும்பல் போலும்
ஏற்றம்போ லேறியிழித்தி டுதல் போலும்
புளம்பவே பித்தத்தி னாடி தோன்றில்
பூதத்தி னாடியெனப் பேச லாமே 124

பித்தநாடியானது கல்லெறிதல் போலவும், குதிரை மற்றும் ஆட்டுக்கிடாவின் பாய்ச்சலோட்டத்தைப் போலவும், செக்கின் திருகல் போலவும், முஞ்சுறு சீறுவது போலவும், பந்து எவ்வாறு அடிபட்டு மீண்டெழுகிறதோ அதுபோலவும் ஏற்றம்போல் ஏறிஏறி இறங்கினாலும் அது பூதநாடியாகும்.

மரணநாடி

பேசவே பிங்கலையின் நாடி தானும்
பேணிநாண் முழுதோடிற் பிரளா மற்றான்
வாசவே மூவாண்டின் மரணஞ் சொல்லும்
வாதமா நாடியது வலுமை யாகி
ஏசவே யிரண்டுநாண் முழுது மோடில்
ஈராண்டின் மரணமெனவி யம்ப லாகும்
நாசவே நாண்மூன்று வழுவா தோடில்
நமனுக் கங்கிறையாவா ணாண்டிற் றானே 125

சுவாசமானது பிங்கலையிலே ஒருநாள் முழுதும் ஓடினால் அவன் மூன்று ஆண்டுகளில் மரணமாவான். வாதநாடியானது வலிமையாகி இரண்டு நாட்கள் தொடர்ந்து முன்போலவே ஓடினால் இரண்டாண்டில் மரணம் நேரிடும். அதுபோல மூன்றுநாள் தொடர்ந்து ஓடினாலும் ஒரு ஆண்டில் மரணம் நேரிடும்.

தானென்ற பித்தத்தி னாடி தானும்
தரியாம னாளொன்று தயங்கு மாகில்
ஆனென்ற வாறுதிங்கள் மரணஞ் சொல்லும்
அசைவிலா திரண்டுநா ளோடு மாகில்
மோனென்ற மூன்று திங்கட் குள்ம றிப்பன்
மூர்க்கமாய் மூன்றுநா ளோடு மாகில்
நானென்ற நாற்பதோ டைந்தா நாளில்
நசிச்சுமே நமனிடத்தி னல்கு வானே 126

பித்தநாடியானது ஒருநாள் தொடர்ந்து தயங்கியோடினால் ஆறு மாதத்தில் மரணம். இரண்டுநாள் முன்போல ஓடினால் மூன்று திங்களில் மரணம் நேரிடும். அது மூன்றுநாள் ஓடினால் நாற்பத்தைந்தாம் நாள் மரணம் நேரிடும்,

நல்கவே சேட்பத்தி னாடி தானும்
நாண்மூன்று கடிதோடி லைந்து நாளாம்
மல்கவே யிரண்டுநா ளோடு மாகில்
மரித்திடு வனீரைந்து நாளிற் றானும்

ஒல்கவே யொருநாளே யோடு மாகில்
உறுசீவன் பதினைந்து மட்டு நிற்கும்
பல்கவே பத்துநாழி கையே நின்றால்
பயமில்லைப் பார்தனிலே பாலிப் பாரே 127

சிலேதது்ம நாடியானது மூன்றுநாள் தொடர்ந்து ஓடினால் ஐந்துநாளிலும், இரண்டு நாள் ஒடினால் பத்து நாளிலும், ஒருநாள் தொடர்ந்து ஓடினால் பதினைந்து நாளிலும் மரணமடைவர். பத்து நாழிகைக்குள் நின்று ஒடினால் பாதகமில்லை. அவர் உயிர் பிழைத்து விடுவார்.

பாலித்த பித்தத்தி னாடி தானும்
பகட்டியே மூன்றுநாள் புரளு மாகில்
ஆலித்த வரவினாக் கசைதல் போலும்
ஆடியே யமர்ந்துதா னிருக்கு மாகில்
மாலித்த மணியசை தலோசை போலும்
மகத்தான வுடுக்கையின்றன் றொனியைப் போலும்
கோலித்த நாடியின் குறிகள் கண்டால்
கொடுமற லிநகர்தனையே குடி கொள்வாரே 128

பித்தநாடியானது மூன்றுநாள் புரண்டு ஓடினாலும், பாம்பின் நாக்கு அசைவது போலசைந்தாலும், ஆடி அமர்ந்து காணப்பட்டாலும், மணியோசை அசைவது போலவும் உடுக்கையின் ஒலியைப் போலவும் நாடியின் குறிகள் தெரிந்தால் எமன் அவ்வுடலில் குடிகொண்டு விடுவான்.

சரீர லட்சணம்

கொள்ளவே வாதத்தின் றேகந் தானும்
குளிர்ந்து மேசிறுதிடத் தேயுஷ்ண மாகித்
தெள்ளவே துடிதுடித்தே யிருக்கும் பித்தம்
தேகந்தான திகவுஷ்ண மாயி ருக்கும்
தெள்ளவே சேட்டுமத்தின் றேகந் தானும்
சிக்கென்று குளிர்ந்திருக்குந் தொந்த தேகம்
பன்னவே பலவிதந்தான் பெற்றி ருக்கும்
பரிந்து தொட்டுதேகத்தைப் பார்த்துச் சொல்லே 129

வாத தேகம் சிறிதளவு குளிர்ந்தும் சிலசமயம் சிறிது உஷ்ணமாயும் இருக்கும். பித்ததேகம் அதிக வெப்பத்துடன் காணப்படும். கப தேகமானது மிகவும் குளிர்ந்திருக்கும். இவ்வாறு பலவிதமாகவுள்ள தேகத்தினை தொட்டு உணர்ந்து அறிந்து கொள்ளவும்.

தேகத்தி னிறந்தானுஞ் செப்பக் கேளீர்
சிறுமையாய் வாதந்தான் கறுத்தி ருக்கும்
போகத்தின் பித்தநிற மஞ்ச ளாகும்
பொருஞ் சேட்பரோகிக்கு வெளுப்பு மாகும்
பாகத்தின் தொந்தரோகிக்குத் தானும்
பலபல வர்ணமுமாகிப் பறந்து நிற்கும்
ஆகத்தினிறம் பார்த்து நாடி பார்த்து
அஷ்டவிதப் பரிட்சையெல்லா மடவாய்ப் பாரே 130

வாததேகியின் நிறம் கறுத்திருக்கும். பித்த தேகியின் நிறம் மஞ்சளாகும். கபதேகியின் நிறம் வெளுத்திருக்கும். தொந்த ரோகிக்கு பல வண்ணங்களுடன் இருக்கும். எனவே நாடியுடன் எட்டுவித சோதனைகளையும் கூர்ந்து பார்ப்பாயாக.

வசனப் பரிட்சை

பார்வாத ரோகிக்கு வார்த்தை தானும்
பக்குவமா யச்சட்டத மாயி ருக்கும்
பேர்பித்த ரோகிக்கு வார்த்தை தானும்
பேசிடிலோ பெலத்துமே புரத்தி ருக்கும்
சேர்சேட்ப ரோகிக்கு வார்த்தை தானும்
சிறுத்துமே யீனசுர மாயி ருக்கும்
வேர்தொந்த ரோகிக்கு வார்த்தை தானும்
வெகுவித மாயிருக்குமென் றேவிரித் திடாயே. 131

வாதரோகிக்கு குரல் அயச்சட்டத்தின் ஒலியைப் போலிருக்கும். பித்த ரோகிக்கு வார்த்தை பலத்துடன் உரமாக இருக்கும். கபரோகிக்கு வார்த்தை ஈனசுரமாயிருக்கும். தொந்தரோகிக்கு பலவிதமாக இருக்கும்.

நேத்திரப் பரிட்சை

விரித்திட்ட வாதமென்ற ரோகிக் குத்தான்
மீறியே கண்கறுத்துத் தண்ணீர் பாயும்
பரித்திட்ட பயித்தியரோ கிக்குக் கண்தான்
பச்சென்று சிவந்திருக்குஞ் சேட்ப ரோகி
பிரித்திட்ட பீளைசாறும் வெளுத்தி ருக்கும்
பெருஞ்சன் னிவாதரோ கிக்குக் கண்தான்
கரித்திட்டுச் சிவந்துபச் சென்றி ருக்குங்
காமாலை ரோகிக்குபசு மஞ்ச ளாமே 132

வாதரோகிக்கு கண்ணானது கறுத்து தண்ணீர் வடியும். பைத்திய ரோகமுள்ளவர்கள் கண்ணானது சிவந்து காணப்படும்.

கபரோகிக்கு கண் வெளுத்து பீளைசாடும். சன்னிவாத ரோகிகளுக்குக் கரித்து சிவந்து பச்சென்றிருக்கும். காமாலை ரோகிக்கு கண் பசுமஞ்சள் நிறத்தில் காணப்படும்.

மலப்பரிட்சை

மஞ்சளென்ற வாதரோகிக்கு மலந் தானும்
மலபந்த மாகியேகறுத்தி ருக்கும்
பிஞ்சலென்ற பித்தரோ கிக்குத் தானும்
பொருகியே வெச்சென்று சிவந்தி ருக்கும்
திஞ்சலென்ற சேட்டுமரோ கிக்குத் தானும்
சிதறிமலம் வெளுத்துமே சீத மாகும்
பஞ்சலென்ற தொந்தரோ கிக்குத் தானும்
பலவர்ணமா யிருக்கும் பண்பு தானே 133

வாதரோகிக்கு மலம் மலக்கட்டாகி கறுத்திருக்கும். பித்த ரோகிக்கு சிறுநீர் சிவந்து காணப்படும். கபரோகிக்கு மலம் சிதறி வெளுத்து சீதத்துடன் காணப்படும். தொந்த ரோகிக்கு மலம் பலவர்ணமாயிருக்கும்.

பண்பாக வாதரோ கிக்கு மூத்ரம்
பாரித்துத் தெளிந்திருக்கும் வெண்மை யாகும்
மண்பான பித்தரோ கிக்கு மூத்ரம்
மார்க்கமாய் மஞ்சளித்துப் பசந் திருக்கும்
தின்பான சேட்டுமரோ கிக்கு மூத்ரம்
சேறுபோற் பொருமியே நுரைத் திருக்கும்
கண்பான தொந்தரோ கிக்கு மூத்ரம்
கண்டபல நிறமாகுங் கருதி டாயே 134

வாதரோகிக்கு சிறுநீர் வெண்மையாக தெளிந்திருக்கும். பித்தரோகிக்கு சிறுநீர் மஞ்சளாகக்காணப்படும். கபரோகிக்கு சிறுநீர் சேறுபோல பொருமி நுரைத்துக் காணப்படும். தொந்தரோகிக்கு சிறுநீர் பலவர்ணமாக இருக்கும்.

நாவின் பரிட்சை

கருதியே வாதரோ கிக்கு நாக்கு
கறுத்திருக்கு முள்ளுபோலவெ டித்தி ருக்கும்
பருதியே பித்தரோ கிக்கு நாக்கு
பச்சென்று தானிருக்குஞ்சி வந்தி ருக்கும்
வெருதியே சேட்டுமரோ கிக்கு நாக்கு
வெளுத்து மேதண்ணீ ருண்டா யிருக்கும்
துருதியே தொந்தரோ கிக்கு நாக்கு
சூட்சாதி பலவர்ண மாகுந் தானே 135

வாதரோகியின் நாக்கு கறுத்து முள்போல தடித்து காணப்படும். பித்தரோகிக்கு நாக்கு சிவந்திருக்கும். கபரோகிக்கு நாக்கு வெளுத்து நீர்சுரந்து காணப்படும். தொந்தரோகிக்கு நாக்கு பலவர்ணமாயிருக்கும்.

வன்னமா மெட்டுவகைப ரிட்சை பார்த்து
வகையான நாடியிட குணமுங் கண்டு
தின்னமாந் தேகத்தின்செ யலும் பார்த்துத்
தேசதே சாபேதச் செய லறிந்து
கன்னமாங் காலகா லங்கள் பார்த்துக்
கனமான வக்கினியின் கணக்க றிந்து
பன்னவாம் பலபலவா நூலைத் தேர்ந்து
பரிகாரப் பயனறிந்துப் பார்த்துச் சொல்லே 136

எட்டுவித பரிட்சைகளையும் செய்து, நாடியின் குணத்தையும் கண்டு தேகத்தின் அமைப்பையும் கண்டு காலத்தின் அமைப்பையும், அக்கினியின் கணக்கையும் அறிந்து கொண்டு பல நூல்களை ஆராய்ந்து மருந்துசெய்து நோயினை நிவர்த்தி செய்ய வேண்டும்.

நாடி நிதானம் முற்றிற்று

சுரரோக நிதானம்

சொல்லவே சுரத்தினிட திறமை கேளாய்
செடத்திலுள்ள பிணிக்கெல்லாம் ராசா வாகும்
எல்லவே நமனுக்கு மொக்கு மொக்கும்
எழிலோடு பிராதாப கோப மாகும்
தல்லவே தக்கனிட வேள்வி யைத்தான்
சாம்பசிவன் கோபத்தால ழித்த போது
நெல்லவே நெற்றிக்கண் சு வாலை தன்னில்
நேராகப் புறப்பட்டு நேர்ந்த தாமே 137

சுரத்தின் தன்மையைக் கேட்பாயாக. உடலில் உள்ள நோய்களுக்கு எல்லாம் அது அரசனாகும். அது எமனக்கு சமமாகும். தட்சனுடைய வேள்வியை சிவபெருமான் கோபத்தால் அழித்தபோது நெற்றிக் கண்ணிலிருந்து உண்டான சுவாலையின் வெப்பத்துக்கு ஈடாக உடலில் வெப்பம் உண்டாகும்.

நேர்ந்ததோர் சுரமேழுவி தமு மாகும்
நிலையான நாமத்தி னேர்மை கேளாய்
வார்ந்ததோர் சுரம்பித்த சுரஞ் சேட்பம்
வாகான பூதசுரமசீரண சுர மாகும்

ஆர்த்தவ பிகாதசுரந் தொந்தசு ரத்தோடு
ஆர்க்கமா மேழுவித மறிந்து கொள்ளு
தீர்ந்ததோர் சுரபேத வண்மை யெல்லாம்
செயலறிந்து குணத்தோடு செப்பு றேனே. 138

பெயர்க் காரணமாக சுரம் ஏழுவகைப்படும். வாதசுரம், பித்தசுரம், கபசுரம், பூதசுரம், அசீரண சுரம், அபிகாத சுரம், தொந்த சுரம் ஆகிய ஏழுவகை சுரத்தினை இனி விரிவாகக் கூறுகிறேன்.

வாதசுரம்

செப்புகிறேன் வாதசுரத் தின்குணத் தைத்
திருமுகமு முதடுமே கறுத்துக் காணல்
தப்புகிறேன் சரீரமெல்லாந் தடித்து நோதல்
தாகந்தான் மிகக்காணல் மெய்ந டுக்கல்
திப்புகிறே னுடம்புதிமி ரெடுக்க முஷ்ணம்
தேகம்பாரித் திருக்கல்ம லபே தத்தால்
குப்புகிறே குளிர்ந்துமயிர்க் கூச்செ றிதலிந்தக்
குணமெல்லாம் வாதசுரக் கூறு மாமே 139

வாதசுரத்தின் குணத்தைக் கேட்பாயாக. தேகம், உதடு ஆகியன கறுத்துக் காணப்படும். சரீரம் எல்லாம் தடித்து நோகும். தாகம் அதிகமிருக்கும். உடல் நடுங்கும். உடம்பு திமிர்த்துக் காணப்படும். உடல் சூடடையும். தேகம் சிலசமயம் வீங்கும். மலபேதத்தில் உடல் குளிர்ந்து மயிர்க்கூச்செறியும். இவை அனைத்தும் வாதசுரத்தின் குணங்களாகும்.

பித்தசுரம்

கூறான பித்தசுரத் தின்கு ணத்தைக்
கூறிடவே நித்திரைதான் மெத்தக் காணல்
தேறான மலமூத்ரஞ் சிவந்தி ருத்தல்
சிதறியே வயிறுகழிந் திடுதல் சத்தி
வாறான வாய்ப்பிதற்றல் வாய்தான் கைத்தல்
மகத்தான மூர்ச்சையொடு தாகங் காணல்
தாறான வெழுந்திருந்து மோடல் விக்கல்
தவித்திடுதல் சந்தாபப் படுதல் தானே 140

பித்தசுரத்தின் குணத்தைக்காண்போமாகில், உறக்கம் அதிகம் வரும். மலம், மூத்ரம் அதிகம் சிவந்து காணப்படும். வயிறு கழியும், வாந்தி உண்டாகும். வாய் பிதற்றும். வாய் கைப்புச்சுவை தரும். மூர்ச்சையுண்டாகும். தாகம் எடுக்கும். விக்கல் உண்டாகும். தாபமேற்படும். சிலசமயம் எழுந்து ஒடவைக்கும்.

சிலேட்ப சுரம்

சந்தாப மானசேட்டு மசு ரத்தைச்
சாற்றிடவே நாக்குமுகம் வெளுத்து காணல்
மந்தாப மார்நோதலிரு மலி ளைப்பு
வருகுதல் வாய்துவர்த்துமே உரிசை யில்லை
முந்தாப மூச்சுவிடப் போகா மற்றான்
முயங்கியே விக்கலொடு தாகங் காணல்
சிந்தாப மிடறுநொந்து மேன்மூச் சாதல்
தினவெடுத்தல் தியங்கிடுதல் சேட்ப மாமே 141

சேத்தும சுரத்தின் குணங்களைக் கேட்பாயாக. நாக்கு, முகம் ஆகியன வெளுத்துக் காணப்படும். மார்பு நோகும். இருமல், இளைப்பு ஆகியன தோன்றும். மூச்சுவிட சிரமம். விக்கல், தாகம் ஆகியன ஏற்படுதல், தொண்டை நோகும். மேல் மூச்சு வாங்கும். தினவெடுக்கும். தியங்கும்.

வாதபித்த சுரம்

ஆகுமே வாதபித்த சுரத்தின் செய்தி
அறிந்திடவே யங்கமெல்லா மசைதல் நோதல்
நாகுமே நாக்குத்தான் கறுத்துக் காணல்
நயந்து பிரலாபித்த னித்ரை யாதல்
வாகுமே மலபேத மாயி ருத்தல்
மலம்வெளுத்தல் வாய்கைத்தல்வ டிவங் குன்னல்
தேகுமே யறிவோடுதி னைவு மாதல்
தியங்கிடுதல் மயங்கிடுத றிண்ணந் தானே 142

வாதபித்த சுரத்தின் தன்மையைக் கேட்பாயாக. உடல் அங்கம் யாவும் நோகும். நாக்கு கறுத்துக் காணப்படும். உறக்கம் அதிகமாயிருக்கும். உறக்கத்தில் உளறுவார்கள். மலம் பலவர்ணமாயிருக்கும். வாய் கைக்கும், உடல் தோற்றம் மாறுபடும். தினவுண்டாகும். மயக்கமுண்டாகும்.

வாதசிலேட்ப சுரம்

திண்ணமாம் வாதசிலேட்டு மசு ரந்தான்
செடமெல்லா நொந்திடுதல்சு வாசங் காணல்
எண்ணமா மிருமலுநா வெழுந்தி ருத்தல்
இசைந்து மயிர்க்கூச்செறிதல் மிடறு நோதல்
தண்ணமாந் தாபமேமிக வுண்டா தல்
தயங்கியே சஞ்சலித்தல் வாய்தான் பேத்தல்
விண்ணமா மிரளியொடு வியர்வை காணல்
மிக்கவழுத் திடலிதன்றன் விபர மாமே 143

வாதகப சுரத்தின் குணத்தைக் கேட்பாயாக. உடல் எல்லாம் நோகும். சுவாசம் அதிகமாகிக் காணப்படும். இருமல் உண்டாகும். நா எழுந்திருக்கும். மயிர்க்கூச்செறியும். தொண்டை நோகும். தாபமுண்டாகும். வாய் பிதற்றும். வியர்வை அதிகமுண்டாகும்.

பித்த சிலேட்ப சுரம்

விபரமாம் பித்தசிலேட்டு மசு ரந்தான்
வியர்வையே மிகவருதல் வாய்தான் பேத்தல்
நிபரமாய் நித்திரையுமி கவே மிஞ்சல்
நெடித்து மயிர்க்கூச்செறி தலிரும லாதல்
தபரமா மார்நோதல் தாபங் காணல்
தலைவலியும் பிடரிவலி தகைந்து காணல்
நபரமா நாக்கதுவும் வழவ ழத்தல்
நாக்கோடு மூக்குநல மழிதல் காணே 144

பித்தசிலேட்டும சுரத்தின் குணத்தைக் கேட்பாயாக. வியர்வை அதிகமுண்டாகும். வாய் பிதற்றும். நித்திரை அதிகம் உண்டாகும். மயிர்க்கூச்செறியும். மார்நோகும். தாபமுண்டாகும். தலைவலி, பிடரி வலி ஆகியன உண்டாகும். நாக்கு வழவழத்துக் காணப்படும். நாக்குடன் மூக்கு ஆகியவை தன்செயல் திறனில் குன்றுதல் ஆகிய குறிகுணங்களை பித்த சிலேட்டும சுரம் காட்டும்.

பூதசுரம்

அழிதலாம் பூதசுரத் தாண்மை கேளீர்
ஆதியந்த குமரகண்டன் போல்வ லிக்கும்
கழிதலாங் கண்ணுருட் டியே விழிக்கும்
காய்ந்தவுடன் கருதியேபி ரலா பிக்கும்
விழிதலாம் போசனங்கள் மிகவி ரும்பும்
வேண்டின வெல்லாமிக வுமாசை யாதல்
பழிதலாய்ப் பாடலொடு சிரத்தி லாடல்
பாரமயிர்க் கூச்செறிதல்நித் திரையு மாமே 145

பூதசுரத்தின் தன்மையைக் கேட்பாயாக. குமரகண்டன் வலிப்பு நோயில் வலிப்பது போல வலிப்புண்டாகும். கண்களை உருட்டி உருட்டி விழிப்பார்கள். அதிகமாகப் பேசி உளறுவர். உணவில் அதிக விருப்பமுண்டாகும். எல்லாவற்றையும் விரும்பிக் கேட்கும். ஆடல் பாடல் அதிகமிருக்கும். மயிர்க்கூச்செறியும். அதிக நித்திரை உண்டாகும்.

அசீரண சுரம்

நித்திரையா மாசீர்ணசுர நேர்மை கேளீர்
நேர்மையாய்ச் சுரமோடே யிளைப்பு காணல்
மத்திரையாய் விக்கலொடு வயிறு மந்த
மாயிருத்தல் மார்புதுடை குறங்கு நோதல்
பித்திரையாய் பிளித்தேப்ப மிடுதல் வாந்தி
பேர்பெரிய தாகமொடு மூச்சு காணல்
சித்திரையாய் வயிறுநொந்து பொருமிக் கொள்ளல்
சீதளமா யுடம்பெங்குந் திமிரு மாமே 146

அசீரண சுரத்தின் தன்மையைக் கேட்பாயாக. சுரத்துடன் இளைப்பு காணப்படுதல் விக்கலுடன் வயிறு மந்தமாக காணப்படும். மார்பு தொடை முதலியவற்றில் குரக்கு வலிக்கம். புளித்தேப்பம் ஏற்படும். வாந்தியுண்டாகும். தாகமேற்படும். மூச்சு சுவாசம் அதிகமுண்டாகும். வயிறு நோகும். பொருமிக் காணப்படும். உடல் எங்கும் குளிர்ந்து உடம்பு திமிர்த்துக் காணப்படும்.

அபிகாதசுரம்

திமிரான வதிகநடை குதிரை யானை
சுமையெடுத் தலதிகமாய் வேலை செய்தல்
தமிரான தாகமோடி ளைப்பு கைகால்
தளர்ந்திட்டுப் பனிதனிலே சஞ்ச ரித்தல்
அமிரான வபிகாதசு ரந்தா னுண்டாம்
அதின்குணங் கடாகமுடனு டம்பெல் லாநோம்
வெமிரான வியர்வையொடா லோபம்ப ரம்மை
மிகக் குளுந்தபோசனத் திலா சையாமே 147

அதிகமாக நடத்தல், குதிரை யானை சவாரி, அதிக சுமை யெடுத்தல், அதிக வேலை, தாகம், இளைப்பு உண்டாதல், கைகால் தளர்வுடன் பனியில் சஞ்சரித்தல் ஆகியவற்றால் அபிகாத சுரமுண்டாகும். அதன் குணத்தைக் காண்போமாகில் வியர்வை அதிகமெடுக்கும். உடல் நோகும். பிரம்மையுண்டாகும். குளிர்ந்த ஆகாரத்தில் ஆசை அதிகமுண்டாகும்.

ஆசீக சுரம்

ஆசையா மாகிகத்தின் சுரத்தைக் கேளீர்
அதிக குளிருண்டாதல் தேகம் வாடல்
தேசையாய்த் தேகம்புள கித்தி ருத்தல்
சீறியே யிருமலுடம் பெரிவு காணல்

தாசையாய்ச் சந்தாபந்த லைகண் ணோவு
தருவிலா வுடம்பெல்லா முதுகு நோவு
ஆசையாய்ப் பத்தியத்தின் மனதுண் டாதல்
அதிக நித்திரைவருதல் மயக்கந் தானாமே 148

ஆகீக சுரத்தின் குணத்தைக் கேட்பீராக. அதிகமாக குளிருண்டாகும். தேகம் வாடும். தேகம் புளகித்திருக்கும். இருமலுடன் உடல் எரிவு காணும். தாபமுண்டாகும். தலை, கண் ஆகியன நோகும். உடல், முதுகு ஆகியன நோகும். பைத்தியத்தின் மனதுபோல பிதற்றுவர். உறக்கம் அதிகம் உண்டாகும். மயக்க மேற்படும்.

மயக்கமாய் மார்புமுக மெல்லாம் வாடி
வடிவு வெளுத்திடுதல்கண் பசுமை யாதல்
தியக்கமாய் கண்ணுகிரிலி ரத்த மில்லை
சிதறியே வயிறுகழிந் திடுதல் சத்தி
கயக்கமா யுள்ளங்கா லுள்ளங் கையும்
கண்ணியே யெரிந்திடுதற் றாகங் காணல்
இயக்கமாய் திரேகமெங்கும ழற்றல் காணல்
இசைந்த படிபேசலெண்ணம் வேறு மாமே 149

மேற்கூறிய குணங்களுடன் மார்பு முகம் எல்லாம் வாடி வெளுத்துக் காணப்படும். கண் பசுமையடையும். கண்களில் இரத்தமிருக்காது. வயிறு கழியும். வாந்தி உண்டாகும். உள்ளங்கை உள்ளங்கால்கள் ஆகியன எரியும். தாகம் ஏற்படும். உடல் எங்கும் உளைச்சல் ஏற்படும். மனதில் தோன்றியதை பேசமுடியாது வேறு வார்த்தைகளைப் பேசுவார்கள்.

மாறல்சுரம்

வேறாகி யொருநாடான் மாறிக் காணல்
விளங்கி ரண்டுநாள்மாறிச் சுரமுண் டாதல்
நாறாகி மூன்றுநால்நாளே மாறல்
நலத்த வைந்துநாண்மாற லர்த்த ராத்ரி
பாறாகி வருதல்பதினைந் துநாண் மாறல்
பகர்பந்த வொருமாதந்தான் மாறிக் காணல்
வாறாகி வாதபித்த சேட்பங் கூடி
மருவி நின்றசுரந்தானு மாகிக மாமே 150

மாறல்சுரமானது ஒருநாள், இரண்டு நாள், மூன்றுநாள், ஐந்நாள், பதினைந்துநாள், முப்பதுநாள் என மாறி மாறி வாத பித்த கபத்தைக் கூட்டி வரும்.

ஆகிக சீத சுரம்

ஆகிகத்திற் சீதசுரத் தாண்மை கேளீர்
ஆகமெல்லா மிகக்கடுப்புற் றனல்போ லாகித்
தேகத்திற் சிரமிடறுகண் களொடு புருவஞ்
சிறுவலியாய் வலித்துமல பேத மாகி
நாகிகத்தில் நாக்குதடு வழவ ழத்து
நல்லநித் திரையில்லாதுடல் திமிர்ந்து ருமும்
மேகிகத் திற்சுரகுளிருந் தாக மூர்ச்சை
மிகத்தாப மயக்கமொடு தியக்க மாமே 151

சீதசுரத்தின் தன்மையைக் கேட்பீராக. உடல் எல்லாம் மிகக் கடுப்புடன் தனல் போல் சுடும். தலை, தொண்டை, புருவம் ஆகியவை வலிக்கும். மலத்தில் மாறுதலுண்டாகும். நாக்கு உதடு ஆகியன வழவழத்துக் காணப்படும். உறக்கமில்லாமல் உடல் திமிர்த்துப் போகும். சில சமயங்களில் குளிரும். தாகம், மூர்ச்சை, மயக்கம் முதலியன உண்டாகும்.

ஆமசுரம்

தியக்கமா மாமசுரத் தாண்மை கேளீர்
சிறுவலியாய் வலித்துமாச னங்க டுத்து
மயக்கமா மிரத்தமொடு சீதம் பேதி
மருவு தண்ணீர்தாகஞ் சுரமு முண்டாம்
கயக்கமா யுடம்பூதி வெளிறிக் காணுங்
கால்கையு மசந்திருக்குங் கைக்கும் வாய்தான்
தயக்கமாய் கால்கையுஞ் சயித்திய மாகும்
சளியோடு மிருமலுமாய்த் தவிக்குந் தானே 152

ஆமசுரத்தின் தன்மையைக் கேட்பீராக. உடலில் சிறுவலி யெடுக்கும். ஆசனம் கடுக்கும். இரத்தத்துடன் சீதமும் கலந்து பேதியாகும். தண்ணீர் தாகமெடுக்கும். சுரமுண்டாகும். உடல் ஊதி கைகால் அசந்திருக்கும். வாய் கசக்கும். சளி, இருமல் உண்டாகும்.

சர்மத்தைப் பற்றின சுரம்

தவித்திடா சர்ம சுரநாலின் றன்மை தன்னைச்
சாற்றிட வேசடத்தினிற் குந்தோலைப் பற்றித்
துவித்திட்ட சுரமோடு மெலும்பைப் பற்றிச்
சூட்சமாய்க் காய்ந்தசுர மிரத்தந் தன்னை

மவித்திடா தெரித்தசுர மாங்கிசந் தன்னை
மருவிநின்ற சுரநாலின் வன்மை தன்னைக்
குவித்திடாக் குணங்களெல்லாங் குறித்துச் சொல்லக்
குறுந்தோலைப் பற்றியதோர் குணத்தைக் கேளே 153

மேலும் நான்குவகை சுரத்தினைப் பற்றிக் கூறுகிறார். தோலைப் பற்றிய சுரம், எலும்பைப் பற்றிய சுரம், இரத்தத்தைப் பற்றிய சுரம், மாமிசத்தைப் பற்றிய சுரம். இவற்றின் குணங்களை இனிவிரித்துச் சொல்வேன். முதலில் தோலைப்பற்றிய சுரத்தின் குணத்தைக் கேட்பாயாக.

குணமாகச் சற்றுடலைக் காய்வ தாகும்
குடிலமாய் நாடிமந்த மேயி ருத்தல்
தணமாகச் சற்றேதான்ற லையே நோதல்
தண்ணீர்தான் வேண்டியே தாகங் காணல்
பிணமாக வுடம்பெல்லாம் வெளுத்துக் காணல்
பிரமையாய் வாய்பேசல் வாய்நீ ரூறல்
நிணமாக வுடம்பெரிதன் மயக்கங் காணல்
நேர்தோ லைப்பற்றுசுர நேர்மை யாமே. 154

உடல் காயும். நாடி மந்தமாயிருக்கும். தலை நோகும். அதிக தண்ணீர் தாகமெடுக்கும். பிணத்தைப் போல உடல் வெளுத்துக் காணப்படும். பிரமையுண்டாகும். வாய் குளறும். வாயில் நீரூறும். உடம்பெரியும். மயக்கம் ஏற்படும். இவை அனைத்தும் தோலைப் பற்றிய சுரங்கள்.

அஸ்தியைப் பற்றிய சுரம்

நேர்மையா யெலும்பைப்பற் றியசு ரத்தின்
நிலவரங் கேண்மிக்கதா கந்தான் காணல்
மேர்மையாய் மேலெல்லாங் குளிர்ச்சி காணல்
மிகக்கபட சுரந்தானும் மேலி ருத்தல்
தீர்மையாய் தேகம்வெளுத் திளைத் திருத்தல்
தேகமெல்லாம் பஞ்சுபோற் சீர ணித்தல்
ஆர்மையா யடிவயிறு தனிலே நோதல்
அதிக தீவிரமான மலம்போக் காமே 155

எலும்பைப் பற்றிய சுரத்தின் தன்மையைக் கேட்பாயாக. அதிக தாகமெடுக்கும். உடலெல்லாங் குளிர்ந்து காணப்படும். பொய்சுரம் காணும். தேகம் வெளுத்து இளைத்துப் போகும். தேகம் எல்லாம் பஞ்சுபோல வலிக்கும். அடிவயிற்றில் நோவுண்டாகும்.

இரத்தத்தைப் பற்றிய சுரம்

போக்கான ரத்தகத சுரகு ணத்தைப்
புகன்றிடவே பிரமையாய் சுரந்தான் காணல்
தாக்கான வியர்வையொடு தாக முண்டாய்த்
தன்னுடம் பெல்லாநோதன் மூர்ச்சை காணல்
வாக்கான வுடம்பதுவுங் கன்ன லுண்டாய்
வழவழத்து நாக்கெல்லாம் மஞ்சள் போலாம்
நீங்கான நெஞ்சுதனிற் கோழை யுண்டாம்
நித்திரை யாய்மலப்பந்த நீக்குந் தானே 156

இரத்த சுரத்தின் குணத்தைக் கேட்பாயாக. பிரமையுண்டாகும். சுரம் காணும். வியர்வையுடன் தாகமுண்டாகும். உடம்பெல்லாம் நோகும். மூர்ச்சையுண்டாகும். உடல் தடித்துக் காணப்படும். நாக்கு வழவழத்து மஞ்சள் நிறத்துடன் காணப்படும். நெஞ்சில் கோழை உண்டாகும். உறக்கம் அதிகமாயிருக்கும். மலபந்தமுண்டாகும்.

மாமிசத்தைப் பற்றிய சுரம்

மலபந்த மாங்சக தசுர குணத்தை
வழுத்திட வேயதிசுர மாகக் காணல்
சிலபந்த சுவாசமொடு வியர்வு தோன்றல்
சிக்கியே தேகமெல்லா நொந்து காணல்
உலபந்த வுதடுலர்த லாலா பித்தல்
உடம்பு புளகிதமாதன் மயிர்க்கூச் சாதல்
அலபந்த மானதுவியா கூல மாதல்
அருவியெனக் கண்ணில்நீர் ததும்புந் தானே 157

மாமிசத்தைப் பற்றிய சுரத்தைக் கேட்பாயாக. அதிக சுரமுண்டாகும். அதிக சுவாசத்துடன் அதிக வியர்வை உண்டாகும். தேகம் முழுதும் நொந்து காணப்படும். உதடு உலர்ந்து போகும். ஆலாபனை செய்பவர். உடல் புளகிதமடைந்து அடிக்கடி மயிர்க்கூச்செறியும். கண்ணீர் அதிகம் சுரக்கும்.

சன்னிவாத சுரம்

ததும்ப லென்றசன்னி வாதச்சு ரத்தின்
தன்குணந்தான் கழுத்துநெற்றி மார்ப யர்க்கும்
வெதும்ப லொடுதந்திரமாஞ் சித்தப் ரம்மை
மிக்கான சரீரமெல்லா மெரித னோதல்
அதும்ப லொடுகண்சிவந்து பச்சை பாய்தல்
அதிகமாய் வாய் பிதற்றல் மூர்ச்சை காணல்
வதும்ப லொடுமார்வலித்தல் தியக்க மாதல்
மயிர்ச் செறித்தலிருமல்விக்கல் சுவாசம் தானே 158

சன்னிவாத சுரத்தின் குணத்தைக் கேட்பாயாக. கழுத்து, நெற்றி, மார்பு அயர்ந்து போய்விடும். சித்த பிரம்மை பிடித்தது போலிருப்பர். சரீரம் எல்லாம் எரியும். கண் சிவந்து பச்சை பாய்ந்து காணப்படும். வாய் பிதற்றும். மூர்ச்சையுண்டாகும். மார்வலிக்கம். தியக்கமாகும். மயிர்க்கூச்செறியும். விக்கல் சுவாசம் உண்டாகும்.

சுரரோக நிதானம் முற்றிற்று

சன்னிரோக நிதானம்

தானென்ற சன்னியிட நிதானம் தன்னைச்
சாற்றவே பதின்மூன்றாம் தந் திரிக சன்னி
ஆனென்ற அந்தகமாம் சன்னி தானும்
அதிகருத் திரசன்னிசித்த விப்பி ரமம்
தேனென்ற சீதாங்கச் சன்னி யோடு
சிறிய தாந்திரீகசன்னி கர்னீகு புச்சம்
கானென்ற கரணிகமாம் சன்னி யோடு
கடுபக்தி நேத்ரசன்னி யும்தா னாமே 159

சன்னி வகைகளைக் கூறுகிறேன் கேட்பாயாக. சன்னி ரோகம் பதிமூன்று வகைகளாகும். தந்திரிக சன்னி, அத்தக சன்னி, ருத்திர சன்னி, சித்தவிப்ர சன்னி, சீதாங்க சன்னி, தாத்திரீகசன்னி, கர்னிகுப்புசகரணி சன்னி, நேத்ர சன்னி ஆகியவற்றுடன்

தானான ரத்தேழு சன்னி யோடு
தக்கபிர லாபசன்னி சிங்கு வாகும்
ஆனான அபின்னியாசச் சன்னி யொடு
அடங்கலாய்ப் பதிமூன்று சன்னி தன்னில்
கானான ஆறுசன்னி சாத்ய மாகும்
கடிந்தேழு சன்னியுமே அசாத்ய மாகும்
பானான சன்னிபதி மூன்றுக் குள்ள
பரிவான குணமெல்லாம் பண்பாய்க் கேளே 160

ரத்தேழுசன்னி, பிரலாபசன்னி, சிங்குவாக சன்னி, அபின்னி யாசச் சன்னி ஆகியவைகளாகும். இவைகளில, ஆறுவகை சாத்தியமாகும். மீதியுள்ள ஏழுவகை அசாத்யமாம். இனி இப்பதிமூன்று சன்னிக்குள்ள குணத்தைக் கேட்பாயாக.

தாந்திரிக சன்னியின் குணம்

பண்பான தாந்திரிகச்சன்னி யதின் குணந்தான்
பகரவே தேகமுமெப் போதும் போலாம்
உண்பான வுடம்பிலே குத்தல் காணல்
உயர் சோபமாயிருத்தல் கால்வ லித்தல்

திண்பான சிலேட்டுமமமே மிகுந்து காணல்
தியக்கமாய்க் கண்திறவா மற்றான் மூடல்
தெண்பான திரேக மெல்லா மெரிச்சல் காணல்
திரேகமெல்லாங் குளுமையா யிருக்கும் பாரே 161

தாந்திரிக சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. தேகம் எப்பொழுதும் போலிருக்கும். உடலில் குத்தல் காணப்படும். சோகமாயிருப்பார்கள். கால் வலிக்கும், கபம் மிகுந்து காணப்படும். கண் திறக்க முடியாமல் மூடியே காணப்படும். திரேகம் முழுவதும் எரிச்சல் காணப்படும். சில சமயம் உடல் முழுதும் குளிர்ச்சி யடைந்து காணப்படும்.

அந்தக சன்னியின் குணம்

இருக்குமே நாவரளுந் தண்ணீர் தாகம்
எரிவுண்டாய் திரேகமெல்லாம் பிரமை யாகும்
தருக்குமே தலைசுற்றல் மிகவுங் காணும்
தன்னிலே வாய்பிதற்றும் வாந்தி யாகும்
விருக்குமே விக்கலொடு சுரந்தா னுண்டாம்
மேன்மை யாங்கைகாலு மசதி யாகும்
பருக்குமே தலைதனிலே பாரங் காணும்
பார் அந்தகச்சன் னிபாத மாமே 162

அந்தக சன்னியில் நாக்கு வரண்டுபோகும். தண்ணீர் தாகம் எடுக்கும். உடலில் எரிவுண்டாகும். பிரம்மை ஏற்படும். தலை சுற்றும். வாய் பிதற்றலேற்படும். வாந்தியுண்டாகும். விக்கலுடன் சுரமுண்டாகும். கை கால் அசதியாகும். தலையில் பாரமேற்படும்.

உருத்திரக சன்னியின் குணம்

சன்னியென்ற ருத்திரகந் தன்கு ணம்கேள்
தவித்துமே பிரதாப மெரித லுண்டாம்
தின்னிசித்தப் பிரம்மையொடு கழுத்து நோதல்
தேகமெல்லாங் குத்தலுண்டாய் தியக்க மாதல்
பின்னிக்கிடை கொள்ளாமற் பிரளல் பேத்தல்
பிண்கண்ட பேருடனே முறைபா டாதல்
உன்னவு தடுலருதலாய்க் கழுத்து நெற்றி
உருத்திரகச் சன்னியென வுரைக்க லாமே 163

உருத்ரக சன்னியின் குணத்தைக் கேட்பாயாக., தவித்தல்', பிரதாபித்தல், உடல் எரிதல், சித்தப் பிரம்மையுண்டாதல், கழுத்து நோதல், தேகத்தில் குத்தலுண்டாதல், தியக்கமாதல், பிரளல்,

பேத்தல், அனைவருடனும் முறை பாடல், உதடு உலருதல் ஆகியவை உருத்திரக சன்னியின் குணங்களாகும்.

சித்தப்பிரமை சன்னி

உரைக்கவே சித்தப்ரம்மை சன்னி தன்னை
உடம்பெல்லா மிகக்கறுத்து நோத லுண்டாம்
வரைக்கவே வாதமொடு பித்த மிஞ்சில்
மருவிய சித்தப்பிரம்மை நினைவ ழித்தல்
நரைக்க நானாவிதமுங் குணமாய்க் காணல்
நலியாகிப் பாடியே வாய்பி தற்றல்
இரைக்கவே சுவாசமொடு பேதி யாதல்
இருந்தவிடம் விட்டுமே யேகும் பாரே 164

சித்தப்பிரம்மை சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. உடம்பு எல்லாம் கறுத்து நோகும். வாதத்துடன் பித்தம் அதிகரிக்கும். நினைவு அழியும். வாய் பிதற்றுவர். பாடுவர், சுவாசம் அதிகமாகும். பேதியுண்டாகும். ஓரிடத்தில் இருக்க மாட்டார்கள்.

சீதாங்கசன்னியின் குணம்

ஏகவே சீதாங்க சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெல்லாங் குளிர்ந்தி ருக்கல்
ஆகவே யிருமலொடு இளைப்புண் டாதல்
அசதியொடு விக்கலுடம் பெல்லா நோதல்
மோகவே வாந்தியோட ழற்றல் மூர்ச்சை
முரண்டுமே தேகமெல்லாம சைதல் காணல்
பேகவே பேதியடிக்கடி யுண் டாதல்
பிதற்றியே புலம்பிமிகப் பேசுந் தானே 165

சீதாங்க சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. உடல் எல்லாம் குளிர்ந்து காணப்படும். இருமலும் இளைப்பு முண்டாகும். அசதியுடன் விக்கலுண்டாகும். உடல் நோகும். வாந்தி, மூர்ச்சை உண்டாகும். தேகத்தை அசைக்க முடியாமை அடிக்கடி பேதியுண்டாதல், புலம்பிப் பேசுவார்கள்.

தாந்திரிக சன்னியின் குணம்

பேசுமே தாந்திரிக சன்னி தானும்
பிதற்றலாய் வாய்ப்பிரா வுதலு மாகும்
கூசுமே நாக்கதுமி கக்க றுத்துக்
கூர்முள்ளு போல்நாக்கிற் றணணீ ரில்லை

தூசுமே யுதடுலர்ந்து தாபங் காணும்
தவிப்பெய்தி வயிர்கழியுஞ் சுவாச முண்டாம்
வீசுமே தினவெடுத்துக் கண்ப ருத்து
மிகத்தண் ணீர்பாய்ந்துசுர மிகுதி யாமே 166

தாந்திரிக சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. வாய் பிதற்றலுண்டாகும். நாக்கு மிகவும் கறுத்து கூரிய முட்கள்போல் காணப்படும். நாக்கு வரண்டு உதடும் உலர்ந்து போகும். தாபமெய்தும். வயிறு நன்கு கழியும். சுவாசம் அதிக முண்டாகும். கண்கள் அரித்து, பெரிதாக, தண்ணீர் பாயும்.

கண்டபுச்சனை

மிகுதியாய் கண்டபுச்சம்வி ளம்பக் கேளாய்
மிகப்பிரமை தான்வருதல் தாப மாதல்
தகுதியாய்த் தலைசுற்றல் சந்தோ ஷித்தல்
தனுப்போலக் கழுத்துநரம்பி ழுத்துக் கொள்ளல்
பகுதியாய்ப் புலம்பல்பயப் படுதல் மூர்ச்சை
பாரமாய் சரீரமெல்லாம் நோதல் காணல்
வகுதியாய் வாந்தியோடி ருமல் விக்கல்
மார்பு தலைநோதலாய் மருவு மாமே 167

கண்டச்ச சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. பிரமையுண் டாகும். தாபமெய்தும். தலைசுற்றும், சிலசமயம் மிகவும் மகிழ்ச்சியுடனிருப்பர். வில்லைப்போல் கழுத்து நரம்பு இழுத்துக் கொள்ளும். புலம்புவர். பயப்படுவர். மூர்ச்சை அடைவர். சரீரம் எல்லாம் நோகும். வாந்தியுடன் இருமல் விக்கல் ஆகியவை தோன்றும். தலை நோகும்.

கர்னிகா சன்ணியின் குணம்

மருவு கர்ணிகாசன்னி பாதந் தன்னை
வகுத்திடவே வாய்ப்பிதற்றிவெ டித்தல் காணும்
நருவு நாக்குக்கறுத்துப் பிரலா பித்தல்
நடுக்கியே விக்கலோடி றைப்பு காணல்
உருவு முடம்பெங்குமே யசைத லாதல்
உற்ற செவிகேளாது காதி ரைச்சல்
தருவு தலைபாரமாய் நடுக்கல் காணல்
தண்ணீர் மேலடிக்குத் தவித்த லாமே 167

கர்ணிக சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. வாய் பிதற்றும். வாயில் வெடிப்பு காணும். நாக்கு கறுக்கும். பிரலாபிப்பார்கள். விக்கலுடன் இறைப்பு காணப்படும். உடல் எங்கும் அசையும்.

காது கேட்காது. காதில் இரைச்சல் கேட்கும். தலை பாரமாக இருக்கும். நடுக்கம் உண்டாகும். தண்ணீரை மேலே அடித்துக் கொள்வார்கள். இவையே கர்னிக சன்னியின் குணம்.

பட்சிநேத்திர சன்னியின் குணம்

தவித்த பட்சிநேத்ரசன்னி பாதந் தன்னைச்
சாற்றிடவே சரீரமெல்லாஞ் சயித்ய மாதல்
துவித்த கண் தான்றிறவாக் கினிலி ருத்தல்
தூயகண்ணீர் பாய்ந்துமே தியங்கிக் காணல்
கவித்த கண்ணில்பார்வை காணாதி ருத்தல்
கடுஞ்சித்தப் பிரமையாய் பிரலா பித்தல்
பவித்து டம்பெல்லாம்வாரம் பதைப்பு காணல்
பரத்தெழும்பு மக்கினிபோற் சுரமுண் டாமே 169

பட்சிநேத்திர சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. சரீரமெல்லாம் சயித்தியமாகும். கண் திறக்க முடியாது. கண் தீ போல சூடாக இருக்கும். கண்ணீர் அதிகமாக சுரக்கும். கண்ணால் சரியாகப் பார்க்க முடியாது. உடம்பெல்லாம் பதைபதைப்பு காணப்படும். தீபோல உடலில் சுரமுண்டாகும்.

இரத்தேழு சன்னி

சுரமான ரத்தேழு சன்னி தன்னைச்
சொல்லிடவே நாக்குதடு வெடித்துக் காணல்
நிறமான ரெத்தமாய் பேதி யாதல்
நெருப்பாகச் சுரமடித்த லுஷ்ண மாதல்
திறமான வாய்வரளல் சித்தப்பி ரம்மை
தியங்கியே நினைவழிதல் விக்கல் காணல்
தரமான தலைசுற்றல் கறுப்பு நாக்குத்
தறுகாது கேளாமலி ருத்தல் தானே 170

ரத்தேழு சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. நாக்கு, உதடு ஆகியவை வெடித்துக் காணப்படும். இரத்தத்துடன் பேதியாகும். நெருப்புப்போல் சுரம் காயும். சித்தப் பிரம்மை உண்டாகும். நினைவழியும். விக்கல் உண்டாகும். தலைசுற்றும். நாக்கு கறுக்கும். காது கேட்காது.

பிரலாப சன்னி

இருத்தல் பிரலாபமாஞ் சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெல்லா மசைவு காணல்
புருத்தல் புலம்புதலூஷ்ண மாயி ருத்தல்
புண்ணாகச் சரீரமுநொந்தி ருமல் காணல்

அருத்தல் தாபச்சுரமாய்த் தான டித்தல்
அடிக்க டிக்குவிக்கலொடு மூர்ச்சை காணல்
வருத்தல் மயிர்க்கூச்செறிதல் முகமும் வாடல்
வாயலறி மோடியிடும் வண்மை தானே 171

பிரலாப சன்னியின் குணத்தைக் கேட்பாயாக. உடல் எப்பொழுதும் அசைந்து கொண்டேயிருக்கும். புலம்பலுண்டாகும். உஷ்ணமாயிருக்கும். சரீரம் புண்ணாகி நொந்து காணப்படும். தாபசுரம் காணப்படும். இருமல் உண்டாகும். விக்கலுடன் மூர்ச்சை உண்டாகும். மயிர்க்கூச்செறியும். முகமும் வாடும். வாயில் அதிக உமிழ்நீர் சுரக்கும்.

சிங்குவாசன்னியின் குணம்

வண்மையாஞ் சிங்குவாற் சன்னி தன்னை
வழுத்திடவே சுவாசமோ டூஷ்ண மாதல்
தண்மையாய்த் தாகங்காங்கை காலெ ரிச்சல்
தருநாக்குக் கறுத்துமுட் போல்வெ டித்தல்
கண்மையாக் காதுகே ளாதி ருத்தல்
கடினமாய் வாய்திறவா மற்றான் மூடல்
உண்மையா யுடம்பெங்குஞ் சுரந்தான் வீசல்
உடம்பு பாரித்திருத்தல் விக்க லாமே 172

சிங்குவாசன்னியின் குணத்தைக் கேட்பாயாக. சுவாசம் அதிகம் ஏற்படுவதுடன் உஷ்ணமாகும். தாகமுண்டாகும். கைகால் எரிச்சல் உண்டாகும். நாக்கு கறுத்து முள்போல் வெடிக்கும். காது கேட்காது. வாய் திறக்க முடியாமல் மூடியே இருக்கும். உடல் எங்கும் சுரமடிக்கும். உடம்பு வீங்கும்.

அபின்னியாசசன்னி

இருத்தவே வாதபித்த சேட்பங் கூடி
இருமலொடு சுவாசமாய்ச் சுரம டித்தல்
நருந்தவே நாக்குபல வர்ண மாகி
நாவதுதான் வரண்டுநித் திரை யாதல்
தெருத்தவே தேகமெங்கு நோதல் காணல்
செடமெல்லாம் வியர்வையாய்ப் பலயீன மாதல்
அருத்தவே யாகமெங்கு மழன்று பொங்கும்
அபன்னி யாசன்னியிட வாண்மை தானே 173

வாத பித்த கப குற்றங்கள் மூன்றும் கூடி இருமலுடன் சுவாசம் அதிகமாதல், சுரம் காய்தல், நாக்கு பல வண்ணங்களுடன் காணப்படுதல், நாக்கு வரண்டு காணப்படுதல், உறக்கம்

அதிகமாகக் காணப்படுதல், தேகம் அனைத்தும் நோதல், உடல் எங்கும் வியர்வையாகி பலவீனமடைதல், தேகம் எங்கும் அழற்சியாகி பொங்குதல் ஆகியவை அபின்னியாச சன்னியின் குணங்களாகும்.

சன்னிகளில் சாத்தியம்

ஆண்மையா யாறுசன்னி சாத்ய மாகும்
அதின் விபரமொவ்வொன்றா யறையக் கேளாய்
தாண்மையாய்த் தந்திரிகசன்னி தாந்திரிக சன்னி
தாக்கான பிரலாபச் சன்னி யோடு
தீண்மையாய்ச் சித்தவிப்ரம சன்னி யொடு
சிங்குவாகச் சன்னிகரணீகச் சன்னி யாறு
வெண்மையாய் விஷத்தில் விடுபட் டேகும்
மேன்மையாஞ் சன்னியிட குணமி தாமே 174

பதிமூன்று சன்னிகளில் ஆறுவகை சன்னி சாத்தியமாகும். அவையாவெனில் தந்திரிக சன்னி, தாந்திரிக சன்னி, சித்தவிப்ரம சன்னி, சிங்குவாதச்சன்னி, கர்ணிக சன்னி, பிரலாபச்சன்னி ஆகிய ஆறுமாகும்.

சன்னிகளில் அசாத்தியம்

குணமில்லாஅ சாத்யசன்னி கூறக் கேளாய்
கொடிதான ருத்திரிக சன்னி யோடு
அணமில்லா வந்தகமும்பக் கிநேத் திரம்
அரிதான கண்டகுபுச் சமர்த் தேழோடு
திணமில்லாச் சீதாங்கம பின்னி யாசஞ்
சீரான வவிழ்தமிட்டு மிதுதீ ராது
பணமில்லாச் சன்னிபதின் மூன்றுஞ் சொன்னேன்
பக்குவமாய்ப் பார்த்திதனைப் பாலிப் பாயே 175

குணமடையாத அசாத்யசன்னியின் வகைகளைக் கேட்பாயாக. உருத்திரிக சன்னி, கண்டகுபுச்ச சன்னி, சீதாங்கசன்னி, அபின்னியாச சன்னி, அந்தகசன்னி, இரத்தேழு சன்னி ஆகிய ஏழும் அசாத்தியமாகும்.

சன்னிகட்கு கால அளவு

பாலித்த சன்னிகட்குக் காலங் கேளாய்
பகர்தாந் திரிகசன்னிக்கு நாளே ழாகும்
ஆலித்த வந்தகற்குப் பத்து நாளாம்
அதிக ருத்திரருக்குப் பணிரெண் டேநாள்

சேலித்த சித்தப்ரம்மைக் கிருபத் தோர்நாள்
சீதாங்க சன்னிக்குப் பதினைந் தாகும்
காலுத்த தாந்திரிகற் கிருபத் தைந்து
காணுகின்ற நாளேழிற் றீருந்தானே 176

சன்னி வகைகளின் காலத்தைக் கேட்பாயாக. தாந்திரிக சன்னி ஏழு நாளிலும், அந்தக சன்னி பத்து நாளிலும், உருத்திர சன்னி பனிரெண்டு நாளிலும், சித்தபிரம்மை சன்னி இருபத்தியொரு நாளிலும் சீதாங்க சன்னி பதினைந்து நாளிலும், தாந்திரிக சன்னி இருபத்தைந்து நாளிலும் தீரும்.

தீருமே கண்டபுச்சம் பதின்மூன் றேநாள்
தீர்க்கரு ணீகசன்னி தொண்ணூ றேநாள்
பாருமே பட்சிநேத்ர சன்னிநா ளெட்டு
பத்துநாள் ரத்தேழு சன்னிக் காகும்
பேருமே பிரலாப மீரே ழாகும்
பெரிய சிங்குவாகத்துக் கீரெட் டாகும்
ஆருமே அபின்யாசம் பதினைந் தாகும்
அவதி நாட்சன்னிதனக் கறிந்தி டாயே 177

கண்குபுச்ச சன்னி பதிமுன்று நளிலும், கர்ணிகசன்னி தொண்ணூறு நாளிலும், பட்சிநேத்ர சன்னியானது எட்டு நாளிலும், இரத்தேழு சன்னி பத்து நாளிலும், பிரலாப சன்னி பதினான்குநாளிலும் சிங்குவாத சன்னி பதினாறு நாளிலும், அபின்யாசசன்னி பதினைந்து நாளிலும் தீரும்.

தோஷசுர உற்பத்தி

அறிந்திடவே தருணசுரத்தவ பத்யம் வந்தால்
ஆக்கிர மமாமேழுவிதத் தோஷ மாகும்
தெறிந்திடவே யேதென்றால் சொல்லக் கேளாய்
தித்திப்பும் புளிம்பழம் கசப்பு மாகும்
பறிந்திடவே பாக்குவெற்றி லையும் பாலும்
பரிமள மாந்திரவியமும் பச்சைத் தண்ணீர்
தரித்திடவே சயிதபண்டம் ஸ்திரிசை யோகம்
தரித்தேடு வாசித்தலழுதல் வழிந டையே 178

சுரத்தின்பொழுது அபத்தியம் ஏற்படுமாயின் ஏழுவித தோஷமுண்டாகும். இனிப்பு, புளிப்பு, கசப்பு, பாக்கு வெற்றிலை, பால், வாசனை திரவியங்கள், பச்சைத் தண்ணீர், பெண் போகம், அதிகம் படித்தல், அழுதல் அதிக நடை ஆகியவற்றுடன்

வழிநடைதான் சுகந்தமாஞ் சந்த னம்பூ
மணமான கற்பூரஞ்சிவந்த தொருவஸ் திரம்
நெழிந்திடைதான் நெய் வெல்லமெண்ணை யுடன் மோர்தான்
நெகிழ்ச்சியாந் தயிர் மெத்தைப்புதுப் புடவை கற்று
சுழிநடைதான் பெண்பார்வைமெய் தீண்டி யாளல்
சுரம்வந்த வொன்பதுக்கு ளொன்ப தின்மேற்
பழிநடையிப் படிக்கொத்தவ பத்தியம் வந்தக்கால்
பரிந்தும காதோஷம் வந்து பிறக்குந் தானே 179

வாசனையுள்ள சந்தனம், கற்பூரம், சிகப்பு நிறமுடைய ஆடைகள், நெய், வெல்லம், எண்ணெய், மோர், தயிர், புதுப்புடவை, காற்று, பெண்போகம் ஆகியவை. அனைத்தையும் சுரம்வந்த பதினெட்டு நாளுக்குப் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறன்றி மீறி செய்தோமனால் தோஷம் வந்து சேரும்.

தானென்ற சுரத்திலவ பத்தியந் தன்னால்
சயித்தியத் தாலுபசாரத் தால்மந் தத்தால்
சூனென்ற சுரம்பிறந்து தோஷ மாகும்
சுருக்கான மூர்ச்சையாய் மிகுந்து காணும்
கானென்ற பிரமையொடு கடிய தாகம்
கருத்தழிந்து புலம்பியே மார்தா னோதல்
ஆனென்ற அவபத்தியத்தில் வந்த தோஷம்
அதின்குணத்தை யறிந்தான விழ்தஞ் செய்யே 180

சுரமடிக்கும்பொழுது அல்லது அதற்குப் பிறகுள்ள நாட்களில் அபத்தியக் கோளாறினாலும் அதிக உபசாரத்தாலும், மந்தத்தினாலும் மீண்டும் சுரம் தோன்றி துன்புறுத்தும். மூர்ச்சை யுண்டாகும். பிரமை, தாகம் ஏற்படும். கருத்து அழியும். மார்நோகும். அதனை வகையாக அறிந்து மருந்து கொடுக்க வேண்டும்.

செய்யவே தருணசுர மாயி ருக்கில்
ஸ்திரீ சஞ்சாரஞ்செய்தார் றிரிதோஷ மாகும்
உய்யவே இதன்குணந்தான் உடம்பெல்லா நோகும்
உயர்கின்ற மாருக்கு ளெரித லுண்டாம்
தையவே சரீரமெங்கு மாட்டங் காணும்
தவித்துமே புலம்புமடிக் கடியெ ழுந்து
கையவே கால்கைதான் குளிர்ந்தி ருக்கும்
கடினமாஞ் சித்தப்பிரமை காணுங் காணே 181

தருண சுரமாயிருக்கும் பொழுது பெண்போகம் செய்தால் திரிதோஷமாகும். உடல் எல்லாம் நோகும். மார்பு எரியும். சரீரம் எல்லாம் நடுங்கும். புலம்பல் ஏற்படும். அடிக்கடி படுக்கையை

விட்டு எழுந்து கொள்வார்கள். கை கால் குளிர்ந்து காணப்படும். சித்தப் பிரமை ஏற்படும்.

பிரமையாங் காச்சலொடு பிதற்றல் காணல்
பெருக வுஷ்ணம்மாதல் தாக மாதல்
வறுமையாய் வயிறெறிதல் மூர்ச்சை காணல்
வாதமாம் நாடியது குடில மாதல்
விறுமையாய் வியர்வையொடு சஞ்ச லித்தல்
மிக்கான வுவழலையுப்பி சமு மாதல்
அறுமை யாயங்கமெல்லா மழற்சி யாதல்
அதிக விஷந் தோஷ மறிந்து பாரே 182

பிரமையுடன், காய்ச்சல், பிதற்றல், உண்டாகும் உஷ்ணம் தாகம் உண்டாகும் வயிர் எரிச்சல் மூர்ச்சையுண்டாகும். வாதநாடி அதிகமாகும் அதிக வியர்வையுண்டாகும். மனது சஞ்சலமாகும். உப்பிசம் உண்டாகும் உடல் அங்கமெல்லாம் அழற்சியடையும்.

தோஷமா மகாசுரந்தான் சொல்லக் கேளாய்
தூய்தான மயக்கமாய்ச் சுரந்தா னுண்டாம்
கூசமாம் நாளொன்றுக்கிரண்டு தர மூன்று
குளிருடனே தாகமுண்டாய்க் காய்ச்ச லுண்டாம்
நாசமாந் தலைநோவு நாக்கிலேதான்
நற்கடின மாய்முள்ளைப் போலி ருத்தல்
போஷமாம் பிரலாபஞ் சித்தப் பிரமை
புலம்ப லோடங்கமெல்லாம் பிரளும் பாரே. 183

மகாசுரத்தின் குணத்தைக் கேட்பாயாக. மயக்கத்துடன் சுரமுண்டாகும். ஒரு நாளுக்கு இரண்டு, மூன்று முறை குளிர் தாகமுடன் காய்ச்சல் உண்டாகும். தலை வலிக்கும் நாக்கில் கடினமாக முள் உண்டாகும். பிரலாபிப்பார்கள். சித்தப் பிரமை உண்டாகும் அங்கம் எல்லாம் முறுக்கி வலிக்கும்.

பிரளவே சிங்குவாக தோஷந் தானும்
பொன்னிற மாய்நாக்கிலே தானி ருக்கும்
மிரளவே நாவெடித்து நீரில் லாமல்
மிகநாக்கு முள்ளுபோற் றானி ருத்தல்
திரளவே காச்சலொடு மூர்ச்சை யாகித்
தியக்கமொடு மயக்கமாய் வியர்வை காணல்
வரளவே யுருட்சியொடு மிரட்சி யாதல்
உதறிடுமே சரீரமெல்லா முண்மை தானே 184

சிங்குவாக தோஷம் என்னவெனில், நாக்கு பொன்னிறமாக இருக்கும் நாக்கு வெடித்து வரட்சியுடனிருக்கும். நாக்கில் முள்போல

காணப்படும், காச்சலுடன் மூர்ச்சையுண்டாகும் தியக்கமும் மயக்கமும் ஏற்படும். வியர்வையுண்டாகும். மிரட்சியுண்டாகும். உடல் உதறும்.

உண்மையாங் கரணசிங்கு வாக தோஷம்
உண்ணாக்குக் கருத்துலர்ந்து முள்ளு போலாம்
திண்மையா யெழுந்திருக்குஞ் சித்தப் பிரமை
திரேகமெல்லாந் தினவெடுக்கும் வியர்வை காணும்
துண்மையாய் சுவர்சமோ டழலை யாகும்
சோரமாய்ச் சுரமுண்டாய்த் துடிப்பு மாகும்.
கண்மையாய்க் கால்கையும சதி யுண்டாம்
காந்தியாந் தேகமது கறுக்குந் தானே 185

கரணசிங்குவாக தோஷம் என்னவெனில், உள்நாக்கு கருத்து உலர்ந்து முள்போலாகும் சித்தப்பிரமை யுண்டாகும். உடல் எங்கும் தினவு உண்டாகும் வியர்வையுண்டாகும். சுவாசத்துடன் அழலையாகும். சுரமுண்டாகும் உடலில் துடிப்புண்டாகும் கால்கை அசதி தரும். தேகம் கறுக்கும்

கறுப்பான தோஷமதோ ரேழு தானும்
காரிய மாம்பத்யவ பத்ய மாகில்
திருப்பான திரிதோஷ மொன்றோ டொன்று
சேர்ந்து பின்னிநாடியது குடில மாகி
நறுப்பான நாபியினிற் றோஷம் பற்றி
நாக்கு முகமூக்கோடு கண்சு ருக்கி
வெறிப்பா கும்நளளேழு பதினைந் தாகி
வியாதி சமனாகியே மேன்மை யாமே 186

ஏழுவகை தோஷங்களிலும் அவபத்தியத்தினால் உண்டாகி வாத பித்த கபம் ஆகிய மூன்றிலும் ஒன்றோடொன்று பின்னி நாபியில் குடியிருந்து தோஷத்தை பற்றும். நாக்கு, முகம், மூக்கு, கண் ஆகியன சுருங்கி ஏழு நாளில் தீரவேண்டிய வியாதி பதினைந்து நாளில் குணமாகும்.

அதிசாரசுர உற்பத்தி

மேன்மை யாமதிசாரம் விளம்பக் கேளாய்
மிகக் குளுமையானதுகள் புசித்த தாலும்
பான்மையாம் பாரித்தபசு மையாங் கறிகள்
பருக்கவே யழன்றுதுகள் காரந் தானும்
ஆண்மை யாயமுதாலும் வழிந டந்தால்
அதிபேதி யானதுகள் பச்சைப் பண்டம்
பேண்மை யாய்ப்புசித்தாலு மிவைக ளாலே
பேதியா யதிசாரம் பிறக்குந் தானே 187

அதிசாரம் பிறக்கும் வழிகளைக் கூறுகிறேன் கேட்பாயாக. அதிக குளிர்ச்சியுள்ளபொருட்கள் உண்பதாலும் பசுமையான காய்கறிகளை அதிகம் உண்பதாலும், அதிக காரத்தாலும் அதிக அழுகையாலும், அதிக தூரம் நடந்தாலும் பச்சை மாவுப் பண்டங்கள் அதிகம் உண்பதாலும், அதிசாரம் பிறக்கும்.

வாதாதி சாரத்தின் குணம்

பிறக்கு மேவாதாதி சாரச் செய்தி
பிரமி யேவயிர்தானும் பேதி யாகும்
அறக்குமே யடிக்கடிக்கு வாயுத்தான் பரியும்
அனலாகி நுரையுடனே மலங் கறுக்கும்
திறக்குமே யடிவயிற்றிற் பிடுங்கல் நோதல்
தேகமெல்லா நொந்துமே மலமுண் டாதல்
மறக்கு மலமறுகியே பேதி யாகும்
வாந்தி யொடுமந்தமா மயக்க மாமே 188

வாத அதிசாரத்தின் குணத்தைக் கேட்பாயாக. வயிறு பொருமி பேதியாகும். அடிக்கடி வாயு பிரியும். நுரையுடன் மலம் கழியும். மலம் கறுத்து காணப்படும். அடிவயிற்றில் பிடுங்கல் நோதல் உண்டாகும். தேகம் முழுவதும் நொந்து போகும். மலம் பேதியாவதுடன் வாந்தியுண்டாகி மயக்க மேற்படும்.

பித்ததிசாரம்

மயக்குமே பித்தாதி சாரந் தானும்
மலஞ்சிவப் புற்றுஷ்ணித்து விடுத லாகும்
தயக்குமே தாகமொடு வயிற் வலிக்கும்
தயங்கியே யழலைதான் மிகவுண் டாகும்
வியக்குமே வியிர்வையொடு மூர்ச்சை யாகும்
மிக்காக வுதடுலரு மார்வ லிக்கும்
மியக்குமே மேனியெல்லா மழற்றி மீறும்
மிடறு நொந்துபுண்ணாக வெதும்ப லாமே 189

பித்த அதிசாரத்தின் குணத்தைக் கேட்பாயாக. மலம் சிவப்பாகி வெப்பத்துடன் வெளியாகும். தாகத்துடன் வயிற்றை வலிக்கும். உடல் வெப்பம் அதிகமுண்டாகும். அதிக வியர்வை யுடன் மூர்ச்சையுண்டாகும். உதடு உலரும் மார்பு வலிக்கும், மேனி எல்லாம் அழற்சி யுண்டாகும். தொண்டை நொந்து புண்ணாகும்.

சிலேட்பதி சாரம்

வெதும்பலாஞ் சிலேட்பாதி சாரந் தானும்
வெளுத்துமே சீதந்தான் மிகவு மாகும்
வதும்பலாய் வயிறுநொந்து மலநு ரைக்கும்
மார்க்கமா யிருமலோடு சுவாசங் காணும்
அதும்பலா யடிவயிறு தனில்வ லிக்கும்
அருசியா யிருந்துமே கோழை கட்டுந்
திதும்பலாய் தேகமெங்கும் வெண்மை யாகுஞ்
சிக்குமே சலந்தானுந் தியக்க மாமே. 190

கப அதிசாரத்தில் மலத்துடன் சீதம் அதிகம் போகும். வயிறு நோகும் மலம் நுரைத்துக் காணப்படும். இருமலோடு சுவாசம் அதிகமாய்க் காணும், அடிவயிறு வலிக்கும். அருசியாயிருக்கும் கோழை கட்டும். தேகம் எங்கும் வெண்மையாய் இருக்கும் சிறுநீர் சரிவர கழியாது.

தோஷாதிசாரம்

தியக்கான தோஷாதி சாரந் தானும்
தேகமுள் ளெரிச்சல்பிறங் குளுத்தி காணல்
கயக்கான காலசையுங் குளிர்ந்தி ருத்தல்
கண்டபேருடன் புலம்பல் வாந்தி பண்ணல்
இயக்கான விருமல்விக்கல் சுவாச மாதல்
எழுந்திருந்து ஆடுதலோடு தல்போ ராடல்
வியக்கான சீதரத்தம் வியர்வை யுப்பல்
மிக்க நித்திரையில்லா திருத்த லாமே. 191

தோஷ அதிசாரத்தின் குணத்தைக் கேட்பாயாக. தேகத்தில் உள்ளே எரிச்சலாயும் வெளியே குளுமையாகவும் காணப்படும். கை கால் குளிர்தல், பார்ப்பவரிடம் எல்லாம் புலம்புதல், வாந்தியுண்டாதல், இருமல், விக்கல் சுவாசம் ஆகியவை அதிகமாக உண்டாதல், எழுந்து ஆடுதல் ஓடுதல் போராடல் ஆகியன வுண்டாதல் வியர்வை, அதிகம் உண்டாதல் நித்திரையின்மை ஆகிய குணங்கள் காணப்படும்.

அசாத்ய அதிசாரம்

இருத்தலே யசாத்தியமா மதிசா ரந்தான்
ஏரண்டத் தெண்ணையைப் போலிளகும் பேதி
மறுத்தலே மாமிசம் போல் வயிறு பேதி
மருவு குரற்கிழக்கு ரற்றான் பட்டி ருக்கும்

திருத்தலே தேன்போலும் பேதி யாகும்
சிதறியே சுவாசமொடு கோழை காணும்
விருத்தலே விக்கலொடு வியர்வை யாகும்
மீளாது சாத்தியந்தான் விளம்புங் காலே 192

அசாத்திய அதிசாரத்தில் மலம் விளக்கெண்ணைய்போல பேதியாகும். சிலசமயம் மாமிசத் துண்டுகள் போலவும் கழியும். குரல் கிட்டிப்போகும். தேன்போல பேதியாகும் சுவாசத்துடன் கோழை காணப்படும். விக்கலுடன் வியர்வை உண்டாகும் இத்தகைய குறிகுணங்கள் இருப்பின் நோய் தீராது.

விளம்பவே மலமிளகல் கட்டி யாதல்
மிகத்துத்து விடுதல்பல வர்ண மாதல்
இளம்பவே யிரத்தம் போல் கழிதல் வீக்கம்
இரைத்த பொல்லாநாற்றமாய்ப் பேதி யாதல்
திளம்பவே தேன்போலக் கழித லுப்பல்
தேங்காயின் றிருகற்போற் செரியாதி ருத்தல்
அளம்பவே யடிக்கடிதான் பேதி யாதல்
அசாத்திய மாமதிசார மறிந்தி டீரே 193

மலமிளகி திடீரென கட்டியாகவும் பலவர்னமாயும், இரத்தம் போலவும், தேன்போலவும், தேங்காய் திருகில் போலவும் தெரியாமல் சபிக்கமுடியும். மலம் கிழித்தாலும், வீக்கம் உண்டானாலும் அதிகாரம் தீராது.

சாத்ய குணம்

அறிந்த சாத்தியகுணந்தான் ரோகி கட்கு
அலர்ந்த கண்தான்கருநெய் தற்பூப்போ லாகும்
தறிந்த முகம்பூரணசந் திரன்போ லாகும்
சமதாது வாய்நாடி தான டக்கும்
மறிந்த தொனிக்குயி லோசை போல வாகும்
மனதுதான் கறிசோற்றி லாசை யாகும்.
தெறிந்தது மல்தினம்பல்லுமுல்லை யரும்ப துவாய்ச்
சிவந்துமே நாக்குதனிற்றண் ணீருண் டாமே. 194

அதிசாரத்தில் சாத்திய குணங்களைக் கேட்பாயாக நோயாளியின் கண் கருநெய்தல் பூப்போல இருக்கும். முகம் பூரண நிலவு போலிருக்கும். நாடி நடை சம அளவில் நடக்கும். குரல் குயிலோசைபோலாகும். அசைவ உணவில் விருப்ப மேற்படும். பல் வெளுத்து நன்கு இருக்கும். நாக்கில் நீர் சுரக்கும்.

உண்ட பின்புவியர்வைதான் கண்டு மாறல்
உறுவிசேஷங் காதிரண்டுஞ் சரியாய்க் கேட்டல்
மிண்ட பின்புமூக்குமண மறிதல் கைகால்
மிகச் சிவந்துநிக்கண்ணும் ரத்த மாதல்
பண்டபின்பு நித்திரையுந் தூரப் பார்வை
பார்க்கின் மெய்தான் சிவந்துமே பாங்குண் டாதல்
நண்டபின்பு நாடியுமே இறுகிக் காணல்
நற்குணஞ் சாத்தியமென்றே நவின்றி டாயே. 195

வியர்வை உண்டாதல், காது சரியாக கேட்டல், மூக்கு மணத்தை அறிதல், கைகால் சிவந்து காணல் நகக்கண் இரத்த மாதல், நல்ல நித்திரை உண்டாதல், உற்று நோக்கிப் பார்த்தல், மெய் சிவந்து காணப்படல். நாடி இறுகி நடத்தல் ஆகிய குணங்கள் இருப்பின் அது சாத்தியமாகும்.

நவின்றிட்ட வசாத்தியமாஞ் சுரமதி கமாதல்
நலங்கியே யதிகமாய்க் குளிர்ந்து காணல்
அவின்றிட்ட அதமசுர மாய டித்தல்
அதிக கண் கைகால்நகக் கண்ணிரத் தமில்லை
கவின்றிட்ட கண்காந்தி யிலாதி ருத்தல்
காதுகேளா திருத்தல்வின் மேனி தன்னில்
முவின்றிட்ட மெத்தவுமே வியர்வை யாதல்
முகங் காந்தியிலாதிருத் தல்முகம் பாழாகுமே 196

அசாத்தியத்தில் சுரமதிகமடிக்கும். அதிகமாக குளிர்ந்து காணப்படும் அதமசுரமடித்தல். கண், கை, கால் நகக்கண் ஆகியவற்றில் இரத்தமில்லாதிருத்தல், காது கேளாதிருத்தல் உடலில் அதிகம் வியர்வையுண்டாதல், முகம் கலையிழந்து காணப்படல் ஆகியவற்றோடு.

பாழாகக் கண்விழித்த வாக்கி ருத்தல்
பாத்த கண்டான்மிகச்சிறுத் தலாயி ருத்தல்
தூழாகத் தொப்புண் மார்பு மூக்குக் கால்கை
சோர்ந்துமே குளிர்ந்திட்டு சுவாசங் காணல்
மேழாக விக்கலொடு தனுர்வா தம்போல்
மெய்வலித்தல் சரீரமெங்கு மிசிவு மாடல்
தாழாகத் தலைகோர்த்தல் பித்து பெத்தல்
தடித்துமே தொண்டையினிற் சேட்பந் தானே. 197

கண் விழித்தபடியே இருத்தல், கண் சிறுத்தே காணப்படுதல் தொப்புள், மார்பு, மூக்கு, கை, கால் ஆகியவை சேர்ந்து குளிர்ந்து காணப்படும். அதிக சுவாசம் காணப்படும். விக்கலுண்டாகும்.

தனுர்வாதம்போல், உடல் வில்போல் வளைத்து வலித்தல். சரீரம் எங்கும் ஆடல், தலை சோர்தல் மிகவும் பித்து பிடித்தல். தொண்டையில் கபம் கட்டுதல், ஆகியனவும்.

தான்மூக்கு மணமறியா தேயி ருத்தல்
தருநாக்கு முரிசைநெ றியாதி ருத்தல்
வான்மலங்கள் கபிலநிற மாயி ருத்தல்
மாசற்ற நாடியதி சூட்ச மாதல்
தூனாடி சக்கரம்போற் சுற்றி யோடல்
சுகதுக்க மொன்றுமறி யாதி ருத்தல்
வேனிந்த விபரமெலாங் காணு மாகில்
மீறும் சாத்தியமென்று விளம்பி டாயே. 198

மூக்கு மணம் அறியாதிருத்தல், நாக்கு சுவையறியா திருத்தல், மலம் செம்மை நிறத்தில் போதல் நாடி சக்கரம்போல் சுற்றுதல். சுகதுக்கம் ஒன்றும் அறியாதிருத்தல் ஆகியனவும் இருந்தால் அது அசாத்தியமாகும்.

விளம்பிய தோர் வழக்கினிட வகைய றுத்தல்
மிக்கான சோதிஷந்தான் காலஞ் சொல்லல்
வளம்பியதோர் தர்க்கமது வாது கூறல்
வயித்தியந்தான் பிணிமூன்றின் வன்மை சொல்லல்
தளம்பியதோர் சாஸ்திரத்தின் படியே பார்க்கில்
தாக்கான விகபர மிரண் டுக்குண் டாண்மை
உளம்பியதோர் சாஸ்திரமி லாமற் செய்தால்
உற்பவிக்கு மியமகதி யுடன்கண் டாயே. 199

வழக்கின் வகையை உறுதிசெய்தல், சோதிடத்துடன் நோயின் காலம் கூறுதல். தர்க்கம் செய்து முடிவெடுத்தல். வாத பித்த கப நாடியின் தன்மையை முழுதும் அறிதல். இவைகளை விட்டு விட்டு சாஸ்திரத்தைப் பார்க்காமல் செய்தால் நோய் தீராது.

நாடி தெரியாத பேர்கள்

உற்பவித்த நாடிதெரி யாத பேர்கள்
உண்டவர்க்கும் அப்யங்கம் பண்ணி னோர்க்கும்
கற்பவித்தப் பட்டினியாயி ருந்த பேர்க்கும்
கனக்க வழிநடந்தவர்க்கு மிளைத்த வர்க்கும்
குற்பவித்த பேய்பிடித்தோர் கோபத் தோர்க்கும்
கூட்டுறவாய் ஸ்திரீபோகம் பண்ணி னோர்க்கும்
பற்பவித்த பத்தியந்தான் பிடித்த பேர்க்கும்
பகர் கஞ்சாகள்ளபினி பாலிப் போர்க்கே 200

நாடிநடை தெளிவாகத் தெரியாதவர்கள் யாரென்று கேட்பீராக. உணவு உண்டவர்க்கு, உடற்பயிற்சி செய்தவர் களுக்கு, பட்டினி கிடந்தோருக்கும், வெகுதூரம் நடந்தவர் களுக்கும், இளைத்தவர்களுக்கும், பேய் பிடித்தவர்களுக்கும், கோபமாக உள்ளவர்களுக்கும், போகம் செய்தவர்களுக்கும், பத்தியமாக இருப்பவர்களுக்கும், கஞ்சா அபினி முதலியவை சாப்பிட்டவர்களுக்கும் நாடி நடை தெளிவாக தெரியாது.

பாலித்த வாய்வுசாத னையுள் ளோர்க்கும்
பகர்கின்ற கோழிமுதலி றைச்சி மீன்கள்
சேலித்துத் தின்னவர்க்கும் குமர கண்டன்
சிறுகாக்கை வலியுளர்க்கும் பாஷா ணங்கள்
கோலித்த கெந்தகமும் விஷங் களான
கொடூரமா மருந்துகளைத் தின்ன பேர்க்கும்
நாலித்த விவர்களுக்கு நாடி தானும்
நடக்கை தான் செவ்வையிலே நடவா தென்னே. 201

வாய்வு சாதனையுள்ளவர்களுக்கும், கோழி, மீன், இறைச்சி ஆகியன உண்டவர்களுக்கும், குமரகண்டன் மற்ற சிறிய காக்கை வலிப்பு உள்ளவர்களுக்கும் பாஷாணம் மற்றும் கெந்தக விஷமுள்ளவர்களுக்கும், கொடிய மருந்துகளை உண்டவர்க்கும் நாடி ஒழுங்காக நடக்காது.

என்னவே சுரந்துவக்கி லியற்கை கேளாய்
இசைந்துவன்று பட்டினியே தானி ருந்து
கன்னமே யிரண்டாநாள் கால மேதான்
கைககமுவிப் பல்விளக்கி நாவ ழித்து
முன்னமே முகங்கழுவி வெந்நீ ராலே
முடியாது மறையவே வேட்டி கட்டி
பன்னமே யிடக்கைகீ ழாய்ப் டுத்துப்
பட்டினியே தானிருக்கப் பண்பு தானே. 202

சுரம் வந்தவர்கள் கடைபிடிக்கவேண்டிய நெறிமுறை களைக் கேட்பாயாக முதல்நாள் பட்டினியிருந்து இரண்டாம் நாள் காலை கைகழுவி பல்விளக்கிய பின்பு வெந்நீரால் முகம் கழுவி இலகுவாக ஆடையணிந்து இடக்கையை தலைக்குக் கீழே வைத்துப்படுத்து பட்டினியிருக்க வேண்டும்.

பண்பான மூன்றாநாள் கால மேதான்
பல்விளக்கி முகங்கழுவி விபூதி சாற்றி
துண்பான சூரியநமஸ் காரம் பண்ணிச்
சுருதியைத் தானயந்தோர்க் குத்தான மீந்து

வண்பான வைத்தியர்க்கு வரிசை நல்கி
மகாசெபங் கள்பண்ணியபின் மத்தி யானம்
நண்பாக நாலொன்றாய்க் காய்ந்த வெந்நீர்
நலக்கருந் தித்தேத்தொரு விற்றருந் திடாயே.　203

மூன்றாம்நாள் காலையில் பல்விளக்கி முகம்கழுவி விபூதி அணிந்து சூரிய நமஸ்காரம் செய்து, ஏழை எளியோர்க்கு தானம் செய்து வைத்தியர்க்கு உரிய மரியாதை செய்து செபங்கள் செய்தபின்பு, மதிய வேளையில் நாலுக்கொன்றாக காய்ச்சிய வெந்நீரினை குடிக்கவேண்டும்.

அருந்தியே நாலாநாள்க ழித்து மற்ற
ஐந்தாநாள் கற்றமன்ன சார மீந்து
நருந்தியே நவசுரந்தான் கழிக்கு மட்டும்
நண்பான கற்கமொடு கஷாய நல்கத்
தருந்தியே சுரமதுதான் தணியா விட்டால்
கந்தாமாங் குணமானவைத் தியர் கையில்
வருந்தியே தாம்பூலதட் சணையு மீந்து
மாத்திரை தான்செந்தூர மருவி யுண்ணே　204

நான்காம் நாள் கழித்து ஐந்தாம்நாள் கற்கம், அன்னம் (சோறு) வடித்தநீர், ஆகியன தரவேண்டும். சுரம் தணியாவிட்டால் கற்கத்துடன், கஷாயம் சாப்பிடவேண்டும். அதற்கும் மீறினால் வைத்தியர் கையில் தாம்பூலமும் தட்சணையும் கொடுத்து மாத்திரை செந்தூரம் ஆகியன உண்ணவேண்டும்.

உண்ணவே பத்தியமாச் சுரம் விட்டேகும்
ஓங்கியதோர் சுரந்தணிந்த பின்பு தானும்
விண்ணவே விரோசனங்கள் வாங்கிக் கொள்ள
மேன்மையாஞ் சடமதுதான் மெலிய தாகும்
வண்ணவே வாதசுரந்த னக்கேழ் நாளும்
மாசற்ற லங்கணந்தான் மார்க்க மாகும்
பிண்ணவே பித்தசுரந் தனக்கோ ராறு
பேரான லங்கணந்தான் புகல லாமே　205

பத்தியம் இருப்பின் சுரம் விடும். சுரம் விட்டபின்பு விரேசனம் செய்ய உடல் மெலியும். வாதசுரத்துக்கு ஏழு நாள் பட்டினியிருப்பதே உரிய வழியாகும். பித்தசுரத்துக்கு ஆறுநாள் பட்டினி இருப்பது உகந்தது.

புகலான சேட்பசுரந் தனக்குத் தானும்
புகலுமோ ரொன்பது வாச மாகும்
வகலான வாதசுரந் தனக்குத் தானும்
மகத்தான வுபவாச மூன்று நாள்தான்
திகலான பித்தசுரந் தனக்குத் தானும்
சிறிதாகப் போசனந்தா னிடவு மாகும்
நகலான சிலேட்பமாஞ் சுரந் தனக்கு
நற்சூடு கஞ்சிகொடுத் திடநன் றாமே. 206

சேத்தும சுரத்துக்கு ஒன்பதுநாள் பட்டினியிருக்க வேண்டும். வாதசுரத்துக்கு மூன்றுநாளும் பட்டினியிருக்க வேண்டும் பித்தசுரத்துக்கு சிறிது உணவு அளிக்கலாம். கபசுரத்துக்கு சூடான கஞ்சிகொடுத்தல் நலம்.

நன்றான வாதசுரந் தனக்குக் கஞ்சி
நவநாழிக் குள்ளாக நாட்ட லாகும்
பன்றான பித்தசுரந் தனக்குக் கஞ்சி
பத்துநாழி கைதன்னிற் கொடுக்க லாகும்
மன்றான சிலேட்பசுரந் தனக்குக் கஞ்சி
மத்தியானந் தன்னில் வார்க்க லாகும்
மின்றான விக்கிரம விதியே செய்தால்
மேன்மையா மருந்தென்றே விளம்ப லாமே. 207

வாதசுரத்துக்கு கஞ்சியை காலை ஒன்பது நாழிகைக்குள் கொடுக்கவேண்டும். பித்தசுரத்துக்கு பத்து நாழிகைக்குள் தரவேண்டும். கபசுரத்துக்கு மதிய வேளையில் தர வேண்டும். இவ்வாறு கொடுப்பதே மேன்மையான மருந்து என்று கூறலாம்.

இலங்கணமில்லாத பேர்

விளம்பவே யதிசார மான பேர்க்கும்
மிகுந்த கெர்ப்பிணிஸ்திரீக்குங் கிழவ னார்க்கும்
இளப்பவே யிளைத்தவர்க்கும் குழந்தை கட்கும்
இடுகண் ணோய்காரர்க்குஞ் சயரோ கிக்கும்
உளம்பவே யுபவாச மான பேர்க்கும்
உறுதிபித்த ரோகிக் கும்கி ராணி யோர்க்கும்
துளம்பவே தொந்தமாம் ரோகி யர்க்கும்
சூடுமுட் காச்சலாஞ் சுகதே கர்க்கே. 208

அதிசார நோயினால் பாதிக்கப்பட்டவர்க்கும், கெர்ப்பிணிக்கும், கிழவர்க்கும், இளைத்து இருப்பவர்களுக்கும், குழந்தைகளுக்கும் கண்ணோய் உள்ளவர்களுக்கும், சயரோகிகளுக்கும்,

உபவாசம் இருப்பவர்களுக்கும், பித்த ரோகிகளுக்கும், கிராணி நோய் உள்ளவர்களுக்கும், தொந்த ரோகிகளுக்கும், உட்காச்சல் உள்ளவர்களுக்கும்,

தேகர்க்குங் கெசதுரக மேற்கொண் மோர்க்கும்
சுமைபார மெந்நேரமெ டுக்கின் றோர்க்கும்
தாகர்க்குஞ் சலரோக மான பேர்க்கும்
சஞ்சலத்தோர் பலபந்தமான பேர்க்கும்
மாகர்க்கு மகத்தான யோகத் தோர்க்கும்
மங்கையொடு வெகுபோக மருவி னோர்க்கும்
வேகர்க்கும் பிரமியமாம் வேட்கை யோர்க்கும்
மிகவாகும் லங்கணமாம் விதியோ காதே. 209

அதிகதூரம் நடப்பவர்களுக்கும், தலைச்சுமை அதிகம் எடுக்கின்றவர்களுக்கும், தாகமுடையோர்க்கும், நீர் சம்பந்த மான நோய் உள்ளவர்களுக்கும், சஞ்சலப் படுவர்களுக்கும், மலபந்தம் உள்ளவர்களுக்கும், யோகம் செய்பவர்களுக்கும் அதிக பெண்போகம் செய்தவர்களுக்கும், பிரமிய நோய் உள்ளவர்களுக்கும், ''பட்டினி விதி பொருந்தாது.

விதியாக வயித்தியந்தான் செய்யும் பேர்கள்
வேதமாஞ் சாஸ்திரத்தின் விரிவைப் பார்த்து
திதியாக தேகத்தின் செயலைப் பார்த்து
திசைநாடி திசைவாய்வு திட்டம் பார்த்து
அதியாக வக்கினியின் நிலையைப் பார்த்து
அசாத் தியசாத்தியமிரண்டு மறிந்து ணர்ந்து
மதியாக மருந்தினிட வண்மை பார்த்து
மார்க்கமாய் வைத்தியத்தை வளமாய்ச் செய்யே 210

வைத்தியம் செய்பவர்கள் சாத்திரத்தை நன்கு கற்றுணர்ந்து தேகத்தின் நிலையைக்கண்டு தசவாயு, தசநாடி ஆகியவற்றைக் கண்டு, சாத்தியம் அசாத்தியம் ஆகிய இரண்டையும் உணர்ந்து, மருந்தின் வண்மையாய் பார்த்து வைத்தியம் செய்ய வேண்டும்.

லங்கணவர்ச்சிதம் - சன்னிரோக நிதானம் முற்றிற்று

குன்மரோக நிதானம்

செய்யான குன்மத்தி னுற்பத்தி தன்னைச்
செப்பிடவே துவர்ப்பான பொசிப்பி னாலும்
மையான மங்கையுடன் மார்க்கத் தாலும்
வகையாகுங் கிழங்கு வகை யருந்த லாலும்
உய்யான மிளகுகா யுரைப்பி னாலும்
உறுபசியை யடக்கிடி னுமந்தந் தாலும்
தையான சண்டாள கோபத் தாலும்
சலிப்பாலுங் குன்மம்வந்து தாக்கும் பாரே. 211

குன்மம் உண்டாகும் வழியைக் கூறுவேன் கேட்பாயாக அதிகமாக துவர்ப்புள்ள உணவுகளை உண்பதாலும், அதிக போகத்தினாலும், கிழங்குகளை அதிகம் உண்பதாலும், மிளகாயின் காரத்தினாலும், அடிக்கடி பசியை அடக்குவதாலும், கோபத்தினாலும், சலிப்படைவதாலும் குன்மம் உண்டாகும்.

பார்க்கவே குருநிந்தை பண்ணி னோர்க்கும்
பாலகரைச் சிசுவைப் பட்டினிவைத் தோர்க்கும்
மார்க்கும் மாதாவைப்பி தாவை நிந்தை
வஞ்சனை செய்தோர்க்கு மடந்தை தன்னைக்
கார்க்கவே கற்பழித்த காமு கர்க்கும்
கருதியே சிவநிந்தை பண்ணி னோர்க்கும்
ஆர்க்கவே யஷ்டகுன்ம மணுகு மென்று
அரன் சொல்லத் தேவிசொன்னா ளறிந்து பாரே. 212

குருநிந்தை செய்தோர்க்கும் சிறுவர்களை குழந்தைகளை பட்டினி போட்டோர்க்கும், தாய் தந்தையாரை வஞ்சனை செய்தவர்களுக்கும், பெண்ணை கற்பழிப்பவர்களுக்கும், சிவ நிந்தை செய்தவர்களுக்கும் எட்டுவித குன்மமும் வந்து அணுகும்.

செய்யவே யஷ்ட குன்மச் செயலைக் கேளாய்
செயலான வாயுகுன்மம் வாத குன்மம்
எய்யவே பித்தகுன்மமெரி குன்ம மாகும்
ஏலான வலிகுன்மஞ் சத்தி குன்மம்
தையவே சன்னிகுன்மஞ் சேட்ப குன்மம்
சாகச மாங்குன்ம மெட்டு மாகும்
கொய்யவே யிதினுடைய குணங்க ளெல்லாம்
குறிப்பறிந் தொவ்வொன்றாய்க் கூர்ந்து பாரே 213

எட்டுவித குன்மங்களின் வகைகளைக் கேட்பாயாக வாயு குன்மம், வாதகுன்மம், பித்தகுன்மம், எரிகுன்மம், வலிகுன்மம்,

சத்திகுன்மம், சன்னிகுன்மம், சேட்பகுன்மம் ஆகிய எட்டும் அஷ்ட குன்மங்களாகும். இனி அவற்றின் தனித்தனி குணத்தைக் கேட்பாயாக.

வாயுகுன்மம்

பார்க்கவே வாயுகுன்மம் பகரக் கேளாய்
பருகியதோர் பதார்த்தங்கள் செரித்தி டாது
தோர்க்கவே யசனந்தான் செல்லா தாகும்
துருத்தி கொண்டகாற்றதுபோல் வயிறு முப்பும்
ஊர்க்கவே ஊறுபெலன் றான்கெ டுக்கும்
உடலு ணருநடைகுறை யுமோச்ச லாகும்
வேர்க்கவே யடிவயிறு தனிலே வெந்து
மிகப்பி ரண்டுவில்லுப் போல்விகுத் தமாமே. 214

வாயுகுன்மவித்தின் குணத்தைக் கேட்பாயாகப் உண்ட உணவு சரிக்கிறது. உணவு செல்லாது, வயிற்றில் காற்று அடைத்தது போல் உப்பியிருக்கும் பலம் குறையும். நடக்கமுடியாது உடல் வளைவு தரும். அடிவயிறு நொந்து வில்போல வளைந்து காணப்படும்.

வாதகுன்மம்

விகுத்தமாம் வாதகுன்மம் விளம்பக் கேளாய்
மிகத்தானு நடைகுறையும் மலம் விடாது
உகுத்தமா முடல்தானு மிகக் கடுக்கும்
உறக்கமொடு தியக்கமா யுழலை யாகும்
தகுத்தமாஞ் சரீரமது கனத்துத் தோன்றும்
சங்கையா யசனமிகத் தானுஞ் செல்லா
பிகுத்தமாம் பெலக்கேடாங் கைகா லோயும்
பேசொணா நாவரளுந் தலையு நோமே 215

வாத குன்மத்தின் குணத்தைக் கேட்பாயாக. நடைகுறை யும் மலம் கட்டும், உடல்கடுக்கும், உறக்கத்துடன் தியக்கமாயுழலும் சரீரம் கனத்து தோன்றும். உணவு அதிகம் செல்லாது. பலம் குறையும், கை கால் உளையும், நாக்கு வரளும், தலை நோகும்.

பித்தகுன்மம்

நோம்பித்த குன்மத்தி நுட்பங் கேளாய்
நுனிமஞ் சணிறம் போல முகமு மாகும்
வாஞ்சத்தி வாந்தியுண்டாய் மணம றுக்கும்
மயக்கமாய் நெஞ்சதனிற் கோழை கட்டும்

காமநெருப் பாய்த்தானிருக்குங் கைகா லோயும்
கடுவெய்யிற் கண்டவுடன் றலைசு ழற்றும்
மூமூத்ரஞ் சிவந்திருக்குந் தாகங் காணும்
முக்கியே மலம்வீழும் மூச்சுண் டாமே. 216

பித்த குன்மத்தின் குணத்தைக் கேட்பாயாக. முகம் மஞ்சள் நிறமாக மாறும். வாந்தியுண்டாகும். மணம் தெரியாது, நெஞ்சில் கோழைகட்டு உடல் நெருப்பாய் காயும், கைகால் ஓயும், வெய்யில் கண்டவுடன் தலை சுற்றும், மூத்திரம் சிவந்து தாகமுண்டாகும் மலம் இறுகிவிழும்.

சிலேட்டு குன்மம்

உண்டாகும் வாய்நீர்தானி ளைப்புண் டாகும்
உடலும் வற்றிகருத்தழி யுமுரத் திருக்கும்
வெண்டாகும் பலன் கெடுக்கு மசனந் தள்ளும்
மிக்கான தலையரிக்கும் வெளுரு மேனி
தெண்டாகு நெஞ்சதனிற் புகைச்ச லுண்டாம்
திடுக்கிட்டு நடுக்கலு மாந்தேகந் தானும்
திண்டாகுந் தலையெங்கும் பார மாகும்
சிலேட்டும மாங்குன்மமென்றே செப்ப லாமே. 217

சிலேட்டும குன்மத்தில் வாய்நீர் இனிக்கும் இளைப்புண் டாகும். உடல் வற்றும், மனம் சிதறும், பலம் குறையும், உணவு செல்லாது. தலைகதிக்கும் உடல் வெளிறும் நெஞ்சில் புகைச் சலுண்டாகும் தேகம் திடுக்கிட்டு அடிக்கடி நடுக்கலுண்டாகும் தலை பாரமாகும்.

சன்னிகுன்மம்

செப்பலாஞ் சன்னிகுன்ம செயலைக் கேளாய்
தியக்கமொடு மயக்கமாய்க் குளிருண் டாகும்.
அப்பமா மசனமிகத் தானுஞ் செல்லா
அடிவயற்றிலி ரைச்சலுமாம் வாய்நீ ரூறும்
உப்பமாய் வயிறு கழியு முஷ்ண மாகும்
உவர்க்கும் வாய்நெஞ்சதனிற் புகைச்ச லுண்டாம்
தெப்பமாய் மூச்சதுவுஞ் சிதைத் தெழும்புந்
தேகமெங்குங் குளிர்ச்சியு மாய்த்திடுக் குமாமே. 218

சன்னி குன்மத்தின் செயலைக் கேட்பாயாக. தியக்கமும் மயக்கமும் உண்டாகும். குளிர் எடுக்கும் உணவு செல்லாது அடிவயிற்றில் இரைச்சல் உண்டாகும் வாயில் நீரூறும். வயிறு

கழியும். உஷ்ண முண்டாகும் வாய் உப்புகரிக்கும் நெஞ்சில் இருமல் உண்டாகும். சுவாசமும் சீராக இருக்காது. தேகம் குளிர்ச்சியாயிருக்கும்.

எரிகுன்மம்

திடுக்குமா மெரிகுன்மஞ் செயலைக் கேளாய்
சிறுவயிற்றி லெரிந்துமே குடல்கு மட்டும்
வடுக்கும் வாய்நீர்சுழற்றுந் தலைவ லிக்கும்
வயிறுப்பிக் கிறுகிறுக் கும் பிளிந்தேக் காகும்
வெடுக்கு மயிர்கால்தோறும் வியர்வை யாகும்
மிகப்பொருமி வயிறுகழிந் திரைச்ச லாகும்
எடுக்குமே யுடலிளைக்கு மிறங்கா தன்னம்
எரியுமே யுடலெங்கு மிரும லாமே. 219

எரிகுன்மத்தின் குணத்தைக் கேட்பாயாக. மேல்வயிற்றில் எரிச்சலுண்டாகும் குடல் குமட்டும் வாயில் நீர் ஊறும் தலைவலிக்கும். வயிறுப்பும், கிறுகிறுக்கும் மயிர்க்கால்களில் எல்லாம் வியர்வை பெருகும். உடல் இளைக்கும். உணவு செல்லாது, உடல் முழுதும் எரியும். இருமலுண்டாகும்.

சத்திகுன்மம்

இருமலாஞ் சத்திகுன்ம மியல்பைக் கேளாய்
ஈரலுக்குள் ளெரிவாகு மேக்க மாகும்
திருமலாந் தியக்கமொடு மயக்க முண்டாம்
சிறுவலியு முண்டாகி வாந்தி யாகும்
பொருமலாம் பெலன் கெடுக்கும் மலம் விடாது
பேரான அக்கினிதான் மிகவு முண்டாம்
செருமலாம் நடைகுறையும் அருசி யாகும்
சிறுநரம்பெல்லாம் புடைத்துத் திமிரு மாமே. 220

சத்திகுன்மத்தின் இயல்பைக் கேட்பாயாக. ஈரல் எரியும் மயக்கமும் தியக்கமும் உண்டாகும். சிறிய வலியுடன் வாந்தி யாகும். பலம் குறையும். மலம் கட்டும், அக்கினி மிகவுண்டாகும். நடைகுறையும், அருசியாகும் சிறு நரம்புகள் புடைத்துத் திமிரும்.

திமிராக வயிறூதுந் திரையு மேனி
செட முலைந் துகருத்தழியுஞ் சிதறுந் தூக்கம்
வமிராக வயிறிறைத்து முன்போ லாகும்
வருத்தமா யசனமிகத் தானுஞ் செல்லா

முமிராக விலாவதனிற் சொருக லாகு
முதுகு தண்டுவலிகாணு மிடுப்பு நோவாம்
கமிராகக் காயமது கடுப்பு காணும்
கனசுரமாய்ப் பொய்ப்பசியுங் காணுங் காணே. 221

வயிறு ஊதி மேனி திரையும். உடல் உளையும் கருத்தழியும், தூக்கம் சிதறும், உணவு செல்லாது, விலாப்பக்கம் செருகியது போல வலியுண்டாகும். முதுகுத்தண்டில் ஒலி காணப்படும், உடலில் கடுப்பு உண்டாகும். அதிக சுரமடிக்கும் பொய்பசி காணப்படும்.

காணவே பஞ்சபூதத்தி யத்தைச் சொன்னேன்
கருத்துரைத்துத் தத்துவத்தைக் கருதிச் சொன்னேன்
நாணவே நாடியிட நிதானந் தன்னில்
நற்குறிப்புந் துர்க்குறியும் நாடிச் சொன்னேன்
ஆணவே யஷ்டவிதப் பரிட்சை சொன்னேன்
ஆர்க்கமாஞ் சுரமெல்லா மடங்கச் சொன்னேன்
காணவே சன்னிகுணஞ் சாத்யவ சாத்யம்
சாற்றினேன் குன்மத்தின் சார்வைத் தானே 222

பஞ்சபூதங்களைக் குறித்துக் கூறினேன். தத்துவங்கள் அனைத்தையும் கூறினேன். நாடியின் நிதானத்தைக் கூறினேன். அதில் நற்குறிகளையும், துர்க்குறிகளையும் கூறினேன். எட்டுவிதப் பரிட்சைகளைக் கூறினேன். சுரங்களைக் குறித்துச் சொன்னேன். சன்னிவகைகளின் சாத்ய அசாத்யத்தைக் கூறினேன். குன்மவகைகளைக் கூறினேன்.

சூலைரோக நிதானம்

சார்வான சூலையிடத் தன்மை கேளாய்
தக்க சிறைப்பட்டிருக்குந் தீமை யாலும்
ஆர்வான அரசுசுடு சோறருந் தலாலும்
அறவுமே சலிப்பாலு மோட லாலும்
தார்வான சபைமிகுந்த சண்டை யாலும்
தகையான துவர்ப்பொசிப்பு புகைத்த லாலும்
மீவான மோகத்தின் புணர்ச்சி யாலும்
மிகுந்த பலியுறுதலினாற் சூலை யாமே. 223

சூலை நோய் உண்டாகும் விதத்தைக் கேட்பாயாக சிறைப்பட்டிருந்தாலும், மிகுந்த சூடான சோற்றை அருந்துவதாலும், சலிப்பினாலும், ஓடலினாலும், சபையில் அதிக

சண்டையிடுதலாலும், அதிக துவர்ப்புள்ள பொருள்கள் சுவைப்பதினாலும், அதிக புணர்ச்சியினாலும் சூலைநோய் உண்டாகும்.

ஆமென்ற வன்னத்துக்கி டையூறு பண்ணி
யகதி பரதேசிகளை யடித்த பேர்க்கும்
காமென்ற கற்புடைய மங்கை மாரைக்
கருதியே மனதினிலிச் சித்த பேர்க்கும்
வாமென்ற வாழ்மரத்தை வெட்டி னோர்க்கும்
வழிமறித்துப் பொருள்பறித்த மதி கேடர்க்கும்
ஏமென்ற எச்சில்தனைக் கலந்த பேர்க்கும்
இகத்திலே நோவெய்திச் சூலை யாமே 224

உண்பவர்களுக்கு இடையூறு செய்வதாலும் அகதிகள் மற்றும் பரதேசிகளை அடித்து விரட்டியவர்களுக்கும் கற்புடைய மங்கையரை மனதில் ஆசை கொள்பவர்க்கும், பச்சை மரத்தை வெட்டியவர்களுக்கும், வழிமறித்து பொருள்களை கொள்ளை யடிப்பவர்களுக்கும், எச்சிலை உண்பவற்றில் கலப்பவர்களுக்கும் சூலை நோய் உண்டாகும்.

சூலைதான் பதினைந்தின் சூட்சங் கேளாய்
துளைக்கின்ற மேகத்தின் சூலையொடு
வாலையா முதிரியென்ற சூலை தானும்
வாதத்தின் சூலையொடு பித்த சூலை
ஆலைதான் சிலேட்பமாஞ் சூலை யாகும்
ஆமென்ற சூலையிற்கார் சூலை யாகும்
கோலகுன் மச்சூலையொடு லத்தி சூலை
கொடிநிதம் பச்சூலையொடு சுரச்சூ லையாமே 225

சூலைவகை பதினைந்தின் வகைகளைக் கேட்பாயாக, மேக சூலை, உதிரிசூலை, வாதசூலை, பித்தசூலை, சிலேட்டும சூலை, பித்த சூலை, கார்சூலை, குன்மச்சூலை, அத்திசூலை, நிதம்ப சூலை, சுரச்சூலை ஆகியவற்றுடன்

ஆமென்ற சுரசூலை கெர்ப்பச் சூலை
அதிபக்கச் சூலையொடு தூரச் சூலை
பாமென்ற பதினைந்து சூலை யாகும்
பசியாலும் பழகியதோர் காடி யாலும்
தாமென்ற சிலைநுதலாள் புணர்ச்சி யாலும்
சருகிலை யின்நீராலும் சண்டை யாலும்
வேமென்ற ரசமருந்தின் வெட்டை யாலும்
மிடுக்கான சூலைவந்து விளையுந் தானே 226

சுரசூலை, கொர்ப்பச்சூலை, பக்கசூலை, தூரச்சூலை ஆகியவை சேர்ந்து பதினைந்து வகைகளாகும். அதிகப் பசியாலும், அதிகப் பழைய காடியாலும், பெண்களின் அதிக புணர்ச்சியாலும், சருகு, இலை ஆகியவை ஊறிய நீரினை அருந்துவதாலும், சண்டையினாலும், ரசமருந்துகளின் வேட்கையாலும் சூலை வந்து சேரும்.

மேகசூலை

விளைமேக சூலையின்றன் விபரங் கேளாய்
மிகக்கை கால்யிடுப்போ டுகுடைச் சலாகும்
களைநீரு மலங்கட்டுங் கைகால் வேர்வை
கசிவோடு நளிருண்டா மேனி யெங்கும்
இளமை யவரிதழது தான்சிவப்பு மாகும்
எரிச்ச லுண்டாந்தேகமெல்லா மிளைத்துக் காணும்
உளைவோடு சுரமாகுந் தாகங் காணும்
உறுகின்ற பிரமையா மயக்க மாமே 227

மேகசூலையின் குணத்தைக் கேட்பாயாக. கைகாலுடன் இடுப்பும் குடைச்சலாகும். நீரும் மலமும் கட்டும். கைகாலில் வேர்வை உண்டாகும். உடலெங்கும் நடுக்கமுண்டாகும். இதழ்கள் சிவந்து காணப்படும். எரிச்சலுண்டாகும். தேகம் இளைத்துக் காணப்படும். சுரம் காணும். தாகமுண்டாகும். பிரமையும் மயக்கமும் உண்டாகும்.

முதிர்சூலை

மயக்குகின்ற சூலையின்றன் குணத்தைக் கேளாய்
மறைப்பான வாண்குறியி னடியே யுற்று
அயக்குகின்ற வழன்றுசீழ் முதுகைப் பற்றி
அபானன் மேலடிக்குடலை யதிரச் சுற்றி
பயக்குகின்ற பரவியே வலிக்கும் போதுது
படர்நாவி தனைநடுவிஞ் குழித்து வாங்கும்
தயங்குகின்ற தலைவலியுந் சுரமுங் காணும்
தக்ககண்ணுஞ் சிவந்துநீர் ததும்புந் தானே 228

உதிரி சூலையின் குணத்தைக் கேட்பாயாக. ஆண்குறியின் அடியிலிருந்து உழன்று கீழ்முதுகைப் பற்றி அபானன்மேல் அடிக்குடல்வரை சுற்றி பரவி வலிக்கும். நாபியை நடுவில் குழித்து வாங்கும், தலைவலியும் சுரமும் காணும். கண்கள் சிவந்து நீர் ததும்பும்.

வாதசூலை

ததும்புமே கால்கைதா னுளைவு காணும்
தடிப்பாகத் திமிருண்டாய்த் தூக்க மிஞ்சும்
வெதும்பியே யங்கமெல்லாங் குளிருஞ் சற்றே
மெய்தானும் பளபளக்குங் முகமுங் காணும்
கதும்பு மேவில் நாணிக் கடுசு மாகும்
கடுத்துமே சிறுநீருஞ் சிவந்து வீழும்
அதிர்ந்துமே மெய்யெல்லாம் குடைந்து நோகும்
அதிகரிக்கும் வாதசூலை யாண்மை தானே 229

வாதசூலையில் கைகால் உளைவு உண்டாகும். திமிருண்டாகும், தூக்கம் அதிகமிருக்கும். உடல் அங்கமெல்லாம் குளிரும். மேனி பளபளத்து கனத்துக் காணப்படும். சிறுநீர் கடுத்து சிவந்து விழும். உடல் எல்லாம் குடைந்து நோகும். உடல் வளைந்துகடுக்கும்.

பித்தசூலை

ஆண்மையாஞ் சரீரம்வற்றிக் கடுப்பு முண்டாம்
அறவே கைகாலுளைந்து கனத்தி ரண்டு
நோன்மையாய் நோய்மிகுந்து நோக்கங் கெட்டு
நுணுக்கமாந் தாதுவெல்லா நொய்ய தாகி
சேண்மையாய் சடத்தினிடச் செழுமை மாறித்
திரங்கியே மிகமின்னித் தெளிவில் லாமல்
பேண்மை யாமயக்கமொடு பலக் கேடாகும்
பித்தமாஞ் சூலையென்றே பேச லாமே 230

பித்தசூலையில் சரீரம் வற்றி கடுப்பு உண்டாகும். கைகளும் உளைந்து கனத்து திரண்டு நோய் அதிகமாகும். மனது கெடும். உடல் தாதுக்கள் அனைத்தும் நொய்யதாகி சடத்தின் செழுமை மாறிப்போகும். உடல் மிகவும் மின்னி தெளிவில்லாமல் மயக்கத்துடன் பலக்கேடுண்டாகும்.

சிலேத்துமசூலை

சூலையாஞ் சிலேத்துமத்தைச் சொல்லக் கேளாய்
தொண்டையெல்லாம் வலித்துமே கோழை கட்டும்
ஆலையா மடிவயிறு தன்னில் நோவாம்
அங்க மெல்லாம் புண்போல அழற்றல் காணும்
வேலையா மெய்யெங்கும் வியர்வை தோன்றும்
மெய்வெளுத்து நகக்கண்ணுமி ரத்த மில்லை
பாலையா யிருந்தவுடல் பஞ்சு போலாம்
பலகாலும் வாயூறிப் பாவு மாமே 231

சிலேத்துமச் சூலையின் குணத்தைக் கேட்பாயாக. இச் சூலையில் தொண்டை வலித்து கோழை கட்டும். அடிவயிறு வலிக்கும். அங்கம் எல்லாம் தணல்போல் சுடும். உடல் எங்கும் வியர்வை தோன்றும். மெய்வெளுத்து நகக்கண்ணில்கூட இரத்தம் இருக்காது. உடல் பஞ்சுபோலாகிவிடும். வாய் ஊறும். பிசுபிசுக்கும்.

ஆமைசூலை

பாவுமே யாமைசூலை யின்கு ணந்தான்
பாவான வசீரணத்தின் பண்பி னாலும்
தாவுமே தண்ணீர்தான் குடித்த லாலும்
தகுந்த புளிப்புக்கசப்புத் தித்திப் பாலும்
ஊவுமே யுபவாசம் பண்ண லாலும்
உறவளந் தாமமொடு சீதந் தானும்
வாவுமே வயிறோடு விலாப்பக் கங்கள்
வலித்துமே கடுப்புமிகக் குத்துண் டாமே 232

ஆம சூலையின் குணத்தைக் கேட்பாயாக. அசீரணத்தாலும், அதிக அளவில் தண்ணீர் குடித்தலாலும், அதிகமாக புளிப்பு, கசப்பு, தித்திப்பு ஆகிய சுவையுள்ள பொருட்களை உண்பதினாலும் பட்டினி இருப்பதாலும், வாயுவுடன் குளிரும் சேர்ந்து விலாபக்கங்கள் வலித்து குத்தலெடுக்கும்.

உத்காரசூலை

குத்து முத்காரசூலை யின்கு ணந்தான்
கோர்வையாய் விலாவுதனில் முதுகில் நெஞ்சில்
அத்தி யினில் நாபியில பானமாங்கு தத்தில்
அதிக துன்மாங்கிசந்தான் வரைந்து மேவிப்
பத்துமணற் படுக்கைப்போற் சலத்து வாரப்
பதிநெருக்கி மூத்திரமாங் கிரிச்சி யுண்டாய்த்
தத்துசடங் கடுப்பெடுத்து மதிக லங்கித்
தளர்ச்சி யொடுமயக்கமாய்த் தள்ளுந் தானே 233

உத்காரசூலையின் குணத்தைக் கேட்பாயாக. விலாவில், முதுகில், நெஞ்சில், நாபியில், அபானத்தில் துர்மாமிசம் வளர்ந்து மணற்பருக்கைபோல சலதுவாரப் .பகுதியில் நெருக்கி மூத்திர கிரிச்சரம் உண்டாகும். சடம் கடுகடுக்கும். மூளை கலங்கும். தளர்ச்சியுடன் மயக்கம் தள்ளும்.

குன்மச்சூலை

தள்ளுகுன்மச் சூலைதனைச் சொல்லக் கேளாய்
தளருமல மூத்திரந்தான் சிக்க லாகி
வள்ளுவயிற் பொருமிசத்தி யிரைச்சல் மூர்ச்சை
வலித்தெரித்துச் சூலைபோல் வயிற்றிற் றோன்றி
தெள்ளுவாய் நீருதத் தெப்ப முண்டாய்
சிறுத்துமே யூணுமெந்த வெதும்ப லாகி
அள்ளுமே யங்கமெல்லா மழற்சி யாகும்
அதிகமா யுடலுலர்ந் தருசி யாமே 234

குன்மச்சூலையில் மலமும் மூத்திரமும் சிக்கலாகி கட்டும். வயிறு பொருமி இரைச்சல், மூர்ச்சை யுண்டாகும். சூலைபோல வயிறு. நீருதி தெப்பம்போல் காணும். உடல் வெதும்பும். உடல் எல்லாம் அழற்சியாகும். உடல் உலரும். அருசியுண்டாகும்.

உலத்திசூலை

உடலான வுலத்தியென்ற சூலை தன்னை
உரைக்கவே யூஷ்ணமாம் பித்தந் தன்னால்
வடலான வக்கினியால் வறட்சி தன்னால்
வலித்துதான் மெத்தவே வீங்கித் தோன்றும்
குடலான வாதத்தால் குன்மத் தாலும்
குடிலமாய்க் கனத்துமே யுடம்பெல் லாநோம்
தடலான வுள்வலியும் பிறவீக்க மாகித்
தடித்து லர்ந்துசடமெல்லாந் தயங்கும் பாரே 235

உலத்திசூலையின் குணத்தைக் கேட்பாயாக. உஷ்ணத்தினாலும், பித்தத்தினாலும், அக்கினியின் வறட்சியாலும் உடல் வலித்து வீங்கும். வாதத்தாலும், குன்மத்தாலும் உடல் கனத்து நோகும். உள்வலியும் தோன்றும். உடல் எல்லாம் வீங்கி தடிக்கும். உலர்ந்துபோகும்.

நிதம்பச்சூலை

தயங்குகின்ற நிதம்பமாம் சூலை தன்னைச்
சாற்றிடவே பிள்ளையது தனைப்பெற றக்கால்
உயங்குகின்ற யோனிவாய் வருத்த மாகி
உள்ளடங்கிச் சலமிரத்த முளைத்தேங் காய்போல்
அயங்குகின்ற யோனிவாய டைத்துக் கொண்டு
அசைக்கிலங்கு நீர்பெருகி சகனத் துள்ளே
மயங்குகின்ற சரீரமெல்லாம் வாடி யூதி
மாசற்ற சடந்தானும் வெளுப்பு மாமே 236

நிதம்ப சூலையின் குணத்தைக் கேட்பாயாக. பிள்ளை பெற்றவுடன் யோனியின் வாய் வருத்தமாகி உள்ளடங்கிச் சலம் இரத்தம் ஆகியவை கோர்த்து தேங்காய்போல யோனிவாயை அடைக்கும். சிறிது அசைந்தாலும் யோனியில் நீர் பெருகும். உடல் வாடி ஊதி சடம் வெளுக்கும்.

கரசூலை

மாற்ற கரசூலை வண்மை கேளாய்
மருவுதிரந் தான்திரண்டு தோலைப் பற்றித்
தேசற்ற வளையம்போற் றிரண்டு நொந்து
சிறந்திருந்த நெம்பின்பழத் தங்கித் தங்கிக்
கேசற்ற நோவாகிக்கீழ் முதுகைப் பற்றிக்
கெட்டியாய் வலித்துமே நோவு முண்டாம்
மாசற்ற கைகாலும் வலிய தாகும்
கருத்தழிந்து மேனியுமே கருதும் பாரே 237

கரசூலையில் உதிரம் திரண்டு தோலைப் பற்றி வளையம் போல திரண்டு நோகும். பிறகு சிறிது சிறிதாக நொந்து கீழ் முதுகைப் பற்றி கெட்டியாய் வலிக்கும். நோவுண்டாகும். கைகாலும் வலிக்கும். கருத்தழியும்.

சுரசூலை

கருகின்ற சுரசூலை கருத்தைக் கேளாய்
கடிந்திரண் டுபக்கமாஞ் சூலை தோன்றி
வருகின்ற வாய்தனிலே ரத்த முண்டாய்
வடிவெல்லாஞ் சுரந்தோன்றி யுளைச்ச லுண்டாய்ச்
சொருகின்ற தேகமெல்லாஞ் சூலை யுண்டாய்ச்
சுருக்கியே வயிறதுதான் வலித்து நோகும்
தெருகின்ற நெஞ்செரிந்து வாய்நீ ரூறிச்
செரியாமல் வாந்தியாய்த் தியக்க மாமே 238

சுரசூலையின் குணத்தைக் கேட்பாயாக. இச்சூலையில் இருபக்கங்களிலும் வலியுண்டாகி, வாயில் இரத்தமுண்டாகும். சுரம் தோன்றும். உளைச்சலுண்டாகும். தேகமெல்லாம் வலி உண்டாகும். வயிறு வலித்து நோகும். நெஞ்செரிந்து வாய் நீரூறும். செரியாமல் வாந்தியாகி தியக்க முண்டாகும்.

பக்கசூலை

தியக்கமான பக்கமாஞ் சூலை கேளாய்
திருகியே யண்டத்திற் பொருமி நொந்து
உயக்கான சுரந்தோன்றி வலிந்து நொந்து
உடம்புப் புண்போலுளைந்துத் தலைவலி யுமாகிப்
பயக்கான பக்கத்திற் குத்த லுண்டாய்ப்
பாரித்துக் கனத்துமிகத் திமிரு முண்டாய்க்
கயக்கான கைகாலு மோச்ச லாகிக்
கண்புகைந்து கருமாறிப் பாச்ச லாமே 239

பக்கசூலையில் அண்டம் பொருமி நோகும். சுரம் தோன்றும். உடல் வலித்து நோகும். உடல் புண்போல உளைந்து தலைவலி உண்டாகும். இரு விலாப்பக்கமும் குத்தல் உண்டாகி அப்பக்கம் கனத்து திமிர்த்துப் போகும். கைகாலும் ஓச்சலாகும். கண் புகையும்.

கெர்ப்பசூலை

பாச்சல் கெர்ப்பசூலையினைப் பகரக் கேளாய்
பண்பான மருந்தீட்டின் குணத்தி னாலும்
வாச்ச வஞ்சனையாலும் சூனியத் தாலும்
மாசற்ற காயமது வேட்கை யாலும்
பீச்சவே மகப்பேறி லுதிரத் தாலும்
பிரண்டு சிக்கிக்கீழ்வயிற்றி லிரத்தம் வீழ்ந்து
கேச்சலாய்க் கெர்ப்பம்போற் பிரள்வுற் றூறிக்
கீழ்வயிற்றில் வலிதோன்றி மயக்க மாமே 240

கெர்ப்பசூலையின் குணத்தைக் கேட்பாயாக. மருந்தீட்டி னாலும், வஞ்சனையாலும், சூனியத்தாலும் உடல் வேட்கை யாலும் மகப்பேற்றின் உதிரம் தங்கி விடுவதாலும், அது கீழ்வயிற்றில் வீழ்ந்து கெர்ப்பம்போல் பிரண்டு வலி தோன்றி மயக்கமுண்டாகும்.

தூரசூலை

கீழ்வயிற் றிற்றூரமாஞ் சூலை கேளாய்
கெடியுண்டி மறுத்துமே வாய்நீ ரூறிப்
பாழ்வயிற் றில்செரித் தீரல் பற்றிப்
பக்கமன்றி சிரத்தோடு வயிறு மூதி
ஆழ்வயிற் றிற்றிரண்டு பிரள்வுற் றேதான்
அடிக்கடி வந்தமர்ந் தொதுங்கி யெழும்பி மீளுங்
கீழ்வயிற் றில்வெளிப்பட் டுதிரஞ் சிக்கும்
கிளத்து மலசலந்தா னுஞ்சிக்கிப் போமே 241

தூரச்சூலையின் குணத்தைக் கேட்பாயாக. உணவை மறுத்து வாயில் அதிக நீருறிக் கொண்டிருக்கும். வயிற்றில் ஈரலைப்பற்றி தலையும் வலித்து வயிறும் ஊதும். வயிற்றில் திரண்டு பிரள்வுற்று அடிக்கடி வாயு அமர்ந்து எழும்பி மீளும். கீழ்வயிற்றில் உதிரம் வெளிப்பட்டு சிக்கும். மலம் சலம் சிக்கும்.

சிக்கான பதினைந்து சூலை தன்னில்
சிறப்பாகக் குணாகுணத்தின் செயலைச் சொன்னேன்
அக்கான வசாத்தியமாஞ் சூலை யாறு
ஆகாத குணங்கண்டாய் முதிரிச் சூலை
உக்கான வுக்காரசூலை சேட்பம்
உறுதி குன்மச்சூலை யோடாமை சூலை
நிக்கான நிதம்பமாஞ் சூலைய சாத்யம்
நீங்கிய சாத்தியநவ மாஞ்சூலை யென்னெ 242

பதினைந்துவகை சூலைகளில் ஆறு சூலை அசாத்தியமாகும். உதிரிசூலை, உக்காரசூலை, சிலேட்பசூலை, குன்மசூலை, ஆமைசூலை, நிதம்பசூலை ஆகியவையே அவையாகும். மீதியுள்ள ஒன்பது வகைகளும் சாத்தியமாகும்.

சூலைரோகநிதானம் முற்றியது

வாதரோக நிதானம்

என்னவே வாதம்தா னெண்ப தாகும்
இகத்திலே மனிதர்களுக் கெய்யு மாறு
பின்னவே பெண்தனையே சோரஞ் செய்து
பெரியோர்கள் பிராமணரைத் தூஷ ணித்தும்
வன்னவே வச்சொத்திற் சோரஞ் செய்து
மாதாபிதா குருவைம றந்த பேர்க்கும்
கன்னவே வேதத்தை நிந்தை செய்தால்
காயத்திற் கலந்திடுமே வாதந் தானே 243

வாதத்தின் வகை எண்பதாகும். அது உண்டாகும் வழியை கேட்பாயாக. பொன்னை திருடியவர்களுக்கும், அந்தணர்களை தூஷித்தவர்களுக்கும், சிவசொத்தை திருடியவர்களுக்கும், தாய், தந்தை, குருவை மறந்தவர்களுக்கும், நல்ல நூல்களை பழிப்பவர்களுக்கும் வாதநோய்கள் உண்டாகும்.

தானென்ற கசப்போடு துவர்ப்பு றைப்பு
சாதகமாய் மிஞ்சுகிலுஞ் சமைத்த வண்ணம்
ஆனென்ற வாறினது பொசித்த லாலும்
ஆகாயத் தேறலது குடித்த லாலும்

பானென்ற பகலுறக்க மிரா விழிப்பு
பட்டினியே மிகவுறுதல் பார மெய்தல்
தேனென்ற மொழியார் மேற்சிந் தையாதல்
சீக்கிரமாய் வாதமது செனிக்குந் தானே 244

கசப்பு, துவர்ப்பு, உறைப்பு, (காரம்) ஆகிய சுவைகளை அதிகமாக உண்பதாலும், மிகவும் ஆறிய உணவை உண்பதாலும், மழைநீரை குடிப்பதாலும், பகலில் உறங்கி இரவில் விழித்திருப்பதாலும், மிகவும் பட்டினியிருப்பதாலும் அதிக பாரம் சுமப்பதாலும், பெண்கள்மேல் அதிக மோகம் கொள்வதாலும் வாதநோய் உண்டாகும்.

வாதம் வர்த்திக்குங் காலம்

வாதவர்த் தனைகால மேதோ வென்னில்
மருவுகின்ற வாணிகர்க் கடக மாகும்
ஆதவைப் பசியோடு கார்த்தி தன்னில்
அடரு மேமற்றமா தங்கள் தன்னில்
போதவே சமிக்கு கின்றகா லமாகும்
பொருந்தியே யிவர்தொழில் தான்கண் திறத்தல்
காதவே கண்மூடல் கைகால சைத்தல்
கடிந்தோட் டமுடக்க லொடுநீட் டலென்னே 245

வாதநோய்கள் அதிகமாகும் காலத்தினைக் கேட்பாயாக. கடக ராசி காலத்தில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அதிகமாகும். மற்ற மாதங்களில் அதன் தீவீரம் குறைந்து காணப்படும். அதன் தொழில் கண்களைத் திறத்தலும் மூடலும், கைகால்களை அசைத்தலும், நீட்டலும், மடக்கலும் ஆகும்.

என்னவே வாதமது எண்ப தாகும்
ஏற்றமாம் பேருடைய வெழிலைக் கேளாய்
வன்னவே வாதஸ்தம்பம் வாதகர் ஷணம்
வகையான கரஸ்தம்பத் தலஸ் தம்பம் தான்
பென்னவே பூசிரவா தத்தி னோடு
பெரிய காளாஞ்ச கமுரு ஸ்தம்பம்
குன்னவே வாதரணாங்கி ரிஷகி ரிஷ்கம்
கூறான நரித்தலையின் வாத மாமே 246

வாதம் எண்பதின் பெயர்களைக் கேட்பாயாக. வாதஸ்தம்பம், வாதகர்ஷணம், கர ஸ்தம்பம், தல ஸ்தம்பம், சிரவாதம், காளாஞ்சக வாதம், ஊருஸ்தம்ப வாதம், வாதகரணம், நரித்தலை வாதம்.

தலைக்கும்ப வாதமொடு மலைத்த கம்பம்
தருக்கான பாணிகம்பங் கூனி வாதம்
அலையா குனிவாதம் அஷேவ கந்தான்
அதிவாதம் உபக தம்பம் நெற்றி சூலை
கலைகன்ன கலைசெவி படுவா யாகும்
கடுபக்க வாதமொடு பட்ச வதம்
தலைய பெய்வாதமொடு பிராணா லையம்தான்
செலஸ்த தம்பமொடு சந்துவா தமாமே 247

கும்பவாதம், கம்பம், பாணிக்கம்பம், கூனிவாதம், ஆகுனிவாதம், அதிவாதம், உபகஸ்தம்பம், நெற்றிசூலை, கன்னசூலை, செவிபடுசூலை, பக்கவாதம், பட்சவாதம், அபய வாதம், சலஸ்தம்பம், சந்துவாதம்

சந்து வாதத்தோடு சகன வாதம்
தரித்த அற்புதவாத முரகன் வாதம்
உந்து முரகாரியொடு வஸ்வ தம்பம்
உறுதி பசத்தம்பம் தேத்திர பவுத்ரம்
அந்து தெண்டவாயுவொ டுவஷ்ட தந்திரம்
அதிசிவணா வாயுவொ்டு மகாவா தந்தான்
முந்து மிருத்து வாதமோ டுதர வாதம்
முகிழ் மூத்ரவுதர வாதமுமா மென்வே 248

சந்துவாதத்துடன், சகனவாதம், அற்புதவாதம், உரகவாதம், உரகரிவாதம், அஸ்வதம்பம், பசத்தம்பம், நேத்திர பவுத்ரம், தெண்டவாய்வு, அஷ்டதந்திரம், வசனாவாதம், மகாவாதம், மிருத்துவவாதம், உதரவாதம், மூத்ர உதிர வாதம்.

என்ற சுக்கிலவாதஞ் சவரங் கவாதம்
எழில் வார்த்தவாதமொடு மஞ்ஞான ஸ்தம்பந்
தென்ற சிரக்கம்ப வாதமும் சத்தம்பம்
செயவச்சிர ரூபமொடு கண்டக் கிராம்
நன்ற தாம்நகாரியொடு பதித வாதம்
நலியோனி சூலையொடு கெர்ப்ப சூலை
குன்ற வஷ்ட சூலையொடு குடல் வாதந்தான்
குறிய சுவவாதமெச் சுவாதந் தானே 249

சுக்கிலவாதம், சவ்விரங்கவாதம், ஊர்த்தவாதம், மெஞ்ஞானத் தம்பம், சிரகம்பவாதம், சதஸ்தம்பம், வச்சிரரூபம், கண்டகிராகம், நகாரிவாதம், பதிதவாதம், யோனிசூலை, கெர்ப்பசூலை, அஷ்ட சூலை, குடல்வாதம், அசுவவாதம்

தான்மூடு வாதமாம் வசுவா தந்தான்
தனுபீசத் தம்பமொடு தந்திர வெட்டு
வான்வாத சுரோணிதஞ்சித்து வாதசு ரோணிதம்
மகத்தான வைகிக வாதச் சுரோ ணிதம்
ஊனுதிர வாதசுரோணி தந்தன் னோடு
உறுபயித்ய வாதச்சுரோ ணிதமு மாகும்
தேன்சேட் பவாதசுரோணி தந்தான் மிக்கச்
சினத்து தாதவாதசுரோ ணிதமுங் காணே 250

பீசஸ்தம்பம், அந்திரவெட்டி, வாதசுரோணிதம், சித்துவாத சுரோணிதம், வைகிகவாதம், உதிரவாதசுரோணிதம், பைத்தியவாத சுரோணிதம், சேட்டுமவாத சுரோணிதம், உதரவாத சுரோணிதம்

காணவே குணவவதா னகமாம் வாதம்
கண்டக வதானகமாம் வாத மாகும்
தோணவே சிரக்கம்ப வதான கந்தன்
சீறியதோர் வாதத்தின் றலைநோக் காடு
பூணவே பித்தத்தின் றலைநோக் காடு
புகழான சேட்டுமத்தின் றலைநோக் காடு
சாணவே சன்னிவாதத்தின் றலைநோக் காடு
தருரத்த பித்தத்தின் றலைநோக் காடே 251

குணஅவதானகம், கண்டக அவதானம், சிரக்கம்ப அவ தானம், வாத தலைநோக்காடு, பித்ததலை நோக்காடு, சேட்டு மதலை நோக்காடு, சன்னிவாத தலைநோக்காடு, இரத்தபித்த தலைநோக்காடு

நோக்கான கிருமிகுந் தலைநோக் காடு
நுதற்சூரிய வாதமொடு சந்திர வாதம்
ஊக்கான கர்ணாவா தந்தன் னோடு
ஒருதலையி னவகாதவா தமுமே யாகும்
வாக்கான வாதகன்ன சூலை யோடு
மருவியதோர் பித்தகன்ன சூலை யாகுந்
தேக்கான சேட்பகன் மசூலை யோடு
செயமாக கிருமிகன் னசூலை தானே 252

கிருமிகந்த தலைநோக்காடு, சூரியவர்த்தம், சந்திராவர்த்தம், கர்ணாவர்த்தம், ஒருதலைவாகாதவாதம், வாதகன்னசூலை, பித்தகன்னசூலை, சேத்துமகன்னசூலை, கிருமிகன்னசூலை

தானான தந்தவாயு வின்றன் னோடு
தாக்கான வாதந்தா னெண்ப தாகும்
ஆனான வறன்றனையே மதியா மாந்தர்
அகதி பரதேசியர்கட் கன்ன மீயார்

கோனான குருமொழியை மறந்த பேர்கள்
கொலைகளவு பொய்காமங் குறித்த பேர்க்கு
ஊனான சடந்தன்னில் வாதம் வந்து
உற்பவிக்கும் வேதத்தி னுண்மை தானே 253

மேற்சொன்ன வாதங்களுடன் தந்தவாயும் சேர்த்து வாதநோய்களின் எண்ணிக்கை எண்பதாகும். அறத்தைப் போற்றாதவர்கள், அகதி பரதேசிகளுக்கு உணவு இட மறுத்தோர், குருவின் வாக்கை மறந்தவர்கள், கொலை, களவு, பொய், காமம் ஆகிய துர்க்குணங்களை உடையவர்களுக்கு உடலில் வாத நோய்கள் உற்பத்தியாகும். இது வேதத்தில் கூறப்பட்டுள்ள உண்மையாகும்.

வாதஸ்தம்பம்

உற்பவிக்கும் வாதமது எழுந்து பொங்கி
உயர்காலின் புறவடியைக் குடைந்து பற்றி
தெற்பவிக்கும் வீக்கமாய்ச் செழும்ப லுண்டாய்த்
தேகமெங்கும் நோவாகித் திமிரு மாகி
விற்புவிக்கும் வில்லுபோல வித்ன மாகி
மிடுக்கான மாந்தனைப்போல் விதன மாகி
பற்பவிக்கும் பரன்றனையே நினையா மூடர்
படுகின்ற வாதஸ்தம் பமுமாம் பாரே 254

வாதஸ்தம்ப நோயில் வாதக்குற்றம் அதிகமாகி காலின் புறவடிகள் குடைந்து, வீக்கத்துடன் பளபளத்துக் காணப்படும். தேகம் எங்கும் உடல் நொந்து திமிருண்டாம். வில்போல வளையவைக்கும். நேர்கொண்டு நடக்கும் மனிதர்களை குறுகி நடக்கச் செய்யும். பராபரத்தை நினைக்காத மாந்தர்களுக்கு இந்நோய் உண்டாகும்.

வாதகர்ஷணம்

பார்க்கின்ற பாதவுள்ள டியிற் சாணி
பதித்து வைத்ததுபோலப் பார மெங்கும்
கோர்க்கின்ற குதிநரம்புங் கால்க ளெங்கும்
கொடிதான பாரமாய்த்தி மிர்ப்புமுண் டாகி
வார்க்கின்ற வார்த்தைகள்தான் மிகவே செய்து
வாறுகினி நிமிருகினும் வசங்கொ டாமல்
ஏர்க்கின்ற காலுளைக்கும் வாதகர் ஷணம்
ஈதலற மில்லாதார்க் கெய்துங் காணே 255

பாதத்தின் அடியில் சாணியை அப்பியதுபோல இருக்கும். குதிநரம்பு, கால்கள் எல்லாம் கனத்து திமிர்த்துப் போகும். அதிகமாக புலம்ப வைக்கும். குனியவும், நிமிரவும் முடியாது. காலுளையும். இத்தகைய குணங்கள் வாத கர்ஷணத்தில் காணப்படும்.

கரஸ்தம்பவாதம்

எய்தியே விரிவுதனி லிரண்டு காலும்
இசைந்த வுள்ளடிதனி லுமெரிந்து நோவாம்
ஐதியே யக்கினியில் வைத்தாற் போல
அங்கமெல்லா மிகவெளுத்து லர்த்தி யாகும்
பொய்தியே புரைதனிலே புழுக்க ளூர்தல்
போகவே மிகவூர்ந்து நடைகொ டாது
கைதியே வாயுலர்வுற் றுடல் கனக்கும்
கணக்கான கரஸ்தம்பங் கருதிப் பாரே 256

இரண்டு கால்களிலும், உள்ளங்கால்களும் அக்கினியில் வைத்ததுபோல எரியும். உடல் மிகவும் வெளுத்து உலர்ந்து போகும். புரையோடிய புண்களில் புழுக்கள் வளரும். நடை கெடும். வாய் உலர்ந்து உடல் கனத்துப் போகும். இவைகளே கரஸ்தம்ப வாதத்தின் குணங்களாகும்.

தலஸ்தம்பம்

கருதியே மிகக் கனத்து முள்ளங் காலைக்
கனக்கவே குடைந்துநொந்து கருகிக் காணும்
வருதியே வணக்கஞ் சற்றிலா மலேற
வலித்துமே மேனோக்கி வருத்தங் காணும்
சருதியே சடமுலர்ந்து மேல்மூச் சுண்டாய்த்
தாகமா யுடம்புலர்ந்து தளர்ந்து காணும்
கருதியே கடுவுப்புபுளிப்பு தன்னாற்
கன வாதங் கோபித்தேதல ஸ்தம்பங் காணே 257

உள்ளங்கால் கனத்து குடைந்து நொந்து கறுத்துக்காணும். அவ்விடத்திலிருந்து மேல்நோக்கி வலியேறும். உடல் இளைத்து மேல்மூச்சுண்டாகும். தாகம் எடுத்து உடல் உலரும். தளர்ந்து போகும். அதிக உப்பு புளிப்பு ஆகியவை அதிகமாவதால் தலஸ்தம்பவாதம் காணும்.

பூசுவாதம்

தம்பமா மலத்துவா ரந்த னைத்தான்
　　தைத்த தோரம்புபோற் குடைந்து நொந்து
உம்பமா முள்ளடியி னளவாய்ப் பற்றி
　　உறுதியாய் மிகநொந்து குடைச்சல் காணும்
நம்பனார் பதம்போற்றா நரர்கள் தன்னை
　　நணுகியே யுறுக்குலைந்து நலிக்கப் பண்ணும்
கம்பமாங் கனத்துதரம் வலியுண் டாக்கும்
　　கனத்த பூசுமா வாத மாமே 258

மலத்துவாரத்தை அம்புகொண்டு தைத்ததுபோல குடையும். காலின் உள்ளடியை பற்றி மிகவும் வலித்து குடைச்சல் காணும். சிவன் பாதத்தை வணங்காத மனிதர்களை உருக்குலைத்து நலிக்கப் பண்ணும். வயிற்றில் வலியுண்டாகும். இத்தகைய குணங்களுடை யது பூசுவாதமாகும்.

காளாஞ்சகம்

மாதமாங் கால்கையில் குரங்கி ரண்டும்
　　வகுத்து சந்து முறுக்கியே குடைந்து நொந்து
நாதமா நடைதானுந் தான்கொ டாமல்
　　நலிந்துமே முடமாகிக் கரடு கட்டிச்
சேதமாஞ் சடந்தானு மிகவெ ளுத்துத்
　　தின வோடுசிரங்குமாய்ச் சேட்ப மாகிக்
காதமா யருசியொடு மயக்க மாகும்
　　கருதியே காளாஞ்சகமாம் வாத மாமே 259

கால் கைகளின் மூட்டுகளில் முறுக்கி வலிகொடுக்கும். நடக்க முடியாது. கரடு கட்டி முடக்கும். உடல் மிகவும் வெளுத்துக் காணப்படும். சிரங்குகள் உண்டாகி கபக்குற்றம் அதிகரிக்கும். அருசியுடன் மயக்கமுண்டாகும். இத்தகைய குணங்களுடையது காளாஞ்சிக வாதமாகும்.

ஊருஸ்தம்பம்

ஆமென்ற வாதமது உள்ள டங்கி
　　அடித்து டைத்தான்குரக்கிரண் டுமளவாய் பற்றி
காமென்ற கைகாலில் விரலுஞ் சுற்றிக்
　　கனத்துமே சாணியது பொதிந்தாற் போலத்
தேமென்ற சிரந்தனிலே பார முண்டாய்த்
　　தேகமெங்கு மூதியே திமிருண் டாகும்
நாமென்ற நடக்கொணா வொடுக்க மாகி
　　நலிமூருஸ் தம்பமது நணுகுங் காணே. 260

ஊருஸ்தம்பவாத நோயில், வாதக்குற்றம் உள்ளடங்கி அடித்துடை, கெண்டைக்கால் சதை ஆகியவற்றை தொடர்ந்து கைகால், விரல்களைச்சுற்றி கனத்து, சாணிஅப்பியதுபோலதலையில் பாரமுண்டாகும். உடல் எங்கும் ஊதி திமிருண்டாகும்.

வாதகண்ணகம்

தம்பமா நடக்கும்போ துந்த ரித்தும்
தாவியே யுயரமா யெட்டும் போதும்
வம்பமாய் பள்ளத்தி லிறங்கும் போதும்
மயக்கமாய் தள்ளாடி இடைந்து வீழ்ந்தும்
வெம்பமாம் பாம்புவிஷ மேறும் போல
மிக்கான சரீரமெல்லாந் தளர்ச்சி யாகும்
சிம்பமாம் புள்ளுப்போல் பரபரப்பு காணும்
செறிவாத கண்ணகச் சிறப்பு மாமே 261

நடக்கும்பொழுதும், துள்ளி எழும்பி உயரத்தை எட்டும் பொழுதும் பள்ளங்களில் இறங்கும் பொழுதும், தள்ளாடி வீழ்வர். பாம்பு விஷம் ஏறுவதுபோல வலி ஏற்படும். உடல் தளர்ச்சியுறும். பறவைபோல பரபரப்பு காணப்படும். இத்தகைய குணங்கள் கண்ணக வாதத்திற்குரியது.

குரிசிகிரிசம்

சிறப்பான பாம்புவிஷம் போலே யேறிச்
செறிவாக இறங்கியதோர் செய்கை போலும்
துறப்பான சூரையாய ரையிற் றட்டைச்
சுழலவே செருக்கித்தான் பற்றி யங்கம்
பிறப்பான பீறியதோர் குடலைப் போலப்
பிதிர்கின் றவன்போலும் பிரமி யென்ன
முறப்பான தோலில்முள்ளு பொதிந்தாற் போல
முயன்றிடுங்காண் குரிசிகிரிச மூர்க்கந் தானே 262

பாம்பு விஷம் ஏறுவதுபோல் இடுப்பில் தட்டினைச்சுழற்றிச் செருகியதுபோல் வலிக்கும். குடலைப்போல வளைந்து பிதிர்த்து நெளிவர். தோலில் முள்ளால் குத்தியதுபோல் வலிக்கும். இத்தகைய குணங்கள் குரிசிகிரிசனத்தின் குணமாகும்.

நரித்தலைவாதம்

மூர்க்கமா முயன்றுமுழங் கால்தான் வீங்கி
முதிர்ந்து ரத்தமுந்திரண்டு முயற்சி யாகி
நீக்கமாய் நின்றிடவொ ணாமற் றானும்
நிமிர்ந்திடு கில்சந்துதான் முடக்கொ ணாமல்
தீர்க்கமாய்த் துண்டித்து மிகச்சிக் கென்று
செழுமை நரித்தலைபோல மிகவே வீங்கி
நார்க்கமாய் நாடியுமே படப டக்கும்
நரித்தலையின் வாதமென்றே நவில லாமே 263

நரித்தலை வாதத்தில் முழங்கால் வீங்கி, இரத்தம் திரண்டு முதிர்ந்திருக்கும். நிற்க முடியாது. நிமிர்ந்து நின்றால் மீண்டும் மூட்டுப் பொருத்துக்களை மடக்குவதற்கு சிரமமேற்படும். கால்முட்டு துண்டிக்கப்பட்டது போல் வலிக்கும். நரித்தலை போல வீங்கி பளபளப்புடன் காணப்படும். நாடிகள் படபடத்துக் காணப்படும்.

கும்பவாதம்

நவிலவே தோள்மீதுங் கரத்தின் மீதும்
நலிந்து மெத்தவாகி யேநோவுண் டாகும்
கவிலவே கன்னமொடு நயனந் தானும்
கடுத்துமே விருவிருப்பு மெரிவுங் காணும்
துவிலவே துடிப்பாகுஞ் சிரசு தன்னிற்
சுழற்றியே நாபிக்கீழ் வலியு முண்டாம்
அவிலவே யடிநாக்கி லழன்று காணும்
அலருமே வருகும்ப வாதந் தானே. 264

கும்பவாதத்தின் குணங்களைக் கேட்பீராக. இவ்வகையில் தோளிலும், கையிலும் வலியுண்டாகும். கன்னம், மற்றும் கண்களும் கழுத்து விருவிறுப்பு கொடுக்கும். எரியும். தலையை சுழற்றும். நாபிக்குக் கீழே வலியுண்டாகும். அடிநாக்கில் அழற்சி தோன்றும்.

மலைத்தகம்பம்

கும்பமாங் கையின்மணிக் கட்டு தன்னிற்
குவிந்தரையிற் பொசதைபோ லுரத்துக் காணும்
தும்பமா மங்கங்கள் துடிப்ப தாகும்
துவண்டுமே கால்கையு நடுக்க மாகும்

அம்பமா மரைக்குக்கீழ் திமிருண் டாகும்
அதரமே மிகக்கறுத்து வெடிப்புண் டாகும்
வம்பமாம் வாயுத்தான் பரியு நாற்றம்
வருமலைத் தகம்பத்தின் மார்க்க மாமே 265

மலைத்தகம்ப வாதத்தில் கையின் மணிக்கட்டிலும், இடுப்பிலும் மதமதர்த்துக் காணப்படும். அங்கங்கள் துடிக்கும். கால் கையும் நடுக்கமுண்டாகும். இடுப்புக்குக் கீழே திமிருண்டாகும். உதடு மிகவும் கறுத்து வெடிப்புண்டாகும். அபானத்திலிருந்து வாயு நாற்றத்துடன் பிரியும்.

பாணிக்கம்ப வாதம்

மார்க்கமாய் வாயுவுவாய் மெய்நி றைந்து
வயிறுதனிற் பசியிலா தூணு மற்று
நார்க்கமாய் ஞாலத்து நடக்கை யற்று
நடுக்கமாங் கையிரண் டுந் திமிரு முண்டாம்
ஊர்க்கமா யுறக்கமில்லா துணர்ச்சி யற்று
உதறியே சரீரமெங்கு முலர்ந்து காணும்
பார்க்கமாய் வாய்விட்டு அலத்த லாகும்
பாணிக்கம்ப வாதத்தின் பாங்கு தானே 266

பாணிக்கம்ப வாதத்தின் குணத்தைக் கேட்பாயாக. வாய்வு உடலில் நிறைந்து பசியில்லாது, உணவு வேண்டாது, நடை குறையும். கையிரண்டும் திமிருண்டாகும். உறக்கம் இருக்காது உணர்ச்சியற்று சரீரம் உதறும் சரீரம் உலர்ந்து காணப்படும் வாய்விட்டு புலம்புவர்.

கூனிவாதம்

பாங்கான மலபாண்டப் பையிற் றானும்
பண்பாகத் துடங்கியே மலத்து வாரம்
நீங்காம லடக்கியே நோவு மாகி
நினைவில்லாச் சத்தியொடு மயக்க மாகித்
தேங்கான தேகமெங்கும் வலியு மாகிச்
சீதளமாய்க் குளிர்ந்துமே காணுங் கண்டாய்
கோங்கான கோழிப்பே னூர்தல் போலும்
குறிகா ணுங்கூனியாம் வாதந் தானே 267

மலக்குடலில் துவங்கி மலத்துவாரம் வரை தாங்க முடியாத வலியுண்டாகி, வாந்தியுடன் மயக்கமும் ஏற்படும். தேகம் எங்கும் வலியுண்டாகும். உடல் சீதளமாய்க் குளிர்ந்து காணப்படும்.

கோழிப்பேன் ஊர்தல் போல ஊரும். இதுவே கூனிவாதத்தின் குணங்கள் ஆகும்.

ஆகுனிவாதம்

கூனியே தேகமெங்கும் குற்ற லுண்டாய்க்
குளிர்கு ளிர்ந்தேயிருமி யேவாய் நீரூறி
ஆனியே யங்கமெல்லா மசைத லாகி
அடிக்க டிக்குவியர்வை தானதி கமாகி
மேனியெல் லாங்குறுகி யேஊத லுண்டாய்
வெளுக்கு மேசரீரந்தான் வீக்க மாகும்
பானியே அடிக்க டிக்கு வருந்திக் கேட்கும்
பண்பான ஆகுனியின் வாதந் தானே 268

உடல் எங்கும் குற்றல் எடுக்கும். குளிர்ந்து இருமலுண் டாகும். வாயில் நீருறும். அங்கமெல்லாம் அடிக்கடி அசைவு கொடுத்து அதிக வியர்வை உண்டாகும். மேனி குறுகி ஊதல் காணப்படும். சரீரம் வெளுக்கும். இத்தகைய குணங்கள் ஆகுனி வாதத்துக் குரியவை ஆகும்.

அசேவகம்

வாதமே கோபித்துச் சரீரந் தன்னில்
வயிறு விலாபக்கங்கள் வாடி யோடி
நாதமே யுட்புகுந்து இருபத் தஞ்சு
நலமறிய ஈரலைத்தான் பற்றி நொந்து
காதமே கைகாலு மோய்ந்து போகும்
கனக்க வேநோவாகிச் சுருள நொந்து
ஆதமே யங்கமெல்லா மசைத லாகும்
அசேவக மாம்வாதத்தி னாண்மை தானே 269

வாதக்குற்றம் அதிகரித்து உடலில் வயிறு, விலாபக்கம் ஆகியவற்றில் ஆடி ஒடி வலிக்கும். ஈரலைப் பற்றி நோவுண் டாகும். கைகாலும் ஒய்ந்து போகும்.

அதிக வலியுண்டாகி சுருண்டு விடுவர். அங்கம் அசைவு கொடுக்கும். இத்தகைய குணங்கள் அசேவக வாதத்தின் குணங்களாகும்.

வாத உபகதம்

ஆண்மையாங் காலோடுகை யுஞ்சந் துமே
அங்கமெல்லா மிகத்திமிர்த்துச் சாணி தானும்
பூண்மையாய்ப் பூசினது போலே காணும்
புரண்டுதான் விறுவிறுத்துப் புளக மாகிப்
பாண்மையாங் காலசையு முஷ்ண மாகிப்
பசித்துமே மிகநாணி நடை கொடாது
வாண்மையாம் வாட்டதுறு மயக்க மாகும்
வாத வுப கதந்தன்னை வகுத்த வாறே 270

கால், கை, சந்துகள் மட்டுமல்லாமல் உடல் அனைத்தும் திமிர்த்து சாணி பூசியதுபோல கனத்துக் காணப்படும். உடல் விறுவிறுத்து புளகமாகும். காலசைவு தரும். உடல் உஷ்ணமாகி பசித்து மிகவும் நாணுவர். நடக்க முடியாது. மயக்கம் உண்டாகும். இத்தகைய குணங்களை உடையது வாதஉபகதம் ஆகும்.

நெற்றிசூலை

வாறான நயனந்தான் புருவ மற்றை
மத்தியத்திற் குடைந்துமே மூக்குத் தண்டு
கூறான குரலினைத்தான் பற்றி நொந்து
குடைந்து மேகையோடு கால்கள் ரெண்டும்
ஆறான அங்கமெல்லாங் கடுப் புண் டாகும்
அழுகு ரலாய்நித்திரையு மயக்க மாகும்
தேறான சிரசுதனில் குற்ற லுண்டாய்ச்
சிறுநெற்றிச் சூலையின்றன் செய்கை தானே 271

விழிகளிலும் புருவ மத்தியிலும், குடைந்து மூக்குத் தண்டினைப் பற்றி குரலை மாற்றுமளவுக்கு நோகும். கைகால்கள் குடைந்து அங்கமெல்லாம் கடுப்புண்டாகும். நித்தரையும் மயக்கமும் உண்டாகும். தலையில் குத்தலெடுக்கும். இவை அனைத்தும் நெற்றிச்சூலையின் குணங்களாகும்.

கர்ணசூலை

செய்கையாஞ் செவித்துவாரந் தன்னி னின்று
சிக்கெனவே குச்சிகொண்டு குடைந்தாற் போலச்
சைகையாய் நோவுண்டாய்ச் சலிக்குஞ் சிந்தை
சலத்தின்மேல் மனதுவாய்த்து தாக முண்டாம்
வைகையாய் வயிறுதனில் மந்த முண்டாய்
மயக்கமாய் மனதுதனிற் பயமு முண்டாய்க்
கைகையாய் வாய்க்கசந்து புளிப்பு முண்டாகும்
கர்ணசூலை யின்குணத்தைக் காணுங் காலே 272

செவித்துவாரத்தில் குச்சியைக் கொண்டு குடைந்ததுபோல வலியுண்டாகும். மனம் சலிப்படையும். நீர்மேல் ஆசை கொள்ளுமளவு அதிக தாகமுண்டாகும். வயிற்றில் மந்தமேற்படும். வாய் கசந்து புளிப்புச் சுவையுண்டாகும். இவையனைத்தும் கர்ணசூலைமின் குணமாகும்.

செவிபடுவாய்

காணுமே செவிதனிலே சத்தம் போலக்
கடலிரைச்சல் போலவே முழக்கங் காணும்
நாணவே செவியுறுதல் நரம்பைப் பற்றி
நனைவுகளி மண் கொண்டு அடைத்தாற் போலத்
தோணவே தொண்டைதனிற் கபந்தி ரண்டு
சுப்பிரமாய்க் கட்டியா யிறுகி வீழும்
ஊணவே பிறர்சத்தம் செவியிற் கேளா
உண்மையாஞ் செவிபடுவா யுண்மை தானே 273

செவியில் கடலிரைச்சல்போல முழக்கவோசை கேட்டுக் கொண்டே இருக்கும். செவிநரம்பைப் பற்றி காது மடல்களில் களிமண்ணைக் கொண்டு அடைத்ததுபோல இருக்கும். தொண்டையில் கபம் திரண்டு கட்டியாக இறுகிவிடும். பிறருடைய குரல் காதில் கேட்காது. இத்தகைய குணங்கள் இருப்பின் அது செவிபடுவாயாகும்.

பக்கவாதம்

உண்மையா யுடம்பெல்லாம் வாயு வாகி
உயர்கின்ற நாடியது அசைவு மன்றி
கண்மையாய்க் காயமீதி னிலே யேறிக்
கசகியே யிழிந்துமே வலித்து காணும்
பண்மையாய்ப் பக்கத்தி லிசுவு முண்டாய்ப்
பாரித்துப் பணைக்கையுங் காலுங் கோணும்
வெண்மையா யுடம்பெங்கும் வியர்வை காணும்
மெலிவு பக்கவாதத்தின் விபரந் தானே 274

உடலில் வாயு உண்டாகி நாடி அசைவு இல்லாது காணப்படும். உடல் எங்கும் நொந்து இழிந்து வலியுண்டாகும். வலிப்புண்டாகும். கையும் காலும் கோணும். உடல் எங்கும் வியர்வை உண்டாகும். இவை பக்கவாதத்தின் குணங்களாகும்.

பட்சவாதம்

தானான கால்கோணி செற்றாற் போலத்
தாக்கான தரைதனிலே நடக்கொ ணாது
காணான கைகளொன்றும் பிடிகொ டாது
கனமான உணர்ச்சியன் றிகைகள் சோரும்
மானான மயிர்க்கூச்சுந் திமிர்ப்பு முண்டாகும்
வாய்தானுங் கோணியே தண்ணீர் வீழும்
பேனான பித்தம்போல ழன்று காணும்
பிறிவு பட்சவாதத்தின் பெற்றி யாமே	275

பட்சவாதத்தில் கால் கோணி இறந்தாற்போலாகிவிடும். தரையில் நடக்க முடியாது. கைகளால் பிடிக்க முடியாது. உணர்ச்சிகள் இன்றி கைகள் சோர்ந்து போகும். மயிர்க்கூச்சமும் திமிர்ப்புமுண்டாகும். வாய் கோணி எச்சில் ஒழுகும். உடல் அழற்சியுற்று காணப்படும்.

பேய்வாதம்

பெற்றியாம் பெருமையாங் காலுங் கையும்
பெருவயிறு நெஞ்சோடு விரலு மூக்கும்
எற்றியா மெறிகழுத்து மெங்கும் பற்றி
ஏக்கமாய் நொந்துவுடம் பெங்கும் வீங்கி
உற்றியா மூணவேநி மிர்த்தெ டுத்து
உறுதியாய் பிடிக்கவு மொணாம லாகும்
சத்தியாய் வாய்கசந்து மயக்க மாகும்
தரித்திட வொண்ணாது பேய்வாதந் தானே	276

பேய்வாதத்தில் கை, கால், வயிறு, நெஞ்சு, விரல், முக்கு ஆகியவற்றைப் பற்றி மிகவும் நொந்து உடல் எல்லாம் வீங்கி நன்கு ஊன்றி நிற்கவும், பிடிக்கவும் முடியாமல் இருக்கும். வாய் கசந்து மயக்கமுண்டாகும்.

பிராணாலய வாதம்

வாதமாய் வலித்துமே கண்கள் தானும்
வரிசையாங் கருவிழியிற் சோதி தன்னில்
ஊதமாய் முழுவெளுப் பாய்தான் மறைத்து
உக்கிரமாய்ப் பருகுது தெகிட்ட லாகும்
நாதமாய்க் கையிரண்டுங் காலும் வற்றி
நடுக்கமே யுண்டாகி நலியுந் தேகம்
வேதமாய்ச் சொன்னதுதான் தீரா தென்று
விளங்கு பிரணாலயமாம் வாதந் தானே	277

பிரணாலய வாதத்தில் கண்கள் வலிக்கும். கருவிழியின் மணியானது வெளுப்பாக மாறி மறைந்து போகும். பருகும் அனைத்துப் பொருட்களும் தெகிட்டலாகும். கையிரண்டும் கால்கள் இரண்டும் வற்றி ஒடுக்கம் உண்டாகி உடல் நலியும். இது தீராது.

சலத் தம்பம்

தானென்ற மலத்துவா ரத்தி னோடு
தாக்கியே செலத்துவா ரந்தொ டங்கி
வேனென்ற நீரிறங்கும் போது தானும்
வெடிவுண்ணில் நோவுபோற் கிலேசம் பண்ணும்
வானென்ற மலங்கடுத்துச் சிறுகி வீழும்
மயிர்க்கூச் சுண்டாகியே வருத்தம் பண்ணும்
தேனென்ற தித்திப்புப் போல்நீ ராகும்
சிறுகிவிழுஞ் சலத்தம்பச் செய்கை யாமே 278

மலத்துவாரத்துடன் நீர்த்துவாரம் தொடங்கி நீரிறங்கும் பொழுது வெடித்த புண்களில் வலி உண்டாவதுபோல வலி உண்டாகும். மலம் கடுத்து சிறுத்து விழும். மயிர்க்கூச்செறியும் வருத்தம் உண்டாகும். சிறுநீர் இனிப்புச் சுவையுடன் இருக்கும். இத்தகைய குணங்கள் சலஸ்தம்ப வாதத்துக்குரியவை.

சந்துவாதம்

செய்கைதான் சந்துகளு மிகத்தி மிர்ந்து
செடமெங்கு நொந்துமே மிகவ ழற்றி
நைகையாய் நளுத்துமே மயிர்க் கூச்சிட்டு
நாணியே முன்போல நகை கொடாது
மைகைதான் மயக்கமொடு வாய்நீ ருறும்
வரண் டிடுமே நாடுதான டிக்க டிக்கு
கைதைதான் றரணிதனிற் றரிக் கொணாது
சஞ்சலிக் குஞ்சந்துவாம் வாதங் கேளே 279

சந்துவாதத்தில் உடலில் உள்ள கைகால் முட்டுகள் அனைத்தும் திமிர்த்து நொந்துபோகும். அழற்சியுண்டாகி மயிர்க்கூச்செறியும். மயக்கத்துடன் வாய் நீருறும், நாக்கு வரளும். கைகளை ஊன முடியாது.

செகனவாதம்

கேளுமே கழுத்தின்கீ ழரைக்கு மேலும்
கெடியான கரமிரண்டு மிகவே நொந்து
வாளுமே சரீரமெல்லாங் கனத்தி ருக்கும்
வாலிபர்க்கு மனங்கண்ணு மயக்க மாகும்

ஏளுமே யிரண்டுகண்ணு மெரிச்ச லுண்டாம்
ஏற்றமாய் மலந்தானு மிறுகிக் காணும்
தேளுமே கொட்டினது போற்க டுக்கும்
செகன வாதத்தினிட தீர்க்கந் தானே 280

கழுத்துக்குக் கீழும், இடுப்புக்கு மேலும் கரங்கள் இரண்டும் நொந்து உடல் எல்லாம் கனத்துக் காணப்படும். இரண்டு கண்களும் எரிச்சலுண்டாகும். மலம் இறுகிக் காணப்படும். தேள் கொட்டியதுபோல கடுக்கும். இவை அனைத்தும் செகன வாதத்தின் குறிகுணங்களாகும்.

அற்புதவாதம்

தீர்க்கமாய் ஸ்திரீசங்கம் பண்ணும் போதும்
திடுக்கென வேவார்த்தை கோபித்த போதும்
ஊர்க்கமா யுறத்துதான் பாடும் போதும்
உண்ணும வல்கச்சாயம் பாக்கு தானும்
ஆர்க்கமாய்த் தட்டியே கடித்த போதும்
அழகான முகந்தன்னில் வாயுகோ பித்துத்
தார்க்கமாய் மிகச்சிதறி வாயுங் கோணும்
சாங்கமா யற்பு தவாதந்தா னாமே 281

பெண்போகத்தின்போதும் திடுக்கென்று வார்த்தைகள் கேட்கும்போதும் கோபித்து வார்த்தைகள் சொல்லும்போதும் உரத்து அதிக சத்தத்துடன் பாடும்பொழுதும் அவல் உண்ணும்போது அல்லது பாக்கினை கடிக்கும்போதும் முகத்தில் வாயு அதிகரித்து வாய் கோணிப்போகும். இத்தகைய குணங்கள் அற்புத வாதத்தின் குணங்களாகும்.

உரகவாதம்

அற்புதமாய் நோவாகிப் புருவங் காது
அங்கத்திற் பாதிதான் வலித்தெப் போதும்
தற்புதமாய்க் கோணியே தலையும் வாயும்
தாவவே மிகஒடுக்கிக் குளிர்ந்து கூசும்
விற்புதமாய் விழிகளுந்தான் மிமைப் புறாது
மெலிவாகிச் சரீரமெல்லாம் வியர்வை யாகும்
அற்புதமாய் வாய்நீருமி கவே யூறும்
புகலுமோ ருரகவா தத்தின் பேரே 282

உரகவாதத்தில் புருவம், காது, உடலில் ஒரு பாதி மட்டும் வலித்து காணும். தலையும் வாயும் கோணும். உடல் மிகவும் நடுங்கி குளிரும். விழிகள் இமைக்காது. உடலில் எங்கும் வியர்வை பெருகும். வாய் நீருறும்.

உரகாரிவாதம்

பேரான நெஞ்சுடனே குரலு நொந்து
பெருமீரல் தன்னிலே நோக்கி வாயு
ஆரான வன்னத்தை இறங்கொட் டாமல்
ஆர்வ சனங்கொள்ளா மலுதரம் விம்மிப்
பாரான வாயுதான் மிகவு மூறிப்
பாரமாய் நெஞ்சடைத்துப் பசந்தி ருக்கும்
கூரான மேனியுமே கூச்ச லுண்டாம்
கொடிதான வுரகாரி வாத மாமே 283

நெஞ்சும் குரலும் நோகும். ஈரலை வாயு பற்றும். உணவு செல்லாது. வயிறு மிகவும் பொருமிவிடும். வாயு அதிகம் உண்டாகி மிகவும் விம்மிக் காணப்படும். நெஞ்சு அடைத்துப் போகும். நெஞ்சில் பாரமேற்றியது போலிருக்கும். உடலில் கூச்சம் உண்டாகும். இத்தகைய குணங்கள் இருப்பின் அது உரகாரி வாதம் ஆகும்.

ஆசுவதம்பவாதம்

வாதமா யுடல்வெளுத்து வடிவெல் லாநோம்
மயக்கமோ டிருமலா மீளை யுண்டாம்
நேதமாய் நெஞ்சடைத்துப் பொறி கலங்கும்
நெருப்பாக உடல்காணு நெடுமூச் சுண்டாம்
கோதுதான் மயக்கத்தில் மருத்தி னீட்டால்
குளிர்ச்சியாய்க் கோபிக்குங் கூச்ச லுண்டாம்
பாதந்தான் றிமிருண்டாய் முட்போ லாகும்
பருத்த அசுவதம்பம் பகர லாமே 284

ஆசுவதம்ப வாதத்தில் உடல் வெளுத்து உடல் எங்கும் நோகும். மயக்கத்துடன் இருமல் ஈளை உண்டாகும். நெஞ்சடைத்து பொறி கலங்கும். உடல் நெருப்பாகக் கொதிக்கும். நெடிய மூச்சுண்டாகும். மயக்கத்திலுள்ளபோது மருந்தீடு காரணமாக கோபித்து கூச்சலுண்டாகும். பாதத்தில் திமிர் உண்டாகி முட்கள் குத்துவது போலிருக்கும்.

பாசஸ்தம்பம்

பகரவே வாதமது கோபித் தப்போ
பண்பாக ஸ்திரீகோஷ் டியதுதான் செய்யில்
நகரவே வெகுதூர வழிந டக்கில்
நளிதான காற்றுமேப னிமேற் பட்டால்
மிகரவே காய்கள்கனி கிழங்கு தன்னை
மிகவருந் திமீறியே தயிர்தான் கொண்டால்
முகரவே முதுகெலும்பை முறுக்கி நொந்து
முழங்காலுங் கணைக்காலுங் கடுப்புண் டாமே 285

வாதக்குற்றம் அதிகரித்து, பெண்போகம் செய்யும்போதும், வெகுதூரம் நடக்கும்போதும், குளிர்காற்று, பனிக்காற்று மேலே பட்டால் காய்கனிகள், கிழங்குகள் அதிகமுண்டு அத்துடன் தயிரும் கொண்டால் முதுகெலும்பை முறுக்கி நொந்து முழங்காலும், கணுக்காலும் கடுப்பு காணும்.

கடுத்துமே சரீரமெங்குஞ் சோம்ப லாகிக்
கண் மயங்கிப் புகைந்துமே கூசிக் காணும்
வடுத்துமே சரீரமெல்லா மிகவும் வற்றி
வாய்வரண்டு புளித்தேங்காய் மந்த மாகி
நடித்துமே நாடியெங்கும் படப டத்து
நரம்போடு சதைகளெல்லா மிகுத்த மாகும்
அடுத்துமே இவ்வாத மசாத்திய மாகும்
அடுபாசத் தம்பமென்றே யறைய லாமே 286

சரீரம் எங்கும் சோம்பலாகும். கண் மயங்கி புகைச்சல் உண்டாகி கூசும். சரீரம் எல்லாம் மிகவும் வற்றி வாய் வரண்டு புளித்துப் போகும். வயிறு மந்தமாகி, நாடி படபடத்துக் காணப்படும். நரம்புடன் தசைகள் எல்லாம் வலிக்கும். இத்தகைய குணங்கள் இருப்பின் அது பாசஸ்தம்பம் ஆகும். இது அசாத்திய நோயாகும்.

நேத்ரபவுத்ரம்

அறையவே நெற்றியொடு புருவங் காது
அதட்டியே நோவாகிக் குடைச்ச லாகும்
நிறையவே உடம்பெங்கு மூத லாகும்
நிற்கவுந் தானொட்டாமல் தள்ளிப் போடும்
குறையவே தேகமெங்குங் குடைச்ச லாகும்
குருவியர்வை மயக்கமொடு கூச்ச லுண்டாம்
மறையவே நேத்ரபவுத் திரமு மாகும்
மறைசொன் னபடியானும் வழுத்தி னேனே 287

நெற்றி புருவம் காது ஆகியன குடைச்சல் எடுக்கும். உடம்பு எங்கும் ஊதிப் போகும். நிற்க முடியாமல் தள்ளாட வைக்கும். சிறுவியர்வை உண்டாகும். மயக்கத்துடன் கூச்சலும் உண்டாகும். இத்தகைய குணங்கள் இருப்பின் அது நேத்திர பவுத்திரம் ஆகும்.

தெண்டவாதம்

வழுத்தவே மூலாதாரத் தைப்பற் றியே
மருவியே மேலேறி முதுகுண் டாதல்
விழுத்தவே சிரசில்வந்து வியர்வு மாகி
விகுவாக நோவாகி மேனி கன்னி

யழுத்தவே உடம்பெங்கும் பஞ்சு போலாம்
பாங்கான மலசலமு மஞ்ச ளாகும்
குழுத்தவே தெண்டமாம் வாதந் தன்னைக்
கூறினோங் குணமெல்லாங் கூர்ந்து பாரே 288

மூலாதாரத்தைப் பற்றி ஏறி முதுகுவழியே சிரசுக்கு வந்து வியர்வை உண்டாகிய நோவும். மேனி கன்னிப் போகும். உடல் பஞ்சு போலாகும். மலம், சிறுநீர் ஆகியன மஞ்சளாகும். இத்தகைய குணங்கள் தெண்டவாதத்தில் காணப்படும்.

கூர்ந்திட்ட மலசலங்கள் துரித மானால்
கொண்டடக்கிப் பின்புதான் கொடிதாய் தள்ளி
ஊர்ந்திட்ட சரீரத்தி லுதர மீறி
உலத்தேய்த்துத் தலையதனி லெண்ணெய் வார்க்கில்
வார்த்திட்ட வழிநடக்கில் மெத்த வும்தான்
வாதந்தானுற் பவித்துந டைகொ டாமல்
நார்த்திட்ட நரம்போடு எலும்பிற் சூழ்ந்து
நணுகியே ஓடிநெஞ்சி லேறுந் தானே 289

மலசலத்தை அடக்கிப் பின்பு வெளிப்போகச் செய்வதால் உடலில் வாயு மீறும். தலைக்குத் தேய்த்து குளித்த பின்பு எண்ணெய் தேய்த்து பின்பு வெகுதூரம் நடந்தால் வாதம் உற்பத்தியாகும். அந்த வாதமானது நரம்புடன் எலும்பில் சூழ்ந்து பிறகு ஓடி நெஞ்சில் ஏறும்.

அஷ்டதந்திர வாதம்

ஏறியே உணர்ச்சியற்று உள்ளுக் குள்ளே
இருந்தால் தானழைத்தாற் போல்சத்த முண்டாம்
காறியே கண்ணீரு முண்ட வாய்நீர்
கசந்துமே முன்போல விழித்தி டாமல்
பாறியே பற்கிட்டி மூச்சு மற்றுப்
பல்காலும் பிதற்றியே பிணத்தைப் போலச்
சீறியே அடிக்கடிக்குச் சேட்ப முண்டாம்
செருக்கு மஷ்டதந்திரத் தின்சேதி தானே 290

குரலானது உள்ளிருந்து அழைப்பதுபோல் ஒலி குறைநது காணப்படும். அதிக கண்ணீருண்டாகும். வாய்நீர் கசக்கும். பற் கிட்டிப் போகும். கண்களை அதிகம் திறக்க முடியாது.

பிணத்தைப் போல மூச்சின்றி இருப்பர். அடிக்கடி சிலேத்துமம் உண்டாகும். இவையனைத்தும் அஷ்ட தந்திரத்தின் குணங்களாகும்.

வசனாவாதம்

தானான திரேகமெங்குந் தான்வ லித்துச்
சங்கற்ப விகற்பமாய்க் கிலேச மாகி
பானான பலகுணங்கள் மிகவே யாகும்
பரமசிவ னடியார்கட் கணுகி டாது
தூனான துஷ்டரைப் பற்றி நிற்கும்
துடிப்புண் டாய்ச்சோரவே சொருகி வீழும்
கானான காயமது கதித்துக் காணும்
கனவசனா வாயுவின்றன் கணக்குத் தானே 291

உடல் எங்கும் வலிக்கும். உடல் கெட்டு பல துர்க்குணங் களைக் காட்டும். பரமசிவனின் பக்தர்களுக்கு இந்நோய் அணுகாது. துஷ்டருக்கே வந்து சேரும். உடலில் துடிப்புண்டாகி வீழ்வர். உடல் கதித்துக் காணப்படும். இத்தகைய குணங்கள் வசனாவாயுவின் குணங்கள் ஆகும்.

மகவாதம்

கணக்காகக் கதித்துமேல் வயிற்றைப் பற்றிக்
கருகியே பொருமித்தான் வலித்து வீங்கி
கிணக்காகக் கீழ்முதுகில் விதன மாகிக்
கிஞ்சுக மாய்விதன வூணற்ப மாக்கும்
வணக்காக மலசலந்தான் பலகா லுண்டாம்
வருத்தமாய் சடந்தானும் அழன்று போகும்
மணக்காக மேனியுமோ மஞ்ச ளாகும்
மகவாத குணமென்றே மருவ லாமே 292

மேல்வயிற்றைப் பற்றி கருகி பொருமி வலித்து வீங்கும். கீழ்முதுகில் வலித்து உணவை உண்ண முடியாமல் உணவின் அளவு குறைந்துபோகும். மலமும் சிறுநீரும் பலமுறை செல்லும். உடல் அழன்று போகும். மேனி மஞ்சள் நிறமாகிப் போகும். இவை மகவாதத்தின் குணங்களாகும்.

மிருத்துவாதம்

மருவலாய் முடியவாய் தனிலோ துங்கி
மண்டியே மனோக்கிய பான வாய்வில்
எருவலா யேறிவாயால் நுரைப் பட்டு
இறுகியே தேகமெல்லாம் வலிக்குங் கண்டாய்
துருவலாய் மலந்தள்ளுஞ் சோபை யாகும்
சுருக்கென்று கால்கையுஞ் சோர்ந்து போகும்
பருவலாம் மனதுதான் பயமு முண்டாய்ப்
பாரமிருத் துவாதத்தின் பண்பு தானே 293

மலவாய் மூடியதுபோல் அபானவாயு மேலேறி மலமும் அடைபட்டு மேலேறும். வாயில் நுரை தள்ளி தேகம் எல்லாம் வலிக்கும். சிறிது சிறிதாக துருவல்போல மலத்தைத் தள்ளும். சோபை உண்டாகும். சுருக்கென்று கால்கையும் சோர்ந்து போகும். மனதில் பயம் உண்டாகும். இவை மிருத்துவாதத்தின் குணங்களாகும்.

உதரவாதம்

பண்பான குட்சியைத்தான் பொருமி நொந்து
பருத்துமே மிணறுதான் கனத்து மெத்த
எண்பான விக்கலுமே இளைப் புண்டாகி
இணைவிழி நீர்பாய்ந்தங்க மிளைப்பு மாகி
மண்பான வாதமது நிரம்பி யேறி
வாயினான் மலந்தானும் புறப்பட் டாற்போல்
விண்பான நீரதுவும் விடுத்து நிற்கும்
மிகுமுத ரவாதமென்றே விளம்ப லாமே 294

வயிற்றைப் பொருமி நொந்து தொண்டை கனத்து விக்கலுடன் இளைப்பு உண்டாக்கி விழியில் நீர்பாய்ந்து உடல் இளைக்கும். வாதம் நிரம்பியேறி வாயின் வழியே மலம் வருவது போன்ற உணர்விருக்கம். நீரும் சரிவர செல்லாது. இவை உதரவாத குணங்கள் என்று கூறலாம்.

மூத்திர உதிரவாதம்

விளம்பவே விடுமூத்ரம் வாயிற் றோன்றும்
மீறியே நெஞ்சுதனி லழன்று நோகும்
நிளம்பவே நெஞ்சுதனில் வீக்க முண்டாம்
நித்திரையில் லாமலே வெதும்ப லாகும்
வளம்பவே வயிறுதனில் நோவு மாகும்
மகத்தான விக்கலுட னிரும லுண்டாம்
அளம்பவே அடிவயிறு கனத்து நோகும்
அசை மூத்ர வுதிரமென்ற வாதந் தானே 295

சிறுநீர் வாயில் தோன்றுவதுபோல வாடை வீசும். நெஞ்சு அழன்று நோகும். நெஞ்சில் வீக்கமுண்டாகும். நித்திரையில்லாமல் வெதும்பல் உண்டாகும். வயிற்றில் வலி உண்டாகும். விக்கலு டன் இருமலும் உண்டாகும். அடிவயிறு கனத்துக் காணப்படும். இவை அனைத்தும் மூத்திர உதரவாதத்தின் குணங்களாகும்.

சுக்கிலவாதம்

வாதமா முடலிறுகி மிகவும் வற்றி
மலமூத் ரஞ்சிக்கியே கீழ்வீ ழாமல்
நாதமாம் நாக்கோடு மூக்கு தன்னில்
நணுக்கமா யுதிரந்தா னருவி பாயும்
சேதமாய்ச் சேட்டுமமுங் கோழை யுண்டாம்
செயலோ சுவாசமா யருசி யுண்டாம்
சூதமாய்ச் சுக்கிலந்தா ன்றுள்ளி யாகும்
துரிய சுக்லவாதத்தின் சூட்சந் தானே 296

உடல் இறுகி வற்றிப் போகும். மலம் மூத்திரம் ஆகியன கட்டி கீழே விழாது. மூக்கிலிருந்து இரத்தம் கொட்டும். கபம் அதிகமாகி கோழையுண்டாகும். அதிக சுவாசம் உண்டாகும். ருசி உண்டாகாது. சுக்கிலம் கெட்டுப்போகும். இவை சுக்கில வாதத்தின் சூட்சுமமாகும்.

சவ்விரங்கவாதம்

சூட்சமாய்த் தெய்வவுடல்தி கைத்தங் கூர்ந்து
தேகமோ வெளுத்துப்பின் கறுப்பு மாகும்
ஆட்சமா யருசியொடு வாந்தி யுண்டாம்
அடிக்கடிக்குத் தண்ணீர் தானதட்டிக் கேட்கும்
ஊட்சமாம் அன்னத்தை முன்னே காணில்
ஒக்காளந் தன்னோடுப் பசமு மாகும்
தாட்சமாய்ச் சலிப்போடு உறக்க மாகும்
சவ்விரங்க வாதமென்றே சாற்று நூலே 297

உடல் திகைத்து வெளுத்துப் பின் கறுத்துப் போகும். நாவில் சுவை தெரியாது போகும். வாந்தி உண்டாகும். அடிக்கடி தாகமெடுத்து தண்ணீர் குடிப்பர். உணவைக் கண்டாலே ஒக்காளமெடுக்கும். சலிப்புடன் அதிக உறக்கமும் உண்டாகும். இவை சவ்விரங்க வாதத்தின் குணங்களாகும்.

ஊர்த்துவ வாதம்

நூலான சுவாசந்தான் மேலே நோக்கி
நுணுக்கமா மிடையுடனே வயிறு விம்மி
வாலான வாய்தனிலே நுரையு முண்டாய்
வாய் கழுத் துமார்புமே மிகவு நொந்து
ஆலான வங்கமெல்லா மழன்று காணும்
அடித்துடைய மடிக்கையு மிகவே வற்றும்
பாலான மேனியுமே பசுமை காணும்
பருவூர்த் துவவாதமென்றே பகர லாமே 298

சுவாசம் அதிகமிருக்கும். இடையுடன் வயிறும் விம்மும். வாயில் நுரை உண்டாகும். வாய், கழுத்து, மார்பு ஆகியன மிகவும் நொந்து போகும். உடல் அங்கம் அனைத்தும் அழன்று போகும். அடித்தொடையும், அடிக்கையும் மிகவும் வற்றும். உடல் பசுமை படரும். இவை ஊர்த்துவ வாதத்தின் குணங்களாகும்.

மைஞ்ஞானத் தம்பம்

பகர்கின்ற குரலதனைப் பற்றி நொந்து
பாரமாய் வலித்துமே கீழ்நோக் கெய்தி
நிகர்கின்ற கண்ணதனை மூடிக் கொண்டு
நெருநெரென மூக்காலே சுவாசம் போகும்
திகர்கின்ற விரண்டுசெவி தன்னில் நொந்து
செழுமையாங் கொட்டாவி வாய்மூ டாமல்
மகர்கின்ற வாய்வறண்டு நெஞ்சு காயும்
மைஞ்ஞானத் தம்பமாம் வாத மாமே 299

குரல் கெட்டு பாரத்துடன் குரல்வளை நொந்து போகும். கீழ்நோக்கி வலி செல்லும். கண்களை மூடி இருக்கச் செய்யும். மூக்கில் நெருநெருவென்று அதிக சப்தத்துடன் சுவாசம் செல்லும். இரண்டு காதுகளும் நொந்து போகும். கொட்டாவி அடிக்கடி உண்டாகும். வாய் வறண்டு நெஞ்சு காயும். இவை மைஞ்ஞானத் தம்பத்தின் குணங்களாகும்.

சிரகம்பவாதம்

தம்பமாய் முதிர்கண்ட நரம்பிற் புக்கித்
தலையொடு சரீரமெல்லாந் தாக்கிப் புக்கும்
கம்பமாங் காதிரண்டும் மிகவுங் கேளா
கையோடு காலிரண்டும் வசக்கே டாகும்
நிம்பமாய் நினைவுதான் கலங்கிக் காணும்
நெடுமூச்சுங் கொட்டாவிநித் திரையு மாகும்
சிம்பமாய்த் தலைநடுக்கிக் கணப்பு முண்டாம்
சிரக்கம்ப வாதமென்றே செப்ப லாமே 300

கண்ட நரம்பிலிருந்து தலையுடன் சரீரம் எல்லாம் ஓடிச் சென்றடையும். காதுகள் சரிவர கேட்காது. கால்கள் இரண்டும் தன் தொழிலை சரிவரச் செய்ய இயலாது. நினைவு கலங்கி ஓடும். நெடுமூச்சு உண்டாகும். கொட்டாவி அடிக்கடி விட்டு அதிக உறக்கமும் உண்டாகும். தலை நடுக்கும். கணப்பு உண்டாகும். இவை சிரக்கம்ப வாதத்தின் குணங்களாகும்.

சதஸ்தம்பவாதம்

செப்பவே நடுநாக்குநு னிநாக் குந்தான்
தெறித்துமே தேள்விஷம்போற் கனாவு மாகும்
அப்பவே யடிநாக்குந் தான்து டிக்கும்
அழகான வாய்தானு திர்தல் போன்றும்
உப்பவே வுண்ணாக்கிற் கட்டு தூக்கும்
உரிசை தானில்லாம லூறும் நாக்கு
வெப்பவே விஷந்தானு மமுதம் போல
வெளியான சதஸ்தம்பம் விதியி தாமே 301

நடுநாக்கு நுனிநாக்கு ஆகியவற்றில் தேள் விஷம் கொட்டியது போல தெறிக்கும். கனவு உண்டாகும். அடிநாக்கு துடித்துக் கொண்டே இருக்கும். வாய் அதிர்வது போல் உண்ணாக்கு கட்டுதூக்கும். நாக்கு ருசி இல்லாமல் விஷமானது அமுதம்போல நாவில் ஊறும். இவை சதஸ்தம்ப வாதத்தின் குணங்களாகும்.

வச்சிரரூபம்

விதியான பிடரியைத்தான் மிகவி ழுத்து
மிகக்கண் களசைவில்லா மேலே நோக்கி
ததியான குறோக்கைபோற் சத்தம் பெற்றுத்
தலைநோவு மிகுதியாய் நடுக்க லூற்று
குதியான நரம்பிழுத்துத் திமிருண் டாகிக்
கொட்டாவி சோம்பலாய்க் கூச்ச லுண்டாய்
வதியான மலசலமுஞ் சுறுக்கி வீழும்
வச்சித ரூபந்தன்னின் வகையி தாமே 302

பிடரியை அதிகம் இழுத்துப் பிடிக்கும். கண்கள் அசைவில்லாது மேல்நோக்கி காணப்படும். அதிகம் குறட்டை சப்தம் கேட்கும். தலைவலி உண்டாகும். அதிக நடுக்கம் ஏற்படும். நரம்பிழுத்துக் கொள்ளும். திமிர்த்துப் போகும். சோம்பலுடன் கொட்டாவி உண்டாகும். மலம், சிறுநீர் ஆகியன மிகவும் சுருங்கி கீழே விழும். இவை அனைத்தும் வச்சிரரூபத்தின் செய்கைகள் ஆகும்.

கண்டகிராகம்

வகையான குரலதனைப் பற்றி நொந்து
மாரோடு பிடரியினில் வலியுண் டாகி
நுகரான சரீரமெல்லாம் நொந்த ழற்றி
நுணுக்கமாய்ச் சுவாசமது புறப்ப டாமல்

முகையான நாவாதே மூச்சு மாறி
முகத்திலே வியர்வையாகி விலாநோ வுண்டாம்
பகையான வன்னத்தைப் பருகொட் டாது
பரியகண்ட கிரகத்தின் பண்பு தானே 303

குரல் ஓசையை கெடுத்து குரல்வளை நொந்து போகும். மார்போடு பிடரியில் வலியுண்டாகி சரீரம் எல்லாம் நொந்து அழற்சியுறும். சுவாசம் ஒழுங்காக நடைபெறாது. மூச்சு மாறி மாறி ஓடும். முகத்தில் வியர்வை தோன்றும். விலாவில் வலி ஏற்படும். உணவில் விருப்பமிருக்காது. இவையனைத்தும் கண்டகிரகத்தின் குணங்களாகும்.

நகாரிவாதம்

பண்பான குரலதனை விலாபக் கங்கள்
பலகியே பருநரம்பைப் பற்றி ரோகும்
வண்பான கீழ்வாய்தான் மேல்வாய் தன்னில்
வாயுவங்கே பூரித்துவ சனங் கொச்சை
நண்பான நடுநாக்கு மரம்போ லாதல்
நசையான தேகமெங்குஞ் சொரிச்ச லாகும்
விண்பான மேலுதடு தடிப்பு மாகும்
மீறியதோர் நகாரியாம் வாத மாமே 304

விலாப் பக்கங்கள் நோகும். பருநரம்பினைப் பற்றி வலிக்கும். வாயினாலும் அபானத்தின் மூலமாகவும் வாயு பிரியும். நடுநாக்கு மரத்துப் போகும். தேகம் எங்கும் அரிப்பு எடுக்கும். மேலுதடு தடித்துப் போகும். இவை அனைத்தும் நகாரிவாதத்தின் குறிகுணங்கள் ஆகும்.

பதிதவாதம்

காரியாய் மிகவார்த்தை பேசும் போது
கழுத்திலுள்ள நரம்புமிக விசைத்து நோவாம்
வாரியாய் வார்த்தைகள்தான் விக்கிப் பேசி
வார்த்தைகள் தான்பேசுவதிற் றெரிந்தி டாது
நாரியார் போகமது விரும்பி டாது
நலுக்கமாய் தாதுவெல்லா மிளைத்துக் காணும்
பாரியாய டிக்கடிக்குப் பசியே யுண்டாம்
பதிதமாம் வாதமென்றே பகர லாமே 305

அதிகம் பேசும்பொழுது கழுத்து நரம்பு அதிகம் வலிக்கும். வார்த்தைகள் தொடர்ந்து வராமல் தடுமாறும். பெண்போகத்தை

விரும்ப மாட்டார்கள். தாதுக்கள் எல்லாம் இளைத்துக் காணப்படும். அடிக்கடி பசியுண்டாகும். இவை இருந்தால் பதிதவாதம் என்று கூறலாம்.

யோனிசூலை

பகரவே மலத்வாரந் தன்னிற் றோன்றிப்
பக்கமா யிறங்கியே யோனி பற்றித்
திகரவே குறங்கடி மறையு முள்ளுஞ்
சிக்கெனவே கோல்கொண்டுகு டைந்தாற் போல
அகரவே யடிக்க டிக்கு நோவு மாகும்
ஆசனமுங் கடுத்துமே நீரி றங்கும்
நகரவே நடக்கும்போ துறக்க மாகும்
நவில்யோனி சூலையென்றே நாட்ட லாமே 306

மலத்துவாரத்திற்குப் பக்கத்தில் வலி தோன்றி அதன் பக்கமாக இறங்கி யோனியை பற்றி உள்ளே மறையும். குச்சிகொண்டு குடைந்தாற்போல அடிக்கடி நோவுண்டாகும். ஆசனம் கடுத்து நீரிறங்கும் பொழுதும் கடுத்துப் போகும். இத்தகைய குணங்கள் இருப்பின் அது யோனிசூலையாகும்.

கெர்ப்ப சூலை

நாட்டமாய் கன்னியர்கள் துடக்குங் காலை
நலமான கெர்ப்பத்தின் ரேகை தன்னில்
பாட்டமாய்ப் பற்றியே வாய்வு தோன்றி
பழகியே புருஷசங்கை பண்ணும் போது
தாட்டமாய்த் தடைப்பட்டும லத்தைச் சிக்கித்
தத்தளித்துக் கடுப்பாகி விலாப்பக் கம்போம்
கேட்டமாய் மனதுதனிற் கிலேச முண்டாம்
கெர்ப்பமாஞ் சூலையென்றே கீர்த்திப் பாயே 307

பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் வாயு தோன்றி புருஷசங்கமம் செய்யும்பொழுது வலி அதிகமாகி மலத்தைக் கட்டும். விலாப் பக்கங்கள் நோகும். மனதில் கிலேசமுண்டா கும். இது கெர்ப்பசூலையின் குணங்களாகும்.

அஷ்டசூலை

கீர்த்தியாய் மலங்கடுக்குங் கெடியாய் சோபங்
கீழான வருரேகை தனிலே நின்று
ஆர்த்தியா யலந்திடக் கோபித்து நின்று
அதட்டியா யிருகுறங்கும் யோனி தாளும்

கார்த்தியா யுமித்தணலின் காந்த லாகிக்
கடினமாய் நீர்தானுந் துளியாய் வீழும்
வேர்த்தியாய் மொறுமொறெனக் கடிக்கும் பல்லை
மீறுபட்ட சூலையிட வினையந் தானே 308

மலம் கடுக்கும். கீழே வரும் நரம்பில் நின்று அதிகம் வலிக்கும். இரு குறங்கும் யோனியும் கீழே யிறங்கும். உமித்தணலில் பட்ட காற்றுபோல வெப்பமாகி நீர் துளித்துளியாய் விழும். நறநறவென பல்லைக் கடிப்பார்கள். இவையனைத்தும் அஷ்ட சூலையின் குணங்களாகும்.

குடல்வாதம்

வினையாகப் பலவிதமாய்க் குடலைப் பற்றி
மிடுக்காக வலித்துமே நாபி தன்னில்
அனையாக வடிவயிற்றில் நொந்து நொந்து
அழகான விரைதன்னில் வலித்து வீங்கி
மினையாக மிக்கவலி யிழிந்து நோவாம்
மிடுக்கான நளிரோடு காச்ச லுண்டாம்
தினையாகத் திடுக்கிட்டுத் தலையு நோவாம்
செப்பினோங் குடல்வாதச் சேதி தானே 309

குடலைப்பற்றி பலவாறு வலித்து நாபியில், அடிவயிற்றில் நொந்து நொந்து பிறகு விரையில் வலித்து வீங்கிப்போகும். வலி மிகவும் அதிகமாகி இழிந்து நோவுண்டாகும். நடுக்கத்துடன் காச்சல் உண்டாகும். மனம் அடிக்கடி திடுக்கிட்டு தலையும் வலிக்கும். இவை குடல்வாதத்தின் குணங்களாகும்.

அசுவவாதம்

சேதியாய் சிறுகுதிரைப் பாச்ச லாகிச்
செடமெல்லா மிகக்குலுக்கி கோட்டி பண்ணி
மேதியாய் மேலேறிக் கீழே நோக்கி
வெறிகொண்டாற் போல்மிரண்டு அண்டம் வீங்கி
ஏதியாயி ரண்டுவிரை யுள்ளே புக்கி
இணையி லிங்கமுட்சுருங்கி யிழிந்து நோவாம்
ஆதியா மடிவயிற் இசிவு காணு
அணியசு வவாதமென்றே யறிய லாமே 310

குதிரைக்குட்டி போல அங்குமிங்கு பாச்சலுடன் ஓடி மிகவும் குலுக்கி பைத்தியம்போல் மேலும் கிழும் இறங்கி ஒடுவர். இரண்டு அண்டமும் வீங்கி ஆண்குறியானது உள்ளே சுருங்கி இழுத்துக்

கொள்ளும். வலியுண்டாகும். அடிவயிற்றில் வலிப்பு தோன்றும். இவை அசுவ வாதத்தின் குணங்களாகும்.

மெச்சுவாதம்

அறியவே யாண்மையா மிலிங்கந் தன்னை
அடவாகச் சுருக்கியே குழிந்து நோவாம்
நெறியவே நீர்க்கடுத்து சிவந்து காணும்
நேர்மையாய்க் குளிரோடு சுரமு முண்டாம்
வறியவே தியக்கமொடு மயக்க முண்டாம்
வாடியே தேகமெங்கு மசதி யாகும்
குறியவே கொட்டாவி சோம்ப லாகும்
குறிப்பான மெச்சுவாத முமா மன்றே 311

ஆண்குறியானது சுருங்கி உள்ளுக்கு இழுத்து வலியுண்டாகும். சிறுநீர் கடுப்புடன் சிவந்து காணப்படும். குளிருடன் சுரமடிக்கும். மூர்ச்சை, மயக்கம் ஆகியன உண்டாகும். உடல் எங்கும் அசதி தரும். கொட்டாவி சோம்பல் உண்டாகும். இவை மெச்சுவாதத்தின் குணங்கள் ஆகும்.

மூடுவாதம்

மெச்சான பிடரிநரம் பதனைப் பற்றி
மிடுக்காக விறங்கியே மலத்து வாரம்
பிச்சானத் துலங்கி மேலே யேறிப்
பிறவடியுங் குறங்கடியுஞ் சுற்றி நொந்து
குச்சான கோவணந்தான்வ ளைத்தாற் போலக்
குறுக்காக லிங்கத்தில்வ லித்து நொந்து
கச்சான காற்றுக்குமி குதி யாகும்
கடுமூடு வாதத்தின்க ருமந் தானே 312

பிடரி நரம்பைப் பற்றி வலிக்கும். பிறகு கீழிறங்கி வலித்து மலத்துவாரத்துக்கு மேலே யேறி, புறவடிகளையும் குறங்கடிகளையும் பற்றி கோவணம்போல் வளைந்து வலிக்கும். ஆண்குறியில் குறுக்காக வலிக்கும். காற்று அதிகமாகப் பிரியும். இவை மூடுவாதத்தின் குணங்களாகும்.

வசுவாதம்

கருமமாய் குடல்முடங்கி வயிறு ளைந்து
கனமாக நொந்துமேம யிர்க்கூச் சிட்டுப்
பருமமா யுடம்பெங்குந் தடிப்புண் டாகிப்
பாரமாயுடல் கனத்துப் பங்க மாகும்

வருமமாய்த் தோலெல்லா மிறுகிக் கொண்டு
மாசற்ற வுடம்பெல்லாம் வாட்ட மாகும்
உருமமாய் அசனந்தான் வேண்டா தாகும்
உயர்வசு வாதத்தினிட உண்மை தானே 313

வசுவாதத்தில் குடல் முடங்கிப் போகும். வயிறு உளையும். கனத்து நொந்து போகும். மயிர்க்கூச்செறியும். உடல் பாரமாகி கனத்துப் போகும். தோல் எல்லாம் இறுகிக் காணப்படும். உடல் வாட்டமடையும். உணவில் விருப்பமிருக்காது.

பீஜஸ்தம்பம்

உண்மையா யிரண்டுவிரை தானும் வீங்கி
உயர்கின்ற புண்போல வலித்து நொந்து
தண்மையாய் சலாகையது ஏற்றி னாற்போற்
தாக்கான பீசமெங்கும் வலித்து நொந்து
வெண்மையாய் நீரருகித்து ளியாய் வீழும்
விம்முமே யடிக்கடிக்குத் தண்டு தானும்
பெண்மையாய் மனமதுதான் பித்தல் காணும்
பீசமாந் தம்பமென்றே பேச லாமே 314

இரண்டு விரைகளும் வீங்கி புண்போல வலிக்கும். சலாகையை சுற்றியதுபோல ஆண்குறியானது வலிக்கும். சிறுநீர் சிறுத்து துளித் துளியாய் வீழும். ஆண்குறி அடிக்கடி விம்மும். பெண்கள் மீது அளவுகடந்த ஆசை ஏற்படும். இக்குணங்கள் காணப்படின் அது பீசஸ்தம்ப வாதம் ஆகும்.

அந்திரவெட்டி

பேசவே விரையிரண்டும் பெருத்து வீங்கிப்
பெருக்கவே நோயோடே இசிவு மாகிக்
காசவே களகளவென் றிரைச்ச லாகிக்
கனமான குடல்தனிலே சந்தித் தேதான்
வாசவே வயிற்றினைத்தான் முறுக்கி மெத்த
வலியொடு குளிர்தானுஞ் சுரமு முண்டாம்
ஆசவே யடிவயிற்றிற் குற்ற லுண்டாம்
அந்திரமா வெட்டியென்றே யறிந் திடாயே 315

விரைகள் இரண்டு பெருத்து வீங்கிப் போகும். வலிப்புண்டாகும். களகளவென்று குடலில் இரைச்சல் ஏற்படும். வயிற்றை முறுக்கி வலிக்கும். குளிருடன் சுரமுண்டாகும். அடிவயிற்றில் குற்றல் உண்டாகும். இவை அந்திரவெட்டியின் குணங்கள் ஆகும்.

வாத சுரோணிதம்

அறிந்திட்ட அங்கமெல்லா மெலிவுமாகி
அசைவான தவ்விடங்கள் வீக்கமாகி
நறிந்திட்ட நடைகொடா தானி ருத்தல்
நலியாகி மொழிமொழி யவீக்க மாகச்
சொறிந்திட்டே தேகமெங்கு மசைவு காணல்
சோற்றின் மேனினைவின்றித் தூக்க மாதல்
வறிந்திட்ட வாயதனி னீர்தா னூறல்
வாதசுரோ ணிதந்தானும் வகுத்த வாறே 316

வாத சுரோணிததில் அங்கமெல்லாம் மெலிந்து அசைவுதரும் இடங்கள் எல்லாவற்றிலும் வீக்கமேற்படும் நடக்கமுடியாத சிறுமுட்கள் அனைத்தும் வீக்கமாகும். தேகத்தில் அசைவு காணபபடும் உணவின் நினைவு இன்றி தூக்கம் அதிகமாக இருக்கும் வாயில் நீர் ஊறும்.

சித்துவாத சுரோணிதம்

வாறான சரீரமெல்லா நுழைந்து ஊதல்
மாசற்ற தோல்தானுந் திரைந்து போகும்
நாறான நாறுபோல்ந ரம்பு சுக்கும்
நாக்குத்தான் வழவழத்துக் கோழை யாகும்
நூறான நெருப்புத்தான் பட்டாற் போல்
நொந்துமே சடமெல்லாம் கொப்ப ளிக்கும்
வீறான வுரிந்துபின்னை வெதும்பி வீங்கும்
மிக்கசித் துவாதசுரோ ணிதம தாமே 317

உடல் எல்லாம் ஊதிப் போகும் தோல் வறட்சியுடன் களையிழந்து காணபபடும். நாறுபோல நரம்பினை இழுக்கும். நாக்கு வழவழத்து கோழையாகும். நெருப்புப் பட்டாற்போல சடம் எல்லாம் கொப்பளிக்கும். பிறகு தோல் உரிந்து வெதும்பி வீங்கும். இவை சித்துவாத சுரோணிதத்தின் குணங்களாகும்.

வைகிகவாதம்

ஆமென்ற வீங்கினதோர் விடத்தில் ரத்தம்
அழுத்தமாய்த் திரண்டுமே எங்கும் பாய்ந்து
ஓமென்று ஒட்டியேதி ரண்டி ருக்கும்
உறுதியாய்த் தொட்டுடனே மெத்தென் றாகும்
தேமென்ற தேகமெங்க ணுமு சுக்கும்
சீறிய தோரிருமலொடு காச்ச லுண்டாம்
பாமென்ற படந்தனிலே திமிருண் டாகும்
பாரமாய் வைகிதமாம் வாதந் தானே 318

உடலில் வீங்கிய இடத்தில் எல்லாம் இரத்தம் அழுத்தமாகத் திரண்டு இருக்கும். பிறகு பாயும் இடமெல்லாம் திரண்டு காணப்படும். தொட்டுப் பார்க்க மெத்தென்றாகும். தேகம் எல்லாம் முசுக்கும் இருமலுடன் காய்ச்சல் உண்டாகும். கால்படத்தில் திமிர்த்துப் போகும். இவை வைகிதவாதத்தின் குணங்களாகும்.

உதிரவாத சுரோணிதம்

வைகிதமாய்க் கணைக்காலு முழங்கால் தானும்
மற்கடாஞ் சந்துபுறவ டியும் வீங்கிச்
செய்கிதமாஞ் சிறுவிரல்கள் மிகவும் நொந்து
சிந்தை தடுமாறியே சலிப்புண் டாகும்
பைகிதமாம் பயித்தியத் தில்லாத மிஞ்சிப்
பாரமாய் உற்பவித்து அழலுண் டாகும்
உய்கிதமாம் அசனமது தானும் வேண்டா
உதிரவாதச் சுரோணிதத்து ணர்ச்சி யாமே 319

கணுக்காலும், முழங்காலும், முட்டுக்காலும், புறவடிகளும் வீங்கி, சிறிய விரல் மூட்டுகளும் மிகவும் நோகும். மனம் தடுமாறும் சலிப்புண்டாகும். பைத்தியத்தில் மனம் பேதலிப்பது போல பேதலித்துக் காணப்படுவர். உடலில் சூடு அதிகமிருக்கும். உணவில் விருப்பமிருக்காது. இவை உதிரவாத சுரோணிதத்தின் குணங்களாகும்.

பைத்தியவாத சுரோணிதம்

உணர்ச்சியாய் சுரோணிதந்தான் மிகவெ தும்பி
ஊக்கமாய்த் தேகமெங்கு மிகவே நொந்து
முணர்ச்சியாய் முழங்கால்கள் முழங்கை யொக்க
முனையான சிறுவிரல்கள் கன்னம் நெற்றி
தளர்ச்சியாய் சந்துசரு வாங்க மெங்கும்
தாஷ்டிகமாய்க் குடைந்து சுரமு முண்டாம்
பணர்ச்சியாய்ப் பாண்டதுபோல் மேனி யாகும்
பயித்திய வாதசுரோணிதத்தின் பண்பு தானே 320

பெண்களுக்கு சுரோணிதமானது மிகவும் வெதும்பி உடல் எங்கும் நோகும். முழங்கால், முழங்கை, சிறுவிரல்கள், கன்னம், நெற்றி மற்ற மூட்டுப் பொருத்துகள் அனைத்தும் மிகவும் குடைந்து வலிக்கும். சுரம் தோன்றும். மேனி வெளுத்து பாண்டு நோயாளி போலாகும். இவை வாத சுரோணிதத்தின் குணங்களாகும்.

சேட்டுமவாத சுரோணிதம்

பண்பாக வுடல்குளிர்ந்து ஏறு வீங்கிப்
பதைப்பான விடந்தொட்டாற் பார நோவாம்
திண்பான சிரசுநெற்றி நோக்கா டுண்டாம்
சிலேட்டு மமாய்க்கோழை யொடுசு வாசமாகும்
மண்பாக மயக்க மொடு கனவு முண்டாம்
வாய்வரண்டு ருசியில்லா வருத்த மாகும்
நண்பாக நாடியுமே பட படக்கும்
நற்சேட்ப சுரோணிதமாம் நாடுங் காலே 321

உடல் குளிர்ந்து ஏறு வீக்கமுண்டாகும். வீக்கமுள்ள இடத்தைத் தொட்டால் மிகவும் நொந்து வலிக்கும். தலை நெற்றி ஆகியன நோகும். கபம் அதிகமாகி கோழை உண்டாகி, சுவாசம் அதிகமாக ஏற்படும். மயக்கமுண்டாகும். கனவுகள் அதிகம் உண் டாகும். வாய் வரண்டு நாவில் ருசியிருக்காது. நாடி படபடக்கும். இவை சேத்துமவாத சுரோணிதத்தின் குணங்களாகும்.

உதரவாதசுரோணிதம்

நாடுமே சுரம்வந்து நடுக்க லுண்டாம்
நாவரண்டு தலைநொந்து உடம்ப முத்தி
வாடுமே தேகமெல்லா மனிச்சப் பூப்போல்
மகாவருத்த முண்டாகி மயக்க மாகும்
சாடுமே யடிக்கடிதான் பேதி தானும்
தவிக்குமே தண்ணீர்தா னாட்ட மாகித்
தேடுமே சோற்றின்மேல் நினைவு தானும்
செயவுதர வாதசுரோணி தந்தா னென்னே 322

சுரத்துடன் நடுக்கலுண்டாகும். நாவரண்டு தலை நோகும். உடம்பை அழுத்தி தேகம் எங்கும் அனிச்சப்பூப் போல வெதும்பி வருத்தமுண்டாகும். மயக்கம் தோன்றும். அடிக்கடி பேதி உண்டாகும். தண்ணீர் தர்கமெடுக்கும். உணவின்மேல் விருப்ப மிருக்காது. இவை உதரவாத சுரோணிதத்தின் குணங்களாகும்.

குணஅவதானகம்

என்னவே குமரிதான் கெர்ப்ப முண்டாய்
ஏறியே நாள்மூன்று திங்கட் குள்ளே
வன்னவே வயிறிழிந்து ரர்த்தம் வீழ்ந்து
வாடியே வயிறெல்லாஞ் சுருக்கிக் கொண்டு

கன்னவே கால்கையு முடக்க மாகிக்
கருதியே தேகமெங்குங் காந்த லாகும்
குன்னவே கோபமது மிகுதி யாகும்
குணவ வதானக மென்றேகூ றிடாயே 323

பெண்கள் கெர்ப்பமாகி மூன்று மாதத்துக்குள் வயிறு இழிந்து இரத்தமானது வீழ்ந்து வயிறு எல்லாம் சுருக்கிக் கொள்ளும். கால் கையும் முடக்கமாகும். தேகம் எங்கும் எரிச்சலுண்டாகும். கோபம் அதிகமுண்டாகும். குணவவதானகத்தில் மேற்கண்ட குறிகுணங் கள் காணப்படும்.

கண்டக அவதானம்

கூறியே கெர்ப்பமுண்டாய் யீன்ற போது
குணகியே பச்சுடம்பில் வலிப்பு தோன்றி
மூறியே மூக்கொடு புருவந் தன்னில்
முட்கரமாய் மிகநொந்து வலிப்புண் டாகி
நாறியே நாக்கோடுவுண் ணாக்கு தானும்
நலித்துமே பல்லெல்லாங் கடுப்புண் டாகும்
ஆறியே முன்சொன்னத துவ சாத்யம்
அரியகண் டகவதான கந்தா னாமே 324

பெண்கள் கெர்ப்பமாயிருந்து குழந்தை பிறந்தவுடன் பச்சை உடம்பில் வலிப்பு தோன்றும். மூக்கிலிருந்து புருவத்துடன் முட்கரமாய் நொந்து வலிப்புண்டாகும். நாக்குடன் உண்ணாக்கும், பல்லும் சேர்ந்து கடுப்புண்டாகும். இவை கண்டகவவதானத்தின் குறிகுணங்களாகும்.

சிரக்கம்ப அவதானகம்

அவதான வடிசிரசு தன்னைப் பற்றி
அதட்டியே பின்னெல்லாம் பற்றி நொந்து
வவதான வடிம்புகுறங் கடியிற் சென்று
வளைத்துடம் பெல்லாநொந்து வாட்ட மாகிச்
சிவதான தேகமெங்குந் திமிருண் டாகும்
செடம்போ குங்காலத்தில் மூன்றுங் காணும்
பவதான சிரக்கம்பவ வதான கந்தான்
பாடிய தோரிம்மூன்று மசாத்ய மாமே 325

சிரக்கம்ப அவதானகத்தில அடிசிரசினைப் பற்றி பின்பு பிடரியை நொந்து குறங்கடிவரை சென்று உடம்பெல்லாம் வலித்து வாட்டமேற்படும். தேகம் எங்கும் திமிருண்டாகும். இவை சிரக்கம்ப அவதானகத்தின் குணங்கள் ஆகும். இதுவரை கூறியுள்ள மூன்று அவதானகங்களும் உயிர் உள்ளவரை உடலில்

இருக்கும். இவை அசாத்தியமாகும்.

வாதத்தலை நோக்காடு

சாத்தியமாம் வாதத்தின்ற லைநோக் கா்டு
தண்மையாம் பிடரிபற்றித் தலைநோ வுண்டாம்
காத்திரமாய் காதிரண்டுந் தான்வ லித்துக்
கதுப்படியுங் குறட்டோடு மூக்கு உச்சி
நேத்தியுமாய் நெற்றியொடு நோவு மாகி
நெருக்கா னவாப்படித்தாற் போலே குற்றும்
மாத்தியமாய் மனக்கிலே சப்ப டுத்தும்
வாதத்தின் றலைநோவு வண்மை தானே 326

பிடரியில் தொடங்கி தலை முழுதும் வலியுண்டாகும். காதுகள் இரண்டும் வலிக்கும். காது அடிகளும், கன்னங்களும், மூக்கும், உச்சியும்நெற்றியும்வலிக்கும். ஆப்பு அடித்தால்போல்குத்தும். மனம் சஞ்சலப்படும். இவை வாத தலை நோக்காட்டின் குணங்களாகும்.

பித்த தலைநோக்காடு

வண்மையாய் நிற்கின்ற மூக்கு தானும்
வடிந்துமே நீர்ப்பாய்ந்துத் தலை கனத்து
வெண்மையாய் வாய்நீர்தான் மிகவு மூறி
மீறியே உண்ணாக்கைப் பற்றி நொந்து
திண்மையாய் செவிதனிலே குற்ற லுண்டாய்ச்
சிரசுதான் பாரமாய்மி கக்க னக்கும்
கண்மையாய் கண்ணோடு புருவங் குற்றும்
கனமான பித்தத்தின் றலை நோக்காடே 327

பித்த தலைநோக்காட்டில் மூக்கு வடிந்து நீர்ப்பாய்ச்சலுண் டாகும். தலை கனக்கும். வாய்நீர் மிகவும் ஊறும். உள்நாக்கைப் பற்றி மிகவும் வலியெடுக்கும். செவியில் குத்தல் எடுக்கும். தலை

சிலேத்துமத் தலைநோக்காடு

நோக்காட்டில் மிகத்தண்ணீர் குடிக்கை யாலு
நுகர்ந்த பின்புலாவாமற் படுக்கை யாலும்
தீக்காட்டில் மிகத்திரண்டு சேட்பந் துன்னிச்
சிரசெங்கும் நோவாகிப் பிடரி யோடு
வேக்காட்டில் தேகமெல்லா மிக வெளுத்து
மேனியுமோ மிகவுலர்ந்து சுரமு முண்டாம்
சாக்காட்டிற் பசியற்று ருசியில் லாதால்
சண்டாளச் சேட்டுமத்தின் றலை நோக்காடே 328

நோய்வாய்ப்பட்டிருக்கும் பொழுது தண்ணீரை மிகவும் அதிகம் குடிப்பதாலும், உண்ட பின்பு உலாவாமல் படுத்து விடுவதால் பித்தத்தில் கபம் திரண்டு சேர்ந்து தலை நோகும். தேகம் எல்லாம் மிகவும் வெளுத்துப் போகும். மேனி மிகவும் உலர்ந்து போகும். சுரமடிக்கும். ருசி தெரியாது. பசி எடுக்காது. இவை கபத் தலை நோக்காட்டின் குணங்களாகும்.

சன்னிவாதத் தலைநோக்காடு

தலைநோக் காடாகியே மிகவ ருந்தி
சஞ்சலத்தால் மனக்கிலேசந் தானு முண்டாய்
மலைநோக் காய்நெஞ்சடைத்துப் பெருமூச் சாகி
மறுகாதி ரண்டினிலாப் படித்தாற் போலும்
புலைநோக் காய்வாய்தானும் பேச வொட்டாப்
புழுக்கள் தானூர்தல் போற்றே கமாகும்
கலைநோக் காயுணர்ச்சியறி வில்லா தாகும்
கனசன்னி வாதத்தின் றலை நோக்காடே 329

சன்னிவாத தலை நோக்காட்டில் மனம் சஞ்சலமுற்று வருத்தமடையும். மலையை நெஞ்சின் மேல் வைத்து அடைத்தாற் போற் பெருமுச்சுண்டாகும். வாய் பேசவிடாது. உடலில் புழுக்கள் ஊர்தல் போல் காணப்படும். உணர்வில்லாது போகும்.

இரத்தபித்த தலை நோக்காடு

சன்னியாய் குளிர்ந்துமே வெச்சென் றாகும்
தாகமே மிகவுண்டாய் மயிர்க் கூச்சாகும்
தின்னியாந் திமிர்திமிர்த் திரத்த மீறிச்
செவிமூக் குவாயாலே ரத்தம் வீழும்
உன்னியா யுடலதுதான் றுடிப்புண் டாகும
ஊக்கமாஞ் சுவாசமது மெத்த வாகும்
கன்னியாஞ் சரீரமது கருக லாகும்
கதித்தெழுந் திரத்தபித்தந் தலைநோக் காடே 330

உடல் குளிர்ந்து மயிர்க்கூச்சமுண்டாகும். உடல் திமிர்ந்து இரத்தம் மீறி காது, முக்கு, வாய் ஆகியவற்றின்வழியே இரத்தம்விழும். உடல் துடிப்பு தரும். சுவாசம் மிகவும் அதிகமாகும். சரீரம் கருகும். இவை அனைத்தும் இரத்தபித்த தலை நோக்காட்டின் குணமாகும்.

கிருமிகந்த தலை நோக்காடு

கதித்துமே மௌலிபற்றித் தலைநோ வுண்டாம்
கடிமூக்குத் தண்டுபுரு வம்வ லிக்கும்
வதித்துமே வாய்நீர்தான் மிகவு மூறும்
வடிவமெல்லாம் நோவாகிம னம றுக்கும்
குதித்துமே கைாலுமி டறும் பற்றிக்
குற்றியே விறுவிறென்றே தானி ருக்கும்
நதித்துமே நாணற்பூப்போற் கிருமி வீழும்
நாறுமே கிருமிகந்த தலைநோக் காடே 331

கிருமிகந்த தலை நோக்காட்டில் தலை வலிக்கும். மூக்குத் தண்டு, புருவம் ஆகியவை வலிக்கும், வாய்நீர் மிகவும் ஊறும். உடல் எல்லாம் நொந்து மனம் பேதலிக்கும். கைகால்கள் இடறும். விறுவிறுப்பு கொடுக்கும். நாணற்பூப்போல கிருமி கூட்டோடு விழும்.

சூரியா வர்த்தம்

கந்தமாம் வலப்பக்கமிடப் பக்க மாதல்
கண்ணடியு மூக்கடியும்பு ருவம் பற்றி
புந்தமாம் புருவத்தி லூசி குற்றல்
போல்வலிக் குங்கண் தானுஞ் சுருங்கிக் காணும்
பந்தமா முடம்பெங்கும் பார மாகும்
பகற்போது தாழ்ந்தவுட னோவு மட்டாம்
துந்தமாந் துந்துமிபோல் வலியுண் டாகும்
சூரியவர்த் தந்தன்னின்சு ரூப மாமே 332

தலையின் வலப்பக்கமும் இடப்பக்கமும் கண்களின் அடிப்பாகமும், மூக்கின் அடியும், புருவமும் சேர்ந்து புருவத்தில் ஊசி குற்றல் போல வலிக்கும். கண்சுருங்கி காணப்படும் உடல் பாரமாகும். பகல் பொழுதுமுடிந்து மாலை நேரமானவுடன் நோயின் வேகம் குறையும். துந்துபிபோல மீண்டும் வலியுண்டாகும். இவை சூரியாவர்த்தத்தின் குணங்களாகும்.

சந்திராவர்த்தம்

சுருபமா யுடம்பெங்கும் வலியு மாகித்
தும்மியே மூக்கடைத்துச் சுகந்த மற்று
புருவமே மிகவலித்து நெற்றி யோடு
புண்போலக் குடைந்திட்டுப் புளக மாகி

அருபமா யந்தியின் போது தோன்றி
அர்த்த ராத்திரிமட் டுமலைச் சலாகி
சருபமாய் விடிகிற நேரத்திற் றானும்
சாய்க்குமே மாசந்திர வர்த்த மாமே 333

சந்திரா வர்த்தத்தில் உடல் எங்கும் வலிக்கும். தும்மல் அதிகமுண்டாகி மூக்கடைத்து வாசனை ஏதும் அறியமுடியாது போகும். புருவம் மிகவும் வலிக்கும். நெற்றி புண்போலக் குடையும். மாலையில் வலிதொடங்கி நடு இரவுவரை நீடித்து விடியும்பொழுது குறைந்து போகும்.

கர்ணாவர்த்தம்

வர்த்தமாய் மார்போடு பிடரி காது
வலித்துமே யர்ப்புகொண்ட டித்தாற் போலக்
குற்றமாய் காதிரண்டுங் குடைச்ச லாகும்
கோணியே கழுத்துங்கா துங்க னக்கும்
அற்றமா யுச்சியிலு நெற்றி தன்னில்
அடிக்கடிக்கு நோயாகி யசதி யாகும்
பற்றமாய்ப் பசியின்றி உரக்க மின்றேல்
பார கர்ணா வர்த்தமென்றே பகர லாமே 334

மார்புடன் பிடரி காது ஆகிய வலிக்கும். மார்பு, பிடரி, காது ஆகியவை ஒப்புக்கொண்டு அடித்தாற்போல வலிக்கும். காதுகள் இரண்டும் குடைச்சல் தரும். கழுத்துங் காதும் கனத்துப்போகும். தலைஉச்சியிலும் நெற்றியிலும் அடிக்கடி வலியுண்டாகி அசதி தரும். பசி உறக்கமிருக்காது இத்தகைய குணங்களையுடையது கர்ணாவர்த்த வாதமாகும்.

ஒருதலைவாகாத பேதம்

பகரான வொருதலையைப் பாதி நொந்து
புகழிகொண்டு மௌலிதனைப் பிளந்தாற் போல
நிகரான கண்ணுநீர் பாய்ந்து காந்தி
நெடுமூச்சு விட்டுமே நினைந்து துன்பம்
திகரான சடந்தானுந் திடுக்குண் டாகிச்
சிணுக்கிரு மலாகியே பசிகா ணாது
வகரான வாதமாய் மயிர்க் கூச்சாகும்.
வாகாத பேதத்தோர் தலை வலியு மாமே. 335

தலையின் ஒருபாதி மட்டும் நொந்து, கபாலத்தை கம்புகொண்டு பிளந்ததுபோல வலிக்கும். கண்ணில் நீர்பாய்ந்து

நெடுமூச்சுண்டாகும். உடல் திடுக்குண்டாகும். சிறுஇருமல் உண்டாகும். பசிஇருக்காது, மயிர்க்கூச்சம் உண்டாகும். இவை ஒரு தலைவலிக்குள்ள குணங்களாகும்.

வாதகர்ண சூலை

வலியாகி சீவிழுந்து காதி ரண்டும்
மகத்தான சமுத்திரம் போலிரைச் சலாகி
கிலியாகிச் செவிதனிலே சத்த முண்டாய்க்
கேள்விகள்தான் வசனமது கேட்டி டாது
பெலியாகிப் பிறர்வசனத் திசைகே டாகும்
பேய்கொண்ட மனமது பேச்சு தானாம்
அலியாகி யாணவகா மியங்கு றைக்கும்
அடங்காத வாதகன்ன சூலை தானே 336

காதுகள் இரண்டிலும் சீழ்விழுந்து கடல்போல் இரைச்சல் கேட்கும். காதில் எப்பொழுதும் சப்தமுண்டாகிக் கொண்டே இருக்கும். பிறர் பேசுவது கேட்காது. அடுத்தவர் பேச்சு சரிவர கேட்காமல் சரியான பதிலைக் கூறமாட்டார்கள். ஆணவம், கன்மம் போன்ற துர்க்குணங்கள் குறையும். இவை வாதகர்ண சூலையின் குணங்களாகும்.

பித்தகர்ணசூலை

தானென்ற இரண்டுசெவி தன்னி லேதான்
தாக்கான கிரந்தியே எழுந்து நொந்து
ஊனென்ற உதிரமொடு சீயும் பாய்ந்து
ஊற்றை யாங்கும்பிபோல் நாற்ற மாகும்
கானென்ற சிரசெங்கும் மளிபோ லூறும்
காதுரெண்டும் பருத்துமே வீக்க முண்டாம்
போனென்ற புளகிதமாய்த் தலையெங் கும்நோம்
பித்தகர்ண சூலையென்றே புகலு வீரே 337

இரண்டு காதுகளிலும் கிரந்தி எழும்பி நோகும். இரத்தத்துடன் சீழும் உண்டாகும், கும்பி நாற்றமடிக்கும். தலையெங்கும் சேறுபோல ஊறும். காதுகள் இரண்டும் பருத்து வீங்கிப்போகும். புளகிதமாய் தலையெங்கும் வலிக்கும் இவையனைத்தும் பித்தகர்ணசூலைக்குள்ள குணங்களாகும்.

சிலேட்டும கர்ணசூலை

புகலவே காதுக்குட்கு ரும்பி சேர்ந்து
பெருங்கோலைக் கொண்டுதான் குடைந்தாற் போல
நுவலவே நோவாகிப் புண்தா னுண்டாம்
நோக்கான சடந்தானும் நுணுக்க மாகும்
இகலவே இரைச்சலது கொஞ்சங் காணும்
ஏற்றமாய்த் தினவுமே மிகவுண் டாகும்
அகலவே யாக்கையெல்லாம் வெளுத்துக் காணும்
அரிதான சேட்பகர்ண சூலை யாமே 338

காதுக்குள் குரும்பி சேர்ந்து பெரிய கோலைக்கொண்டு குடைந்ததுபோல வலித்துப் புண்ணுண்டாகும். உடல் நுணுக்கமாகும். காதில் இரைச்சல் சிறிது கேட்கும். அதிக அளவு தினவெடுக்கும் உடல் எல்லாம் வெளுத்துக் காணப்படும். இவை சிலேத்தும கர்ணசூலையின் குணங்களாகும்.

கிருமிகர்ணசூலை

ஆமென்ற கம்புமுளை யரிசி போல
அடைத்துமே காதிரண்டுந் துன்னிப் போகும்
போமென்ற புழுக்களது மெத்த வூர்ந்து
புரண்டுமே புண்ணாகி உதிரம் பாயும்
தூமென்ற சீயொடு சில்லுங் காணும்
துடிக்குமே படபடத்துக் காதி ரண்டும்
கேமென்ற சத்தமது கேட்டி டாது
கிருமிகர்ணச் சூலையென்றே கீர்த்திப் பாயே 339

காதுகள் இரண்டிலும் கம்புமுளை அரிசிபோல அடைத்துக் கொள்ளும் புழுக்கள் ஊறும், புண்ணாகி இரத்தம் வடியும், சீழுடன் பக்குபிடிக்கும், காதில் சப்தம் கேட்காது. இவை கிருமிகர்ன சூலையின் குணங்களாகும்.

தந்தவாய்வு

கீர்த்திப்பாய் கெட்டியாய்க் கடித்த லாலும்
கெடியான சீதளங்கள் மிகவே யூறிப்
பார்த்திப்பாய் பல்லதனில டக்கி னாலும்
பலபலவா முதிர்ந்தான் பற்ற லாலும்
மூர்த்திப்பாய முகமெல்லா மிகக்கு டைந்து
முகுளிதமாந் தந்தங்கள் சதை கரைந்து
நார்த்திப்பாய் நாவடியு நரம்பு நோவாம்
நாறுதந்த வாவுவின்றன் நலம தாமே 340

கடினமான பொருட்களைக் கடிப்பதாலும், கபம் அதிகமாக உண்டாகி அதனை பற்களில் அடக்கினாலும். இரத்தம் அடிக்கடி கசிவதாலும், முகம் எல்லாம் மிகவும் குடைந்து பல்லின் ஈறுகள் கரைந்து நாவின் அடி நரம்பு நோகும். இவை தந்தவாயுவின் குணங்களாகும்.

நலமான வாயுவது கோபித் தக்கால்
நற்சந்து குடைந்துமே பல்லு நோவாம்
தலமான தலையொடு பிடரி குற்றும்
தாக்கான மலமிறுகி நீருங் கட்டும்
குலமான பெருநரம் புதான் முடங்கும்
குடைச்சலாய் வாய்தானும் வரண்டு காணும்
பெலமான குளிரோடு சுரமு முண்டாம்
பேர்பெரிய வாதமென்றே பேசலாமே 341

வாயு அதிகரித்து கோபித்தக்கால் மூட்டுகள் குடையும் பல்வலியுண்டாகும். தலையும் பிடரியும் குத்தும் மலம் இறுகும். சிறுநீர் கட்டும். பெருநரம்பு முடங்கிப் போகும். வாய்வரண்டு காணப்படும். குளிரோடு சுரம்தோன்றும் இதனை வாதநோய் என்று கூறலாம்.

ஆமப்பா வாதமெண் பத்து நாலும்
அதினுடைய குணாகுணங் களடங் கலாக
ஓமப்பா வடமொழியைப் பிரித்துப் பார்த்து
உலகத்தோர் பிழைக்கவென்றே உறுதி சொன்னேன்
தாமப்பா தன்வந்திரி சதா சிவனைக் கேட்கச்
சதாசிவன்றான் சொன்னபடி நானுங் கேட்டு
நாமப்பா இந்நூலைவெ ளியாய்ச் சொன்னேன்
நாதாக்கள் சொன்னபடி நாட்டி னேனே. 342

வாதநோய்கள் எண்பத்திநாலின் குணாதிசயங்களை வடமொழி நூலைப்பார்த்து கருத்துக்களை அறிந்து இவ்வுலகில் உள்ளவர்கள் பிழைக்க இந்நூலில் கூறியுள்ளேன். தன்வந்திரி சதாசிவனைக்கேட்க, சதாசிவன் சொன்னதை நான் இங்கு கூறியுள் ளேன். முனிவர்கள் சொன்னபடி நான் இங்கு கூறியுள்ளேன்.

வாதரோக நிதானம் முற்றியது

பித்தரோக நிதானம்

நாட்டினேன் பித்தத்தின்பெ யரைத் தானும்
நாற்பத்தி ரெண்டான குணாகு ணங்கள்
ஆட்டினே னாவுரு பித் தம்தன் னோடு
ஆம்பல் பித்தம்வுன் மாத பித்தம்
தாட்டினேன் தமந்தபித்தம் வாத பித்தம்
தனித்ததோர் வன்னிபித்தஞ் சேட்ப பித்தம்
தூட்டினேன் சுரோணிதபித்தம் விகார பித்தம்
துடியான விரணபித்தந் துகையைக் கேளே 343

பித்தநோய் நாற்பத்திரெண்டின் குணங்களின் பெயரையும் குணங்களையும் கேட்பாயாக. ஆவுரு பித்தம், உன்மாதபித்தம், ஆம்பல்பித்தம், தமந்தபித்தம், வாதபித்தம், வன்னிபித்தம், சிலேத்தும பித்தம், சுரோணித பித்தம், விகார பித்தம், விரணபித்தம் ஆகியவற்றுடன்.

துகையான வுரத்தபித்த மிரத்த பித்தஞ்
சுழிகாசப் பித்தமொடு சுவாசப் பித்தம்
வகையான சேட்பபித்தங் கரும்பித் தந்தான்
மாகரப் பான்பித்தம சீரண பித்தம்
அகையான வருசிபித்த மெரிபித் தந்தான்
அழல்பித் தந்துடிப்பித்தம் விஷப் பித்தந்தான்
முகையான அதிசாரப் பித்தந் தானும்
மூலபித்த முதரிபித்த முறைமை யாமே 344

உரத்தபித்தம், இரத்தபித்தம், காசப்பித்தம், சுவாசப்பித் தம், கபப்பித்தம், கரும்பித்தம், கரப்பான் பித்தம், அசீரண பித்தம், அருசி பித்தம், எரிபித்தம், அழல்பித்தம், துடிப்பித்தம், விஷப் பித்தம், நச்சுபித்தம், கழிச்சல் பித்தம், மூலபித்தம், உதரிப்பித்தம்.

முறைமையாங் கண்டபித்த மோடு பித்தம்
மூடுபித்த நடுக்குபித்தங் கபால பித்தம்
தறமையாஞ் சத்திபித்தந் தாக பித்தம்
தருக்கான விக்கல்பித்தம் க்ஷயபித் தந்தான்
திறமையாந் திமிர்பித்தம் வலிபித்த மோடு
சீதபித்தங் கிருமிபித்தம் அசாத்ய பித்தம்
மறைமையாம் மார்க்கபித்த மருந்தீடு பித்தம்
வகையது நாற்பத்திரண்டு மகிழ்ந்து பாரே 345

கண்டபித்தம், ஓடுபித்தம், மூடுபித்தம், நடுக்குபித்தம், கபாலபித்தம், சத்திபித்தம் (வாந்திபித்தம்), தாகபித்தம், விக்கல்பித்தம், க்ஷய பித்தம், திமிர்பித்தம், வலிபித்தம், சீதபித்தம்.

கிருமிபித்தம், அசாத்திய பித்தம், மார்க்கபித்தம், மருந்திடுபித்தம் ஆகியவற்றோடு நாற்பத்திரண்டு வகை பித்தம் முடிந்தது.

மகிழ்ந்துமே பித்தந்தான் வருகும் வாறு
மகதேவர் தமைப்பணிய மாட்டா தார்க்கும்
மகிழ்ந்துமே குருவடியை வணங்கா தார்க்கும்
மாதாவின் மனமகிழா மார்க்கத் தார்க்கும்
மகிழ்ந்துமே தந்தையை வஞ்சித்த பேர்க்கும்
மதாலயங்கள் தொழுதிடா மார்க்கத் தார்க்கும்
மகிழ்ந்து சிவதிரவியத்தை யபக ரித்த
மாபாதகர்க் குவந்தும ருவும் பாரே 346

பித்தநோய் உண்டாகும் வழியைக் கேட்பாயாக. பெரியோர்களுக்கு பணிந்து நடக்காதவர்களுக்கும், குருவடியை வணங்காதவர்களுக்கும், தாயின் மனதை புண்படுத்தியவர்க்கும் தந்தையை வஞ்சித்தவர்களுக்கும், ஆலயங்கள் தொழாதவர்களுக்கும் சிவசொத்தை அபகரித்தவர்களுக்கும் பித்தநோய் வந்து சேரும்.

மருவுமே புளிப்புரைப்பு வுப்பு மிஞ்சில்
மனதிலே துக்கங்க ளடைத லாலும்
நெருவுமே நெருப்புவெயில் கோபந் தன்னில்
நித்திரை தானில்லாமல் விழித்தி ருக்கில்
அருவுமே அக்கினியிற் பொசிக்கா விட்டால்
அதிகமாய்ப் பெண்போக மனுபவித்தல்
நருவுமே நாபிக்கு மேலே நின்று
நாடியே கண்டமட்டா யிருக்கும் பாரே. 347

புளிப்பு, உரைப்பு உப்பு ஆகிய சுவைகளையுடைய பொருட்களை அதிகம் உண்பதாலும், அதிக துக்கமடைவ தாலும், நெருப்பு வெயில் ஆகியவற்றில் அதிகம் படுவதாலும், நித்திரையில்லாமல் விழித்திருப்பதாலும், வெப்பமே படாதிருந்தால் அதிக பெண்போகம் கொள்வதாலும் நாபிக்கு மேலும் கண்டமாகிய கழுத்துக்கு கீழும் பித்தம் நிற்கும்.

பித்தம் வர்த்திக்கும் காலம்

இருக்குமே பித்தம்வர்த் திக்குங் காலம்
ஏதென்றா லாவணியுங் கன்னி தானும்
அடுக்குமே யைப்பசி கார்த்தி கைக்கு மெத்த
ஆட்சியா யெழுந்துமே பொங்கிக் காணும்
தருக்குமே சமிக்கின்ற காலந் தானே
தனியான மார்கழியிற் றையிற் றானும்
பருக்குமே பங்குனி யு மேஷந் தானும்
பருகுமே சரீரமெங்கும் பைத்தியந் தானே 348

பித்தம் அதிகரிக்கும் காலம் என்னவெனில் ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களாகும். இம்மாதங்களில் பித்தம் அதிகரித்துக் காணப்படும். மார்கழி, தை, பங்குனி ஆகிய மாதங்களில் பித்தம் சற்றே தாழ்ந்து இருக்கும்.

ஆவுரு பித்தம்

தானான சரீரந்தான் வெதும்புந் தாகம்
சளியிளைப்புக் கடுப்புமாய ழற்சி யாகும்
பூனான வாய்தனிலே புளிப்பு ரைப்புப்
புகழான மலசலந்தான் மஞ்ச ளிக்கும்
கோனான குருமொழி கொண் டெங்கும் பார்க்கும்
கூற்றாடுங் கொக்கரிக்குங் கூவ லாகும்
ஆனான வடிக்கடிக் கெழுந்தி ருக்கும்
ஆவுரு பித்தக்குணத் தினாண்மை தானே 349

ஆவுரு பித்தத்தில் சரீரம் மிகவும் வெதும்பும். தாகம் எடுக்கும். சளி இளைப்பு காணப்படும். கடுப்புண்டாகும். உடல் அழற்சி யுறும். வாயில் புளிப்புச் சுவையும், உரைப்புச் சுவையும் அதிகரிக்கும். மலமும் நீர்க்கட்டும் மஞ்சளிக்கும். அதிகம் பேசாது அங்குமிங்கும் பார்ப்பர். சிலசமயம் அதிக குரல் எடுத்து கூவுவர். அடிக்கடி எழுந்து ஓடுவர்.

ஆம்பல் பித்தம்

ஆண்மையாயங் கமெல்லாங் கருக லாகும்
அதிசயமாய்த் தலைதிருப்புமா வேசம் போல
தாண்மையாய்ச் சாப்பிட்டஅ சனந் தானும்
தரித்ததொரு நாள்பின்புதான் வாந்தி பண்ணும்
பூண்மையாய் புளிப்போடு கசப்பெ டுக்கும்
புகலரிய கால்கைதா னசதி யாகும்
வேண்மையாய் விக்கலொடு வயிறு முப்பும்
மிகவாம்பல் பித்தத்தின்வி கற்பந் தானே 350

உடல் அங்கம் எல்லாம் கருகும். அடிக்கடி ஆவேசமாய் தலையைத் திருப்புவர். உண்ட உணவு வாந்தியாகும். புளிப் புடன் கசப்புச்சுவை அதிகமாகத் தெரியும். கால் கை அசதியாகும். விக்கலுடன் வயிறும் உப்பும். இவை ஆம்பல் பித்தத்தின் குணங்களாகும்.

உன்மத்த பித்தம்

விபரமாய் மேனியெல்லாமி டுக்குண் டாகும்
மிக்கான தீபனந்தான் மெத்த வாகும்
தபரமாய்த் தலைதானுங் கனத்து காணும்
தரிக்குமோ ரிடந்தன்னில் மிகவி ருக்கும்
உபரமா யொருவருடன் பேசிடா மல்
ஊமையைப்போல் விழித்திருக்கு முறக்க மில்லை
திபரமாய் வாய்நீர்தான் வடித்து நிற்கும்
சித்தமது கலங்குமுன் மத்த மாமே 351

மேனியெங்கும் விறைத்து மிடுக்காய் நிற்கும். பசி அதிகமுண்டாகும். தலை கனத்துப் போகும். ஓரிடத்திலேயே இருக்க வைக்கும். மற்றவருடன் பேசவிடாது. உறங்காமல் எப்பொழுதும் விழித்திருக்க வைக்கும். வாயில் எச்சில்நீர் அதிகம் ஒழுகும். சித்தம் கலங்கிப் போகும். இவை அனைத்தும் உன்மத்த பித்தத்தின் குணங்களாகும்.

தமந்த பித்தம்

மாதமாய் மதுத்தானு முண்ட வன்போல்
மறதியதா யிருக்குமே சரீரந் தானும்
நாதமாய்ச் சரீரந்தான் மிக்க தூளித்து
நாவடியி னரம்பெல்லாம் மஞ்ச ளிக்கும்
பேதமாய்ய ழைக்கழைக்கப் பிரேதம் போலப்
பேசாமல டிக்கடிக்குத் தாக மாகும்
சாதந்தான் மிகவுண்டு மவுன மாகும்
தமந்தபித் தத்தினிடத ரிப்புத் தானே 352

மதுவுண்டவன்போல் மறதியாயிருப்பர். உடல் மிகவும் தூளித்து நாவின் அடி நரம்பெல்லாம் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். அழைக்க அழைக்க பிரேதம்போல் இருப்பார்கள். அடிக்கடி தாகமெடுக்கும். அதிக உணவை உண்டுவிட்டு மவுனமாக இருப்பர். இவை தமந்த பித்தத்தின் குணங்களாகும்.

வாதபித்தம்

தரிப்பான கண்தனையே மிகம றைக்கும்
தரியாத மிகவெரிச்சல் புகைச்ச லுண்டாம்
மிரிப்பான கண்மின்னி யாய்ச்சு ழன்று
மிக்கநீர்த் ததும்பியே கலங்கி நிற்கும்

வரிப்பான வன்னுடம்பு வியர்வை யாகும்
மயக்கமொடு தியக்கமாய் வாந்தி யாகும்
குறிப்பான கொம்பேழும் அன்னம் வேண்டா
கூறினோம் வாதபித்த கொள்கை தானே 353

கண்களை மிகவும் மறைக்கும், கண்களில் எரிச்சலும் புகைச்சலும் உண்டாகும். கண்கள் சுழன்று நீர் ததும்பி கலங்கி நிற்கும். உடம்பு அதிகம் வியர்க்கும். மயக்கத்துடன் தியக்கமாகும். வாந்தி உண்டாகும். உணவில் விருப்பமிருக்காது இவை வாதபித்தத்தின் குணங்களாகும்.

வன்னி பித்தம்

கொள்கையாய்ப் பேதமாய் வயிறு ளைந்து
கொடிதான கனல்தானுங் கபால மேறி
வள்கையாய்ச் சீதமாய்ச் செந்நீர் பாய்ந்து
வாட்டமாய்க் கருகியே உடல் வெளுத்து
மள்கையா மயக்கமொடு தியக்க மாதல்
வாறான வசனமிக தானுஞ் செல்லா
நள்கையாய் வாய்வழன்று புளிப்பு காணும்
நளினமாம் வன்னிபித்த நாட்ட மாமே 354

வயிறு உளையும். கனல் கபாலத்தில் ஏறி இரத்தம் பாய்ந்து கருகி உடல் வெளுக்கும். மயக்கத்துடன் தியக்கமாகும். உணவில் விருப்பமிருக்காது. வாய் வழன்று அதிக புளிப்புச்சுவை காணப்படும். இவை வன்னிபித்தத்தின் குணங்களாகும்.

சிலேட்டும பித்தம்

நாட்டவே மிகவுடம்பெல் லாம்வெ ளுத்து
நளிர்த்துமே உடம்பெல்லா நோக்கா டாகி
மாட்டவே மனமதுதான் கோப மாகி
மயங்கியே அறிவழிந்து இரும லுண்டாய்க்
காட்டவே கண்களெல்லா மிகப்பச் சென்று
கருதியே பசிகாணுங் கலக்க மாகித்
தேட்டமாய்த் தும்மலொடு சிரங் கனக்கும்
சிலேட்டுமத்தின் பித்தமென்று செப்பி டீரே 355

உடல் எல்லாம் வெளுத்து நலிந்து வலியுண்டாகும். மனதில் அதிகம் கோபமுண்டாகும், மயங்கி அறிவழிந்து போகும், இருமலுண்டாகும், கண்கள் மிகவும் பச்சென்று கலங்கிக் காணும், தும்மல் உண்டாகும், சிரம் கனத்துப் போகும். இது சிலேட்டும பித்தத்தின் குணங்களாகும்.

சுரோணித பித்தம்

செப்பவே சுரோணிதந்தான் மிகவெ தும்பித்
தேகமெங்குங் குடைந்துமே சந்து நோவாம்
செப்பவே மேனிமுப்பொ திந்தாற் போல
விடயாகித் தாகமாய்ப் பனி கண்ணும்
தப்பவே தலைநோவுமி குதி யாகும்
சஞ்சலிக்குஞ் சிந்தைதான்த யங்க லாகும்
துப்பவே வாந்தியொடு கோழை யாகும்
சுரோணிதமாம் பித்தமென்றே சொல்லு வீரே 358

சுரோணிதம் மிகவும் வெதும்பி உடல் எங்கும் குடையும். மூட்டுகள் வலிக்கும். உடலெங்கும் முட்கள் குத்தியதுபோல வலியெடுக்கும். அதிக தாகமுண்டாகும். கண்களும், தலையும் அதிகம் வலிக்கும். மனம் சஞ்சலப்பட்டு மிகவும் அறிவு மயங்கும். வாந்தியுடன் கோழையுண்டாகும். இவை சுரோணித பித்தத்தின் குணங்களாகும்.

விகார பித்தம்

சொல்லவே துயிலொழிந்து கசந்து வாயைத்
துப்புரவாய்ப் பலபேச்சும் விரும்பி டாது
கல்லவே கண்சிவந்து கலக்க முண்டாம்
கடுத்துடம் பெலாம்வெளுத்துக் கருகிப் போகும்
மல்லவே வாந்தியொடு மயக்க மாகும்
மனமரு கலாகியே வாய்நீ ரூறும்
பல்லவே பட்டினிதான் மிகவி ருக்கும்
பாரமாம் விகாரபித்தப் பண்ப தாமே 359

உறக்கம் கெட்டு வாய் கசக்கும். அதிகம் பேசமாட்டார்கள். கண் சிவந்து கலக்கமுண்டாகும். உடம்பு எல்லாம் வெளுத்து இறுகிப் போகும். வாந்தியுடன் மயக்க மேற்படும். மனம் மருகி வாயில் அதிக நீரூறும். உணவு உண்ணாமல் அதிகம் பட்டினி யிருப்பர். இவை விகாரப் பித்தத்தின் பண்புகளாகும்.

விரணபித்தம்

பண்பாக உடம்பெங்குந் திமிருண் டாகிப்
பாரமாய் தினவெடுத்து இரண மாகும்
நண்பான நாவெல்லாம் கசப்பு காணும்
நாடியெல்லாம் படபடத்துத் துடிப்புண் டாகும்

திண்பான லிங்கமெல்லாஞ் சிவந்து காணும்
திடுக்கிட்டு நித்திரையி லெழுந்தி ருக்கும்
வெண்பாக வாய்நீர்தான் மிகவு மூறும்
விரணமாம் பித்தத்தின் மூர்க்க மாமே 358

உடல் எங்கும் திமிர்த்துப் போகும். பிறகு தினவெடுத்து புண்ணாகும். நாவில் அதிக கசப்புச் சுவையுண்டாகும். நாடி படபடத்துக் காணப்படும். லிங்கம் சிவந்து காணப்படும். உறக்கத்தின் பொழுது திடுக்கிட்டு எழுந்திருப்பீர். வாய்நீர் அதிகமாக ஊறும். இது விரண பித்தத்தின் குணமாகும்.

உரத்த பித்தவாதம்

மூர்க்கமாய் கோபமது மிகவுண் டாகும்
முனையாக வடிக்கடிக்குச் சண்டை கொள்ளும்
ஆர்க்கமாய் கூவியேவி ரைச்ச லாகும்
ஆதான பாதாளம் பேதி யாகும்
நார்க்கமாய் நன்மைதின்மை தோற்றா மற்றான்
நலக்கமாக கண் சிவக்குந் தூக்க மில்லை
ஊக்கமா யுடம்புதூ ளிக்கு முப்பும்
உரத்த பித்தவாதத்தி னுண்மை தானே 359

கோபம் மிகவும் உண்டாகும். அடிக்கடி சண்டை போடுவர். சப்தமாய் அதிக இரைச்சலுடன் கூவுவர். பேதியாகும். நன்மை தீமை இரண்டையும் பிரித்தறியும் குணமிருக்காது. கண்கள் சிவக்கும். தூக்கமிருக்காது. உடல் தூளிக்கும். உரத்த பித்தவாதத்தின் குணங்கள் இவைகளாகும்.

இரத்த பித்தம்

உண்மையா யிருமற்றான் மிகவு முண்டாய்
உதட்டியாய்க் குற்றியே ரத்தம் வீழ்ந்து
அண்மையாம் சரீரமது மிகவும் வற்றி
அடிவயிறு சுருங்கியே வற்றிக் காணும்
வண்மையாய் வாய்நீரிற்க விச்ச டிக்கும்
மறுகியே வல்லுடம்பு வாட்ட மாகும்
இண்மையா யிடுப்புதான் குடைச்ச லாகும்
இடும் இரத்தபித்தத்தி னியற்கை தானே 360

அதிகம் இருமல் உண்டாகும். உதட்டில் குற்றி இரத்தம் அதிகம் வீழும். உடல் மிகவும் வற்றிப் போகும். அடிவயிறு சுருங்கிக் காணப்படும். வாய்நீர் துர்நாற்றமடிக்கும். இடுப்பு குடைச்சலெடுக்கும். இவை இரத்த பித்தத்தின் குணங்களாகும்.

காசபித்தம்

இயற்கையா யிருமியே மிகப் பிரட்டி
ஈண் டியே விக்கலொடு சத்தி யாகும்
உயற்கையா யுடம்புதான் மிகவ லிக்கும்
உஷ்ணமாய் வெதும்பியே குரலே கம்மும்
தியற்கையாய் வாய்நீரு மிகவே யூறும்
தித்திப்பு மிகவிருக்குந் துயரங் காணும்
கயற்கையாய் நெஞ்சுதனிற் கனமாய்க் காணும்
கரும்பினுக்குங் காசபித்தங் கருத்து தானே 361

இருமல் உண்டாகும். வயிற்றை மிகவும் பிரட்டும். விக்கலெடுக்கும். வாந்தியுண்டாகும். உடல் மிகவும் வலிக்கும். உடல் உஷ்ணமாகி வெதும்பி குரல் கம்மும். வாய்நீர் அதிகமாக ஊறும். நாவில் தித்திப்புச் சுவை அதிகமாயிருக்கும். நெஞ்சில் கனமாகக் காணப்படும். இவை அனைத்தும் காசபித்தத்தின் குணங்களாகும்.

சுவாச பித்தம்

கருத்தாகச் சுவாசமது மிகவுண் டாகும்
கனமாக வயிறுமே ஊதிக் காணும்
உருத்தாக உடலதுதான் மிகவ லிக்கும்
ஊறுமே கேணிபோல் வாய்நீர் தானும்
மருத்தாக மயங்கியே கண்ம றைக்கும்
மார்பிலே வலியோடு இரும லுண்டாம்
துருத்தாக வயிறதனிற் பசியோ இல்லை
சுவாசமாம் பித்தத்தின் சூட்சந் தானே 362

சுவாசம் அதிகமுண்டாகும். வயிறு ஊதிக் காணப்படும். உடல் அதிகம் வலிக்கும். வாயில் கேணிபோல் நீர் ஊறிக் கொண்டே இருக்கும். மயக்கமுண்டாகி கண்களை மறைக்கும். வலியுடன் இருமல் உண்டாகும். பசியிருக்காது. இவை சுவாச பித்தத்தின் குணங்களாகும்.

சேட்ப பித்தம்

சூட்சமாஞ் செம்புதனிற் களிம்பு போலும்
துரிதாக வாயெடுக்கும் செகப்பாய் வீழும்
மாட்சமா மலமிருக்கிச் சிவப்பு போலாம்
மயக்கமொடு வியர்வைதான் செந்நீர் பாயும்

தாட்சமாந் தண்ணீர்தான் மிகத்த விக்கும்
தலைதானுந் திருப்பியே தவக்க முண்டாம்
தேட்சமாந் திடுக்கொடு பயமு மாகும்
சிறுகதிர் போல்மேனிச் சேட்ப மாமே 363

செம்பில் உள்ள களிம்பை உண்டதுபோல உடனே வாந்தியுண்டாகும். அவ்வாந்தி சிவப்பு நிறத்துடன் காணப்படும். மலம் இறுகி சிவந்து போகும். மயக்கமுண்டாகும். வியர்வையில் கூட சிவப்பு நிறம் காணப்படும். அதிக தண்ணீர் தாகமெடுக்கும். தலை திரும்பி தவக்கமுண்டாகும். திடுக்கிட்டுப் பயமேற்படும். இவை சிலேத்தும பித்தத்தின் குணங்களாகும்.

கரும்பித்தம்

செம்பித்த மாகியேதியக் கமுண் டாய்ச்
சிரசோடு மெய்நடுக்குந் தலைவ லிக்கும்
கம்பித்த மாகியே கண்ணு றங்கும்
கடைக்கண்தான் சிவந்து மின்மினி யாகும்
நம்பித்தஞ் சடமெல்லாங் கனத்து வற்றும்
நாவுதனில் ருசியில்லைப் பசியு மில்லை
வம்பித்தங் கருப்பாகி வாந்தி யுண்டாம்
மாசடையுங் கரும்பித்தம் வளப்பந் தானே 364

தியக்கமுண்டாகி தலையோடு மெய் நடுக்கும். தலைவலிக்கும். அதிக உறக்கம் ஏற்படும். கடைக்கண் சிவந்து மினுமினுக்கும். உடல் எல்லாம் கனத்து வற்றிப் போகும். நாவில் ருசியிருக்காது. பசியிருக்காது. கருப்பாக வாந்தி எடுப்பர். இவை கரும்பித்தத்தின் குணங்களாகும்.

கரப்பான் பித்தம்

வளப்பமாஞ் சரீரமெல்லாஞ் சொறியுண் டாகி
வருத்த மிகவாகியே கட்டி கட்டும்
குளப்பமாய் வயிறுதான் பேதி யாகும்
குமரலா யிருமியேயி மூத்துக் கொள்ளும்
இளப்பமாய்க் கால்தானும் பெலன்கே டாகும்
இடுப்பிலே வலியுண்டாகித் திமிருண் டாகும்
களப்பமாய்க் கருகியே மேனி யெல்லாம்
கந்துக ரப்பான்பித்தங் கண்டி டாயே 365

உடல் எல்லாம் சொறியுண்டாகும். உடலில் வருத்த முண்டாகும். கட்டிகள் தோன்றும், வயிறு பேதியாகும். இருமல்

உண்டாகி கழுத்து நரம்புகள் இழுத்துக் கொள்ளும். கால்களில் பலமிருக்காது. இடுப்பில் வலியுண்டாகி திமிருண்டாகும். மேனி கருகும். இவை கரப்பான் பித்தத்தின் குணங்களாகும்.

அசிரண பித்தம்

கண்டிட்ட மந்தமாய்ப் பசியோ இல்லை
கடுத்துமே நளிராகி மலமி றுக்கும்
வெண்டிட்ட விழிகரித்து நீர்தான் பாயும்
மிக்கதலை வலிக்கும்வயி றிரைச் சலாகும்
அண்டிட்ட அடிவயிறு அழுத்த மாகும்
அசன மிகச்செல்லாது கைகா லோயும்
பண்டிட்ட பிளித்தேக்காய் வாய்நீ ரூறும்
பண்பான வசீரண பித்தம் பயின்றி டாயே 366

வயிறு மந்தமாகி பசியிருக்காது. உடல் கடுத்து நடுக்க முண்டாகும். மலம் இறுகும். விழி கரித்து நீர் வடியும். தலை வலிக்கும். வயிறு இரைச்சல் தரும். அடிவயிறு அழுத்தம் கொடுக்கும். உணவில் விருப்பமிருக்காது. கைகால் ஓய்ந்து போகும். வாயில் அதிக நீர் ஊறும். இவை அசீரண பித்தத்தின் குணங்களாகும்.

அருசி பித்தம்

பயின்றிட்ட மனமறுத்துக் குடல்பி ரட்டிப்
பாங்கான வாந்தியொடு அருசி யாகித்
தியன்றிட்ட தியக்கமாய்ச் சிரசி லேறித்
திருப்பியே தலைதன்னைப்பிறகே வீசும்
நவின்றிட்ட வடிநாக்கு மிகத் தடித்து
நாவிலே உணர்ச்சியில்லா துறக்க மற்று
அவின்றிட்ட வாகாயமெ ரிதல் போலாம்
அதட்டுமே அருசியென்ற பித்தந் தானே 367

மனம் மறுத்து குடல்பிரட்டி வாந்தியுண்டாகும். சுவையின்மை யாகும். தியக்கமாய்ச்சிரசிலேறித்தலையை அக்கம் பக்கம் திருப்பிக் கொண்டே இருக்க வைக்கும். அடிநாக்கு தடித்து நாக்கில் உணர்ச்சியில்லாது போகும். உறக்கம் இருக்காது. ஆகாயமே எரிவதுபோல் தோன்றும். இவை அனைத்தும் அருசிப்பித்தத்தின் குணங்களாகும்.

எரிபித்தம்

அதட்டியே அடித்துடைதா னிரண்டு பாதம்
அழகான கண்ணோடு உள்ளங் கால்கள்
கதட்டியே உள்ளங்கை யெரிவு காணும்
காதிரண்டு மூக்கோடுவ ரண்டு போகும்
முதட்டியே முதுகுமுழங் கைகால் தன்னில்
முதிர்ந்த அருவிப்பாக மெத்த வாகும்
பதட்டியே காற்றுதான் மிகவே வேண்டும்
பாராம லெரிபித்தம் பயின்ற வாறே 368

இரு அடித்தொடைகள், பாதங்கள், கண்கள், உள்ளங் கால்கள், உள்ளங்கைகள் ஆகியன எரிச்சல் தரும். காதுகளும் மூக்குகளும் வரண்டு போகும். முதுகு, முழங்கை, கால்கள் ஆகியவற்றில் எரிச்சல் உண்டாகும். காற்று அதிகம் தேவைப் படும். இவை எரிபித்தத்தின் குணங்களாகும்.

அழல் பித்தம்

வாறான இளமைதனில் மிகந ரைக்கும்
வடிவெல்லா மிகவெளுப்பாய்த் தானி ருக்கும்
காறான கடைக்கண்தான் மிகச்சி வக்கும்
கண்டபல ஞானங்கள் மிகவே பேசும்
தூறான வார்த்தைகள் மிகச் சிக்கென்று
துடியிடை யார்மேலின்பந் திறந்து கூறல்
பாறான பலகலைதான் மிகவு ரைத்தல்
பாடுமே யழற்பித்தம் பரிசு தானே 369

இளமையிலேயே முடி நரைக்கும். உடல் வெளுக்கும். கடைக்கண் மிகவும் சிவக்கும். ஞானம் பேசுவார்கள். வார்த்தைகள் அதிகம் வெளிவிடாது பேசுவர். பெண்கள் மேல் ஆசையை வெளிப்படையாகக் கூறிவிடுவர். பல கலைகளை கற்பர். இவை அழற்பித்தத்தின் குணங்களாகும்.

துடி பித்தம்

பரிசுதான் உடம் பெல்லா மிகத் துடித்துப்
பாண்டுவாய் மேனியுந்தான் பச்சென் றாகும்
உரிசைதா னில்லாமல் உண்ண மாட்டார்
ஒட்டமே மிகுதியாய லையப் பண்ணும்
அரிசுமே யாயிழைமேல் மனப்புண் ணாகும்
அடிக்கடிக்கு ஆரோடுஞ் சண்டை கொள்ளும்
துரிசுதான் மிகப்பண்ணு மேது வண்டில்
துடிபித்தந் தன்னுடைய சொரூப மாமே 370

உடல் மிகவும் துடிக்கும். மேனி பச்சென்று ஆகிவிடும். நாவில் ருசியில்லாததால் உண்ணமாட்டார். மிகவும் அலைச்சலை உண்டுபண்ணும். அடிக்கடி சண்டையிடுவர். படபடப்பாக இருப்பார்கள். இவை துடி பித்தத்தின் குணங்களாகும்.

விஷ பித்தம்

சொரூபமாய் சோர்ந்துமே விழுந்தி ருக்கும்
தூற்றுமே கொடுமைதன்னை யாரோ டுந்தான்
உரூபமா யுள்ளங்கால் தனிலி ருந்து
உயரமா யேறுமுச்சந் தலைதன் னிற்றான்
திருபமா விஷமிறங்கும் மேலே ஏறும்
திரேகமெல்லாம் வலியுண்டாய்க் கண்டிப் பாகும்
அருபமா யசனமிகத் தானுஞ் செல்லா
அரிதான விஷப்பித்த மசாத்ய மாமே 371

சோர்ந்து விழுவர். தன் குறைகளை எல்லாரிடமும் கூறுவர். உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை விஷம் ஏறுவதுபோல ஏறும். உடல் எல்லாம் வலியுண்டாகும். சுண்டிப்போகும். உணவு அதிகம் செல்லாது. இவை விஷப் பித்தத்தின் குணங்களாகும். இது அசாத்ய நோயாகும்.

அதிசார பித்தம்

அரிதான வயிறதனிலி ரைச்ச லாகும்
அடிவயிறு பிடுங்கியே பேதி யாகும்
உரிதான உப்பசந்தான் மெத்த வாகும்
ஒளிவிலாப் பக்கத்தில்வ லியு மாகும்
எரிவான ஈரலெல்லாங் குமறல் காணும்
ஏற்றமாய்த் தாகமொடு மயக்க மாகும்
சரிதான உரோசிகமா சத்தி யாகும்
சலிக்குமே யதிசாரப் பித்த மாமே 372

வயிற்றில் இரைச்சல் உண்டாகும். அடிவயிற்றை வலித்து பிடுங்கினாற்போல் பேதியாகும். வயிறு உப்பிசமாகும். விலாப் பக்கங்களில் வலியுண்டாகும். ஈரலில் குமுறல் தோன்றும். தாகத்துடன் மயக்கம் தோன்றும். வாந்தியுண்டாகும். இவை அதிசாரப் பித்தத்தின் குணங்களாகும்.

மூலபித்தம்

சாரமாய் வயிறிரைந்து பேதி யாகும்
சலிப்பான கோபமாய்த்த டுமா றாடும்
கோரமா மூலத்தில்மு ளையுங் காணும்
குறங்கினோட டித்துடையுங் கடுப்பு முண்டாம்
சோரமா வுடல்வெளுத்து சோபை யாகும்
தூக்கமே மிகமிஞ்சிச் சோம்ப லாகும்
காரமாய்க் கண்ணுந்தான் கரிச்ச லுண்டாம்
கனமூல பித்தத்தின் காட்சி யாமே 373

வயிறு இரைந்து பேதியாகும். சலிப்பும் கோபமும் உண்டாகி தடுமாறும். அபான வாயில் முளையுண்டாகும். கெண்டைக் காலுடன் அடித்தொடையும் கடுப்புடன் வலிக்கும். உடல் வெளுத்து இரத்த சோகையுண்டாகும். தூக்கத்துடன் மிகவும் சோம்பலாகும். கண்கள் கரிக்கும். இவை மூலபித்தத்தின் குணங்களாகும்.

உதிர்பித்தம்

ஆமென்ற அங்கமெல்லா மம்மை வார்த்து
ஆட்டினாற் போலவேதி னவு மாகும்
போமென்றே சரீரமெல்லாம் புண்க ளாகும்
புழுதியள்ளிப் பூசினாற் போற்ச ரீரம்
வாமென்ற வடிவமது மஞ்ச ளாகும்
மலசலமுஞ் சுருங்கியே வாட்ட மாகும்
நாமென்ற நாடியது துவண்டு காணும்
நாட்டமுண்டா முதிர்பித்த நாடு வோர்க்கே 374

அங்கம் முழுவதும் அம்மை வார்த்ததுபோல் தினவுண்டாகும். உடல் எல்லாம் புண்களாகும். புழுதியை அள்ளி பூசினாற்போல் ஆகும். உடல் மஞ்சள் நிறமாகும். மலமும் சிறுநீரும் கட்டும். உடல்வாடிவிடும். நாடி துவண்டு காணப்படும். இவை உதிர்பித்தத்தின் குணங்களாகும்.

கண்டபித்தம்

நாடினாற் குரலினைத்தான் கனத்து கொண்டு
நற்கசப்பாய் சத்தியது தானெ டுக்கும்
வாடியே கண்டத்திற் புண்போ லாகும்
வழவழத்து நாவெல்லாம் வரண்டி ருக்கும்

தாடியே தாளடியில் கனப்புண் டாகும்
சமுத்திரத் தினோசைபோற் காதி லுண்டாம்
பேடியா மயிருஞ் செம்பட்டை யாகும்
பிறவிசுவாங் கண்டபித்தம்பி ரதாபந் தானே 375

குரல் கனத்துப் போகும். கசப்பாய் வாந்தியுண்டாகும். தொண்டையில் புண் உண்டாகும். தொண்டை வழவழத்து காணப்படும். நாக்கு வரண்டு போகும். கன்னத்துக்குக் கீழே கனப்புண்டாகும். காதில் கடல் இரைச்சல் போல கேட்கும். முடி செம்பட்டையாகும். இவை கண்டபித்தத்தின் குணங்களாகும்.

ஓடுபித்தம்

பிரதா பமாகியே ஓடி யெங்கும்
பெற்றலா லுதாசினங்கள் மெத்தப் பேசும்
நிரதா பமாகவே பல்க டிக்கும்
நெருப்பாகக் கண்சிவக்கும் நிமைத்து மூடும்
குரதா ப்மாகவே கூவற் போடும்
கொக்கரிக்குங் கூத்தாடுங்கு றிச்சே பார்க்குங்
அரதா பமாகவே யாண்மை யுண்டாம்
அசாத்திய மாமோடுபித்த மணுகி னோர்க்கே 376

ஒரு பித்த நோயில் அங்குமிங்கும் ஓடுவார்கள். உதாசீனம் செய்வார்கள். அதிகம் பேசுவார்கள். பல் கடிப்பார்கள். கண்கள் சிவந்து அடிக்கடி இமை மூடும். கூச்சல் போடுவார்கள். கொக்கரிப்பார்கள். கூத்தாடுவார்கள். ஒரே பொருளை உற்று நோக்குவார்கள். ஆண்மை அதிகரிக்கும்.

மூடுபித்தம்

அணுகியே யாபரணப் பொன்ற னைத்தான்
அகப்பட்ட விடந்தனிலே புதைத்துப் போடும்
மணுகியே மனிதரைத்தான் கண்ட போதே
வார்த்தைகள்தான் உதாசீனங்கள் வசனிப் பாகும்
நணுகியே நாக்குக்குள் தானே பேசும்
நலத்தண்டி பண்ணியே யிருக்குங் கைகள்
மினுகியே எந்நேரம ன்னம் வேண்டா
மிக்கான மூடுபித்த மீறி னோர்க்கே 377

ஆபரணப் பொருட்களை, பொன் நகைகளை கிடைத்த இடத்தில் புதைக்கும். மனிதர்களைக் கண்டால் அதிகமாக உதாசினப்படுத்தி திட்டுவார்கள். தனக்குள்ளே பேசுவர். கைகள்

நிலத்தினை நோண்டிக் கொண்டே இருக்கும். உணவை வேண்டா மென்று கூறுவார்கள். இவை மூடுபித்தத்தின் குணங்களாகும்.

நடுக்குபித்தம்

மீறியே தலையொடு சிரசு நெற்றி
மிக்கான பிடரியொடு முதுகுத் தண்டு
காறியே கண்டங்கள் கதுப்போ டொக்கக்
கனமான நடுக்கியே காந்தி யாகும்
சீறியே கசப்பாக வாந்தி யாகும்
சிணுக்கிரு மலாயிருமுந் தூக்க மில்லை
ஊறியே வாய்நீர்தான் மார்பில் வீழும்
ஊறுமே நாத்தானும் நடுக்கும் பித்தம் 378

தலையில் உச்சி, நெற்றி, பிடரி ஆகியவையும் முதுகுத் தண்டு, கழுத்து, தாடை ஆகியவற்றிலும் நடுக்கமுண்டாகும். கசப்பாக வாந்தியுண்டாகும். சிணுக்கிருமலுண்டாகும். தூக்க மிருக்காது. வாய்நீர் ஊறி மார்பில் விழும். நாக்கு அதிகம் ஊறும். இவை நடுக்குவாதத்தின் குணங்களாகும்.

கபால பித்தம்

நடுக்குமே கபாலந்தான் சிரசோ டொக்க
நளிராகி உடம்பெங்கும் கடுப்பு மாகும்
விடுக்குமே அம்புபோற் சிரசெல் லாந்தான்
மேனியுமே மஞ்சனிற மாகுங் கண்டாய்
முடுக்குமே மூக்குதண் டெல்லா நோகும்
முகமெல்லாம் வீங்கியே மூர்ச்சை காணும்
படுக்குமே அடிக்கடிதான் எழுந்தி ருக்கும்
பாரமாங் கபாலபித்தப் பண்பு தானே 379

சிரசில் கபாலம் முழுதும் நடுக்கமுண்டாகும். உடலெங்கும் கடுப்புண்டாகும். தலையெங்கும் அம்புபோல் தெறிக்கும். உடல் மஞ்சள் நிறமாகும். மூக்கின் தண்டெல்லாம் நோகும். முகம் வீங்கி மூர்ச்சையுண்டாகும். அடிக்கடி படுப்பதும் எழுவதுமாக இருப்பர். இவை கபால பித்தத்தின் பண்புகள் ஆகும்.

சத்திபித்தம்

பாரமா யுடம்பெங்குந் திமிருண் டாகும்
பதைத்துமே ஈரலுக்குள் வலியுண் டாகும்
வாரமாய் வாய்கைப்புற்று வாந்தி யுண்டாம்
மகத்தான தலையொடொக்க மயக்க மாகும்

ஆரமாய் அக்கினிதான் மிகவுண் டாகும்
அரோசிக மாயெந்நேர மாண்மை குன்னும்
தாரமாய்த் தண்ணீர்தான் மிகவேண் டாது
சமிக்காது சத்திபித்தத் தாண்மை தானே 380

உடல் எங்கும் திமிருண்டாகும். ஈரலில் வ்லியுண்டாகும். வாய் கசந்து வாந்தியுண்டாகும். மயக்கமுண்டாகும். உடல் சூடடையும், வாய் ருசிக்காது. ஆண்மை குன்றிப்போகும். தண்ணீரை விரும்பார்கள். இவை சத்திபித்தத்தின் குணங்களாகும்.

தாகபித்தம்

ஆண்மையா யடிவயிற்றிற் பதைப்புண் டாகும்
அங்கமெல்லாம் வெவ்வழல்போ லழன்று காணும்
தாண்மையாய் தண்ணீர்தான் மிகக்கு டிக்கும்
சயித்திய மாப்பண்டத்தி லிச்சை யாகும்
காண்மையாய் கண்டத்தில்வி யர்வை காணும்
கழுத்தடி நாவடியு மிசித்துக் கொள்ளும்
பூண்மையாய் புளிப்புமே லிச்சை யாகும்
புகலரிய தாகபித்தம் பேச லாமே 381

அடிவயிற்றில் பதைப்புண்டாகும். உடலில் எல்லா பாகமும் தீபோல் சுடும். தண்ணீரை அதிகம் குடிப்பர். பலகாரங்கள்மேல் ஆசையுண்டாகும். கழுத்தில் வியர்வை தோன்றும். கழுத்தின் கீழ்பாகமும் நாக்கின் கீழ்பாகமும் இழுத்துக் கொள்ளும். புளிப்புச் சுவைமேல் அதிக ஆசையுண்டாகும். இவை தாக பித்தத்தின் குணங்களாகும்.

விக்கல் பித்தம்

தாகமுடன் சத்தியாய் விக்க லாகும்
தவிப்பெய்தி சரீரமெல்லாஞ் சயித்ய மாகும்
பாகமுடன் றலைபிரட்டுக் கிடை கொடாது
பால்போல வாயினிலே நுரையுந் தள்ளும்
சாகமுடன் சயித்தியத்தில் மிகக்கி டக்கும்
தணலாக உடல்வெதும்புந் தளர்ச்சி யாகும்
சோகமுடன் கைகால்தான் ஓச்ச லாகும்
சுருக்கிடுமே விக்கல்பித்தஞ் சுருதி தானே 382

தாகம், விக்கல், வாந்தி ஆகியன வுண்டாகும். தவிப்புடன் உடல் எல்லாம் சயித்தியமாகும். தலையைப் பிரட்டும். ஓரிடத்தில் இருக்கவிடாது. பால்போல வாயில் நுரை தள்ளும். சயித்தியத்தில்

மிகவும் கிடக்கும். உடல் வெதும்பி தளர்ச்சி யாகும். கைகால் ஓச்சலுண்டாகும். இவை விக்கல் பித்தத்தின் குணங்களாகும்.

சயபித்தம்

சுருதியா யிருமலது மிகவு முண்டாய்
சூட்சமாய் வெதும்பலொடு தண்ணீர் தாகம்
பருதியா யுடல்வெளுத்து பாண்டு வாகும்
பஞ்சுபோற் கண்களெல்லாம் வெளுப்பாய் போகும்
குருதியாய் நெஞ்சுதனிற் கோழை கட்டும்
குணுக்காகக் கட்டிபோற் சளியே வீழும்
நிருதியாய் நெஞ்சுதனில் எரிவுண் டாகும்
நித்திரையே மிஞ்சுசய பித்தந் தானே 383

இருமல் அதிகமுண்டாகும். உடல் வெதும்பும். தண்ணீர் தாகமெடுக்கும். சூரியன்போல் உடல் வெளுத்து பாண்டு நோயுண்டாகும். பஞ்சுபோல் கண்கள் வெளுத்துப் போகும். நெஞ்சில் கோழை கட்டும். தொண்டையிலிருந்து கட்டியாக சளி விழும். நெஞ்சில் எரிவுண்டாகும். உறக்கம் அதிகம் உண்டாகும். இவை சயபித்தத்தின் குணங்களாகும்.

திமிர்பித்தம்

பித்தமா யுடம்பதுதான் மிகம யக்கும்
பேதமாய் வயிறெங்கு முள்ளு போலாம்
நித்தமாய்க் காலமே வாந்தி யாகும்
நினைவோடு நித்திரையு மசதி யாகும்
பத்தமா யொன்றையேபி டித்து நிற்கும்
பாரமா யுடம்பெங்குந் திமிருண் டாகும்
சுத்தமாய்ச் சரீரமெல்லாந் தூசுண் டாகும்
துருசுநடை கொடாதுதிமிர் பித்தந் தானே 384

உடல் மயங்கும். வயிறு எல்லாம் முள்போல குத்தும். காலையில் வாந்தியுண்டாகும். அதிக அளவு தூக்கமும், அசதியும் உண்டாகும். எதையாவது பிடித்துக் கொண்டுதான் நிற்கவேண்டும் போலிருக்கும். உடல் எங்கும் பாரமாகி திமிர் உண்டாகும். சரீரமெல்லாம் தூசியுண்டாகும். நடக்க இயலாது. இவை திமிர்பித்தத்தின் குணங்களாகும்.

வலிபித்தம்

நடைகொடா தடிவயிற்றிலி ழுத்து நொந்து
நாவறண்டு தலையெல்லா மிகக்க னத்து
இடைகொடாச் சந்தெல்லா நோவுண் டாகி
ஈரல்தனிற் குலைதனிலே வலித்து நோவாம்
படைகொடா மலந்தானும் பச்சென் றாகும்
படபடத்து உடம்பெங்கும் பக்கங் கொள்ளும்
மடைகொடா வயிற்றெரிச்சல் மெத்த வாகும்
மார்படைக்கும் வலிபித்த வண்மை தானே 385

நடக்க இயலாது. அடிவயிற்றில் இழுத்து நொந்து போகும். அதிகமாக நாவறண்டு. தலையெல்லாம் மிகவும் கனத்துக் காணப்படும். மூட்டுக்கள் தோறும் நோவுண்டாகும். ஈரலிலும், நுரையீரலிலும் வலிக்கும். மலம் பச்சென்று போகும். உடல் முழுதும் வலிக்கும். வயிற்றில் இரைச்சல் அதிகமாகும். மார்பு அடைக்கும். இவை வலிபித்தத்தின் குணங்களாகும்.

சீதபித்தம்

வண்மையா யுடம்பெங்கும் வடியுந் தண்ணீர்
மயக்கமா யுடல்கனத்தும் பார மாகும்
புண்மையாய்ப் பிடரிதனிலி சிவுண் டாகும்
பொருமியே வயிறுப்பு சந்தா னாகும்
திண்மையா யுடல்கனத்துச் செக்கு போலாம்
சீறியே மிகவிருமிச் சிந்தை கேடாம்
செண்மையாய் வாய்நீர்தான் உப்பு ரைக்குஞ்
சிறுநீருஞ் சிகப்பாகுஞ் சீத பித்தம் 386

உடல் எங்கும் தண்ணீர் வடியும். உடல் கனைத்துப்போய் பாரமாகத் தோன்றும். பிடரியில் இழுப்பு உண்டாகும். வயிறு உப்பிசமாகக் காணப்படும். உடல் பருத்து செக்கு போலாகும். மிகவும் அதிகமாக இருமல் உண்டாகும். மனம் கெடும். வாய்நீரில் உப்புச் சுவை அதிகமாயிருக்கும். சிறுநீர் சிவந்து காணப்படும். இவை சீதபித்தத்தின் குணங்களாகும்.

கிருமிபித்தம்

சீதமா யடிவயிற்றிற் றிமிருமுண் டாகிச்
செழுமையா யுடம்பெங்குந் தினவு மாகி
வாதமா யுடம்பெங்குங் கடுப்புண் டாகி
வற்றியே மலசலமும் வரண்டு போகும்

காதமாய் கால்கைகள்க தலித் தண்டு
கனத்தது போல்வெச்சென்று கடுப்பு மாகும்
நாதமாய் மலந்தன்னிற் கிருமி வீழும்
நாறுமே யுடல் கிருமிப் பித்த மாமே 387

அடிவயிற்றில் திமிருண்டாகி உடல் எல்லாம் தினவுண்டாகும். அங்கமெல்லாம் கடுக்கும். மலமும் சிறுநீரும் வரண்டு போகும். கால்கைகள் வாழைத்தண்டு போல கனத்துப் போகும். மலத்தில் கிருமிகள் தோன்றும். உடல் நாறும். இவை கிருமிப் பித்தத்தின் குணங்களாகும்.

அசாத்திய பித்தம்

உடம்பதுதான் லாகிரிகள் தின்ற வன்போல்
உணர்ச்சி தானில்லாமற் பிடவை கட்டா
துடம்புதா னழலறுக்குந் தண்மை போலத்
தவிச்சுமே தாகந்தான்மி கவுண் டாகும்
வடம்புதான் வாதாடும னித ரோடே
வார்த்தைகள் தான்பலபேசும் வசனிப் பாகும்
வடம்புதா னுக்கிரமாய் கண்சி வக்கும்
வாய்வரளு மசாத்திய பித்தந்தா னென்றே 388

அசாத்திய பித்தத்தில் உடல் லாகிரி உண்டதுபோல் உணர்ச்சியற்று மேனியில் துணி கட்டாது இருக்கும். தீபோல் தகித்து அதிக தண்ணீர் தாகமுண்டாகும். பிறருடன் அதிகம் வாதிடுவர். அதிகமாகப் பேசிக்கொண்டே யிருப்பார்கள். கண்கள் சிவந்து போகும்.

மார்க்கபித்தம்

தானென்ற சகலநூல் தான்றான் பேசும்
சடுதியி னிலுட்காரு மோட்டம் பாயும்
போனென்ற பிடவையைத்தான் கிழித்து போடும்
புலம்புமே வாயில்வந்த தெல்லாம் பாடும்
தேனென்ற சிரசோடு பிடரி யெல்லாம்
சிக்கனெவே இசுவாகுந் தேகம் வாடும்
பானென்ற பலபலவாங் கருமஞ் செய்யும்
பழிக்குமே பிறரைத்தான் மார்க்க பித்தம் 389

சகல நூல்களையும் கற்றுக் கொள்ளும். ஓரிடத்தில் உட்காராமல் அங்கும் இங்கும் ஓடும். துணியைக் கிழித்துக் கொள்ளும் வாயில் வந்ததையெல்லாம் புலம்பும். சிரசுடன் பிடரி

அனைத்திலும் இழுப்புண்டாகும். தேகம் வாடிப்போகும். பலப்பல வேலைகளைச் செய்யும். பிறரைப் பழிக்கும் இவை மார்க்க பித்தத்தின் குணங்களாகும்.

மருந்திடு பித்தம்

மார்க்கமா மனதுதான் மௌன மாகும்
வடிவெங் குழுதியே நெஞ்சு வற்று
ஊர்க்கமா யுடம்பதுதா னசதி யாகும்
ஊணுறக் கமில்லாம லுழலு மெங்கும்
தேர்க்கமாந் திடுக்கிட்டுச் சிதைவாம் புத்தி
சேயிழையார் மருந்தினாற் றிரட்சி யாகி
ஆர்க்கமா யடிக்குடலில் மிகுந்து பாசி
அடங்காது மருந்தீடு பித்த மாமே. 390

மனது மௌனமாகும். உடல் ஊதி நெஞ்சு வற்றும். உறக்கமும், உணவும் செல்லாமல் அங்குமிங்கும் அலைவர். திடுக்கிட வைக்கும். புத்தி சிதையும். பெண்கள் செய்த மருந்தீட்டினால் அடிக்குடலில் தங்கி பாசி பிடிக்கும். இவை மருந்தீடு பித்தத்தின் குணங்களாகும்.

ஆமப்பா பித்தமது நாற்பத்தி ரண்டின்
அடவான குணமெல்லா மாய்ந்து பார்த்து
தாமப்பா சதாசிவன்றான் தன்வந் திரிக்கு
தயவுடனே அனுக்கிரகம் பண்ணிச் சொல்ல
வாமப்பா தன்வந்திரிய சுவினி தேவர்க்கு
மகிழ்ந் துரைக்கவசுவி னிதேவர் தாமும்
தேமப்பா அகஸ்தியமா முனிக்குச் சொல்ல
சித்தமகிழ்ந் தேயுரைத்தார் புலத்தி யர்க்கே 391

பித்தநோய்கள் நாற்பத்ரெண்டின் குணத்தை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து சிவன் தன்வந்திரிக்குச் சொல்ல தன்வந்திரி அசுவினி தேவர்க்கும், அசுவினி தேவர் அகத்தியருக்குச் சொல்ல அவர் புலத்தியருக்குக் கூறினார்.

புலத்தியருந் தேரையமா முனிவ னுக்குப்
போதிக்கத் தேரையரா முனிவன் றானும்
தலத்தியராம் யூகியாம் எனக்குச் சொல்ல
சாங்கமா யூகியென்ற முனியாம் யானே
வலத்தியராய் வடமொழியின் விரிவாய்த் தானே
மானிடர்கள் தமக்குரைத்தேன் மறைப்பில் லாமல்
குலத்தியராங் குருவினிட வுபதே சத்தாற்
குத்த பித் தநாற்பத்தி ரண்டு முற்றே 392

புலத்தியர் தேரையருக்கும், தேரையர் யூகிமுனியாகிய எனக்குச் சொல்ல நான் வடமொழியினைப் பார்த்து எழுதிய இந்நூலை மனிதர்கள் நலம்பெறக் கூறினேன். குருவின் உபதேசத்தாற் பித்தநோய்கள் நாற்பத்திரண்டும் முற்றியது.

பித்தரோக நிதானம் முற்றிற்று

சேட்பரோக நிதானம்

முற்றான சேட்பந்தானி ருபத் தொன்றும்
முனியுரைத்த சொற்படியே மொழியக் கேளாய்
சிற்றான விருமலாஞ் சிலேட்பத் தோடு
செறிகாசச் சிலேட்டுமமாஞ் சுவாசச் சிலேட்பம்
மற்றான தீபனசி லேட்பத் தோடே
மந்தசி லேட்டுமம்வாத சிலேட்ப மாகும்
துற்றான பித்தசிலேட்பந் தொந்தசி லேட்பம்
சுகசன்னி வாதசிலேட் பந்தா னாமே 393

சிலேத்தும நோய் இருபத்திரண்டின் வகையைக் கேட்பாயாக. இருமல் சிலேத்துமம், காசசிலேட்டுமம், சுவாசச் சிலேட்டுமம், தீபன சிலேட்டுமம், மந்தசிலேட்டுமம், வாதசிலேட்டுமம், பித்த சிலேட்டுமம், தொந்த சிலேட்டுமம், சுகசன்னிவாத சிலேட்டுமம் ஆகியவற்றோடு

ஆகுமே சுரசிலேட்பம திசார சிலேட்பம்
அதிகசல சிலேட்டுமமா வக்கினி சிலேட்பம்
போகுமே பூதசிலேட்ப முயல கன்றான்
பொறிவெறிச்ச சிலேட்டுமமாம் விகார சிலேட்பம்
சோகுசு ரோணிதசேட்பம் விரண சேட்பம்
துர்க்கந்த சிலேட்டுமமா நித்யசி லேட்பம்
நாகுமே இருபத்தொன்றாஞ்சி லேட்பம்
நாட்டினேன் வரலாறு நயந்து கேளே 394

சுரசிலேத்துமம், அதிசார சிலேத்துமம், சலசிலேத்துமம், அக்கினி சிலேத்துமம், பூதசிலேத்துமம், முயலக சிலேத்துமம், வெறிசிலேத்துமம், விகார சிலேத்துமம், சுரோணித சிலேத்துமம், விரணசிலேத்துமம், துர்க்கந்த சிலேத்துமம், நித்ய சிலேத்துமம் ஆகியவற்றோடு சிலேத்துமவகை இருபத் தொன்றாகும். இனி இவற்றின் வரலாற்றைக் கேட்பாயாக.

நயமாக ஒருவருடன் பேசும் போது
நாவிலொன்று மனதிலொன்று நாடும் பேர்க்கு
பயமாக வந்தவர்கட் கிடங் கொடாத
பாதகர்க்கும் வேதத்தைப் பழிக்கின் றோர்க்கும்
துயமாகச் சூரியருக் கெதிரே நின்று
துரிசாக மலசலங்கள் விட்ட பேர்க்கும்
செயமாக விஷ்ணுசமயஞ் சிவச மயந்தான்
திடகரித் ததுரோகிக்கும் சேட்ப மீறும் 395

ஒருவரிடம்பேசும்பொழுது மனதில்ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் வேறுமாதிரி பேசுபவர்களுக்கும், அடைக்கலம் தேடி வந்தவர்களுக்கு இடம் கொடுக்காதவர்களுக்கும் வேதத்தைப் பழிக்கின்றவர்களுக்கும், சூரியனுக்கு எதிராக இருந்து மலம் சிறுநீர் கழிப்பவர்களுக்கும், சிவ, வைணவ சமயங்களை எதிர்ப்பவர்களுக்கும் கபரோகம் அதிகரிக்கும்.

மீறியே தித்திப்புப் புளிப்புத் தானும்
மிகத் தின்னுங்கிழங்கு வகைய ருந்தினாலும்
சாறியே சயித்தியமாங் குளிர்ந்த பண்டந்
தண்ணீர்தான் பழையதுக ளருந்த லாலும்
சீறியே தன்வயது தனக்கு மூத்த
ஸ்திரீகளு டனனுபோகம் செய்த லாலும்
மாறியே மயானபுகை படுத லாலும்
வருகுமே சேட்பத்தின் மகிமை தானே 396

இனிப்பு புளிப்பு சுவையுள்ள பொருட்களை அதிகம் உண்ணுவதாலும், கிழங்கு வகைகளை அதிகம் உண்பதாலும் குளிர்ந்த பண்டம், குளிர்ந்த நீர், பழைய சோறுஆகியவற்றை உட்கொள்வதாலும் தன்னை ஒத்த வயது அல்லது தனக்கு மீறிய வயதுடைய பெண்களுடன் போகம் செய்தாலும், மயான புகை மேலே படுதலாலும் கபரோகம் உண்டாகும்.

சிலேட்டுமம் வர்த்திக்குங் காலம்

மகிமையாய் மாசியொடு பங்கு னிதான்
மருவியே வர்த்திக்கு மையந் தானும்
நகிமையாய் வைகாசித னிற்கோ பிக்கும்
நன்மையாய்ச் சமிக்கின்ற காலங் கேளாய்
அகிமையா யாடிதனில் மிகச்ச மிக்கும்
ஆவணியும் புரட்டாசி தன்னிற் கேளாய்
தகிமையாய்த் தாட்சியாங் கால மாகும்
சதாசிவன்றான் சொன்னபடி சாற்றி னேனே 397

கபமானது மாசி பங்குனியில் தோன்றி வைகாசியில் சோபிக்கும். ஆடியில் குறைந்து ஆவணி புரட்டாசியில் அதிகரிக்கும். சதாசிவன்கூறியபடி உனக்கு நான்கூறிவிட்டேன்.

இருமல் சிலேட்பம்

சாற்றியே யினிப்புநெய்ப்பாய்ச் சளியே வீழும்
தளுக்காகு முகந்தானுங் குளிருண் டாகும்
மாற்றியே மூக்கதனில் நீரோ பாயும்
மாசற்ற வுடம்பெல்லாம் வெள்ளை யாகும்
சீற்றியே மலந்தன்னிற் சீத முண்டாய்ச்
சிறுநீரு மஞ்சளித்து சிறுக வீழும்
காற்றியே உடம்புக்குள் மெதுசூ டாகும்
கனவிருமலாஞ் சேட்பங்க ணக்குத் தானே 398

இனிப்புச் சுவையுடனும், நெய்ப்பசையுடனும் சளி விழும். முகத்தில் குளிருண்டாகும். மூக்கில் நீர் பாயும். உடல் எல்லாம் வெளுத்துவிடும். மலத்தில் சீதம் கலந்து செல்லும். சிறுநீர் மஞ்சளித்து வீழும். உடல் மெதுவாகச் சூடாகும். இது இருமல் சிலேத்துமத்தின் குணமாகும்.

காசசிலேட்பம்

கணக்காகச் சரீரந்தான் சீதளம தாகிக்
கனத்துமே தமத்திட்டுப் பார மாகி
மணக்காக நாடியெல்லா நுணுக்க மாகும்
மருவுசேட் பத்தடைந்து வாய்வ றண்டு
அணக்காக அக்கினிதான் மிகவுண் டாகி
அடிமூக்குத் தண்டெல்லாமி கக்க னத்து
திணக்காக இருமலொடு தினவு முண்டாம்
செயலாகச் சிலேட்டுமத்தின் றிறமை தானே 399

காச சிலேத்துமத்தில் உடல் குளிர்ந்து போகும். உடல் கனத்துப் பாரமாகக் காணப்படும். நாடி நுணுக்கமாக நடக்கும். கபம் அடைக்கும். வாய் வறளும். உடலில் சில வேளைகளில் மிகவும் சூடுண்டாகும். இருமலுடன் தினவும் உண்டாகும்.

சுவாச சிலேத்துமம்

திறமையாய் நெஞ்சுதனிற் கோழை கட்டும்
சிக்கென்று தானிருமி மூக்க டைக்கும்
குறமையாய் குறட்டென்றுசு வாசங் காணும்
குளிரோடு சுரமுண்டாம் மயக்க மாகும்

மறமையாய் மார்போடு நெஞ்ச டைக்கும்
வாய்வறண்டு மூக்கதனில் நீரோ பாயும்
வெறுமையாய் மிகத்தண்ணீர் தாப முண்டாய்
விடுசுவாச சிலேட்பத்தின் விபரந் தானே 400

நெஞ்சில் கோழை கட்டும். இருமலுண்டாகி மூக்கையடைக்கும். குறட்டை சப்தம் போல மூச்சுவிடும். குளிருடன் சுரமுண்டாகும். மயக்கமேற்படும். மார்போடு நெஞ்சையடைக்கும். வாய் வறண்டு மூக்கில் நீர் பாயும். தண்ணீர் தாகமுண்டாகும். இவை சுவாச சிலேட்டுமத்தின் குணங்களாகும்.

தீபன சிலேட்டுமம்

விபரமாய் தீபனந்தான் மிகவுண் டாகும்
மிக்கான வுடம்பெல்லா மெரிவுண் டாகும்
அபரமாம் நெஞ்சடைக்கு மழுகை யாகும்
ஆக்கையெல்லாம் வலியுண்டா யழலுண் டாகும்
கபரமாய்க் கைகாலும்ச யித்ய மாகும்
கனத்துமே சரீரந்தான் பருத்துக் காணும்
உபரமா யுண்ணாக்கிற் பசப சக்கும்
உறுதியாய் தீபனசிலேட் பந்தா னென்னே 401

பசி அதிகமுண்டாகும். உடலில் எரிவுண்டாகும். நெஞ்சையடைக்கும். அழுகையுண்டாகும். உடல் எல்லாம் வலிக்கும். வெப்பமாயிருக்கும். கைகாலும் ஓய்ந்து போகும். சரீரம் பருத்துவிடும். உள்நாக்கில் பசபசத்துக் காணப்படும்.

மந்த சிலேட்பம்

தானென்ற வயிறதனில் மந்த முண்டாய்ச்
சலங்கட்டு மலங்கட்டுஞ் சயித்ய மாகும்
ஊனென்ற வுடம்புதனில் வியர்வை யாகும்
ஒக்காள மிகவாகி உயர்மூச் சாகும்
கானென்ற அடிவயிறு கல்லுப் போலாம்
கனத்தி ருமலாகியே கார லுண்டாம்
வானென்ற வாய்கைத்துத் துவர்ப்பு காணும்
மந்தமாஞ் சிலேட்பமென்றே வழுத்த லாமே 402

வயிற்றில் மந்தமுண்டாகும். மலமும் சிறுநீரும் கட்டிப் போகும். உடலில் வியர்வை பெருகும். ஓக்காளமுண்டாகும். ஆழ்ந்த மூச்சுண்டாகும். அடிவயிறு கல்லைப் போல காணப்படும். கனத்த இருமல் உண்டாகும். தொண்டை காறும்.

வாய் கைப்புச் சுவையும், துவர்ப்புச் சுவையுடனும் காணப்படும். இவை மந்த சிலேட்பத்தின் குணங்களாகும்.

வாதசிலேத்துமம்

வழுத்தவே வயிறுதான் பொருமிக் கொள்ளும்
வலித்துமே வலி யிறங்கி நீர்க்க டுக்கும்
அழுத்தவே யங்கமெல்லாங் குழிகள் வீழும்
அதரங்கள் பல்லெல்லாங் கறுத்துக் காணும்
விழுத்தவே மேனியெல்லாம் வலியுண் டாகும்
மேகம்போல் நீரிறங்கும் வெள்ளை காணும்
பழுத்தவே பல்லுக்குட்கு டைச்ச லாகும்
பாரமாய் வாதசிலேட் பத்தின் பண்பே. 403

வயிறு பொருமிக் காணப்படும். வயிற்றில் வலித்து நீர்கடுக்கும். உடலில் அங்கமெல்லாம் குழிகள் விழும். உதடு, பற்கள் ஆகியன கறுத்துக் காணப்படும். உடலில் வலியுண்டாகும். மேகம்போல சிறுநீரிறங்கும். வெள்ளை படும். பல்லுக்குள் குடைச்சலெடுக்கும். இவை வாதசிலேத்துமத்தின் குணங்களாகும்.

பித்தசிலேத்துமம்

பண்பாகக் கண்மயங்கி கிறுகிறுக்கும்
பத்தியந்தான் மிகுதியா யசதி யாமே
உண்பாக வசனமிகத் தானுஞ் செல்ல
ஊறியே வாய்நீர்தான் மிகவுண் டாகும்
கண்பாகக் கண்டத்திற் கோழை கட்டும்
கணக்கவே யிருமலொடு மூச்சு மாகும்
மிண்பாக மேனியுமோ மஞ்ச ளிக்கும்
மிக்க பித்தசிலேத்மத்தின் விபரந் தானே 404

கண்கள் மயங்கி கிறுகிறுப்புண்டாகும். மிகவும் அசதி தரும். உணவு செல்லாது. வாயில் மிகவும் நீர் ஊறும். தொண்டையில் கோழை கட்டும். இருமலுடன் மூச்சும் அதிகமுண்டாகும். உடல் மஞ்சளித்துப் போகும். இவை பித்த சிலேத்துமத்தின் குணங்களாகும்.

தொந்த சிலேத்துமம்

விபரமாய் மேனியெங்கு மழற் றியாகும்
விக்கலோ டிருமலாய்ச் சுவாச முண்டாம்
அபரமாய்ச் சுரமுடனே யசதி யாகும்
அழன்றுமே வுடம்பெங்கு மெரிவுண் டாகும்

தபரமாய் அன்னமுதான் பொசிக்கொட் டாது
சளியோடு இருமலுமாய்ச் சன்னா நிற்கும்
குபரமாய்க் குளிரோடு மயிர்க்கூச் சுண்டாம்
கொடிதான தொந்தசேட் டுமசாத்யமாகும். 405

தொந்த சிலேத்துமத்தில் உடல் எங்கும் தீபோலச் சுடும். விக்கலோடு இருமல் உண்டாகும். சுவாசமடிக்கடி யுண்டாகும். சுரமுடன் அசதியு முண்டாகும். உடம்பெங்கும் எரிவுண்டா கும். உணவினை உண்ணவிடாது. சளியோடு இருமலும் தொடர்ந்து இருக்கும். குளிர்ந்து மயிர்க்கூச்சமெடுக்கும். இது அசாத்திய நோயாகும்.

சன்னி சிலேத்துமம்

கொடிதாக நாவறண்டு கறுப்பு மாகும்
குளிர்ந்துமே சுரமுண்டா மெரிவுண் டாகும்
கடிதான உடம்பெங்கு மிசுவு காணும்
கனமான வசதியொடு மறதி யாகும்
தடிதாகத் தாடையொடு கன்னங் காதும்
தாக்கான புருவமொடு நாசி யுச்சி
படிதாகத் துடித்துமே படப டக்கும்
பாகசன்னி சிலேட்பமென்றே பருகி டாயே 406

நாக்கு வறண்டு கறுத்துப் போகும். குளிர்ந்து சுரமுண்டாகும். சிலவேளை எரிச்சல் உண்டாகும். உடம்பெங்கும் வலிப்பு தோன்றும். அசதியுடன் மறதியும் தோன்றும். தாடை, கன்னம், காது, புருவம், நாசி, தலையுச்சி ஆகியவை படபடத்து துடிக்கும். இவை சன்னி சிலேத்துமத்தின் குணங்களாகும்.

சுரசிலேத்துமம்

பருகவே சுரந்தானும் பலகா லுண்டாம்
பாரமா யுடம்பெங்கும் வலியுண் டாகும்
அருகவே யடிக்கடிக்கு வியர்வை யாகும்
அன்னந்தான் கொண்டுடனே வாந்தி யுண்டாம்
உருகவே வயிறெல்லா முளைச்ச லாகும்
உப்பிசமு மேல்மூச்சு மிரும லுண்டாம்
கருகவே நாவறண்டு நீர்தா கிக்கும்
கனமான சுரசிலேட்பங் காணச் சொல்லே 407

சுரம் அடிக்கடி உண்டாகும். உடல் பாரமாகி வலிக்கும். அடிக்கடி வியர்வை உண்டாகும். உணவு உண்டவுடன் வாந்தியாகும். வயிறு எல்லாம் உளைச்ச லாகும். உப்பிச

மேல்மூச்சு இருமல் ஆகியவை யுண்டாகும். நாக்கு வறண்டு தாகமெடுக்கும். இவை சுரசிலேத்துமத்தின் குணங்களாகும்.

அதிசார சிலேத்துமம்

சொல்லவே வயிறுதனிற் குற்ற லுண்டாம்
சூலையாய் வலித்துமே சுழன்று விம்மும்
அல்லவே விலாப்பக்க மிரைச்ச லாகி
அதிசாரம் போற்சிவந்து அசதி யாகும்
மல்லவே மார்போடு நெஞ்சு நொந்து
வாய்வறண்டு இருமலொடு மூச்சுண் டாகும்
தல்லவே தாகமுட னெரிவு முண்டாம்
தவிக்குமே யதிசார சிலேட்பந் தானே 408

வயிற்றில் குற்றலெடுக்கும். சூலைபோல் வலித்து சுழன்று விம்மும். விலாப்பக்கங்களில் இரைச்சல் உண்டாகும். அதிசார நோய்போல் உடல் சிவந்து அசதியுண்டாகும். மார்பும் நெஞ்சும் நொந்து போகும். வாய் வறளும். இருமலுடன் அதிக மூச்சுண்டாகும். தாகமுடன் எரிவும் உண்டாகும். இவை அதிசார சிலேத்துமத்தின் குணங்களாகும்.

சலசிலேத்துமம்

தவிக்குமே தண்ணீர்தான் மிகவுங் கேட்கும்
சலந்தானுஞ் சிக்கென்று தடித் திறங்கும்
அவிக்குமே யடிக்கடிக்கு நீரி றங்கும்
அனலாக தழன்றுமே ஆலோ சிக்கும்
கவிக்குமே குரல்தானுங் கம்ம லாகும்
கனமாகக் கோழையொடு சிலேட்பம் வீழும்
பவிக்குமே பல்லெல்லா மலைச்ச லாகும்
பாகமென்ற சலசிலேட்பம் பருகி டாயே 409

தண்ணீர் தாகம் அதிகமெடுக்கும். சிறுநீர் தடித்து இறங்கும். அடிக்கடி சிறுநீர் செல்லும். அலைபோல் உடல் சூடாகும். குரல் கம்மிப் போகும். கோழையொடு சிலேத்துமம் விழும். பற்கள் எல்லாம் அலைச்சலாகும். இவை சலசிலேத்துமத்தின் குணங்களாகும்.

அக்கினி சிலேத்துமம்

என்றதோ ரிருமலொடு கோழை யுண்டாம்
எழிலுடம்பு அக்கினியா யெரிப றந்து
கன்றெனவே கால்கையு மழற்சி யாகிக்
கண்ணோடு மூக்குமே யெரிவாய்க் காணும்

தன்றெனவே தாகமது மிகவு முண்டாம்
சயித்தியமாய்க் கால்கைகள் குளிர்ந்து காணும்
உன்றெனவே யுண்டபின்பு பசியே யாகும்
உறுதியா யக்கினிசிலேட்மத் தினுண்மை தானே 410

இருமலுடன் கோழையுண்டாகும். உடல் அக்கினியால் எரியும். கைகால் அழற்சியாகும். கண்ணும் மூக்கும் எரியும். அதிக தாக மெடுக்கும். கைகால்கள்குளிர்ந்துகாணப்படும். உண்டவுடன்உடனே பசிக்கும். இவை அக்கினி சிலேத்துமத்தின் குணங்களாகும்.

பூதசிலேத்துமம்

உண்மையாங் கண்ணுருட்டி விழித்துப் பார்க்கும்
ஊமையைப் போறானிருந்தே உரத்துப் பேசும்
குண்மையாய்க் குறட்டோடு மூச்சு வாங்கும்
கொடிகொடியாய்ச் சளியோடு இரும லாகும்
தெண்மையாய் மேனியெங்கு மிகவே வேர்க்கும்
நெருநெரெனப் பல்தனையே மிகக்க டிக்கும்
தண்மையாய்ச் சந்தோஷ வார்த்தை பேசி
சண்டை கொள்ளும்பூத சிலேட்பந் தானாமே 411

கண்களை உருட்டி விழித்துப் பார்க்கும், ஊமையைப் போலிருந்து திடீரென உரத்துப் பேசும், குறட்டைசப்தம் போல மூச்சு வாங்கும் அதிக சளியுடன் இருமலுண்டாகும். உடலெங்கும் மிகவே வேர்க்கும். பற்களை கடிக்கும். சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்து திடீரென சண்டை போடுவர். இவை பூத சிலேட்பத்தின் குணங்களாகும்.

முயலக சிலேட்பம்

தானான சடமெல்லாம் வலிப்பு காணும்
சரீரத்தி லுணர்ச்சியற்றுத் தளர்ச்சி கேடாம்
வேனான கண்தானுஞ் சிவந்து காணும்
மிகக்கண்ணீர் பாய்ந்துமே மேனி கண்ணும்
ஊனான உடம்பெங்குங் கருகிக் காணும்
உறுதிமல சலம்விழுதல் தெரிந்திடாது
மூனான மூச்சோடு இரும லாகும்
மூர்க்கமா முயலகசேட் டுமம சாத்யம் 412

உடல் எல்லாம் வலிப்பு உண்டாகும். சரீரத்தில் உணர்ச்சிகள் இல்லாமல் தளர்ச்சியுற்று கேடடையும், கண்கள் சிவந்து காணப் படும், கண்ணீர் அதிகமாக சுரந்து கருகிக் காணும். மலசலம் போவது தனக்குத் தெரியாது, அதிக சுவாசத்துடன் இருமலுண்டாகும்.

வெறி சிலேட்பம்

முயல்போல விழித்துமே முறுக்கு மீசை
முனையாக எழுந்திருந்து முறுக்கிப் பாயும்
பயல்போலப் பல்லையே மிகத்தி றக்கும்
பாடுமே சங்கீதம் பலகா லுந்தான்
கயல்போலக் கண்களெல்லாஞ் சிவந்து காணும்
காயிலை போலுடம்பெங்கு மிகக் கறுக்கும்
உயல்போல உறுமியே வுதடு காயும்
உலைச்சலாம் வெறிசிலேட்ப உண்மை தானே 413

முயலைப் போல விழிக்கும், மீசையை முறுக்கும். முனைப்பாக எழுந்திருந்து முறுக்கி பாயும். வாயை மிகவும் திறக்கும். சங்கீதம் பாடும். கண்கள் சிவந்துவிடும். காய்ந்த சருகுபோல உடல் கறுக்கும். உறுமும், உதடுகள் காய்ந்து போகும். இவை வெறி சிலேட்பத்தின் குணங்களாகும்.

விகாரசிலேட்பம்

வெறிச்சுமே மேனியெல்லா மோடி யெங்கும்
மிடுக்காப் பாடுமே சங்கீ தந்தான்.
மறிச்சுமே மங்கைகயர்மேற் சிந்தை யாகும்
மனதொன்று மற்றொருகாரி யத்திற் செல்லா
வறிச்சுமே சஞ்சலங்கள் தனக்குட் பேசும்
சாப்பாட்டு மேல் நினைவு தறிகெடாது
குறிச்சுமே மயக்கமாம் விகார மாகும்
கூறினோம் விகாரசேட் பத்தி னுண்மை 414

அங்குமிங்கும் ஓடி சங்கீதத்தைப் பாடுவர். மங்கையர் மேல் ஆசை அதிகமாகும். மனம் வேறு காரியத்தில் ஈடுபடாது. சஞ்சலமுண்டாகும் தனக்குள்ளே பேசும். உணவின்மேல் நிலை கொள்ளாது. மயக்கமுண்டாகும். விகாரமாகும். இவை விகார சிலேத்துமத்தின் குணங்களாகும்.

சுரோணித சிலேத்துமம்

உண்மையாய் முழங்காலில் மிகக் குடைந்து
உளைந்துமே முதுகொடு விலாப்பக் கங்கள்
கண்மையாய் முழங்கைகள் முழங்கை சந்து
கடினமாய் வீங்கியே குடைச்ச லுண்டாம்
தண்மையாய் சளிகட்டுந் தாக மாகும்
சாதகமாய் இருமியே மூச்சுண் டாகும்
திண்மையாய் நாவறண்டு தித்திப் பாகும்
செயமான சுரோணித சிலேட்பந் தானே 415

முழங்காலில் அதிகம் குடையும். அதுமட்டுமல்லாமல் முதுகு, விலாப்பக்கங்கள், முழங்கை, முழங்கால் மூட்டுகள் அதிகம் வீங்கி குடைச்சலுண்டாகும். சளி கட்டும் தாகமெடுக்கும், இருமி இருமி மூச்சு சுவாசம் அதிகப்படும். நாவறண்டு தித்திப்பு சுவையுடன் காணப்படும். இவை சுரோணித சிலேத்துமத்தின் குணங்களாகும்.

விரணசிலேட்பம்

தானென்ற தொண்டையினிற் புண்ணு மாகிச்
சளியோடு சீய்த்தானுங் கலந்து வீழும்
கானென்ற கழுத்தோடு பிடரி கன்னம்
கனமாக வீங்கியே காச்ச லுண்டாம்
கோனென்ற குளிரோடு எரிவுண் டாகும்
கொக்கென்று இருமியே கூவலுண்டாம்
வேனென்ற மிடறெல்லாம் நாவும் புண்போல்
மிகவிரண சிலேட்டு மத்தின் விபரந் தானே 416

தொண்டையில் புண்ணாகி சளியுடன் சீழும் கலந்து விழும் கழுத்தோடு பிடரி, கன்னம், ஆகியவை வீங்கி காய்ச்சல் உண்டாகும். குளிரோடு எரிச்சலும் உண்டாகும். அதிக சப்தத்துடன் இருமலுண்டாகும். தொண்டையும், நாக்கும், புண்ணாகிவிடும். இவை விரணசிலேட்டுமத்தின் குணங் களாகும்.

துர்க்கந்த சிலேத்துமம்

விரணமாய்ச் சீயொடுமிரத்த முண்டாம்
மிகவிருமி மீன்றண்ணீர் போல நாறும்
அரணமாயன் னத்தைவிரங் கொட்ட விடாது
அடிவயிறு வீங்கியே கால்கை வீங்கும்
தரணமாய்த் தாகமே மிகவுண் டாகும்
சரீரந்தான் மிகவற்றித் தழலாய் வேர்க்கும்
துரணமாய விழ்தந்தான்ப லித்தி டாது
துர்க்கந்த சேத்துமந்தா னசாத்ய மாமே 417

இருமலில் சீழுடன் இரத்தமும் சேர்ந்து வெளிவரும். மீன் கழுவிய தண்ணீர்போல நாறும். வாயில் புண்ணாகி உணவை விழுங்கமுடியாது. அதிக தாகமுண்டாகும். சரீரம் மிகவும் வற்றி தழலாய் வேர்க்கும். மருத்துவம் செய்தாலும் கேட்காது. இத்தகைய குணங்களை உடைய துர்க்கந்த சிலேத்துமம் அசாத்திய நோயாகும்.

நித்ய சிலேத்துமம்

கந்தமாங் காசமொடு இரும லாகிக்
கனக்கவே தம்பலாய்க் கருதி வற்றி
பந்தமா மேனியெங்கு மெரிவுண் டாகும்
பாண்டுவாய் மேனியெங்கும் மிகவெ ளுத்து
உந்தமா யோக்காள மிகவுண் டாகும்
உயரமாய் கிறுகிறுத்துக் கீழே தள்ளும்
சத்தமாய் குரல்கம்மி பேசொட் டாது
தனிநித்ய சிலேட்டும தாஷ்டீகந் தானே 418

காசத்துடன் இருமல் உண்டாகும். அதிகம் தும்மலுண்டாகி மேனியெல்லாம் எரிவுண்டாகும். பாண்டு நோய்போல உடல் எங்கும் மிகவும் வெளுக்கும். எக்காளம் அதிகமுண்டாகும். உயரமாகச் சென்றால் கிறுகிறுப்புண்டாகி கீழே தள்ளும். இவை நித்ய சிலேத்துமத்தின் குணங்களாகும்.

தாட்டியாய் சிலேத்தும மதிருபத் தொன்று
தயாநிதியாஞ் சிவன்றானுந் தாய்க்குச் சொன்னார்
நாட்டியாய் தாயார்நந் திக்குச் சொல்ல
நந்தியுந்தான் றிருமூலர்க் குபதே சிக்க
தேட்டியாய் திருமூலர் சித்த ருக்குத்
திரமாக வுபதேசம் பண்ணச் சித்தர்
ஊட்டியா யூகிமுனி யாமெ னக்கு
உபதேசம் செய்தபடி உரைத்திட் டேனே 419

சிலேத்தும நோய்கள் இருபத்தியொன்றையும் சிவன் பார்வதிக்குக் கூற, பார்வதி நந்திக்கும், நந்தி திருமுலர்க்கும், திருமுலர் சித்தர்களுக்கு வழிவழியாகிக் கூற சித்தர்கள் யூகிமுனியாகிய எனக்குக் கூற அதை நான் இங்கு கூறுகிறேன்.

உரைத்திட்ட பஞ்சபூதி யத்தைச் சொன்னேன்
உண்மையாய்த் தத்துவத்தி னுண்மை சொன்னேன்
நரைத்திட்ட நாடியிட நிதானஞ் சொன்னேன்
நலமான அஷ்டவிதப் பரிட்சை சொன்னேன்
துரைத்திட்ட சுரத்தோடு சன்னி சொன்னேன்
சயமான குன்மமொடு சூலை சொன்னேன்
வரைத்திட்ட வாதமொடு பித்தஞ் சொன்னேன்
வகையான சேட்டுமத்தின் வளஞ் சொன்னேனே. 420

பஞ்சபூதத்தைப் பற்றியும், தத்துவங்களின் உண்மை களைப் பற்றியும் நாடியுட நிதானத்தைப்பற்றியும் கூறினேன். எட்டுவித பரிசோதனைமுறைகளைக் கூறினேன். சுரநோய்,

சன்னிநோய், குன்மநோய், சூலைநோய், ஆகியநோய்கள் பற்றி கூறினேன். அத்துடன் வாத, பித்த கப நோய்களைப்பற்றியும் கூறி முடித்துள்ளேன்.

சிலேத்தும ரோகநிதானம் முற்றிற்று

பிரமிய ரோக நிதானம்

உரைத்திட்டேன் மேகமென்ற ரோகந் தானே
உத்தமனே இருபத்தொன் றாகுங் கண்டாய்
திரைத்திட்ட சிவனுந்தே விக்குச் சொன்னார்
தேவிதான் றன்வந்திரிக் குபதே சிக்க
தரைத்திட்ட தன்வந்திரி அசுவனி தேவர்க்குச்
சாற்றிடவே யசுவனியாந் தேவர் தாமும்
பரைத்திட்ட அகஸ்தியருக் குப்போ திக்க
பாங்காகப் புலஸ்திய ருக் கருள்செய் தாரே 421

மேக நோய் இருபத்தொன்றையும் சிவன் பார்வதிக்கும் பார்வதி நந்திக்கும் கூற, நந்தி தன்வந்திரி, தன்வந்திரி, அசுவனி தேவர்க்கும், அசுவனி தேவர் அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும் கூறினார்.

அருள் செய்தார் அகத்தியர்தான் புலத்தி யருக்கு
அன்னவர்தான் தேரையமா முனிக்கு ரைத்தார்
பொருள் செய்தார் பூலோகத் துள்ள பேர்க்கு
பேரான ஆயுருவே தத்தைத் தானே
தெருள் செய்து திரட்டியே தேரை யர்தான்
தேசிகனாய் எனக்குரைக்கச் செகத்தோர் கெல்லாம்
மருள் செய்து போகாமல்சாத் திரத்தின் படியே
மார்க்கமாம் பிரமேகம் வழுத்தக் கேளே 422

அகத்தியர் புலத்தியருக்கு கூறியதை தேரையருக்கு கூற தேரையர் உலகத்திலுள்ளவர்கள் ஆயுள் வேதத்தைத் திரட்டி எனக்குக் கூறினார். நான் இவ்வுலகிலுள்ளவர்கள் பிழைக்க சாத்திரத்தின்படி பிரமேக நோயினை கூறுகிறேன் கேட்பாயாக.

வழுத்தவே பிரமியத்தின் பெயரைக் கேளாய்
வாதத்தின் பிரமியமாம் பித்த பிரமியம்
திழுத்தவே சிலேத்துமத்தின் பிரமி யந்தான்
சீரான வாதபித்த பிரமி யமாகும்
நழுத்தவே பித்தசிலேத்தும பிரமி யந்தான்
நலத்தொந்தப் பிரமியமாங் கட்டிப் பிரமியம்
தழுத்தவே சலப்பிரமியந் தந்திப் பிரமியம்
தணித்த தோரிரத்தப் பிரமியந் தானென்றே 423

பிரமியத்தின் பெயர்களைக் கேட்பாயாக. வாத பிரமியம், பித்த பிரமியம், சிலேத்தும பிரமியம், வாதபித்தபிரமியம், பித்த சிலேத்தும பிரமியம், தொந்தபிரமியம், கட்டிப் பிரமியம், சலப்பிரமியம், தந்திப் பிரமியம் இரத்தப் பிரமியம் ஆகியவற்றுடன்.

தானென்ற சீப்பிரமிய மொழுக்குப் பிரமியம்
தனியவி ரத்தப் பிரமியமாங் கிருச்சப் பிரமியம்
கானென்ற கரப்பனாம் பிரமியத் தோடு
கல்விளையும் பிரமியமாந் தாதுப்பி ரமியம்
நேனென்ற நீச்சபிரமியம் வலிப்பி ரமியந்தான்
நேரானமதுப் பிரமியம்வி ரணப்பி ரமியம்
ஏனென்ற பிரமியந்தா னிருபத் தொன்று
இதினுடைய உற்பத்தியி யம்பக் கேளே 424

சீழ் பிரமியம், ஒழுக்குப் பிரமியம், இரத்தப் பிரமியம், கிரிச்சரப் பிரமியம், கரப்பான் பிரமியம், கல்பிரமியம், தாதுப் பிரமியம், நீச்சப் பிரமியம், வலிப்பிரமியம், மதுபிரமியம் விரணப் பிரமியம் ஆகியவற்றோடு இருபத்தி ஒன்றாகும். இனி அவை உற்பத்தியாகும் விதத்தைக் கேட்பாயாக.

இயம்பவே எளியோரை யிகழ்ச்சி சொல்லல்
ஏற்றமாம் பெரியோரை யேவல் கொள்ளல்
புயம்பவே பொன்றனையே சோரஞ் செய்தல்
பொருள்தனை யபகரித்தல் பெருமை சொல்லல்
நயம்பவே நம்பினர்க்கு நஷ்டஞ் செய்தல்
நாட்டமா யெந்நேரம் பெண்மோ கித்தல்
பயம்பவே பயந்துவந்த பேரைக் காட்டல்
பழித்தபேர் பிரமியத்திற் படும்பா டாமே. 425

தனக்குத் தெரியாதவர்களை இகழ்ச்சியாக சொல்லுதல் பெரியோர்களை ஏவல் சொல்லுதல். பென்னகைகளை ஏமாற்றுதல். பிறர் பொருள்களை அபகரித்தல், அதிகம் பெருமையாகக் கூறுதல், தன்னை நம்பியவர்களுக்கு மோசம் செய்தல். எந்த நேரமும் பெண்மேல் ஆசைகொள்ளுதல். தன்னிடம் அடைக்கலம் கொண்டவரை காட்டிக் கொடுத்தல் ஆகிய தீய காரியங்களைச் செய்தால் பிரமியநோய் உண்டாகும்.

பாடாகப் பெண்போகமி கவி ரும்பிப்
பயின்றிட்டுப் பட்டினியே மிகவி ருத்தல்
தாடாகத் தான்பதத்திற்கு சூடு தாங்கல்
சரசமாய் காரத்தை மிகப்பொ சித்தல்

ஊடாக வுப்புரைப்புத் துவர்ப்பு மிஞ்சில்
உக்கிரமாம் பலபலவாம் விசேஷஞ் செய்யல்
காடான மனக்கிலே சங்கா ரமான
கைத்தலொடு மிருக்கலி துகா ணுங்காணே 426

அதிக பெண் போகம் செய்தல், பட்டினி அதிகமிருத்தல், பாதத்தில் அதிக சூடுபடும்படி நடத்தல், அதிககாரத்தை உண்ணல் உப்பு உரைப்புச் சுவையுள்ள பொருள்களை அதிகம் சாப்பிடுதல். மணிக்கணக்கில் கோபத்தோடு இருத்தல் இருக்கமாக இருப்பார்கள்.

காணவே முதுகெலும்பு கோர்வை சுற்றிக்
கனமாக நாபியிலுங் கதித்துச் சுற்றி
ஆணவே அடிக்குய்ய மூலா தாரம்
அழன்று மிகநோ வாகிப்பற்றிக் கொள்ளும்
நாணவே நாடியோடெ லும்பிற் சூழ்ந்து
நலமான சுரோணிதத்தில் மிகக்க லந்து
ஆணவே யடிவயிறு இழுத்து நோவாம்
ஆகாத பிரமியத்தி னாண்மை தானே 427

முதுகெலும்பு, நாபி இவற்றினைப் பற்றி, குய்யம், மூலதாரம் ஆகியவற்றையும் அதிகம் துன்புறச் செய்யும். நாடி, எலும்பு ஆகியவற்றோடு சுரோணிதத்தில் கலந்துவிடும். அடிவயிறு இழுத்துக் கொள்ளும். இவை பிரமியத்தின் குணங்களாகும்.

வாதப்பிரமியம்

ஆண்மையாய் கோசலம்போ னீரி றங்கும்
அருக்கியே யடித்தண்டில் மிகவ லிக்கும்
வேண்மையாய்க் கட்டியாய் சீத்தான் வீழும்
விரையிலே கனத்துமே நோக்கா டுண்டாம்
பாண்மையா யடிவயிறு பக்கந் தன்னில்
பரபரத்து நேர்வாகிப் பார முண்டாம்
வாண்மையாய் வயிறதனிலி சுவுண் டாகும்
வற்றுமே சரீரந்தான் வாதப் பிரமியம் 428

பசுமூத்திரம் போல சிறுநீரிறங்கும். ஆண்குறியின் அடிப்பாகம் வலிக்கும். கட்டியாக சீழ் விழும். விரைகள் கனத்து வலியுண்டாகும். அடிவயிற்றின் பக்கத்தில் வலிக்கும். பாரமாக இருக்கும் வயிற்றில் வலிப்புண்டாகும். இவை வாதப்பிரமியத் தின் குணங்களாகும்.

பித்தபிரமியம்

சரீரந்தான் மிகவற்றி தியக்க முண்டாய்ச்
சந்தோடு கைகால்தா னோவுண் டாகும்
சரீரந்தான் கறுத்துமேயெ ரிவுண் டாகும்
கனமான குதங்குய்யக் கடுப்பு காணும்
வரீரந்தான் மஞ்சள்போற் சீயாய் வீழும்
மனந்தானு மரூபியாய்க் கைகா லோயும்
புரீரந்தான் லிங்கமது புளகி விம்மும்
பேரான லிங்கமனோ பித்தப்பி ரமியம் 429

உடல்மிகவும் வற்றிவிடும். தியக்கமுண்டாகும். கை, கால், மூட்டுகள் வலிக்கும். உடல் கறுத்து எரிச்சலுண்டாகும். குதம் குய்யம் ஆகியவற்றில் கடுப்பு காணப்படும். சுக்கிலம் மஞ்சளாக சீழ்போல விழும். மனம் கலக்கமுறும். கைகால்கள் ஒய்ந்து போகும். ஆண்குறி விம்மும் இவை பித்த பிரமியத்தின் குணங்களாகும்.

சிலேத்தும பிரமியம்

லிங்கத்தில் நோயுண்டாய்க் கடுப்புக் காணும்
நீரிறங்கி வெள்ளையாய்ச் சலமாய் வீழும்
பங்கத்தில் மேனியெல்லாம் பழுப்பாய் காணும்
பாண்டுவாய் கண்நகங்க ளிரத்த மில்லை
சுங்கத்திற் சுருக்கிட்டு நீரி றங்கும்
துரிசாக வடிக்கடிக் கருக்கல் காணும்
அங்கத்தி லனல்மிகவே யழன்று மேனி
அசாத்திய சேட்டுமப்பிரமிய மறிந்து கொள்ளே 430

ஆண்குறியில் வலியும் கடுப்பும் உண்டாகும். நீர் வெள்ளையாய் சலத்துடன் வீழும். மேனியெல்லாம் பழுப்பாகக் காணப்படும். பாண்டுநோய்போல கண்கள் நகங்களில் இரத்தமில்லாதது போலிருக்கும். சுருக்கிட்டு நீர் இறங்கும். நீர் அருகி குறைந்து போகும். உடலில் வெப்பம் மிகுந்து மேனி சூடடையும் இவை கபப்பிரமியத்தின் குணங்களாகும்.

வாதபித்த பிரமியம்

அறியவே யாக்கையெல்லாம் வலியுண் டாகி
அடிலிங்கத் தடியிலேசலா கைவைத் தாற்போல்
மறியவே யடிக்கடிக்கு வருத்த மாகும்
மாப்போலச் சிறுநீரிற் கரைந்து வீழும்

வெரியவே பவுத்திரத்திற் கட்டி கட்டும்
மேன்மையாய் மலமதுதா னிறுகிக் கொள்ளும்
துரியவே சுருக்கென்று நீரி றங்கும்
துடிக்குமே வாதபித்தப் பிரமியந் தானே 431

உடம்பெல்லாம் வலியுண்டாகி, ஆண்குறியின் அடியில் சலாகைவைத்து செருகியதுபோல அடிக்கடி வலிக்கும். மாவுபோல சிறுநீரில் கரைந்து விழும். ஆசனவாயினருகில் பவுத்திரம் போல் கட்டி கட்டும், மலம் இறுகிக் காணப்படும். சுருக்சுருக்கென்று நீரிறங்கும்போது வலிக்கும். இவை வாதபித்த பிரமியத்தின் குணங்களாகும்.

பித்தசிலேத்தும பிரமியம்

பித்தமாய் வாயெல்லா மிகவே கைத்துப்
பிரமியே யடிவயிறு இசிவு காணும்
சுத்தமாய் மஞ்சளித்து வெள்ளை வீழும்
சுருக்குதான் லிங்கத்தில் மிகுதி யாகும்
பத்தமாய்க் கணுக்கணுக்கு நோயுண் டாகும்
பகலுறக்க மிகுதியாம் பசி யெடாது
பித்தமா யுடம்பெல்லா மூதிக் காணும்
பித்தசேட்ப பிரமியம் பேசுங் காலே 432

வாய்எல்லாம் மிகவும் கைக்கும். அடிவயிற்றில் வலிப்பு காணப்படும் சிறுநீருடன் மஞ்சளாக விழும். ஆண்குறியில் வலி அதிகமாகியிருக்கும். கணுவுக்கு கணு நோயுண்டாகும். பகலில் தூக்கம்அதிகமுண்டாகும். பசிஇருக்காது. உடல்எல்லாம்ஊதிக்காணப் படும். இவை பித்தசிலேத்தும பிரமியத்தின் குணங்களாகும்.

தொந்தபிரமியம்

பேசுமென்ற சரீரத்திற் றினவுண் டாகிப்
பேரான புழுக்கள்தா னூர்தல் போல
ஆசுமென்ற அடிவயிற்றிற் சுரப்புண் டாகும்
அடிக்கடிக்கு நீர்தானுங் கடுத்தி றங்கும்
கூசுமென்ற லிங்கத்திற் கசிவுண் டாகி
குறிகள்தான் பலவர்ண மாகக் காணும்
தூசுதான டித்தன்னிற் றோய்ந்தி ருக்கும்
தொந்தமாம் பிரமியத்தின் சூட்சந் தானே. 433

உடலில் தினவுண்டாகும். புழுக்கள் ஊர்வது போல உணர்ச்சி இருக்கும். அடிவயிற்றில் சுரந்துகொள்ளும். அடிக் கடி சிறுநீர் கடுத்து இறங்கும். ஆண்குறியில் கசிந்துகொண்டே

இருக்கும். சிறுநீர் பலவர்ணத்துடன் காணப்படும். ஆண்குறியின் அடியில் அழுக்கு அதிகம் சேரும். இவை தொந்த பிரமியத்தின் குணங்களாகும்.

கட்டிப்பிரமியம்

தானாகச் சடமெங்குக் கட்டி யாகித்
தரிக்காமல் வலியுண்டாய்த் தளர்ச்சி கேடாய்த்
தோனாக லிங்கத்தில் தினவுண் டாகிச்
சொறியாகி விரையிரண்டிற் றீநீர் பாயும்
ஊனாகக் கட்டியாய் லிங்கந் தன்னில்
உறுதியாய் பருக்கைபோற் சீயாய் வீழும்
மானாக வுடம்பதுதான் வற்றிக் காணும்
மருவு கட்டிப் பிரமியத்தின் வண்மை தானே. 434

உடல் எங்கும் கட்டி கட்டியாகி வலியுண்டாகும். உடல் தளர்ச்சியுறும் ஆண்குறியில் தினவுண்டாகும். சொறியுண்டாகி இரண்டு விரைகளிலும் தீயநீர்சேர்ந்துக்கொள்ளும். ஆண் குறியில் இருந்து சோற்றுப்பருக்கைபோல் கட்டியாக சீழ் விழும். உடல் வற்றிவிடும். இவை கட்டிப் பிரமியத்தின் குணங்களாகும்.

சலப்பிரமியம்

வண்மையாய் வடிவமெல்லாம் வலியுண் டாதல்
வாய்கைத்து வாந்தியொடு மயக்க மாதல்
தண்மையாய் லிங்கத்தில் சலங் கதித்தல்
தாக்கான வடிவயிற்றிற் பிடுங்க லுண்டாம்
வெண்மையாய் மலந்தனிலே சீதங் காணல்
வெளுப்பாகி நீரிறங்கிக் குற்ற லுண்டாம்
அண்மையா யறையாப்புக் கட்டி யுண்டாய்
அழுந்துமே சலப்பிரமிய வாண்மை தானே 435

உடல் எல்லாம் வலிக்கும். வாய் கசந்து, வாந்தியுடன் மயக்க முண்டாகும். ஆண்குறியில் சலம் கோர்க்கும் அடிவயிற்றில் பிடுங்கல் உண்டாகும். மலத்துடன் சீதம் காணப்படும். சிறுநீர் வெளுப்புடன் இறங்கி குத்தலெடுக்கும். அரையாப்புக் கட்டியுண்டாகும். இவை சலப்பிரமியத்தின் குணங்களாகும்.

நாறுதந்தப் பிரமியம்

ஆண்மையா யடிவயிறு புண்போ னொந்து
அடித்தண்டு விறுவிறுத்து உச்சங் காணும்
தாண்மையாய் லிங்கத்தின் கின்ன ரத்தின்
தந்திபோல நீருக்கு முன்னே வீழும்

மேண்மையாய் வெளுப்புத்தான் சீலை தன்னில்
விந்தையா யடிக்கடிக்கு நனைவு காணும்
நாண்மையாய் கால்கையு மெரிச்ச லாகும்
நாறுதந்தப் பிரமியத்தி னாட்டந் தானே. 436

அடிவயிறு புண்போல் நோகும். அடித்தண்டு விறுவிறுத்து விம்மும், சிறுநீர்கழிக்கும்போது சிறுநீருக்கு முன்பு கின்னரத்தின் தந்திபோல் வெள்ளையாய் விழும். துணிகளில் அடிக்கடி நனைத்துவிடும். கால்கை எரிச்சலுண்டாகும். இவை தந்திப் பிரமியத்தின் குணங்களாகும்.

இரத்தப் பிரமியம்

தந்திரமாய்த் தியங்கியே தலைசி லுப்பும்
சரீரமெங்கும் பஞ்சுபோற் றளர்ச்சி கேடாம்
தந்திரமாய் வருந்தியே நீரி றங்கும்
மாசற்ற முயலிரத்தம் போலே வீழும்
சுந்தரம் போலிருந்த முகந் தூசி யாகும்
சுருக்குத்தான் சிறுநீருஞ்சி கப்பாய் வீழும்
அந்தரமாய்ப் பசாசுபோ லலைச்ச லாகும்
அடிக்கடிக்கு நீரிறங்குமி ரத்தபி ரமியம் 437

தலையை சிலுப்பவைக்கும். உடல்எல்லாம் பஞ்சுபோல் தளர்ச்சியடையும். அதிக வலியுடன் சிறுநீர் இறங்கும், சிறுநீர் முயல் இரத்தம்போல விழும். அழகிய முகத்தில் அழுக்கு படியும். சிறுநீர் சுருக் சுருக்கென்று சிகப்பாக விழும். பிசாசுபோல அங்குமிங்கும் அலைச்சலுண்டாகும் அடிக்கடி சிறுநீர் கழியும். இவை இரத்தபிரமியத்தின் குணங்களாகும்.

சீப்பிரமியம்

கடுத்துமே சீழ்போல வெள்ளை காணும்
கட்டுமே அறையாப்பிற் பவுத்தி ரத்தில்
நடுத்துமே நாபியெல்லாம் விரண மாகும்
நற்சந்துக் கணுக்காலில் குடைச்ச லுண்டாம்
படுத்துமே யடிக்கடிக்கு நீரி றங்கும்
அதிகமாய்க் குளிரோடு சுரமுண் டாம்
மடுத்துமே வருத்தமாய் மயக்க மாகும்
வடிவமெலா நொந்திடுஞ்சீப் பிரமிய மாமே. 438

சீழ்போல வெள்ளை விழும். அரையாப்பில் பவுத்திரத்தில், தொப்புளில் எல்லாம் புண்கள் உண்டாகும். மூட்டுகளிலும், கணுக்காலிலும் குடைச்சலுண்டாகும். அடிக்கடி சிறுநீர்கழிக்கும் அதிக

குளிருடன் சிறுநீர் இறங்கும், சுரமடிக்கும் மயக்கமுண்டாகும். உடல் நோகும். இவை சீழ்பிரமியத்தின் குணங்களாகும்.

ஒழுகு பிரமியம்

சீயாகித் தண்ணீராய் இரத்தம் போலச்
சிறுகியே ஒழுகுமெந்த நேர முந்தான்
காயாகிக் கட்டியாய்மு ளையுண் டாகிக்
கனமான விரணமாய்க் காய மெல்லாம்
ஆயாகியங் கமெல்லாங் குடைச்ச லாகும்
அழன்றுமே யக்கினியா யண்டிக் கொள்ளும்
நோயாகிப் பாய்க்குள்ளே கிடையு மாகி
நுண்மையா யொழுகுமென்ற பிரமிய தானே 439

சிறுநீருடன் இரத்தம்போல எந்நேரமும் ஒழுகிக் கொண்டே இருக்கும். கட்டியாக முளையுண்டாகும். உடம்பெல்லாம் புண்முள் உண்டாகும். மேனியெங்கும் குடைச்சலுண்டாகும். உடல் முழுதும் வெப்பமாக இருக்கும். படுத்த படுக்கையாக்கி விடும். இவை ஒழுகுபிரமியத்தின் குணங்களாகும்.

அரித்திரப் பிரமியம்

தானுமே மஞ்சள்போல் வெள்ளை காணும்
தழலாக வெதும்பியே நிரி றங்கும்
காணுமே கதிர்தனையே ஏற்றினாற் போல்
கடுப்பாக விருக்குங் கடுஷ்ண மாகும்
வாணுமே மதியம் போற் றானி ருந்து
மதிமுகங்கள் மஞ்சள்போற் றானி ருக்கும்
தேனுமே கசப்பாகி நாவு தானும்
திடுக்குண்டா மரித்திரமாம் பிரிமியந் தானே 440

மஞ்சிள்போல வெள்ளை விழும். நீர் சூட்டுடன் இறங்கும் ஈட்டியை உள்ள இறக்கினாற்போல் விறுவிறுத்துக் கடுக்கும். மதியத்திலிருந்து முகம் மஞ்சளாகும். நாக்கு கசக்கும். திடுக்கிட வைக்கும் இவையாவும் அரித்திரப் பிரமியத்தின் குணங்களாகும்.

கிரிச்சரப் பிரிமியம்

அரித்திரம் போனீரிறங்கு மாண்மை குன்றும்
அருக்கியே மிகக்கடுத்து நீர்தான் வீழும்
நெரித்திரம் போனீர்தனையே கட்டிக் கொள்ளும்
நிரசியம் போற்சரீரத்தி லுறக்க மில்லை

தரித்திரம் போலன்னத்தைப் பொசிக் கொட்டாது
சஞ்சலமாய் மனதுதான் றரிக்கொட் டாது
விரித்தரம் போலுடம்பெல்லா முளைச்ச லுண்டாம்
விகிமூத்ரக் கிரிச்சிரப் பிரமியந் தானே 441

அரித்திரக் காமியத்திலுள்ளவாறு நீரிறங்கும். ஆண்மை குன்றும், மிகவும் கடுத்து நீர் இறங்கும். நீர் கட்டிக் கொள்ளும். உறக்கம் இருக்காது. உணவின் மேல் விருப்பமிருக்காது. மனது ஓரிடத்திலிருக்காது. உடம்பு எல்லாம் உளைச்சல் உண்டாகும். இவை கிரிச்சரப் பிரமியத்தின் குணங்களாகும்.

கரப்பான் பிரமியம்

உளைஞ்சுமே வயிறுதான் சீதங் காணும்
உஷ்ணமாய் மூத்திரந்தா னுருக்கி வீழும்
அலைஞ்சுமே யங்கமெல்லாஞ் சொறியுண் டாகும்
அழலாக வெதும்பலாய் கைகா லோயும்
புளைஞ்சுமே லிங்கத்திற் புண்போல் குற்றிப்
பொடிப்பொடியாய் சுண்ணாம்புக்கல் போல வீழும்
களைஞ்சுமே நீரோடும லமுஞ் சிக்கும்
கசியுமே கரப்பானாம் பிரமியந் தானே 442

வயிறு உளையும், சீதம் காணும், சூடாக சிறுநீர் கழியும். உடல் எல்லாம் சொறியுண்டாகும். அழலாக உடலில் கைகால்கள் ஒய்ந்துபோகும். ஆண்குறியில் புண்போல குற்றி, சுண்ணாம்புக் கல்லைப் போல பொடிப்பொடியாக விழும். சிறுநீரும், மலமும் கட்டும். இவை கரப்பான் பிரமியத்தின் குணங்களாகும்.

கற்பிரமியம்

கசியுமே லிங்கத்திற் கள்ளைப் போலக்
கற்றாழை நாற்றந்தான் உடம்பில் வீசும்
தசியுமே சாந்தரைத்துப் படுத்த கற்போல்
தயங்கியே நீர்ச்சிக்கி வயிறு விம்மும்
விசியுமே விறுவிறுப்பாய் வயிறெல் லாந்தான்
மீறான நாபிதொட்டுப் பீச மாகும்
பசியுமே யில்லாமற் பார மாகும்
பளிங்கு நிறமாகுங் கற்பிர மியந்தானே. 443

ஆண்குறியிலிருந்து கள்ளைப்போல வடியும். உடலில் கற்றாழை நாற்றம் வீசும். வயிறு சாந்தினை அரைத்து பற்றிட்டாற்போல இருக்கும். சிறுநீர் தடங்கலேற்பட்டு வயிறு

விம்மும். வயிறு முழுவதும் நாபியிலிருந்து பீசம்வரை பாரமாகத் தெரியும். இவை கற்பிரமியத்தின் குணங்களாகும்.

தூதுபிரமியம்

கல்லான சிலந்தியதி னூலைப் போலக்
கனமான லிங்கத்திற் கலந்து வீழும்
வல்லான வண்மையோடு திரங் காணும்
வலியெடுக்கு மடித்தண்டு விம்மும் போது
சல்லான கல்மிஷந்தான் னடியிற் றங்கும்
சமத்தான விலாப்பக்கந் தனிலே குற்றும்
துல்லான மூத்திரந்தான் றுளியாய் வீழும்
தூதுபிரமி யத்தினிடச் சுருக்கு தானே 444

ஆண் குறியிலிருந்து சிலந்தி நூலைப் போல வெள்ளை இறங்கும். சிலசமயம் இரத்தம் காணப்படும். ஆண்குறி விம்மும் பொழுது அடிப்பாகம் விம்மும் மாசுகள் அடியில் தங்கும். விலாப்பக்கங்களில் குத்தலெடுக்கும் சிறுநீர்சிறியதாக விழும். இது தூதுபிரமியத்தின் குணங்களாகும்.

நீச்சப்பிரமியம்

சுருக்காகக் கள்ளுபோ னீரி றங்குஞ்
சூட்சுமாய் வெள்ளையொடு சீயுங் காணும்
மருக்காக லிங்கமுச்ச மாகும் போது
வருத்தமா யடித்தண்டு குடத்தோ டொக்க
விருக்காக விறுவிறுப்பாய் வலியுண் டாகும்
விசையான நரம்பெல்லாஞ் சுருக்க மாகும்
குருக்காக வடிவயிறு தனிலே குற்றும்
குளிருமே நீச்சபிரமி யத்தின் கூறே 445

கள்ளைப் போல சிறுநீர் இறங்கும். அதில் வெள்ளையும் சீழும் காணப்படும். ஆண்குறி விம்மும்போது அடித்தண்டு வலிக்கும். விசைநரம்பில் விறுவிறுத்து வலிக்கும். அடிவயிற்றில் குத்தலெடுக்கும். இவை நீச்சபிரமியத்தின் குணங்களாகும்.

வலிப்பிரமியம்

கூறாகவடி நரம்புகு தங்குய் யந்தான்
குற்றியே யடிக்கடிக்கு வலியுண் டாகும்
வாறாக வடிவமெல்லாம் மிகவ ழற்றி
மயக்கமாய் நாவோடு கைத்த லாகும்

பாறாகப் புறங்காலிற்றி மிருண் டாகும்
பருத்துமே லிங்கத்தில் வெள்ளை வீழும்
தூறாகத் துன்மாங்கிசஞ் சுருண்டு காணும்
தூசிமிகப் படியும்வலிப் பிரமியந் தானே 446

குதம் குய்யத்தில் நரம்புகளில் அடிக்கடி குத்தலெடுத்து வலியுண்டாகும். உடல்எல்லாம் அழற்சியுண்டாகும். நாவில் கைப்புச்சுவையுண்டாகும். புறங்காலில் திமிருண்டாகும். லிங்கத்திலிருந்து வெள்ளை விழும். துர்மாமிசங்கள் சுருண்டு காணப்படும். அதிக அழுக்கு படியும்.

மதுப்பிரமியம்

வலியாகி லிங்கமெலாம் வருத்த மாகி
வண்டலாய்த் தேன்போல நீரி றங்கும்
எலியாகி யெறும்பரிக்குஞ் சிறுநீர் தன்னில்
இறைச்சி போலுள்ளுக்குள் விரண மாகும்
நலியாகி நாற்றமாமு டம்பெங்குந்தான்
நாவிலே யுணர்ச்சியிலாத் துரிசை போகும்
மலியாகி நாவரண்டு மயக்க மாகும்
வருத்தமா மதுபிரமிய மார்க்க மாமே 447

ஆண்குறியெல்லாம் வருத்தமுண்டாகும். தேன் நிறத்துடன் வண்டல் போல் சிறுநீர் கழியும். சிறுநிரினை எறும்பு அரிக்கும். சதைத்துண்டுபோல் உள்ளுக்குள் புண்ணாகி விடும். உடல் எங்கும் நாறும். நாக்கில் உணர்ச்சியில்லாது போகும். சுவை தெரியாது. நாக்குவரண்டு மயக்கமுண்டாகும். இவை மதுப் பிரமியத்தின் குணங்களாகும்.

விரணப் பிரமியம்

மார்க்கமா யுடம்பெங்கும் விரண மாகி
மகவருத் தமாகியே மயக்க மாகி
தேர்க்கமாய் லிங்கமது பொழுத்து வீங்கிச்
சீயோடி ரத்தந்தான் மிகவே காணும்
கார்க்கமாய்க் கறடோடு கணுக்க ளெல்லாம்
கட்டியே நோவாகி கடுப்பு முண்டாம்
வேர்க்கமாய் மேனியெல்லாம் வெதும்ப லாகும்
விருவிருக்கும் விரணபிரமியந்தா னாமே 448

உடல் எல்லாம் புண்ணாகும். வலித்து மயக்கமுண்டாகும். ஆண்குறி மிகவும் பெரிதாக வீங்கி, சீழும் இரத்தமும் காணப்படும்

கால்பாதம், சிறுமுட்டுகள் ஆகியன மிகவும் வலிக்கும். கடுப்பு உண்டாகும். உடலெல்லாம் வெதும்ப லாகும். இவை விரண பிரமியத்தின் குணங்களாகும்.

தானான பிரமியந்தா னிருபத் தொன்றும்
சதாசிவன்றான் றாய்தனக்கு அருளிச் செய்ய
பானான தாய்தானுநந் திக்குச் சொல்லப்
பராபரமா நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
ஆனான தன்வந்திரிய சுவினி தேவர்க்கு
அருள்செய்ய அசுவனியும கத்தியர்க்கு சொல்ல
கோனான அகஸ்தியரும் புலத்தியருக்கு சொல்ல
குருவான புலஸ்தியருங் குறித்திட் டாரே 449

பிரமியவகை இருபத்தொன்றையும் சதாசிவன் பார்வதிக்குக் கூற பார்வதி நந்திக்கு சொல்ல நந்தி தன்வந்திரிக்கும் தன்வந்திரி அசுவினிதேவர்க்கும், அசுவினி அகத்தியர்க்கும் அகத்தியர் புலத்தியருக்கும் கூறினார்கள்.

குறித்திட்டார் தேரையமா முனிவ னுக்குக்
கூறான தேரையமா முனிவர் தானும்
உறைத்திட்ட யூகியென்ற எனக்குச் சொன்னார்
யூகியென்ற முனிநானே உளமு வந்து
மறைத்திட்ட ஆயுர்வே தத்தி லுள்ள
மறைப்பான பொருளெல்லா மாய்ந்து பார்த்து
தெறித்திட்டு திரட்டியெல்லா மொன்றாய்ச் சேர்த்து
சிவன் சொன்னபடிசொன்னார் தெளிவாய்த் தானே 450

புலத்தியர் தேரையருக்கும் தேரையர் யூகிமுனியாகிய எனக்கும் கூறினார். யுகிமுனியாகிய நான் உளம் மகிழ்ந்து மறைப்புப் பொருளையெல்லாம் ஆராய்ந்து நோக்கி ஒன்றாகத் திரட்டி சிவன் கூறியபடி தெளிவாகக் கூறியுள்ளேன்.

பிரமிய ரோக நிதானம் முற்றிற்று

மேகரோக நிதானம்

தெளிவாகத் தேவிதான் சிவனை நோக்கித்
தெண்டனிட்டு ஆயுருவே தத்தை முன்னே
அளிவாக அனுக்கிரகம் பண்ண வல்லோ
ஆத்ம கோடிகளிடத்திற் கிருபை வைத்து
நளிவாகத் தேவருக்குத் தேவ ரான
நடேசரே சகலபேரி டத்திற்றானும்
எளிவாக இதயகம லத்திற் றானே
இருந்தவ ரேசலத்தை நீர்சொல்லு மென்றாள் 451

பார்வதி சிவனைநோக்கி வேண்ட ஆயுர்வேதத்தை அருளினார். உலகிலுள்ள சீவராசிகள் மேல் கருணைவைத்து தேவருக்கு தேவரான நடேசனாகிய சிவனே நீரே அனைத்தையும் கூறுமென்றாள்.

சொல்லுமென்று கேட்டவுடன் சிவனு மப்போ
தேவியைத்தான் முகம்பார்த்து வாராய் தேவி
அல்லுமென்றே மேகமது இரண்டு பத்து
அதிது லபமாயிருக்கும் லோகத் துள்ளே
உல்லுமென்றே உன்னுடைய சினேகந் தன்னால்
உரைக்கரிது உரைக்கின்றே னுற்றுக் கேளாய்
மல்லுமென்ற மாதேவிப ராக்கில் லாமல்
மகிழ்ந்துநீ கேளுமென்று வசனித் தாரே 452

நீர் சொல்க என்று பார்வதி கேட்க சிவனும் பார்வதியை நோக்கி மேகம் இருபது வகையாகும். உன்மேல் உள்ள அன்பினால் சொல்லுதற்குரிய இதனை கூறுகிறேன். கவனம் பிசகாமல் கேட்பாயாக என்று கூறினார்.

வசனித்த மேகமது இரண்டு பத்து
வாதத்திற் பிறந்தசலம் நாலே யாகும்
பிசனித்த பித்தத்தி லுற்ப வித்த
பேரான சலந்தானு மாறு மாகும்
தெசனித்த சேட்டுமத்தில் உற்ப வித்த
சீரான சலந்தானும் பத்தே யாகும்
இசனித்த இதனுடைய குணா குணங்கள்
எழிலான உற்பத்தியி யம்பக் கேளே 453

இருபதுவகை மேகத்தில் வாதத்தினை அடிப்படையாகக் கொண்டது நான்கு ஆகும். பித்தத்தில் உற்பத்தியானது ஆறு வகை. கபத்தில் உற்பத்தியான மேகம் பத்துவகையாகும். இதனுடைய குணங்கள், உற்பத்தி ஆகியவற்றை கூறக்கேட்க பாயாக.

இயம்பவே ஆறுகுளம் பின்னஞ் செய்தல்
ஏற்றமாய் மாற்றான்பெண் சங்கம் செய்தல்
பயம்பவே பாலகர்களுக் கொளித்து தின்னல்
பழமை சலம்போறவ ழிதனை தடுத்தல்
அயம்பவே ஆலயத்திற் சலம்விட் டோர்க்கும்
ஆதியாம் வேதத்தைத் தூஷித் தோர்க்கும்
துயம்பவே சூரியனை வணங்கா தார்க்கும்
சுருக்காக மேகம்வந்துற் பவிக்குந் தானே 454

ஆறு, குளம் இவைகளை உடைத்தலாலும், மற்றவர் மனைவியுடன் போகம் செய்வதாலும், சிறுவர்களுக்கு தராமல்

ஒளித்துத் தின்னுவதாலும், பழமையான நீர் செல்லும் வழிகளைத் தடுத்தலாலும், கோயிலுக்குள் சிறுநீர் கழித்தவர்க்கும், நீதிநூல் களை பழித்தவர்களுக்கும், சூரியனை வணங்காத நபர்களுக்கும் மேகநோய் வந்து உற்பத்தியாகும்.

உற்பவிக்கும் பால்நெய்யா லிறைச்சி கொள்ளல்
உரிசையாய் மீன்றன்னா ல்வருவி ருத்த
மற்பவிக்கும் பதார்த்தத்தால் மதுர வஸ்தால்
மந்தங்கள் தனிற்பொசித்தல் வேகாப் பண்டம்
குற்பவிக்குங் குளுந்தவன்ன மங்கை கோஷ்டி
குறித்த நித்திரைதவிர் தலக்கினி மந்தம்
தற்பவிக்குஞ் சரீரந்தான் மிகப் பருக்கல்
சஞ்சலந்தான் பயப்படுதல் தரிக்கும் நோயே 455

பால், நெய், இறைச்சி, கள், மீன், இனிப்பு பண்டங்கள் ஆகியவற்றை அதிகம் உண்பதால் மந்தமாக வயிறு இருக்கும். வேளையில் உண்ணல். வேகாதப் பொருட்களை சாப்பிடுதல் குளிர்ந்த சோறு, அதிக பெண்போகம், நித்திரையின்மை, அடிக்கடி மந்தப்படுதல், உடல் அதிகமாகிப் பருத்தல், சஞ்சலம் கொள்ளுதல், பயப்படுதல் ஆகியவை இந்நோயை உண்டாக்கும்.

வாதசலம்

தரித்திட்ட வாதத்தின் சலந்தா னாலு
தனியான நாலுக்கும் பேரே தென்னில்
அரித்திட்ட ஆச்சியகெந்தி மேகத் தோடு
அதன்பிறகு சுற்றமா மேக மொன்று
பிரித்திட்ட பிரமிய மேக மொன்று
பேரான மாங்கிசரவி மேக மொன்று
குறித்திட்ட இதுவாத சலந்தா னாலு
குணாகுணத் தினுட்பமெல்லாம் குறிப்பாய் கேளே 456

வாத மேகநோய்களின் நாலுவகையைக் கேட்பாயாக. அவை ஆச்சிய மேகம், சுத்தமேகம், பிரமிய மேகம், மங்கிச ரவி மேகம் ஆகியனவாகும். அதன் குணங்களைக் கேட்பாயாக.

ஆச்சியமேகம்

குறிப்பாக ஆச்சியசல மிறங்கும் போது
குணமான நெய்போலத் தானி றங்கும்
நெறிப்பாகச் சீலைதோய்த் துக்கொ ளுத்தல்
நேரான விளக்குபோலெ ரியும் பாரு

தெறிப்பாகத் தினமொன்றிற் குறுணி தானும்
சீக்கிரமா யிறங்கிவிடுந் தேகம் வாடும்
எறிப்பார்க்கும் மேகங்கண் டேழு நாட்குள்
எய்துவா ரெமபுரத்தி லெய்து வாரே 457

ஆச்சிய மேகத்தில் சிறுநீர் கழிக்கும்பொழுது நெய்போல இறங்கும். துணியைக் கொழுத்தி எரித்தால் விளக்குபோல எரியும். தினமொன்றுக்கு ஒரு குறுணி அளவு சிறுநீர் கழியும். சிறுநீர் விரைவில் இறங்கும். தேகம் வாடும், இந்நோய் கண்ட ஏழு நாட்களுக்குள் இறந்துவிடுவர்.

சுத்த மேகம்

எய்துவார் சுத்தமா மேகந் தானும்
இறங்குமே கோசலம்போல் வர்ண மாக
நைதுவார் நாற்றமுமப் படியே யாகும்
நானாழி தனிறங்கு மொருவே ளைக்குக்
கைதுவார் காச்சினால்வி ளக்கு தானும்
கடுந்து லக்கமாயெரியுங் களைமெத் தாகும்
பைதுவார் பதினைந்து நாளிற் கொல்லும்
பாலன் போலிருந்தமுகங் கிழமு மாமே 458

சுத்தமேகத்தில் பசுமூத்திரம்போல் அதே நிறத்துடன் சிறுநீர் கழியும். நாற்றமும் அதுபோலவே இருக்கும். ஒருவேளைக்கு நான்குநாழியளவு இறங்கும், அதில் தோய்த்து துணியை எரித்தால் விளக்குபோல் பிரகாசமாகி எரியும். களைப்பு அதிகமுண்டாகும். பதினைந்து நாளில் இறப்பர்.

பிரமிய மேகம்

கிழமாகப் பிரமியந்தா னிறங்கும் போது
கேவலமாம் கொழுப்பான மாமிச நாற்றம்
பழமாக வேளைக்குநா னாழி தானும்
பருத்துதான் இறங்குமே யடிக்க டிக்கு
அழமாக அந்தநீர் காச்சி னக்கால்
அதின்வாடை தேன்போலத் தானி ருக்கும்
இழமாக இப்படித்தான் கண்ட மேகம்
எமபுரத்துக் கறுமாதத் தினிற் றானேகும் 459

பிரமிய மேக நோயில் சிறுநீர் இறங்கும் போது கொழுப்பு மாமிச நாற்றமடிக்கும். ஒருவேளைக்கு நான்கு நாழி சிறுநீர் கழியும். அடிக்கடி சிறுநீர் கழியும். அந்த நீரை காய்ச்சினால் தேன் போல இருக்கும். இந்த நோய் கண்டால் ஆறுமாதத்தில் மரணமேற்படும்.

மாங்கிச ரவிமேகம்

ஏகுமே மாங்கிசரவி இறங்கும் போது
இளவாட்டின் கொழுப்பு போற்றா னிறங்கும்
ஆகுமே காக்கினாலாட் டிநெய் போல
அடவாக வேளைக்குகு றுணி காணும்
தாகுமே கருப்பஞ்சார் போல நாறும்
கனத்துத்தான் மூன்றுநா ளெட்டு நாளில்
சாகுமே யைந்தாமா தத்திற் றானும்
சதுர் விதமாம்வாத சலந்தா னுமாச்சே 460

மாங்கிச ரவி மேகத்தில் சிறுநீர் இறங்கும்போது இளம் ஆட்டின் கொழுப்பு போல இறங்கும். காய்ச்சினால் ஆட்டு நெய்போல இருக்கும். ஒருவேளைக்கு குறுணி அளவு சிறுநீர் கழியும்.

மூன்றாம் நாள் அல்லது எட்டாம் நாளில் அதையும் தாண்டினால் ஐந்தாம் மாதத்தில் மரணமேற்படும்.

வாதம் நாலுக்கும் சமுதாய குணம்

ஆச்சென்ற நாலுக்குங் குணத்தைக் கேளாய்
அழகான கைகால்கண்ணு டல ழற்றும்
நாச்சென்ற நாவறளும் பல்லு நாக்கு
நடுத்தொண்டை கறுப்பேறு முதலெட் டாந்தான்
பேச்சென்ற பிலச்சியமாம் கண்மேல் நோக்கும்
பெருகவன்னந் தண்ணீருமி கவே வாங்கும்
தாச்சென்ற சரீரந்தான் கத்தி வெட்டும்
தான்போலக் கடுத்துமே தழலுண் டாமே 461

வாதமேகநோய் நான்கின் பொதுக் குணத்தைக் கேட்பாயாக. கை கால்கள் கண்கள் ஆகியவை சூடாகும். நாக்கு வறளும். பல், நாக்கு, நடுத்தொண்டை ஆகியன கறுப்பேறும். முதலில் கண்கள் மேலே நோக்கும். உணவும் தண்ணீரும் அதிகம் உட்கொள்ளும். உடலில் கத்தி வெட்டுவதைப்போல வெட்டும். உடல் கடுத்து சூடுண்டாகும்.

தழலாக வெதும்பியே மயக்க மாகும்
சஞ்சலமா யிடைகொடா தேபி ரட்டும்
அழலாக வடிக்கடிக்கு வாயு தானும்
ஆகாத நாற்றமாய் பிரியு மெத்த
குழலாக நாடியே குடில மாகக்
குணபேதமாய் நடக்கும் வேக மெத்த
வழலாக வாதமே கந்த னக்கு
வகுத்த முறைபாடு தானாலு மாச்சே 462

உடல் வெதும்பி மயக்க முண்டாகும். மனது சஞ்சலமடையும். இருக்க விடாமல் வயிற்றை பிரட்டும். அடிக்கடி ஆசனவாயிலிருந்து கெட்ட நாற்றத்துடன் வாயு பிரியும், மனம் பேதலிக்கும். இதன் வேகம் அதிகமாகும். இவை வாதமேகம் நான்கின் பொதுக் குணமாகும்.

பித்தசலம் ஆறு

முறையான பித்தசல மாறு மாகும்
முதிர்ந்த அப்பியமென்றும் பிரமிய மென்றும்
தறையான சாம்பிர்ணம தும்ப மென்றும்
சாத்திகவே யாவிருதத் தன்னோ டாறு
மறையான விந்தாறு மேகந் தன்னை
மகதேவர் சொல்லிடவே தேவி கேட்கத்
துறையான குணாகுணத்தை விரித்துச் சொல்ல
சுற்றமா யப்பியத்தின் சுருபங் கேளே 463

பித்தமேகம் ஆறு வகைப்படும். அவை அப்பிய மேகம், பிரமிய மேகம், சாம்பிர்ண மேகம், மதுமிய மேகம், சாத்திய மேகம், ஆவிருதமேகம் ஆகியவற்றோடு ஆறுவகையாகும். இனி அவற்றின் குணங்களைக் கூறுகிறேன் கேட்பாயாக.

அப்பியமேகம்

சுருவமாய் யப்பியந்தா னிறங்கும் போது
துடியான மதம்போலத் தானி றங்கும்
வெருவமாய் வேளைக்கு நானாழி தானும்
விரிசாகத் தானிறங்குங் காச்சி னக்கால்
உருவமாயு வர்மண்போற் படியும் பாரு
உக்ரமாக் கண்ட வெட்டா மாதந் தன்னில்
இருவமா யெமபுரத்துக் கெய்து வார்கள்
ஏற்றமா மப்பியத்தின் மேகந் தானே 464

சிறுநீர் கழிக்கும்போது அதனுடன் யானை மதம் போல இறங்கும். ஒரு வேளைக்கு நான்கு நாழி இறங்கும், அந்த சிறுநீரைக் காய்ச்சினால் உவர்மண்போல படியும். இந்நோய் கண்ட எட்டாவது மாதத்தில் நோயாளி இறப்பர்.

அபிரமியமேகம்

தானென்ற கற்றாழஞ் சாறு போலும்
தன்னாற்றம் போலவே மிகவே நாறும்
கானென்ற காச்சினாற் கடிதுர் நாற்றம்
கடிகைக்குளி இருநாழி தானி றங்கும்

ஏனென்ற விக்குணமோ மேகந் தானும்
இறங்கினதோர் மூன்றாகு மாண்டுதென்னில்
பானென்ற பரமபத மெய்து மென்று
பரமனுரை அபிரம்பியப் பண்பு தானே 465

சிறுநீர் இறங்கும்போது கற்றாழஞ்சாறுபோல இருக்கும். துர்நாற்றம் அடிக்கும். காய்ச்சினால் அதிக தூர்நாற்றமடிக்கும். ஒரு நாழிகைக்குள் ஒரு நாழியளவு சிறுநீர் கழியும். இந்நோய் கண்டவர்கள் மூன்றாண்டுகளில் மரணம் எய்துவர்.

சம்பீர்ண மேகம்

பண்பாகச் சுண்ணாம்பு அழலே நாறும்
படியுமே யடிதன்னிலே நீறு போல
நண்பாக வேளைக்கு நானாழி தானும்
நாறியே இறங்குமிக வெரும்ப ரிக்கும்
கண்பார்க்க காச்சினாற் சுன்ன நீறும்
கனமாகப் படியுமே யடியிற் றானும்
தண்பாகக் கண்டசல மிரண்டா மாண்டிற்
சாகுவரே சாம்பிரணத் தன்மை தானே 466

சிறுநீர் சுண்ணாம்பு தண்ணீரைப்போல நாற்றமெடுக்கும் அடியில் பற்பம்போல வெண்மையாகி படியும். ஒரு வேளைக்கு நான்கு நாழி, சிறுநீர் இறங்கும். எறும்புகள் மொய்க்கும். சிறுநீரைக் காய்ச்சினால் சுண்ணாம்பு படியும். இந்நோய் கண்ட இரண்டாவது ஆண்டில் மரணமெய்துவார்கள்.

மதுமிய மேகம்

தண்மையாய்ச் சலந்தானும் பசுப்பு மஞ்சள்
தானிறங்கும் பீசமுங்கோ சமுங் கடுக்கும்
அண்மையால் யடிக்கடிக்கு நீரி றங்கும்
அடிக்கடிக்கு அரைநாழி தனிலே நாணும்
வெண்மையா யடியதனி தான்பி டிக்கும்
மிக்கான் சடம்வெளுத்து மேனி கண்ணும்
பண்மையாய்ப் பஞ்சவாண் டதனிற் கொல்லும்
பகர்கின்ற மதுமியத்தின் பாங்கு தானே 467

நீர் பசுமஞ்சளாகச் செல்லும். பீசமும் கோசமும் கடுக்கும் அடிக்கடி நீரிறங்கும். ஒவ்வொரு முறையும் அரை நாழி அளவு சிறுநீர்க்கழியும். சிறுநீரில் அடியில் வெண்மையாகப் படியும். உடல் வெளுத்து மேனி கன்னிவிடும். ஐந்து ஆண்டுகளில்

அந்நோயாளி மரணமடைவான். இவை மதுமிய மேகத்தின் குணங்களாகும்.

அசாத்தியமேகம்

பாங்கான பளிங்குநிறம் போலி றங்கும்
பரிபீச கோசமுமே கடுத்துக் கூசும்
தாங்கான தாழையொடு விழுது சாறு
தனைப்போலத் தானிறங்கும் காச்சி னக்கால்
தேங்கான சீப்போலமி கவே நாறும்
சீக்கிரமா வேளைக்கோர் படிதா னாகும்
ஏங்கான இப்படித்தான் கண்ட மேகம்
எய்திடுமே ஐந்தாண்டில் அசாத்தி யந்தானே 468

சிறுநீர் பளிங்குநிறம் போலவிருக்கும். பீசமும், கோசமும் கடுத்து கூசும். தாழைவிழுதுச்சாறுபோல சிறுநீர் இறங்கும். சீழ்போல மிகவும் நாறும். ஒரு வேளைக்கு ஒருபடியளவு சிறுநீர் இறங்கும். ஐந்தாண்டில் மரணம் நேரிடும். இது அசாத்திய மேகத்தின் குணங்களாகும்.

ஆவிருதமேகம்

சாத்தியமாய் முசல்ரத்தம் போல வீழும்
சாதகமா யிருநாழி தானி றங்கும்
காத்தியமாய்க் காச்சினாற் புலாலே நாறும்
கனமான பீசகோசங் கடுக் குமே
ஊத்தியாமா யிப்படிதான் கண்ட மேகம்
ஒன்பதா மாதத்திலொ டுக்குஞ் சீவன்
ஆத்தியமா மாவிருத மேக மென்றே
அவனியுள்ளோர் தங்களுக்க றியச் சொல்லே 469

முயல் இரத்தம்போல் சிறுநீர் கழியும். ஒருவேளைக்கு இரண்டு நாழி இறங்கும். சிறுநீரைக் காய்ச்சினால் புலால் நாற்றம் எடுக்கும். பீசமும் கோசமும் கடுக்கும். இந்நோய் கண்டால் ஒன்பதாம் மாதத்தில் இறந்துவிடுவர். இவை ஆவிருத மேகத்தின் குணங்களாகும்.

அறியவே பித்தசல மாறுக் குந்தான்
அங்கமதிற் செய்கின்ற குணத்தைக் கேளாய்
தறியவே சரீரம்வற்றி யெரிவுண் டாகும்
சடத்திலுந் தானீரிலுந்தான் கவிச்சுண் டாகும்

தெறியே சீப்போலுங் கற்றாழை போலும்
சேல்போலுந் தேன்போலுந் நாற்ற முண்டாம்
வெறியவே பீசத்திற்கோ சத்திற் குதத்தில்
மி குமீரல் நாபியிலும் வேக்கா டாமே 470

பித்தமேகம் ஆறுக்குமுள்ள பொதுக் குணத்தைக் கேட்பாயாக. உடல்வற்றி எரிச்சலுண்டாகும். உடலிலும், சிறுநீரிலும் துர்நாற்றம் அடிக்கும். மீன்போலும், தேன்போலவும் நாற்றமடிக்கும், பீசத்திலும், கோசத்திலும், குதத்திலும், ஈரல் மற்றும் நாபியிலும் வேக்காடு உண்டாகும்.

வேக்காடாய் விரணமுண்டாய் வாய்தா னாறும்
விக்கலொடு அருசியாய்ச் சுரமுண் டாகும்
தீக்காடாய் தேகந்தான்கி டைக்கொட் டாது
தியக்கமொடு மூர்ச்சையுண்டா மயக்க மாகும்
சாக்காடாய் நாவறளுந் தண்ணீர் தாகம்
சத்தியொடு சரீரமெல்லாந் தளர்ச்சி யாகும்
தாக்காடாமல் சஞ்சலந்தான் மிகவுண் டாகும்
சமகுணந்தான் பித்தசல மாறு மாச்சே 471

வேக்காடுண்டாகி புண்களாகும், விக்கலுடன் சுவையின்மையுண்டாகும், சுரமடிக்கும். உடலைப் படுக்க விடாது. தியக்கமொடு மூர்ச்சையுண்டாகும். மயக்கமாகும். நாக்கு வறளும். தண்ணீர் தாகமெடுக்கும். சரீரம் எல்லாம் தளர்ச்சியாகும். சஞ்சலம் மிகவும் உண்டாகும். இவை அனைத்தும் பித்தசலம் ஆறுக்குமுள்ள பொதுக்குணங்களாகும்.

ஆறான சிலேட்பசலம் பத்து தன்னை
அரண்சொல் லவாத்தாள்தான் கேட்கும் போது
வாறான வசாமேகம் உத்தம மேகம்
மச்சியா மேகத்தோடா கீக மேகம்
தூறான சுராரிசுக்ல முத்த மேகம்
சுற்றமாம் பினானியொடு லவண மேகம்
தேறான தெயித்தியமர மேக மென்று
செப்பினார் சிலேட்பத்தின் செலத்துத் தானே 472

சிலேத்துமசலம் பத்துவகையாகும். அவற்றை சிவன்சொல்ல பார்வதி கேட்டதைக் கூறுகிறேன். அவை வசாமேகம், உத்தம மேகம், மச்சமேகம், ஆகிக மேகம், சுராரிமேகம், சுக்கிலமேகம் உதக மேகம், பினானிமேகம், லவணமேகம், தயித்திய மேகம் ஆகும்.

வசாமேகம்

தாதென்ற வசாமேகமி றங்கும் போது
சலத்தின் மேல் நிணம்போலு மாடை யுண்டாம்
வேனென்ற வேளைக்குக் குறுணி தானும்
விடுபட்டுத் தானிறங்கும் காச்சி னக்கால்
நேனென்ற நிணமுறுக்கு போல நாறும்
நிலையாக இப்படிதா னிறங்கு மேகம்
ஏனென்ற ஏழாண்டு தன்னிற் றானும்
எமபுரத்துக் கேகுமென்றே இயம்பி டாயே 473

வசாமேகத்தில் சிறுநீர் கழியும்போது சிறுநீரின்மேல் இறைச்சிநீர் போல ஆடைபடியும். ஒரு வேளைக்கு ஒரு குறுணி அளவு சிறுநீர் இறங்கும். சிறுநீர் தடைபட்டு தடைபட்டு இறங்கும். சிறுநீரை காய்ச்சினால் இறைச்சியை சுட்டது போல் நாற்றமடிக்கும் ஏழு ஆண்டுக்குள் இறந்து விடுவர்.

உத்தம மேகம்

இயம்பவே நல்லதண்ணீர் போலி றங்கும்
எடுத்ததனைக் காய்ச்சினால் நல்ல தண்ணீர்
நயம்பவே நாற்றமது நல்ல தண்ணீர்
நல்வேளை தனக்குமொரு குறுணி யாகும்
அயம்பவே அப்படித்தான் கண்ட மேகம்
ஐயிரண்டு வருஷத்தி லறியக் கேளாய்
மயம்பவே மறலியிட வூர்புக் காகும்
மகத்தான வுத்தமமா மேகந் தானே 474

சிறுநீர் நல்ல நீர் போல இறங்கும். அதனை காச்சினாலும் நல்ல நீர்போலவே இருக்கும். அதன் மணமும் நல்ல நீர்போலவே இருக்கும். ஒரு வேளைக்கு ஒரு குறுணி அளவு சிறுநீர் இறங்கும். இந்த மேகநோய் கண்டவர்கள் பத்துவருடத்தில் இறப்பர். இவை உத்தம மேகத்தின் குணங்களாகும்.

மச்ச மேகம்

உத்தமமா யெலும்புக்குட் சதையைப் போல
உருகியே தானிறங்குங் காச்சி னக்கால்
நித்தமமாய் நிணநாற்ற மாயி ருக்கும்
நிசமாக வேளைமுந் நாழி யாகும்
பத்தமமாயப் படிதான் கண்ட மேகம்
பரமசிவ னடிகிணி யாப்பாவி யாகும்
இத்தமமா யேமனிட வூர்ப்புக் காகும்
இசைந்த வைந்து வருஷத்தில் மச்ச மேகம். 475

எலும்பிலுள்ள சதைபோல சிறுநீரிறங்கும். காய்ச்சினால் இறைச்சிவாடையடிக்கும். ஒரு வேளைக்கு மூன்றுநாழி இறங்கும். இந்நோய்கண்டால ஐந்து வருடத்தில் இறப்பர்.

ஆகிக மேகம்

மேகந்தானி ளநீர் போற் றானி றங்கும்
மிகக் காச் சிலிளநீர் போற்றா னிருக்கும்
வாகந்தான் வாடையது இளநீர் வீசும்
வகையான வேளைக்கு நாழி யாகும்
தாகந்தான் மிகவுண்டா யுடம்பி ளைக்கும்
சஞ்சலந்தான் மிகவுண்டாங் கண்ட ஏழு
பாகந்தான் வருஷத்திற் சாவு மாகும்
பாங்கான ஆகிகமே கத்தின் பண்பே 476

மேகநீர் இளநீர் போல் இறங்கும். காய்ச்சினால் இளநீர் போல இருக்கும். இளநீர் வாடை வீசும். ஒரு வேளைக்கு ஒரு நாழி அளவு சிறுநீர் இறங்கும். தாகம் அதிகம் உண்டாகும். உடம்பு இளைக்கும். சஞ்சலம் அதிகம் உண்டாகும். இந்நோய் கண்ட ஏழு வருடத்திற்குள் மரணம் ஏற்படும். இவை ஆகிக மேகத்தின் குணங்களாகும்.

சுராரி மேகம்

பண்பாக நுரையோடே வெளுப்பு போலப்
பனங்கள் ளுபோலவே தானி றங்கும்
கண்பாக வேளைக்கு நாழி யாகும்
காச்சினாற் கள்ளுதான்மி கவே வீசும்
மண்பாக மாப்போல மணந்தா னுண்டாம்
மயக்கமா மிப்படிதான் கண்ட மேகம்
எண்பாக ஏழுஆண் டதனிற் கொல்லும்
ஏற்றமாஞ் சுராரியென்ற மேகந் தானே 477

மேகநீரானது நுரையோடு வெளுப்பாக பனங்கள்ளு போல இறங்கும். ஒரு வேளைக்கு ஒரு நாழி அளவு சிறுநீர் கழியும். அதனைக் காய்ச்சினால் கள்போல வாடை வீசும். மாவுபோல மணம் வீசும். இந்நோய் கண்ட ஏழு ஆண்டிற்குள் மரணம் ஏற்படும்.

சுக்கில மேகம்

என்றதோர் மேகந்தானி றங்கும் போது
ஏற்றமாஞ் சுக்கிலத்தி னிறமே போலும்
தன்றதோர் தாளியிடச் சாறு போலும்
தரித்துமே மெழுகூர்ந்து சிறுகி வீழும்

கன்றதோ ரிதைக்காச்சிற் கட்டி போலக்
கனமான ஈரல்போற் றோஞ்சிப் போகும்
முன்றதோர் கண்டசலம் மூன்றா மாண்டில்
முயற்சியாய் கொல்லுஞ் சுக்ல மேகந் தானே 478

மேகநீர் இறங்கும்போது சுக்கிலத்தின் நிறத்துடன் தாளிச் சாறு போல இறங்கும். மெழுகுபோல சிறுத்து வீழும். இதனைக் காச்சினால் கட்டிபோல, ஈரல்போல தோஞ்சிப்போய்விடும். இந்நோய் கண்ட மூற்றாண்டுக்குள் மரணம் நேரிடும்.

உதகமேகம்

மேகமாய் கழுநீர் போற் சிக்கிச் சிக்கி
மிகுதியாய் தானிறங்குங் காச்சி னக்கால்
சாகமாய்ச் சங்குசுண் ண்ணாம்பு போலத்
தாழவே மண்டிமிகப் படியும் பாரு
பாகமாயிப் படித்தான் கண்ட மேகம்
பாங்குமா யோராண்டு தனிலே கொல்லும்
வேகமாய் மிகநாறுஞ் சரீரந் தானும்
மிக வுதக மேகமென்றேவி ளம்பு வாயே 479

கழுநீர்போல சிக்கி சிக்கி அதிகமாக மேக நீர் இறங்கும். அதனைக் காய்ச்சினால் சங்கு சுண்ணாம்பு போல அடியில் படியும். இம்மேகம் கண்ட ஓராண்டில் மரணம் நேரிடும். உடல் மிகவும் துர்வாடை வீசும். இவை உதகமேகத்தின் குணங்களாகும்.

பினானி மேகம்

விளம்பவே தேன்போலமி கவி றங்கும்
மிக்கான் தேன் வார்த்த நாற்ற மாகும்
அளம்பவே மெழுகுபோல யடியி னிற்கும்
அதிகமா யீயெறும்பு மிகவே மொய்க்கும்
குளம்பவே வேளைக்குக்குறுணி யாகும்
குறிகண்ட வைந்துமா தத்திற் கொல்லும்
தளம்பவே சரீரத்தில் மதுத்தா னாறும்
தனித்ததோர் பினானியென்ற மேகந் தானே 480

சிறுநீர் தேன்போல இறங்கும். தேனின் வாடையடிக்கும். அடியில் மெழுகுபோல தங்கும். ஈ எறும்பு அதிகமாக மொய்க்கும். ஒரு வேளைக்கு ஒரு குறுணியளவு நீர் இறங்கும். இந்நோய் கண்ட ஐந்துமாதத்தில் இறப்பார்கள். இவை பினானி மேகத்தின் குணங்களாகும்.

லவண மேகம்

தனித்ததோர் மேகந்தானி றங்கும் போது
தழலான சுண்ணாம்பு கார்நீர் போல
மினித்ததோர் மிகுதியாய்த் தானி றங்கும்
வேளைக்கு நானாழி தானு மாகும்
கனித்ததைக் காச்சினாற் படியு முப்புக்
கண்டசலம் பதினைந்து வருஷத் திறான்
வனித்ததோர் மறலியிட வூர்புக் காகும்.
வன்மையாய் லவணமென்ற மேகந்தானே. 481

சிறுநீர் கழியும்போது சுண்ணாம்பு நீற்றினைப்போல இருக்கும். அதிகம் சிறுநீர் கழியும். ஒரு வேளைக்கு நான்கு நாழியளவு சிறுநீரிறங்கும். அதைக் காய்ச்சினால் உப்பு படியும். இந்நோய் கண்ட பதினைந்து வருடங்களுக்குள் இறக்க நேரிடும்.

தயித்திய மேகம்

வண்மையாய் மேகந்தானி றங்கும் போது
மகா இறைச்சி கழுவினதோர் தண்ணீர் போலாம்
கண்மையாய்க் காக்கினாற்க விச்ச டிக்கும்
கனமான நீர்த்தாரை முறுக்கி வீழும்
வெண்மையாய் வேளைக்குமுந் நாழி யாகும்
மிக்கான குறிகண்ட மூன்றா மாண்டு
தண்மையா யமனிடப்பு ரத்துக் கேகும்
தயித்திய மேகந்தானுந் தகமு மாயே. 482

சிறநீர்கழியும்போது இறைச்சி கழுவிய நீர்போல இறங்கும். அதனைக் காச்சினால் கவிச்சடிக்கும். நீர்த்தாரையை முறுக்கி வலித்து சிறுநீர் கழியும். இந்நோய்கண்ட மூன்றாண்டுக்குள் இறப்பார்கள். இவை தயித்திய மேகத்தின் குணங்களாகும்.

சிலேத்தும சலத்தின் மேகம்

தசமான பத்துக்குங் குணத்தைக் கேளாய்
சரீரந்தான் பருத்துமே வெளுப்புண் டாகும்
அசமான தினவுண்டா மடிக்க டிக்கு
அன்னமு மேதண்ணீரு மிகவே தேடும்
கசமான இருமலுடன் கோழை யுண்டாம்
கனஎரி வாயாயாச முழலை யாகும்
குசமான குணங்களெல்லாஞ் சேட்பந் தன்னில்
கொடியசலக் குணமென்றே கூறி னாரே. 483

கப மேகம் பத்துக்குமுள்ள குணத்தைக் கேட்பாயாக. சரீரம் பருத்து வெளுப்படைந்து இருக்கும். தினவுண்டாகும். அடிக்கடி உணவும், தண்ணீரும் உட்கொள்ளவேண்டியிருக்கும். இருமல் கோழை உண்டாகும். ஆயாசம், அழலை உண்டாகும். இவை அனைத்தும் கொ்டியசல மேகத்தின் குணங்களாகும்.

மேகம் இருபதுக்கும் அவத்தை

கூறான மேகமது இருப துக்கும்
குணந்தனை சிவன்சொல்ல தேவி கேட்க
தாறான தாகமொடு சோக மேகந்
தரியாமல் நீரிழித லிருமல் மூச்சு
ஆறான அருசிசத்தி சித்தப் பிரமை
அடிக்கடிக்குத் தண்ணீர்தா னன்னங் கேட்கல்
ஈறான இடுப்புக்குள் கடுப்பு காணல்
எலும்பு ழற்றலழற்றலோ டெரிவுண் டாமே 484

மேகம் இருபதின் குணத்தை சிவன் கூற தேவிகேட்டிருந்தாள். தாகம், சோகம், ஏக்கம், நீர் இழிதல், இருமல், மேல் மூச்சு, சுவையின்மை, சித்தபிரமை, அடிக்கடி தண்ணீர், உணவு ஆகியவை கேட்டல். இடுப்பில் கடுப்பு காணப்படுதல், எலும்பு முதல் சூடுண்டாகி எரிச்சல் உண்டாகும்.

எரிவோடு சரீரமெல்லா மறைபட் டாற்போல்
எழிலுடம்பு நோதல் நித்தி ரையில் லாமை
வரிவோடு மாய்வுமெத்த வும்ப றித்தல்
மனது சஞ் சலப்படுதல் காற்று வேண்டல்
மெரிவோடு மேல்மூச்சுமி கவுண் டாதல்
விக்கலொடு மயக்கந்தான் மெத்தக் காணல்
தெரிவோடு தேகமெங்கும் வெளுருண் டாதல்
தேகமெத்த வாலோபப்ப டுதல் காணே 485

உடலெங்கும் அடிபட்டாற்போல் வலிக்கும். உறக்கம் இருக்காது. வாய்வு அதிமாகப் பிரியும். மனது சஞ்சலப்படும். காற்று அதிகமாக வேண்டியிருக்கும். மேல்முச்சு உண்டாகும். விக்கல் அதிகமாக உண்டாகும். மயக்கமேற்படும். தேகம் எல்லாம் வெளிரும். உடல் எல்லாம் உளைச்சலுண்டாகும்.

காணவே முதலவத்தை சரீரந் தானும்
கனமாகப் பருத்திறுகி நீர்த்து வாரம்
வேணவே வெண்டாக்கிய கலம் பண்ணும்
மிக்கவி ரண்டாமவத்தை விளம்பக் கேளாய்

மூணவே மூத்ரபீ டையுமாச் சுக்கில
முகமழுகித் தேஜசுதான் மிகவே குன்றும்
நாணவே மூன்றாகும வத்தைக் குந்தான்
நாவறளும் வாயுவது மீறுந் தானே 486

முதல் அவத்தை சரீரம் பருத்து இறுகி நீர்த்து இருக்கும். அதிகம் அகலமாக உடல் ஆகிவிடும். இரண்டாவது அவத்தையைக் கேட்பாயாக. மூத்திரம் நாற்ற முண்டாகி முகம் அழுகி தேஜசு குன்றிப்போகும். மூன்றாவது அவத்தையில் நாக்கு வரளும், வாயு அதிகம் பிரியும்.

தானான நாலாமவத் தையங்க தாகம்
சன்னியது பாதமுண்டா மைந்த வத்தை
தேனான நீர்ப்பெருகுந் தாது நஷ்டம்
நிலையாறா மவத்தையுடற் கிடை கொள்ளாது
மூனான மூர்ச்சைவரு மேழ வத்தை
மிக்கவ ரோசிகஞ் சுவாசந் தேக சாட்யம்,
ஏனான எட்டாவத வத்தை தானே
எழுகிரந்தி பிளவையுந்தான் மிகவுண் டாமே 487

நாலாவது அவத்தை யாதெனில் தாகம் அதிகமெடுக்கும். சன்னிபாத முண்டாகும். ஐந்தாவது அவத்தையில் சிறுநீர் பெருகும். தாது நட்டமாகும். ஆறாம் அவத்தையில் உடம்பை படுக்கவிடாது மூர்ச்சை உண்டாகும். ஏழாம் அவத்தையில் பசியிருக்காது. தேகம் வாடும். எட்டாவது அவத்தையில் கிரந்தி பிளவை ஆகியவை உண்டாகும்.

சாத்திய - அசாத்தியம்

உண்டாகு மொன்பதாம வத்தை கேளாய்
ஒழுக்கமா ஆசாரங்கி ருமி யுண்டாம்
பண்டான பத்தாந்தான வத்தை கேளாய்
பாரமாம் க்ஷயங்கண்டு பரத்துக் கேகும்
வெண்டாகு மேகந்தானி ருப துக்கும்
விளங்கியதோர் தசவவத்தை விபரஞ் சொன்னோம்
அண்டாகுஞ் சாத்தியம சாத்ய மிரண்டும்
அறிந்துகொண்டு அடவாகவ விழதஞ் செய்யே 488

ஒன்பதாவது அவத்தையில் கிருமியுண்டாகும். பத்தாவது அவத்தையில் க்ஷயநோய் உண்டாகும். இவ்வாறு மேகநோய் இருபதுக்கும் பத்து அவத்தைகளைக் கூறினோம். இவ்வாறு உள்ள நோயில் சாத்தியம் அசாத்தியம் ஆகிய இரண்டையும் அறிந்துகொண்டு மருத்துவம் செய்யவேண்டும்.

செய்யவே வச்சிரமாந் தண்ட மான
செயமான முதுகுத்தண்டைப் பற்றி நிற்கும்
பெய்யவே பெருநரம்பில் மேகந் தானும்
பிறக்குமென்றே தானறிந்து வாதந் தன்னால்
பிய்யவே பிறந்தசலம் நால சாத்யம்
பித்தத்திற் பிறந்தசல மாறும் சாத்யம்
பையவேசேட்டுமத்திற்பிறந் தசலம் பத்தும்.
பரமனுரைத் தார்சாத்யம் பரா பரிக்கே 489

மேகநோயானது முதுகுத்தண்டையும், பெரு நரம்பையும் பற்றிக் காணும். வாதத்தில் தோன்றிய மேகம் நான்கும் அசாத்தியமாகும். பித்தத்தில் பிறந்த மேகம் ஆறும் சாத்தியமாகும். அதுபோலவே சிலேத்துமத்தில் பிறந்த ஆறும் சாத்தியம் ஆகும். மருந்தினால் குணப்படுத்தலாம்.

மேகம் இருபதுக்கும் பத்தியம்

பரிமேக மிருபதுக்கும் பத்தி யந்தான்
பாங்காக வுரைத்திடவே பசுவின் வெண்ணெய்
பொரிவாக எருமைமோர் பொன்னாங் காணி
பேர்பெற்ற சிறுகீரை முசுட்டை யாகும்
அரிவாக அவரையொடு புடல்மு ருங்கை
அதிசாரமாய் கண்டுசருக் கரையு மாகும்
மரிவாக மாதளையாம் பேரீத் தாகும்
மகாவிளாம் பழமுந்திரிப் பழமு மாமே 490

மேகம் இருபதுக்கும் பத்தியத்தைக் கேட்பாயாக. பசுவெண்ணெய், எருமைமோர் பொன்னாங் கன்னி, சிறுகீரை, முசுட்டை, அவரை, புடல், முருங்கைப் பிஞ்சு, கற்கண்டு, மாதுளை பேரீச்சம்பழம், விளாம்பழம், முந்திரிப்பழம் ஆகியவற்றோடு,

ஆமே பேயன்வாழைப்ப ழமுங் கச்சல்
அத்தியிட பிஞ்சுசிறுபயறு பழஞ் சோறு
பாமே பழஞ் சோற்றுநீர் வெந்தயஞ் சீரகமாம்
பாகல் பீர்க்கங்காய் கருவேப்பிலை கொத்த மல்லி
நேமே நெற்பொறி எள்ளு முசுமுசுக்கை யாகும்
நேரான நல்லெண்ணெய் புண்ணாக்கு ளுந்து
தாமே கமிருபதுக்கும் பத்திய வர்க்கம்
சாற்றினார் சிவன்றானுந் தாய்க்குத் தானே 491

பேயன் வாழைக்காய், வாழைப்பழம், அத்திப்பிஞ்சு, சிறுபயறு பழையசோறு, பழஞ்சோற்றுநீர், வெந்தியம், சீரகம், பாகல், பீர்க்கங்காய், கருவேப்பிலை, கொத்தமல்லி, நெற்பொறி,

எள், முசுமுசுக்கை, நல்லெண்ணெய், புண்ணாக்கு, உளுந்து ஆகியன பத்திய உணவாகும். இவற்றை சிவன் பார்வதிக்கு கூறினார்.

தாயான பராபரிக்குச் சிவன்முன் சொல்லத்
தாய்கேட்டு நந்திதனக் கருளாற் சொல்ல
தூயான நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
சுற்றமாய்த் தன்வந்திரியசு வினிக்குச் சொல்ல
ஆயான வசுவினிஅ கத்தியர்க்குச் சொல்ல
அகத்தியரும் புலத்தியருக் குபதே சிக்க
பூயான புலத்தியரும்தே ரையமா முனிக்குப்
புகன்றிட்டார் எந்தனுக்குத் தேரையமு னிதானே 492

பார்வதிக்கு சிவன்கூற, பார்வதி நந்திக்கும், நந்தி தன் வந்திரிக்கும், தன்வந்திரி அசுவினிக்கு, அசுவினி அகத்தியருக்கு, அகத்தியர் புலத்தியருக்கும் புலத்தியர் தேரையருக்கும், தேரையர் யூகிமுனியான எனக்கு கூறினார்.

தானான யான்தானே மனமு வந்து
சகல சனத்துபசா ரச்சாங் கமாகக்
கோனான சிவன்சொன்ன ஆதி நூலின்
குறிப்பெல்லாம் பார்த்துணர்ந்துவட மொழியைத் திரட்டி
தேனான சாத்திரமாய் தமிழி னாலே
தெளிவாக எல்லோரு மறிய வென்று
ஆனான ஆயுருவே தத்தை யெல்லாம்
அடக்கியே சுருக்கினேன் மேக முற்றே 493

யூகிமுனியாகிய நான் மனமுவந்து சகல மக்களுக்கும், பயன்படட்டுமென்று, சிவன் கூறிய ஆதிநூலின் குறிப்பை உணர்ந்து வடமொழியை தமிழ்மொழியில் சாத்திரமாக எல்லோரும் அறிய கூறினேன். மேக நோய்கள் முற்றியது.

மேகரோக நிதானம் முற்றிற்று.

குட்டரோக நிதானம்

முத்தாகுங் குட்டந்தான் பதினெட் டுக்கும்
முனியான யூகிநான் சொல்லக் கேளாய்
புத்தாகும் புண்டரீக குட்டத் தோடு
பொருகின்ற விற்போடக குஷ்ட மாகும்
பத்தாகும் பரமகுஷ்டம் கேச்ர குஷ்டம்
பரிவான கரணகுட்டம் சிகும் குட்டம்
கித்தாகுங் கிருஷ்ணகுட்ட அதுவும்பர் குட்டம்
கெடியான மண்டலகுட் டமுமா மென்னே 494

குட்டவகை பதினெட்டையும் கேட்பாயாக. புண்டரீக குட்டம், விற்போடக குட்டம், பரம குட்டம். கேச்சர்ம குட்டம், கரணகுட்டம், சிகும குட்டம், கிருட்டிணகுட்டம், அதுவும்பர குட்டம், மண்டல குட்டம் ஆகியவற்றோடு

குட்டமாம் பரப்பரிச குட்ட மொடு
குடிலமாம் விகர்ச்சீக குட்ட மாகும்
வட்டமாம் வையாதி குட்ட மோடு
மருவலாங் கிடீபகுட்டஞ் சர்ம தேவம்
திட்டமா தேத்திருக் குட்ட மோடு
சித்துமா குட்டஞ்சா காறு குட்டம்
துட்டமாஞ் சுவேதகுட்டந் தன்னோ டொக்கச்
சுயம்பான பதினெட்டு குட்ட மாச்சே 495

அபரப்பரிச குட்டம், விகர்ச்சீக குட்டம், வையாதி குட்டம், கிடீப குட்டம், சர்மதேவ குட்டம், தேத்திருக் குட்டம், சித்துமா குட்டம், சதாருகுட்டம், சுவேத குட்டம், ஆகியவையும் சேர்த்து குட்டவகை பதினெட்டு வகையாச்சு.

ஆச்சென்று பதினெட்டுக் குட்டந் தானும்
அவரவர்கள் செய்கின்ற வதர்மத் தாலாம்
தேச்சென்ற சிவாலயத் திலுச்சிட் டங்கள்
செய்தவர்கள் சிவநிந்தை பண்ணி னோர்கள்
மூச்சென்ற பெரியோரைத் தூஷித் தோர்கள்
மூஸ்கரமா யடைக்கலத்தை யெடுக்கின் றோர்கள்
கூச்சென்ற தினையளவுங் குறைந்த கூலி
கொடுக்கின்றோர் குட்டத்திற் கூடு வாரே 496

பதினெட்டுக்குட்டமும் அவரவர்கள் செய்கின்ற அதர்மத்தால் உண்டாவதாகும். சிவாலயத்தை நாசம் செய்தவர்கள், சிவநிந்தை செய்தவர்கள், பெரியவர்களை தூஷித்தவர்கள், அடைக்கலத்தை கெடுத்தவர்கள், குறைந்த கூலி தருபவர்கள் ஆகியோர் குட்ட நோயால் அவதிப்படுவார்கள்.

புண்டரீக குட்டம்

கூடுமே தாமரையின்பூ விதழ்ப் போல்
குவிந்துமே கறுப்போடு வெளுப்பு மாகும்
தேடுமே சிவப்புபல வண்ண மாகும்
தினவு மிகவாராது சொனையிற் பன்னீர்
வாடுமே அய்யினுற மத்தி யாகி
வருத்த மிகவுண்டாகி நோவு மாகும்
போடுமே சரீரங்கள் முகங்கள் காது
புண்டரிகக் குட்டத்தின் புதுமை தானே 497

தாமரையின் இதழ்கள்போல குவிந்து கறுத்தும், வெளுத்தும் காணப்படும். சிலவேளை சிவப்பாகவும் பலவர்ணமாகும். அரிப்பிருக்காது. நோயுள்ள இடத்தில் நீர் கோர்த்திருக்கும். அதிகம் உண்டாகி மிகவும் நோயுண்டாகும். உடல், முகம், காது ஆகியவற்றில் நோயுண்டாகும். இவை புண்டரீக குட்டத்தின் குணங்களாகும்.

விற்போடக குட்டம்

புதுமையாய்ச் சரீரமெங்குந் தினவுண் டாகும்
பொருவெடி யாய்த்திக்கெனத் தீக்கொழுந் துபோல
மெதுமையாய் விட்டெரியும் நல்ல பாம்பின்
விஷப்படம் போலேதடித்து வெளுப்பு மாகும்
கதுமையாய் மிகச்சொரியுஞ் சிவப்பு மாகும்
தூக்கமொடு சஞ்சலமும் மிகவுண் டாகும்
கதுமையாய்த் தோலெல்லாம் தடிப்புண் டாகும்
கனத்த விற்போடக மான குட்டந்தானே 498

உடல் எல்லாம் அரிப்பிருக்கும். தீக்கொழுந்து பட்டதுபோல எரியும், நல்லபாம்பின் படத்தைப்போல தடித்து வெளுப்பாய் இருக்கும். அதிகம் சொரியெடுக்கும். சிவப்பாக இருக்கும். அதிக தூக்கத்துடன் சஞ்சல மடையச் செய்யும். தோல் எல்லாம் தடிப்புண்டாகும்.

பரமகுட்டம்

தானான தினவுண்டாய் வெளுத்தி ருக்கும்
தங்கியே சீப்பாயுந் தேகங் குன்றும்
கானான சரீரமெல்லா வெரிவுண் டாகும்
கனமான தாமரையின் குடைபோ லுண்டாம்
பானான சொறியோடு தினவுண் டாகும்
பாம்பினிடத் தோல்போல வுரிஞ்சி வீங்கும்
கானான கால்கையுங் குறைந்து காணும்
கனமான பரமகுட்ட மாகுந் தானே 499

உடலில் தினவுண்டாகி வெளுத்துப் போகும். சீழ் வடியும், தேகம் குன்றும். சரீரமெல்லாம் எரிச்சல்தரும். தாமரையின் குடைபோல தடித்திருக்கும். சொறியுடன் தினவுண்டாகும். பாம்பின் தோல்போல உரிந்து வீங்கும். கால்கை விரல்களும் அளவில் குறையும். இவை பரம குட்டத்தின் குணங்களாகும்.

கேச்சர்மகுட்டம்

தானாகச் சடந்தானு மிகக் கறுப்பாம்
சடமெங்குந் தோலுரியுஞ் சிவப்பு மாகும்
வேனான வெறவெறனெத் தானி ழுக்கும்
வெடிக்குமே சொரிச்சலாய்த் தினவுண் டாகும்
கானாகச் சர்மகுட்ட மிதிலுண் டாகும்
கடினமாய்க் கால்விரல்கள் கனப்புண் டாகும்
கூனாகத் தேகமெங்கும் வலியெ டுக்கும்
குறியான கேச்சர்ம குட்டந் தானே 500

உடல் மிகவும் கறுத்துப் போகும். உடல் எல்லாம் தோல் உரியும். சிவந்து காணப்படும். வறவறவென இழுக்கும். தோல் வெடித்து விடும், தினவெடுக்கும். கால்விரல்களில் கனப்புண்டாகும். தேகம் முழுதும் வலியெடுக்கும். இவை கேச்சர்ம குட்டத்தின் குணங்களாகும்.

கரண குட்டம்

சர்மந்தான் மிகவெடிக்கும் போரிற் றானும்
சடமெல்லாம் வேதனைபச் சென்றி ருக்கும்
தெர்மந்தான் றிரிதோஷ குணமுண் டாகும்
தேகமெங்கும் பாரிக்குந் திமிருண் டாகும்
மர்மந்தான் காக்கணம்பூ நிறம தாகும்
கண்டிப்பு வீக்கமாய் தானி ருக்கும்
வர்மந்தான் மனக்கிலேச மிகவுண் டாகும்
மாகரண குஷ்டத்தின் மார்க்கந் தானே 501

தோல்மிகவும் வெடிக்கும். உடல் முழுவதும் வேதனை மிகுந்திருக்கும். திரிதோஷ குணமுண்டாகும். உடல்முழுவதும் பாரித்து திமிருண்டாகும். காக்கணச்செடி பூவின் நிறமாக தோலிருக்கும். வீக்கமுண்டாகும். மனக்கிலேசமுண்டாகும். இவை கரண குட்டத்தின் குணங்களாகும்.

சிகுரகுட்டம்

மார்க்கந்தான் பசுமையாய் வெளுப்புண் டாகும்
மாசிவப்புக் கறுப்புமாய்த் தினவுண் டாகும்
தார்க்கமாய் தடிப்புச்சீப் பாச்ச லாகும்
தசைவயிறு கடினாகக்கீட் சொரியு மாகும்
தேர்க்கமாய்த் திமிரோடு தசையும் பரவும்
தேக்கான எரிச்சலாய் உஷ்ண மாகும்
சீர்த்தமாய் வயிறுதனிற் கண்டிப் பாகும்
சிகுரகுஷ்டந் தன்னுடைய சேதி கேளே 502

பசும் வெள்ளையாய் தோலில் படரும். சிவப்பும் கறுப்புமாக இருந்து தினவெடுக்கும். தடிப்பாக சீழும் கலந்து காணப்படும். வயிற்றுப் பகுதியில் சொறியுண்டாகும் மற்ற தசைகளில் பரவும். எரிச்சலுடன் சூடுண்டாகும். வயிற்றில் மிகவும் அதிகமாயிருக்கும். இவை சிகுர குட்டத்தின் குணங்களாகும்.

கிருஷ்ண குட்டம்

சேதியாய் தேகமெங்குந் தான்கறுக்கும்
சிவப்புடனே சேட்டுமத்தி லுற்ப வித்துக்
காதியாய்த் தோல்திமிர்த்தே கதித்து நாறும்
கனமான தாதுவிலு மூஷ்ணந் தாக்கும்
நூதியா யுடம்பெங்கும் நோவுண் டாகும்
நுட்பமாம் புறங்காலி லறையிற் காணும்
தாதியாய் தலைதன்னில் மிகுதி யாகும்.
சஞ்சரிக்குங் கிருஷ்ணகுட்டத் தாண்மை தானே 503

உடல் கறுத்துவிடும். சிவப்பாக கபத்திலிருந்து தோன்றி தோல் திமிர்த்துக் காணப்படும். உடல் நாறும். உடல் தாதுக்களிலும்கூட உஷ்ணம் தாக்கும். உடல் எங்கும் வலியுண்டாகும். புறங்காலிலும், அரையிலும் இந்நோய் உண்டாகும். ஆனால் தலையில் அதிகமாக காணப்படும். இவை கிருஷ்ணகுட்டத்தின் குணமாகும்.

அவுதும்பர குட்டம்

ஆண்மையாயத் திக்காய்ப் போல ரும்பி
அடுக்கடுக்காய் முளைத்துமே பெருத்து மெத்தக்
காண்மையாய் காய்ந்துமே உடம்பெங் குந்தான்
கருகியே உடம்புதோல் திரைந்து தொங்கும்
தோண்மையாய் தேகமெங்குந் திமிருண் டாகும்
சொறியுமே சரீரத்திற் செந்நீர் பாயும்
வாண்மையாய் மயக்கந்தான் மிகவுண் டாகும்
வகுத்ததோ ரவுதும்பர குட்டந் தானே 504

அத்திக்காய்போல உடம்பெங்கும் தோன்றி அடுக்கடுக்காக முளைக்கும். உடல் எங்கும் கருகி தோல் சுருங்கி காணப்படும். தேகம் எங்கும் திமிருண்டாகும். உடலில் சொறிந்தவுடன் சிகப்புநிற நீர்பாயும். மயக்கம் அதிகமுண்டாகும். இவை அவுதும்பர குட்டத்தின் குணங்களாகும்.

மண்டல குட்டம்

வகுத்ததோர் பச்சைவண்ண மிரத்த வண்ண
மாயிருக்கு முடம்பெல்லாஞ் சிரசெல் லாந்தான்
விகுத்ததோர் தலையிலே வெளுப்பு மாகும்
மேனியெல்லா மிகத்தடித்துக் கறுப்புண் டாகும்
திகுத்ததோர் தினவாகுஞ் சொறியு மாகும்
சிகப்பான சலம்வீழுஞ் சடமெங் குந்தான்
வகுத்ததோர் மண்டலகுட் டத்தின் செய்தி
மார்க்கமெல்லாம் பார்த்துணர்ந்து மருவு வீரே 505

உடல், தலை ஆகியவை முழுவதும் பச்சைவண்ணமாக வும், இரத்த வண்ணமாகவும் காணப்படும். தலையில் வெளுப்பாக இருக்கும். மேனி எல்லாம் மிகவும் தடித்து கறுப்பாக இருக்கும். சொறியுண்டாகும். அரிப் பெடுக்கும். உடல் முழுதும் இரத்தம் கலந்தநீர் வெளிப்படும். இவை மண்டல குட்டத்தின் குணங்களாகும்.

அபரபரிச குட்டம்

மருவவே தேகமெல்லா மிகவே நொந்து
மாசற்ற இரத்தமெல்லா மிகக் கறுக்கும்
செருவவே சிந்தையெல்லா நோவுண் டாகும்
தேகமெங்குந் துடிபடா நோவுண் டாகும்
அருவவே வாய்வுமிஞ்சி யதிக நோவாம்
அதிர்ந்து வேதனையாகு மிகநீர் தொட்டால்
பருவவே வீங்கியே வெடிப்புண் டாகும்
பரந்த வபர பரிசகுட்டப் பண்பு மாமே 506

தேகம் முழுவதும் மிகவும் நொந்துவிடும். குற்றமில்லாத இரத்தம் கறுத்துவிடும். மனம் நோகும். தேகம் முழுவதும் கட்டுக்கடங்கா வலியுண்டாகும். வாய்வு அதிகம் மிஞ்சும். அதிர்ந்து வேதனையாகும். அதிக நீர் சுரந்து காணப்படும். தொட்டால் வெடித்து நீர்வடியும். இவை அபரபரிச குட்டத்தின் குணங்களாகும்.

விசர்ச்சீக குட்டம்

பரிசமாய் வாதபித்தத் துற்ப வித்துப்
பரிந்து தொட்டாலெண் ணெய் தனைவெளுப் புமாகும்
விரிசமாய் தினவெரிப்பு வேதனையு மாகும்
மிகச் சிவப்பு தண்டிப்புத் தோலு றப்பு

மரிசமாய் காவெரிப் புஞ்ச லிப்பு
மகத்தான வெட்கிப்பு வயிறு சப்பு
துரிசமாய் கோபிப்புச் சரச ரப்பு
சுறுசுறுப்பு விசர்ச்சீகக் குட்ட மாமே 507

வாதபித்த கபங்களால் இவ்வகையுண்டாகும். தொட்டால் வெளுப்பாக இறுக்கும். தினவு, எரிப்பு, வேதனை ஆகியவை உண்டாகும். சிவப்பாக தோல் உறத்துக் காணப்படும். எரிப்பும் மனச்சலிப்பும் தோன்றும். வயிறுப்புசமாகும் சோபமுண்டாகும். அங்குமிங்குமாக பரபரத்து காணப்படுவர். இவை விசர்ச்சீகக் குட்டத்தின் குணங்களாகும்.

வையாதிகுட்டம்

சுறுப்பாகச் சேட்டுமப்பித் தந்தன் னிற்றான்
துனிந்து டம்பிலே வெடித் தங்காற் றவெண்ணா
அறுப்பாக அண்ட வொண்ணாத் தணல தாகி
அழன்று கைகால்கண் காது கண்டந் தானும்
வெறுப்பாக வெடித்துமே வீங்கிப் புண்ணாம்
மேனியெல்லா நற்பாம்பு மின்ன லாகும்
கறுப்பாகச் சந்தெல்லாம் பரவி நிற்கும்
காரணமாம் வையாதி குட் டமாமே 508

சிலேத்மபித்த விகாரத்தினால் இந்நோய் உண்டாகும். உடம்பில் அங்கங்கே வெடித்து அணுகமுடியாத அளவு வெப்பமாயிருக்கும். கை, கால், உடல், முழுதும் வெடித்து வீங்கிப் புண்ணாகிவிடும். உடல் முழுதும் நல்லபாம்பு போல் மினுமினுக்கும். மூட்டுகளில் எல்லாம் இந்நோய் பரவி நிற்கும். இவை வையாதி குட்டத்தின் குணங்களாகும்.

கிடீப குட்டம்

காரணமாஞ் சரீரமெங்கும் பச்சை யாகும்
கனத்து யானைத்தோல் கதுப்பு மாகும்
மாரணமாய் மகாதினவு சொறியு மாகும்
மகத்தான மூத்திரந்தா னடிக் கடிக்கு
நாரணமாய் நன்னீர தாகு மேனி
நரகமாய் நாற்றந்தான் மிகவுண் டாகும்
சீரணமாய் சிவப்பட்சி வாத மாகும்
செடந்தானு முழுதுமேகி டீப குட்டம் 509

உடல் முழுவதும் பச்சையாகும். யானைத்தோல் போல தடித்துகாணப்படும், அதிகம் அரிப்பும் சொறியுமுண்டாகும். சிறுநீர் அடிக்கடி கழிய நேரிடும். உடல் அதிக நாற்றமடிக்கும். பட்ச

வாதம் உண்டாகும். இவை கிடைப குட்டத்தின் குணங்களாகும்.

சர்மதேவ குட்டம்

கிடைபமா யுடம்புவலி யதிக மாகும்
கீற்றாக வெடித்துவே தனையு மாகும்
தடைபமாய் தடிப்பாகிச் செம்மை யாகுந்
தனைத்தொட்டால் நோக்காடாய்த் தினவெ ழுப்பும்
வடைபமாய் மயக்கோடு அசதி காணும்
மாறாத நோக்காடுமி கவே யுண்டாம்
திடைபமா யுதரத்தில் வலியு மாகும்
செப்புகின்ற சர்மதேவ குட்ட மாமே 510

உடலில் வலி அதிகம் உண்டாகும். கீற்று கீற்றாகி உடல் வெடித்து வேதனையுண்டாகும். தோல் தடித்து செம்மையாகும், அவ்விடத்தைத் தொட்டால் நோவுண்டாகி தினவெழும்பும். மயக்கத்தோடு அசதி காணப்படும் அதிக வலியுண்டாகும். வயிற்றில் வலி ஏற்படும். இவை சர்மதேவ குட்டத்தின் குணங்களாகும்.

தேத்திருக் குட்டம்

சர்மந்தான் சிவப்பாக வட்ட னித்துச்
சலவைபோல் வெளுக்குமே தினவுண் டாகும்
வர்மந்தான் ரோகமது மிகவுண் டாகும்
மயிரெல்லாஞ் சுருண்டுமே உண்டை யாகும்
கர்மந்தான் பித்தசேட்டு மமி குக்கும்
காயந்தான் கதித்துமே திமிருண் டாகும்
தர்மந்தான் சடமெல்லா மூத லாகும்
தாக்கான தேத்திருக் குட்டந் தானே 511

சிவப்பாக வட்டமாக தோலில் காணப்படும். சலவை செய்ததுபோல வெளுத்து தினவுண்டாகும். மயிர் எல்லாம் சுருண்டு உருண்டாகிவிடும். பித்த சிலேத்துமத்தின் மிகுதியால் இது உண்டாகும். உடல் தடித்து திமிர்த்துப் போகும். மேனி ஊதிப்போகும். இவை தேத்திருக் குட்டத்தின் பண்புகளாகும்.

சித்துமா குட்டம்

தாக்கான வாதபித்தத் துற்ப வித்துத்
தளிரான சுரைப்பூவின் வண்ண மாகி
வாக்கான வடிவமெல்லாந் திமிருண் டாகி
வட்டணித்துப் பசுமஞ்சள் வர்ணமாகும்

தேக்கான திமிரோடு செந்நீ ருண்டாய்
தேகமெங்கு மசைக்கொணாச் செழுமை யாகும்
நீக்கான நினைவொடு மறதி யாகும்
நிலவரமாஞ் சித்துமாக் குஷ்டந் தானே 512

வாதபித்த சோபத்தால் இந்நோய் உற்பத்தியாகும். சுரைப்பூவின் வண்ணமாக இருக்கும். உடல் எல்லாம் திமிர்த்து வட்ட வட்டமாக பசுமஞ்சள் வர்ணமாக இருக்கும். செந்நீர் வெளிவரும். தேகமெங்கும் அசைக்க முடியாத அளவு வீங்கிக் கொள்ளும். மறதி அதிகமாகும். இவை சித்துமாக் குட்டத்தின் குணங்களாகும்.

சாதாரு குட்டம்

சித்தான தண்டிப்பாய் ரத்த வர்ணம்
செழும்பச்சை வெள்ளையாய்ச் சிவப்பு மாகும்
எத்தான வெரிப்போடு தினவு மாகும்
எளிதான சேட்டுமவா தத்துற் பத்தி
பத்தான கரடுகட்டிப் புண்ணு மாகும்
பாம்புதோல் போற்றிரைந்து பருத்துக் காணும்
வித்தான மூக்கோடு காது கன்னம்
மிகத்துடிப் பாஞ்சாதாரு குட்டந் தானே 513

மிகவும் தடிப்புடன் இரத்தவர்ணமாக இருக்கும். பச்சை, வெள்ளை, சிவப்பு வண்ணங்களில் தோலிருக்கும். எரிச்சலுடன் அரிப்பெடுக்கும். கரடுகட்டி புண்ணுண்டாகும். பாம்புதோல் போல் பருத்து காணப்படும். மூக்கு, காது, கன்னம் ஆகியவற்றில் உண்டாகும். இவை சதாருகுட்டத்தின் குணங்களாகும்.

சுவேத குட்டம்

தடிப்பாக தவளநிறம் போல்வெ ளுத்துச்
சர்வாங்கமும் வெளுத்தாற் றான்றி ரும்பும்
மடிப்பாக மயிர்வெளுத்தா ல்சாத்ய மாகும்
வரிவுதடு வுள்ளங்கைக் குதங் குய்யந்தான்
நெடிப்பாக நெருப்புப்பட்டது போல புண்ணாய்
நிறமிருந்தா லசாத்யமென்றே யுரைக்க லாகும்
வெடிப்பாக மேனியெல்லாம் வெளுத்து வீங்கில்
வெண்சுவேத குட்டமென்றே விளம்ப லாமே 514

வெண்மையாக வெளுத்து உடல் எல்லாம் பரவி நிற்கும் மயிர் வெளுத்துவிடின் அந்நோய் அசாத்யமாகும். உதடு,

உள்ளங்கை, குதம், குய்யம் ஆகியவை நெருப்பு பட்டதுபோல புண்ணாகும். மேற்கண்ட இடங்களில் நோயிருந்தால் அது அசாத்யமாகும். மேனி எங்கும் வெளுக்கும். வீங்கிவிடும். இவை சுவேத குட்டத்தின் குணங்களாகும்.

குட்ட வரலாறு

விளம்பவே மிகுந்தஉஷ் ணந்தன் னாலும்
மிகுந்த சீதளத்தாலு மழற்சி யாலும்
வளம்பவே மந்தத்தால் வாந்தி யாலும்
மகத்தான பெண்ணோடு மருவ லாலும்
கிளம்பவே கிலேசங்கள் மிகுத லாலும்
கெடியான வுரக்கங்கள டைத லாலும்
தளம்பவே மயிருகற்கள் தவிடு மண்கள்
சாதத்திற் பருகலால் மிகுக்குங் குஷ்டம். 515

அதிக சூட்டினாலும், அதிக குளிர்ச்சியினாலும், அழற்சியாலும், மந்தத்தினாலும், வாந்தியினாலும், அதிகமாக பெண்போகம் செய்வதாலும், மனக்கிலேசமடைவதாலும், அதிக தூக்கம் போடுவதாலும், மயிர், கற்கள், தவிடு, மண் கலந்த உணவை உண்பதாலும் இந்நோய் உண்டாகும்.

குட்டந்தான் பதினெட்டு வரவே தென்னிற்
குருநிந்தை சிவநிந்தை மறையோர் நிந்தை
திட்டந்தான் தேவதையைத் தூஷணைக்கு ரோதம்
செப்பலாற் றிருடலாற் பரதா ரத்தை
அட்டந்தா னாசையால டைக்க லத்தை
அபகரித்த லகதிபர தேசி தன்னை
வட்டந்தான் வைதலாற் கற்ப ழித்தல்
வந்திடுமே பதினெட்டுக் குட்டந் தானே 516

பதினெட்டுக் குட்டத்தின் உற்பத்தியைக் கேட்பாயாக குருநிந்தை, சிவநிந்தை, மறையோர் நிந்தை, தேவதை தூஷணை, ஆகியவை செய்தவர்களுக்கும், குரோதம் பேசுபவர்களுக்கும் திருடர்களுக்கும், அடைக்கலம் புகுந்தோரை காட்டிக்கொடுத்தவர் களுக்கும், பரதேசிகளை திட்டுபவர்களுக்கும், கற்பழித்தவர்களுக் கும் பதினெட்டுக் குட்டம் வந்து சேரும்.

சாத்தியம்

குட்டந்தான் பதினெட்டில் சாத்தி யந்தான்
கூறக்கேள் விற்போடக பரமற் குட்டம்
கிட்டந்தான் கேச்சர்ம குட்ட மோடு
கிருஷ்ண குட்டமவுதும்ப ரகுட்டந் தானும்
திட்டமாந் தேத்திருக் குட்ட மோடு
செயசித்து மாகுட்டங் கிடீப குட்டம்
தட்டந்தான் மிகுந்தசா தாரு குட்டம்
சமகிருஷ்ண குட்டம் சாத் தியமா மென்னே 519

குட்டவகை பதினெட்டில், விற்பொட குட்டம் பாமற் குட்டம், கெஜசர்ம குட்டம், கிருஷ்ணகுட்டம், அவுதும்பர குட்டம், தேத்திரு குட்டம், சித்துமா குட்டம், கிடீப குட்டம், சதாருகுட்டம், கிருஷ்ண குட்டம் ஆகியவை சாத்தியமாகும்.

அசாத்தியம்

ஆமென்ற பத்துந்தான் சாத்ய மாகும்
அசாத்ய மதுதானெட்டு அறிந்து பாரு
போமென்ற பூர்வத்தின் கன்மத் தாலும்
புவிதனக் கும்மிகுகன்மஞ் செய்த பாவம்
பாமென்ற பெரியோர்கள் சாபத் தாலும்
பாதகங்கள் மனதறியப் பண்ணும் பேர்க்கும்
கோமென்ற குட்டமாம் ரோகம் வந்து
கூடுமென்று யூகிமுனி கூறினேனே. 518

முன்கூறிய பத்தினைத் தவிர்த்துள்ள எட்டும் அசாத்தியம். பூர்வசென்மகாரியத்தாலும், பூமிக்கு பாவம் செய்ததாலும், பெரியோர்கள் சாபத்தாலும், மனதறிந்து பாவம் செய்தவர்களுக்கும் குட்ட ரோகம் வந்து சேரும் என்று யூகிமுனியாகிய நான் கூறுகிறேன்.

குட்டரோக நிதானம் முற்றிற்று

பாண்டு ரோக நிதானம்

கூறவே பாண்டுவைவிட பெயரைக் கேளாய்
குறிப்பாக வைந்துவித மாகும் பாரே
வாரவே வாதமாம் பாண்டு வோடு
மார்க்கமா பித்தத்தின் பாண்டு வாகும்
தேறவே சிலேட்டுமமாம் பாண்டு தானாம்
திரிதோஷப் பாண்டோடு விஷப்பாண் டாகும்
ஆறவே பாண்டுவிட ஆண்மை யெல்லாம்
ஆராய்ந்து சொல்லவேய றிந்து கொள்ளே 519

பாண்டு வகையின் பெயரைக் கேட்பாயாக. ஐந்துவிதப் பாண்டில் வாதப்பாண்டு, பித்தப்பாண்டு, சிலேத்துமபாண்டு, திரிதோடப் பாண்டு, விடப்பாண்டு ஆகியவை அடங்கும். இனி பாண்டுநோய் உற்பத்தியாவதைக் கேட்பாயாக.

உற்பத்தி

அறிந்துமே உற்பத்தி சொல்லக் கேளாய்
அதிசார மலமிளகி யெந்நே ரந்தான்
பறிந்துமே பிளியுப்பு பெருத்த லாலும்
பெத்தமா மக்கினியி லிருத்த லாலும்
பிறிந்துதாம் பூலமிக அருந்த லாலும்
மீறியே மதுக்களைத்தான் புசித்த லாலும்
பறிந்து பகல்நித்திரையே செய்த லாலும்
பாண்டுவந்து பாரிலுள்ளோர் படும்பா டாமே. 520

பாண்டுநோயின் உற்பத்தியைக் கேட்பாயாக. அதிசாரம் ரச மலம் எந்நேரமும் இளகி செல்வதாலும், புளிப்பு உப்புச்சுவையுள்ள பொருட்களை அதிகம் உண்ணுவதாலும், தாம்பூலம் அதிகம் போடுவதாலும், மதுவகைகளை அதிகம் உபயோகிப்ப தாலும், பகல்நித்திரை புரிவதாலும், பாண்டு நோய் மக்களுக்கு வந்து சேரும்.

பாடான பஞ்சுதனைத் திருடி னோர்க்கும்
பாங்கான சிவதுயிலைப் பருகி னோர்க்கும்
மாடான பசுவதைப் பட்டினிய தாக
வைக்கின்றோர் மறைவழியை நடந்தி டாதார்
காடான வாரணியந் தனிற்ப றித்து
கடுவதைகள் செய்கின்றோர் கண்கா ணாத
கோடான பழிசொல்லிக் குடிகெ டுக்கும்
கொடும்பாவி பாண்டுவினாற் குதிகொள் வாரே 521

பஞ்சை திருடியவர்களுக்கும், சிவசொத்தை கைகெண்டவர் களுக்கும், பசுவை பட்டினியிட்டோர்களுக் கும், நல்ல நூல்களின். வழி நடந்திடாதார்க்கும், மற்றவர்களை சித்திர வதை செய்தவர்க்கும், பழிசொல்லி குடிகெடுத்தவர்க்கும் பாண்டு நோய்வந்து சேரும்.

வாதபாண்டு

கொள்ளவே வாதபாண்டு ரோகங் கேளாய்
குடல்பிரட்டி யடிவயிறு தான்வ லிக்கும்
தள்ளவே தாகமொடு பசியு மில்லை
தழலான சரசரப் பாகத் தானும்
நள்ளவே நரம்பெல்லாம் கறுப்பு மாகும்
நடுக்கலொடு கண்சிவப்பு மலபந் தந்தான்
விள்ளவே தலைவலிக்கு மேனி வீங்கும்
வெளுப்பாகும் வாதத்தின் பாண்டு வாமே 522

வாதபாண்டு ரோகத்தின் குணத்தைக் கேட்பாயாக. குடலைப் பிரட்டி அடிவயிறு வலிக்கும். தாகமும் பசியும் இருக்காது, நரம்பு எல்லாம் கறுப்பாக இருக்கும். நடுக்கத்துடன் சண்சிவப்புமாகும். மலபந்தமிருக்கும். தலையைவலிக்கும், மேனிவீங்கும், வெளுப்பாகிவிடும்.

பித்தபாண்டு

வாமென்ற மேனியெல்லா மஞ்ச ளித்து
மகாவெளுப்பு உண்டாகி மந்தக் கண்ணாம்
தாமென்ற தாகமொடு மூர்ச்சை யாகுந்
தனிவாயில் மிளகுபோற் றானு ரைக்கும்
நோமன்ற நெஞ்சு முடி தானு முண்டாய்
நெருக்கியே மூச்சுமுட்ட துவே யாகும்
கேமென்ற கிறுகிறுத்து வாய் கைப்பாகும்
கிளர்பித்த பாண்டுவெனக் கீற லாமே 523

உடல் எல்லாம் மஞ்சளித்துப் போகும். வெளுப்புண்டாகும். கண் மங்கும். தாகத்துடன் மூர்ச்சை யாகும். வாயில் மிளகைப்போல் உரைக்கும். நெஞ்சில் முடிச்சுவிழுந்தாற்போல் சுவாசம் முட்டும். தலை கிறுகிறுத்து வாய் கசிந்துபோகும். இவை பித்த பாண்டின் குணங்களாகும்.

சிலேத்தும பாண்டு

கீறியதோர் நரம்புதோல் மிக வெளுப்பு
கிளர்நாவு உப்புரைக்கு மயிர்க் கூச்சாகும்
வாறியதோர் வாந்தியாங் குரலுங் கம்மும்
மகத்தான தும்மலுடன் கோழை யாகும்
ஈறியதோ ரிருமலொடு மயக்க முண்டாம்
இடுப்பசதி யிந்திரிய நஷ்ட மாகும்
சீறியதோர் சோபமொடு தாப மாகும்
சிலேட்டுமத்தின் பாண்டெனச் செப்ப லாமே 524

நரம்பு தோல் ஆகியன மிகவும் வெளுப்படையும். நாவில் உப்புச்சுவை கூடும். மயிர்க்கூச்சலுண்டாகும். வாந்தியுண்டாகும். குரல் கம்மும். தும்மலுடன் கோழையாகும். இருமலொடு மயக்கமுண்டாகும். இடுப்பில் அசதியுண்டாகும். இந்திரிய நட்டமுண்டாகும். சோபத்துடன் தாபமும் உண்டாகும். இவை சிலத்தும பாண்டுவின் குணமாகும்.

திரிதோட பாண்டு

செப்பவே அருசியொடு சோப தாகம்
செயலான சுவாசமொடு இளைப்பு மாகும்
வெப்பவே மேநிசிறு நீர்தான் வீழும்
மிடுக்கான பெலஈன மார்பில டித்தல்
துப்பவே சூட்டோடு தியக்க மாகும்
தும்மலா யுடம்பெங்கு மூதிக் காணும்
திப்பவே தேகமெங்கு மசதி யாகும்
திரிதோஷப் பாண்டெனச் செப்பு நூலே 525

சுவையின்மையொடு சோபதாகம் உண்டாகும். சுவாசத்துடன் இறைப்பு உண்டாகும். சிறுநீர் அதிகம் இறங்கும். மார்பு பெலகீனமாகி யிருக்கும். உடல் சூடுண்டாகி தியக்கமுண்டாகும். தும்மலுண்டாகும். உடல் எங்கும் ஊதிக் காணப்படும். தேசம் முழுவதும் அசதிதரும். இவை திரிதோஷப் பாண்டின் குணங்களாகும்.

விஷபாண்டு

நூலாக நகத்தோடே யுடல் வெளுக்கும்
நோய்நரம்பு சூடாகுந் தாக மாகும்
ஆலாக அருசியொடு சத்தி விக்கல்
அதட்டியே இருமலுட னதிசு வாசம்
வாலாக வழிற்றிரைச் சலதிசார தோஷம்
மாசுரமு முண்டாதல் மார்க னத்தல்
வேலாக மேனியெங்கு மிகவே ஊதல்
விஷபாண்டு அ:சாத்யமென்றே விளம்ப லாமே 526

நகத்துடன் உடலும் சேர்ந்து வெளுக்கும். நரம்பு சூடாகும். தாகம் அதிகமெடுக்கும். சுவையின்மையொடு வாந்தியும் விக்கலுமுண்டாகும். இருமலுடன் அதிக சுவாசம் உண்டாகும். வயிற்றிரைச்சல் அதிசார நோய் ஆகியன உண்டாகும். அதிக சுரமடிக்கும், மார்பு கனக்கும். மேனிமுழுவதும் ஊதிப்போய்

விடும். இவை விஷப்பாண்டு ரோகத்துக்கு உரிய குணங்களாகும். இது அசாத்திய நோயாகும்.

காமாலைரோக நிதானம்

விளம்பவே பாண்டுமுற்றி இருக்கும் போது
மீறியே பித்தவஸ்து தனைப்பு சித்தால்
புளம்பவே மங்கையுடன் புணர்ச்சி செய்தால்
பூண்டிடு மேகாமாலை யென்னும் ரோகம்
தளம்பவே காமாலைப தின்மூன் றாகும்
சார்வான பேரோடுகு ணாகு ணத்தை
உளம்பவே அசாத்தியங்க ளதனை யெல்லாம்
உரைக்கரிது உரைக்கின்றே னுற்றுக் கேளே 527

பாண்டுமுற்றி இருக்கும்பொழுது பித்தத்தை தூண்டக்கூடிய பொருட்களை உண்பதாலும், பெண்போகத்தில் ஈடுபடுவதாலும் காமாலை ரோகம் உண்டாகும். இனி அவற்றின் பெயர்கள், குணங்கள் அசாத்தியங்கள். ஆகியவற்றை உரைக்கிறேன்.

உரைக்க வேஊதுகா மாலை யொடு
உயர்ந்த வரட்காமாலை வாதக்கா மாலை
புரைக்க வேபித்தகா மாலை யொடு
பேரான சிலேட்டும காமாலை யாகும்
வரைக்க வேவாதசி லேட்டுமகா மாலை
வகையான பயித்யசி லேட்டும காமாலை
துரைக்க வேதொந்த காமாலை யொடு
சூஷ்மமா மஞ்சட் காமாலை யாமே 528

காமாலை பதிமுன்றின் பெயர்களைக் கேட்பாயாக. ஊது காமாலை, வரட்காமாலை, வாதகாமாலை, பித்த காமாலை, சிலேத்து மக்காமாலை, வாத சிலேட்டும காமாலை, பித்தசிலேட்டுமக் காமாலை, தொந்த காமாலை, மஞ்சட் காமாலை ஆகியவற்றோடு

மஞ்சளா மழகுகா மாலை யோடு
மருவுகின்ற செங்கமலக் காமாலை யாகும்
குஞ்சலாங் கும்கா மாலை யோடு
கொடிய குன்மக்காமா லைபதின் மூன்றாகும்
தஞ்சமாங் காமாலைமுற் பின்சன் மத்தில்
தயையில்லாக் கோபத்தால் சண்டை தன்னால்
பஞ்சலாம் பரமசிவன் றன்னைத் தானும்
பணியாத மூடருக்குப் பரவுந் தானே 529

அழகுகாமாலை, செங்கமலக்காமாலை, கும்பகாமாலை, குன்மக் காமாலை ஆகியவையும் சேர்த்து பதின்மூன்றாகும் காமாலையானது முன்சென்மத்தில் தாளாத கோபம் கொண்டவர்களுக்கும், சிவனை தொழாதவர்களுக்கும் உண்டாகும்.

பருகவே உள்ளங்காலு உள்ளங் கைகள்
பகர்முகங் கண்ணுடம்பு மிகவெ ளுப்புகாணும்
கருகவே கால்கைக ளோச்ச லாகும்
கனமாக நடுக்கியே இளைப்புண் டாக்கும்
சுருகவே மலந்தானும் வரண்டு கட்டும்
தூய்முக மஞ்சளிட நிறம தாகும்
வெருகவே வீக்கமாய் களைப்புண் டாகும்
மிகக் காது மந்தமொடு தலைகனப்புண் டாமே 530

உள்ளங்கால் உள்ளங்கை, கண்கள், உடம்பு ஆகியவை மிகவும் வெளுத்து காணப்படும். கைகால்கள் ஓச்சலாகும் நடுக்க முண்டாகும். இளைப்பு மேற்படும். மலம் வறண்டு கட்டும் முகம் மஞ்சளாகும். உடல் வீக்கமடையும், களைப்புண்டாகும். காது மந்தமாகும். தலை கனக்கும் இவை காமாலை ரோகத்தின் குணங்களாகும்.

ஊது காமாலை

கனப்பாக கண்ணுமுகங் கசிவுண் டாகும்
கனவீக்க முடலெங்கும் உளைவுண் டாகும்
அனப்பாக வழற்றலாய்த் தேகமுணர் வில்லை
அதிகமாய்ச் சீதவெப்பு தலைதி ருப்பு
தினப்பாகத் தியக்கமொடு சிறுநீர் மஞ்சள்
தேகமெங்கும் வாடியயேதி மிருண் டாகும்
உனப்பாக உள்ளுத லாயி ருக்கும்
ஊது காமாலையெ னவுரைக் கலாமே 531

கண் முகம் ஆகியன கசிவுதரும். உடல் எங்கும் வீக்க முண்டாகி உளைவுண்டாகும். அழற்சிதரும். உடலில் உணர்வு இருக்காது. அதிகமாக குளிர்ச்சியும் வெப்பமும் மாறி மாறி உண்டாகும். தலையை ஆட்டிக்கொண்டே இருக்கும். சிறுநீர் மஞ்சளாகிச் செல்லும். தேகம் எங்கும் வாடியிருக்கும். திமிருண்டாகும். உள்ளுதலாயிருக்கும். இவை ஊதுகாமாலைக் குரிய குணங்களாகும்.

வரட்காமாலை

உரைக்கவே கால்கைகள் மிகவும் வற்றும்
ஊணவே கால்தவறு மசதி யாகும்
நிரைக்கவே நீலம்போல் மலமி றங்கும்
நீர்தானுஞ் சிவந்துமே நெருப்பாய் காணும்
துரைக்கவே சூலைநோ வெனக் குற்றும்
சோறு ருசியில்லாது மாலைக் கண்ணாம்
வரைக்கவே வடிவெல்லாங் கருகிக் காணும்
மயங்கு வரட்கா மாலை வகுத்த வாரே. 532

கால் கைகள் வற்றிவிடும். நடக்கும்பொழுது கால் தவறும் அசதி தரும். நீலமாகி மலம் கழியும். சிறுநீர் சிவந்து நெருப்பாய் காணப்படும். சூலைநோய்போலகுத்தலெடுக்கும், சோறு சுவையிருக் காது. மாலைக்கண் நோயுண்டாகும். உடல் வடிவம் எல்லாம் கருகிக் காணப்படும். இவை வரட்காமாலை யின் குணங்களாகும்.

வாதகாமாலை

வாறான வயிறுதனைப் பொருமி விக்கும்
மலந்தானுங் கழியாது உடல் வீங்கும்
பூறான புரங்காலு முகம தைக்கும்
புகழ்கரும மொன்றையுந்தான் செய்ய வொட்டா
ஊறான வுடல்கடுக்கும் மிகவி ளைக்கும்
உறுக்காது மிகவீக்குங் கண்ப ருக்கும்
பாறான பசியில்லா துறக்க மாகும்
பண்பான வாதகா மாலை யாமே 533

வயிற்றைப் பொருமி காணப்படும். மலம் கழியாது. உடல் வீங்கிக்காணப்படும். புறங்காலும் முகமும் அதைக்கும். தன்காரியங்களைத் தானே செய்ய முடியாது. உடல் கடுக்கும் அதிகம் இளைத்துவிடும். காதுவீங்கிப்போகும். கண் பருத்து காணப்படும். பசியில்லாது உறக்கம் அதிகமாகும். இவை வாத காமாலையின் குணங்களாகும்.

பித்த காமாலை

மாலையா யுடம்புலர்த்து முறக்க மில்லை
மகத்தான படுக்கைவிட்டு ஏதுஞ் செய்யா
சேலையாய்ச் சோறுமேசெ ரியா மற்றான்
செடமெங்கும் வாயுவாய்த் தியக்க மாகும்

பாலையா மூச்சதுவு மிகவுண் டாகும்
　　பருபருக்கை யாய்கழியும் வயிறு தானும்
ஆலையாய் வயிறிரைச்ச லதிக மாகும்
　　அசதியாம் பித்தகா மாலை தாமே.　534

உடம்பு உலர்த்தும் உறக்கமிருக்காது. படுக்கையைவிட்டு எழுந்து ஏதும் செய்யவியலாது. சோறு செரியாமல் உடல் முழுவதும் வாயுவாகும். தியக்கமுண்டாகும். மூச்சு அதிகம் உண்டாகும். செரிக்காமல் முழு பருக்கையாகவே மலம் கழியும். வயிற்றில் இரைச்சல் அதிகமாகும். இவை பித்த காமாலை நோய்க்குண்டான காரணங்கள் ஆகும்.

சிலேத்தும காமாலை

தாமென்ற சடத்தையே யறிவ ழிக்கும்
　　தாக்கான இருமலே மிகவுண் டாகும்
வேமென்ற தலைமுகமும் வியர்வை யாகும்
　　மிடுக்கான நடைகுறையு மூச்சு மாகும்
பாமென்ற பாக்கருந்தில் மிகச் செருக்கும்
　　பண்பான விழிசிவக்கு முடல் நடுக்கும்
நேமென்ற நெஞ்சுதான் மிகக்க னக்கும்
　　நெடிதுயர்க் குஞ் சிலேட்டும காமாலை யாமே　535

உடலையும் மனதையும் அழிக்கும். இருமல் அதிகமுண்டாகும். தலை, முகம் ஆகியன வியர்வை தரும், நடை குறைந்து அதிக சுவாசமுண்டாகும். பாக்கினை உண்டால் அதிகம் தொண்டை கம்மும், விழி சிவக்கும், உடல் நடுக்கமுண்டாகும், நெஞ்சு மிகவும் கனக்கும் இவை சிலேட்டும காமாலையின் குணங்களாகும்.

வாத சிலேத்தும காமாலை

துயர்க்கு மன்னந்தனைத் தானுஞ்சீர் ணமாகா
　　செரிக்க சுகமாகவொட்டாச் செரும லாகும்
முயிர்க்கு முகமூக்குக் கண்மிகவே வேர்க்கும்
　　முடுகியே வயிறிரைந்து பொருமிக் கொள்ளும்
கயர்க்கு நாக்குக்கண்ணு மிகவெ ளுக்கும்
　　கனமான நடையினில் மூச்செறிய வைக்கும்
வியர்க்கு மேநிகமெல்லாம் வீக்க மாகும்
　　மிடுக்கான இருமலுண்டாம் வாதசி லேட்பம்　536

உண்ட உணவு சீரணமாகாது. செரிக்காமல் செருமலெடுக்கும், முகம், மூக்கு கண் ஆகியவை வியர்க்கும். வயிறு இரைந்து

பொருமிக் காணப்படும். நாக்கு கண்கள் ஆகியவை மிகவும் வெளுக்கும். நடந்தால் மூச்சு வாங்கும் நகம் எல்லாம் வீக்கமுண்டாகும். இருமல் உண்டாகும் இவை வாத சிலேத்தும காமாலைக்குரிய குணங்களாகும்.

பித்தசிலேத்தும காமாலை

உண்டாகி வாந்திபண்ணுஞ் செரும லாகும்
ஓயாமற் றலைவலிக்கு மனம றுக்கும்
வண்டாகி வயிர்கழியுந் தாகமுண் டாமே
மனமெல்லாம் புண்ணாகி மயக்க மாகும்
துண்டாகிச் சாதமுப்பிச் சீரணி யாது
துய்யமு கங்காலோடு கைவெ ளுக்கும்
வெண்டாகி மேனியுமே ஊதிக் காணும்
மிகப் பித்தசிலேட்ப காமாலை யாமே 537

வாந்தி உண்டாகும் செருமல் எடுக்கும். ஓயாமல் தலை வலிக்கும், மனம் மருகும், வயிர்கழியும், தாகம் உண்டாகும். மனம் எல்லாம் புண்ணாகும். மயக்கமுண்டாகும் உண்டஉணவு சீரணிக்காது. முகம் கால் கை ஆகியவை வெளுக்கும். மேனி ஊதிக் காணப்படும். பித்த சிலேத்தும காமாலைக்குரிய குணங்களாகும்.

தொந்த காமாலை

ஆமென்ற வங்கமழன் றேயெ ரிக்கும்
அசதி வருமடிக் கடிக்கு இரும லுண்டாம்
தாமென்ற தண்ணீர்தான் மிகத் தவிக்கும்
சடமெங்குங் கடுப்பெடுக்கும் புளித்தேக் காகும்
போமென்ற நாவதுதான் மிகப்பு ளிக்கும்
புரையான பசியெடுக்குங் குளிருண் டாகும்
வேமென்ற அடிவயிறு வீங்கும் வேர்க்கும்
மிக்க தொந்த காமாலை விபரந்தானே 538

உடல் அங்கம் முழுவதும் அழன்று எரிக்கும். அசதிவரும் அடிக்கடி இருமலுண்டாகும். தண்ணீர் தாகமெடுக்கும், உடல் முழுதும் கடுப்பெடுக்கும். நாக்கு அதிக புளிப்புச் சுவையுடன் காணப்படும். பசியெடுக்கும். அதிக குளிரும் உண்டாகும். அடிவயிறு வீங்கும். வியர்க்கும். இவை தொந்த காமாலைக்குரிய குணங்களாகும்.

மஞ்சட் காமாலை

விபரமாய் மூந்திரந்தான் மஞ்ச ளாகும்
வீங்குமே சரீரமெங்கும் மெலிவுண் டாகும்
முபரமாய் முகங்கால்கண் கையுண் ணாக்கு
மொழி மஞ்சனிறமாகும் முகமி னுக்கும்
அபரமா யன்னத்தை யிறங் கொட்டாது
அழுகையாம் மனஞ்சலிக்கு மூச்சுண் டாகும்
தபரமாய்த் தாதுநட்டம் மலமும் பந்தம்
சார்ந்த மஞ்சட்காமா லைதன்பே ராமே 539

சிறுநீர் மஞ்சளாகிச் செல்லும். சரிரம் எல்லாம் வீங்கும். உடல் மெலிவடையும், முகம், கண், கை, உள்நாக்கு, மூட்டுகள் ஆகியவை மஞ்சள் நிறமாகும். முகம் மினுக்கும், உணவு செல்லாது, அழுகையுண்டாகும். மனம் சலிக்கும். அதிக சுவாசமுண்டாகும். தாதுநட்டமடையும், மலக்கட்டுண்டாகும். இவை மஞ்சட்காமாலைக்குரிய குணங்களாகும்.

அழகு காமாலை

பேரான கால்கையு மசதி யாகும்
பேர்புருவங் கண்கள்கழற் கொடிக்காய்போலப்
பாரான பச்சென்று தானி ருக்கும்
பருகுநீர் மஞ்சனிற மாய்வி ருக்கும்
தீரான லிங்கத்து ளெரிப்பு மாகும்
செரிக்கவொட்டா தன்னத்தைச் சிதறி யுப்பும்
ஆரான வழல்போல வெதும்பு மேனி
அழகு காமாலையி டவாண்மை தானே 540

கால்கை அசதியாகும். புருவம், கண்கள் ஆகியன கழற்சிக்காய் போலாகிவிடும். பருகும் நீரானது மஞ்சள் நிறமாகி இறங்கும். ஆண்குறியில் எரிவுண்டாகும். உண்ட உணவு செரிக்காது. மலத்துடன் வெளியேறும். தீபோல உடல் சுடும்.

செங்கமலக் காமாலை

ஆண்மையில்லாத தமரகத்தின் குணமு மாகும்
அங்கமெல்லாந் தழற்சியுமாய்ச் சோம்பு மாகும்
தீண்மை சிறுநீர்சிவந் துமஞ்ச ளித்துச்
சிறுகியே சிறுநீர்தான் அருக்கி வீழும்
நாண்மையாய் நகங்களுடல் மிகவெ ளுத்து
நற்காயம் வற்றியே சுரமுண் டாகும்
ஊண்மையா யுண்ணாக்கு உமிநீர் நாக்கும்
உறுமஞ்சள் செங்கமலக் காமாலை யாமே. 541

தமரகநோயின் குணங்களைக் காட்டும். அங்கம் முழுதும் அழற்சியுடன் சோம்பலையுண்டாக்கும். சிறுநீர் சிவந்து மஞ்சளித்து காணப்படும். சிறுநீர் சிறிது சிறிதாக விழும். நகங்கள், உடல் ஆகியவை மிகவும் வெளுத்துக் காணப்படும். உடல் வற்றி சுரமுண்டாகும். உள்நாக்கும் மஞ்சளாகி காணப்படும். இவை செங்கமலக் காமாலையின் குணங்களாகும்.

கும்பகாமாலை

காமாலை யடிக்கடிக் களையே போடும்
கனமாக வுடம்புசி றுநீரே மஞ்சள்
வேமாலை நேரத்தில் வியர்வை யாகும்
மேனோக்கும் வாதந்தான் கண்சி வக்கும்
பூமாலை போலவேது வண்டு போகும்
புகழான மயிலுறக்கம் போலே யாகும்
கோமாலை மலந்தானுங் குதுக்கென் றாகும்
கொடிய கும்பகாமா லைக்குண மிதாமே. 542

அடிக்கடி களைப்புண்டாகும். உடம்பு கனக்கும். சிறுநீர் மஞ்சளாகும். மாலை நேரத்தில் வியர்வை உண்டாகும். வாதம் அதிகப்பட்டு காணப்படும். கண் சிவந்து காணப்படும். பூமாலை போல உடல் துவண்டுவிடும். மயில் உறக்கம் போல உறக்கமிருக்கும். மலம் குதுக்குதுக்கென்று கழியும். இவை கும்பகாமாலையின் குணங்களாகும்.

குன்ம காமாலை

குணமான வாய்வெளுப்பு கண்தான் பச்சை
கொடுமூத்ர மஞ்சளித்துக் குழம்பு மாகும்
அணமான வன்னந்தான் செரிக்கும் போது
அடிவயிற்றில் வலியுண்டாம் வாந்தி யாகும்
மணமான தொன்றுமே யறிந்தி டாது
மயிலுறக்க மிரைப்பிருமல் மூச்சு மாகும்
பிணமான தபோலக் கிடைகி டக்கும்
பிரளுமே குன்மகா மாலை தானே 543

வாய்வெளுத்து கண் பச்சையாகும். மூத்திரம் மஞ்சளித்துக் குழம்பு போல காணப்படும். உண்ட உணவு செரிக்கும்போது அடிவயிற்றில் வலியுண்டாகும். வாந்தியெடுக்கும். மனதில் ஒன்றுமே தோன்றாது. மயிலைப் போல் உறங்குவர். இரைப்பிருமலும், சுவாசமும் அதிகம் உண்டாகும். பிணம்போல உடல் கிடக்கும். இவை குன்ம காமாலையின் குணங்களாகும்.

சாத்தியம்

தானான காமாலைப்ப தின்மூன் றாகும்
சாத்தியந் தனேழாகும் பேரே தென்னில்
பானான பயித்திய காமாலை யோடு
பரவுமஞ்சட் காமாலை சிலேட்ப மாகும்
ஊனான ஊதுகா மாலை யோடு
உணர்த்தும் வரட்காமாலை வாதசி லேட்பம்
கோனான பயித்தியசி லேட்டுமக் காமாலை
குணமாக மேழுந்தான் கூர்ந்து கேளே 544

காமாலை நோய் பதின்மூன்றில் ஏழு சாத்தியமாகும். அவை யாவெனில், பைத்திய காமாலை, மஞ்சட்காமாலை, சிலேட்ப காமாலை, ஊது காமாலை, வரட் காமாலை, வாதசிலேட்ப காமாலை, பைத்திய சிலேட்டும காமாலை ஆகியவையாகும்.

அசாத்தியம்

கேளென்ற கும்பகா மாலை யோடு
கொடிகொள் குன்மக்காமாலை தொந்த காமாலை
வாளென்ற வாதகா மாலை யோடு
மருவுகின்ற செங்கமலக் காமாலை யாகும்
ஆளென்ற வழகுகா மாலை யோடு
ஆறுந்தான சாத்தியமா மறிந்து கொள்ளு
கோளென்று சொல்லிமகா கொடுமை செய்த
குணங்கெட்ட மானிடரைக் கூடுந் தானே. 545

கும்ப காமாலை, குன்மகாமாலை, தொந்தகாமாலை, வாத காமாலை, செங்கமலக் காமாலை, அழகு காமாலை ஆகிய ஆறும் அசாத்தியம். இவை குணமகெட்ட மனிதர்களை வந்து சேரும்.

காமாலை ரோகநிதானம் முற்றிற்று.

சோபைரோக நிதானம்

தானான சோபையது நாலுவி தமாகும்
சாற்றிடவே வாதத்தின் சோபை யோடு
தேனான பித்தத்தின் சோபை யாகும்
சிலேட்டுமத்தின் சோபையோடுதி ரிதோஷ சோபை
நானான நாலுவிதச் சோபை தன்னில்
நாட்ட மெல்லாஞ் சொல்லிடநீ நயந்து கேளாய்
பானான உமைதனக்குச் சிவன்றான் சொன்ன
பாங்கதனைப் பகருவன்யான் பரிந்து கேளே 546

சோபை நாலுவகைப்படும். அவை வாத சோபை, பித்த சோபை, கப சோபை, திரிதோஷ சோபை ஆகியவையாகும். இவை நான்கின் குணங்களை பார்வதிக்கு சிவன் கூறியதை அப்படியே இங்கு கூறுகிறேன் கேட்பாயாக.

பாங்கான சன்னிபா தச்சு ரங்கள்
பகர்சித் தப்பிரமைசன்னி பருகி னாலும்
தேங்கான பன்னாகந்தான் றீண்ட லாலும்
சிலவிஷங்கள் தேகத்தி லூற லாலும்
ஆங்கான சிறையிருத்தல் அடிபடு தலாலும்
அநேகவழி நடக்கைமலை யிருக்கை யாலும்
தாங்கான சலக்கரைகள் தனிலி ருத்தல்
சாம்பல்மண் மாதவிடுதன் னாற்சோபை யாமே. 547

சன்னிபாத சுரம், சித்த பிரமை, சன்னிநோய்கள், ஆகியவற்றாலும், நாகம் தீண்டினாலும், விஷங்கள் உடம்பில் இருந்தாலும், அதிக நாள் சிறை வாசத்தாலும், அடிபடுதலாலும், அதிகதூரம் நடப்பதாலும், நீர்க்கரைகளில் வசிப்பதாலும் சாம்பல், மண் ஆகியவற்றை உண்பதாலும், சோபை நோய் உண்டாகும்.

வாத சோபை

சோபைதான் வருமுன்னே வுடல்தான் வற்றும்
சுகநரம்பு தான்வெளுக்கு ம்சீர்ண மாகும்
தூபைதான் பெலக்ஷயமாய் நடுக்க லாகுஞ்
சுரமோடு மிகவெளுப்பு மிளைப்பு மாகும்
மாபைதான் மயிர்முனைகள் சிவந்து போகும்
மகத்தான நித்திரையு மந்த மாகும்
சோபைதான் அங்குலிலே சடமெங் குந்தான்
கொடுவலி யாம்வாதத்தின் சோபை யாமே 548

உடல் வற்றும், சுக நரம்பு வெளுத்துவிடும், அசீரணம் உண்டாகும். பலம் குறைந்து நடுக்கமுண்டாகும். சுர முண்டாகும், மிகவும் வெளுக்கும், இளைப்புண்டாகும். மயிர்முனைகள் சிவந்து போகும். நித்திரையும் மந்தமும் உண்டாகும். உடல் முழுதும் அதிக வலியுண்டாகும். இவை வாதசோபையின் குணங்களாகும்.

பித்த சோபை

வலியாக மயிர்மஞ்ச ளித்தி ருக்கும்
மகத்தான சயித்தியமே மிகவி ரும்பும்
தலியாகத் தாபமொடு இளைப்பு காணும்
சரீரந்தான் மிகச்சிவப்பாந் தலைவ லிக்கும்

புலியாக விருந்ததுபோய் பலவீனத்தால்
புகலரிய மயக்கமொடு வியர்வை யாகும்
நலியாகக் கண்புருவ மூக்குத் தண்டு
நலங்குமே பித்தத்தின் சோபை தானே 549

மயிர் மஞ்சள் நிறமாகிவிடும். சும்மாயிருக்க விரும்பும் தாபமொடு இளைப்புண்டாகும். உடல் சிவந்துவிடும். தலையை வலிக்கும். புலிபோல இருந்தவர்கள் பலவீன மடைந்து போவார்கள். மயக்கத்துடன் வியர்வையாகும். கண்புருவம் மூக்குத் தண்டு ஆகியவை வலிக்கும். இவை பித்த சோபைக்கான குணங்களாகும்.

சிலேட்ப சோபை

நலங்குமே வடிவெல்லாந் தினவுண் டாகும்
நல்லமயிர்க் கால்வெளுப்பு உடல்வெ ளுப்பு
திலங்குமே தேகமெங்குஞ் சரச ரப்பு
திடுக்கியே மிகக்குளிரும் நித்திரை யில்லை
விலங்குமே விழியனலாங் குரல்நெ ரிவாகும்
விசூழியாய் பேதிதலை கிறுகி றுப்பு
சிலங்குமே ரத்தங்கள் சுரந்து வீங்கும்
சிலேட்டுமத் தின்சோபையென் றேசெப்ப லாமே 549

உடல் முழுவதும் அரிப்பெடுக்கும். மயிர்கால்கள் வெளுப்புண்டாகும். உடலும் வெளுக்கும். தேகமெங்கும் சரசரப்பு உண்டாகும். மிகவும் குளிரெடுக்கும், நித்திரையிருக்காது. கண்கள் அலையாகி சுடும். குரல் குறையும். பேதியுண்டாகும். தலை கிறுகிறுக்கும். இவையாவும் சிலேத்தும சோபையின் குணங்களாகும்.

திரிதோஷசோபை

செப்பவே மெல்லியர்பால் மிகுந்த சோபம்
செடம்வீக்க முபாதியுமாச் சுரமுண் டாகும்
அப்பவே அதிசாரம் வயிற்றுக் கடுப்பு
ஆசனத்தில் மிகக்கடுப்பு அசனஞ் செல்லா
நப்பவே கால்கையுந் துவண்டு காணும்
நடக்கவே பெருமூச்சாய் கிறுகி றுக்கும்
திப்பவே உமிழ்நீர்தான் மிகவே ஊறும்
திரிதோஷ சோபைசாத் தியமாச் சொல்லே 551

பெண்கள் மேல் அதிக சோபமுண்டாகும். உடல் வீக்க முண்டாகும் ஒரு பகுதிமட்டும் சுரமடிக்கும். அதிசாரமுண்டாகும்.

வயிற்றுகடுப்புண்டாகும். ஆசனவாயில் கடுப்புண்டாகும். உணவு செல்லாது. கால்கையும் துவண்டு காணப்படும். நடந்தால் பெருமூச்சுண்டாகி தலை கிறுகிறுக்கும். இவை திரிதோஷ சோபையாகும்.

சொல்லவே பாண்டுகா மாலை சோபை
தொகுப்பாக மூன்றினிடச் சொரூபஞ் சொன்னேன்
மல்லவே வட்மொழியின் வகுப்பைப் பார்த்து
மகத்தான நாதாக்கள் வசனங் கேட்டு
வல்லவே மானிடர்கள் பிழைக்க வென்று
மனோன்மணிக்கு சிவன்சொன்ன வசனந் தன்னை
எல்லவே யூகியென்ற முனியாம் யானே
எழுதினே னாயுருவே தத்தைத் தானே 552

பாண்டு, காமாலை, சோபை ஆகியவற்றின் குணங்களைக் கூறினேன். வடமொழியின் திறத்தைப் பார்த்து, சித்தர்கள் கூறிய சொற்களைகேட்டு மனிதர்கள் பிழைக்கும்படி பார்வதிக்கு சிவன் கூறியதை யூகிமுனியாகிய நான் இங்கு எழுதியுள்ளேன்.

தானான ஆயுர்வே தத்தை யெல்லாம்
சாங்கமாய்ச் சோதித்துச் சாரந் தன்னை
தேனான தமிழினால் விரித்துச் சொன்னேன்
சிறுபிள்ளை பார்த்தாலுந் தெரிய வென்று
ஏனான ஏழுலட்சங் கிரந்தப் போக்கே
எடுத்துமே சோதித்து எழுதி னேன்யான்
ஊனான யூகியென்ற முனியாம் யானும்
உலகத்தோர்க் காகவென்று உரைசெய் தேனே. 553

ஆயுர்வேதத்தை நன்றாக சோதித்து அதன் சாரத்தை தமிழில் கூறியுள்ளேன். அதனை சிறுபிள்ளைகள் படித்தால்கூட தெரிந்துகொள்ளும். ஏழுலட்சம் பாடல்கள் உள்ள கிரந்தங்களைச் சோதித்து எழுதினேன். இவ்வுலகத்திலுள்ளவர்க்காக யூகிமுனி யாகிய நான் கூறினேன்.

சோபைரோக நிதானம் முற்றிற்று.

மகோதர ரோக நிதானம்

செய்ததோர் மகோதரந் தான் முப்பத்தி ரண்டு
சிறப்பான பெயரையெல்லாஞ் சொல்லக் கேளாய்
வைததோர் வாதமகோ தரத்தி னோடு
வகையான பித்தமகோ தரன்சி லேட்பம்
கொய்ததோர் வாதசிலேட்டு மத்தி னோடு
கொடும்பித்த சிலட்பமகோ தரமு மாகும்
தொய்ததோர் தொந்தமகோ தரத்தி னோடு
துரிதமாங் கமலகோ தரமுங் காணே 554

மகோதரங்கள் முப்பத்திரண்டு வகைப்படும். அவற்றின் வகைகளைக் கேட்பாயாக. வாத மகோதரம், பித்தமகோதரம், சிலேட்ப மகோதரம், வாத சிலேத்தும மகோதரம், பித்த சிலேத்தும் மகோதரம், தொந்த மகோதரம், கல் மகோதரம் ஆகியவற்றோடு.

காணவே வில்வமகோ தரத்தி னோடு
கட்டியதோர் வழுவைம கோதரமுந் தானும்
நாணவே நழுவைம கோதரநீ ராம்பல்
நலத்த ஊறாம்பலொடு வெப்புப் பாவை
கோணவே குலமுட்டி மகோத ரந்தான்
கொடிய கீழ்க்கவிசைமேற் கவிசையாகும்
பாணவே பக்கமாங் கவிசை யோடு
பழுக்கவிசை பெருவயிறும கோதரந் தானே 555

வில்மகோதரம், வழுவை மகோதரம், நழுவை மகோதரம், நீ ராம்பல் மகோதரம், ஊறாம்பல் மகோதரம், கீழ்க்கவிசை, வெப்புபாவை மகேதரம், குலமுட்டி மகோதரம் மேற்கவிசை மகோதரம், பக்கவிசை மகோதரம், பழுக்கவிசை மகோதரம், பெருவயிறு மகோதரம் ஆகியவையும்.

வயறான சூலமகோ தரமும் வல்லை
மகோதரமும் விஷமகோ தரத்தி னோடு
கொயறான தொந்தமொடு வழுவை வில்வம்
கொடிதான உதரமகோ தரமு மாகும்
புயறான கூர்மமுடன் வெப்பு பாவை
புரமசுர மகோதரமும் குலைமுட் டாகும்
வெயறான பாண்டுவோடுதர மகோத ரந்தான்
வீசுகின்ற மகோதரமுஞ் சலமு மாமே 556

சூல் மகோதரம், வல்லை மகோதரம், விஷ மகோதரம், தொந்த மகோதரம், வழுவை மகோதரம், உதர மகோதரம், கூர்மமகோதரம், சுரமகோதரம், பாண்டு மகோதரம், சலமகோதரம் ஆகியவையும்

சலமகோ தரமாங்கிசம கோதர மாகும்
தா' க்கான மகோதரந் தான் முப்பத்தி ரண்டு
உலமான உற்பத்தி யுரைக்கக் கேளாய்
உமியினால் கல்லினால் ரோம முள்ளால்
சுலமான சுனையினால் தோஷ நீரால்
தும்பிநீர் தேரைநீர் அலர்ந்த சோற்றால்
மலமான மங்கையர்கள் மருந்தி னீட்டால்
மகோதரமாய் நோய்வந்து மருவுங் காலே 557

சலமகோதரத்தோடு மாமிச மகோதரமும் சேர்த்து முப்பத்தி இரண்டாகும். அதன் உற்பத்தியை கூறக்கேட்பாயாக உமி, கல், சுனை, தோஷ நீர், தும்பி நீர், தேரை நீர், காய்ந்த சோறு, பெண்களின் மருந்திடு ஆகியவற்றினால் இந்நோய் வந்து சேரும்.

காலான மேகந்தான்வ யிற்றிற் கட்டிக்
கடிசான சீழ்சீதம்வ யிற்றிற் றங்கில்
தாலான சதையுதிரம் வயிறு தன்னில்
தயங்கினாற் பாஷாணந் தரிக்கிற் சூதம்
சேலான செம்பினிட வூறல் தங்கில்
சீரணத்தில் மேலன்னஞ் செலுத்த லாலும்
மாலான மங்கையர்கள் மருந்தி னாலும்
மகோதரங் கள்வந்து வுற்பத்தி யாமே. 558

வயிற்றில் மேகம் தங்கினாலும், சீழ், சீதம் ஆகியவை தங்கினாலும், சதை இரத்தம் ஆகியன வயிற்றில் தங்கினாலும், பாஷாணம், இரசம், செம்பு ஆகியவற்றின் கசடுகளினாலும், சீரணமாகாத பொழுது மேலும் உணவு உண்பதாலும் மங்கையர்களின் மருந்தினாலும் மகோதரங்கள் உற்பத்தியாகும்.

உற்பத்தி ஒருவருட னுண்மை பேசி
உயர்சபையிற் பலவிதமா யுரைக்கின் றோர்க்கும்
அற்பத்தி லனியாயஞ் செய்கின் றோர்க்கும்
ஆலயத்தி லனியாயம் பண்ணி னோர்க்கும்
பற்பத்தி லொருவரிடப் பிரயோச னத்தைப்
பறிக்கின்றோர் கெடுக்கின்றோர் பந்தி தன்னில்
துற்பலத்தி லோரவஞ் சனையே செய்த
துரோகிக்கு மகோதரங்கள் தொடர்ச் சியாமே 559

ஒருவனிடத்தின் உண்மைபேசி, மற்றவர்களிடம் பொய் பேசுபவர்களுக்கும், அநியாயம் செய்கின்றவர்களுக்கும் ஆலயத்தில் நாசம் செய்பவர்களுக்கும், ஒருவரின் லாபத்தை பறிக்கின்றவர்களுக்கும், உண்ணுபவர்களை தூத்துபவர்களுக்கும், ஒரவஞ்சனை செய்தவர்களுக்கும் மகோதரம் வந்து சேரும்.

வாத மகோதரம்

தொடர்ச்சியாங் காயமது வெளுப்பு மாகும்
சூட்சமாய் சடலம்வற்றித் துர்ப்ப லந்தான்
அடர்ச்சியா யன்னமது வேண்டா தாகும்
அடிவயிற்றி லிரைச்சலுமா யுப்புச மாகும்
புடர்ச்சியாய் பிணமுக மாய்ச்சாய லாகும்
புளிப்பான வசீரணத்திற் பசியு முண்டாம்
தடர்ச்சியா யடிவயிறு தன்னில் வீங்கும்
சஞ்சலிக்கும் வாதமகோ தரந்தா னென்னே 560

உடல் வெளுக்கும். சூட் சுமமாய் உடல் வற்றி பலம் குறையும். உணவில் விருப்ப மிருக்காது அடிவயிற்றில் இரைச் சலுண்டாகி உப்பிசமாகும். பிணமுகமாகச் சாயல் இருக்கும். புளித்தேப்பத்துடன் அசீரணமிருந்தாலும் பசியிருக்கும். அடிவயிறு வீங்கும். மனம் சஞ்சலிக்கும் இவை வாதமகோதரத்தின் குணங்களாகும்.

பித்த மகோதரம்

என்றகண்ணிற் காசவன்னமு மாய்த் தோன்றி
ஏற்றசுர மோகமாய்த் தாக மாகும்
அன்றவதி சாரமுமாய் வயிறு போகும்
அழற்றி யொடுவியர்வை மேல்மஞ் சளிப்பு
துன்றதோல் சரசரப்புத் துரட்டி போலச்
சுயநரம்பி பலவிதமாய் வண்ண மாகும்
பன்றசனஞ் செரியாமல் மலமும் போகும்
பயித்திய மகோதரத்தினிடப் பண்பு தானே 561

கண்கள் காசநோயாளியின் கண்களைப்போலிருக்கும். சுரமுண்டாகும் அதிக தாகமெடுக்கும். அதிசாரமாக வயிறு கழியும். வியர்வை உண்டாகும். மேனியில் மஞ்சளிப்புண்டாகும். சரசரத்து துரட்டிபோல நரம்பில் பலவித வண்ணங்களுடன் காணப்படும். செரிக்காமல் மலம் கழியும். இவை பித்த மகோதரத்தின் குணங்களாகும்.

சிலேத்தும மகோதரம்

பண்பான வுடல்நடுக்கிய ரூசி யாகும்
படுக்கைதனி லுறக்கமில்லா துப்பு றைக்கும்
குண்பான குளிர்காச்சல் சுவாச காசங்
கோபமொடு வயிறு உப்பிச மாகும்

வெண்பான பஞ்சுபோல் மிகவெளுக்கு
மிடுக்கான நிர்மலமுங் கடுகடுக்கும்
திண்பான இருமலொடு கோழைமிஞ்சும்
சிலேட்பமா மகோதரத்தின் செயலிதாமே 562

உடல் நடுக்கமுண்டாகி சுவையின்மை உண்டாகும். படுக்கையில் உறக்கமிருக்காது, உப்பு உறைக்கும். குளிர்காய்ச்ச லெடுக்கும், சுவாச காசம் உண்டாகும். சோபமாகி வயிறு உப்பிசம் தரும். பஞ்சு போல உடல் மிகவும் வெளுத்திருக்கும். சிறுநீர் மலம் ஆகியவை கழியும் பொழுது கடுப்புண்டாகும். இருமலுடன் கோழை உண்டாகும். இவை சிலேத்தும் மகோதரத்தின் குணங்கள் ஆகும்.

வாதசிலேத்தும மகோதரம்

செயலான சடம்வெளுத்தாற் போலகடுத்தல்
திணிவயிற்று மடிப்புதான் மறைய வீங்கல்
நயலான நரம்புவயிற்றி னிற்பு டைத்தல்
நலமான துர்க்கந்த வாயு மீறல்
அயலான வண்டங்கள்தி டுக்கிட் டாற்போல்
அடிவயிற்றில் முழக்கமா மலம் விடாது
பியலான பீசந்தான் மிகுதி வீங்கும்
பிரிவாத சிலேட்டுமமா மகோதரந் தானே 563

சடம் வெளுத்ததுபோலிருக்கும், கடுக்கும். வயிற்றின் மடிப்பு மறைந்து வீங்கிப் போகும். வயிற்றில் நரம்பு புடைக்கும் துர்நாற்றத்துடன் வாயு பிரியும். உலகமே திடுக்கிட்டதுபோல் அடி வயிற்றில் முழக்க முண்டாகும். மலம் இறுகும். பீசம் வீங்கிவிடும். இவை வாத சிலேத்தும மகோதரத்தின் குணங்களாகும்.

பித்தசிலேத்தும மகோதரம்

பிரிவாக நாபிமார ளவு மட்டும்
பிதுங்கலாய் வயிறுமெத்தப் புடைக்கி டைக்கும்
வரிவாக வாய்வதுதான் மிகத்தம் பிக்கும்
மலங்கட்டும் நீர்குறையும் மார்பில் நோவாம்
எரிவாக எலும்பில்மூ ளையிலே தாக்கி
ஏற்றமாம் நயனவொளி மிகக்கி டைக்கும்
அரிவாக வங்கங்கள் கால்கை வீங்கும்
அதிர்பித்த சிலேட்டுமத்தின் மகோத ரமாமே 564

நாபியானது மார்பு வரை பிதுங்கி காணப்படும் அளவுக்கு வயிறு மிகவும் புடைந்துக் காணப்படும். வாய்வு தடைபடும் மலம்

கட்டும். சிறுநீர் பிரிவது குறையும். மார்பில் வலியுண்டாகும் எலும்பின் மச்சை வரை வலி தாக்கும். கண்கள் அதிகம் பளிச்சென்று இருக்கும். அங்கங்கள், கை, கால்கள் ஆகியன மிகவும் வீங்கும். இவை பித்த சிலேத்துமத்தின் குணங்களாகும்.

தொந்த மகோதரம்

அதிராக மஞ்சணீ ராக்கை யாகும்
அதட்டியாய் வாதத்தின் நாடி யாகும்
பதிராகப் பஞ்சுபோற்கண் ணீரு குக்கும்
பங்கமா யங்கமெல்லாம் பருக்க வீங்கும்
வதிராக வஞ்சகமாக் கால்கை வற்றும்
வற்றியே உடம்பெல்லாம் வயிறு விம்மும்
சுதிராக தலைசுற்றல் தியக்க மாகும்
தொந்தமா மகோதரத்தின் சூட்சம் பாரே 565

உடல் முழுவதும் மஞ்சளாகும். வியர்வையும் மஞ்சளாக வரும். வாத நாடி அதிகமடிக்கும். கண்கள் பஞ்சுபோல் இருக்கும். அதிக நீர்வடியும். உடல் அங்கம் எல்லாம் மிகவும் வீங்கிப் போய்விடும். கால்கை வற்றிப் போகும் வயிறு விம்மும். தலை சுற்றி தியக்கமாகும். இவை தொந்த மகோதரத்தின் குணங்களாகும்.

கல்மகோதரம்

சூட்சமா யிருமலொடு இளைப்பு மாகும்
சுருபந்தான் மஞ்சணி றமாக வீங்கும்
மோட்சமாய் மேல்வயிறு கருக்கல் போல
முரண்டியே மிகவீங்கும் அசனஞ் செல்லா
காட்சமாய் முகங்கருகிக் கண்டிப் பாகும்
கசடற்று நரம்பெல்லாம் பசுமை யாகும்
தீட்சமாய் சலமலங்கள் சுருக்கிக் கொள்ளும்
செடம்வெளுக் குங்கல் மகோதரமா மென்னே 566

இருமலுடன் இளைப்பும் உண்டாகும். உடல் மஞ்சளித்து காணப்படும். மேல்வயிறு அதிகம் வீங்கும். உணவு செல்லாது முகம் கருகி கண்டிப்பாகும். நரம்புகள் எல்லாம் பசுமையாகும். சிறுநீரும் மலமும் சுருங்கும். உடல் வெளுக்கும். இவை தல். மகோதரத்தின் குணங்களாகும்.

வில் மகோதரம்

ஆமென்ற வருணனட வில்லு போல
அதட்டியே வளைந்தாற்போல் பிகுவு முண்டாய்
வேமென்ற மேல்வயிறுத னில்வ லித்து
மிடுக்காக உப்பிசமாய் விரையும் வீங்கி
வாமென்ற மலசலமுஞ் சுருக்கிக் கொண்டு
வாதையாய் கிடைக்கொடா மயக்க மாகித்
தாமென்ற தண்ணீர்தான் மிகவும் வேண்டும்
சஞ்சலிக்கும் வில் மகோத ரந்தா னென்னே 567

அருணனின் வில்போல வயிறு அதிகம் வளைந்து காணப் படும். மேல் வயிற்றில் வலிக்கும். உப்பிசம் உண்டாகும். விரை வீக்கம் உண்டாகும். மலசலம் கட்டும். கீழே படுக்கவிடாமல் மயக்கமுண்டாகும். தண்ணீர் தாகம் அதிகமெடுக்கம். இவை வில் மகோதரத்தின் குணங்களாகும்.

வழுவை மகோதரம்

தரமான தண்ணீரிற் சொரியைப் போலத்
தளதளத்து வயிறுதனில் வளர்ந்தே யேறும்
மரமான தனுபோலத் திமிருண் டாகி
மாமிசந்தான் சோறுபோல் வயிற்றிற் றுன்னி
பரமான த்தைநினைந்து பசியில் லாமல்
படுக்கைக்கு இடமின்றிப் பரித விக்கும்
அரமான வன்னத்தைக் கிட்டொட் டாது
ஆகாத வழுவைமகோ தரந்தா னாமே 568

தண்ணீர் அதிகம் சேர்ந்து வயிறு வளர்ந்துகொண்டே இருக்கும். மரம்போல் திமிர்த்துக் காணப்படும். மாமிசமானது சோறுபோல வயிற்றில் சிக்கியிருக்கும். பசியிருக்காது. படுக்க முடியாமல் தவிப்பர். உணவின்மேல் விருப்பமிருக்காது. இவை வழுவை மகோதரத்தின் குணங்களாகும்.

நழுவை மகோதரம்

ஆமேதான டிவயிற்றிற் கட்டி யாகும்
அழுத்தியே பார்த்தாக்கால் நழுவிப் போகும்
வாமேதான் மேல்வயிற்றில் வன்னி போல
மிடுக்கான பெலன்குறைந்து மேல்மூச் சாகும்
சாமேதான் பிணம்போல நடக்கொட் டாது
தரிக்கொண்ணாத் தாபமுமாந் தளர்ச்சி யாகும்
நாமேதானா வறண்டுநெஞ் சுபுண் ணாகும்
நழுவை மகோதரமென்றே நாட்ட லாமே 569

அடிவயிற்றில் கட்டிபோல் உண்டாகும். அழுத்திப் பார்க்க நழுவிப்போகும். மேல்வயிற்றில் தீபோல சூடுண்டாகும். பலம் குறைந்து மேல்மூச்சு வாங்கும். நடக்க விடாமல் பிணம்போல படுத்திருக்கத் தோணும். தாபமும் தளர்ச்சியுமாகும். நாக்கு வறளும். நெஞ்சு புண்ணாகும். இவை நழுவை மகோதரத்தின் குணங்களாகும்.

நீராம்பல் மகோதரம்

நாட்டமாய் நாவறண்டுஇ ருமலுண்டாய்
நளிராகி யடிவயிறு கதித்து விம்மிக்
காட்டமாய் கடைக்கண்தான் மிகவெ ளுத்து
கதும்பலொடு புறங்கால்கள் யத்து வீங்கி
வாட்டமாய் மூச்சோடு மயக்க மாகி
மலந்தானு மிகத்தளர்ந்து வடிவம் வேறாய்
நீட்டமாய் கால்கையுமு டக்கொ ணாது
நீராம்பல் மகோதரத்தின் நேர்மை தானே 570

நாக்கு வறண்டுபோய் இருமலுண்டாகும். அடிவயிறு அதிகம் வீங்கிக் காணப்படும். கடைக்கண்கூட வெளுத்து விடும். புறங் கால்கள் வீங்கும். மேல்மூச்சுடன் மயக்கமுண்டா கும். மலம் மிகவும் தளர்ந்து வடிவம் மாறி செல்லும். கால்கையை மடக்க முடியாது போகும். இவை நீராம்பல் மகோதரத்தின் குணங்களாகும்.

ஊறாம்பல் மகோதரம்

நேர்மையாய் மேல்வயிறு பொருமிக் கொண்டு
நெடிதுத கந்தேடியே மேனி கண்ணும்
வார்மையாய் மனத்துயர மிகுந்தி ருக்கும்
மயக்கமொடு தியக்கமாய் மாழ்கித் துஞ்சும்
கார்மையாய் முகம் வியர்த்து வெளுத்து நொந்து
கனகனத்து உடம்பெல்லாம் கடிது வற்றி
சீர்மையாய் சிரச தனிற் பாரங் காணும்
சினத்த ஊராம்பல்ம கோதரமு மாமே 571

மேல்வயிறு பொருமிக் கொண்டிருக்கும். வீட்டிலேயே இருக்கத் தோன்றும். மேனி கன்னும். மனத்துயரம் மிகுந்து இருக்கும். மயக்கத்துடன் தூங்கிப் போய்விடுவர். முகம் வியர்த்து வெளுத்து நொந்து போகும். கனத்து உடம்பு வற்றும். எப்பொழுதும் தலை பாரமாகத் தோன்றும். இவை ஊறாம்பல் மகோதரத்தின் குணங்களாகும்.

வெப்புப்பாவை மகோதரம்

சினத்த வுப்பங்காற்றுமே மிகவு முண்டாய்த்
தேக்கியே உடலதிர்ந்து மிகவும் பற்றி
கனத்த கைப்புபுளிப்புமிகத் திகட்ட லாகும்
கல்போலச் சரீரமெங்கும் கனத்துக் காணும்
வினத்த வயிர்தனிற்புரண்டு வெதும்பல் செய்யும்
விலாப்பக்கந் தனில்வந்து கட்டிச் சேரும்
நனத்த வுப்புநாவிலே மிகுதி யாகும்
நலியும் வெப்புப் பாவைமகோ தரமாய் நாட்டே 572

வயிறு உப்பும், காற்று அதிகம் தங்கும். உடல் அதிர்ந்து மிகவும் வற்றிக் காணப்படும். கைப்பு புளிப்பு ஆகிய சுவை அதிகமுண்டாகும்.' சரீரம் முழுவதும் கல்போல கனத்துக் காணப்படும். வயிறு புரண்டு வெதும்பலாகும். விலாப்பக்கம் கட்டி உண்டாகும். நாவில் அதிக உப்புச்சுவை உண்டாகும். உடல் நலியும். இவை வெப்புப்பாவை மகோதரத்தின் குணங்களாகும்.

குலமுட்டி மகோதரம்

நாட்டவே குழவிபோல குலையிற் சேர்ந்து
நலமாகக் கீழ்மூடிப் பக்கம் வந்து
ஆட்டவே அன்னத்தை யருந்தொட் டாமல்
அபானத்தை இறுக்கியே மலம் விடாது
தேட்டவே தேகமெங்குங் கருகி வற்றும்
சிரசோடு முகங்கால் கைவீக்க முண்டாம்
கூட்டவே மலமூச்சுக் குரலுங் கம்மும்
குலமுட்டி மகோதரத்தைக் கூறி டாயே. 573

அம்மிக்குழவிபோல நெஞ்சின்கீழ் உற்பத்தியாகும். கீழே தனிந்து உணவை உண்ணவிடாது. அபானம் இறுகி மலம் செல்லாது. தேகமெங்கும் கருகி வற்றிப் போகும். சிரசு முகம் கால் கை ஆகியவை வீங்கும். குரலோசை குறையும். இவை குலமுட்டி மகோதரத்தின் குணங்களாகும்.

கீழ்க்கவிசை மகோதரம்

கூறிடவே அடிவயிற்றில் வில்லைப் போலக்
குறிப்பாக கட்டிகட்டிவ யிற்றை யுப்பும்
ஈறிடவே மேல்வயிற்றில் வில்லு போல
இசிவாகிச் சந்தெங்குங் குடைச்ச லாகும்

பீறிடவே மனசுநொந்து பெருமூச் சாகும்
பிதற்றலாய் மனதில்வந்த படியே பேசும்
மாறிடவே மலசலமுஞ் சுருக்கிக் கொள்ளும்
மருவுகீழ்க் கவிசைமகோ தரமு மாமே 574

அடிவயிற்றில் வில்லைப்போல கவிந்து கட்டி கட்டியாக இருக்கும். வயிறு இரையும். உப்பும். மேல் வயிற்றில் வில்போல விரைத்து மூட்டுகள் அனைத்திலும் குடைச்சலாகும். மனதை நோகும், பெருமூச்சுண்டாகும். பிதற்றலாய் மனதில் வந்தபடி பேசுவார்கள். மலமும் சிறுநீரும் சரிவர செல்லாது. இவை கீழ்க்கவிசை மகோதரத்தின் குணங்களாகும்.

மேற்கவிசை மகோதரம்

விசையான மேல்வயிற்றில் வில்லைப் போல
விளையுமே ஊனெல்லாந் திரட்டிக் கொண்டு
தசையான நரம்புதோல் சுருங்கிக் காணும்
க்ஷணத்திலே படபடப்பு மூச்சு மாகும்
குசையான மாரடைப்பு குற்ற லுண்டாம்
குமட்டியே வாய்நீருங் குதிகொண் டோடும்
அசையான அன்னந்தான் வேண்டா தாகும்
அளுக்குமே மேற்கவிசை மகோதரந் தானே 575

மேல்வயிற்றில் வில்லைப்போல வளைந்து சதையெல்லாம் திரண்டு, நரம்பு, தோல் ஆகியன சுருங்கிக் காணப்படும். படபடப்புண்டாகி மூச்சுண்டாகும். மார்பு அடைக்கும். குத்தல் உண்டாகும். வாய்நீர் குதிகொண்டு ஓடும். உணவின்மேல் விருப்பமிருக்காது. இவை மேற்கவிசை மகோதரத்தின் குணங்களாகும்.

பக்கக்கவிசை மகோதரம்

கவிசைபோல் பக்கத்திற் பற்றிக் கொண்டு
கனமாக வயிறுகல் லழுந்த லாகும்
அவிசையாய் அடிவயிற்றிற்கு முறல் காணும்
அடங்கா தாகத்தோடு எரிவுண் டாகும்
புவிசைபோற் பொருமிவயி றுப்பிக் கொள்ளும்
புளித்தேக் காய்நெஞ்சிலே யெரிச்ச லுண்டாம்
பவிசையாய் மலசலமுஞ் சுருக்க மாகும்
பக்கமகோ தரத்தினிடப் பரிசு தானே 576

வளைந்த சட்டிபோல் வயிற்றின் பக்கத்தில் உண்டாகும்.

கனமாகி வயிறு கல்லைப்போல கட்டியாய் இருக்கும். அடிவயிற்றில் குமுறல் உண்டாகும். அடங்காத தாகத்துடன் எரிச்சலுண்டாகும். வயிறு பொருமி உப்பிக் காணப்படும். நெஞ்சில் புளித்த ஏப்பமும், எரிச்சலும் உண்டாகும். மலமும் சிறுநீரும் அளவில் குறைந்து போகும். இவை பக்க மகோதரத்தின் குணங்களாகும்.

பழுக்கவிசை மகோதரம்

பரிசாகப் பழுவெலும்பில் முளையைப் போலப்
பற்றியே வயிறெல்லாங் கனத்து விம்மும்
உரிசாக உப்பசமு மேல்மூச் சாகும்
உழலையொடு தாபமுமா யுறக்க மாகும்
அரிசாக அன்னந்தானி றங்கொட் டாது
அடிக்கடிக்கு வாயுவுத்தா னதட்டி யாகும்
செரிசாக வீங்கியே வற்றி யூதும்
திணறுமே பழுக்கவிசைம கோதரந் தானே 577

பழுஎலும்பில் முள்ளைப்போல பற்றி வயிறு முழுதும் கனத்து வீங்கிக் காணப்படும். உப்பிசமும் மேல்மூச்சுண்டா கும். உழன்று தாபமேற்படும். உறக்கம் அதிகமுண்டாகும். அடிக்கடி வாய்வு பிரியும். வீங்கியும் வற்றியும் மாறி மாறி வயிறு இருக்கும். இவை பழுக்கவிசை மகோதரத்தின் குணங்களாகும்.

பெருவயிற்று மகோதரம்

திணறுமே காயந்தன் மிகவும் வற்றிச்
சீரணமாய் மந்தமுமா முதரந் தானும்
உணருமே கல்லழுத்த மாக வீங்கி
உறுதியாய் நரம்புமே புடைத்துக் காணும்
மணருமே மலத்தையே மிகப்ப றிக்கும்
வாடாம லூதியே ம யக்கு விக்கும்
கிணருமே தூறெடுக்க உறுமாப் போல
கெட்டிக்கும் பெருவயிறும கோதரந் தானே 578

உடல் மிகவும் வற்றும். அசீரணமும் மந்தமுமாக வயிறு காணப்படும். கல்லைப்போல அழுத்தமாகி வயிறு வீங்கிக் காணப்படும். வயிற்றில் பெருநரம்பு புடைத்துக் காணப்படும். மலம் கட்டும். வாடாமல் ஊதி மயக்கமுண்டாம். கிணற்றில் தூறெடுக்க நீர் ஊறுவதுபோல வயிற்றில் நீர் ஊறிக்கொண்டே இருக்கும். இவை பெருவயிறு மகோதரத்தின் குணங்களாகும்.

சூல் மகோதரம்

மகோதரம் போற்சூலான மங்கை யர்க்கு
மாவருத்த முண்டாகி மயக்க மாகும்
அகோதர மாயங்கமெல்லா மழற்சி யாகும்
அன்னந்தான் செல்லாது தண்ணீர் வேண்டும்
சகோதர மாங்கால்கையுஞ் சந்து வீங்கும்
தழலான காச்சலொடு அருசி யாகும்
உகோதர மாயுடம்பெல்லா முளைச்ச லாகும்
உற்றசூல் மகோதரத்தி னுண்மை தானே 579

சூல்கொண்ட பெண்களுக்கு மகோதரம்போல வருத்தமேற் பட்டு மயக்கமுண்டாகும். அங்கம் முழுவதும் அழற்சியாகும். உணவு செல்லாது. எப்பொழுதும் அதிக தண்ணீர் தாகம் எடுக்கும். காச்சலுண்டாகும். சுவையின்மை ஏற்படும். உடல் எல்லாம் உளைச்சலாகும். இவை சூல் மகோதரத்தின் குணங்களாகும்.

வல்லை மகோதரம்

உண்மையாந் தொப்புளுக்குள் நடுமை யத்தில்
உள்ளங்கை யகலந்தான் கட்டி யாகத்
தண்மையாய் தமர்கொண்டு அடைத்தாற் போலச்
சாங்கமாய் கருங்கல்லாய்த் தானி ருக்கும்
பண்மையா யசனமது முண்டாற் செல்லாப்
பருகிடுமே சுடுதண்ணீர் தன்மே லிச்சை
வெண்மையாய்க் கால்கையு மசதி யாகும்
மிடுக்கான வல்லைமகோ தரமு மாமே 580

தொப்புளின் மையத்தில் உள்ளங்கையளவு கட்டியாகி ஆப்புகொண்டு அடித்தாற்போல இருக்கும். கருங்கல்போல் கெட்டியாயிருக்கும். உணவு உண்ண விருப்பமிருக்காது. சுடுநீரையே விரும்புவர். கால்கை அசதியாகும். இவை வல்லை மகோதரத்தின் குணங்களாகும்.

விஷமகோதரம்

மிடுக்காக மேனியொடு பொத்தி பீசம்
வீங்கியே வெளுப்பாக மெலிவு மாகும்
அடுக்காகச் சிறுத்துமே பருத்துக் காணும்
ஆண்மையாய் பீசமது தளர்ந்தி ருக்கும்
துடுக்காக மனிதருடன் வார்த்தை பேசும்
துக்கமாய் மனக்கிலே சமெப்போ துந்தான்
நடுக்காக உடம்பெங்குந் திமிரு மாகும்
நலியும் விஷமகோ தரந்தான் நாடிப்பாரே 581

மேனியுடன் பீசமும் சேர்ந்து வீங்கும். மேனி வெளுத்து விடும். மெலியும். உடல் சிறுத்து அங்கம் பருத்துக் காணப்படும். ஆண்குறியும் பீசமும் தளர்ந்திருக்கும். துடுக்கான வார்த்தைகள் அதிகம் பேசுவர். அதிகத் தூக்கமுண்டாகும். எப்போதும் மனக்கிலேச முண்டாகும். உடலெங்கும் திமிருண்டாகும். இவை விஷமகோதரத்தின் குணங்களாகும்.

பாண்டு மகோதரம்

நாடிப்பார் வாடியே ஊதிக் கொள்ளும்
நன்னாடிச் செம்மையிலு நடக்கொட் டாது
வாடிப்பார் வகுத்தடியும் புறங்கால் வீங்கும்
வன்னமுகம் வேறுபட்டு மயிலு றக்கம்
தேடிப்பா ரோமமெங்குஞ் செம்மை யாகும்
செயலான ரத்தமில்லா தெலும்பு மாகும்
கூடிப்பார் மூச்சோடு குளுப்பை யாகும்
குணக்கேடாம் பாண்டுமகோ தரத்தின் கூறே 582

உடல் வாடி ஊதிக் காணப்படும். நடக்க முடியாது. பாதமும் புறங்காலும் வீங்கிவிடும். முகம் வேறுபடும். மயிலைப்போல உறக்கமிருக்கும். மயிர் சிவந்து போகும். உடலில் இரத்தமிருக் காது. உடலில் எலும்பு தெரியும். அதிக சுவாசமுண்டாகும். குணம் கெடும். இவை பாண்டு மகோதரத்தின் குணங்களாகும்.

சோபை மகோதரம்

கூறான அடிவயிறு குழைந்து உப்பிக்
கூப்பிட்டு மேல்வயிற்றில் பிகுவு மாகும்
தேறான வண்டமொடு கால்கள் கைகள்
சிதைந்து மெத்தவீங்கியே செழும்ப லாகும்
வீறான மேல்மூச்சு இருமல் தாகம்
விக்கியே சரீரமெல்லாங் குளிர்ச்சி யாகும்
தூறான மூத்ரமலஞ்சு ருங்கிக் காணும்
சோபைம கோதரமென்று செப்ப லாமே 583

அடிவயிறு குழைந்து உப்பிக் காணப்படும். மேல்வயிற்றில் அதிகம் வீங்கும். அண்டத்துடன் கால்கள் கைகள் ஆகியன வீங்கிப் போகும். பளபளப்புடன்காணப்படும். மேல்மூச்சுண்டாகும். இருமல் தாகம் ஆகியவை உண்டாகும். சரீரம் எல்லாம் குளிர்ந்து காணப்படும். மூத்திரம், மலம் ஆகியன சரியாகச் செல்லாது. இவை சோபை மகோதரத்தின் குணங்களாகும்.

காமாலை மகோதரம்

செப்பவே நடுக்கலொடு குளிர்ச்சி யாகும்
சீறியதோர் மூக்குமுகம் மார்பு வேர்க்கும்
உப்பவே உடம்புலரும் புறங்கால் வீங்கும்
உளைந்துமே அடிவயிறு மிகச் சுருங்கும்
துப்பவே கோழையொடு சுரமு முண்டாம்
சுகமில்லா நித்திரைதான் தலைவ லிக்கும்
தப்பவே மிகத்தாகஞ் சலிக்குஞ் சிந்தை
தளருங் காமாலைமகோதரந் தானாமே 584

நடுக்கத்துடன் குளிருமுண்டாகும். மூக்கு முகம் மார்பு ஆகியன வேர்க்கும். உடம்பு உலரும். புறங்கால் வீங்கும். உளைந்து அடிவயிறு மிகவும் சுருங்கும். கோழையோடு சுரமடிக்கும். உறக்கமிருக்காது. தலையை வலிக்கும். அதிக தாகமெடுக்கும். மனம் சலிப்படையும். உள்ளம் தளர்ந்து விடும். இவை காமாலை மகோதரத்தின் குணங்களாகும்.

குன்ம மகோதரம்

தானாகக் குலைதனையே மிகவ லிக்கும்
சாப்பாடு செரியாமல் வயிறு குத்தும்
வேனாக மேனோக்கி சத்தி யாகும்
மிடுக்கான வசீரணமாய் பேதி யாகும்
பானாகப் பக்கவிலா இடுப்பு குட்சி
பனைத்துமே வீங்கியே கல்லு போலாம்
கோனாகக்கோ மயம்போனீரி றங்கும்
குன்மமகோதரத்தினிடக் குணங்கள் தானே 585

குலை அதிகம் வலிக்கும். உணவு செரிக்காமல் வயிறு குத்தும். மேல்நோக்கி வாந்தியெடுக்கும். அசீரணமுடன் பேதியாகும். வயிற்றின் இருபக்கம், விலா, இடுப்பின் பின்பகுதி ஆகியன வீங்கி கல்போலாகும். இவை குன்ம மகோதரத்தின் குணங்களாகும்.

உதர மகோதரம்

குணமாக வறண்டுகண் சிவந்து கொள்ளும்
கொடிதான வாயுவது திரட்சி யாகும்
பணமாகப் பகர்ந்துநீர் போத வாங்கும்
பசியின்றி கனத்திருக்கும் மலம்வி டாது
வணமாக வயிறெல்லாம் மெத்த ஊதி
மார்பளவும் கழுத்தளவு மறைய வீங்கும்
மணமாகி வயிறுதான் மிகவே பீறும்
மகாஉ தரமகோதரத்தின் வளப்பந் தானே 586

உடல் வறண்டு கண்கள் சிவந்து காணப்படும். கொடிதான வாயுவது திரண்டு காணப்படும். நீர் அதிகம் குடிக்கும். பசியிருக்காது. வயிறு கனத்திருக்கும். மலக்கட்டு உண்டாகும். வயிறு அதிகம் ஊதி மார்பளவு கழுத்தளவு வரை வீங்கும். வயிறு அதிகம் பெரிதாகிக் காணப்படும். இவை உதர மகோதரத்தின் குணங்களாகும்.

கூர்ம மகோதரம்

வளப்பந்தான் வறண்டுமே கண்சி வந்து
வயிறு விம்மிவாயுதான் திரட்சி யாகும்
இளப்பந்தா னிருகண்ணுஞ் சுருங்கிக் கொள்ளும்
இருமலோ டிளைப்புநீர் போத வாங்கும்
அளப்பந்தா னாமைபோல் வயிற்றிற் கட்டி
அசனந்தான் செல்லாது பெலனுங் குன்னும்
குளப்பந் தானிரைச்சலோடு குமுற லாகும்
கூர்மமா மகோதரத்தின் குறிப்பி தாமே 587

உடல் வறண்டு கண் சிவக்கும். வயிறு விம்மும். வாயு திரட்சியாக உருண்டு வரும். இரு கண்களும் சுருங்கிக் காணப்படும். இருமல் இளைப்பு ஆகியன உண்டாகும். நீர் அதிகம் தாகமெடுக்கும். ஆமைபோல வயிற்றிற் கட்டி யுண்டாகும். உணவு செல்லாது. பெலம் குறையும். இவை கூர்ம மகோதரத்தின் குணங்களாகும்.

பீலிகை மகோதரம்

குறிப்பாகப் பரிசத்திற் கூர்மை யாகும்
குணமாக மலமோடு சலமு முண்டாம்
தெறிப்பாக வாயுவது கீழே நோக்கும்
செடமெல்லாம் வீங்காமற் கொஞ்சம் வீங்கும்
முறிப்பாக அசனந்தான் மிகவே வேண்டும்
மூத்திரந்தான் மிகுதியாம் மூர்ச்சை யில்லை
பிறிப்பாகக் கண்களிலே இரத்த மாகும்
பீலிகை மகோதரமாய் பேச லாமே 588

தொடுஉணர்ச்சி அதிகமிருக்கும். மலமும் சலமும் அதிகம் செல்லும். வாயு அதிகம் பிரியும். உடல் அதிகம் வீங்காமல் குறைத்து வீங்கும். பசி அதிகமிருக்கும். சிறுநீர் அதிகமாகப் பிரியும். மூர்ச்சையுண்டாகும். கண்கள் சிவந்து காணப்படும். இவை பீலிகை மகோதரத்தின் குணங்களாகும்.

சுர மகோதரம்

பேசவே காலேறிவ யிறு போற்றிப்
    பெருங்கணைக் காற்புறங்காலு மெத்த வீங்கி
வாசவே மார்பிடரி நரம்பு தோன்றி
    வயிறுதான் மிகப்பொருமி மெத்த வீங்கும்
கூசவே சுரமொடு அசதி யாகும்
    கொடியதோர் தாபமுண்டா மெரிச்ச லாகும்
வீசவே மிகவேண்டு மெரிச்சல் தன்னால்
    வீங்கும் கண் சுரமகோ தரம்வி ளம்பே 589

கால், வயிறு, கணுக்கால், புறங்கால் ஆகியன மிகவும் வீங்கிக் காணப்படும். மார்பு பிடரி ஆகியவற்றில் நரம்பு புடைத்துக் காணப்படும். வயிறு அதிகம் பொருமி வீங்கிக் காணப்படும். சுரத்துடன் அசதியுண்டாகும். தாபமேற்படும். அதிக எரிச்சல் உண்டாகும். கண்கள் எரிந்து வீங்கும். இவை சுரமகோதரத்தின் குணங்களாகும்.

சல மகோதரம்

விளம்பவே யங்கமெல்லாஞ் சலந்தான் கோர்க்கும்
    மேனியுமோ மஞ்சநிற மாகும் பாரு
உளம்பவே வுப்பிசமும் முழலை யாகும்
    உயர்கின்ற லிங்கந்தான் தளர்ந்து போகும்
முளம்பவே முதுகோடு வயிறு வீங்கும்
    மூலமாந் தாதுக்கள்தி கைத்தே நிற்கும்
புளம்பவே பொறியைந் துங்கலங்கிப் போகும்
    பொருமு மெத்தசலம கோதரத்தின் போக்கே 590

உடல் முழுவதும் சலம் கோர்த்துவிடும். மேனி மஞ்சள் நிறமடையும். உப்பிசம் உண்டாகும். உடல் உளையும். ஆண்குறி தளர்ந்து போகும். முதுகோடு வயிறு வீங்கிக் காணப்படும். உடல் தாதுக்கள் திகைத்து நிற்கும். ஐம்பொறிகளும் உணர்வுடன் இருக்கும். வயிறு பொருமும். இவை சலமகோதரத்தின் குணங்களாகும்.

மாமிச மகோதரம்

போக்கான மாமிசந்தான வளர்ந்து மீறிப்
    பொருமியே அடிவயிற்றிற் கல்லைப் போலத்
தாக்கான சடந்தானு முலர்ந்து வற்றித்
    தவிக்கு மேயடிக்கடிதான் தண்ணீரை தேடி

வாக்கான மதுரமொழி குளறிப் பேசி
வாய்வுத் தானடிக்கடிக்கு மேலே நோக்கும்
நீக்கான மலசலத்தில் மாமிசங் காணும்
நேரான மாமிசமகோ தரத்தி னேரே 591

சதையானது அதிகம் வளர்ந்து பொருமி அடிவயிற்றில் கல்லைப்போலக் காணப்படும். உடல் உலர்ந்து வற்றி தவிக்கும். அடிக்கடி தண்ணீர் தாகமெடுக்கும். பேச்சு குழறும். வாய்வு அடிக்கடி மேலறும். மலம் சிறுநீர் ஆகியவற்றில் மாமிசத் துணுக்குகள் காணப்படும். இவை மாமிச மகோதரத்தின் குணங்களாகும்.

சாத்தியம்

நேரான சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
நேர்ப்பான வாதமகோ தரமும் பித்தம்
வாரான வழுவையொடு நழுவை நீராமை
மகத்தான ஊறாமை வெப்புப் பாவை
வேறான மேற்கவிசை சூல்மகோ தரமும்
விஷமகோ தரம்வல்லைப் பாண்டு வாகும்
தூரான சோபைமகோ தரங்கா மாலை
துடிஉதர மகோதரமாங் கூர்மந் தானே 592

மகோதரத்தின் சாத்திய வகைகளைக் கேட்பாயாக. வாத மகோதரம், பித்த மகோதரம், வழுவை மகோதரம், நழுவை மகோதரம், நீராம்பல் மகோதரம், ஊறாம்பல் மகோதரம், வெப்புபாவை மகோதரம், மேற்கவிசை மகோதரம், சூல்மகோதரம், விஷமகோதரம், வல்லை மகோதரம், பாண்டு மகோதரம், சோபை மகோதரம், காமாலை மகோதரம், கூர்ம மகோதரம் ஆகிய பதினாறும் சாத்திய மாகும்.

அசாத்தியம்

கூர்மமொடு பதினாறுஞ் சாத்திய மாகும்
குணமில்லா வசாத்தியத்தைக் கூறக் கேளாய்
தீர்மமொடு சிலேட்டுமமாம் வாதசி லேட்பம்
சிறியபித்த சிலேட்பந் தொந்த மாகும்
கார்மமொடு கல்மகோத ரங்குலை முட்டி
கடியவில் மகோதரங்கீழ் கவிசை யாகும்
பார்பக்க கவிசையொடுபழுக் கவிசை யாகும்
பாரமாம் பெருவயிறு குன்மந் தானே 593

முன்பு கூறிய பதினாறும் சாத்திய வகைகளாகும், இனி அசாத்திய வகையைக் கூறக் கேட்பாயாக. சிலேத்தும மகோதரம், வாத சிலேத்தும மகோதரம், பித்த சிலேத்து மகோதரம், தொந்த மகோதரம், கல் மகோதரம், குலைமுட்டி மகோதரம், வில்ம கோதரம், கீழ்கவிசை மகோதரம், பக்ககவிசை மகோதரம், பழுக்கவிகை மகோதரம், பெருவயிறு மகோதரம், குன்ம மகோதரம் ஆகியவற்றோடு

குன்மமொடு தரமகோத ரம்பீலி கையும்
கொடியசல மகோதரந்தான் மாமிச மாகும்
பன்மமொடு பதினாறு மசாத்ய மாகும்
பாடினதோர் முப்பத்தி ரண்டு மாச்சு
வன்மமொடு வடமொழியின் நூல்சோ தித்து
மகேசுரன்தான் சொன்னபடி உமையாள் கேட்டு
தன்மமொடு சகலருந்தா னறிய வென்று
சாற்றினேன் யூகியென்ற முனியான் றானே 594

உதர மகோதரம், பீலிகை மகோதரம், சலமகோதரம், மாமிச மகோதரம், ஆகிய பதினாறும் அசாத்தியமாகும். ஆக முப்பத்திரண்டாச்சு. வடமொழியிலுள்ளதை சோதித்து, சிவன் பார்வதிக்குக் கூறிய யூகி முனியாகிய நான் உலகில் சகலரும் அறியட்டுமென்று பாடினேனே.

மகோதர ரோகநிதானம் முற்றிற்று.

விஷபாக ரோக நிதானம்

தானுமே விஷபாக மெட்ட தாகும்
சமரசமாய்ப் பேரைத்தான் சாற்றக் கேளாய்
வானுமே வாதவிஷ பாக மோடு
மார்க்கமாம் பித்தவிஷ பாக மாகும்
தேனுமே சேட்பவிஷ பாக மோடு
திரிதோஷ விஷபாகஞ் சேர்ந்து நின்ற
ஆனுமே அக்னிவிஷ பாக மாகும்
அடங்காத எரிவுவிஷ பாகந் தானும்
காணுமே கத்தவிஷ பாகஞ் சன்னி
கடியவி ஷபாகந்தா னெட்டு மாச்சே 595

விஷபாகம் எட்டு வகையாகும். அவற்றின் பெயரைக் கேட்பாயாக. வாத விஷபாகம், பித்த விஷபாகம், சிலேத்தும விஷபாகம், திரிதோஷ விஷபாகம், அக்கினி விஷபாகம், எரிவுவிஷ பாகம், கத்த விஷபாகம், சன்னி விஷபாகம் ஆகியவையாகும்.

ஆச்சென்ற மீன்முள்ளு பல்லி வாலு
அரந்த லாலாகாயந் தேற்ற நீர்தான்
போச்சென்ற காடியால்பு ணர்ச்சி தன்னால்
புழுக்களால் பூர்வத்திற் சமை பதார்த்தம்
தீச்சென்ற கருகலாற் செம்பி னூறல்
சேர்த்ததிற் சமைத்தவன்னங் கறிபொ சித்தல்
வாச்சென்ற அழுகலாய் வெதும்ப லான
மாமிசங்கள் புசித்தலால் மருவுந் தானே 596

மீன்முள்ளு, பல்லி வால், ஆகாயத்திலிருந்து விழுந்து தேங்கிய நீர், காடி, அதிக புணர்ச்சி, புழுக்கள், முதல்நாள் சமைத்த உணவு, செம்பின் களிம்பு சேர்ந்த உணவு, அழுகல் பொருட்கள், வெதும்பிய மாமிசம் ஆகியவற்றை சாப்பிடுவதால் விஷபாகம் ஏற்படும்.

மருவவே நல்மடந்தை கற்ப ழித்தல்
வழக்கோரம் வஞ்சனைகள் வாது தர்க்கம்
தருவவே உடன்படிக் கைதப்பி னோர்கள்
தந்தைதாய் குருவின்மொ ழிதனை மறந்தோர்
அருவவே அன்னமிடை யூறு செய்தோர்
ஆஸ்தானந் தன்னிற்போ யாண்மை சொன்னோர்
பருவவே பலபேருக்கு பகா ரத்தைப்
பறிக்கின்றோர் விஷபாகம் படுபா டாமே 597

பெண்களை கற்பழித்தல், வஞ்சனை செய்தல், தர்க்கம் செய்தல், செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுபவர்கள், தாய், தந்தை, குரு ஆகியோரின் சொல்லை மறந்தவர்கள், சாப்பிடுபவர்களுக்கு இடையூறு செய்பவர்கள். கோயிலில் சென்று இடையூறு செய்பவர்கள், பலபேருக்கு உபகாரம் செய்தவர்களை தடுத்தல் ஆகியவற்றால் விஷபாகம் உண்டாகும்.

வாதவிஷபாகம்

படுகுமே ஒருபக்கம் வீங்கி வற்றும்
பக்கமாமே னியெங்கும் வறண்டு காணும்
கடுகுமே கண்தூங்குஞ் சடம்வெ ளுக்கும்
கனத்துமே தலைதானுந் துயர்மி குக்கும்
மிடுகுமே மிகவீங்கும் பொசிக்கொட் டாது
மேனியுமோ மிடுக்கெல்லாந் தளர்ச்சி யாகும்
விடுகுமே மூத்திர சலமும் வற்றும்
மேனிகண்ணும் வாதவிஷ பாக மாமே 598

உடலில் ஒரு பக்கம் மட்டும் வீங்கும். மேனி வறண்டு காணப்படும். அதிக தூக்கமுண்டாகும். உடல் வெளுக்கும். தலை கனத்து வலிக்கும். அதிகம் வீங்கி உணவு உண்ண முடியாது. உடல் தளர்ச்சியடையும். சிறுநீர், மலம் செல்வது குறைந்து போகும். மேனி கன்னிப்போகும். இவை வாதவிஷ பாகத்தின் குணங்களாகும்.

பித்தவிஷபாகம்

பாகமா யுடம்பெங்குந் தினவுண் டாகும்
பாரமாந் தாபமொடு சுர்மு முண்டாம்
வேகமா யுடம்பெங்கும் வெடிப்பு மாகும்
வெடிநெருப் புபட்டாற்போற் பொரியும் பாரு
ஊகமா யுடம்புவலி சவ்க்கே டாகும்
உறுநித் திரைவாராமல் மேல்மூச் சாகும்
காகமாய் மயிலுறக்கங் கடிய சித்தம்
கடும்பித்த விஷபாகங் கணக்கு தானே 599

உடல் எங்கும் தினவெடுக்கும். தாபத்துடன் சுரமடிக்கும். உடல் எங்கும் வெடித்து வெடிநெருப்பு பட்டதுபோல பொரியும். உடல் வலிக்கும். எப்பொழுதும் பிணம்போல உடலிருக்கும். உறக்கம் வராது. மேல் மூச்சுண்டாகும். மயிலைப்போல உறங்குவர். மனம் இறுகிப் போகும். இவை பித்த விஷபாகத்தின் குணங்களாகும்.

சிலேத்தும விஷபாகம்

தானுமே தேகமெங்குந் தினவுண் டாகிச்
சற்றிரும லாக்கா மிகவெ ளுக்கும்
கோனுமே கோழையொடு மூச்சு மாகும்
கொடியதாப சுரமாய்க் குளிருண் டாகும்
வேனுமே மிகவீங்கி வெடிப்புண் டாகும்
மேனியெல்லாம் வெவ்வனல்போல ழன்று காணும்
தேனுமே போலவேசி றுநீ ராகும்
சேட்ப விஷபாகமென் றேசெப் பினாரே 600

தேகம் முழுவதும் தினவெடுக்கும். இருமலுண்டாகும். உடல் மிகவும் வெளுத்துவிடும். கோழையதிகமுண்டாகும். சுவாசம் அதிகமுண்டாகும். தாபமேற்பட்டு சுரமும் அடிக்கும். குளிருண்டாகும். அதிகம் வீங்கி வெடிப்பு ஏற்படும். மேனி முழுதும் அனல்போல அழன்று காணப்படும். சிறுநீர் தேன்போல இறங்கும். இவை சிலேத்தும விஷபாகத்தின் குணங்களாகும்.

திரிதோஷ விஷபாகம்

செப்பவே சத்தியொடு மூர்ச்சை தாகம்
சிறுநீர் தானடிக்கடிக்கு மேற்சு வாசம்
வெப்பவே விக்கல்நித் திரைம யக்கம்
வீக்கமொடு மேல்வெளுப்பு மேனி கன்னல்
அப்பவே அருசியொடு அதிசா ரந்தான்
அடிக்கடிக்குப் பிரமைபோல லைவுண் டாதல்
திப்பவே வாய்நீருமி கவே ஊறல்
திரிதோஷ விஷபாகஞ் செப்பி னோமே 601

வாந்தியொடு மூர்ச்சை உண்டாகும். சிறுநீர் அடிக்கடி கழியும். மேல் சுவாசமும் உண்டாகும். விக்கல் உண்டாகும். தூக்கமிருக்காது. மயக்கமுண்டாகும். வீக்கமேற்படும். வெளுப்புண்டாகும். மேனி கன்னிப் போகும். சுவையின்மை யோடு அதிசாரம் ஏற்படும். அடிக்கடி பிரமை போல உண்டாகும். வாயில் நீருறும். இவை திரிதோஷ விஷபாகத்தின் குணங்களாகும்.

அக்கினி விஷபாகம்

ஓமென்ற வாதபித் தங்கள் மிஞ்சல்
உறுதியாங் கோழையொடு சத்தி மூர்ச்சை
வேமென்ற வாய்தனிலே நீர்தான் வீழ்தல்
வீக்கமாய் கிடைகொடா தேபி ரட்டல்
வாமென்ற உடம்புவற்றி வயிறு ஊதல்
மலசலமுஞ் சிக்கிசிக்கி சிவந்து வீழ் தல்
பாமென்ற பக்கத்தில்வ லியுண் டாதல்
பாரமா மக்கினிவி ஷபாகந் தானே 602

வாதபித்த குற்றங்கள் மிகுந்து இருக்கும். கோழையொடு வாந்தி உண்டாகும். மூர்ச்சையேற்படும். வாயில் அதிக நீருறும். உடல் வீக்கமாக இருக்கும். உடலை படுக்க விடாது. பிரட்டிக் கொண்டேயிருக்கும். உடல் வற்றி வயிறு ஊதும். மலமும், சிறுநீரும் சிக்கி சிவந்து வெளியேறும். விலாபக்கத்தில் வலி உண்டாகும். இவை அக்கினி விஷபாகத்தின் குணங்களாகும்.

எரிவிஷபாகம்

பாரமாய் குறித்தவிட மிரத்தம் வீழ்தல்
பழுப்பான கோழையொடு சுவாசங் காணல்
மாரமாய் மார்புகுறுக் கிட்ட டைத்தல்
மகாவிரணங் கண்டுமே மாமிசம் தோற்றும்

கோரமாய்ச் சடத்திலே குற்றலுண் டாகும்
குணக்கேடாம் குன்மம்போற் குடல்பி ரட்டும்
ஆரமாய திசாரம் வீக்க மாகும்
அழலுமே யெரிவுவி ஷபாகந் தானே 603

குறித்த இடங்களில் இரத்தம் வடியும். கோழை பழுப்பாக வெளிவரும். சுவாசம் உண்டாகும். மார்பு அடைக்கும். விரணம் பெரியதாகத் தோன்றி துர்மாமிச வளர்ச்சியிருக்கும். உடலில் குத்தலெடுக்கும். குணம் கெடும். குன்மம் போல் பிரட்டலுண் டாகும். வீக்கமுண்டாகும். அழலுண்டாகும். இவை அனைத்தும் எரிவிஷபாகத்தின் குணங்களாகும்.

கத்தவிஷபாகம்

எரிவுண்டாய்ச் சுரமொடு மயக்கஞ் சோம்பல்
எழிலுடம்பு தான்கனத்தல் மூர்ச்சை யாதல்
தரிவுண்டாய் தலைவலியுஞ் சேட்டு மந்தான்
தாகமே மிகுதியாய் பலமாம் வார்த்தை
தெரிவுண்டாய்த் தேகத்திற் குளிருண் டாதல்
சீதமாம் வயிறுவிட்டுக் கடுப்புக் காணல்
சரிவுண்டாய் சவம்போல நாற்ற மாகும்
தனித்ததோர் கத்தவிஷ பாகந் தானே 604

சுரமுடன் மயக்கம் சோம்பல் ஆகியவை ஏற்படும். உடல் கனத்துக் காணப்படும். மூர்ச்சையுண்டாகும். தலைவலிக்கும். சேத்து முண்டாகும். வார்த்தைகள் பலமாக வரும். தேகம் குளிரும். வயிற்றுக் கடுப்பு உண்டாகும். பிணம்போல உடல் நாற்றமெடுக்கும். இவை கத்த விஷ பாகத்தின் குணங்களாகும்.

சன்னிவிஷபாகம்

கத்தமாய்ச் சேறுபோல்வ யிறு போகும்
கனவிரணந் தனில்ரத்த மிகவே காணும்
சுத்தமாய்ச் சுவாசமொடு சுரம யக்கம்
சூட்டில் வெந்தகொள்ளேனவே மேனி நாறும்
அத்தமா யந்தமுக வீக்கங் காணும்
அதிகமாம் வியர்வையொடு அசதி யாகும்
பித்தமாய் மயக்கமொடு பிதற்ற லாகும்
பெருகுசன் னிவிஷபாகம் பேச லாமே 605

சேறுபோல வயிறு கழியும். விரணங்களில் இரத்தம் அதிகம் காணப்படும். அதிசுவாசத்துடன் சுரம் மயக்கம் உண்டாகும்.

நெருப்பில் வெந்த கொள்ளு போல உடல் நாற்றமெடுக்கும். முகம் வீங்கும். அதிக வியர்வை உண்டாகும். அசதி தரும் மயக்கத்துடன் வாய் பிதற்றலுண்டாகும். இவை சன்னி விஷபாகத்தின் குணங்களாகும்.

சாத்தியம் அசாத்தியம்

பேசவே சாத்தியமாம் விஷபா கந்தான்
பேரான வாதபித்த சேட்ப மாகும்
ஏசவே யெரிவுவிஷ பாகத் தோடு
இதுநாலுஞ் சாத்தியமா மசாத்தி யந்தான்
தேசவே திரிதோஷ சன்னி வாதம்
திகழற்ற விஷபாக மக்கினி தானும்
நாசவே நாலுந்தான் சாத்ய மாகும்
நாதாக்கள் சொன்னபடி நாட்டி னோமே 606

விஷபாக ரோகத்தில் வாத விஷபாகம், பித்த விஷபாகம், சிலேத்தும விஷபாகம், எரிவிஷபாகம் இவை நாலும் சாத்தியமாகும். திரிதோஷ விஷபாகம், சன்னி விஷபாகம், அக்கினி விஷபாகம், கத்த விஷபாகம் ஆகிய நான்கும் அசாத்தியமாகும்.

விஷபாகரோக நிதானம் முற்றிற்று.

கிராணிரோக நிதானம்

நாட்டவே கிராணிதா னிருபத் தைந்தாம்
நலமாகு முற்பத்தி பெயரைக் கேளாய்
வாட்டவே வாதமாம் பித்தக் கிராணி
வகையான சேட்பமொடு தொந்த கிராணி
ஊட்டவே உஷ்ணவாயு கிராணி யோடு
உயர்கின்ற அற்றராவாயு கிரா ணியும்
மூட்டவே மூலவாய் வுக்கி ராணி
முதிர்குன்மக் கிராணிகெர்ப்பக் கிராணி யாமே 607

கிராணிவகை இருபத்தைந்தாகும். அவற்றின் உற்பத்தியையும் பெயரையும் கேட்பாயாக. வாதகிராணி, பித்தகிராணி, சிலேத்தும கிராணி, தொந்த கிராணி, உஷ்ணவாயு கிராணி, அர்த்தராவாயு கிராணி, மூலவாயுக் கிராணி, குன்மக் கிராணி, கெர்ப்பக் கிராணி ஆகியவற்றோடு

ஆமெட்டுக் கிராணியொடு சங்கிரகக் கிராணி
அசதியாம் வாதாதி சார மாகும்
பாம்பித்த வதிசாரஞ் சேட்பதி சாரம்
புணர்ச்சியாம் திரிதோஷ வதிசா ரந்தான்
தாமேசுராதி சாரம்சன்னி பாதி சாரம்
தாக்கான தோஷாதி சார மாகும்
வேமேவியத் தூமமசீரணத் தூமம்
விற்பட்ட மோடுமிர தசேடந் தானே 608

ஒட்டுக்கிராணி, சங்கிரகக்கிராணி, வாததிசாரம், பித்ததிசாரம், சிலேத்துமதிசாரம், திரிதோஷவதிசாரம், சுர அதிசாரம், சன்னிபாத அதிசாரம், தோஷ அதிசாரம், விதூம அசீரணம், விற்பட அசீரணம், மிர்தசேட அசீரணம் ஆகியவையும்

தானென்ற வாதமாம்வி சூழி யாகும்
தனிப்பித்த விசூழியொடு சேட்ப மாகும்
ஏனென்ற பேதியது இருபத் தைந்து
எழிலான உற்பத்தி இயம்பக் கேளாய்
மானென்ற வயிற்றின் மந்தமி ருக்கும்
மாப்பண்ட மதுரங்கள் மங்கை கோஷ்டி
ஊனென்ற மாமிசங்கள் வேகாப் பண்டம்
உண்டதாற் கிராணிவந்துற் பவிக்குங் கண்டாய் 609

வாதவிசூழி, பித்த விசூழி, சிலேத்தும விசூழி ஆகிய வற்றோடு பேதிவகை இருபத்தைந்தாகும். பேதி உற்பத்தியாகும் வகையைக் கேட்பாயாக. வயிற்றில் மந்தமுண்டானாலும் மாப்பண்டங்கள், இனிப்பு, கள் ஆகியவை அதிகமுண்டாலும், புணர்ச்சி தோஷத்தாலும், மாமிசம், வேகாத பொருட்களினாலும் கிராணி உற்பத்தி யாகும்.

கண்டாயோ நரர்செய்த பாவத் தாலும்
கடூரமாஞ் சிவனடியார் தங்கள் வேள்வி
திண்டாயோ சிவனோடுசுப் பிரமண் ணியர்
தேவியொடு மால்சாத்தன் சிங்க வாகி
விண்டாயோ இவர்பூசை விடுத்த லாலும்
மித்துருவாம் பந்துசன உறவின் பேரை
பண்டாயோ பசிக்கவைத்துப் பொசிக்கை யாலும்
பருகுமே கிராணியென் றபாழா நோயே 610

மனிதர் செய்த பாவத்தாலும், சிவனடியார்கள் வேள்வியை யும், சிவன், சுப்பிரமணியர், பார்வதி, திருமால், விஷ்ணு ஆகியோரது பூசையை தடுத்தாலும், உறவினர்களை பசியால்

வாடவிட்டு தான்மட்டும் உண்பதாலும், கிராணிநோய் உண்டாகும்.

வாதக்கிராணி

நோவாகும் நடுவயிறு உப்பிச மாகும்
நுட்பமாம் பசியெடுக்கு முடம்பு லர்த்தும்
தீவாகுஞ் சீதமாய் வயிறு போகும்
சிதறுமே மலந்தானும் வாய்வு தன்னால்
காவாகுங் கட்டியாய் வயிற்றிற் காணும்
காற்றுமே மிகக்கழியுங் கறுப்பு மாகும்
பாவாகும் பழவெல்லம் போல வீழும்
படுவாதக் கிராணியிட பண்பி தாமே 611

நடுவயிற்றில் உப்பிசமேற்படும். பசியெடுத்து உடல் உலர்ந்து போகும். வயிறு சீதமாகக் கழியும். மலம் சிதறும். வாய்வினால் வயிறு கட்டியாகத் தோன்றும். காற்று அதிகமாகப் பிரியும். மலம் கறுப்பாக இருக்கும். பழைய வெல்லம்போல மலம் விழும். இவை வாதக் கிராணியின் பண்பாகும்.

பித்தக்கிராணி

பண்பாக நடுவயிறு நோக்கா டாகும்
பலிநானா விதமாக வயிறு போகும்
மண்பாக வயிற்கழியு முறக்க முண்டாம்
மாசற்ற நரம்பெல்லாந் தளர்ந்து தொங்கும்
உண்பாக வூனெல்லாங் கழிந்து போகும்
உள்கொடுக்கும் மருந்தழியு முணர்ச்சி கேடாம்
பெண்பாக பெண்தலைவிட் டூந்து போகும்
பித்தத்தின் கிராணியெனப் பேச லாமே 612

நடுவயிற்றில் வலியுண்டாகும். வயிறு பலவிதமாகக் கழியும். வயிறு கழிந்து உறக்கமேற்படும். நரம்புகள் அனைத்தும் தளர்ச்சி உண்டாகும். சதைத் துணுக்குகள் எல்லாம் மலத்தோடு வீழும். உள்ளே தரும் மருந்துகள் பயன் அளிக்காது. தலைவிட்டுப் போகும். இவை பித்தக்கிராணியின் குணங்களாகும்.

சிலேத்துமக் கிராணி

பேசியே யழல்போல நாற்ற மாகும்
பெருகவே வெளுப்பாக மலந்தான் போகும்
காசியே கைகாலுந் தளர்ச்சி கேடாம்
கள்ளமாய்க் காச்சல்வருங் கண்சிவக்கும்

நாசியே நாவோடுவ ரட்சி காணும்
நயந்துமே பாளையாய்கு டல்போல் வீழும்
ஆசியே யறிவில்லா தசதி யாகும்
அதட்டியே விக்கல்வருஞ் சேட்பந் தானே 613

தீபோல நாற்றமெடுத்து அதிகம் வெளுத்த மலம் கழியும். கைகால் தளர்ச்சி யடையும். காய்ச்சலுண்டாகும், நாவோடு வறட்சி யுண்டாகும். தென்னம்பாளைபோல குடல் பிசிறுகள் மலத்துடன் வீழும். அசதியுண்டாகும். அறிவு மங்கிப் போகும். விக்கல் உண்டாகும். இவை சிலேத்தும கிராணியின் குணங்களாகும்.

தொந்த கிராணி

வருகுமே தாபமுடன் காச்சல் தானும்
மகத்தான வேலைபோல வயிறி ரைச்சல்
தருகுமே தலைவலியுங் குளிர் நடுக்கல்
தனிப்பால்போல் மிகக்கழியு மடிக்க டிக்கு
பருக்குமே பகழியெனப் பாயும் வாய்வு
பரிதாப முழலையொடு எரிவு மாகும்
கருகுமே கால்கையும் புறங்கால் வீங்கும்
கசிதொந்தக் கிராணியெனக் கண்டு கொள்ளே 614

தாபமேற்பட்டு காச்சலுண்டாகும். பனைஓலை சப்தம்போல வயிறு இரையும். தலைவலிக்கும். குளிர் நடுக்கும். பால்போல வயிறு கழியும். வாயு அதிகம் பிரியும். உளைவுண்டாகி உடல் எல்லாம் எரியும். கால் கை புறங்கால் ஆகியவை வீங்கிப் போகும். இவை தொந்தக் கிராணியின் குணங்களாகும்.

உஷ்ணவாயுக் கிராணி

கண்டுகொள்ளு மலந்தனையே யிறுக்கிக் கொண்டு
கனமாக வயிறிரைந்து உப்பிசம தாகும்
பண்டுகொண்ட அசனந்தான் செரித்தி டாது
பாங்கான புளித்தேக்கும் வாய்நீ ரூறும்
விண்டுகொண்ட கால்கையு மசதி யாகும்
மேனியுமோ மிகக்கருகி மெலிவு மாகும்
உண்டுகொண்ட நாள்மூன்றிற் பேதி யாகும்
உணரூஷ் ணவாயுவென்றே யுரைக்க லாமே 615

முதலில் மலத்தை இறுக்கி வயிறு இரைந்து உப்பிசமாகும். உண்ட உணவு செரித்திடாது, புளித்தேப்பம் உண்டாகும். வாயில் நீரூறும், கால் கையில் அசதியுண்டாகும். மேனி மிகவும்

கருகி மெலிந்து போகும். இக்குறி குணம் கண்ட மூன்று நாளில் பேதியாகும். இவை உஷ்ணவாயு கிராணியின் குணங்களாகும்.

அர்த்தரா வாய்வுக் கிராணி

உரைக்கவே பத்தியந்தான் கொண்ட போது
உறுதியாய் மலந்தள்ளிப் புளித்தேக் கிட்டுத்
தரைக்கவே சத்தியொடு அருசி யாகும்
தாகமுண்டாய்த் தானிருக்குந் தளர்ச்சி யாகும்
விரைக்கவே விலாப்பக்க மிசிவு மாகும்
மேனியெல்லாம் வெளுப்பாகும் விக்க லுண்டாம்
அரைக்கவே யசனந்தான் செரித்தி டாது
அர்த்தரா வாயுவிட வாண்மை தானே 616

பத்தியம் இருக்கும்பொழுது மலம் வெளிப்பட்டு புளித்தேப்பம் உண்டாகும். வாந்தியுடன் சுவையின்மை உண்டாகும். அதிக தாகமுண்டாகும். உடல் தளர்ச்சியடையும். விலாப்பக்கம் வலிப்பு தோன்றும். மேனி வெளுத்து விடும். விக்கலேற்படும். உணவு செரித்திடாமல் இருக்கும். இவை அர்த்தரா வாயுவின் குணங்களாகும்.

மூலவாய்வுக்கிராணி

ஆண்மையாய் வாய்வுதனில் மிகப் பிரண்டு
அடிவயிற்றைப் பிரமியே மலம் வறண்டு
தாண்மையாய் சடம்வற்றி மந்திப் புண்டாய்ச்
சத்தமாய்த் தணியாத இரைச்ச லாகும்
கேண்மையா யடித்துரையிற் குற்ற லுண்டாம்
கெட்டியாஞ் சரீரமது கிழமுமாகும்
மூண்மையாங் குதந்தன்னில் முளைப்போல தோணும்
மூலவாயுக் கிராணியென மொழிய லாமே 617

வாய்வு அதிகம் பிரண்டு அடிவயிற்றைப் பற்றி மலம் வறண்டுவிடும். உடல் வற்றி மந்தமேற்படும். எப்பொழுதும் குறையாத இரைச்சலுண்டாகும். சரீரம் கிழட்டுத் தோற்ற மடையும். குதத்தில் முளைபோல காணப்படும். இவை யனைத்தும் மூலக்கிராணியின் குணங்களாகும்.

குன்மக்கிராணி

மொழியவே தலைதானுங் கனத்தி ருக்கும்
மொழி உறக்க முண்டாகும் பீளை சாரும்
தழியவே வயிறெல்லாமூ லாவிக் குற்றும்
சமரசமாய்த்தான் வியர்க்குந் தலைந டுக்கும்

உழியவே உடம்பெரிப்பு முழலை யாகும்
உப்பியே வயிறதுவு மிறைஞ்சிப் போகும்
வழியவே வயிற்றிலொரு புறத்திற் றானும்
களைச்சுரெட்சை போடுகுன்மக் கிராணி யாமே 618

தலை கனத்துக் காணப்படும். அதிக உறக்கமுண்டாகும். கண்ணில் பீளை சேரும். வயிறு எல்லாம் வாயு உலாவி குத்தும். அதிக வியர்வை உண்டாகும். தலை நடுக்கமுண்டாகும். உடல் எரியும். உளையும். வயிறு இறைஞ்சிப் போகும். வயிற்றில் ஒரு பக்கம் மட்டும் வலி உண்டாகும். இவை குன்மக்கிராணி யின் குணங்களாகும்.

கெர்ப்பக்கிராணி

வளைச்சுமே வயிறுகழியுங் கடுப்பு முண்டாம்
வாடியே கால்கையும் வெச்சென் றாகும்
களைச்சுமே கண்தானு மஞ்ச ளாகும்
கழியுமே பலவிதமாய் கடின தாகம்
உளைச்சுமே கெர்ப்பந்தானு யருங் காலம்
உறுவன்னம் வாந்தியா யுழலை யாகும்
முளைச்சுமே கெர்ப்பந்தான் கீழே வீழில்
முடுகாது கெர்ப்பமாங் கிராணி தானே 619

வயிறு கழியும். கடுப்பு உண்டாகும். கால் கை வாடிவிடும். கண், காது ஆகியவை மஞ்சளாகும். பலவிதமாகக் கழியும். தாகம் அதிகமிருக்கும். கெர்ப்பத்தில் கரு வளரும் சமயம் உண்ட உணவு வாந்தியாகி உளைச்சல் உண்டாகும். பிரசவித்த பின்பு நோயிருக்காது. இவை கெர்ப்பக் கிராணியின் குணங்களாகும்.

ஒட்டுக்கிராணி

தானான படுக்கையே இதமாய்க் காணும்
வலிப்புமே யிளைப்பாகத் தானிருக்கும்
வானான வயிறுவலி மெத்த வாகும்
மார்போடு விலாமுதுகு வலியுண் டாகும்
ஓனான துட்டிடையாய் வயிறு போகும்
ஒருமித்துப் போகாமல்ம லமுஞ் சிக்கும்
தோனான தொப்புள்தனில் வளையம் போலச்
சுட்டிடவே சுருக்கமா மொட்டுக் கிராணி 620

படுக்கையிலேயே இருக்க விருப்பப்படுவர். வலிப்புண்டாகும். இளைப்புண்டாகும். வயிற்றுவலி அதிகமாக இருக்கும்.

மார்பு, விலா, முதுகு ஆகியவற்றில் வலியுண்டாகும். சிறிது சிறிதாக வயிறு கழியும். ஒரே வேளையாகச் செல்லாமல் மலம் சிக்கி சிக்கி சிறிது சிறிதாக செல்லும். தொப்புளில் வளையம்போல அந்த அளவில் சுடும். இவை ஒட்டுக்கிராணியின் குணங்களாகும்.

சங்கிரகக் கிராணி

சுருக்கமா யுதரமது பொரும லாகிச்
சோறு செரியாக்கழிச்சல் பானச் சூடாய்
குருக்கமாய் குதந்தனிலே நனைத லாகிக்
குருவியர்வைச் சுரமோடு அனலாய்க் காணும்
மருக்கமாய் வாந்தியாய் மனம் றுக்கும்
மார்பிலே கோழைகட்டு மயக்க மாகும்
சருக்கமாய்க் கண்கள் ரெண்டுங் கழற்சி யாகும்
சங்கிரகக் கிராணியென்றே சாற்ற லாமே 621

வயிறு பொருமலாகி, சோறு செரிக்காமல் சூடான கழிச்சலாகக் கழியும். வியர்வை யுண்டாக்கும். சுரம் காயும். உடல் அனலாகக் கொதிக்கும். வாந்தி யுண்டாகும். மனம் மறுக்கும். மார்பில் கோழை கட்டிப் போகும். மயக்கமேற்படும். கண்கள் இரண்டும் அழற்சி உற்று காணப்படும். இவை சங்கிரகக் கிராணியின் குணங்களாகும்.

வாதாதிசாரம்

சாற்றவே வயிறதனைப் பொருமி நொந்து
தனிச்சூலை போலவே வாய்வு தோன்றும்
ஆற்றவே நீரிறங்கா அசனந் தானும்
அரைவாகி சீரணமாய்ப் பேதி யாகும்
மாற்றவே மஞ்சளித்துக் கருக்கும் பேதி
மகத்தான துர்க்கந்தம் வெளுப்பு மாகும்
நீற்றவே நெஞ்சுதனிற் புளித்தேக் காகும்
நேரான வாதாதி சார மாமே 622

வயிற்றைப் பொருமி நொந்து சூலைநோய் போல வலிக்கும். வாய்வு தோன்றும், நீரிறங்கும். உண்ட உணவு அரைவாசி மட்டுமே சீரணித்து பேதியாகும். மலம் துர்வாடை வீசும். மஞ்சளாகவும், கறுப்பாகவும் பேதியாகும். நெஞ்சில் புளித்தேப்பம் உண்டாகும். இவை வாதாதிசாரத்தின் குணங்களாகும்.

பித்தாதிசாரம்

ஆமென்ற மலந்தானு மஞ்ச ளித்து
அதிகமாய் வறண்டுமே நுரைதான் பாயும்
வாமென்ற வாய்வதுதான் மிகவுண் டாகும்
வற்றியே உடம்பெங்கும் கால்கை வீங்கும்
காமென்ற கலங்காச்சல் போலக் காயும்
கருதியே உடம்பெங்கும் வெண்மை யாகும்
தாமென்ற தலைவலித்து வாந்தி யாகும்
சமரசமாம் பித்தாதி சார மாமே 623

மலம் மஞ்சளாக அதிகம் வறண்டு அதிக நுரையுடன் பாயும். வாய்வு அதிகம் பிரியும். உடல் முழுதும் வற்றி கால் கைகள் வீங்கும். காய்ச்சல் அதிகமாகக் காயும். உடல் வெளுத்துப் போகும். தலை வலிக்கும். வாந்தி உண்டாகும். இவை பித்த அதிசாரத்தின் குணங்களாகும்.

சேட்பாதிசாரம்

சாரமாய் நாற்றந்தான் மிகவுண் டாகித்
தவளம் போலவெளுத்து நுரையு மாகி
வாரமாய் வயிர்வலித்துப் பேதி யாகும்
மாமிசந் தான்சத்துசத் தாய்வி டுக்கும்
ஆரமா யருசியொடு இருமல் சுவாசம்
அழுந்தி மயிர்க்கூச்செறிந் தாசனங் கடுத்தல்
தீரமாய் தேகமெங்குந் தினவுண் டாகும்
சேட்பாதி சாரமென்றே செப்ப லாமே 624

பேதியானது அதிக நாற்றத்துடன் செல்லும். வெளுத்து நுரையாக வயிறு வலித்து பேதியாகும். மாமிசமானது சத்தாய் விடுபடும். சுவையின்மையொடு இருமல் சுவாசம் ஆகியன உண்டாகும். மயிர்க்கூச்செறியும். ஆசனம் கடுக்கும். தேகம் முழுவதும் தினவெடுக்கும். இவை சிலேத்தும அதிசாரத்தின் குணங்களாகும்.

திரிதோஷ அதிசாரம்

செப்பவே உள்ளெரிவாய் புறங் குளிர்ச்சி
செழுமைவிக்கல் வாந்தியோடி ருமல்சு வாசம்
துப்பவே வயிறிரைந்து பொரும லாகிச்
சுருட்டியே வயிறதுவும் வலித்துக் காணும்
இப்பவே இரத்தசீதக்க ழிச்சல்
எழிலான நித்திரையு முடல்ந டுக்கும்
உப்பவே உடற்குற்று வுணர்ச்சி யின்மை
உறுகு திரிதோஷவ திசார மாமே 625

உடலின் உள்ளே எரியும். வெளிப்பக்கம் குளிர்ச்சியாய் இருக்கும். விக்கல் வாந்தி இருமல் சுவாசம் ஆகியன அதிகமாகும். வயிறு இரைந்து பொருமலுண்டாகும். வயிறு சுருட்டி வலிக்கும். இரத்தமும் சீதமுமாக கழிச்சல் ஏற்படும். நித்திரை அதிகமாகும். உடல் நடுக்கமுண்டாகும். உடலை குற்றி வலியிருக்கும். உணர்ச்சி யிருக்காது. இவை திரிதோஷ அதிசாரத்தின் குணங்களாகும்.

சுராதிசாரம்

அதிசார மூர்ச்சையொடு பிரலா பந்தான்
அடித்தொடையு மசந்துமிகக் கடுப்புண் டாகும்
கதிசாரக் காச்சலொடு சத்தி தாகம்
கடுப்புண்டாஞ் சரீரமெங்குங் காந்த லாகும்
அதிசாரஞ் சிறுநீர்தன் னொடுக ழிச்சல்
உஷ்ணமாய் ஓயாத இரும லாகும்
துதிசாரம் பலவர்ண மாகும் பேதி
சூட்சமாஞ் சுராதியெனும் அதிசார மாமே 626

மூர்ச்சையேற்படும். பிரலாபிப்பார்கள். அடித்தொடை அசந்து மிகவும் கடுப்புண்டாகும். காய்ச்சலுடன் வாந்தி தாகம் உண்டாகும். கடுப்பாக சரீரம் எல்லாம் காந்தல் ஏற்படும். சிறுநீர் அதிகமாக விரிந்து கழிச்சல் அதிகமாகும். இடைவிடாத உஷ்ண இருமல் ஏற்படும். கழிச்சல் பலவர்ணமாக இருக்கும். இவை சுர அதிசாரத்தின் குணங்களாகும்.

சன்னிபாத அதிசாரம்

சுரமாகி உடம்பெல்லா மிகவே காயும்
சுவாசமா யிருமலொடு விக்க லாகும்
அரமாகி நாவறண்டு அழற்சி யாகி
அதிசார மாய்கழிந்து ஆலோ பிக்கும்
மரமாகி உடம்பெல்லாந் திமிருண் டாகும்
வயிறுவலி அடிக்கடிக்கு மயக்க மாகும்
உரமாகி உடம்பெங்குங் குளுமை யாகும்
உறுதிசன்னி வாதாதி சார மாமே 627

உடல் அதிகமாக காயும். சுவாசத்துடன் இருமலும் விக்கலும் உண்டாகும். நாக்கு வறண்டு அழற்சியாகும். அதிசாரமாகி கழிந்து, ஆலோபிப்பர். உடல் எல்லாம் திமிர்த்துப் போகும். உடலில் குளிர்ச்சி உண்டாகும். அடிக்கடி மயக்கமேற்படும். வயிற்றுவலி உண்டாகும். இவை சன்னிபாத அதிசாரத்தின் குணங்களாகும்.

தோஷாதிசாரம்

உறுகின்ற நீருந்திவ ழிதான் புக்கில்
உண்ணீர் தானரம்புபுரை தனில்இ ழிந்து
அறுகின்ற வந்நரம்பை அழுகப் பண்ணி
அபானவாய் வொடுகூடி மலப்பைக் குள்ளே
புறுகின்ற தான்விகுத்து மூலாக்கி னிக்கீழ்
பொருந்திய தோரசனத்தைச் செரிக்கொட் டாது
மறுகின்ற வயிற்றிரைந்து கழிச்ச லாகும்
மகாநாற்ற முண்டாந்தோ ஷாதி சாரம் 628

நீரானது வயிற்றின் வழியே சென்றால் நரம்பின் துளைவழியே சென்று தங்கி அந்த நரம்பை அழுகச் செய்யும். அபானவாய்வுடன் கூடி, மலப்பைக்குள் அதிகமாகி, மூல அக்கினியானது கீழ்நோக்கிச் சென்று உண்ட உணவை செரிக்கவிடாது. வயிறு இரைந்து கழிச்சலாகும். அதிக நாற்றமுண்டாகும். இவை தோஷ அதிசாரத்தின் குணங்களாகும்.

விதூம அசிரணம்

உண்டதோ ரன்னமெல்லாம் வாந்தி யாகும்
உறுதியாய மூகலாய்பு ளித்தேக் காகும்
உண்டதோர் வயிறுப்பும் பேதி யாகும்
மகத்தான இரைச்சலொடு புளிப்பு பேதி
முண்டதோர் முகங்கறுக்கு முடலும் வாடும்
முதிர்மயக் காம்புத்தியது முன்பின்றோணா
விண்டதோர் மிகவாதைக் கிடைப்பி ரட்டும்
மிகத்தண்ணீர் தவிப்பெய்தும்விதூ மவசீர ணமாமே 629

உண்ட உணவு எல்லாம் வாந்தியாகும். அழுகல் வாடையுடன் புளித்தேப்பம் உண்டாகும். வயிறு உப்பும். பேதியாகும். இரைச்சலுடன் புளிப்பாக பேதியாகும். முகம் கறுத்து உடல் வாடும். மயக்கம் உண்டாகும். புத்தி முன்பின் யோசிக்காது. மிகவும்வாதை செய்யும். வயிறு பிரட்டும். அதிக தண்ணீர் தாகமெடுக்கும். இவை விதூம அசீரணத்தின் குணங்களாகும்.

தூமஅசீரணம்

எய்தியதோர் புதார்த்தமது வேதுந் தக்கா
தெடுக்குமே யடிக்கடிக்கு வாந்தி தானும்
பெய்தியதோர் புளித்தேக்காம் வாயெ ரிக்கும்
பேரான வுதடோடு பிரட்டும் நாக்கு

கைதியதோர் கால்கையு முடலெ ரிக்கும்
கண்டத்தில் வியர்வையு மாய்க்காயம் வற்றும்
சைதியேதோ ரல்லிபோற்ற ளர்ச்சி யாகும்
சயித்தியமாந் தூமமென்ற வசீரணந் தானே 630

உண்ட உணவு ஏதும் தங்காமல் அடிக்கடி வாந்தி உண்டாகும். புளித்தேப்பம் உண்டாகி வாய் எரியும். உதடோடு நாக்கு ஆகியன கசந்து பிரட்டும். கைகால் உடல் ஆகியன எரியும். கழுத்தில் வியர்க்கும். உடல் வற்றும். அல்லி மலர்போல உடல் தளர்ச்சி அடையும். இவை தூம அதிசாரத்தின் குணங்களாகும்.

விற்பட்ட அசீரணம்

சயித்தியமாம் மிகவுழற்றுங் கோழை யாகும்
சடமெங்கும் வெண்மையாய்க் கண்ணுந் தாழும்
பயித்தியமாய் வாந்தியது வெளுப்பு மாகும்
பசிக்குமே யடிக்கடிக்கு நுரையாம் பேதி
உயித்தியமா யிருமலுடன் சுவாசந் தோணும்
உறுகின்ற துயரமாய்த் தலைபி ரட்டும்
வயித்தியந்தான் செய்தாலும் வசப்ப டாமல்
மறுக்குமே விற்பட்டவ சீரணந் தானே 631

அதிகம் உழற்றி கோழையுண்டாகும். உடல் முழுதும் வெண்மையாக வெளுத்து கண்கள் குழிவிழும். வாந்தி வெளுப்பாக இருக்கும். அடிக்கடி பசிக்கும். நுரைத்து பேதியாகும். இருமலுடன் சுவாசம் ஏற்படும். வலியுடன் தலையை பிரட்டும். மருத்துவம் செய்தாலும் மருந்துக்கு வசப்படாது. இவை விற்பட்ட அசீரணத்தின் குணங்களாகும்.

மிர்தசேட அசீரணம்

மறுக்குமே மனமறுத்து வாந்தி யாகும்
மயக்கமாய் மூர்ச்சையாய் வசக்கே டாகும்
கறுக்குமே நாக்கோடு கண்கள் மூக்கு
காயந்தானு லர்ந்துமேக றுத்துப் போகும்
வெறுக்குமே யன்னத்தை தண்ணீர் தேடும்
வெளுப்போடு கறுப்பாக பேதி யாகும்
உறுக்குமே கண்கள்தனை யுருட்டிப் பார்க்கும்
உதறுமே மிர்தசேடவ சீரணந் தானே 632

மனம் குமட்டி வாந்தியுண்டாகும். மயக்கத்துடன் மூர்ச்சை உண்டாகும். உடல் கெடும். நாக்கு, கண்கள், மூக்கு, உடல்

ஆகியன உலர்ந்து கறுத்துப் போகும். அதிக பசியும் தண்ணீர் தாகமுமெடுக்கும். கறுப்பும் வெளுப்புமாக பேதியாகும். கண்களை உருட்டி உருட்டிப் பார்க்கும். இவை மிர்தசேட அசீரணத்தின் பண்புகளாகும்.

சுழிவாதவிசூழி

தானான விசூழியது பிராதக் காலம்
    தனிலுதித் துவாதநாடி யுமிக் காகும்
வானான வயிறிரைந்து ஊதிக் கொள்ளும்
    மாசிலா மேனியது கறுப்பு மாகும்
கானான கண் விழிதான் திறந்தே நிற்கும்
    கருத்தெல்லாங் கலங்கியே காச்ச லாகும்
கோனான குடல்குமுறிப் பிரட்ட லாகும்
    கொடும்வாத விசூழியிட குணம தாமே 633

விசூழியானது அதிகாலையில் ஆரம்பிக்கும். வாதநாடி அதிகமாக நடக்கும். வயிறு இரைந்து ஊதிக் கொள்ளும். குற்றமில்லாத உடல் கறுத்துப் போகும். கண்விழி திறந்தே இருக்கும். மனம் கலங்கிப் போகும். காய்ச்சல் அடிக்கும். குடல் குமுறி பிரட்டலாகும். இவை வாதவிசூழியின் குணமாகும்.

பித்தவிசூழி

குணமாகப் பகற்போது குதிகொண் டோங்கித்
    கோபித்துப் பித்தநாடி யுமே மீறி
நிணமான நேருந்தன் னுடல முத்தும்
    நேரான மூர்ச்சைவிக்கல் நிறங்குன் றாது
வணமான வாய்பிதற்றி வாந்தி யாகி
    மயங்கியே கிடைகொடா தேபி ரட்டும்
பிணமான துபோலப்பி ரலா பிக்கும்
    பித்தமாம் விசூழியென்றே பேச லாமே 634

பகலில் நோயின் தன்மை அதிகமாகும். பித்தநாடி அதிகரித்து நடக்கும். உடலை அழுத்தும். மூர்ச்சை விக்கல் ஆகியன உண்டாகும். நிறம் குன்றாது. வாய் பிதற்றும். வாந்தி உண்டாகும். மயங்கி படுக்க விடாமல் பிரள வைக்கும். பிணமானதுபோல ஆலாபிப்பார்கள். இவை பித்த விசூழியின் குணங்களாகும்.

சேட்பவிசூழி

பேசவே நாடியது அடங்கிக் காணும்
பிறிந்திடு மேகங்குல்தனி லிரண்டாஞ் சாமம்
நாசவே உயிரதுவும் நாபிக் குள்ளாம்
நடைகொடா தேபிரட்டுங் கொறுக்கை வாங்கும்
மேசவே கண்விழிமே லாகித் தாமும்
மிடைபடா பேதிதண்ணீர் மோர்போற் சாய்க்கும்
தேசவே தேகமெங்கு மிகவெ ளுக்கும்
சேட்டுமமாம் விசூழியென்றே செப்பு வீரே 635

நாடி அடங்கி நடக்கும் அதிகாலை இரண்டாம் சாமத்தில் நோய் உதிக்கும், உயிரானது நாபிக்குள்ளிருப்பதுபோல மனதில் தோன்றும். நடக்க முடியாது. பிரள வைக்கும். காலில் கொறுக்கை பிடிக்கும். கண்விழிகள் மேலே நோக்கும் பேதியானது தண்ணீர் போல கழியும். தேகம் அதிகமாக வெளுக்கும். இவை சிலேத்தும விசூழியின் குணங்களாகும்.

செப்பவே கிராணிதா னிருபத் தைந்தின்
செய்தியெ லாந்தெளிவாகத் திறந்திட் டேன்யான்
ஒப்பவே சதாசிவன்றான் சொல்லக் கேட்டு
உகப்பான நாதாக்களு ரைகள் கேட்டு
தப்பிலா தன்வந்திரி சொல்லக் கேட்டுத்
தாயான பராபரையாள் சொல்லக் கேட்டு
உப்பவே யூகியென்ற முனியாம் யானே
உலகத்தோர் தாம்பிழைக்க உரைசெய் தேனே 636

கிராணிவகை இருபத்தைந்தின் குணங்களை எல்லாம் தெளிவாக உரைத்தேன். சிவன் சொன்னதைக் கேட்டு முனிவர்கள் தன்வந்திரிக்கு கூற, அதைக்கேட்டும், பார்வதி கூறியதைக் கேட்டு யூகிமுனியாகிய நான் உலகத்தோர்கள் பிழைக்கும்படி கூறினேன்.

சாத்தியம்

செய்திட்ட சாத்தியத்தை செப்பக் கேளாய்
சீரான வாதமொடு பித்தக்கி ராணி
உய்திட்ட ஊஷ்ணவாய்வு கிராணி யொடு
உயர்ந்த வற்றாவாய்வு மூலக்கி ராணி
செய்திட்ட கெர்ப்பமாங் கிராணி யோடு
கெடிவொட் டுக்கிராணி பித்தாதி சாரம்
வெய்திட்ட சுராதிசா த்தி னோடு
விதூரம மொடுதாமசீ ரணமுஞ் சாத்யம் 637

கிராணிகளில் சாத்தியத்தைக் கேட்பாயாக. வாத கிராணி, பித்த கிராணி, உஷ்ணவாயு கிராணி, வாய்வு கிராணி, மூலக் கிராணி,

ஓட்டுக் கிராணி, பித்த அதிசாரம், சுர அதிசாரம், தூம அசீரணம், விதூம அசீரணம் ஆகியவை சாத்தியமாகும்.

அசாத்தியம்

அசாத்தியமாங் கிராணியை யறியக் கேளாய்
அயமாம் சங்ராணியொடு தொந்தக் கிராணி
தசாத்தியமாஞ் சங்கிரகக் கிராணி யொடு
தனித்த வாதாதிசேட் பாதி சாரம்
துசாத்தியமாந் திரிதோஷம்சன் னிபாதி சாரம்
தோஷாதி சாரம் விற்பட் டவசீரணம்
மிசாத்யமா மிர்தசேடவா தபித்த விசூழி
மெலிசேட்ப விசூழியுமே வசாத்யந் தானே 638

அசாத்திய கிராணிவகைகளைக் கேட்பாயாக. சங்கிரகக் கிராணி, தொந்த கிராணி, வாதசிலேத்தும அதிசாரம், திரிதோஷ கிராணி, சன்னிபாத அதிசாரம், தோஷ அதிசாரம், விற்பட்ட அசீரணம், அமிர்தசேட அசீரணம், வாத விசூழி, பித்த விசூழி, சிலேத்தும விசூழி ஆகியவை அசாத்தியமாகும்.

கிராணி ரோக நிதானம் முற்றிற்று

மூலரோக நிதானம்

தானான மூலமது இருபத் தொன்றும்
சதாசிவன்றான் பராபரியாட் கருளிச் செய்ய
பானான பராபரியாள் நந்திதே வர்க்குப்
பாஷிக்க நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
கோனான தன்வந்திரிஅசு வினிக்குஞ் சொல்லக்
குணமான அசுவினியும் அகத்தியருக்குச் சொல்ல
ஆனான அகஸ்தியரும் புலஸ்தியருக்குச் சொல்ல
அவர்தானே தேரையருக் கருள்செய் தாரே. 639

மூலநோய் இருபத்தொன்றையும் சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அசுவினிக்கும், அசுவினி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும் புலத்தியர் தேரையருக்கும் கூறினார்கள்.

அருள்செய்தார் புலஸ்தியர்தான் தேரை யர்க்கு
ஆண்மையாந் தேரையமா முனிவன் றானும்
பொருள்செய்தார் யூகிமுனி யாமெ னக்குப்
போக்கெல்லாம் வகைவகையாப் பிரித்துச் சேர்த்து

தெருள்செய்த உலகத்தோர் பிழைக்க வென்று
சிவமான சித்தர்களைத் தொழுது கேட்டு
நருள் செய்துநலியாமற் பிழைக்க வென்று
நாட்டி னாயுருவே தத்தைத் தானே 640

புலத்தியர் தேரையருக்கு கூறியதை தேரையர் யூகிமுனியாகிய எனக்கு வகை வகையாகப் பிரித்துக் கூறினார். அவற்றை நான் உலகத்திலுள்ளவர்கள் பிழைக்கவேண்டி கூறினேன்.

தத்தையா மதிகமாங் குளிரி னாலும்
தரியாத தவழ்ச்சியாற் கிரந்தி யாலும்
புத்தையாம் பொருந்தாத உஷ்ணத் தாலும்
புணர்ச்சியாய் கோபத்தாற் சலிப்பி னாலும்
கத்தையாம் வெகுகாமம்வேண்ட லாலும்
கடினமா முப்பாலுங் காரத் தாலும்
மொத்தையாம் வெகுதனங்கள் போன தாலும்
மூலம்வந் துற்பத்தி முனையுந் தானே 641

அதிக குளிரினாலும், கிரந்தியினாலும், அதிக உஷ்ணத்தாலும், கோபத்தாலும், சலிப்பினாலும், அதிகம் காமம் கொள்வதாலும் அதிக காரமுள்ள உணவினாலும், செல்வம் அழிந்து போவதாலும் மூலம் உற்பத்தியாகும்.

முனையாக மூத்தோரை வைத லாலும்
மோசங்கள் பண்ணியே கற்ப ழித்தும்
நினையாக நினைவிலொன்று வாக்கிலொன்றும்
நேர்ந்தபடி சொல்கின்ற நிட்டூ ரர்க்கும்
பனையாகப் பரதேசி பந்து வானோர்
பசித்திருக்க வுண்டதோர் பாத கர்க்கும்
தனையாகச் சமாதானந் தவிர்க்கின் றோர்க்கும்
சண்டாள மூலம்வந்து சனிக்குந் தானே 642

வயதில் பெரியவர்களை திட்டுவதாலும், மோசங்கள் செய்வதாலும், கற்பழிப்பதாலும், மனதில்ஒன்றும் வெளியில்ஒன்றும் பேசுவதாலும், வழிப்போக்கர் பசித்திருக்க தான் உண்பதாலும் சமாதானத்தை தவிர்க்கின்றவர்களுக்கும், மூலம் உண்டாகும்.

மூலப்பெயர்கள்

சனிப்பான மூலத்தின் பெயரே தென்னில்
சமரசமாம் நிர்மூலஞ் செண்டு மூலம்
முனிப்பான முளைமூலஞ் சிற்று மூலம்
மூர்க்கமாம் வரள்மூலம் ரத்த மூலம்

தினிப்பான சீமூல மாழி மூலம்
திணியான தமரக மாமூலத் தோடு
வனிப்பான வாதமொடு பித்த மூலம்
வகையான சேட்டுமத்தின் மூல மாமே 643

மூலத்தின் பெயர்கள் கூறுகிறேன் கேட்பீராக. நீர்மூலம், செண்டுமூலம், முளைமூலம், சிற்று மூலம், வரள் மூலம், இரத்த மூலம், ஆழி மூலம் தமரக மூலம், வாத மூலம், பித்த மூலம், கப மூலம் ஆகியவற்றோடு.

வகையாகுந் தொந்தமா மூலத் தோடு
வளர்கின்ற வினைமூலம் மேக மூலம்
பகையாகும் பவுத்திர மாமூலத் தோடு
படர்கிரந்தி மூலமொடு குதயா மூலம்
புகையாகும் புறமூலஞ் சுருக்கு மூலம்
பொருகின்ற சவ்வாகு மூலத் தோடு
துகையாகு மூலந்தானி ருபத் தொன்றும்
சூட்சுமா யிதினுடய சுரூபங் கேளே 644

தொந்த மூலம், வினைமூலம், மேகமூலம், பவுத்திரமூலம், கிரந்தி மூலம், குத மூலம், புறமூலம், சுருக்கு மூலம், சவ்வு மூலம் ஆகியவற்றோடு இருபத்தியொரு மூலமாகும். இனி அவற்றின் குணங்களைக் கேட்பாயாக.

நீர்மூலம்

சுருபங்கேள் தொப்புளிலே மிகவ லித்துச்
சுருண்டுமே கீழ்வயிற்றைப் பொருமிக் கொண்டு
வருபங்கேள் மலம்வறண்டு வாய்நீ ரூறும்
வாய்வுதான் பரிகையிலே நுரைபோற் காணும்
துருபங்கேள் பிடவைதனிற் றோய்வு மாகும்
சுருக்காக மலம்வருதல் போலி றுக்கும்
நிருபங்கேள டிக்கடிக்கு நீராய்ப் போகும்
நிலையான நீர்மூலம்நி னைவாய்ப் பாரே 645

தொப்புளில் மிகவும் வலிக்கும். கீழ்வயிற்றை சுருட்டி பொருமிக்கொள்ளும். மலம்வறண்டு போகும். வாயில் நீர் ஊறும். வாய்வு பிரிகையில் நுரைபோல காணும், துணிகளில் படும். மலம் வருவதுபோலிருக்கும். அடிக்கடி சிறுநீர் போகும்.

செண்டு மூலம்

நினைவாகக் கருணையிட முளையே போல
நிமிர்த்தெழுந்து நாள்மூன்று நிற்ப மாகி
கனவாகக் கன்றியேமி கவ லிக்கும்
காரந்தான் போட்டவுடன் களையாய் வீழும்
இனவாக இரத்தமொடு தண்ணீர் காணும்
இறுகியே மலந்தீயு மிரைச்ச லாகும்
தினவாக வாசனத்தைச் சுருக்கிக் கொள்ளும்
செயசெண்டு மூலத்தின் றிறமை தானே 646

கருணைக்கிழங்கின் முளைபோல எழுந்து மூன்று நாளில் கன்றிப்போய் வலிக்கும். காரசிகிச்சை செய்தால் அற்று விழுந்து விடும். இரத்தமும் தண்ணீரும் வரும். மலம் இறுகிப்போகும் இரைச்சலுண்டாகும். ஆசனவாயை சுருக்கிக் கொள்ளும். இவை செண்டு மூலத்தின் குணங்களாகும்.

முளைமூலம்

திறமாக வாசனத்திற் கடுப்பு முண்டாம்
திரட்சியாய் தடித்தெரிவு செயலுங் காணும்
அறமாக வடிவயிறு கல்லு போலாம்
ஆசனந்தான் மிகச்சுருங்கித் தினவு முண்டாம்
குறமாகக் குதிகொள்ள ரத்தப்பீ ரிறங்கும்
கூசாத இரைச்சல்மிக வெப்ப முண்டாம்
மறமாக மஞ்சள்முளை போலெ ழும்பும்
மலந்தீயு முளைமூல வண்மை தானே 647

ஆசனத்தில் கடுப்புண்டாகும். ஆசனம் தடித்து திரட்சியாகி எரிவுண்டாகும். அடிவயிறு கல்போலாகும். ஆசனவாய் மிகச்சுருங்கி தினவெடுக்கும். உட்கார்ந்தால் இரத்தம் பீறிடும். இரைச்சல் அதிகமுண்டாகும். ஏப்பம் அதிகமாகும், மஞ்சள் முளைபோல கட்டி எழும்பும். மலம் தீய்ந்துபோகும். இவை முளை மூலத்தில் குணங்களாகும்.

சிற்று மூலம்

வண்மையா யுடம்பெரியும் மயக்க மாகும்
வயிறுதான் பளபளென்னும் வலுவாய் குற்றும்
இண்மையாய் குறுகுறென்றே இரைச்ச லாகும்
இசிவுடனே பொருமலாயி ளைப்பு மாகும்

திண்மையாய்ச் சித்துமுளை பலவுண் டாகும்
தேகமெங்கும் வெளுப்பாகுஞ் செயலுங் காணும்
வெண்மையாய் வெளுத்துமே பசியி ராது
மேனி கண்ணுஞ் சிற்றுமுளை மிடுக்குந் தானே 648

உடல் எரியும், மயக்க முண்டாகும், வயிறு பளபளக்கும் குத்தலெடுக்கும் குறுகுறென்று இரைச்சலாகும். இசிவுடன் பொருமலும் இளைப்பும் உண்டாகும். சிறிய முளைகள் பல உண்டாகும். தேகம் முழுதும் வெளுத்து காணப்படும், பசி இருக்காது. மேனி கன்னிப்போகும். இவை சிற்றுமுளை மூலத்தின் குணங்களாகும்.

வரள் மூலம்

மிடுக்காக மலத்தையே யிறுக்கிக் கொள்ளும்
மிகுவாக ரத்தமது துளியாய் வீழும்
அடுக்காகச் சடமுலர்த்தி யழல் கழிக்கும்
ஆண்மைதான் மிகப்பேசிச் சண்டை கொள்ளும்
உடுக்காக வுள்ளிருக்கு முளைகள் தானும்
ஒருவருக்குந் தெரியாது ஒடுக்கி வைக்கும்
திடுக்காக நாள்தனிலே பெலன் குறைக்கும்
செயலழிக்கும் வரள்மூலச் சேதி தானே 649

மலம் இறுகிக் காணப்படும். இரத்தம் துளித்துளியாய் விழும். சடம் உலர்ந்து அலைக்கழிக்கும். மிகவும் பேசி சண்டையிட வைக்கும். நாள் ஆக ஆக பலம் குறையும். இவை வரள்மூலத்தின் குணங்களாகும்.

இரத்த மூலம்

சேதியாய் தொப்புள்தனில் வலித்து நொந்து
சிறுகதிர் போற்பீறிட்டு ரத்தம் வீழும்
மேதியாய் மேனிவற்றி வெளுத்துப் போகும்
மிகக் கைகாலசந்துமே சோபை யாகும்
மாதியாய் மார்பிளக்குந் தலைநோ வுண்டாம்
மயக்கந்தான் மிகுதியாய்த் தள்ளிப் போடும்
நாதியாய் கண்ணிரண்டு மஞ்சள் போலாம்
நலியு மிரத்த மூலத்தின் நண்புதானே. 650

தொப்புளில் வலித்து கதிர்போல இரத்தம் பீறிட்டு ஊற்றும். மேனிவற்றி வெளுத்துப் போகும். கைகால்கள் அசந்துபோகும். சோபையுண்டாகும். மார்பை பிளக்கும் தலைநோவுண்டாகும். மயக்கம் அதிகமாகி கீழே தள்ளும் கண்கள் மஞ்சள் போலாகும். இவை இரத்த மூலத்தின் குணங்களாகும்.

சீமுலம்

நண்பாகக் குதங்கடுத்து எரிப்பு தோன்றும்
நாற்றியே சீயொடு தண்ணீர் காணும்
மண்பாக மாமிசங்கள் கரைந்து கொண்டு
வடிவமெல்லாம் வெளுத்துமே மஞ்சளாகும்
மெண்பாக மேவும்வாய் நீர தாகும்
மிடுக்கான நடைகுறையு மெலிவு மாகும்
திண்பாகச் சிறுநீர்தான் மஞ்ச ளிக்கும்
சீமுலந் தன்னுடைய சேதி யாமே 651

குதம் கடுத்து எரிச்சல் தோன்றும். நாற்றத்துடன் சீழும் தண்ணீரும் தோன்றும். சதை கரைந்து வரும் உடல், வெளுத்து மஞ்சளாகும். வாயில் நீர் அதிகமாகும், நடை குறையும் உடல் மெலியும் சிறுநீர் மஞ்சளாகச் செல்லும். இவை சீழ்மூலத்தின் குணங்களாகும்.

ஆழிமூலம்

சேதியாய் நீண்ட வள்ளிக் கிழங்கு போலத்
திமிர்ந்துமே யேகமுளை யாகக் காணும்
நீதியாய் நீரோடுஞ் சீயுமி ரத்தம்
நிரனிறை யாய்த்தோன்றி யேமலமுஞ் சிக்கும்
காதியாய் காரங்கள் ஏற்றி டாது
கடிய பலவீனமாந் தேகந் தானும்
ஆதியாம் அசத்ததனை பொறுத்துக் கொல்லும்
ஆழிமூ லத்தினிட ஆண்மை தானே 652

நீண்ட மரவள்ளிக் கிழங்குபோல ஒரே முனையாகக் காணப்படும். நீரும், சீழும், இரத்தமும் காணப்படும். மலம் சிக்கும். காரமான உணவு ஏற்றுக்கொள்ளாது. தேகம் பலவீன மடையும். நீண்ட நாள் கழித்து மரணம் சம்பவிக்கும். இவை ஆழிமுலத்தின் குணங்களாகும்.

தமரக மூலம்

மூலமாம் பவனத்திலு லக்கைப் பூண்போல்
முதிர்ந்த தாமரைப்பூ போலலர்ந் திருக்கும்
நூலமாம் நொறுக்காகம லமுங் காணும்
நுணுக் கேறி யிரத்தமொடு திணவு முண்டாம்
வாலமாய் வயிறிரைந்து நீராய்ப் போகும்
வயிறூதிப் பசியில்லா மந்தங் காணும்
தாலமா மேல்மூச்சாய் அசதி யுண்டாம்
தமரக மாமூலத்தின் றன்மை தானே 653

அபானத்தில் உலக்கைபோலவும், முற்றிய தாமரைப்பூ போலவும் முளையிருக்கும். மலம் காணப்படும். இரத்தம் கசியும், தினவேற்படும். வயிறு இரைந்து நீராய் மலம்போகும். வயிறு ஊதி பசியில்லாமல் மந்தமாய் காணப்படும். மேல் மூச்சுண்டாகி அசதியேற்படும். இவை தமரக மூலத்தின் குணங்களாகும்.

வாதமூலம்

தன்மை கோவைப்பழம்போற் குதம்சி வப்புத்
தனிலடப் பம்பூப்போல முளை வளர்ந்து
கண்மை கறுப்பாய்மி ருதுவா யிருக்கும்
கடுப்போடு தினவுகுற்றல் திமிர்த்த லாகும்
வண்மை மயிர்தான்முளைத்து மலஞ்சிக் கென்று
மகத்தாகக் கறுத்துமெத்த திரண்டு காணும்
வெண்மை வயிற்விட்டுமே குடலுள் வலியாகும்
மிக்க தலைவலிவாத மூல மாமே 654

குதம் கோவைப்பழம்போல சிவந்து காணப்படும். அடப்பம்பூ போல முளைவளர்ந்து கருப்பாய் மிருதுவாக இருக்கும். கடுப்பு, தினவு, குத்தல், திமிர்த்தல் ஆகியன உண்டாகும். அபானத்தில் அதிக மயிர் முளைக்கும். மலம் சிக்கி கறுத்து அதிகம் திரண்டு இருக்கும். வயிற்றில் குடலுக்குள் வலியெடுக்கும். அதிக தலைவலியுண்டாகும். இது வாதமூலத்தின் குணமாகும்.

பித்தமூலம்

தலைவலிதான் மிகவுண்டாம்ப ருத்திக் கொட்டை
தன்போலு நெற்போலுமு ளையுண் டாகும்
மலைவலியாய் மலஞ்சிக்கி உருண்டு ருண்டு
மாவுண்டை திரிதிரியாய் ரத்தஞ் சீயாய்
குலவலியாய் குதங்கடுத்து எரிவு மாகிக்
கூச்சமாய் தாகமொடு வியர்வை யாகும்
தலைவலியா யத்துயக்குமாய்க் கோப மாகும்
சொற்பல வீனமும்பித்த மூல மாமே 655

தலைவலி அதிகம் உண்டாகும். பருத்திக்கொட்டை போலவும், நெல்போலவும் முளையுண்டாகும். மலம் சிக்கி உருண்டு உருண்டு, மாவுண்டைபோல திரிதிரியாய் இரத்தமும் சீழும் கலந்து போகும். குதம் கடுத்து எரிவுண்டாகும். தாகமுடன் வியர்வை உண்டாகும், கோபமுண்டாகும். பலவீனமடையச் செய்யும். இவை பித்த மூலத்தின் குணங்களாகும்.

சிலேத்தும மூலம்

ஈனமாங் குதத்தில்முளை வெள்ளை யாகும்
எந்நேரந்தி னவதிக மெரிவு மாகும்
கானமாங் கடுப்புடனே சீயுந் தண்ணீர்
கனமான வலியாகி மலந்தா னோங்கும்
தூனமா மூத்திரந்தான் சூடுண் டாகும்
சொற்குண பேதகமாகுந் தாது நஷ்டம்
பானமாம் பாண்டுவொடு அருசி யாகும்
பரவு சேட்டுமமூலப் பாங்கு தானே 656

குதத்தில் வெள்ளை நிறத்தில் முளையுண்டாகும். எந்த நேரமும் அதிக எரிவுண்டாகும். கடுப்புடன் சீழும் தண்ணீரும் சேர்ந்து வெளிவரும். அதிக வலியுடன் மலம் வெளிவரும். சிறுநீர் அதிக சூட்டுடன் வெளிவரும். குணம் கேடடையும். தாது நட்டமுண்டாகும். பாண்டுநோயுண்டாகும். சுவை தெரியாது. இவை சிலேத்தும மூலத்தின் குணங்களாகும்.

தொந்த மூலம்

பாங்கான குதமிறுகிக் கோழிச் சூடு
பதித்ததுபோற் றானிருக்கும் நடக்க வொட்டா
வாங்கான வயிறுமெத்தப் பொரும லாகும்
வருத்தமொடு வியர்த்துமே மிக நடுக்கும்
தாங்கான தவித்துமே தாக மாகும்
தரியாமல் வயிறதுவும் பேதி யாகும்
தீங்கான செடமட்டை போற்சு ருக்கும்
திடுக்குமே தொந்தமென்ற மூலந் தானே 657

குதம் இறுகிக் கோழியில் சூடு இருப்பதைப்போல் சூடாயிருக்கும். நடக்க இயலாது. வயிறு மிகவும் பொருமலுடன் கா்ணப்படும். அதிக வியர்வையுடன் மிகவும் நடுக்கமுண்டாகும். தாகமதிகமெடுக்கும். வயிறு பேதியாகும் உடல் அட்டைபோல் சுருங்கிப்போகும். இவை தொந்த மூலத்தின் குணங்களாகும்.

வினைமூலம்

திடுக்கிட்டுச் சோறுசெரி யாமை யாகும்
தீபனந்தா னில்லாமற்பி ளித்தே க்காகும்
அடுக்கிட்ட அடிவயிற்றிற் குற்ற லுண்டாம்
ஆங்காரக் கோபமொடு மலமுங் கட்டும்
கடுக்கிட்ட கைகாலு மோச்ச லாகும்
கனமாக வயிறிரைந்து காந்த லுண்டாம்
வெடுக்கிட்டு நரம்பெல்லா மிசிவு மாகும்
மிகக்கடுக்கும் வினைமூல விபரந் தானே 658

திடுக்கிட வைக்கும். சோறுசெரியாது. புளித்தேப்ப முண்டாகும். அடிவயிற்றில் குத்தலுண்டாகும். கோபத்துடன் மலமும் கட்டும், கைகால் ஓச்சலாகும். வயிறு இரைந்து காந்தலுண்டாகும். நரம்பெல்லாம் வலிப்பு தோன்றும். இவை வினைமூலத்தின் குணங்களாகும்.

மேக மூலம்

வினையாக லிங்கத்தில் வெள்ளை யூற்றும்
மெத்தவாய்க் குதந்தன்னி லுதிரஞ் சாய்க்கும்
சனையாகச் சத்தமதாய்க் கழிச்ச லாகும்
தாக்கான சிறுநீரு மெரிச்ச லாகும்
பனையாகப் படுக்குங்கால் தலைவலிக்கும்
பாரமா யுடம்பெங்குந் திமிருண் டாகும்
முனையாக மூத்திரந்தான் மதுர மாகும்
மூர்க்கமா மேகமென்ற மூலந் தானே 659

ஆண்குறியிலிருந்து வெள்ளை ஒழுகும். குதத்திலிருந்து இரத்தம் ஒழுகும். சப்தத்துடன் கழிச்சலுண்டாகும். சிறுநீர் எரிச்சல் தரும். தலை வலிக்கும். உடல் எங்கும் திமிர்த்துப் போகும். சிறுநீர் இனிப்புச் சுவையுடன் காணப்படும். இவை மேக மூலத்தின் குணங்களாகும்.

பவுத்திர மூலம்

மூர்க்கமாய்ப் பவுத்திரத்திற் கட்டி யாகி
மூத்திரந் தானடிக்கடிக்கு அருவ லாகும்
கார்த்தமாங் கால்கையுங் கனப்பு மாகும்
கனகனக்குங் குதங்குய்யஞ் சாவற் சூடு
பூர்க்கமாம் பூப்போல முளைகள் காணும்
பொருங்கோ வைப்பழம் போலச் சிவப்பு மாகும்
பார்க்கமாங் காரந்தான் போடத் தீரும்
பவுத்திரமா மூலத்தின் பண்பு தானே 660

பவுத்திரத்தில் கட்டியுண்டாகும். அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரிடும். கால்கை கனப்புண்டாகும். குதம் குய்யம் இவற்றில் கோழியைப் போல சூடு இருந்துகொண்டே இருக்கும். மாம்பூபோல முளைகள் காணப்படும். கோவைப்பழம் போல அவை சிவந்து காணப்படும். காரசிகிச்சை மேற்கொள்ள தீரும். இவை பவுத்திர மூலத்தின் குணங்களாகும்.

கிரந்தி மூலம்

பண்புதான் லிங்கத்திற் புண்ணு மாகும்
பாரமாய்க் கால்கையுங்க டுப்பு முண்டாம்
குண்பதாக் குதத்துக்குள் விரண மாகிக்
கொடிக் கொடியாய் முளையுண்டாகிச் சீயும் ரத்தம்
தண்புதான் தண்ணீரும் பெருக வுண்டாம்
தணல்போல எரிவோடு கடுப்பு மாகும்
கெண்புதான் கெட்டியாய் மலம் வறண்டு
கீற்றாக வெடித்திறங்கு கிரந்தி மூலம் 661

ஆண்குறியில் புண்ணாகும். கால் கை கடுப்புண்டாகும். குதத்துக்குள் புண்ணாகவிருக்கும். கொடிக்கொடியாய் முளையுண்டாகி சீழும் இரத்தமும் துர்நீரும் வெளியாகும். தீபோல எரிச்சல் தரும். கடுப்புண்டாகும். மலம் கெட்டியாக வறண்டு காணப்படும். மலத்துவரம் கீற்று கீற்றாக வெடித்து இருக்கும். இவை கிரந்தி மூலத்தின் குணங்களாகும்.

குதமூலம்

இறங்குமே மூங்கிலிடக் குருத்து போல
இழுத்துமே தள்ளிடிலோ வுள்ளே போகும்
பிறங்குமே சீயோடு ரத்தம் பாயும்
பெருகியே வயிறுமெத்தக் கனத்துக் கொள்ளும்
அறங்குமே கால்கையும தைப்பு மாகும்
அடிக்கடிக் குநாவரண்டு தண்ணீர் தேடும்
குறங்குமே மிகவலிக்குங் கோப முண்டாம்
கொடியகுத மூலத்தின்கு ணம தாமே 662

மூங்கில் குருத்துபோல முளை இறங்கும். உள்ளே தள்ளிவிட்டால் உள்ளே போய்விடும். சீழோடு இரத்தம் பாயும். வயிறு அதிகமாக கனத்துக் கொள்ளும். கால் கை அதப்பு தரும். அடிக்கடி நாவறண்டு தண்ணீர் குடிக்கவேண்டியிருக்கும். பிட்டம் அதிகம் வலிக்கும். கோபமுண்டாகும். இவை குதமூலத்தின் குணமாகும்.

புறமூலம்

குணமதா யெண்ணெய்போற் றண்ணீர் போலும்
கூற்றான கடுப்போடு சீயு முண்டாம்
திணமதாய்த் தினவெடுக்குந் திமிர்ப்புண் டாகும்
சிறுசிரங்காய் மேலெல்லாஞ் சொறியு மாகும்

பணமதாயா சனத்திற்ப குப்பு போலப்
பாங்காக விதனமாய்ப் படுக்கை கூடா
பிணமதாய் முகமெல்லாம் வாட்ட முண்டாம்
பேரான புறமூலப் புதுமை தானே 663

குதத்தில் எண்ணெய் போலவும், தண்ணீர் போலவும் வடியும் கடுப்புடன் சீழ் வடியும். தினவு எடுக்கும், திமிர்வுண்டாகும். சிறுசிறு சிரங்காக மேலெல்லாம் சொறியுண்டாகும். ஆசனத்தில் சிறு சிறு கட்டிகள் தோன்றியிருக்கும். பருக்கவிடாது, முகம் வாட்டமடையும். இவை புறமூலத்தின் குணங்களாகும்.

சுருக்குமூலம்

புதுமையா யாசனத்தைச் சுருக்கிக் கொண்டு
பெருங்குடலில் வலியோடு பொரும லாகும்
கதுமையாய் குதந்தன்னிற் றடிப்புண் டாகும்
கழலுமே தண்ணீரும் ரத்தந் தானும்
வெதுமையாய் வெவ்வனல்போ லழன்று காணும்
வேற்றுடம்பாய்த் தான்வெளுத்து வெறிப்புண் டாகும்
பதுமைபோல் தேகமெங்கு மசவு கூடாப்
பண்பான சுருக்கென்ற மூலந் தானே 664

ஆசனவாயினை சுருக்கிக்கொள்ளும் பெருங்குடலில் வலியுடன் பொருமலேற்படும். குதத்தில் தடிப்புண்டாகும். தண்ணீரும் இரத்தமுமாய் வரும். அனல்போல அழன்று காணப்படும். உடல் வெளுத்து வெறிப்புண்டாகும். தேகம் முழுதும் அசைக்க முடியாது போகும். இவை சுருக்கு மூலத்தின் குணங்களாகும்.

சவ்வுமூலம்

சுருக்கியே முதுகுத்தண்டி லூற்ப வித்துத்
தொப்புளிலே தாமரைப்பூப் போல மலர்ந்து
அருக்கியே குற்றிலா கார மாக்கி
அடிவயிற்றி லோங்குமே மூல ரோகம்
சொருக்கியே சவ்வுபோலா சனத்திலே
சுற்றியே நின்றுதான் சீயுந் தண்ணீர்
பருக்கியே கசிவாகு மெந்நே ரந்தான்
பண்பான சவ்வாகு மூலந் தானே 665

முதுகுத் தண்டில் ஆரம்பித்து தொப்புள்வரை தாமரைப்பூ போல மலர்ந்து காரத்துடன் அடிவயிற்றில் வலியுண்டாகும்.

ஆசனவாயில் சவ்வுபோல உண்டாகும். எந்நேரமும் சீழும் கெட்டநீரும் கசியும். இவை சவ்வுமூலத்தின் குணங்களாகும்.

சாத்தியம்

தானென்ற மூலத்தி லசாத்தி யந்தான்
சாதகமாய் நீர்மூலமு ளைமூ லந்தான்
வானென்ற வரள்மூலம் இரத்த மூலம்
வாதமா மூலந்தான் பித்த மூலம்
வேனென்ற மேகமா மூலத் தோடு
விளைப வுத்ரமூலமாங் கிரந்தி மூலம்
பேனென்ற புறமூலஞ் சுருக்கு மூலம்
பெருகு சவ்வுமூலம துசாத்ய மாமே 666

மூலவகைகளில் நீர்மூலம், வரள்மூலம், இரத்த மூலம், வாதமூலம், பித்தமூலம், மேகமூலம், பவுத்ர மூலம், கிரந்திமூலம், புறமூலம், சுருக்குமூலம், சவ்வுமூலம் ஆகியவை சாத்தியமாகும்.

அசாத்தியம்

ஆமென்ற வசாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
அழிவு செண்டுமூலமாஞ் சிற்று மூலம்
தேமென்ற சீமுல மாழி மூலம்
திணிவான தமரகமா மூலத் தோடு
வேமென்ற வினைமூலஞ் சேட்பமூலம்
மிளிர்கின்ற குதைமூலந் தொந்த மூலம்
ஓமென்ற ஒன்பதும சாத்தி யந்தான்
உறுதியாய் மூலத்தி னுண்மை தானே 667

மூலநோயில் அசாத்தியத்தை கேட்பாயாக. செண்டுமூலம், சிற்றுமூலம், சீமூலம், ஆழிமூலம், தமரகமூலம், வினைமூலம் சிலேத்தும மூலம், குதமூலம், தொந்தமூலம் ஆகிய ஒன்பதும் அசாத்தியமாகும்.

உண்மையா மூலத்தினு றுதி தன்னை
உகந்துமே சிவனுமை யாட்குப தேசிக்கத்
தன்மையாய் உமைநந்தி தனக்குச் சொல்லத்
தயாநிதியாம் நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
விண்மையாய்த் தன்வந்திரிவிசுவினிக்குச் சொல்ல
விசுவினி யுமசுவினிக்கு விபரங் கூற
அண்மையா யசுவினிய கத்திய ருக்கு
அருள் செய்யவகத் தியரும டக்கினாரே 668

மூலநோயை குறித்து சிவன் பார்வதிக்கு கூறினார். பார்வதியோ நந்திக்கும், நந்தி தன்வந்திரிக்கும் தன்வந்திரி விசுவினிக்கும், விசுவினி அசுவினிக்கும், அசுவனி அகத்தியருக்கும் கூற அகத்தியர் அவற்றை தம்மகத்தே அடக்கி வைத்துக் கொண்டார்.

அடக்கியே புலத்திய ருக்கநுக் ரகிக்க
அன்புடனே புலத்தியருந் தேரையமா முனிக்கு
மடக்கியே போதிக்கத்தே ரையமா முனியும்
மகத்தான யூகியாம் எனக்கு ரைக்க
உடக்கியே உள்ளபடி முழுது மாய்ந்து
உபகார மாகவேஉ லகத் தோர்க்கு
வடக்கியே வடமொழியி னுரையைத் தேர்ந்து
மகத்தான கவிதை செய்தேன் தமிழிற் றானே 669

அடக்கி வைத்ததை அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரையருக்கும் கூற தேரையர் யூகிமுனியான எனக்கு கூறினார். அதனை முழுவதும் ஆராய்ந்து இவ்வுலகுக்கு கூறியுள்ளேன். வடமொழியில் உள்ளதை ஆராய்ந்து தமிழில் பாடியுள்ளேன்.

மூலரோக நிதானம் முற்றிற்று

க்ஷயரோக நிதானம்

தானான சயமதுதான் பனிரெண் டாகும்
தாக்கான பிர்மமென்று சயந்தா னொன்று
வானான ராஜசயம்வை சியசயந்தான்
மருவு சூத்திரசயந் தான்வாத சயமாகும்
பூனான பித்தசயம் சேட்பத் தோடு
பிரண்டதோர் வாதபித்த சயமு மாகும்
தானான வாதசேட்டு மசயந்தான்
கரும்பித்த சேட்டுமத்தின் சயமு மாமே 670

சயம் பனிரெண்டாகும். பிரம்மசயம், இராஜசயம், வைசிய சயம், சூத்திரசயம், வாதசயம், பித்தசயம், சிலேத்துமசயம், வாதபித்த சயம், வாதசிலேத்தும சயம், பித்தசிலேத்தும சயம் ஆகியவற்றோடு

ஆகின்ற விகாரசய தொந்த சயந்தான்
அடங்கலுமை பனிரண்டு விதமு மாகும்
வேகின்ற கஞ்சாவால் மிகுந்த வுப்பால்
மீறியதோர் காரத்தால் மிகமயக்கால்

தோகின்ற மருந்தீட்டாற் சுனையி நீரால்
ருசியில்லாப் பதார்த்தங்கள் சுக்கான் றண்ணீர்
வாகின்ற வக்கினியால் மிகுந்த வெய்யில்
வருத்தத்தில் சயரோக மருவுங் காணே 671

விகாரசயம், தொந்தசயம் என்று மொத்தம் பன்னிரெண்டு வகை சயங்களாகும். கஞ்சா, அதிகவுவப்பு, அதிக காரத்தால், மருந்தீட்டினால், சுனைநீரால், ருசியில்லா பதார்தங்களால், சுக்கான் தண்ணீரால், அதிகதீ, அதிகவெய்யில் ஆகியவற்றால் சயரோகம் உண்டாகும்.

காணவே கற்பழித்தல் பொய்யே சொல்லல்
களவாடல் பிறர்பொருளைக் கண்டா சித்தல்
ஆணவே யடுத்தோரைக் கெடநி னைத்தல்
அகதி பரதேசியரையகந்தை சொல்லல்
ஊணவே பந்துவைவஞ் சித்தே யுண்ணல்
உதாசினமா இகழ்ந்தோரை இகழ்ச்சி பேசல்
வேணவே காதினிற் கேளாத சொல்லை
மிகச்சொன்னோர் சயத்தில் வந்து மெலிகு வாரே 672

கற்பழித்தல், பொய்கூறல், களவுசெய்தல், பிறர்பொருளை யாசித்தல், அடுத்தவர்க்கு கேடு நினைப்பது, அகதிகள் பரதேசிகள் ஆகியோரை அகந்தையால் விரட்டுதல், உற்றார் உறவினர்களை வஞ்சனை செய்து வாழ்தல், தம்மை இகழ்பவரை அதிகம் இகழ்தல். காதில் கேட்ககூடாத சொற்களை கூறல் ஆகிய செயல்களைச் செய்பவர்களுக்கு சயம் வந்து சேரும்.

பிரம்மசயம்

மெலிவாகி இருமலொடு கண்க லங்கல்
மிகத் தண்ணீர்போலவே சேட்பங் காணல்
நலிவாகிக் கோழையொடு இரத்த முண்டாய்
நலமான அக்கினிதான் மிகவே தாழும்
கலிவாகிக் கண்ணினொடு உதிர மாழ்கிக்
காச்சலது எந்நேரங் கலக்க மாகும்
மலியாகிய ரூசியோடு சத்தி யாதல்
மறையவனாம் சயமென்று மதித்தி டாயே 673

இருமல் உண்டாகும். கண்கலங்கும் கபமானது தண்ணீரு போல காணப்படும். கோழையுடன் இரத்த முண்டாகும். உடல் சூடு மிகவும் தாழும். கண்கள் சிவந்துவிடும். காய்ச்சல் எந்நேரமும் அடிக்கும். சுவையின்மை உண்டாகும். வாந்தியுண்டாகும். இவை பிரம்ம சயத்தின் குணங்களாகும்.

இராஜசயம்

மதித்திட்ட வெதுப்பினோடு தலைநோ வுண்டாய்
மார்நெஞ்சில் நோவுண்டாய் சிலேட்பந் தோன்றும்
குதித்திட்ட மஞ்சள்போற் கோழை காணும்
கொடிதான மிணறழன் றெரிந்து நோவாம்
அதித்திட்ட வரிகுரலாய் திரிகை செய்தல்
அங்கமெல்லா மிகநொந்து அனலாய்க் காணல்
சதித்திட்ட இருமலொடு சத்தி யுண்டாம்
சத்திரிய சயமென்று சாற்ற லாமே 674

உடல் வெதும்பி தலைநோகும் மார்பில் வலியுண்டாகும். கபம் உண்டாகும். மஞ்சளாக கோழையுண்டாகும். தொண்டை எரிந்து வலிக்கும். குரல்கம்மும் அங்கும் இங்கும் அலைதல் அங்கம் எல்லாம் அனலாகவிருக்கும் இருமலுடன் வாந்தியுண்டாகும். இவை சத்திரிய சயத்துக்கு உள்ள குணங்கள்.

வைசிய சயம்

சாற்றவே கையோடு காலு மோய்ந்து
தாக்கான வெயில்காணிற் கடுவி ஷம்போல்
வேர்த்துமே வெதும்பலாய் காச்சல் காணும்
மிக்கான இருமலொடு கோழை யுண்டாம்
பாத்தவே பருத்திபோ லுடல்வெ ளுத்துப்
பருகிய தோரசனாமிகத் தானுஞ் செல்லா
ஆற்றவே யாறாண்டி லதிக மாகும்
அறிந்து ரைத்தவைசியனாம் சயந்தா னாமே 675

கைகால் ஒய்ந்துபோகும் வெயில்பட்டவுடன் விஷமேறுவதுபோல காய்ச்சல் அதிகமாகும். இருமலுடன் கோழையுண்டாகும். பருத்திபோல உடல் வெளுத்துப் போகும். உண்ட உணவு செரிக்காது. ஆறு ஆண்டுகளில் அதிகமாகும். இவை வைசிய சயத்தின் குணங்களாகும்.

சூத்திரசயம்

ஆமேதான் கண்ணழன்று நீர் குளிர்ந்து பாய்ந்து
அடிக்கடி தானிருமியே மிடறு புண்ணாம்
வேமேதான் மிகவழன்று வெதுப்புண் டாகும்
விடிகிற நேரந்தன்னில் நளிருஞ் சற்றே
வாமேதான் மயிர்க்கூச்ச மயக்க மாகும்
மகத்தான வலியுண்டாயு டல்தான் வேர்க்கும்
தாமேநல் லோராண் டிலீராண் டிற் கொல்லும்
வலிசூத்ர சயமென்றே நாட்ட லாமே 676

கண்கள் அழன்று நீர் வடியும் உடல் குளிர்ந்து காணப்படும். அடிக்கடி இருமலுண்டாகும். தொண்டை புண்ணாகும். அகவும் சுழன்று வெதும்பலுண்டாகும். விடிகின்ற நேரத்தில் குளிர்ந்து நடுக்கமுண்டாகும். வலியுண்டாகி உடல் வேர்க்கும், மயிர்கூச்சமுண்டாகும். மயக்கமேற்படும். ஓரிரு ஆண்டுகளில் மரணம் ஏற்படும். இவை சூத்ர சயத்தின் குணங்களாகும்.

வாதசயம்

நாட்டமாய் தலைவலியும் விலாவுஞ் சந்தும்
நடுமுதுகுங் கடுத்துமே சத்தி யுண்டாம்
தூட்டமாய்ச் சுரமொடு தாகங் காணும்
துடிப்பாகுந் தோளோடு கைகா லெல்லாம்
காட்டமாய் கழித்ததுவு நீண்டு காணும்
கனமான அதிசார விருமல் கோழை
தேட்டமாய்ச் சிறுதிடங்கள் குளிர்ந்து காணும்
சீறுமே வாதத்தின் சயந்தா னென்றே 677

தலைவலிக்கும், விலா, மூட்டுகள், நடு முதுகு, ஆகியவை கடுத்து வாந்தியுண்டாகும். சுரமுடன் தாகமும் உண்டாகும். தோளுடன் கைகால்கள் எல்லாம் வலியுண்டாகும். அதிசாரமாய் கழியும். இருமல் கோழை உண்டாகும். உடலில் சிறுசிறுவிடங்கள் குளிர்ந்து காணும். இவை வாதசயத்தின் குணங்களாகும்.

பித்த சயம்

என்றதோர் விலாக்கழுத்து மிகச்சு ருங்கி
இரைக்குமே இருமலோடு கோழை யுண்டாம்
குன்றதோர் குளுமையுண்டா யிரத்த வாந்தி
கொடிதான மூர்ச்சைகுரல் கம்ம லாகும்
தின்றதோர் தீபனந்தான் செரிகொ டாது
தேகமெங்கும் வெளுத்துமே மஞ்ச ளாகும்
மென்றதார் மூத்திரமு மஞ்சள் காணும்
மீறுபித்த சயமென்றே மொழிய லாமே 678

விலா, கழுத்து ஆகியன மிகவும் சுருங்கி காணப்படும். இருமலுடன் கோழையுண்டாகும். குளிர்ச்சியுண்டாகும். இரத்த வாந்தி ஏற்படும். கொடிய மூர்ச்சை, குரல் கம்மல் ஆகியன ஏற்படும். உண்ட உணவு செரிக்காது. உடல் வெளுத்து மஞ்சளாகும். மூத்திரம் மஞ்சளாகக் காணும் இவை பித்த சயத்தின் குணங்களாகும்.

சிலேத்தும சயம்

மொழியவே இருமலொடு கோழை சத்தி
மூச்சோடு அருசியா மதிசா ரந்தான்
அழியவே தொனிபேத முடல்வெ ளுப்பு
அசதியொடு சந்தாப மாலோ பந்தான்
துழியவே மூக்குநீர் பாய்தல் சோம்பு
செற்றவரல் சுரமொடு தூய தாபம்
தெழியவே தேகமெங்கு சொறியுண் டாதல்
சேட்டுமத்தின் சயரோகச் செயலி தாமே 679

இருமலுடன் கோழையுண்டாகும். வாந்தியேற்படும். அதிக சுவாசம் உண்டாகும். சுவையின்மை ஏற்படும். அதிசாரமாக கழியும். அசதியேற்படும். ஆலோபஞ் செய்வர். மூக்கிலிருந்து நீர் வடியும். சோம்பலேற்படும். சுரமுண்டாகும். தாபமேற்படும். உடல் முழுவதும் சொறியுண்டாகும். இவை சிலேத்தும சயத்தின் குணங்களாகும்.

வாதபித்த சயம்

செயலாகத் தேகமெங்கு மிகக் கடுப்பு
தீதான சுரதாகங் கோழை சத்தி
அயலாக அருசியோடு இருமல் சுவாசம்
மதிகமா யுடம்பெரிவு ஆலோ பந்தான்
மயலாக மயக்கமொடு வாய்நீ ரூறல்
மார்க்கமாய் மலம்விடுத்தல் நீர ருக்கல்
நயலாக நாக்குதடு மிகக்க றுத்து
நாகமாம் வாதபித்த சயந்தா னாமே 680

தேகம் முழுவதும் கடுக்கும். சுரம், தாகம், கோழை, வாந்தி, ஆகியவை உண்டாகும். சுவையின்மையோடு இருமலும், அதிக சுவாசமும் ஏற்படும். அதிகம் உடம்பு எரியும். ஆலோபம் செய்யும். மயக்கத்துடன் வாயில் நீரூறும். அதிகம் மலம் வெளியேறும், சிறுநீர் குறையும். நாக்கு உதடு முதலியவை கறுத்துவிடும். இவை வாதபித்த சயத்தின் குணங்களாகும்.

வாதசிலேத்தும சயம்

தானான தொனிபேதந் தொண்டைக் கம்மல்
சாங்கமாஞ் சுரமொடு சுவாசஞ் சத்தி
தானான இருமல் சரீரங் கடுப்புக்
கடுங்கோழை வெகுபலவீ னமுமே யாகும்

ஆனான அக்கினிமந் தத்தி னோடு
அரோசிக மாஞ்சரீரமது வெளுப்புண் டாகும்
வானான கால்கையும் வற்ற லாகும்
வாதசேட்டு மசயத்தின் வாற தாமே 681

குரல் மாறி ஒலிக்கும். தொண்டை கம்மும், சுரமுண்டாகும். சுவாசம் அதிகமுண்டாகும். வாந்தியேற்படும். இருமலுண்டாகும், சரீரத்தில் கடுப்புண்டாகும். கோழை யுண்டாகும். பலவீனமுண்டாகும். மந்தமுண்டாகும். சுவையிருக்காது சரீரம் வெளுத்துக் காணப்படும், கால் கை வற்றிவிடும். இவை வாத சிலேத்தும சயத்தின் குணங்களாகும்.

பித்த சிலேத்தும சயம்

வாறான நித்திரையுஞ் சோம்ப லோடு
வடிவெல்லா நிறைந்துசுரம் வாந்தி கோழை
ஏறான இருமலொடு வயிறு பேதி
எடுக்கின்ற ரத்தம் வெகு நாற்ற மாகும்
தாறான தலைசுற்றல் பிரமை தாகம்
சாறுசத்தா யிருமல் சாருந் தண்ணீர்
பேறான நீரதுவும் இரத்தம் போலாம்
பித்த சேட்பசயத்தின் பேர தமாமே. 682

நித்திரையும் சோம்பலும் உண்டாகும். உடல் முழுதும் சுரம் காயும். வாந்தி, கோழை உண்டாகும். வயிறு பேதி உண்டாகும். கோழையில் வரும் இரத்தம் அதிக நாற்றத்துடன் காணப்படும். தலைசுற்றும். பிரமை, தாகம் ஆகியன உண்டாகும். இருமல் உண்டாகும். கோழை தண்ணீர்போலுண்டாகும். சிறுநீர் இரத்தம் போல செல்லும். இவை சேட்ப சயத்தின் குணங்களாகும்.

விகார சயம்

ஆமென்ற காதிலேதொ னியுண் டாகும்
அழகானக் கண்ணிரண்டு வெளுப்பு மாகும்
வாமென்ற வடிவுபெலன் றானி ளைத்தல்
மகாவிரணம் பிரமேகம் மூச்சுண் டாதல்
வேமென்ற விலாப்பக்கம் வலியுண்டாதல்
மிக இரத்தம் சத்தியுமே வெருவிக் காணல்
மூமென்ற மூச்சோடு வாய்தா னாறும்
மூர்க்கனாம் விகாரத்தின் க்ஷயமு மாமே 683

காதில் இரைச்சல் உண்டாகும். கண்கள் இரண்டும் வெளுத்துக் காணப்படும். வடிவம் குன்றும், பலம் குறையும்

புண்கள் அதிகமுண்டாகும். பிரமேக நோயுண்டாகும். மேல்முச்சு ஏற்படும். விலாப்பக்கம் வலியுண்டாகும். இரத்த வாந்தி ஏற்படும். சுவாசம், வாய் ஆகியவை நாறும். இவை விகார சயத்தின் குணங்களாகும்.

தொந்த சயம்

விகாரமாந் தொனிபேதஞ் சுரமுண் டாதல்
மிடுக்கான விருமலொடு இரத்தங் கோழை
நகாரமாம் நாத்தமுடன டுக்கல் பேதி
நலியாகி மயக்கமொடு நாக்குக் குள்ளே
வகாரமாம் வட்டம் போல்கறுப்புண் டாதல்
வடிவமெல்லாங்கற்றாழை நாற்றங் காணல்
துகாரமாம் பேச்சுதான் மிகவுண் டாகும்
தொந்தமாம் க்ஷயத்தினிட சூட்சந் தானே 684

குரல் மாறிஒலிக்கும். சுரமடிக்கும். இருமலின் பொழுது கோழையுடன் இரத்தமும் காணப்படும். நாற்றமடிக்கும் நடுக்கலுண்டாகும். பேதியாகும். கண்களில் கருவளையம் விழுந்துவிடும். உடல் முழுவதும் கற்றாழை நாற்றமடிக்கும் பேச்சு அதிகமுண்டாகும். இவை தொந்த சயத்தின் குணங்களாகும்.

சாத்தியம்

சூட்சியாய் சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
சுற்றமாம் பிரமமென்ற சயத்தி னோடு
சாட்சியாய் சத்திரியச யத்தோ டொக்கச்
சாந்தவை சியசயமாம் பித்தத் தோடு
தீட்சிசேட் டுமசயந் தானைந்து சாத்யம்
திட்டமா மருந்துதன்னிற் றீர்க்க லாகும்
காட்சியாய் கனமான செந்தூ ரத்தில்
காரணமாம் வயித்தியர் முன்றீருந் தானே 685

சயநோயில் சாத்தியத்தைக் கூறக் கேட்பாயாக. பிரம்ம சயம், சத்திரிய சயம், வைசிய சயம், பித்த சயம், சிலேத்தும சயம் ஆகியன சாத்தியமாகும். இவைகளை மருந்தினால் தீர்க்கலாம். உயர்ந்த செந்தூரவகைகளினால் இவற்றை தீர்க்கலாம்.

அசாத்தியம்

தீராத வசாத்தியத்தைச் செப்பக் கேளாய்
சீர்கேடாஞ் சூத்ரசயம் வாதச யந்தான்
வாராத வாதசேட்டு மச யந்தான்
மன்னியதோர் பித்தசேட்டு மச யந்தான்

வேராத விகாரசயம் வாத பித்தம்
மிடுக்கான தொந்தமாம் சயத்தி னோடு
ஏராத திதுவேழு மசாத்தி யந்தான்
எந்த மருந்திட்டாலு மினசைவா காதே 686

அசாத்திய வகைகளைக் கூறக் கேட்பாயாக. சூத்திர சயம், வாதசயம், வாதசிலேத்தம சயம், பித்த சிலேத்துமசயம், விகாரசயம், வாதபித்தசயம், தொந்த சயம் ஆகிய ஏழும் அசாத்திய வகைகளாகும். இவை மருந்துகள் கொடுத்தாலும் தீராது.

இசைவாக சயத்தினிட குணங்கள் தன்னை
எந்தாயார் நந்திக்கு எளிதிற் சொல்ல
நசைவாக நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
நன்மையாந் தன்வந்திரியசு வனிக்குச் சொல்ல
அசைவாக வசுவினியும்வி சுவினிக்குக் கூற
அடக்கமாய் விசுவினியும கஸ்தியர்க்கு ரைக்க
பிசைவாக வகஸ்தியரும் புலத்தியருக்கு ரைக்க
புலத்தியருந் தேரையருக்குச் சாற்றி னாரே 687

சயத்தின் குணங்களை பார்வதி நந்திக்கு கூற நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அசுவினிக்கும், அசுவினி விசுவனிக்கும், விசுவினி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரையருக்கும் வரிசையாக எடுத்துக் கூறினார்கள்.

சாற்றினார் தேரையமா முனிவன் றானும்
சாங்கமா யூகிமுனியாம் எனக்கு
போற்றினார் மானிடர்கள் பிழைக்க வென்று
பொறுக்கியே யாயுருவே தத்தை யெல்லாம்
வீற்றினார் முத்துப்போல் பொறுக்கிக் கோர்த்து
விரிதமிழைச் சுருக்கியே வெளியாய்த் தானும்
தேற்றினார் சீவசெந்துக் குபகார மாகச்
செப்பினார் செகமெல்லாந் தெரியத் தானே 688

தேரைய மாமுனி யூகிமுனியாகி எனக்கு கூறினார். ஆயுர்வேதத்தை எடுத்து ஆராய்ந்து முத்துக்கள் போலுள்ளதை பொறுக்கி எடுத்து நான் தமிழில் கூறினேன். உலகிலுள்ள உயிர்களுக்கு உபகாரமாக இதை கூறுகின்றேன்.

சயரோக நிதானம் - முற்றிற்று

காசரோக நிதானம்

தானான காசமது பனிரெண் டாகும்
தாக்கான மந்தார காசத் தொடு
பானான பக்கமந் தார காசம்
பாங்கான சுடர்காசம் வாத காசம்
பேனான பித்தமாங் காசத் தோடு
பேர்பெரிய சுவாசகா சத்தோ டொக்க
ஏனான இயற்றமாங் காசத் தோடு
இறைப்பான சேட்டுமகா சந்தா னாமே 689

காசம் பன்னிரெண்டுவகையாகும். அவை மந்தார காசம், பக்கமந்தார காசம், சுடர்காசம், வாதகாசம், பித்தகாசம், சுவாசகாசம், இரத்த காசம், சிலேத்தும காசம் ஆகியவற்றோடு.

ஆகின்ற பீனிசத்தின் சுவாச காசம்
அழிவாத பித்தத்தின் காச மாகும்
போகின்ற பித்தசேட்டு மகா சந்தான்
புகழ்பெரிய தொந்தமாங் காசத் தோடு
தேகின்ற காசமது பனிரெண் டாகும்
தெளிவாக இதினுடைய செயலைக் கேளாய்
வேகின்ற வதிகமாம் புகையி னாலும்
மீறுகின்ற பானத்தால் மிகுக்குந் தானே 690

பீனிச காசம், வாதபித்த காசம், பித்த சிலேத்தும காசம், தொந்த காசம் ஆகியவை சேர்த்து பனிரெண்டாகும்.

பானத்தால் பரமாக்கினி மிகுக்கை யாலும்
பாரமா மாமிசங்கள் புசிக்கை யாலும்
தானத்தாற் சஞ்சாரந் தவிர்க்கை யாலும்
சரிப்படாப் பதார்த்தங்கள் புசித்த லாலும்
தீனத்தாற் பொசியாம லிருக்கை யாலும்
சேயிழை யார்மேலின்பஞ் சிதைவ தாலும்
மானத்தாற் மாதுக்கம டைத லாலும்
மதத்தாலுஞ் சுவாசிப்பது மருவுங் காணே 691

அக்கினியான மூலாக்கினி அதிகமாவதாலும், அதிகம் மாமிசம் உண்பதாலும், நடக்காமல் ஓரிடத்திலேயே இருப்பதாலும், கெட்ட பதார்த்தங்களை உண்பதாலும், பசிக்கும் பொழுது உண்ணாம லிருந்தாலும், பெண்கள்மேல் அதிகம் மோகம் கொள்வதாலும் அதிக துக்கமடைவதாலும் சுவாச காசம் உண்டாகும்.

காணவே தேவதைக்கு பிரித்த பண்டம்
களவாடி தின்றாலுங் கணவன் றன்னை
தோணவே நிர்தாட்சை சொன்ன தாலும்
சுசியான பதார்த்தமெச்சில் பண்ணி னாலும்
வேணவே ஒருவர்செய்த நன்றி தன்னை
மிகமறந்து கொடுமைகடான் விளம்பு வோர்க்கும்
பேணவே சபைதனிலே சொன்ன பேச்சு
பிரண்டோர்க்குங் காசம்வந்து பிறக்குந் தானே 692

தேவதைக்கு படைத்த பண்டங்கள் திருடித் தின்பதாலும், கணவனை நிர்தாட்சம் செய்து பிரிந்து செல்வதாலும், மற்றவர் களுக்குரிய உணவை எச்சில் செய்வதாலும், ஒருவர் செய்த நன்றியை மறந்து கொடுமையான வார்த்தை சொல்பவர்க்கு, சபையில் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதவர்க்கும் காசரோகம் உற்பத்தியாகும்.

மந்தார காசம்

தானான தூயதோர் நாசி தன்னில்
சலநோய் நீர்தான்விழுந்து தும்ம லுண்டாம்
மானான மார்புநெஞ்ச டைத்து மூச்சு
வலுவாகிப் பாம்புபோல் சீற லாகும்
கானான கண்டமொடு முகமுங் காதும்
காயமதுங் கசிவாகி வியர்வை யாகும்
ஏனான இருமலொடு கோழை கம்மல்
இரைப்பாகு மந்தார காச மாமே 693

மூக்கிலிருந்து தண்ணீர்வடியும். தும்மலுண்டாகும். மார்பு நெஞ்சு ஆகியவை அடைத்துக்கொள்ளும். பாம்பின் சிறல்போல சுவாசம் இருக்கும். கழுத்து, முகம், காது, உடல் முழுவதும் வியர்வை அதிகமாகும். இருமலுடன் கோழை உண்டாகும். குரல் கம்மும், இரைப்புண்டாகும். இவை மந்தார காசத்தின் குணங்களாகும்.

பக்கமந்தார காசம்

காசமா யிருமலொடு இளைப்பு முண்டாய்
கட்டியே நெஞ்சதனிற் கம்ம லாகும்
வாசமாய் வயிறதுவும் பொருமிக் கொள்ளும்
மகத்தான மூக்குநீர் பாச்ச லாகும்
ஆசமாய மரபட்சம் பூர்வ பட்சத்
தருகாமை யானவுடன் சுவாச மீறும்
ஈசமா யிரைப்போடு எரிமுச் சாகும்
இக்குணந்தான் பக்கமந் தார காசம் 694

இருமலுடன் இளைப்பு உண்டாகும். நெஞ்சில் கம்மலுண்டாகும். வயிறு பொருமிக் காணப்படும். மூக்கில் நீர் வடியும். அமாவாசை பௌர்ணமி ஆகிய நாட்கள் நெருங்கும் பொழுது அதிக சுவாசம் உண்டாகும். இரைப்புண்டாகும். சுவாசம் அனலாக இருக்கும். இவை பக்க மந்தார காசத்தின் குணங்களாகும்.

சுடர்காசம்

பக்கமாய் பிரசவிச்ச மாத ருக்கு
பாரமாய் தலைநோயும் சுரமுண் டாகும்
உக்கமா யுழலையொடு தவன முண்டாம்
உறுகழிச்சல் பொருமலோடு உப்பு மாகும்
மிக்கமா யுள்மூச்சுமி டுக்க தாகும்
மிரளாமல் விழியிரண்டுந் தெளிவு மாகும்
துக்கமாய் துடிதுடிக்கு மகப்பெற் றோர்க்குச்
சுடர்காசந் தன்னுடைய சுரூபந் தானே 695

பிரசவித்த பெண்களுக்கு தலைவலித்து சுரமடிக்கும் உளைச்சல் உண்டாகும். தவனமுண்டாகும். கழிச்சலும் பொருமலுமாய் வயிறு உப்பும். உள்முச்சு அதிகமாக இருக்கும். விழிகள் தெளிவாக இருக்கும். உடல் துடிக்கும் இவை மகப்பேற்றிற்கு பின் பெண்களுக்கு உண்டாகும் சுடர்காசமாகும்.

வாதகாசம்

சுரூபமாய் நெஞ்சுதனிற் றினவு முண்டம்
செவிதனிலே இரைச்சலுமா மரோசி கந்தான்
மருபமன் னிக்கீழ்மூச்சி மார்பள வாகி
மன்னியே நெஞ்சளவா யுழலுஞ் சுவாசம்
நிருபமாய் நேர்படும் பிரமரந் திரந்தன்னில்
நெய்த்து துன்மாமிசங்கள் மிகவ ளர்ந்து
துருபமாய் மூச்சதிக மிருமல் கோழை
தூய்தா னவாதகா சத்தின் சீரே 696

நெஞ்சில் குறுகுறுவென்று அரிப்பெடுக்கும். செவியில் இரைச்சல் உண்டாகும். அரோசிகமுண்டாகும். கழுத்து, உச்சி, மார்பு ஆகியன உழலும். சுவாசமும் அதிகப்படும். சுவாச உறுப்புகளில் துர்மாமிசம் வளர்ந்து மூச்சு அதிகமாகும். இருமல் கோழை யுண்டாகும். இவை வாத காசத்தின் குணங்களாகும்.

பித்தகாசம்

சீராக இருமல்மிகப் பிரட்ட லாகித்
தித்தித்து உப்புரைக்குஞ் சத்தி யுண்டாம்
தாராகத் தலையுடம் புதான்வலிக்கும்
தாகித்துக் குரல்கம்மும் ரத்தம் வீழும்
ஆராக வங்கந்தான் மிகவி ளைக்கும்
அன்னந்தான் செல்லாமற்பி ளித்தேப் பாகும்
மாராக மயிர்க்கூச்சுச் சுர முண்டாம்
மதிம யங்கும்பித்த காசத்தின் வண்மை 697

இருமல் அதிகமாகும். வயிறு பிரட்டும், வாயில் இனிப்பு உப்புச் சுவைகள் அதிகமாகி வாந்தியுண்டாகும். தலை உடல் ஆகியன வலிக்கும். குரல் கம்மும், தொண்டையில் இரத்தம் வீழும். உடல் அதிகம் இளைத்துப் போகும். உண்ட உணவு செரியாது, புளித்த ஏப்பம் உண்டாகும். மயிர்க்கூச்சமுண்டாகும். சுரமடிக்கும், அறிவு மயங்கும். இவை பித்தகாசத்தின் குணங்களாகும்.

சுவாச காசம்

வண்மையாய் கோழைகட்டி இருமி வீழும்
மாநாகம் போலவேவாங் குஞ்சு வாசம்
திண்மையாய் செருமலுண்டா மடிக்க டிக்குச்
சீரணமில் லாமலேவ யிறு ஊதும்
நன்மையாய் நாசியது தனல்போ லாகும்
நளுந்து டம்புவற்றிவருங் குரலுங் கம்மும்
உண்மையா யுண்ணாக்கி லூறுங் கேணி
உழறுமே சுவாசகா சத்தி னொப்பே 698

அதிகம் கோழைகட்டிவிடும். கடினமாக இருமினால் வெளியே விழும். நாகம்போல சீறலுடன் மூச்சு வாங்கும். அடிக்கடி செருமலுண்டாகும். சீரணமில்லாமல் வயிறு ஊதும் நாசி நெருப்புப்போல் வெப்பமாய் இருக்கும். உடல் வற்றிக் கொண்டே வரும். குரலும் கம்மும். உள் நாக்கில் நீர் அதிகமாக ஊறும். இவை சுவாச காசத்தின் குணங்களாகும்.

இரத்தகாசம்

ஒப்பான குரல்கம்மி உதிரந் தானும்
உருட்சியாய் கட்டிபோலு ருண்டு வீழும்
விப்பான விலாவிலே மிகநோ வாகி
மிளமிளென வயிற்கடித்து உளைச்ச லாகும்

கப்பான கால்கையு மோச்சலாகும்
கடுமூத்திர மெரிந்துமெத்த மஞ்சள் போலாம்
தப்பான சரீரமது வெளுத்துக் காணும்
சமிக்கும் ரத்த காசமென் றேசாற்ற லாமே. 699

குரல் கம்மும், தொண்டையி லிருந்து உருண்டையாக கட்டியாக இரத்தம் விழும். விலாப்பக்கம் அதிகம் வலிக்கும் வயிறு கடினமாக உளைச்சலாகும். கால் கையும் ஓய்ந்து போகும். சிறுநீரானது எரிச்சலுடன் மஞ்சளாக செல்லும். சரீரம் வெளுத்து காணப்படும். இவை இரத்தக் காசத்தின் குணங்களாகும்.

சிலேத்தும காசம்

சாற்றவே இருமலொடு இளைப்பு முண்டாய்ச்
சார்ந்த பீளையுமூச்சு மிகுந்து வாங்கும்
ஆற்றவே அடிவயிறு மந்தம் பற்றி
அழகாகு முருவழித்து உடம்பு வற்றும்
சேற்றவே சுரமொடு தியக்க முண்டாய்ச்
சித்தமே மிகக்கலங்கி வாந்தி யாகி
தீத்தவே சிறுகடுப்பாந் தேக மெங்கும்
சேட்டுமத்தின் காசமென்றே செப்ப லாமே 700

இருமலும் இளைப்பும் உண்டாகும். கண்ணில் பீளைசாரும் சுவாசம் அதிகம் வாங்கும். அடிவயிறு மந்தமாக இருக்கும். உடலின் உருவம் அழிந்து மெலிந்து போகும் சுரமுண்டாகும். தியக்கமேற்படும். மனது மிகவும் கலங்கிப் போகும். வாந்தி யாகும். உடலில் கடுப்புதோன்றும். இவை சிலேத்தும காசத்தின் குணங்களாகும்.

பீனிசகாசம்

செப்பமா யிருமலொடு கோழை வீழும்
சேட்டும மாயிளைப்போடு இரைப்புண் டாகும்
உப்பமாய் வயிறதுவு மூதிக் கொள்ளும்
ஊணுறக் கமில்லாம லுலருந் தேகம்
குப்பமாய் சலமலமுங் கறுகி விழும்
கோழையிட குணந்தான்மீன் கவிச்ச டிக்கும்
துப்பமாய் சுருண்டு வயிறு வலியு மாகும்
சுவாச பீனிசமென் றேசூட்டி டாயே 701

இருமலின் போது கோழை அதிகம் விழும். இளைப்போடு இரைப்புண்டாகும். வயிறு ஊதிக் கொள்ளும். உணவு

உறக்கமில்லாமல் தேகம் உலர்ந்து போகும். சிறுநீரும், மலமும் கறுகி விழும். கோழையானது மீன்நாற்றம் அடிக்கும். வயிறு சுருண்டு வலியுமாகும். இவை பீனிசகாசத்தின் குணங்களாகும்.

வாதபித்த காசம்

சூட்டிட்டுக் காறையிலே துளிக்கும் ரத்தம்
சூட்சமாய் காதுதனி லிரைச்ச லுண்டு
ஆட்டிட்ட இருமலொடு அசதி யாகும்
அடிக்கடிக்கு வாய்வதுதான் மிகவு மீறும்
மூட்டிட்ட முதுகுதண்டு குடைச்ச லுண்டாம்
மூச்சோடு சந்தாபமொ ழிமா ராட்டம்
வாட்டிட்ட தேகந்தான் ஊதிக் கொள்ளும்
வாதபித்த காசத்தின் மார்க்கந் தானே 702

தொண்டையை காறி துப்புகையில் இரத்தம் விழும். காதில் இரைச்சல் உண்டாகும். இருமலுடன் அசதியாகும். அடிக்கடி வாய்வு அதிகமாகும். முதுகு தண்டு குடைச்சல் உண்டாகும். மூச்சு அதிகம் வாங்கும். தாப மேற்படும். குரலில் மாற்றம் ஏற்படும். தேகம் ஊதிக்கொள்ளும். இவை வாதபித்த காசத்தின் குணங்களாகும்.

பித்த சிலேத்தும காசம்

மார்க்கமாய் நெஞ்சுதனிற் றினவுண் டாகும்
வடிவமெலாந் தான்வலிக்கு மிரும லுண்டாம்
தார்க்கமாங் குரல்கம்முஞ் சடமி ளைக்கும்
சஞ்சலிக்கும் பூருவத்திற் சதியை நாடி
பீர்க்கமாய் பூமியெல்லாஞ் சுழற்றல் போலாம்
பெண்பார்வை பார்த்தவுடன் புளக முண்டாம்
பீர்க்கம்பூப் போலுடம்பு மஞ்ச ளிக்கும்
பித்தசேட் டுமக்காசப் புதுமை தானே 703

நெஞ்சில் தினவு எடுக்கும். உடல் எல்லாம் வலிக்கும். இருமல் ஏற்படும். குரல் கம்மும். சடமானது இளைக்கும். மனம் சஞ்சலம் செய்யும். பூமி சுழல்வது போல தலை சுழலும். பெண்ணைப் பார்த்தவுடன் புளகாங்கிதம் அடையும். பீர்க்கம்பூ போல உடம்பு மஞ்சளாக இருக்கும். இவை பித்தசிலேத்தும காசத்தின் குணங்கள் ஆகும்.

தொந்த காசம்

புதுமையாய் புரண்டுமே இருமல் குற்றிப்
பூங்கமுகி னிறமாக இரத்தம் வீழும்
வெதுமையாய் வெதும்பலொடு எரிவு தாகம்
மிக்கதோர ரூசியொடு வயிறு பேதி
பதுமையாய்ச் சரீரமெங்கும் படுக்கை கூடாப்
பருத்துமே உடம்பூதிப் பாண்டு வாகும்
கதுமையாய்ச் சரீரமெங்குங் கடுப்புண் டாகும்
கடிது தொந்தகாசத்தின் காட்சி தானே 704

நெஞ்சில் புரண்டு குற்றி குற்றி இருமலுண்டாகும். கமுகு நிறமாக இரத்தம் விழும். வெதும்பலுடன் எரிச்சல் தாகம் ஆகியவை உண்டாகும். சுவையின்மையுடன் வயிறு பேதியாகும். உடலைப் படுக்க விடாது. உடல் பருத்து ஊதி பாண்டு நோயுண்டாகும். உடல் முழுதும் கடுப்புண்டாகும். இவை தொந்த காசத்தின் குணங்களாகும்.

சாத்தியம்

காணவே சாத்தியத்தைக் கருதக் கேளாய்
கனத்த தோர்மந்தார காசத் தோடு
பூணவே பக்கமந் தார காசம்
பொலிவான சுடர்காசம் பித்த காசம்
தோணவே சுவாசகா சத்தி னோடு
சுழியிரத் தக்காசமாம் பீனிச காசம்
தாணவே இதுவேழுஞ் சாத்திய மாகும்
சாதகமாய் பரிகாரம் பார்த்துச் சாற்றே 705

காசரோகத்தில் சாத்தியவகைகளைக் கேட்பாயாக. மந்தார காசம், பக்கமந்தார காசம், சுடர் காசம், பித்த காசம், சுவாச காசம், இரத்த காசம், பீனிச காசம் இவை ஏழும் சாத்தியமாகும். இவற்றை தக்க மருத்துவத்தினால் தீர்க்கலாம்.

அசாத்தியம்

சாத்தியதோ ரசாத்தியந் தான்வாத காசம்
சஞ்சலமாஞ் சேட்பத்தின் காசத் தோடு
தோத்தியதோர் தொந்தமாங் காசத்தோடு
சுருக்கான விம்மூன்றும சாத்தி யந்தான்
நேத்தியதோர் மற்றுமுள்ள காச மெல்லாம்
நேரான சாத்தியமாய் நிகழ்த்த லாகும்
போற்றியதோர் சிவனூலு மிந்த நூலும்
போக்கொன்று றுந்தப்பாது பொய்போ காதே 706

அசாத்திய வகையைக் கேட்பாயாக. வாத காசம், சிலேத்தும காசம், தொந்த காசம் ஆகிய மூன்றும் அசாத்தியமாகும் மற்ற அனைத்தும் மருத்துவத்தால் தீரும். சிவன் கூறியதும். இந்த நூலில் கூறியதும் பொய்யாகாது.

பொய்போகாச் சாத்திரத்தை நித்தம் பூசிப்
புகழாக எவ்வுயிருந்தம் முயிர்போ லெண்ணு
மெய்யாகத் தாயோடுசி வனைப் போற்று
மிகுந்தவு பசார த்தால் விருப்ப மாக
மைபோக மருத்துவர்கள்அ சுவினி தேவர்
மாசற்ற குருமுனிக்கும் வணக்கம் பண்ணு
மெய்போக நன்னூலை விருப்ப மாக
வினையமெ லாஞ்சோதித்து விரித்து சாற்றே 707

சாத்திரங்களை தினமும் படிக்க வேண்டும். எந்த உயிரையும் தம்முயிர்போல எண்ணவேண்டும். சிவனையும், பார்வதியையும் வணங்கவேண்டும். அசுவினி தேவர், மருத்துவர்கள், அகத்தியர் ஆகியோருக்கும் உபசாரம் செய்து வணங்க வேண்டும். இந்நூலை நன்கு படித்து வைத்தியம் செய்வாயாக.

காசரோக நிதானம் முற்றிற்று.

உளைமாந்தை ரோக நிதானம்

சாற்றவே தானியத்தை குறைத்த பேர்க்கும்
சடுதியிலே சிவவதை பண்ணி னோர்க்கும்
கோற்றவே குலமடந்தை கற்ப ழித்துக்
கொடுமையாம் புலைகளவு கட்கா மந்தான்
போற்றவே பூசைக்கு இடறு காணல்
புருடனிட ஸ்திரிதனையே பிரிக்கின் றோர்க்கும்
ஊற்றவே உளைமாந்தை ரோகம் வந்து
உற்பவிக்கு முறுதியென்றே உரைக்க லாமே. 608

அளவில் தானியத்தை குறைத்த பேர்க்கு, சிவனடியார்களை துன்புறுத்துபவர்களுக்கும், குடும்பபெண்களை கற்பழித்த வர்களுக்கும், ஆடு, மாடுகளை திருடுபவர்களுக்கும், கள் குடிப்பவர்களுக்கும், அதிக காம ஆசை உள்ளவர்களுக்கும். பூசைக்கு இடையூறு செய்பவர்களுக்கும் கணவன் மனைவியை பிரிப்பவர்களுக்கும் உளைமாந்தை ரோகம் வந்து சேரும்.

உரைக்கவே ஊழித்தீய்க்கி ரைகொ டாமல்
உட்கார்ந்து அக்கினிதான் மந்தித் தப்போ
பரைக்கவே அசனத்தைப் பருகி னோர்க்கும்
பகலுறங்கி இரவுதனில் விழித்த லாலும்
புரைக்கவே புலால்தனையே பொசித்த லாலும்
புணர்ச்சியினின் மயக்கத்திற் பொருந்த லாலும்
இரைக்கவே கடு வோட்ட மோடி னாலும்
எய்திடுமென்று ளைமாந்தை யிசைக்க லாமே 709

ஊழித்தீய்க்கு இரையாகாமல் அக்கினி மந்தமாக உள்ளபோது உணவு செரியாமலிருக்கும் சமயத்தில் மேலும் உணவை உண்பவர்க்கும். பகலில் உறங்கி, இரவில் அதிகம் விழித்திருப்பதாலும். அதிகம் புலால் உணவை உண்பதாலும் அடுத்தடுத்து புணர்ச்சியில் ஈடுபட்டாலும் கடுமையான ஓட்டம் ஓடினாலும் உளைமாந்தை ரோகம் உண்டாகும்.

இசைக்கவே உளைமாந்தை நால தாகும்
இதினுடைய நாமத்தை இயம்பக் கேளாய்
வசைக்கவே வாதஉளை மாந்தை யோடு
மருவுகின்ற பித்தவுளை மாந்தை யாகும்
திசைக்கவே சேட்பஉளை மாந்தை யோடு
செயலான தொந்தவளை மாந்தை யாகும்
அசைக்கவே நாலினிட ஆண்மை தன்னை
அசாத்தி யசாத்தியமென்றே யறிந்து உன்னே 710

உளைமாந்தை நான்கு வகைப்படும். அவை வாதபித்த உளைமாந்தை, பித்த உளைமாந்தை, சிலேத்தும உளை மாந்தை, தொந்த உளைமாந்தை ஆகும். இவற்றின் குணங்களையும், சாத்திய அசாத்தியங்களையும் அறிந்து மருத்துவம் செய்யவேண்டும்.

வாத உளைமாந்தை

உன்னவே உறுநெஞ்சு பழுக்கள் பக்கம்
உருமினினை வழிந்திருமி உரக்க நொந்து
சின்னவே பஞ்சுபேற் சுரமுந் தோன்றி
சீய்க்கட்டி யாய்ப்பழுத்துச் சிதறி வீழும்
தின்னவே சிலேட் டுமந்தான் மீறிக் காணும்
செறிக்காமல் அசனந்தான் றிருப்பி விழும்
கன்னவே காலுகையில் கசப்பு காணும்
கருகுமே வாதஉளை மாந்தை காணே 711

நெஞ்சு, விலாப்பக்கம் ஆகியவற்றில் உறுமல் ஒலி கேட்டு நினைவு தப்பி, அதிக இருமல் சப்தத்துடன் தோன்றி நோகும். சுரம்

காணும். சீழ்போல் கபமானது அதிகம் சிதறிவிழும். உண்டஉணவு செரிக்காமல்மலத்துடன்வெளியேறும் கசப்புச்சுவை அதிகமாக தோன்றும் கால்கை அசரும். இவை வாத உளைமாந்தையின் குணமாகும்.

பித்த உளைமாந்தை

காணவே மிகத்திரண் டுகீழ்வ யிற்றிற்
கட்டியாய் மிகப்பொருமிப் புண்போல் நொந்து
ஊணவே உடம்பெங்கு முளைச்ச லாகி
உறப்பான தலைநோயுஞ் சுரமுங் காணும்
ஈணவே இருமலொடு சீயு முண்டாம்
இரைப்பாகி மிடறெல்லாம் புண்ணு மாகும்
பேணவே மயக்கமொடு பிரட்ட லாகும்
பித்தஉளை மாந்தையென்றே பேச லாமே 712

அதிகமாக திரண்டு, கீழ்வயிற்றில் கட்டியாக, அதிகம் பொருமி புண்போல நோகும். உடல்முழுதும் உளைச்சலாகும். தலைவலி யுண்டாகும். சுரம் அடிக்கும். இருமலுடன் சீழுமுண்டாகும். இரைப்பு ஏற்படும். தொண்டைபுண்ணாகிவிடும். மயக்கத்துடன்பிரட்டல் ஏற்படும். இவை பித்த உளைமாந்தையின் குணங்களாகும்.

சிலேத்தும் உளைமாந்தை

பேசலாம் உடலுருகிப் பிழிந்தாற் போல
பெலமான மேனியெல்லாம் புண்போ னொந்து
வாசலாம் வாயிலே சீயு முண்டாய்
மனமருகிச் சத்தியொடு மயக்க மாகும்
நாசலாம் சிலேட்டுமமும் நடுக்க லாகி
நலங்கியே பஞ்சுபோல் மிகவெ ளுக்கும்
ஆசலாம் ஐயஉளை மாந்தை யென்று
அவனியுள்ளோர் தங்களுக்கு அறியக் கூறே 713

உடலை உருக்கிப் பிழிந்ததுபோல பலமுள்ள மேனி முழுவதும் புண்போல நொந்து போகும். வாயில் சீழுண்டாகும் மனம் மருகின் வாந்தி உண்டாகும். கபம் அதிகமாகும். நடுக்கமுண்டாகும். பஞ்சுபோல அதிகம் வெளுத்துவிடும். இவை கப உளைமாந்தைக்கு உரிய குணங்களாகும்.

தொந்த உளை மாந்தை

கூறாகத் தலைவலியுஞ் சுரமுந் தோன்றிக்
குணங்கெட்ட இருமலொடு கோழை யுண்டாய்
ஆறாக வன்னத்தை இறங்கொட் டாது
ஆங்கார மடக்கியே யசதி யாகும்

ஊறாக உரக்கமது மிகுதி யாகும்
உறுதியாய் சீவிழுந்து நாற்ற முண்டாம்
தூறாகச் சடமெங்குந் தினவுண் டாகும்
தொந்த உளைமாந் தையென் றுசெப்ப லாமே 714

தலைவலி உண்டாகும். சுரமடிக்கும். இருமலின் பொழுது கோழை அதிகம் வரும். உணவின் மேல் விருப்பமிருக்காது ஆங்காரம் அடங்கிவிடும். உடல் அசதியாகி விடும் தூக்கம் அதிகமாகும். கோழையுடன் சீழ்வந்து நாற்றமுண்டாகும். உடல் முழுவதும் தினவுண்டாகும். இவை தெந்த உளைமாந்தையின் குணங்களாகும்.

அசாத்தியம்

செப்பிய தோரசாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
சீறுகின்ற உளைமாந்தை சேட்டு மந்தான்
வப்பிய தோர்வாதஉளை மாந்தை தானும்
மாவவிழ் தந்தன்னாலும் வசப்ப டாது.
கப்பிய தோர்பித்தஉளை மாந்தை தானும்
கனவவிழ்தந் தள்ளிற்கா ரியமு மாகும்
ஒப்பிய தோராயுர்வே தத்திற் றானும்
ஒன்றும் பொய் போகாது உரைத்துப் பாரே 715

உளைமாந்தை ரோகத்தில் அசாத்தியத்தைக் கூறக் கேட்பாயாக. சிலேத்தும உளைமாந்தை, வாத உளைமாந்தை ஆகியவை மருத்துவத்திற்கு கட்டுப்படாது. பித்த உளைமாந்தை முதலானது மருந்தினால் குணப்படுத்தலாம் ஆயுள் வேதத்தில் கூறிய ஒன்றும் பொய்யாகாது.

பாரண்ட உளமதுதான் பனிரெண் டாகும்
பண்பாகக் காசமது சூட்சமாக
பாரென்ற உளைமாந்தை நாலு மாச்சு
உகப்பாக இருபத்து எட்டு மாச்சு
காரென்ற இதுவெல்லாம் சயத்தின் கூட்டு
காரணமாந் தேரையமா முனிவன் சொல்ல
ஊரென்ற யூகிமுனி யாகு நான் தான்
உலகத் தோர்க்காக வெண்ணி உரைசெய் தேனே 716

சயரோகம் பன்னிரெண்டு, காசரோசம் பனிரெண்டு உளமாந்தை நான்கு இவை அனைத்தும் சேர்ந்து இருபத்தி எட்டாகும். இவை யாவும் சயத்தின் கூட்டாகும். இவற்றை தேரையர் கூற யூகிமுனியாகிய நான் உலகத்திலுள்ள வர்களுக்காக கூறினேன்.

உளைமாந்தை ரோகம் முற்றியது.

பெரும்பாடுரோக நிதானம்

உரைசெய்த பெரும்பாடு நாலதாகும்
உகந்துமே வாதத்தின் சிராவ மொன்று
புரைசெய்த பித்தத்தின் சிராவ மொன்று
பேரான சேட்டுமத்தின் சிராவ மொன்று
துரைசெய்த தொந்தமாஞ் சிராவ மொன்று
துகையெல்லாம் நாலுவிதச் சிராவ மாச்சு
கரைசெய்த விதனுடைய உற்பத்தி யெல்லாம்
கண்டபடி சொல்லவே கருதி டாயே. 717

பெரும்பாடு நான்கு வகையாகும். வாதத்தினால் ஒன்றும், பித்தத்தினால் ஒன்றும், கபத்தினால் ஒன்றும், தொந்தத்தினால் ஒன்றும் ஆக நான்காச்சு. இனி இதன் உற்பத்தியைக் கேட்பாயாக.

கருதியே கனமான கொடுமை செய்து
கணவனையே நிந்தனைதான் சொன்ன பேரும்
பருதியின் முன்மலசலத் தைவிட்ட பேரும்
பரதேசி யேழைகளைப் பழிக்கின் றோர்க்கும்
குருதியே யிரைக்கின்ற காலந் தன்னில்
கூசாமற் புருஷசங் கைபண்ணி னோர்க்கும்
சுருதியே பரபோகம் விரும்பி னோர்க்கும்
சுருக்கிலே பெரும்பாடுற் பவிக்குந் தானே 718

சகிக்கமுடியாத கொடுமை கணவனை நிந்தனை செய்தவர்களுக்கும், சூரியன் முன் மலம் சிறுநீர் ஆகியவற்றை கழிப்பவர்களுக்கும், பரதேசிகள் மற்றும் ஏழைகளை பழிக்கின்றவர்களுக்கும், இரைப்புண்டாகியிருக்கிற காலத்தில் புருஷனுடன் போகம் செய்பவர்களுக்கும், அதிகம் போகத்தில் ஈடுபடுபவர்களுக்கும் பெரும்பாடு உற்பத்தியாகும்.

தானென்ற காரங்கள் மிகுக்கை யாலும்
சண்டாளக் கோபத்தின் சலிப்பி னாலும்
ஊனென்ற மாமிசங்கள் பொசித்த லாலும்
உறக்கமன்றி விழித்தலா லூழித் தீயால்
பானென்ற பசியன்றிப் பொசிக்கை யாலும்
பாரமாஞ் சுமைதாங்கல் பகலு றக்கம்
கூனென்ற குறுக்கலாய் முடக்கித் தூங்கல்
குரூரமாம் பெரும்பாடு கூடுந் தனே 719

அதிக காரம் உண்ணுவதாலும், அதிக கோபத்தினாலும் மனம் சலிப்படையவதாலும், உறக்கமின்றி விழித்தே இருப்பதாலும், அதிக உடற்றீயாலும், பசியில்லாத சமயத்தில் உண்பதாலும் அதிக

பாரத்தை சுமையாக சுமப்பவர்களுக்கும், பகலில் உறங்குபவர் களுக்கும், உடலை குறுக்கி படுப்பவர்களுக்கும் பெரும்பாடு ரோகம் உண்டாகும்.

வாதபெரும்பாடு

கூடுமே தலைவலியு மேற்க டுப்பும்
கூறான முதுகிடுப்புக் குடைச்ச லுண்டாம்
வாடுமே தேகமெல்லாங் கருக்க லாகும்
மாதவிடாய் தரித்துமே மைந்தன் போலாம்
ஊடுமே வயிறூதி உடைச்ச லாகி
ஊற்றுமே செந்நிறமுங் கருக லாகத்
தேடுமே துர்க்கந்தஞ் சேர வொட்டா
செகமறிய வாதத்தின் சிராவ மாமே 720

தலைவலியுண்டாகும் உடலில் மேலுக்கு கடுப்பு உண்டாகும். முதுகு இடுப்பு ஆகியவை குடைச்சலெடுக்கும் தேகம் கருத்துவிடும். மாதவிடாய் காலத்தில் வயிறு ஊதி, அதிகம் குருதி பாயும். இக்குருதியானது செந்நிறமும் கருகலாகவும் இருக்கம். அது அதிக துர்நாற்றத்துடன் இருக்கும். இவை வாத பெரும்பாட்டின் குணங்களாகும்.

பித்த பெரும்பாடு

ஆமென்ற வன்னத்தை இறங்கொட் டாது
அழுகின்ற மஞ்சள்நிறம் போல ஊற்றும்
வேமென்ற யோனியிலே வேக்கா டுண்டாம்
மேனியுமே வெளுத்து மிடுக்கு போகும்
காமென்ற கால்கையு மழற்ற லாகும்
கருகலாய் கட்டிபோலு திரம் வீழும்
தேமென்ற சிறுகடுப்பா மங்க மெல்லாம்
சீறியதோர் பித்தத்தின் சிராவ மாமே 721

உணவு செரிக்காமல் உண்ண விருப்பமிருக்காது. மாதவிடாய் குருதியானது மஞ்சள் நிறமாக வடியும். யோனியில் வேக்காடு உண்டாகும். மேனி வெளுத்துவிடும். உடல் மிடுக்குபோகும். கால்கை அழற்சியாகும். கருநிறமாக கட்டி கட்டியாய் உதிரம் போகும். உடல் முழுவதும் சிறுஅளவில் கருப்புண்டாகும். இவை பித்த பெரும்பாட்டின் குணங்களாகும்.

சிலேத்தும பெரும்பாடு

ஆகுமே வெள்ளைநிற மாக ஊற்றும்
அலியான நாற்றந்தான்மி கவுண் டாகும்
வேகுமே உடம்பெங்கும் விபூதி பூர்க்கும்
வெந்தழலாய் யுடம்பெங்கும் எரிச்ச லாகும்
பாகுமே படபடப்பு மூச்சு முண்டாம்
பாரமாங் கோழையொடு இரும லாகும்
தேகுமே யடிக்கடிக்கு மயக்க மாகும்
சேட்டுமத்தின் சிராவமென்றே செப்ப லாமே 722

குருதியானது வெளுத்து வெள்ளைநிறத்துக்கு ஒப்பாகி ஊற்றும். துர்நாற்றம் அதிகம் உண்டாகும், உடல் வெந்து தீபோல் எரிச்சல் தரும். படபடப்பு உண்டாகும். மேல் மூச்சு வாங்கும் இருமலின் பொழுது கோழை உண்டாகும். அடிக்கடி மயக்க முண்டாகும். இவை கப பெரும்பாட்டின் குணங்களாகும்.

தொந்த பெரும்பாடு

செப்பவே கருங்கல்லாய் சிவப்பு மாகும்
சேர்ந்ததிலே கெட்டியாய்க றுப்பாய் வீழும்
உப்பவே வயிறதுவு முளைச்ச லாகும்
ஊசலா நாற்றமுடனொ மூக்க மாகும்
நப்பவே மஞ்சள்நிற நயப்பு மாகும்
நானியே தலைதானுந டுக்க லாகும்
துப்பவே வாய்நீருமி கவே வூற்றும்
தொந்தமாம் பெரும்பாடு சூட்டி னோமே 723

மாதவிடாய் குருதியானது கருஞ்சிவப்பாக அதில் சில சமயம் கறுப்பாக கட்டிகட்டியாக விழும். வயிறு உளைச்சல் தரும் குருதியானது அதிக துர்நாற்றத்துடன் இருக்கும். மஞ்சளாக நயப்புடன் காணப்படும். தலை நடுக்க முண்டாகும். வாய்நீர் அதிகம் ஊறும். இவை தொந்த பெரும்பாடு ரோகத்தின் குணங்களாகும்.

சாத்தியம்-அசாத்தியம்

சூட்டியதோ ரசாத்தியத்தை சொல்லக் கேளாய்
சொலும்சேட்ப பெரும்பாடு தொந்தச்சிராவம்
பூட்டினதோ ரிரண்டும் பிழைக்கொட் டாது
புகழான சாத்தியத்தைப் புகலக் கேளாய்
வாட்டினதோர் வாதத்தின்பெ ரும்பா டோடு
வகையான பித்தத்தின் சிராவந் தானும்
தீட்டினதோர் மருந்துக்குள் செயமு மாகும்
செப்பினதோர் நன்னூலை த்தெ ளிந்து பாரே 724

பெரும்பாடு நோயில் அசாத்திய வகையினைக் கேட்பாயாக. சிலேத்தும பெரும்பாடு, தொந்தபெரும்பாடு ஆகியவை அசாத்தியம் பிழைக்கவிடாது. வாத பெரும்பாடும், பித்த பெரும்பாடும் சாத்திய வகையாகும். இவற்றை தக்க மருத்துவத்தால் குணப்படுத்தலாம். இந்த நூலைத் தெளிவாகப் படித்து வைத்தியம் செய்யவும்.

பெரும்பாடு ரோக நிதானம் முற்றியது

கல்லடைப்பு ரோக நிதானம்

தெளிந்ததோர் கல்லடைப்புற் பத்தி கேளாய்
சிறிதுநாட் டுடங்கியே மேகந் தன்னால்
தளிந்ததோர் சலப்பையிலு திரந் தோய்ந்து
சந்த சந்தாகவே பருத்துக் கொள்ளும்
வளிந்ததோர் வாபித்தங் கோபித் தக்கால்
வந்து பெருங்கல்லாய் நீர்வழி யடைத்து
நளிந்ததோர் நாலுவிதக் கல்ல டைப்பு
நண்பான வரலாறு நாட்டக் கேளே 725

கல்லடைப்பு தோன்றும் விதத்தைக் கேட்பாயாக. மேகநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீர்ப்பையில் இரத்தம் தங்கி கட்டி கட்டியாக பருத்துக் காணப்படும். வாதம் பித்தம் ஆகியன தன்னிலை மீறினால் சிறுநீர்ப்பாதையை பெரும் கல்லாக வந்து அடைத்துக் கொள்ளும். நான்குவித கல்லடைப்பு நோயின் வரலாற்றை கேட்டாயாக.

நாட்டமாய் கற்பழித்துக் கடனை வாங்கி
நலிபண் ணிக்கொடாமல் வழக்கு பேசி
கூட்டமாய் குருவுடைய கடமை தன்னைக்
கொடாம லேகைக்கொண்ட கொடுமை யோர்க்கும்
வாட்டமாய் வரம்புதப்பி திரிந்த பேர்க்கும்
மாறுபாடா யெடுத்துப்பொ ருள்க டன்னைக்
காட்டியே கைக்கொண்டுக படு பண்ணும்
காலாந்தர் கல்லடைப்பிற் கலங்கு வாரே. 726

கற்பழித்தோர்கள், கடனைவாங்கி திருப்பித் தராமல் வழக்கு பேசுபவர்கள், குருவின் கடமையை செய்யத்தவறியவர்கள், வாழ்க்கை நெறிமுறைகளை கடைபிடிக்காமல் வரம்புமீறி திரிபவர்கள், பொருட்களை திருடுபவர்கள் ஆகியோர்க்கு கல்லடைப்பு நோய் உண்டாகும்.

கலங்கின தோர்தண்ணீர்தான் குடித்த பேர்க்கும்
கல்லெலும்பு மயிர்மண்தான் கலந்தன் னத்தில்
அலங்கின தோரன்னங்க ளருந்த லாலும்
அழுகலோடு முற்றபண்ட மருந்த லாலும்
மலங்கின தோர்மாப்பண்ட மருந்த லாலும்
மந்தத்தில் வாய்வானப தார்த்தந் தன்னை
துலங்கின தோருசிதன்னிற் சுவைத்த லாலும்
சுருக்காய் கல்லடைப்புவந் துதோன்றுந் தானே 727

கலங்கிய நீரை பருகுவதாலும், கல், எலும்பு, மயிர், மண் ஆகியவை கலந்த உணவை உண்பதாலும், அழுகல் பண்டம், முற்றிய பண்டம், மாப்பண்டம் ஆகியவற்றையும், வாய்வுப் பொருட்களையும் அதிகம் உண்பதாலும், பசியில்லாத நேரத்தில் உண்ணுவதாலும் கல்லடைப்பு தோன்றும்.

தோன்றினதார் நாலினிட நாமங் கேளாய்
சுறுக்கான வாதத்தின் கல்ல டைப்பு
பூன்றியதோர் பித்தத்தின் கல்ல டைப்பு
புரண்டதோர் சேத்துமத்தின் கல்ல டைப்பு
தீன்றியதோர் தொந்தமாங் கல்ல டைப்பு
தேகத்திற் பற்றியேசி றிது காலம்
தான்றியே சலப்பையில் வந்தி ழிந்து
சருவியே லிங்கத்திற்ற ரிக்குந் தானே 728

கல்லடைப்பு நான்கின் பெயரைக் கேட்பாயாக. அலை வாதகல்லடைப்பு, பித்தகல்லடைப்பு, கப கல்லடைப்பு, தொந்த கல்லடைப்பு என்பனவாகும். தேகத்தில் சில காலம் இருந்து பிறகு சலப்பையில் (நீர்ப்பையில்) வந்து இறங்கி ஆண்குறியை வலிக்கச் செய்யும்.

வாதக்கல்லடைப்பு

தரித்து நாபிக்குங்கீழ் சுருக்காய் குற்றிச்
சலமலந்தான் வீழாமற் றம்ப மாகி
வரித்துமே லிங்கத்தில் வலியு மாகி
மருவியதோர் பொத்தியெலாஞ் சுரந்து கட்டி
திரித்தியே கிடைகொடாப் பிரட்ட லாகித்
தேம்பியே மூச்சுமாய் வயிறு முப்பும்
உரித்ததோர் சதைபோல உவர்ப்பு மாகும்
ஓங்கியதோர் வாதக்கல்ல டைப்பு தானே 729

நாபிக்கு கீழே சுருக்கென்று குற்றும், மலமும் சிறுநீரும் செல்லாது. ஆண்குறியில் வலியுண்டாகும். வயிற்றில் எல்லாம்

சுரந்து நீர்கட்டும். படுக்கமுடியாது. வயிறு பிரட்டும். சுவாசம் அதிகப்படும். வயிறு முட்டும், உரித்த சதைபோல் உவர்ப்புண் டாகும். இவை வாதக்கல்லடைப்பின் குணங்களாகும்.

பித்தக் கல்லடைப்பு

அடைப்பாகிச் சலந்தானு மருவ லாகி
அயங்காச்சிச் சொருகினாற் போலே காணும்
புடைப்பாகப் பொற்றியெங் கும்பு ழுக்கமாகிப்
பூட்டுபோல் பிகுவாகிப் பிரட்ட லாகும்
மடைப்பாகி உதிரநிற மாய்க்கல் லாகி
வந்திழிந்து லிங்கத்தில் மாட்டிக் கொள்ளும்
குடைப்பாகிக் குற்றலாய்க் கூச்ச லாகிக்
குதட்டுமே பித்தக்கல் லடைப்பு தானே 730

நீர்த்தாரை அடைபட்டு சிறுநீர் வருவது குறைந்துபோகும் இரும்பைக் காய்ச்சி சொருகியதுபோல வலிக்கும். அடிவயிற் றில் புழுக்கமாகி பூட்டுபோல பிகுவாகி பிரட்டலாகும். இரத்த நிறத்துடன் கற்கள் காணப்படும். அக்கற்கள் ஆண்குறியில் வந்து சிக்கும். குடைந்து குத்தலெடுக்கும். கூச்சமுண்டாகும். இவை பித்தக்கல்லடைப்பின் குணங்களாகும்.

சிலேத்துமக் கல்லடைப்பு

தானான தொப்புளிலே வில்லு போலச்
சலியாமற் சுரந்துமே சற்றே குற்றும்
ஏனான காலோடு கைகள் சந்து
இடுப்புதான் குடைச்சலாயி சிவு காணும்
வேனான லிங்கத்தின் வெண்மை தன்னில்
விறுவிறென் றேகடுப்பாகி வியர்வை யாகும்
தேனான வெளுப்புக்கல் சிறுகல் லாகச்
சிக்கலாய் வந்திறங்குச் சேட்பந் தானே 731

தொப்புளில் வில்போல் குத்தும், கால் கை முட்டுகளும் இடுப்பும் குடைச்சலெடுக்கும். இழுப்புண்டாகும். ஆண்குறி மொட்டில் விறுவிறுவென்று கடுப்புண்டாகும். வியர்வை அதிகமாகத் தோன்றும். வெளுத்த கற்கள் சிறிய அளவில் சிறுநீரோடு வந்திறங்கும்.

தொந்த கல்லடைப்பு

வந்திறங்கும் நீர்த்தாரை யடியிற் றானும்
மாவருத்த முண்டாகி வலியு மாகி
நொந்திறங்கி நீர்தானு மருவி பாயும்
நொய்தான சிறுமணல் போல் நொறுங்கிக் கல்லான்
சந்திறங்கி நீர்வழியில் வந்து வீழும்
தாக்கான சிறங்கைக்கல் தினமொன் றுக்கு
துந்திறங்கித் தினந்தினமு மிழந்து கொல்லும்
தொந்தமாங் கல்லடைப்புச் சூட்டி டாயே 732

நீர்த்தாரையின் அடியில் அதிக வருத்தம் உண்டாகி வலிக்கும். நீர் குறைந்து இறங்கும். நீர்த்தாரை வழியே சிறுமணல் போல் உள்ள சிறுகற்கள் ஒரு கையளவு தினமும் விழும் தினமும் வலியுண்டாகி வேதனை தரும். இது தொந்த கல்லடைப்பின் குணமாகும்.

சாத்தியம்

சூட்டிய சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
சுளுக்காகும் வாதத்தின் கல்ல டைப்பு
பூட்டிட்ட பித்தத்தின் கல்ல டைப்புப்
புகழான சேட்டுமத்தின் கல்ல டைப்பு
மூட்டிட்ட இதுமூன்று மசாத்ய மாகி
முனையான மருந்துகளிற் செம்மை யாகும்
தோட்டிட்ட தொந்தமாங் கல்ல டைப்புத்
தொடுசுறவே கொல்லுமிது சூட்சந் தானே 733

வாதக் கல்லடைப்பு, பித்தக் கல்லடைப்பு, சிலேத்தும கல்லடைப்பு ஆகிய மூன்றும் முறையான மருத்துவத்தால் குணமாகும். தொந்தக் கல்லடைப்பு நோயாளியை கொன்றுவிடும்.

சூட்சமெல்லாஞ் சிவன்சொல்ல மாயி சொல்லத்
துரியமா நந்திசொல்ல தன்வந்திரி சொல்ல
ஆட்சமெல்லா மசுவினியாந் தேவர் சொல்ல
அதீதகமா மசுவினியுமகத் தியர்க்குச் சொல்ல
பூட்சமெல்லாம் புலத்தியர்தான் றேரையற்கு சொல்ல
புளகித்து யூகியென்ற முனியாம் நானே
தீட்சமெல்லாஞ் செகத்தோர்கள் பிழைக்க வென்று
செப்பினேன் சகலருக்குந் தெரியத் தானே 734

சிவனும், பார்வதியும் சொல்ல, பிறகு நந்தியும், தன்வந்திரியும் சொல்ல, அசுவினித்தேவர் சொல்ல, புலத்தியர் தேரையர்க்கு

சொல்ல அவர், யூகிமுனியாகிய எனக்கு கூற உலகத்தில் உள்ளவர்கள் பிழைக்கட்டுமென்று நான் எல்லோருக்கும் இந்நூலை விவரித்தேன்.

மூத்திரிக்கிரிச்சரம்

தெரியவே கிரிச்சரத்தின் செயலைத் தானுஞ்
செப்பவே நாலுவகைச் சீரு மாகும்
உரியவே வாதமூத்தி ரக்கி ரிச்சம்
உகப்பான பித்தமூத்தி ரக்கி ரிச்சம்
பரியவே சிலேத்துமமூத்தி ரக்கி ரீச்சம்
பாங்கான மேகமூத்தி ரக்கி ரிச்சம்
நரியவே கிரீச்சரந் தானால தாகும்
நாட்டமாய் உற்பத்திந விலக் கேளு 735

மூத்திரக் கிரிச்சரம் நாலுவகையாகும். அவை வாத மூத்திரக் கிரிச்சரம், பித்த மூத்திரக் கிரிச்சரம், கப மூத்திரம் கிரிச்சரம், மேகமூத்திரக் கிரிச்சரம் ஆகும். இனி அவை உற்பத்தியாகும் விதத்தைக் கேட்பாயாக.

வரலாறு பெயர் குணா குணம்

நவிலவே நாரியரைத் துரோகம் பண்ணி
நடுவிலே கைவிட்டுந ழுவி னோர்க்கு
குவிலவே குழந்தைகள்தான் பசித் திருக்கக்
கூடவேவைத் துண்ணாக்கொ டுமை யோர்க்கு
தவிலவே தவிச்சுவந்த பேர்க ளுக்குத்
தாகந்தான் றவிர்க்காத சண்டா ளர்க்கும்
கவிலவே மூத்திரமாங் கிரிச்சம் வந்து
கலக்கு மென்றுமாமுனி வர்கரு தினாரே 736

பெண்ணைத் துரோகம் செய்து நடுவில் கைவிட்டு நழுவிச் சென்றவர்களுக்கும், குழந்தைகள் பசித்திருக்க உணவு தராதவர்களுக்கும், தண்ணீர் தாகத்துடன் வந்தவர்க்கு தண்ணீர் தராதவர்க்கும் மூத்திர கிரிச்சரம் வந்து சேரும்.

கருதியே மாப்பண்டங் கதித்து உண்ணல்
காலங்கள் மாறியேமி கப்பொசித்தல்
பருதியே பகல்தனிலேஸ் திரிசங் கித்தல்
பகல்த னிலேபால்கொள்ளல் பகலுறங்கல்

நிருதியே நிசிதன்னிற் சயனஞ் செய்தல்
நிந்தையாம் லாகிரிகள் நிரம்ப வுண்ணல்
வருதியே அக்கினியில் சஞ்ச ரித்தல்
மகத்தான கிரிச்சரத்தின் மருவு வாரே 737

மாப்பண்டங்களை அதிகம் உண்ணுதல், காலநிலை அடிக்கடி மாறுபடுதல், பகலில் பெண்போகம் செய்தல், பகலில் பால் குடித்தல், பகலில் உறங்குதல், நடு இரவுவரை விழித்திருத்தல், லாகிரி வஸ்துக்கள் அதிகம் உண்ணுதல், அதிக நேரம் தீயின் அருகில் இருத்தல், இவையனைத்தும் மூத்திர கிரீச்சரத்தை உண்டு பண்ணும்.

வாதமூத்திர கிரிச்சரம்

மருவவே மேகம் வந்து உற்ப வித்தல்
வளர்நாபி தன்னிற்றுன் மாமிசஞ் சிக்கி
துருவவே சுக்கிலத்தால் மாமிச முற்றிச்
சுழன்றுமே தம்பித்து வாய்வு தன்னால்
சிருவவே சிறுநீர்வீழ்கு தற்றான் சிக்குந்
தேகமெங்குந் துளைத்துமே கடுப்பு மாகும்
அருவவே துன்மாமிசம் கறுப்பாய் வீழும்
அருக்குமே வாதத்தின்கி ரிச்சரந் தானே 738

தொப்புளில் மாமிசம் சிக்கி சுக்கிலத்தால் அது மேலும் முற்றி வாயுவினால் ஸ்தம்பித்துப் போகும். சிறுநீர் தடைபட்டு போகும். உடல் எங்கும் துளைத்து கடுப்புண்டாகும். துர்மாமிசம் கருப்பாய் சிறுநீருடன் விழும்.

பித்தமூத்திர கிரிச்சரம்

தான்மூத்திர மஞ்சளித்து மிகச் சிவக்கும்
தளர்ந்துமே கைகாலு மசதி யாகும்
பானருக்கிச் சிறுகலா யருவி பாயும்
பாரமாங் குதமண்டமி லிங்கந் தானும்
கான்வாயுதான் மீறிவயிறு உப்பும்.
களகளென்று இரைச்சலாய்க் ககி யேறும்
வேன்காயு வாயுலர்ந்து மிரட்சி யாகும்
விடும்பித்த மூத்திரத்தின் விபரந்தானே 739

மூத்திரம் மிகவும் மஞ்சளாகப் போகும். கைகால் அசதியாகும். நீர் அருகி சிறிதாக செல்லும். குதம், அண்டம் ஆகியவற்றில் வாய்வு மீறி வயிறும் உப்பும், இரைச்சல் உண்டாகும். வாய்

உலர்ந்துபோகும், மிரட்சியுண்டாகும். இவை பித்த மூத்திரத்தின் குணங்களாகும்.

சிலேத்தும கிரிச்சரம்

விபரமாய் வற்றியண்டங் குதம்வ லிக்கு
மேனியுமோ வெளுப்பாகி மிகக்கண் பச்சை
திபரமாய்க் கிறுகிறுத்து தியக்க மாகும்
தேகமெல்லாம் மிகக்கடுப்புச் சொறிச்ச லாகும்
அபரமாய ரிக்கிநீர் எரிச்ச லாகும்
அடிக்கடிக்கு நீர்கசிந்து அலைச்ச லாகும்
நிபரமாய் லிங்கத்திற் கூச்ச லுண்டாம்
நீச்சான சேட்டுமத்தின் கிரிச்சந் தானே 740

உடல் வற்றி அண்டம் குதம் ஆகியன வலிக்கும், மேனி வெளுப்பாகும். கண் பச்சையடையும். கிறுகிறுத்து தியக்கமாகும். தேகமெல்லாம் கடுப்புண்டாகி சொறி உண்டாகும். சிறுநீர் எரிச்சலுடன் செல்லும். அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போலிருக்கும். ஆண்குறியில் கூச்சம் உண்டாகும். இவை கப கிரிச்சரத்தின் குணங்களாகும்.

மேகமூத்திர கிரிச்சரம்

கிரிச்சமாய டிக்கடிக்கு வெள்ளை காணும்
கிட்டுமே நீர்த்தாரை யடியிற் றானும்
புரிச்சமாய் புவெச்சம் போல விழும்
புடுங்குமே அடிவயிற்றிற் புழுக்க ளூர்ந்து
விரிச்சமாய் வெள்ளைதான் கவிச்ச டிக்கும்
விம்மும்போது உடலுச்சிம யிரைத் தூக்கும்
குரிச்சமாங் குதமிலிங்கம் வேக்கா டுண்டாம்
குமுறுமே மேகத்தின் கிரிச்சந்தானே 741

அடிக்கடி வெள்ளைவிழும். நீர்தாரை அடியில் புறா எச்சம் போல விழும். அடிவயிற்றில் புழுக்கள் ஊர்வது போலிருக்கும். வெள்ளை கவிச்சடிக்கும். ஆண்குறி விம்மும்போது தலை உச்சிமயிர் சிலிர்ந்து நிற்கும். குதம், ஆண்குறி இரண்டும் வேக்காடு உண்டாகும். இவை மேகக் கிரிச்சரத்தின் குணங்களாகும்.

சாத்தியம் - அசாத்தியம்

மேகத்தின் கிரிச்சந்தான் பித்த கிரிச்சம்
மிகவிரண்டு குணமாகி விரைந்து போகும்
தேகத்தில் இதுரெண்டு மசாத்தி யமாகிச்
செயமான மருந்தினாற் றிரும்ப லாகும்

வாதத்தின் வாதமுமூத்திர கிரிச் சம்
மருவுகின்ற சேத்துமமூத் திரக் கிரிச்சம்
பாதத்தி னிதிரண்டு மசாத்ய மாகும்.
பாடுபட்டுந் தீராது பரிந்து பாரே 742

மேகக் கிரிச்சம், பித்தகிரிச்சம் ஆகிய இரண்டும் குணமாகும். மற்ற இரு வகைகளான வாத மூத்திர கிரிச்சம், கப மூத்திர கிரிச்சரம் ஆகியவை தீராதவை ஆகும்.

இருமல் - உற்பத்தி-பெயர் குணம்

பாரென்ற ஆறுசாத்தி ரத்தி னுள்ளே
பலிப்பான முதல்சாத்திரம் வைத்தி யந்தான்
ஆரென்ற வயித்தியந்தான் ஆயுரு வேதம்
அடங்கலுமே யேழுலட்சங் கிரந்த மாகும்
வாரென்ற வடமொழியை யெல்லாம் பார்த்து
வகையெல்லாம் பொறுக்கியே வடி நூலாகத்
தேனென்ன முனிபாதஞ் சிரசில் வைத்துச்
செப்பினேன் யூகியாம் முனிநான் றானே 743

ஆறுவகை சாத்திரங்களில் முதல் சாத்திரம் வைத்தியமாகிய ஆயுள்வேதம் ஆகும். ஏழுலட்சம் கிரந்தங்கள் அடங்கியது. வடமொழி நூலைப் பார்த்து தேர்ந்து எடுத்து இந்நூலை முனிவர் பாதத்தில் தலையை வைத்து பணிந்து யூகிமுனியாகிய நான் வெளிக் கூறுகின்றேன்.

முனியான இருமலது ஐந்து மாகும்
முரணு மருந்தீடி ருமல்முழக் கமாக
கனியான மதுவிருமல் கஞ்சாவி னிருமல்
கனமான சுரவிருமல் கதித்தெழுந்த
தினியான இரத்தமா மிரும லோடு
செனிக்கின்ற இருமலது ஐந்து மாகும்
அனியான ஐந்தினிட ஆண்மை தன்னை
அதினுடைய உற்பத்தி யறியக்கேளே 744

இருமல் ஐந்து வகையாகும். அவை மருந்தீடிருமல், மது இருமல், கஞ்சா இருமல், சுர இருமல், இரத்த இருமல் ஆகியவை யாகும். இனி அவற்றின் உற்பத்தி குணம் ஆகியவற்றைக் குறித்துக் கூறுகின்றேன்.

அறியவே மனதிலொன்று வாக்கி லொன்றும்
அசடாகப் பேசுகின்ற அழும்ப னார்க்கும்
குறியவே தானியத்தைத் தான்கு றைத்தும்
கொடுப்பார் தன்னருகிருந்து குற்றஞ் சொல்லி
தறியவே தடுத்தோர்க்குந் தண்ணீர் பந்தல்
தனைக் கெடுத்தோர் பெரியோர்கள்த மைநிந் தித்தோர்
மறியவே வழக்கோரஞ் சொன்ன பேர்க்கும்
வந்துமே இருமலது மருவுந் தானே 745

மனதில் ஒன்றும் பேச்சில் ஒன்றுமாகப் பேசுபவர்கள், அழும்பர்கள், தானியத்தை அளவு குறைத்து தருபவர்கள், அருகிலிருந்தே கெடுத்தோர்கள், தண்ணீர் பந்தலை அழித்தவர்கள், பெரியவர்களை நிந்தித்தவர்கள், வழக்கில் ஒருபட்சமாக நடந்து கொள்பவர்கள் ஆகியவர்க்கு இருமல் நோய் உண்டாகும்.

மருவுமே மனந்தன்னிற் கிலேசத் தோர்க்கும்
மங்கையர்கள் கலவியினில் மாழ்கி னோர்க்கும்
பருவுமே கஞ்சாவைப் பருகி னோர்க்கும்
பாழான சாராயங்கு டிக்கின் றோர்க்கும்
நருவுமே நரர்கள்தன்னில் நடுங்கி னோர்க்கும்
ராமாறு பட்டினியே நல்கி னோர்க்கும்
இருவுமே யெரியண்டை யிருக்கின் றோர்க்கும்
இருமலென்ற வியாதிவந்து எய்துந் தானே 746

மனதில் கிலேசமுள்ளவர்க்கும், பெண்போகத்தில் அதிகம் ஈடுபடுபவர்க்கும், கஞ்சாவை குடித்தவர்க்கும், சாராயம் குடித்தவர்க்கும், மனிதர்களைக் கண்டு பயப்படுபவர்க்கும், அதிக பட்டினி யிருப்பவர்க்கும், தீயினருகில் இருப்பவர்க்கும் இருமல்நோய் வந்து சேரும்.

மருந்தீடு இருமல்

எய்துமே மருந்திரும லியம்பக் கேளாய்
எழிலுடம்பு வற்றியே இரைப்புண் டாகும்
அய்துமன் னமரோசிகமா மழற்றுந் தேகம்
அடிக்கடிக் குப்பயமுமா யாலா பிக்கும்
வைதுவரட் டிருமலாய் மயக்க மாகும்
வாய்தானும் புலால்நாறும் வழவ ழக்கும்
செய்துசிரத் தினில்நின்று மயக்கி வைக்கும்
சீரணமா மருந்தீட்டின் செயலி தானே 747

மருந்தீடு இருமல் நோயைக் கேட்பாயாக உடம்புவற்றி இரைப்பு உண்டாகும். உணவு உண்ணப்பிடிக்காது. தேகம் அழற்சியுறும். அடிக்கடி பயந்து பிதற்றுவர், இருமலுடன் மயக்க

முண்டாகும். வாயில் புலால் நாற்றம் உண்டாகும். நாக்கு வழவழக்கும். இவை மருந்திடு இருமலின் செயல்களாகும்.

கஞ்சா இருமல்

செயலான கஞ்சாவைக் குடிக்கின் றோர்க்கும்
திரட்சியா மபின்மருந்து தின்ற பேர்க்கும்
கயலான லாகிரிகள ருந்தி னோர்க்கும்
கரும்பிச் சிற்சேர்ந்து மேகருகி னூறல்
உயலான உடம்பதுதான் மிகவே வற்றி
உரோமத்தின் வேர்செத்து ஒளிவு குன்றும்
வயலான இருமலொடு மனம றுத்து
மயங்குமே கற்பத்தினி ருமல் தானே 748

கஞ்சாகுடிக்கின்றவர்க்கும், அபின் போன்ற லாகிரிகள் உண்பவர்க்கும், பித்தத்தில் சேர்ந்து மேகநோய் உண்டாகி ஊறல் எடுக்கும். உடல் வற்றும், மயிர்கால் வலுவிழந்து மடிந்து ஒளிகுன்றும். இருமலுடன் மனம் வெறுக்கும். இவை கஞ்சா இருமலின் குணங்களாகும்.

மது இருமல்

மயங்கியே உடம்பெங்கு தினவு மாகும்
மார்போடு நெஞ்சுலர்ந்து கண்டம் வற்றும்
அயங்கியே அடிக்கடிக்கு இரும லாகும்
அடிமூலம் நாபிமட்டும் வேக்கா டுண்டாம்
வியங்கியே யீரலெல்லாம் வெதும்ப லாகும்.
விரணமுண் டாய்ச்சிரசோடு மிரட்சி யாகும்.
சயங்கியே சாராயங் கள்ளு தன்னால்
தாங்குமே மதுவென்ற விருமற் றானே 749

உடலில் தினவுண்டாகும். மார்பு நெஞ்சு ஆகியவை உலர்ந்து கண்டம் வற்றும். அடிக்கடி இருமல் உண்டாகும். அடிமூலத்திலிருந்து நாபிவரைக்கும் வேக்காடு உண்டாகும். ஈறுகள் எல்லாம் வெதும்பிவிடும். புண்கள் உண்டாகும் சிரசுடன் மிரட்சியுண்டாகும். சாராயம், கள் ஆகியவை அருந்துவதால் மது இருமல் உண்டாகும்.

சுர இருமல்

ஆண்மையாய் சுரமணுகி யங்கந் தன்னில்
அநேக நாள் செறுப்பாக்கா லாக்கை தானும்
காண்மையாய் கருதியே வுடலம் வற்றிக்
கனப்பாகிக் கணவிருமல் சுவாச முண்டாய்

மேன்மையாய் வெளுத்துமே கண்பச் சென்று
மிக்க நரம்பெல்லாந்தான் மிகத் தளர்ந்து
தூண்மையாய்த் தோல் திரைந்து துஞ்ச லுண்டாம்
சுரவிருமற் குணமென்றே சொல்ல லாமே 750

அதிக நாள் சுரமடிக்கும். உடல் வற்றி இருமல், மேல்மூச்சு உண்டாகும். உடல் வெளுத்து நரம்பெல்லாம் தளர்ந்து விடும். தோல் சுருங்கும். அதிக உறக்கமுண்டாகும். இவை சுர இருமலின் குணமாகும்.

இரத்த இருமல்

சொல்லவே யமர்க்களத்திற் சண்டை தன்னில்
துடர்ந்து யுத்தம்பண்ணுகையிற் போர்க்க ளத்தில்
வெல்லவே மிகரத்தங் கண்ணிற் கண்டு
மிரட்சியாய்த் திகில் தன்னிலி ருமல் காணும்
கொல்லவே குகைதன்னிற் பந்தம் வைத்துக்
கொளுத்தினாற் போலவே கொடுந்தீ காணும்
இல்லவே இருமலுக்கு இரத்த வாசம்
எடுக்குமே யிரத்தத்தி னிருமல் தானே 751

அதிக அமர்க்களம் செய்யும்பொழுதும், சண்டையிடும் பொழுதும், யுத்தம் செய்யும்போதும், கண்கள் சிவந்து திகிலடைந்து இருமல் உண்டாகும். குகையில் பந்தத்தைக் கொளுத்தினாற் போல அதிக வெப்பமுண்டாகும். இருமலின் போது இரத்த வாடை அடிக்கும். இவை இரத்த இருமலின் குணங்களாகும்.

சாத்தியம் - அசாத்தியம்

இருமலது ஐந்துக்குள சாத்தி யந்தான்
எளிதான மருந்தீடு இருமல் நாளும்
மருமலது இருமல்சு ரத்தி னோடு
மார்க்கமா மிதுமூன்று சாத்ய மாகும்
கருமலொடு கற்பமா மிருமலோடு
கடிதான ரத்தத்தினி ருமல் தானும்
அருமலது இது ரெண்டு மசாத்ய மாகும்.
ஆயுருவே தத்தினுள்ள ஆண்மை தானே 752

இருமல் ஐந்து வகைக்குள் மருந்தீடு இருமல், சுர இருமல் மது இருமல் ஆகிய மூன்றும் சாத்தியமாகும். கஞ்சா இருமல், இரத்த இருமல் ஆகிய இரண்டும் அசாத்யமாகும்.

கல்லடைப்பு ரோக நிதானம் - முற்றிற்று

விப்புருதிரோக நிதானம்

ஆண்மையாம் விப்புருதி ஏழு மாகும்
அதினுடைய நாமத்தைய றையக் கேளாய்
கேண்மையாங் கெர்ப்பவிப்பு புருதி யோடு
குவளைவிப் புருதியாம்பித் தவிப்பு ருதி
தாண்மையாஞ் சந்துவிப்பு ருதி யாகும்
தரித்தோடும் விப்புருதிசேட்ப விப்பு ருதி
வாண்மையாம் வாதவிப்பு ருதி யோடு
வகையாக ஏழுவித வளப்பந் தானே 753

விப்புருதி ஏழுவகையாகும். அவற்றின் பெயரைக் கேட்பாயாக. கெர்ப்பவிப்புருதி, குவளைவிப்புருதி, பித்த விப்புருதி, சந்துவிப்புருதி, ஒடு விப்புருதி, சேட்பவிப்புருதி, வாதவிப்புருதி ஆகியனவாகும்.

வளப்பமெல்லா முப்புரைப்பு மிகுதி யாலும்
வகைவகையாய் கிழங்குவகை அருந்த லாலும்
தளப்பமெல்லாஞ் சதைதுன்னி ரத்த மீறி
தரித்துமா மிசங்கள்துன்னித் தாக்க லாலும்
களப்பமெல்லாங் காரசா ரங்கள் மிஞ்சில்
கணக்குமிஞ் சிப்பெண்ணோடே கருத லாலும்
அளப்பமெல்லா மாறினதோ ரன்னந் தன்னை
அருந்தலால் விப்புருதி யணுகுந் தானே 754

உப்பு, உரைப்பு அதிகமாக உண்பதாலும், கிழங்கு வகைகளை அதிகம் உண்பதாலும், இரத்தத்தை மீறி சதையைத் தாக்குவதாலும், கார சாரங்கள் அளவில் மிஞ்சி விடுவதாலும் அளவுக்குமிஞ்சிய போகத்தாலும் கெட்டுப் போன உணவினை உண்பதாலும் விப்புருதி நோய் உண்டாகும்.

அணுகுமே யடைக்கலத்தை காட்டி னோர்க்கும்
ஆகாத அழிவுவழக் குரைத்த பேர்க்கும்
நணுகுமே நெல்லதனைக் குறைத்த பேர்க்கும்
நீரிலே அம்மணமாய் நிற்கின் றோர்க்கும்
தணுகுமே தனக்குத்தான் மூத்த பெண்ணைத்
தருக்கியே சம்போகஞ் செய்த பேர்க்கும்
பணுகுமே பரமசிவ னடியார் தம்மைப்
பழிக்கின்றோர் விப்புருதி படும்பா டாமே. 755

அடைக்கலம் புகுந்தவர்களை காட்டிக் கொடுத்தவர்களுக் கும், பொய் வழக்கு செய்தவர்களுக்கும், நெல்லை குறைத்து

அளந்தவர்களுக்கும், நீர்நிலையில் துணியின்றி நின்றவர்களுக்கும், தனக்கு மூத்த பெண்ணுடன் போகம் செய்தவர்களுக்கும், சிவனடியார்களை பழித்தவர்களுக்கும் விப்புருதி உண்டாகும்.

கெர்ப்பவிப்புருதி

பாடாக வயிரதுதான் பொருமிக் கொண்டு
பக்கங்கள் கீழ்வயிறு புண்போ னோகும்
ஓடாகப் புளியிலைபோ லுலரு மேனி
உதிரந்தான் றிரண்டுகீழ் வயிற்றிற் கட்டும்
கேடாகக் கெர்ப்பம்போ லுலவல் காணும்
கெட்டியாய் மலமிறுகிப் புழுக்கை போலாம்
பூடாகச் சிரசுதலை வலியு மாகும்.
புண்போலாங் கெர்ப்பவிப் புருதி தானே 756

வயிறு பொருமும். வயிற்றின் இருபக்கங்கள். கீழ் வயிறு ஆகியன புண்போல நோகும். புளியம் இலை போல மேனி உலர்ந்து வற்றிவிடும். கொ்ப்பம் போல வயிற்றில் அசைவு காணப்படும். தலைவலி உண்டாகும். இவை கெர்ப்ப விப்புருதியின் குணங்களாகும்.

குவளை விப்புருதி

தானென்ற இடுப்போடு முள்ளந் தண்டு
தனித்த இருபுறக்குய்யம் விலாக்கள் நெஞ்சு
கோனென்று நடுக்கியே குளிர்வெ துப்பும்
குற்றலா யிருமியே கோழை யாகும்
ஊனென்று உதிரவலி தானுண் டாகி
உக்கிரமாய்க் கொடிகொடியா யுதரஞ் சீயாம்
கூனென்று வலித்துமே குறுகு மங்கம்
குவளைவிப் புருதியிடக் கூர்மை தானே 757

இடுப்பு முள்ளந்தண்டு, பிட்டங்கள், குய்யம், விலாக்கள், நெஞ்சு ஆகியவை நடுங்கி குளிர் வெதுப்பும். குற்றலாக இருமியே கோழை உண்டாகும். வயிற்றில் வலி உண்டாகும். இரத்தமும், சீழும் ஒழுகும். அதிகமாக வலிக்கும். அங்கம் குறுகும். இவை குவளை விப்புருதியின் குணங்களாகும்.

பித்த விப்புருதி

கூர்மையாய் இரத்தமாய் வாந்தி யாகும்
கொடுவெளுப் பாயுடம் பெங்குந் தினவு மாகும்
நார்மையாய் நடுக்கல்சித்த பிரமை யாகும்
நண்ணெரிய கொட்டாவிய ருசி யுண்டாம்

தூர்மையாய்ச் சுரமோடு தாக மாகும்
சுயங் குருதிகண்டித்து கட்டி யாகும்.
வார்மையாய் வயிறதுவு முளைவு மாகும்
வகுத்தபித்த விப்புருதி வண்மை தானே 758

இரத்தமாக வாந்திவரும். உடல் அதிக வெளுப்பாக ஆகிவிடும். உடல் தினவெடுக்கும். நடுக்கலுண்டாகும். சித்த பிரமையுண்டாகும். கொட்டாவி உண்டாகும். சுவையின்மை ஏற்படும். சுரத்தோடு தாகமும் உண்டாகும். இரத்தம் தடித்து கட்டியாகிவிழும். வயிறு உளைச்சலுண்டாகும். இவை பித்த விப்புருதியின் குணங்களாகும்.

சந்துவிப்புருதி

வண்மையாய்ப் புத்துபோல வயிற்றுப் பக்கம்
மகத்தான சங்கடமாய்த் திரண் டெழுந்து
கண்மையாய்க் கதித்துமே கண்டிப் பாகிக்
காரமொடு சத்திரத்திற் கசக லாகும்,
திண்மையாய்ச் செடமெங்குஞ் செழும்ப லாகும்
சிறித்துமே மார்படைப்புத் தியக்க மாகும்
தண்மையாய் மேனியது சழுக்க மாகும்.
சந்துவிப் புருதியிடச் சார்வு காணே 759

வயிற்று பகுதியில் புத்துபோல திரண்டெழும். கார மருந்து சிகிச்சையினாலும், சத்திர சிகிச்சையினாலும் இந்நோய் தீரும். உடல் பூரித்து போயிருக்கும். மார்பு அடைக்கும். கண்ணிருட்டும். இவை சந்துவிப்புருதியின் குணங்களாகும்.

ஓடுவிப்புருதி

சார்வாக வோடியே ரத்தஞ் சூழ்ந்து
தங்கியே கட்டியாய்ச் சார்ந்தெ ழும்பும்
தேர்வாக சடலமெங்குந் திருக லாகச்
செழுமையாய்ச் சிவந்துமே வெளுப்பு மாகும்
ஆர்வாக வங்கங்கள் எலும்புக் குள்ளே
அழன்றுமே விரணங்க ளாகக் காணும்
ஊர்வாக வுடம்புவெறும் பூர்த லாகும்
உண்மையா யோடுவிப்பு ருதி தானே 760

உடலில் அங்கங்கே இரத்தம் சூழ்ந்து கட்டிகட்டியாகி காணப்படும். உடலெங்கும் திருகலாகி சிவந்து வெளுப்படைந்து காணப்படும். உடலுறுப்புகள் எலும்புக்குள் உழன்று

புண்ணாகிப் போகும். உடலில் எறும்பூர்தல் போல காணப்படும். இவை ஓடு விப்புருதியின் குணங்களாகும்.

சிலேத்தும விப்புருதி

உண்மையாய் மார்புதனிற் றான டக்கும்
ஊறியே வாய்நீரு மிகத் தித்திக்கும்
துண்மையா யுடம்பதனிற் சோரும் வீங்கும்
சுளுவான வருசியொடு சுரமு முண்டாம்
வெண்மையா யுடம்பெங்கும் விதமு மாகும்
வெளியான மலந்தனிற் பச்சை யாகும்
பெண்மையா யுடல்கருகிப் பேதை யாகும்
பிறிவான சேட்டுமவிப் புருதி தானே 761

மார்பில் அதிகம் கோழை கட்டி நெஞ்சில் கட்டி யுண்டாகும். வாய்நீர் இனிப்புச்சுவையுடன் இருக்கும். உடல் வீங்கும். சுவையின்மையொடு சுரமுண்டாகும் உடல் பலவர்ண மாகும். மலம் பச்சையாக செல்லும், உடல் கருகி பேதையாய் ஆகிவிடுவர். இவை சிலேத்தும விப்புருதியின் குணங்களாகும்.

வாதவிப்புருதி

சேட்டுமாஞ் சதைதிரண்டு சிக்கித் துன்னித்
துடுக்கமா யீரலிலே மிகப்பொ ரித்து
வாட்டுமாம் வாய்கசக்கும் விக்க லுண்டாம்
மருவுசித்தப் பிரமையுமாம் வடிவெலா நோம்
வேட்டுமமாங் குடலுக்குட் புரட் டலாகும்
மிகவிரத்தங் கொதித் தெழுந்தே மிடுக்கும் போகும்
நாற்றமாம் நாவடியுந் தடிப்பு காணும்
நளிர்வாத விப்புருதி நாடுங் காலே 762

சதையானது திரண்டு சிக்கி எழுந்து நிற்கும். ஈரல் வெந்து போகும். வாய் கசக்கும். விக்கலுண்டாகும். சித்தப் பிரமை உண்டாகும். உடல் நோகும், குடலுக்குள் புரட்டல் உண்டாகும். நாக்கின் அடியில் தடிப்பு காணப்படும். இவை வாத விப்புருதியின் குணங்களாகும்.

சாத்தியம்-அசாத்தியம்

நாடுமே சாத்தியத்தை நவிலக் கேளாய்
நலமான கெர்ப்பவிப் புருதி யோடு
கூடுமே குவளைவிப் புருதி தானும்
குணமான பித்தவிப்பு ருதி யொக்க

ஓடுமே ஓடுவிப்பு ருதி யோடு
உகந்து இருநான்குந்தா னசாத்திய மாகும்
வாடுமே வாதவிப்பு ருதி சேட்ப
மகாசந்து விப்புருதி அசாத்ய மாமே. 763

விப்புருதி ரோகதில் சாத்தியத்தை கூறுகிறேன் கேட்பாயாக. கொர்ப்பவிப்புருதி, குவளை விப்புருதி, பித்தவிப்புருதி, ஒடு விப்புருதி ஆகியவை சாத்தியமாகம். வாத விப்புருதி சிலேத்தும விப்புருதி, சந்து விப்புருதி ஆகியன அசாத்தியமாகும்.

விப்புருதிரோக நிதானம் – முற்றும்

கரப்பான் ரோக நிதானம்

ஆமென்ற கரப்பான்தான் ஏழுவித மாகும்
அடங்காத வாதத்தின்க ரப்பா னோடு
காமென்ற கண்டமாங் கரப்பா னாகும்
கடுகியதோர் வறட்சியாங் கரப்ப னோடு
தேமென்ற திமிர்வாதக் கரப்பான் றானும்
சிரசினிலே யெழுகபா லக்க ரப்பான்
பேமென்ற பித்தமாங் கரப்ப னோடு
பெரிய சேட்டுமக்கரப்பான் பெயர்தா னேழே. 764

கரப்பான் ரோகம் ஏழு வகையாகும். அவை வாத கரப்பான், திமிர்வாத கரப்பான், கண்ட கரப்பான், வரட்சி கரப்பான், கபால கரப்பான், பித்த கரப்பான், சிலேத்தும கரப்பான் ஆகும்.

பெயர்-குணா குணம்

ஏழான கரப்பானுற் பத்தி கேளாய்
ஏற்ற மாமிசங்கள் புசிக்கையாலும்
கூழான கம்புதினை வரகு சாமை
கொடிதான கிழங்குவகை யருந்த லாலும்
பாழான பெண் மாயை தன்னிற் சிக்கும்
பாங்கான விரதந்தான் முயற்சி யாலும்
தாழான பண்டங்கள் சமைத்துத் தின்னல்
தாக்குமே கரப்பான்றன் சாயல் தானே 765

கரப்பான் நோய் உற்பத்தியாகும் விதத்தைக் கேட்பாயாக அதிகம் மாமிசங்கள் உண்பதாலும், கம்பு, தினை, கேழ்வரகு, சாமை முதலிய தானியங்களையும், கிழங்கு வகைகளை அதிகம்

உண்பதாலும், பெண்போகம் அதிகம் செய்வதாலும் அதிக விரதம் இருப்பதாலும், கெட்ட பொருட்களை சமைத்து உண்பதாலும் இந்நோய் உண்டாகும்.

சாயலாய்த் தனக்குத்தான் மூத்த பெண்ணைத்
தழுவினோர் தாழ்ச்சியாஞ் சாதி தன்னில்
காயலாய்க் கலந்துண்டோர் கலகஞ் செய்தோர்
கர்ப்புடைய மங்கையரைக் கருதி னோர்கள்
வாயலாய் வாழ்மரத்தை வெட்டி னோர்கள்
மருத்துவர்கள் வண்ணார் நாவி தர்கள் கூலி
கூயலாய்க் கொடாதோர்கள் குருநிந் தித்த
கொடும்பாவி கரப்பானிற் குறிகொள் வாரே 766

தனக்கு வயதில் மூத்த பெண்ணுடன் போகம் செய்தவர் களுக்கும், கெட்ட குணமுடையவருடன் சேர்ந்துண்பதாலும், கலகம் செய்தவர்களுக்கும், கற்புடைய மங்கையரை அடைய நினைப்பவருக்கும், பசுமரத்தை வெட்டியவர்களுக்கும் மருத்துவர்கள், வண்ணான், நாவிதர் ஆகியோரின் கூலியை ஒழுங்காக கொடுக்காதவர்களுக்கும், குருவை நிந்திந்தவர்களுக்கும் கரப்பான் நோயுண்டாகும்.

வாத கரப்பான்

கொள்ளவே உடம்பெல்லாம் வெதும்பாய் நொந்து
குடைந்துமே மிகச்சுரந்து வீக்க மாகும்
விள்ளவே தேகமெல்லாம் புண்போல் நொந்து
வெடித்துமே புண்ணாகும் விரல்கள் சந்து
முள்ளவே முடங்கியே நரம்பு தானும்
மொழிகள் பக்கமிக்கமி டமிக வுலர்ந்து
மள்ளவே மேனியது வறண்டு காணும்
வாதமாங் கரப்பா ன்றன் வண்மை தானே 767

உடல் எல்லாம் வெதும்பி நோகும். குடையும், அதிகம் சுரந்து வீக்கமடையும். தேகம் எல்லாம் புண்போல வலிக்கும். தோல் வெடித்து புண்ணாகும். விரல்கள், முட்டுகள் ஆகியன முடங்கிவிடும். நரம்புகள் முட்டுகளுக்கு இருபக்கமும் உலர்ந்து மேனி வறண்டு போகும். இவை வாத கரப்பானின் குணமாகும்.

திமிர்வாத கரப்பான்

வண்மையா யுட்கார்ந்து எழும்பும் போது
வருத்தமாய் கால்கைகளி டுப்புச் சந்து
திண்மையாய் திமிர்த்துமே கரடு கட்டும்
செயலழிந்து வீங்கியேவெ டித்துப் புண்ணாம்

தண்மையாய் சடமெங்கு மூத லாகும்
தண்ணிர்தான் மிகத்தவித்துத் தனிச் சூடுண்டாம்
உண்மையாய் மேனியெங்கு முளைச்ச லுண்டாம்
உதறுமே திமிர்வாதக் கரப்பா னாமே 768

உட்கார்ந்து எழும்பொழுது கால்கைகள் இடுப்பு சந்து ஆகியன வலிக்கும். திமிர்த்துபோய் கரடு கட்டும். மூட்டுகள் செயலிழந்து வீங்கி வெடித்துப் புண்ணாகும் உடல் எங்கும் ஊதிப் போய்விடும். தண்ணீர் தாகம் அதிகமெடுக்கும். உடல் சூடடையும், உடல் எங்கும் உளைச்சல் தரும். இவை திமிர்வாதக் கரப்பானின் குணங்களாகும்.

கண்டக்கரப்பான்

தளிராகச் சிரமெங்கு மிகக்க னத்துத்
தலைகாது மண்டையெல்லாந் தடித்து நோகும்
நளிராக வருத்திவிக்கு நாத்த டிக்கும்
நலமான உடம்புதனிற் சொறியு மாகும்
குளிராகக் குளுந்துமே மயிர்க்கூச் சாகும்
கூப்பிட்டால் மிகப்பயக்குங் கூசுங் கண்தான்
களிராக முட்போலக் கண்டத் தன்னில்
கரகரக்குங் கண்டமாங் கரப்பா னாமே 769

தலையெங்கும் அதிகம் கனக்கும். தலை, காது, மண்டை ஆகியவை எல்லாம் தடித்து வலிக்கும். நாக்கு தடிக்கும் உடம்பில் சொறியுண்டாகும். குளிர்ந்து மயிர்க்கூச்சல் எடுக்கும். கூப்பிட்டால் பயந்துபோவார்கள், கண் கூசும். தொண்டை கரகரக்கும். இவை கண்டக் கரப்பானின் குணங்களாகும்.

வரட்சி கரப்பான்

கண்டமாய் மிகவீங்குங் குற்ற லுண்டாம்
கனமாக உடம்பெங்கு மிகவே ஊறும்
துண்டமா யுடம்பதைத்துச் சொறித லுண்டாம்
சோருமே யெந்நேரம யக்கத் தாலே
வண்டமாந் தானில்லா மலுடம்பு வற்றும்
மாறுபாடாய் பிதற்றிமறுகும் வார்த்தை
பிண்டமாய்க் கிடந்துருண்டு புலாலே நாறும்
பெருவரட்சிக் கரப்பான்றன் பேரி டாமே. 770

உடல் வீங்கும் குத்தலெடுக்கும். உடல் ஊதும், உடல் அதைத்து சொறியுண்டாகும். எந்நேரமும் மயக்கத்திலே இருக்கும். உடம்பு வற்றிப் போய்விடும், அதிகம் பிதற்றுவர் அல்லது ஏதும்

பேசமாட்டார்கள், புலால் நாற்றமெடுக்கும். இவை வரட்சிக் கரப்பானின் குணங்களாகும்.

திமிர்வாத கரப்பான்

பேராகத் தானெழுந்து நடக்கும் பொழுது
பேராமற் காலசந்து திமிர்த்து வீங்கி
வேறாக உடம்பெங்கும் வெடித்துப் புண்ணாம்
வெதும்பியே சரீரமெங்கும் பொருமலாகும்
தேறாக உடம்பெங்குந் திரைஞ்சு போகும்
திமிருதான் துண்டுதுண்டாய் சிதறிக் காணும்
பாறாகத் திமிர்வாதக் கரப்பா னென்று
பாரிலுள்ளோர் தனக்கிந்தப்பரி சாங்து காணே. 771

எழுந்து நடக்கும்பொழுது கால் அசந்து திமிர்ந்து வீங்கிப் போகும். உடல் எங்கும் வெடித்துப் புண்ணோடும். சதுரம் வெதும்பி பொருமல் உண்டாகும். உடல் எங்கும் திரைஞ்சு போகும். புண்கள் துண்டு துண்டாய் சிதறிக் காணப்படும். இவை திமிர்வாதக் கரப்பானின் குணங்களாகும்.

கபாலக் கரப்பான்

காணவே காதெல்லாம் தினவுண் டாகும்
கண்தினவாங் கண்டந்தான் கரக ரக்கும்
பூணவே கண்ணீரும் பீளை யுண்டாம்
பேச்சுமந்த மூக்கதனில் நீரோ பாயும்
தோணவே சிரசுதனிற் சொரித லுண்டாம்
தும்மல் மிகவுண்டாகுந் துடிக்கு நெற்றி
ஆணவே அண்ணாக்கி லழலுண் டாகும்
அடிநிகாத கபால கரப்பான்றா னாமே 772

காது, கண் ஆகியவை தினவுண்டாகும். தொண்டை கரகரக்கும். கண்ணீர் அதிகம் வடியும் பீளைசாடும். பேச்சு குறையும். மூக்கில் நீர்வடியும், சிரசில் சொறியுண்டாகும். அதிக தும்பலெடுக்கும். நெற்றி துடிக்கும். உள்நாக்கில் சூடு உண்டாகும். இவை கபால கரப்பானின் குணங்களாகும்.

பித்த கரப்பான்

தானாகக் கண்தூங்கி நடுவு வுந்தி
தளர்ந்துமே உட்சுரந்து வெதுப்புண் டாகும்
தூனாகக் கிறுகிறுக்கு முடலுஞ் சோறும்
சொரிந்துமே உடம்பு மஞ்ச ளிக்கும்

வேனாக வன்னத்தை இரங்கொட் டாது
மிடுக்கான தீபமந்தி த்துப் போகும்
பேனாக ஊருவது போலக் காணும்
பித்த கரப்பான்குணத்தின் பெற்றி யாமே. 773

கண்களில் தூக்கமிருக்கும். நடுவயிறு தளர்ந்து உள் சுரந்து காணப்படும். வெதுப்புண்டாகும். கிறுகிறுப்பு உண்டாகும். உடல் சோர்ந்து போகும். சொரியெடுக்கும். உடல் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். உணவு செரிக்காது. உணவு செரிக்காது மலம் கழியும். உடலில் ஊர்வதுபோல காணும். இவை பித்த கரப்பானின் குணங்களாகும்.

சிலேத்தும கரப்பான்

பெற்றியாய்ச் சரீரமது வெளிறிக் காணும்
பேச்சுத்தான் கம்மலாய் தானி ருக்கும்
புத்தியா யபவார்த்தையது பொறுக்கிச் சொல்லும்
பிரபலந்தான் மிகப்பேசு மூச்சுண் டாகும்
எத்தியாய்ச் சகலரையு மேவல் கொள்ளும்
ஈளையி ருமல்மூச்சுக் காதி ரைச்சல்
முத்தியாய் மோட்சவழி முறமை யாகும்
முதிர்சேட்ப கரப்பானின் மூர்க்கந் தானே 774

உடல் வெளிறிக் காணும். குரல் கம்மிப்போகும். தகாத வார்த்தைகளை குறிப்பாகச் சொல்வர். அதிகமாக பிரலாபித்துப் பேசுவர். அதிக மூச்சுண்டாகும். சகலரையும் வேலை வாங்குவர். ஈளை, இருமல், மூச்சு, காதிரைச்சல், ஆகியன உண்டாகும். மரணம் நேரிடும். இவை பித்த கரப்பானின் குணங்களாகும்.

சாத்தியம் – அசாத்தியம்

மூர்க்கமாம் சாத்தியத்தை மொழியக் கேளாய்
மொழிகின்ற வாதகரப் பான்றன் னோடு
ஊர்க்கமாம் பித்தகரப் பானு மாகும்
உயர்கின்ற வரட்சியாங்க பாலக ரப்பான்
தார்க்கமா யிதுநாலுஞ் சாத்தி யமாம்
தளுக்கான திமிர்வாத கரப்பான் கண்டம்
தீர்க்கமாஞ் சேட்பகரப் பான்றன் னோடு
செப்பிய தோரிதுமூன்று மசாத்ய மாமே 775

கரப்பான் வகைகளில் வாத கரப்பான், பித்தகரப்பான், கபால கரப்பான், வரட்சி கரப்பான் ஆகிய நான்கும் சாத்தியமாகும்.

மருந்துகளினால் குணமாகும். திமிர்வாத கரப்பான் கண்ட கரப்பான். சிலேத்தும கரப்பான், ஆகிய மூன்றும் அசாத்தியம்.

சத்தியின் குணம்

ஆமென்ற சத்தியது ஐந்தே தென்னில்
அடங்காத வசீர்ணசத் திவாத சத்தி
போமென்ற பித்தசத்தி சேட்பமா சத்தி
பெரிதான தொந்தசத்தி ஐந்து மாகும்
ஏமென்ற சத்தியுமுற் பத்தி யாகி
எப்படித்தான் வருமென்றால் சொல்லக் கேளாய்
வாமென்ற மாறுபா டான மங்கை
மருந்தினில் இருமல்விளைந் தருசி யாமே 776

சத்திவகை ஐந்தாகும். அசீர்ணசத்தி சத்தி, வாத சத்தி, பித்த சத்தி, கப சத்தி, தொந்த சத்தி என்பவையாகும். சத்தி எவ்வாறு உண்டாகின்றது என்று கேட்பாய். பெண்களின் மருந்திட்டினால், சுவையின்மையினால் இருமலினால் உண்டாகும்.

அசீர்ணசத்தி

அருசியாய் சத்தியா யசத்தி ரூபம்
அணுகியே யதிகடத்தில் வாய்வு தானன்
தெருசியாய் தின்னுகின்ற பதார்த்தந்தனனைச்
செரிக்கவே யொட்டாமல் மேற்கோள் செய்யும்
தருசியாய் சத்தியைந்தி லசீர்ணசத்தி
தன்குணந் தான்றக்நா பித்தா னத்தில்
முருசியாய்ச் சமானனென்ற வாயு மீறி
முதுகிடை யேமிகப்பரந்து உலாவுந் தானே. 777

மேலும் வயிற்றில் வாய்வு தங்கினாலும், வாய்வு பதார்தங் களை உண்ணுவதாலும், செரிக்காதபொழுது மேலும் உண்ணு வதாலும் நாபிஸ்தானத்தில் சமானவாயு மீறினாலும், அந்த வாயு முதுகில் பரவும்.

வாத சத்தி

உலாவியே விபரீதப தார்த்தந் தன்னை
உண்கையா லுயரத்தான் தள்ளிப் போடும்
அலாவியே செரியாமல சீரண வாந்தி
ஆகியே சத்திச்சு அமந்து எங்கும்

குலாவியே வாதசத்தி வகையே தென்னில்
கூட்டமா மிதயதா னத்திற் பிராணன்
விலாவெறுக் கப்புசித்து விபரீ தந்தான்
விளைத்துமே வெளுப்போடு கறுப்பு மாமே 778

அசீர்ணசத்தியில் உணவுப் பொருட்களை வெறுத்து ஒதுக்குவார்கள் செரிக்காமல் வாந்தியுண்டாகும் இவை அசீரண சத்தியின் குணங்களாகும். வாத சத்தியின் குணங்கள் யாதெனில் இதய தானத்தில் பிராணன் உலவும். வயிறுபுடைக்க உணவு உண்டு அதனால் விளைவுண்டாகும். கறுப்பும் வெளுப்புமாக வாந்தியெடுக்கும்.

பித்த சத்தி

கறுப்புமாய் கடினமாக வாந்தி யாகும்
காசமா மிருமலொடு இளைப்பு மாகும்
தொறுப்புமாய் சுரவீனங் கம்ம லாகும்
சுரசுரப்பாய் மேனியெங்கும் துடிப்புகாணும்
பொருப்பமாய் பித்தசத்தி யிலக்க ணந்தான்
பேரான உப்புரைத்து உறுத லாகும்
வெறுப்புமாய் வேப்பெண்ணெய் நாற்றம் வாந்தி
மிக்கநெஞ்சிற் புகைச்சலுமாய் சத்தி யாமே 779

வாந்தியெடுப்பதுடன் இருமலும் இளைப்பும் உண்டாகும். சுரசுரப்பாய் மேனி முழுதும் துடிப்புண்டாகும். இவை வாதி சத்தியின் குணங்களாகும். இனி பித்த சத்தியின் குணத்தைக் கேட்பாயாக. உப்புசுவை அதிகரித்து உறுத்தலா கும். வாந்தியானது வேப்பெண்ணெய் நாற்றமடிக்கும். நெஞ்சில் புகைச்சல் உண்டாகும் வாந்தியெடுப்பர்.

சேட்ப சத்தி

சத்திதான் மஞ்சணிறம் போலி ருக்கும்
தண்ணீராம் வாந்தியது உப்பு ரைப்பு
சுத்திதான் சூடுண்டாங் கையுங் காலும்
துலக்கமா மேனியெங்கும் எறிவு மாகும்
சித்தியாஞ் சேட்பசத்தி யின்கு ணந்தான்
திகழ்கின்ற இரைப்போடு குளிரு முண்டாம்
குற்றித்தான் கோழையுண்டாங் குளிர்ச்சி யாகும்
கொடிதான நாவினிற்றித் திப்புண் டாமே 780

வாந்தி மஞ்சள் நிறமாக இருக்கும். வாந்தி தண்ணீரும் உப்பும், உறைப்புமாய் இருக்கும். கை, காலில் சூடுண்டாகும். மேனி

முழுவதும் எரிவுண்டாகும். இனி சேட்ப சத்தியின் குணத்தைக் கேட்பாயாக. இரைப்போடு குளிரும் உண்டாகும். கோழை அதிகமாக உற்பத்தியாகும். குளிர்ச்சியாயிருக்கும். நாவில் தித்திப்புச் சுவை அதிகமாக இருக்கும்.

தொந்த சத்தி

தித்திப்பாந் தொந்தசத்தி யின்கு ணந்தான்
திடமாகும் மலமூத்திர மாவே தந்தான்
வத்திப்பாஞ் சத்தியது சதையி ரத்தம்
மாமிசம்போல் நிணம்போலுந் தானி ருக்கும்
குத்திப்பாஞ் சரீரமெங்குங் குடைச்ச லுண்டாம்
குளுந்துமேநா வராளுஞ் சுரமுமுண்டாம்
எத்திப்பாஞ் சரீரமது இளைப்பு காணும்
இந்ததொந் தசத்திகுண மிசைந்திட் டோமே 781

தொந்த சத்தியின் குணத்தைக் கேட்பாயாக. மலம் மூத்திரம் தடைபடும். வாந்தியானது சதை, இரத்தம், நிணநீர் போல இருக்கும். உடல் எங்கும் குடைச்சலுண்டாகும். குளிர்ந்து நாக்கு வாளும். சுரம் உண்டாகும். சரீரம் இளைத்து காணப்படும்.

இசைந்ததோர் சாத்யசத்தி மூன்று மாகும்
ஏகமா மசீரணசத் திவாத சத்தி
பிசைந்ததோர் பித்த சத்தி மூன்று சாத்யம்
பேரானவ சாத்தியந்தான் சேட்ப சத்தி
திசைந்ததோ ரிரண்டு தானசாத்ய மாகும்
செப்பினோஞ் சத்தியிட குணங்க ளெல்லாம்
அசைந்ததோ ரசாத்தியசாத் தியமி ரண்டும்
அறிந்துமே யவிழ்தங்கள் செய்தி டாமே 782

ஐந்து வகை சத்திகளில் அசீரணசத்தி, வாத சத்தி, பித்த சத்தி ஆகிய மூன்றும் சாத்தியம், சேட்ப சத்தி, தொந்த சத்தி ஆகிய இரண்டும் அசாத்தியம். இவைகளை அறிந்து மருந்து செய்து தரவேண்டும்.

விக்கலின் குணம்

செய்திட்ட விக்கலது நாலு மாகும்
செப்பரிய பேரேதோ என்று கேட்கில்
வைத்திட்ட வாதவிக்கல் பித்த விக்கல்
மருவியதோர் சிலேத்துமவிக்கல் தொந்த விக்கல்

கொய்திட்ட விக்கலிடக் குணத்தைக் கேளாய்
குறிப்பான வாதத்தின் விக்கல் தானும்
ஐதிட்ட வன்னஞ்சூ டருந்த லாலும்
அதிகமாங் குளிர்தன்னி லடுத்தி டாயே 783

விக்கல் நான்கு வகையாகும். அவை வாதவிக்கல், பித்த விக்கல், சிலேத்தும விக்கல், தொந்த விக்கல் ஆகியவை ஆகும். வாத விக்கலின் குணத்தைக் கேட்பாயாக. உணவை சூடாக உண்பதாலும், மிகுந்த குளிர்ச்சியான நீரை பருகுவதாலும்.

வாத விக்கல்

அடுத்திட்ட மனமகிழ்ச்சி மிகுதி யாலும்
அந்திசந்தி கணப்புகள் காய்த லாலும்
படுத்திட்ட கைகால்கள் பிடிக்க லாலும்
பதறியே தண்ணீரில் மூழ்க லாலும்
விடுத்திட்ட கடுவோட்ட மோ டலாலும்
விரைந்து மேநாகனென் கின்ற வாய்வு
கடுத்திட்டு அதிகரித்து விக்க லுண்டாம்
களராகி மார்கனத்துக் கதிப்பாங் காணே 784

அதிக மனமகிழ்ச்சியாலும், காலை மாலை கணப்புகளில் காய்வதாலும், கைகால்களை படுத்திருக்கும் பொழுது பிடித்துக் கொள்வதாலும், பதறிப்போய் தண்ணீரில் மூழ்குவதாலும், அதிகம் கடுமையாக ஓடுவதாலும், நாகன் என்கின்ற வாயு அதிகரித்து விக்கலுண்டாகும்.

பித்த விக்கல்

கதிப்பித்துக் கண்ணிரண்டு மிகத்து டிக்கும்
கனமான மிகுதுவர்ப் புவாயி லுண்டாம்
மதிப்புற்று வாதவிக்கல் தானு மாகும்
மதித்ததோர் பித்தவிக்கல் மார்க்கங் கேளாய்
விதிப்புற்று விக்கலுண்டா மேனி கண்ணும்
மிகவுண்டாங் கொட்டாவி வெதும்ப லுண்டாம்
நதிப்புற்று நாடிமிகப் படப டக்கும்
நல்லறிவு குண்ணிவிடுங் கோப மாமே 785

கண்கள் அதிகம் துடிக்கும், வாயில் துவர்ப்புச்சுவை காணும். இவை அனைத்தும் வாத விக்கலின் குணங்களாகும். இனி பித்த விக்கலின் குணத்தைக் கேட்பாயாக. விக்கலுண்டாகி மேனி

கன்னிப்போகும். கொட்டாவி அதிகமேற்படும். வெதும்பலுண்டாகும். நாடி மிகவும் படபடக்கும். அறிவு குன்னிவிடும். கோபமுண்டாகும்.

சிலேட்ப விக்கல்

கோபமாஞ் சிலேட்பவிக்கல் குறிப்பு கேளாய்
கோழையோடு விக்கலது தானு முண்டாம்
சோபமா முகமெங்கும் வெளிறிக் காணும்
துடிப்புண்டாந் தேகமெங்குந் திரைஞ்சு காணும்
சோபமாந் தொந்தவிக்கலுட குணத்தைக் கேளாய்
தோளோடு தலைகறுத்து சோர வாங்கும்
ஆபமாந் தொப்புளொடு மிகக்கு லுங்கி
அடிநாபி தனில்நின்று விக்கும் பாரே 786

சிலேட்ப விக்கலில் விக்கலின்போது கோழைவரும். முகம் வெளிறிக் காணப்படும். துடிப்புண்டாகும். தேகம் முழுவதும் சுருங்கி காணப்படும். இனி தொந்த விக்கலின் குணத்தைக் கேட்பாயாக. தலை கறுத்து ஒருபக்கமாக வாங்கும். வயிற்றை அதிகம் குலுக்கி அடிவயிற்றிலிருந்து விக்கல் உண்டாகும்.

தொந்தவிக்கல் – சாத்யவசாத்யம்

பாருமே சந்தோடு தான்கு லுங்கப்
பதறியே அடுக்கடுக்காய் விக்கும் பாரு
வாருமே வாதவிக்கல் பித்த விக்கல்
மாளவுந் தானொட்டாது மருந்திற் றீரும்
தீருமே சேட்பவிக்கல் சீவன் றன்னைச்
சிறிதுநாள் வயிறுதனிற் றான்சீ ரணிக்கும்
ஊருமே தொந்தவிக்க லுடனே கொல்லும்
உயர்கின்ற தொந்தவிக்கல் குணந்தா னாமே 787

முட்டுகளோடு அனைத்தும் குலுங்குமளவு விக்கலேற்படும். அடுத்தடுத்து விக்கலுண்டாகும். வாத விக்கலும் பித்தவிக்கலும் உடனே மருந்துகளினால் தீரும். சிலேத்தும விக்கலோ சிலநாள் கழித்து கொல்லும். தொந்தவிக்கல் நோயாளியை உடனே கொன்றுவிடும்.

கரப்பான் ரோகநிதானம் - முற்றிற்று

பவுத்திரரோக நிதானம்

தானென்ற பவுத்திரந்தா னெட்டு மாகும்
தடிப்பான வசனமாம் பவுத்தி ரந்தான்
கோனென்ற கொடிபவுத்திரம் பக்கப வுத்ரம்
குருத்தான மூலத்தின் பவுத்தி ரந்தான்
மேனென்ற மேகமாம்ப வுத்தி ரந்தான்
மிடுக்கான கிரந்தியென்ற பவுத்திர மாகும்
ஆனென்ற வாசனத்தின் கண்ட மாலை
அடுக்கான சரக்கண்ட மாலை தானே 788

பவுத்திரம் பதினெட்டு வகையாகும். அவை ஆசனப்பவுத்திரம், கொடிபவுத்திரம், பக்க பவுத்திரம், மூலப்வுத்திரம், மேகபவுத்திரம், கிரந்திபவுத்திரம், ஆசனக் கண்டமாலை, சரக்கண்டமாலை ஆகியவற்றோடு.

மாலைதானுற் பவித்த வாறு கேளாய்
மகத்தான வாதினத்தைக் குடிகெடுத்தும்
ஆலையா மறுசுவையாங் கறிய ருந்தி
அழகான மாதினைத்தான் கற்ப ழித்தும்
பாலையாய் மதித்துடல முடல்து ளுத்த
பாதகரைப் பரிந்துநீ ரிரச மாக்கி
ஏலையா யெறும்புஈக் குணவா யீந்து
இருக்கவே சிவனமைத்த படிதான் காணே 789

பவுத்திரரோகம் உற்பத்தியாகும் வகையைக் கேட்பாயாக குடிகெடுப்பதினாலும், கற்பழித்தலாலும். பாதகர்க்கு பரிந்து பேசுவதாலும். நோய் உண்டாகி எறும்பு ஈ, மொய்க்கும்படி யாக சிவன் அமைத்துவிட்டார்.

சிவனுடைய அருள்தனையே மறந்து நெஞ்சில்
திருடியே வஞ்சித்து அபக ரித்து
அவனுடைய பொருள்போல வடக்கம் பண்ணி
அனுதின முந்தம்முடமை போல்சிந் தித்து
பவனுடைய பொல்லாதார் பவுத்தி ரத்தில்
பாடுபட்டு பொருளெல்லாம் பாழாய்ப் போகும்
வெவன் செய்தவிதியென் றுநொந்து நொந்து
விழற்கிறைத்த நீர்போன்று மெலிகு வாரே 790

சிவனின் அருளை மறந்து நெஞ்சில் வஞ்சனை கொண்டும், பிறர்பொருளை அபகரித்து தன்பொருள்போல உபயோகிப் பவர்க்கும், பவுத்திர நோய் உண்டாகும். அந்நோய்க்கு சிகிச்சை செய்து பொருள் எல்லாம் பாழாகும். யார் செய்த விதி என்று

நினைத்து தினமும் மனம் நோகுவர். விழலுக்கு இறைத்த நீர்போல உடல் வீணாகி மெலிந்து போகும்.

ஆசன பவுத்ரம்

மெலிந்துதான் உடம்பெங்குந் தினவுண் டாகும்
மிகுந்த சுரந்தான்கண் டுமாறிப் போகும்
நலிந்துமே ஆசனத்திற் குற்ற லுண்டாம்
நடுவெங்கு மிகக்கடுக்கும் நோக்கா டுண்டாம்
வலிந்துமே கட்டியாய் தானி ருக்கும்
மயக்கமொடு மலந்தன்னிற் செந்நீர் பாயும்
குலிந்துமே சீயோடு ரத்த முண்டாம்
குணங்கெட்ட ஆசனப வுத்ர மாமே 791

உடலில் தினவுண்டாகும் சுரமடிக்கும். மேனி நிறம் மாறிப் போகும். ஆசனத்தில் குத்த லெடுக்கும். இடுப்பு அதிகம் கடுக்கும். வலியெடுக்கும். நோயுள்ள இடம் மிகவும் கட்டியாயிருக்கும். மயக்கம் உண்டாகும். மலத்தில் செந்நீர் வடியும். சீழுடன் இரத்தமும் வெளியேறும். இவை ஆசனபவுத்திரத்தின் குணங்களாகும்.

கொடி பவுத்திரம்

என்றதோ ராசனத்திற் சடையைப் போல
இருந்துமே வீங்கியே அடிக னத்து
பன்றதோர் பழுத்துமே கண்கண் ணாகப்
பருத்தியி னிற்கொட்டைபோற் புண்மு கத்தில்
வின்றதோர் மேனியெங்கு மிகவெ ளுக்கும்
விரிந்தவிட மிகநாறுங்கொ டிந ரம்பில்
அன்றதோ ரழுக லிட்டு கண்தான் விட்டு
ஆகாத மலசல முங்காணுந் தானே 792

ஆசனத்தில் சடையைப் போல இருந்து வீங்கி, அடிகனத்து காணப்படும். கட்டி பழுத்து கண் கண்ணாக பருத்திக் கொட்டைபோல இருக்கும். மேனிமுழுதும் அதிகம் வெளுக்கும். புண்ணிருக்குமிடம் அதிகம் நாறும். புண் அழுகி கண்விட்டு காணப்படும். மல சலம் வெளிப்படும். இவை கொடி பவுத்திரத்தின் குணங்களாகும்.

பக்க பவுத்திரம்

காணுமே கொடிபவுத்தி ரந்தன்கு ணந்தான்
கறுத்த பக்கபவுத்திரத் தைக்கண்டு கேளாய்
வேணுமே விரைநடுவில் நரம்பு பற்றி
மிகுத்த வலப்பக்கமிடப் பக்கந் தன்னில்

தோணுமே கண்டமாய்க் கதித்து வீங்கித்
துடித்துமே பழுத்துடைந்து செந்நீர் விழும்
நீணுமே நீர்வெண்டு தெரித்துப் போகும்
நிச்சயமா மூத்திரமும் வீழ்குந் தானே 793

விரையின் நடுவில் நரம்பினைப்பற்றி வல இடப்பக்கத்தில் அதிகம் தடித்து வீங்கி காணப்படும். அவை பழுத்து உடைந்து செந்நீர் வடியும். சிறுநீர் தெறித்து வீழும். இவை பக்கபவுத்திரத்தின் குணங்களாகும்.

மூலபவுத்திரம்

வீழ்மூலப் பவுத்திரத்தை விளம்பக் கேளாய்
விரிவிரித் துக்குதங்குய்யங் கடுப்பு காணும்
தாழ்கின்ற நரம்பெல்லாம் புடைத்து விம்மி
தனிக்கரணை முளைபோன்று செயற்றான் வீழும்
காழ்கின்ற நீர்வெண்டு தானெல் லாந்தான்
கட்டியே மிகவுடைந்து நீருங் காணும்
ஆழ்கின்ற வடிகண்டு முளையுங் காணும்
ஆகாத மூலபவுத் திரமு மாமே 794

குதம் குய்யம் ஆகியவற்றில் கடுப்புண்டாகும். நரம்புகள் எல்லாம் புடைத்து விம்மி கரணைமுளை போன்று இருக்கும். நீர் வழியும். கட்டி மிகவும் பழுத்து உடைந்து அதிக நீர் கொட்டும். கட்டியில் முளை காணப்படும். இவை மூலபவுத்திரத்தின் குணங்களாகும்.

கிரந்தி பவுத்திரம்

பவுத்திரத்தில் மிகநொந்து கடுப்புண் டாகிப்
பாங்காக கட்டியேபழுத்து டைந்து
பவுத்திரத்திற் கொடிசுரந்து புண்ணு மாகி
கழுத்தான வாண்குறியில் விரண முண்டாய்
சுவுத்திரத்தில் மேனிதுர்க் கந்தமுண்டாய்
துளித்துளியாய் நீர்தானுஞ் சுருக்க வீழும்
மெவுத்திரத்திற் றண்டகுறியில் வீக்கங் காணும்
வீழ்கிரந்தி பவுத்திரத்தின் மேன்மை தானே 795

அதிகம் நொந்து கடுப்புண்டாகும். கட்டி பழுத்து உடைந்து காணப்படும். கொடிபோல பரவி புண் உண்டாகும். ஆண்குறியில் விரணமுண்டாகும். மேனி துர்நாற்றம் வீசும். சிறுநீர் துளித் துளியாய் விழும். அண்டம் வீங்கும். இவை கிரந்தி பவுத்திரத்தின் குணங்க ளாகும்.

மேகபவுத்திரம்

மேன்மையா மேகத்தின்ப வுத்தி ரந்தான்
மீறிவிழு நீர்தானும்வி தையிற் கட்டும்
பான்மையாய் பழுத்துடைந்து சீயோ காணும்
பனித்தண்ணீர் போலவந்து பாசி ருக்கும்
வேண்மையாஞ் சுரமொடு குளிர்தா பிக்கும்
மெய்மறக்கு மசனமிகச் செல்லா தாகும்
கான்மையாங் கைகால்கண் ணெரிவு மாகும்
கனத்துடம் பெல்லாமிளைத்து வலியு மாமே 796

நீரானது அதிகமாகி விதையில் தங்கும். கட்டி பழுத்து உடைந்து சீழ்வரும். சில சமயம் பனித் தண்ணீர்போல வடியும். சுரமடிக்கும். குளிர் அதிகமிருக்கும், உடல் மறத்துப்போகும். உணவு அதிகம் செல்லாது, கைகால் கண் ஆகியன எரிவுண்டாகும். உடம்பு எல்லாம் இளைத்து வலிக்கும். இவை மேக பவுத்திரத்தின் குணங்களாகும்.

ஆசன கண்டமாலை

வலியாகு மாசனத்தின் கண்ட மாலை
வலிக்குமே அம்புபோல குற்றல் காணும்
நலியாகுங் கெண்டுகெண் டாகக் கண்டு
நமன்மேல் பயமுண்டாஞ் சுரமு மாகும்
புலியாகுஞ் சல்லடைக்கண் போலே யாகும்
பேரான மலசலமும் புண்ணிற் காணும்
சொறியாகுந் தினவெடுத்து செந்நீர் பாயும்
சொரிந்தவுட னெரிவுமெத்த திறமாய் காணே 797

ஆசன கண்ட மாலையில் வலித்து அம்பு தைத்ததுபோல குத்தல் எடுக்கும். கட்டி கட்டியாக தடித்து காணப்படும். எமன்மேல் பயமுண்டாகும். சுரமடிக்கும். சல்லடைக்கண் போல புண்கள் இருக்கும். அரிப்பெடுக்கும். புண்களிலிருந்து செந்நீர் பாயும். சொறிந்தவுடன் எரிச்சல் அதிகமிருக்கும்.

சரக்கண்ட மாலை

காணவே சரக்கண்ட மாலை தானும்
கண்டுதான் கரணைமுளை போல வாகும்
வாணவே வழியடைந்து சுரந்து வீங்கி
வருத்தமாய் வெடித்துமே ரத்தஞ் சீயாம்
பூணவே சரமதுதான் தொடுத்தாற் போலும்
புத்துக்கள் போற்பொருமி வீக்க முண்டாம்
ஆணவே யடக்கடுக்கா யடைபோல் வீங்கி
அழுகலாம் நாற்றமாய் வீசுந் தானே 798

சரக்கண்டமாலையில் கட்டி கரணைமுளைபோல வீங்கும். நரம்பு வழியை அடைத்து நீர்சுரந்து வீங்கிக் காணப்படும் அதிகம் வீங்கி வெடித்து ரத்தமும் சீழும் வடியும். பூச்சரம் தொடுத்தாற் போல புத்துக்கள் தொடர்ச்சியாகி பொருமி காணப்படும். வீக்கமாக இருக்கும். அடுக்கடுக்காக அடைபோல வீங்கி அழுகி நாற்றமெடுக்கும்.

சாத்தியம் – அசாத்தியம்

வீசுகின்ற சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
மிகுந்த வாசனப்பவுத்ரம் பக்கப்ப வுத்ரம்
மூசுமூலப் பவுத்ரமே கப்ப வுத்ரம்
முடுக்கான கிரந்தியென்ற பவுத்தி ரந்தான்
தாசுகின்ற வைந்துதான் சாத்ய மாகும்
சரக்கண்ட மாலையொடு கொடிப வுத்ரம்
ஆசுகின்ற வாசனத்தின் கண்ட மாலை
அசாத்தியந் தானிதுமூன்று மறிந்தி டாயே 799

பவுத்திர வகைகளில் சாத்திய வகைகளைக் கேட்பாயாக ஆசனப் பவுத்திரம், பக்க பவுத்திரம், மூலப் பவுத்திரம், மேகப் பவுத்திரம், கிரந்தி பவுத்ரம் ஆகிய ஐந்தும் சாத்தியமாகும். சரக்கண்டமாலை, கொடிப்பவுத்திரம், ஆசனகண்ட மாலை ஆகிய மூன்றும் அசாத்தியம்.

அறிந்திடவே சதாசிவன்தான் தேவிக்குச் சொல்ல
அகமுவந்து தேவிநந் திக்குச் சொல்ல
சொறிந்திடவே நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
சொல்லரிய தன்வந்திரியசு வினிக்குச் சொல்ல
தெறிந்திடவே அசுவினிதான கத்தியர்க்கு சொல்ல
தேர்ந்தவர்தாம் புலத்தியமா முனிக்குச் சொல்ல
செறிந்திடவே புலத்தியர்தாம் தேரையர்க்கு சொல்ல
தேரையர்தான் சொன்னபடி தெரிந்திட் டேனே 800

சிவன் பார்வதிக்கு மனமுவந்து கூற, பார்வதி நந்திக்கும், நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அசுவினிக்கும், அசுவினி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும். புலத்தியர் தேரையருக்கும், தேரையர் எனக்கும் வரிசைப்படி கூறினார்கள். யூகிமுனியான நான் தேரையர் கூறியபடி வெளியில் கூறினேன்.

பவுத்திர ரோக நிதானம் முற்றிற்று.

யூகிமாமுனி வைத்திய சிந்தாமணி 800 முற்றிற்று.